www.tamilarangam.net

# தமிழ்த் தேசியம் - பேருரைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்த் தேசியம்:
## பேருரைகள்

தொகுப்பு

**தமிழியம்**

**நிகழ்**

www.tamilarangam.net

நூல்: தமிழ்த் தேசியம்- பேருரைகள்

உரிமை: உரையாளர் / கட்டுரையாளர்

முதற் பதிப்பு: மே,1997

வெளியீடு: (தமிழியம் சார்பில்) நிகழ்

முகவரி: 123, காளீசுவரர் நகர்
கோயமுத்தூர்- 641009

அச்சாக்கம்: நந்தினி அச்சகம்
6வது தெரு நீட்சி
காந்திபுரம்
கோயமுத்தூர் - 641 012

பக்கங்கள்: 207 + 12

விலை: ரூபாய் 40

www.tamilarangam.net

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்.

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்.

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்.

தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ.

தோளை உயர்த்து சுடர் முகம் தூக்கு
விழித்த விழியில் மேதினிக்கொளி செய்.
பாரடா உனது மானிடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்.

அறிவை விரிவு செய் அகண்டமாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்து கொள் உன்னைச் சங்கமமாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு

பிரிவிலை எங்கும் பேதமில்லை.
உலகம் உண்ண உண் உடுத்த உடுப்பாய்
புகல்வேன் உடமை மக்களுக்குப் பொது.
புவியை நடத்து பொதுவில் நடத்து.

பாரதி தாசனார்.

www.tamilarangam.net

www.tamilarangam.net

# முன்னுரை

**1.** கோவையில் 1996 மத்தியில் தமிழியம் என்ற அமைப்பை உருவாக்கினோம். தமிழ் மன்றங்களின் கூட்டமைப்பு என்ற முறையில் நிகழும் தமிழ் மைந்தர்மன்றமும் தமிழ் இளைஞர்மன்றமும் இந்த அமைப்பில் இடம் பெற்றன. தனி நபர்கள் என்ற முறையில் சில நண்பர்களும் எங்களோடு இணைந்தனர்.

ஒரு நூற்றாண்டுக் காலமாக தமிழ்மக்கள் மத்தியில் அழுத்தமாக இடம் பெற்றிருக்கும் தமிழ்உணர்வு இன்று தமிழ்த்தேசியம் என்ற அரசியல் வடிவைப் பெற்றுள்ளது. இது இன்றைய வரலாற்றின் தவிர்க்க இயலாத தேவையாக வெளிப்பட்டுள்ளதில் வியப்பில்லை.

தமிழ்த்தேசியம் என்று இன்றைய தமிழகச்சூழலில் சில அரசியல் இயக்கங்களும் தமிழ் இயக்கங்களும் விரிவாகப் பேசுகின்றன. தமிழ்த்தேசியம் என்ற உணர்வு இவர்களுக்குள் ஆழமாக இருந்தபோதிலும், இந்த உணர்வின் கருத்து வெளிப்பாடுகளுக்கு இடையில் வேறுபாடுகள் நிலவுகின்றன. கருத்துவேறுபாடுகள் ஆழமாக, அமைதியாக விவாதிக்கப்படுவதில்லை. சிந்தனைத்தளத்தில் மட்டுமே வைத்து கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்வதும் இயலாது என்ற போதிலும் வேறுபாடுகளோடு கூடிய இவர்களின் கருத்தாக்கங்களைத் தொகுத்துக்கொள்வது தொடக்க நிலையில் தேவை என்று நாங்கள் உணர்ந்தோம்.

இந்நிலையில் தமிழ்த்தேசிய இயக்கச் சார்பினர், மற்றும் சிந்தனையாளர்கள் என்று நாம் அறிந்த பலருள், எங்கள் சக்திக்கு இயன்ற வகையில் சிலரைக் கோவைக்கு அழைத்தோம். தமிழ்த்தேசியம் குறித்து இவர்கள் ஆற்றிய பேருரைகளைப் பதிவு செய்துகொண்டோம். கேள்வி பதிலுக்கு நேரம் ஒதுக்கினோம். இவற்றையெல்லாம் இப்பொழுது இங்கு தொகுத்து வெளியிடுகின்றோம்.

சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன் அவர்களைப் பொறுத்தவரை, தனது உரைக்கருத்துக்களை மேலும் தெளிவுபடுத்தும் முறையில் விரிவான கட்டுரை தந்தார். தோழர் எஸ்.என். நாகராசன் அவர்கள் கோவைக்கு வந்த ஒரு சமயத்தில் நேர்காணல் என்ற முறையில் அவர் கருத்துக்களை பதிவு செய்து கொண்டோம். எழுத்து வடிவிலான அவர்களது உரைகள் அவரவர்களால் திருத்தம் செய்யப்பட்ட நிலையில் இங்கு வெளியாகின்றன.

**2.** தமிழ்த்தேசிய அரசியல் என்பது தமிழியம் என்ற மெய்யியலின் ஒரு முனை மட்டுமே என்பதை நாங்கள் அறிவோம். அரசியல் முனை வலுவாகவும், அதேசமயம் வளமாகவும்

www.tamilarangam.net



மக்கள் வாழ்வுக்கு ஆதாரமான நிலங்களும் நீர் நிலைகளும் அன்னியரால் அபகரிக்கப்படு கின்றன. மக்களின் வாழ்வுரிமைகள் முற்றிலும் பறிபோகிற நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு ஒன்றையடுத்து மற்றது என பெருகிவரும் பலவகை ஆதிக்கங்களுக்கு எதிர்வினையாக இந்தியத் துணைக்கண்டத்தில் இன்று தேசிய இனங்களின் எழுச்சி தவிர்க்க இயலாத வரலாற்றுப்போக்காக மாறியிருக்கிறது. இந்தப்போக்கை எவராலும் தடுக்க இயலாது என்ற நிலையும் நேர்ந்துள்ளது. இத்தகைய சூழலில்தான் தமிழ்த்தேசிய இன உணர்வெழுச்சி இன்று ஏற்பட்டிருக்கிறது. இதை வளர்த்தெடுப்பது நம் கடமை. தமிழர்களின் நெடுங்கால வரலாற்றில் நீறு பூத்த நெருப்பாய் இருந்த தமிழ்உணர்வு இன்று இந்தப் புள்ளியின் சங்கமத்தில்தான் வெடிக்கிறது என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

**4.** இந்தியத் துணைக்கண்டத்தில் கூட்டாட்சியும் சோசலிசமும் செயல்பட்டிருக்குமானால், தேசிய இனங்களின் விடுதலைக்கான கிளர்ச்சிகளுக்கு பெரும்பாலும் இடம் ஏற்பட்டிருக்காது. வரலாற்றுச் சூழல்கள் இத்தகையதோர் நெருக்கடியை தேசிய இனங்களின்மீது திணித்ததனால்தான் இத்தகைய வெடிப்பு ஏற்பட்டிருக்கிறது. உதிரித்தனமான முதலாளியம் தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும் வெறியோடு செயல்படுவதற்கு எதிர்வினைதான் இத்தகைய தேசிய இனஎழுச்சிகள்.

தேசிய இனஎழுச்சியின் விளைவாக ஓரினத்திற்கு என தனி அரசு அமைவதாக வைத்துக் கொண்டால், அந்த அரசு மீண்டும் முதலாளியத்திற்கும் அதன் வழியாக வல்லரசுக்கும் சேவை செய்கிற அரசாக இருக்கமுடியுமா என்ற கேள்வியையும் இங்கு எழுப்பிக் கொள்ளலாம். இத்தகைய அரசு மீண்டும் மக்களை அடிமைப்படுத்தும் அரசுதான். ஆகவேதான் தேசிய இனஎழுச்சி என்பது சமத்துவ/ சமதர்ம உணர்வை உள்வாங்கிக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இதற்காகத்தான் தமிழின் நெடுங்கால வரலாற்றிலிருந்து சமத்துவ உணர்வுகளை நாம் திரட்டுகிறோம். இதைத்தான் தமிழின் மரபு என்றும், ஆற்றல் என்றும் முன் வைக்கிறோம். தமிழ் மெய்யியலை/தமிழியத்தைக் கண்டறிவது என்பதும் இதற்காகத்தான்.

தமிழ்த் தேசியம் என்பதை ஒற்றை அரசியல் முனையாகக் குறுக்குவது நமது நோக்கமன்று. இத்தகைய ஒற்றைமுனை அரசியல் முதலாளியத்திற்குள் மீண்டும் நம்மைத் தள்ளிவிடும். வெறும் கோபதாபங்களைக் கிளறி நம் ஆளுமையை அழித்துவிடும். இனம், மொழி என்பதற்கு மட்டும் அழுத்தம் தரும் போக்கு முதலாளிய

www.tamilarangam.net



வாழ்வியல் சார்ந்த மெய்யியலுக்கும் - வாழ்வின் அனைத்துக் களங்களுக்கும் நாம் அழுத்தம் தர விரும்புகிறோம். ஒட்டு மொத்தமான சமூக மாற்றத்தைத்தான் நாம் கோருகிறோம். இதற்காகத் தான் தமிழ்த்தேசியம் என்ற அரசியலை தமிழ் மெய்யியலில் ஊறவைத்து உருவாக்க முனைகிறோம்.

**5.** இந்த நூலில் தொகுக்கப்பட்ட பேருரைகளிலிருந்து, உரை நிகழ்த்தியவர்களிடையில் தமிழ்த்தேசியம் குறித்த சில பொதுவான கருத்துநிலைகளை நாம் காண முடியும். அதேசமயம் சில கருத்துவேறுபாடுகளையும் நாம் காணலாம். தேசியஇனம் என்பதற்கு ஸ்டாலின் தந்த வரையறைகளை ஏற்றுக்கொள்ளும்போக்கு பெரும்பான்மை என்றபோதிலும், இந்த வரையறையிலிருந்து வேறுபடுகிற ஒரு போக்கையும் நாம் கவனிக்கலாம். இந்திய அரசியலமைப்புச்சட்டம் ஒரு மோசடி என்ற கருத்தில் பலரும் ஒன்றுபடுகின்றனர். இந்தியாவில் பிற தேசிய இனங்களை அடிமைப்படுத்துவதாகிய ஒரு தேசிய இனம் இல்லை என்று சிலர் சொல்லும்பொழுது, வேறு சிலர் அத்தகைய ஒரு தேசிய இனத்தை நம்மால் கண்டுபிடிக்க முடியும் என்று கூறுகின்றனர். எல்லோருடைய உரைகளிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற கூறு இடம் பெறுகிறதென்றாலும், இரண்டொருவர்தான் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு கூடுதல் அழுத்தம் தருகின்றனர். இந்தியதேசியம் என்பதை எவரும் ஒப்புக்கொள்ளவில்லை. தமிழ்த்தேசியத்தின் வரலாற்றைத் தொகுப்பதில் ஒரு சிலர் கவனத்தோடு செயல்படுகின்றனர். தமிழ்த் தேசியம் என்ற கருத்தாக்க உருவாக்கத்திற்கு பெரியாரைப் போலவே மார்க்சியரும் பங்களிக்க முடியும் என்ற போதிலும், மார்க்சிய கட்சிகளின் எதிர்நிலையை பலர் நியாயமாக திறனாய்வுக்கு உட்படுத்துகின்றனர். தமிழர் யார் என வரையறை செய்வதிலும், தமிழ்மக்களை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அடிமைப்படுத்தியவர் யார் என்பதிலும் இவர்களுக்கு இடையில் சில கருத்துவேறுபாடுகளும் உள்ளன. மொழி நம்மைக் கட்டமைக்கிறது என்றும், தேசியம் ஒரு கற்பிதம் என்றும் அண்மைக்காலத்தில் ஒரு புதிய அணுகுமுறை எழுந்துள்ளது. தமிழ்த்தேசிய ஆர்வலர்கள் இந்த அணுகுமுறையின் தேவையை இதுவரை பார்க்கவில்லை. தவிர மறுக்கவும் செய்கின்றனர். தமிழ்த்தேசிய விடுதலை நோக்கிய இயக்கத்தின் போது, எதை முன்னிறுத்துவது - கூட்டாட்சியா? தன்னுரிமையா? விடுதலையா? என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இத்தகைய அணுகுமுறையில் தீவிரமான எதிர்நிலைக்கு இடமில்லை என்பதையும் நாம் புரிந்துகொள்ளமுடியும். தமிழ்த்தேசியம் என்ற அரசியலை உருவாக்குவதில் நாம் முனைப்போடு செயல்பட வேண்டும். கருத்து

www.tamilarangam.net



பொருளியல் சக்திகளிடமிருந்து தமிழர்களை விடுவித்தலுக்கு உதவாது. வேறுபாடுகள் தீர்க்க முடியாத எதிர்நிலைகளில் இறுகிவிடவும் கூடாது. கவனத்தோடு ஆழ்ந்து இந்த உரைகளை வாசிப்பதன் மூலமே நாம் புதிய வெளிச்சங்கள் நோக்கி முன் செல்ல முடியும்.

**6.** தமிழியத்தின் சார்பில் பேருரைகள் நிகழ்த்திய பெருமக்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள் உரியவை. தோழர்கள் பூ.அர. குப்புசாமி, சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன், தியாகு, வே. ஆனைமுத்து, கி.வெ. தமிழ்நாடன், பெ. மணியரசன், எஸ்.என். நாகராசன் ஆகியவர்களுக்கும், இத்தொகுப்பில் இடம் பெறவில்லையெனினும் தமிழர் மெய்யியல் சார்ந்த சில உரைகளை நிகழ்த்திய தோழர்கள் பேராசிரியர் மு.க. சுப்பிரமணியம், கவிஞர் இன்குலாப், ம.இலெ. தங்கப்பா ஆகியவர்களுக்கும் எம் நன்றிகள்.

பதிவு நாடாக்களிலிருந்து உரைகளை எழுத்து வடிவில் அமைப்பதிலும், படிகளில் திருத்தம் செய்வதிலும், அச்சிடும் பொழுது பிழை திருத்தங்கள் முதலியவற்றைச் செய்வதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அருமை நண்பர்கள் திரு. குமரவேலு, மருதுபாண்டியன், மதுசூதனன்,மனோகரன், பொன்மணி, கோபாலகிருஷ்ணன் ஆகியவர்களுக்கும் எம் நன்றிகள்.

தமிழியம் சார்பில் பேருரைகளை ஏற்பாடு செய்தபொழுது, நிதி உதவி முதலியவற்றைச்செய்து எங்களோடு ஒத்துழைத்த அனைத்து பெருமக்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

சிலருடைய நன்கொடை மற்றும் நிதி உதவி இல்லாமல் இந்த நூல் வெளிவந்திராது. தம் பெயர்களை வெளிப்படுத்த விரும்பாத அந்தப் பெருந்தகைகளை நெஞ்சில் நிறுத்தி நன்றி சொல்கிறோம்.

இந்த நூலையும் வழக்கம்போல குறித்த காலத்தில், தமக்கு இயன்றவகையில் அழகுற அச்சிட்டுத் தந்த நந்தினி அச்சகம், வேனில், மற்றும் அச்சக தோழர்களுக்கும் எங்கள் நன்றிகள்.

நம்காலத்திற்குத் தேவையான ஒரு பணியில் நாங்களும் ஈடுபட்டிருக்கிறோம் என்ற மனநிறைவுடன் இந்த நூலை தமிழ் மக்களின் முன் பணிந்து முன் வைக்கிறோம். தமிழியத்தின் சார்பில் தொகுக்கப்பட்ட இந்த பேருரைகள், இப்பொழுது நிகழ் வெளியீடாக உங்களை வந்து சேர்கிறது. உங்கள் அன்பையும் ஆதரவையும் வேண்டி நிற்கிறோம்.

நன்றி

மே நாள், 97
கோவை

இவண்,
ஞானி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உள்ளுரை


1. முன்னுரை IX

2 தமிழினத்தின் தாழ்வும் மீட்சியும்
பூ.அர.குப்புசாமி 1.

3 தமிழ்த் தேசியம் நேற்று இன்று நாளை
கு.ச.ஆனந்தன் 26

4. தமிழ்த் தேசிய இனச்சிக்கலும் தீர்வும்
தியாகு 71

5. தமிழ்த் தேசியமும் கூட்டாட்சியும்
வே.ஆனைமுத்து 114

6. இன்றைய வரலாற்றுச் சூழலில்
தமிழ் மக்களின் வாழ்வும் உயர்ச்சியும்
பெ.மணியரசன் 150

7. உலக வணிக அமைப்பும் தமிழ்த் தேசியமும்.
கி.வே.தமிழ் நாடன் 175

8 ஏகாதிபத்திய எதிர்ப்பும்
தமிழ்த்தேசியமும் எஸ்.என்.நாகராசன் 193

www.tamilarangam.net

உரையாளர் / கட்டுரையாளர் விவரம்

❒ தோழர் பூ.அர.குப்புசாமி
வழக்குரைஞர், காவிரி பாதுகாப்புக் குழுத் தலைவர்
19.மேற்கு மடவளாகம், கரூர் - 639 9001. உரை 28.7.96

❒ சிந்தனைச் செம்மல் கு.ச.ஆனந்தன்
'மலர்க மாநில சுயாட்சி', 'திருக்குறள் உண்மைப் பொருள்'
ஆய்வறிஞர்
72, பாரதி வீதி,
கோபிசெட்டி பாளையம் - 639 452. உரை 8.9.96

❒ தோழர்.தியாகு
தமிழ், தமிழர் இயக்கம்,
14. முருகப்பா தெரு. வெங்கிட்டாபுரம்
அம்பத்தூர், சென்னை - 600 053. உரை 23, 24.11.96

❒ தோழர் வே.ஆனைமுத்து
மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
19, முருகப்பா தெரு மாடி
சேப்பாக்கம், சென்னை - 600 005. உரை 6.1.97.

❒ தோழர் கி.வே.தமிழ் நாடன்
தமிழ்நாடு மார்க்சிய லெனினிய கட்சி. உரை 5.2.97

❒ தோழர். பெ.மணியரசன்
தமிழ்தேசப் பொதுவுடைமைக் கட்சி
53 (அ) சமீந்தார் குடியிருப்பு,
புது ஆற்றுச்சாலை, தஞ்சாவூர் - 613 001. உரை 23.3.97

❒ தோழர் எஸ்.என்.நாகராசன்
மார்க்சியம் - கிழக்கும் மேற்கும் நூல் ஆசிரியர்
20, 5வது குறுக்குத் தெரு,
காந்திநகர், வேலூர் 7

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1

# தமிழினத்தின் தாழ்வும், மீட்சியும்

பூ.அர.குப்புசாமி

'தமிழினத்தின் தாழ்வும், மீட்சியும்' என்று முறையாக உரை நிகழ்த்துவது எனக்கு இப்பொழுது சாத்தியமில்லை. தமிழினத்தின் தாழ்வு என்று பேசும்போது தாழ்வுக்குக் காரணமான எதிரிகள் யார் என்றும் சூழ்நிலைகள் எவை என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். எந்தெந்த வழிகளில் தாழ்வு என்றும், மீட்சிக்கான வழிகள் என்னென்ன என்றும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பதினொன்றாவது வயதில் திராவிடர் கழகத்தோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்ட காலம் முதல் பல்வேறு அனுபவங்களோடும், பல்வேறு இயக்கத்தொடர்புகளோடும் இந்தப் பிரச்சினை குறித்து நான் சிந்தித்திருக்கிறேன்.

தமிழகத்தின் தாழ்வு என்று சொல்லும் பொழுது தமிழகம் தாழ்ந்திருக்கிறது என்பதோடு அண்மையில் உள்ள பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவர்கள் அளவுக்குக்கூட நாம் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். 'ஏ தாழ்ந்த தமிழகமே' என்று 40 ஆண்டுகளுக்கு முன் அண்ணா எழுதினார். இடைக்காலத்தில் எவ்வளவோ தொழில் முயற்சிகள் இங்கு நடந்திருக்கின்றன. தமிழர்களே ஆட்சிப் பொறுப்பிலும் இருந்திருக்கிறார்கள். இந்த நிலையிலும் தமிழகம் தொடர்ந்து தாழ்ந்திருக்கிறது என்று தான் நாம் அறிகிறோம்.

கடந்த இரண்டாண்டுகளுக்குள் இன்னொரு குரலும் எழுந்திருக்கிறது. நாம் வீழ்ந்திருக்கிறோம் என்பதே அந்தக்குரல். 'திராவிடத்தால் தான் நாம் வீழ்ந்தோம்' என்று குணா கூறுகிறார். அவர் சிறந்த ஆய்வாளர். பல புத்தகங்கள் எழுதியிருக்கின்றார். இவரை மறுக்கும் முறையில் 'நாம் சாதியத்தால்தான் வீழ்ந்தோம்' என்று எழுதுகிறார் கருணா மனோகரன். ஆனால் "திராவிடத்தால் தான் விழ்ந்தோம் தமிழியத்தால் வெல்வோம்" என்ற குரலும் எழுந்துள்ளது.

### அச்ச உணர்வும் அடிமைத்தனமும்

பொருளியலை எடுத்துக்கொண்டால், கடந்த 20, 30 ஆண்டுகளுக்குள் வெள்ளையர்கள் மட்டுமல்லாது மார்வாடிகளும், குஜராத்திகளும் தமிழகத்திற்குள் நுழைந்து பேராதிக்கம் செலுத்தி வருகிறார்கள். "தமிழ்நாடு வந்தேறிகளின் வேட்டைக்காடு" என்று பழ. நெடுமாறன் விரிவான விவரங்களைத் தொகுத்து எழுதியிருக்கிறார். இந்த நூலை ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஒரு மார்க்சிய லெனினியக் குழு, இந்த நூலில் தற்போது குற்றம் சொல்ல முடியாது. 'மறைக்கப்பட்ட உண்மைகள்' பற்றி எழுதியிருக்கிறார்கள் (புதிய ஜனநாயகம்) அவர்கள் கூறும் அந்த உண்மைகளையும் அத்தோடு சேர்த்துப் படித்தால்

www.tamilarangam.net



சந்தைப் பொருளாதாரம் என்ற முறையில் இந்தியாவிலும் சரி தமிழகத்திலும் சரி, அந்நியர்களின் ஆதிக்கத்தோடு வட இந்தியக் கொள்ளையர்களின் ஆதிக்கமும் கடுமையாக இங்கு செயல்படுகிறது. இந்தக் கொள்ளையர்கள் கிழக்கு இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பியபோது ஒரிசாவில் இருக்கிற மக்கள் திரண்டு 'மேற்கத்தியனே வெளியே போ' என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெரும் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஒரிசாவில் போராடுகிறார்கள், தமிழகத்தைப் பொறுத்த வரை போராட்டம் எதுவும் இல்லை. இதன் மூலம் நாம் புரிந்து கொள்வது என்னவென்றால் போராடுவதற்கான மன வலிமையை நாம் இழந்திருக்கிறோம் என்பதுதான். போராடுவதற்கான ஒற்றுமையோ, எண்ணமோ நம்மிடமில்லை.

ஒரிசாவில் அண்ணாவோ, பெரியாரோ, தமிழினக் காவலர்களோ, உலகத் தமிழினத் தலைவர்களோ பிறக்கவில்லை. ஆனால் சேட்டுமார்களை அவர்கள் உதைத்து வெளியேற்றுகிறார்கள் "உள்நாட்டுக் காலனி" என்று அந்த ஒரிசா மாநிலத்திலுள்ள ஒரு பேராசிரியர் ஒரு நூலை எழுதியிருக்கிறார். தமிழர்கள் மத்தியில் உள இயல் ரீதியில் அச்ச உணர்வும் அடிமைத்தனமும், ஒற்றுமையின்மையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான உண்மை. இதுதான் தமிழினத்தின் தாழ்விற்கு ஒரு முக்கிய அடிப்படைக் காரணம்.

**தமிழ்நாட்டில் மேலாதிக்கங்கள் :**

தமிழகம் முழுவதிலும் தமிழின விடுதலை பேசும் மன்றங்கள் சுமார் ஆயிரம் இன்று இருக்கலாம். அரசியல் கட்சிகளுக்கு வெளியில், அவற்றை நம்பாமல், இந்த மன்றங்கள் தமிழின உரிமைகள் காக்க இன்று செயல்படுகின்றன. தேர்தல் முறையில் ஆட்சிக்கு வந்து நாற்காலிகளை இறுக்கமாகப் பற்றிக் கொள்ளும் அரசியல்வாதிகள் மீது இவர்கள் அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

பொருளியலில் மட்டுமல்லாமல் சமூக நிலையிலும் மேலாதிக்கம் நிலவுகிறது. மத ரீதியான சமூக மேலாதிக்கம், மொழி ரீதியான சமூக மேலாதிக்கம், மற்றும் பண்பாட்டு ரீதியான சமூக மேலாதிக்கம் ஆகிய மூன்றுமே தமிழ்நாட்டில் இருக்கின்றன.

பார்ப்பனர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் நிறுவியிருக்கின்ற மதரீதியான சமூக மேலாதிக்கம் பற்றி பெரியார் நிறையச் சொல்லியிருக்கின்றார். ஆட்சி அதிகார ஆதிக்கத்தைப் பொறுத்தவரை, இங்கு இந்தியாவிற்குள் வந்த போர்ச்சுக்கீசியரையோ, டச்சுக்காரரையோ, டெல்லிசுல்தான்களையோ, மராட்டியர்களையோ, தக்காண சுல்தான்களையோ தற்போது குற்றம் சொல்ல முடியாது. மொகலாயர்களின் ஆட்சி அதிகாரம் மேலாதிக்கம் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் சில நூற்றாண்டுகள் நிலவியது ஆனாலும் இன்று அவைகளின் எச்சங்களே மிஞ்சியுள்ளன.

www.tamilarangam.net



சொற்களில் ஜில்லா தாசில்தார், கஜானா, வக்கீல் இப்படிப்பல. 'இந்தியா யாருடைய தேசம்' என்று அவர்கள் பாடியது அன்று. இன்று தங்கள் தோலைக் காப்பாற்றிக்கொள்ள படாதபாடு படுகிறார்கள்.

இதர அன்னியர்கள் அனைவரும் வெளியேறிவிட்டனர். ஆந்திராவில் இருந்து வந்து தமிழ்நாட்டில் தங்கிவிட்ட தெலுங்கு இனத்தாரை அப்படிச் சொல்ல முடியாது. ஆங்கிலேயர் வரும்வரை, தமிழகம் முழுவதும் ஆட்சி அதிகாரம் தெலுங்கு இனத்தார் கையிலேயே இருந்தது. விஜயநகரப் பேரரசின் தெற்குப்பகுதி ஆளுநராக நியமனம் செய்யப்பட்ட மதுரை நாயக்கர்கள், பின்னால் சுதந்திர மன்னர்களாக ஆயினர். தமிழகத்தில் தொன்றுதொட்டு நிலவிய அரசியல் மற்றும் நிலவியல் அமைப்புக்களை மாற்றிடும் முறையில் பாளையப் பட்டுகளை உருவாக்கி, அவற்றின் நிர்வாகிகளாக பாளையக்காரர்களை ஏற்படுத்தினர். சுமார் 300 ஆண்டுகள் ராணுவ ஆட்சியை நடத்தினர். அப்போது வைணவத்தை வலுப்படுத்தி, தீபாவளிப்பண்டிகையைப் பொங்கலுக்கு மேலான முக்கிய விழாவாக மாற்றினார்கள். தெலுங்குப் பள்ளிகளை அதிகமாக ஏற்படுத்தினார்கள். தெலுங்கர்கள் தமிழகத்தின் வளமான நிலங்களைக் கணிசமான அளவு கைப்பற்றினர். அவற்றில் பெரும்பகுதி நிலங்கள் தேவேந்திர குலத்தாருடைய நிலங்களாக இருந்தவை. இசை உலகிலும் தெலுங்கைப்புகுத்தி வெற்றி கண்டனர். இவ்வாதிக்கம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் வளர்ந்தது. பின்னர் திராவிட இயக்க காலத்தில் அனைத்துத் துறையிலும் மேலும் உயர்ந்து நிற்கின்ற நிலையினை எட்டியது.

தெலுங்கர்களின் இத்தகைய வளர்ச்சிக்கும் வளப்பத்திற்கும் பார்ப்பனர்கள் வழக்கம்போல துணை இருந்தனர். தெலுங்குப் பார்ப்பனர்கள் இறக்குமதி செய்யப்பட்டனர். தெலுங்கு மொழிக்கு ஏற்பட்ட ஏற்றம் காரணமாக புதுக்கோட்டை மன்னர் போன்றவர்களின் பட்டயங்களிலும் அரசு முத்திரைகளிலும் கூட தெலுங்கு ஏறிக்கொண்டது. இன்னும் அரசியல் சமுதாய பொருளாதார மற்றும் பண்பாட்டுத் துறையில் அவர்கள் பிடி தளரவில்லை. மாறாக இறுகும் சூழலே தொடர்கிறது. அவர்கள் இறக்குமதி செய்த சௌராஷ்டிரரும் கோமுட்டி செட்டியார்களுமே தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திற்கு வித்தூன்றி வளர வழி செய்தவர்களாவார்கள்.

கன்னடர்களின் ஆதிக்கமும் படையெடுப்பும் சிற்சில காலங்கள் இருந்திருக்கின்றன. கன்னடப்பார்ப்பனர்களுக்கு பூரணையா போன்ற மைசூர் திவான்கள் தமிழகத்தின் வளமான ஆற்றுப்படுகைகளை இலவசமாகக்கொடுத்துக் குடியேற்றினார்கள். வரலாற்று ரீதியாகத் தமிழர்களை அடக்கப் பிறந்தவர்கள் என்ற நினைப்பு கன்னடர்களுக்கு இன்று வரை இருந்து வருகிறது.

www.tamilarangam.net



குந்தவை நாச்சியார் தெலுங்கு இளவரசனைத் திருமணம் செய்து கொள்ள ராஜராஜசோழன் ஏற்பாடு செய்தகாலம் முதல், தொடர்ந்து வந்த அந்நிய மேலதிகாரங்களும் தொடர்ந்து தமிழர்கள் அரசுரிமை இழந்து வந்த காரணத்தினாலும் சராசரித் தமிழனுடைய உள்ளம் ஒருவித அடிமைத்தனத்தில் ஊறி இருப்பது போலத் தெரிகிறது.

இன்று தொலைக்காட்சி, பத்திரிக்கைகள் முதலியவற்றின் மூலமாக அந்நியர்களின் பண்பாட்டு மேலாதிக்கம் இங்கு வேகமாகப்பரவி வருகிறது. ராஜீவ் காந்தியின் சாவைத் தொடர்ந்து அடிமை மனப்பான்மை இங்கு அதிகரிக்கச் செய்யப்பட்டிருக்கிறது. இந்தியப்படை ஈழத்திற்குச் செல்லும் வரை ஏராளமான கவிதைகள் நம் கவிஞர்கள் எழுதித் தள்ளினார்கள். ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப்பிறகு அவர்களில் பெரும்பான்மையினர் பேனாவைக் கீழே போட்டு விட்டார்கள்.

கர்நாடகத்தில் உள்ள பேராசிரியர்கள் மக்கள் இயக்கத்தில் பங்கு பெற்றுத் தெருவிற்கு வருகிறார்கள். பாரதிதாசனுக்கு நிகராக சொல்லப்படும் குவேம்பு வானொலி நிலையத்தைக் கைப்பற்றுகிறார். 'இந்தியில் பேசாதே, கன்னடத்தில் பேசு' என்று முழங்குகிறார்கள். இங்குள்ள கல்லூரிப் பேராசிரியர்கள், வெள்ளைச் சட்டைக்காரர்கள் எல்லாம் போராடுவதற்கு வருவதில்லை.

## தமிழ்நாடு – மாநிலமா? அரசா?

திருவிக. வின் நடையை தேசிகன் என்பவர் கேலி செய்து எழுதிய போது பெருங்கூட்டமாகத்திரண்டு பேராசிரியர்கள் அவரை அன்று எதிர்த்தார்கள். ஆனால் இன்று அப்படிப்பட்ட எதிர்ப்பு என்பதே இல்லை. அமெரிக்காவில் மரம் ஏறுபவரை தமிழர் என்று குறிப்பிட்டு ஒரு கலைக்களஞ்சியத்தில் படம் போட்டிருந்தார்கள். அன்று இதை எதிர்த்து பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் இன்று தமிழர் நலன்களுக்கெதிராகத் தமிழ்நாட்டில் எவ்வளவோ நடை பெறுகின்றன. ஆனால் கிளர்ச்சி எதுவுமில்லை. இது எப்படி நேர்ந்தது?

மேலும் ஒரு சான்று முன்பு சென்னை மாநிலம் என்று இருந்தது. இன்று பிறமொழிப் பகுதினர் பிரிந்து போய்விட்டார்கள். எனவே நம்முடையது தமிழ்நாடு அரசு என்றே இருக்க வேண்டும். ஏனெனில் இந்திய அரசியல் சட்டத்திலும் "அரசு" (ஸ்டேட்) என்றே எழுதப்பட்டு இருக்கிறது. மாநிலம் என்று சொல்லப்படவில்லை. மாநிலம் என்ற சொல் ஒற்றையாட்சியின் உறுப்பாகத்தான் இருக்க முடியும். ஆனால் 'தமிழ் மாநில மாநாடு' என்று இன்று போடுகிறார்கள். இது சரியானதா? அரசியல் சட்டத்தை எழுதிய போது அம்பேத்கார் மிகவும் கவனமாக இந்தியாவை 'யூனியன் ஆப் ஸ்டேட்ஸ்' அதாவது "அரசுகளின் ஒன்றியம்" என்றே கூறியிருக்கின்றார். இந்தியாவை Unitary State with Federal Features என்று குறிப்பிடுகிறார்கள் அதாவது கூட்டாட்சியின் அம்சங்களும் ஒன்றியத்தின் அம்சங்களும் கலந்திருக்கின்றன, என்று பொருள்.

www.tamilarangam.net



மைய அரசுக்குச் சில அதிகாரங்கள், பிற அரசுகளுக்குச் சில அதிகாரங்கள் என்று பிரித்திருக்கிறார்கள். 'தமிழ்நாடு மாநாடு' என்றுதான் குறிப்பிடுவது பொருந்தும் மன இயல் ரீதியில் தமிழர்களிடம் அடிமை மனப்பான்மை இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது எனவே நாளடைவில் பலவித முறைகளில் இந்தியாவின் உறுப்பு அரசுகளின் அதிகாரங்கள் கரைத்து அரித்து குறைக்கப்பட்டுவிட்டன.

## கர்நாடகம் - தேசிய வெறி

இந்தியாவில் உள்ள அந்த அந்தத் தேசிய இனங்கள் போராடினால் மைய அரசிடமிருந்து சில உரிமைகளை மீட்க முடியும் கர்நாடகத்தைப் பொறுத்தவரை 1956 முதல் அங்குள்ள அனைத்திந்தியக் கட்சிகளுட்பட அனைத்துக்கட்சிகளும் ஒன்று திரண்டு கர்நாடகத்தின் நலன்களைக் காக்க முன்னின்று போராடியதன் விளைவாக அங்கு தொழில் வளர்ச்சியும் விவசாயத்துறை மற்றும் பிறதுறைவளர்ச்சியும் பெருமளவிற்கு ஏற்பட்டிருக்கிறது ஒரு தேசிய இனமாக அவர்கள் திரண்டு போராடும் பொழுது சிலரை எதிரிகளாக வரிக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் தங்களைக் காத்துக்கொள்ள தெலுங்கு லேவாதேவிக்காரர்களான கோமுட்டிகளும் பெரும் நிலக்கிழார்களான ரெட்டிகளும் மற்றும் குஜராத்தி மார்வாடி, பணக் கொள்ளையர்களும் கன்னடர்களின் தேசிய இன வெறியின் தீ நாக்குகளாக இருக்கின்ற கன்னடச் சாளுவாலிகரர்கள், கன்னட ரண தீரப்படை, ராஜ்குமார் அபிமானிகள் சங்கம் முதலியவற்றிற்கு வேண்டியமட்டும் பணம் தருகிறார்கள்.

அங்கு ஒவ்வொரு அரசியல் கட்சியும் தலைவர்களும் ஒரு போக்கிரிக் குழுவைத் தத்து எடுத்திருக்கிறார்கள். ஹெக்டே, பொம்மை பங்காரப்பா, தேவகவுடா போன்றவர்கள் இத்தகையவர்கள். இந்த ரவுடிக் கும்பலுக்கு பின்பலமாக காங்கிரசும், ஜனதாதளமும், பிற கட்சிகளும் இருக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளாக அவர்கள் செய்த கொள்ளை,
தீ வைப்பு கற்பழிப்பு ஆகியவற்றுக்காக ஒரு வழக்குக்கூட தாக்கல் செய்யப்படவில்லை. 1991 டிசம்பரில் கர்நாடகத்தில் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, தீ வைக்கப்பட்டு, கற்பழிக்கப்பட்டு, தமிழர்கள் பெருங் கொடுமைக்கு ஆளானார்கள். கர்நாடகம் முழுவதும் சுமார் 1000 இடங்களில் இந்தக் கொடுமைகள் நடந்தன. ஆனால் ஒரு வழக்குக்கூட கன்னட வெறியர்கள் மீது பதிவு செய்யப்படவில்லை. ஒற்றுமையும், தேசிய வெறியும் கொண்ட கூட்டம்தான் எதையாவது சாதிக்கமுடியும் போலும்! இதற்காக

www.tamilarangam.net



வேறு தேசிய இனத்தைச் சேர்ந்த சிறுபான்மையினரை அவர்கள் பலியிடுகிறார்கள்.

## ஆதாய அரசியல்

1938 இல் "தமிழ்நாடு தமிழருக்கே" என்று பெரியார் குரல் கொடுத்தார். 38க்குப் பிறகு இந்த இயக்கம் ஏன் வலுப்பெறவில்லை? திலகர் காலத்தில் வ.உ.சி. ஓர் அனைத்திந்தியக்கட்சியில் இருந்து தேச விடுதலைக்காகப் போராடிய போதும், தமிழ்த்தேசிய உணர்விலிருந்து அவர் விலகிவிடவில்லை பார்ப்பனியத்தின் கூர்முனையாகத் திலகர் செயல்பட்டார். ஆனால் வ.உ.சி. தமிழின உணர்வும் பார்ப்பன எதிர்ப்பும் கொண்டவராக இருந்தார். ஒருவாறு விடுதலை இயக்கத்தில், அவர் ஓரங்கட்டப்பட்டார் அப்பொழுது முதல் காங்கிரஸ் இயக்கம் தமிழக நலன்களைப் புறக்கணித்து வந்திருக்கிறது.

கம்யூனிஸ்டுக்கட்சி போன்றவைகளும் தேசிய இன உணர்வு என்பதைக் கைவிட்டு அரசனுக்கு மிஞ்சிய அரச விசுவாசிகளாக மாறினார்கள். இந்தி எதிர்ப்பு போராட்ட உணர்வை வாக்குகளாக மாற்றிப் பதவியைப் பற்றிக்கொண்டவர்கள், கடந்த 25 ஆண்டுகளுக்கிடையில் தமிழத் தேசிய இன உணர்வை அறவே கைவிட்டதோடு அதற்கெதிராக நேர்முகமாகவும் மறைமுகமாகவும் செயல்பட்டார்கள்

ஓட்டோ, அரசு அதிகாரமோ, சாதி கட்சிசண்டைகளோ கேரளாவையோ, கர்நாடகத்தையோ, ஆந்திராவையோ தங்கள் ஒட்டு மொத்த மாநில நன்மைகளைக் காப்பதில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

மேல்கிருஷ்ணா நதியில், அலமாதி அணையை 1720 அடியாக கர்நாடகம் உயர்த்துகிறது. ஆந்திராவில் 33 லட்சம் ஏக்கர் நிலப்பாசனத்தை இது பாதிக்கும் இரண்டு நீர் மின் நிலையங்களைப் பாதிக்கும் எனவே காலந்தாழ்த்தாது அங்கு அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து ஆந்திர முதல்வரிடம், "நீங்கள் போராடுங்கள், நாங்கள் உடனிருக்கிறோம" என்று கூறியிருக்கிறார்கள். கடந்த 25 ஆண்டுகளாக திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த எம்பிக்கள் பாராளுமன்றத்தில் தமிழர்களின் நலன்களுக்காக இணைந்து எப்பொழுதாவது குரல் கொடுத்தார்களா?

தமிழ்நாட்டில் வேலூரில் இருக்கிற சிஎம்சி மருத்துவமனையில் முன்பு சில சீர்திருத்தங்களை அப்போதைய முதலமைச்சர் கலைஞர் செய்ய விரும்பினார். அந்த மருத்துவமனை நிர்வாகத்திலும் முக்கிய பொறுப்புகளிலும் இருப்போர் மலையாளிகள். இதனால், கேரளாவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பிரதமரை ஒவ்வொரு

www.tamilarangam.net



நாளும் அந்தப்பிரச்சினை தீரும் வரை சந்தித்தார்கள். மலையாளத் தேசிய உணர்வுக்கு இது சான்று.

திருச்சியில் 1954 இல் மாநாடு கூட்டி, ஆட்சியில் அமருவதற்காக அண்ணா திட்டமிட்ட காலம் முதல் தமிழக அரசியல் என்பது பதவியைப் பிடிக்கின்ற அரசியல் வேட்டையாக மாறிவிட்டது. இது அதிகார அரசியல், ஆதாய அரசியல், ஆதிக்க அரசியல், இதன் காரணமாகத் தமிழ்நாட்டில் ஒற்றுமைக்குறைவும், மக்கள் மத்தியில் அவநம்பிக்கையும், தமிழ்நாடு தமிழ்மொழி என்று பேசுபவர்கள் மீது மதிப்புக் குறைவும் ஏற்பட்டுவிட்டன.

சாதிச் சங்கங்கள்

இன்னும் ஓர் உண்மை கட்சியிலுள்ள தலைவர்கள் பெரும்பாலும் மேல் சாதிக்காரர்கள். தொண்டர்களாக இருந்து அல்லல்படுபவர்கள் கீழ் சாதியைச் சேர்ந்தவர்கள். கடந்த காலத்தில் போர்த்தொழில் சாதிகளாக, வேட்டைச் சாதிகளாக இருந்தவர்கள் இன்று கட்சிகளின் அடிமட்டத் தொண்டர்களாக இருக்கின்றார்கள். கட்சியில் தொடரும் மேல்சாதியினரின் ஆதிக்கத்தைப் பார்த்து சலிப்படைத்தவர்கள் இப்பொழுது சாதிச் சங்கங்களில் திரள்கிறார்கள்.

இதைவிடப் பெரிய பின்னடைவு மக்கள் தலைவர்களைச் சாதித் தலைவர்களாகச் சுருக்குவது. பிள்ளைமார் சங்கத்தில் வ.உ.சி. யின் படத்தை வைக்கின்ற அளவுக்கு நிலைமை இருக்கின்றது. வ.உ.சி யின் கடைசி மகனை ஒரு திருமணத்தில் சந்தித்தபொழுது இதுபற்றி நான் கேட்டேன் அவர், 'என்ன செய்வது மற்ற சாதிக்காரர்கள் எல்லாம் மறந்துவிட்டார்களே! இவர்களாவது நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று சொன்னார். சிவாஜி கணேசனும், ம. பொ.சியும் இல்லையென்றால் வ.உ.சி யின் பெயர் எப்பொழுதோ மறைந்திருக்கும். ஜீவாவுக்கும் இதே நிலைதான். ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் பேருந்தில் ஜீவா படத்தைப் பார்ப்பவர்கள் அவர் ஏதோ இந்த போக்குவரத்தின் முதலாளிபோலும் என்று கருதுவார்கள். நாடார் சங்கத்தில் காமராசர் படத்தை வைக்கிறார்கள். பார்கவகுல சங்கத்தில் ஏ.டி. பன்னீர் செல்வம் படத்தை வைக்கிறார்கள். மாவட்டங்களுக்கும் சாதிப் பெயர் வைக்கிறார்கள் தாழ்வு நேர்ந்து கொண்டிருக்கும்பொழுது தமிழர்கள் ஒற்றுமைப்படுவதற்குப் பதிலாகச் சிதறுண்டு பழைய நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக, தமிழர்கள் சிதறிவருவதற்கு ஒன்று கூறலாம். முன்பு அழைப்பிதழ்களில் சாதிப்பெயர்களை மட்டும் போட்டார்கள் தமிழர்கள் சிதறிவருவதற்கு இப்போது கொங்கு வேளாளர் உட்படப் பலரும் குலங்கள் கூட்டங்களின் பெயர்களையும் அழைப்பிதழ்களில் போடும் அளவிற்குப் பின்நோக்கிச் சென்றுவிட்டார்கள். இப்படிப் பின்னடையும் அதே சமயம் அனைத்திந்திய அடையாளத்திற்கு

www.tamilarangam.net



அலைகிறார்கள் சொந்த அடையாளத்தை இழக்கிறார்கள் நாடார் மகாஜன சங்க மாநாட்டிற்கு பங்காரப்பாவை அழைத்தார்கள். அவர் மரமேறும் சாதியைச் சேர்ந்தவராம் ஏன்செவ்விந்தியர்களில் மரமேறிகள் இல்லையா? ஆஸ்திரேலியாவில் மரமேறிகள் இல்லையா? இவர்களையெல்லாம் வைத்து அகில உலக மரமேறிகள் சங்கம் என்று ஆரம்பித்தால் என்ன என்று கேட்டேன்?

இவ்வாறு சாதிச் சங்கங்கள் என்பவை பாட்டாளிகளின் வர்க்க ஒற்றுமைக்குத் தடையாக இருப்பதுபோல, தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும் பாதகமாக இருக்கின்றன; தமிழ்த்தேசிய அடையாளத்தை அழிப்பதற்குக் காரணமாகவும் இருக்கின்றன. நம் மத்தியில் உள்ள இடையர்கள் கோனார்கள் இப்பொழுது யாதவர்களாக மாறியிருக்கிறார்கள். தேவேந்திர குலம் அகில இந்திய தேவேந்திரகுலமாக மாறுகிறது. தமிழ்நாடு வாணிகச் செட்டியார்கள் மாநாட்டிற்கு மத்திய அரசில் துணை அமைச்சராக இருந்த மத்தியப்பிரேதேசத்தை சேர்ந்த செக்காட்டும் குடும்பத்தினரைச் சேர்ந்த அமைச்சரை அழைத்தனர்.

தமிழினத்தின் பகைவர் செய்யும் தீங்குகள் ஒருபுறம் இருக்க தமிழ் இனத்திற்குள்ளேயிருக்கும் சிலர் என்ன செய்கிறார்கள். காவிரிச் சிக்கலை எடுத்துக் கொள்வோம்.

## காவேரிச் சிக்கல்

கரூரில் தொடங்கி காவிரிப்பூம்பட்டினம் வரை காவிரி நீரால் பிழைக்கிற மக்கள் 1 1/2கோடிப் பேர் இருக்கிறார்கள். நீர்ப்பாசனத்தில் 80% காவிரியில் இருந்து தான் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் நிலத்தடி நீரில் 40% காவிரிதான் தருகிறது தற்பொழுது காவிரி காய்ந்து வருகிறது. இதற்கு முதற்பலி தாழ்த்தப்பட்ட மக்கள்- பாட்டாளியின மக்கள், அதாவது விவசாயக்கூலிகள். சீனிவாசராஜ், ஜீவா முதலியவர்கள் முன்னின்று, மேற்சொன்ன விவசாயக்கூலிகளை படாதபாடுபட்டு மன்னார் குடியில் கூட்டி அன்று மாபெரும் மாநாட்டை நடத்தினார்கள். இன்று அந்த மக்கள் மூன்று நான்காக பிரிந்து விட்டார்கள். டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையில் உள்ள தேவேந்திர குல மக்கள் ஒரு பிரிவினர், பறையர் ஆதித் தமிழர்கள் ஒரு பிரிவினர், வன்னியர்கள் ஒரு *பிரிவினர்.* இவர்கள் இப்பொழுது சாதிச் சங்கங்களில் பிரிந்து கிடக்கிறார்கள்.

காவிரிச் சிக்கலால் சுமார் 7 லட்சம் குடும்பங்கள் பாதிககப் பட்டிருக்கின்றன. தஞ்சைத்தரணியை விட்டு இவர்கள் இன்று வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் இப்பொழுது வந்த தண்ணீர் ஆடிப்பெருக்கிற்காக விடப்பட்ட அரசியல் தண்ணீர் . சாதிச் சங்கங்கள் காரணமாக இவர்கள் தங்கள் வாழ்க்கையையே பலி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 82 முதல் 90 வரை காவிரியில் நீர் வரவில்லை. தஞ்சை பாலைவனமாக மாறியது. நிலம் பிளந்தது. பட்டினிச் சாவுகள்

www.tamilarangam.net



நிகழ்ந்தன அப்பொழுது பத்திரிக்கைக்காரர்களோ, தலைவர்களோ, கவலைப்படவில்லை. 90க்குப் பிறகு தொடர்ந்து நாங்கள் செய்து வரும் முயற்சியின் பலனாக ஓரளவு
மாற்றம் ஏற்பட்டுள்ளது. சாதியச் சங்கங்களின் விளைவாகத் தாங்களும் அழிவதோடு தமிழ்நாட்டின் அழிவிற்கும் காரணமாக அமைகின்றனர். இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டால்தான் இந்த சீர்குலைவின் போக்கைத் தடுத்து ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

## அயல்மொழி மோகம் :

இப்பொழுதெல்லாம் தனித்தமிழ் இயக்கங்கள் மண்ணைக் கவ்வுகின்றன. பணக்காரன், பதவிக்காரன் எல்லோரும் மனரீதியில் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதிக்கொண்டு தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் வைக்கின்றனர். ஜோஷினி, அம்ரிஷி என்றெல்லாம் பெயர் வைக்கிறார்கள் வடமொழியில் பெயர் வைப்பது மக்கள் இயக்கமாக மாறிவிட்டது இப்பொழுது பார்ப்பனர்களை இது பற்றிக்குற்றம் சொல்லிப் பயன் இல்லை. வடமொழி மோகம் மக்கள் இயக்கமாக மாறியிருப்பது தன்மான இயக்கத்தின் தோல்வி, தனித்தமிழ் இயக்கத்தின் தோல்வி, பொதுவுடைமை இயக்கத்தின் தோல்வி இதைப்போல ஆங்கில மோகமும் அதிகரித்துள்ளது. மேல் சாதிக்காரனைத் தாங்களும் பின்பற்ற வேண்டும் என்று இவர்கள் கருதுகிறார்கள். சாமானிய மக்களும் இவற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் நமது நாட்டினைப் பொறுத்தவரை மேலே இருக்கிற பார்ப்பனரைப் பார்த்து இவர்கள் தங்களைப் பிராமணமயப் படுத்திக் கொள்கிறார்கள்.

## எல்லைகளுக்கு ஆபத்து

தமிழர்களின் நிலங்கள் எவ்வாறு பறிபோயின என்பதைப்பற்றி 'தமிழன் இழந்த மண்' என்ற நூலில் நிறைய விபரங்களைத் தந்திருக்கிறார் பழ நெடுமாறன். மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் பிரிவினை செய்யப்பட்ட பொழுது எல்லையோரங்களில் பெருவாரியான மக்கள் பேசும் மொழியின் அடிப்படையில் தொடர்ச்சியான பகுதிகளை அந்த மொழி வழங்கும் மாநிலத்தோடு இணைக்க வேண்டுமென்று பிரிவுபடாத கம்யூனிஸ்டுக் கட்சி ஆலோசனை கூறியது. நேருவின் ஆலோசகர் மேன்ன் போன்றவர்களின் ஆலோசனையின் பேரில் தாலூக்கா அடிப்படையில் பிரித்தார்கள். இதன் விளைவாகத் தமிழ்நாட்டின் பல பகுதிகள் பிற மாநிலங்களோடு சேர்க்கப்பட்டன.

இன்று நேர்ந்துள்ள ஒரு பேராபத்து, தமிழ்நாட்டின் இரண்டு மாவட்டங்கள் பிற மாநிலங்களோடு சேர்க்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது நீலகிரி மாவட்டத்திலுள்ள படுகர்கள் கர்நாடகத்தோடு தங்கள் மாவட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அங்குக்

www.tamilarangam.net



குடியேறிய மலையாளிகளும் படுகர்களோடு சேர்ந்துகொண்டு அந்த மாவட்டத்தை மைய அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் பெரிய கட்சிகள் எதுவும் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை குமரி மாவட்டத்தையடுத்துள்ள கேரளாவில் தமிழ்நாட்டை விட ஓரளவு ஒழுங்கான ஆட்சி நடைபெறுகிறது. கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கும் இதற்கு ஒரு காரணம். தமிழார்வம் காரணமாகப் பிரிந்து தமிழ்நாட்டோடு சேர்ந்தவர்கள் இப்பொழுது வேறு வகையாகச் சிந்திக்க வைக்கப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் மதச் சண்டைகள் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு இல்லை. சாதிச் சண்டைகளுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டைக் கெடுப்பது கட்சி அரசியல், ஆதாய அரசியல், அதிகார அரசியல், எம். ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது திருச்சியைத் தமிழ்நாட்டின் 2-ஆவது தலை நகரமாக்க 3 முறை முயற்சி செய்தார். 3 முறையும் கலைஞர் அந்த முயற்சியைத் தோற்கடித்தார். சென்னையில் ஆட்டோ ஓட்டுநர்கள் கலைஞருக்குச் சார்பாக அப்பொழுது இருந்தார்கள். அவர்களை வைத்துப் போராட்டம் நடத்துவேன் என்று கலைஞர் சொன்னார். கன்னியாகுமரி மாவட்டம் நெடுஞ்தொலைவிலிருப்பது ஒரு காரணம் 'நெல்லை நமது எல்லை, குமரி ஒரு தொல்லை' என்று கலைஞர் ஒருமுறை சொன்னார். இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, "எங்களோடு வந்து விடுங்கள்" என்று நாயர் சமூகம் என்ற அமைப்பு தீர்மானம் போட்டிருந்தது.

## காவிரியும் கருணாநிதியும்

காவிரியை மையப்படுத்தி சில விபரங்களை இங்குக் குறிப்பிடவேண்டும் 'காவிரியை நாம் இழந்துவிட்டோம், மீட்பது கடினம்' இவ்வாறு நான் சொல்வது உங்களுக்கு அதிர்ச்சியைத் தரலாம். கர்நாடக எல்லைக்குள் உள்ள காவிரியின் அனைத்துக் கிளைநதிகளிலும் அணை கட்டி விட்டார்கள். கிளை நதிகளில் வந்து கலக்கும்ஓடைகளிலும் சிறுசிறு நீர்த்தேக்கங்களை அரசு மானியத்தோடு அமைத்து வருகிறார்கள். அவைகளுக்கென குட்டைத்திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்த தண்ணீர்ச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. கர்நாடக எல்லைக்குள் கடைசி அணையாகிய கிருஷ்ணராஜசாகரிலிருந்து வரும் காவிரியில் பில்லிகுண்டு வரையில் உள்ள தண்ணீரையும் விடக்கூடாது என்ற நோக்கத்தோடு இன்னொரு அணை மேகதாது என்ற இடத்தில் கட்டத் தீவிர முயற்சி செய்கிறார்கள். கடுமையான மழை பெய்யும் ஆண்டுகளில் தவிர சராசரி மழை பெய்யும் ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் கிடைக்காது. கபினி நிறைந்துவிட்டதால் இப்பொழுது நீர் விடுகிறார்கள் என்று தமிழக அமைச்சர் கூறுகிறார் உண்மை அதுவல்ல ஆடிப்பெருக்கிற்காக

www.tamilarangam.net



இப்பொழுது நீர் விட்டிருக்கிறார்கள்.

காவிரிப்படுகையில் 11/2 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. நிலத்தடி நீரும் 40 அடிக்கு கீழே போய்விட்டது. காவிரிப்பிரச்சினையை இதுவரை எடுத்துப்பேசுபவர்கள் உயர்குடிவேளாண்மக்கள் மற்றும் பார்ப்பன மிராசுதாரர்கள், நான்குபேர் கூடிப் பத்திரிக்கைக்கு அறிக்கை தருவார்கள் மக்கள் இயக்கமாக அதை அவர்கள் மாற்றவில்லை. மக்கள் மத்தியில் உரிமைக்குப்போராடத் தேவையான உணர்ச்சியை அவர்கள் ஏற்படுத்த விரும்பவில்லை. இது அரசியல்வாதிகளுக்குச் சாதகமாக ஆகிவிட்டது. தமிழ்நாட்டின் பிரச்சினை என்று கூட இவர்கள் சொல்ல விரும்பாவிட்டாலும் 71/2 லட்சம் குடும்பங்களின் பிரச்சினை என்றாவது சொல்லியிருக்கலாம். ஆனால் வெறும் தஞ்சை விவசாயிகள் பிரச்சினை என்று மட்டுமே உள்நோக்கத்தோடு கூறுகிறார்கள்.

காவிரியை நாம் இழப்பதற்கு முதல் காரணமாகவும், முடிவான காரணமாகவும் இருப்பவர் என்று ஒருவரைக் கூறவேண்டுமானால் அவர் கருணாநிதிதான். அவருக்கு வருத்தம் தரக்கூடாது என்ற நோக்கத்தில் தான் உயர்குடிப்பெருமக்கள் இப்பிரச்சினையில் செயல்படுகிறார்கள்.

கர்நாடகத்தில் இப்பொழுது 16-17 அணைகள் கட்டி இருக்கிறார்கள். இவை சட்ட விரோதமாகவும், ஒப்பந்த விரோதமாகவும், எவ்வித அனுமதி இல்லாமலும், குறிப்பாக திட்டக்குழுவின் அனுமதியில்லாமலும், மைய நீர் ஆணையத்தின்அனுமதி இல்லாமலும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும், தமிழகத்தைக் கலந்து கொள்ளாமலும், கட்டிய இந்த அணைகளை தேவகவுடா தற்பொழுது அலக் என்ற நபரை மத்திய திட்டத்துறை அமைச்சராக நியமித்ததன் மூலம் ஆணைகளாக மாற்றுவதற்கு மத்திய அரசின் அங்கீகாரத்தோடு கூடிய நடவடிக்கை எடுத்துவருகிறார். பிரதமர் நியமித்த குழுவில் ஒரு அதிகாரியாக இருந்தவர் அலக். 11 டி.எம்சி. தண்ணீர் கொடுக்க வேண்டிய நிலையில் 6 டி.எம்சி. தண்ணீர் மட்டுமே நமக்குக் கிடைத்தது. மீதி 5 டி.எம்சி. நீரைத் தமிழ்நாட்டுக்குத் தரத் தேவையில்லை என்று பரிந்துரை செய்த நபர்தான் அலக்

திருச்சியில் நான் ஒரு மாநாடு கூட்டிய பொழுது கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் ஆவேசமாகப் பேசினார். பத்தாயிரம் பேரைத் திரட்டிக்கொண்டு கர்நாடத்தில் உள்ள அணையை இடிப்போம் என்றார். கீழ்பவானி வாய்க்கால் விவசாய சங்கத்தை சேர்ந்தவர்கள் அதைக்கிண்டல் செய்து எழுதினார்கள். அவர்கள் பல்ராம்ஜாக்கருடைய அனைத்திந்திய விவசாயிகள் கங்கத்தின் கையாட்களாக விளங்கியவர்கள். நான் அவர்கள் கூற்றை எதிர்த்தேன். உங்களுக்கும் ஆபத்து வரும் என்றேன் சென்றமுறை என்ன நடந்தது. குறுவையைக் காப்பாற்றுவதற்காக 5 டி.எம்சி தண்ணீரை கீழ்பவானி அணையிலிருந்து

www.tamilarangam.net



எடுத்துக்கொண்டு போனார்கள். இவர்களது நிலம் தண்ணீர் இன்றி வாடியது. காவிரி என்பது இப்படித்தான் தமிழ்நாட்டின் பிரச்சினை ஆகிறது. 1971-இல் உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு கொடுத்திருந்த வழக்கை இந்திராகாந்தி வற்புறுத்தியதால் கலைஞர் கருணாநிதி திரும்பப்பெற்றார்.

அடுத்த இருபது ஆண்டுகள் நடுவர் மன்றம் தேவையில்லை என்று கருணாநிதி தீவிரமாக பிரச்சாரம் செய்தார். நடுவர் மன்றம் வேண்டும் என காவிரித்தீர விவசாயிகள் லால்குடியிலும் மன்னார்குடியிலும் 83-இல் மாநாடு கூட்டினார்கள். அதைக் கண்டித்து நடுவர் மன்றம் தேவையில்லை என்று கலைஞர் முழங்கினார். நடுவர் மன்றம் வராததற்குக் கருணாநிதி தான் காரணம்.

83-இல் விவசாயிகள் வழக்குத் தொடர்ந்தார்கள். அப்பொழுதும் பேச்சுவார்த்தை பற்றிதான் எம். ஜி.ஆர். அவர்களும் கலைஞர் போலவே செயல்பட்டார். ஜெயலலிதாவும் இதேபோலத்தான். கலைஞர் செய்த துரோகம் பற்றி நான் எழுதிய கட்டுரை ஒன்றை வை கோவிடம் தந்தேன். அதைப்படித்த பின்னரும் கலைஞர் செய்தது சரிதான் என்று அவரும் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். காவிரியை மீட்க முடியாது. நாயர் பிடித்த புலி வால் மாதிரி இந்த பிரச்சினை. எனவே இதை எடுத்துக் கொண்டு தங்களது குளிர்ப்பதன அறை அரசியலைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம் என்பதுதான் தலைவர்களின் நடைமுறை. இப்பொழுது நடைப்பயணம் மேற்கொள்கிறார்கள் இது வெறும் கட்சி அரசியலே. காவிரி கன்னடத்தின் சொத்து என்று சொல்லி இவ்வளவு அணைகளையும் கட்டியவர்களில் முக்கியமானவர் தேவகவுடா, கர்நாடகத்துத் தமிழர்களை அடித்து, உதைத்துக் கொடுமை செய்தவர். நாங்கள் அணை கட்டியது தமிழ்நாட்டிற்கு நீர் தருவதற்காக அல்ல என்று சொன்னதோடு நடுவர் மன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்றச் சொன்னால் இரணகளம் ஏற்படும் என்று பிரதமர் ஆவதற்கு 7 நாட்களுக்கு முன் சொன்னார். இந்த கௌடாவை தமிழ்நாட்டுத் தலைவர்கள் பிரதமராக்கியுள்ளார்கள்.

அணைகளையெல்லாம் சட்டத்திற்கு ஒத்ததாகச் செய்ய இவர் ஏற்பாடு செய்கிறார். மிகவும் ஆட்சேபணைக்குரிய கர்நாடகத்தின் கோஜெனட்ரிக்ஸ் மின் திட்டத்திற்கு அனுமதி கொடுத்துவிட்டார். தென்னக ரயில்வேயை இரண்டாகப் பிரித்து பெங்களூரை ஒரு மண்டலத்தின் தலைநகராக ஆக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார். ஆந்திராவிற்கு விரோதமாக அலமாதி அணை கட்டுவதில் கர்நாடகத்திற்கு ஆதரவாக இருக்கிறார் அதற்கு 200 கோடி ரூபாயும் மத்திய அரசிலிருந்து கள்ளத்தனமாக கொடுத்திருக்கிறார். இந்த வேலைகள் முடிவு பெற்றால் அவரே பிரதமர் பதவிலிருந்து விலகி வந்தாலும் ஆச்சிரியப்படுவதிற்கில்லை. உண்மையில் மண்ணின் மைந்தர் அவர் தான்.

www.tamilarangam.net



தமிழர்களின் நிலை மிகவும் கேவலமாக இன்று மாறியிருக்கின்றது. வெளிநாடுகளுக்குச் செல்ல கடவுச்சீட்டு வாங்குவதற்காக கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்களுக்கு முன்பு நீண்ட வரிசையில் நம் இளைஞர்கள் நிற்கிறார்கள். இந்தியாவில் விபச்சார விடுதிகளில் அதிகம் பேராக இருப்போர் தமிழ்ப் பெண்களே. இவர்களை மீட்டு வருகிறோம் என்று முயற்சி செய்த போது அவர்களுக்கெல்லாம் 'எய்ட்ஸ்' நோய் இருக்கிறது என்றுகூறி அவர்களை எல்லாம் அனாதையாக விட்டுவிட்டார்கள் குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் கொத்தடிமைகள் அதிகமாக இருப்பது தமிழ்நாட்டில்தான். இவ்வாறு தமிழ்நாட்டின் சீரழிவு என்பது பன்முகப்பட்டதாக உள்ளது.

**மாநில சுயாட்சி – ஒரு ஏமாற்று**

இந்த நிலையில் மாநில சுயாட்சி என்று இவர்கள் தந்திரமாகப் பேசுகிறார்கள். அரசியல் சட்டத்தில்மாநிலத்திற்கென்று தனி அதிகாரங்கள் இருக்கின்றன. இவற்றில் மைய அரசு தலையிட முடியாது ஆனாலும் நடைமுறையில் கடந்த 25 ஆண்டுகளுக்குள் மாநிலங்களை நகராட்சி மன்றங்களாக மாற்றிவிட்டார்கள். தேசியத் திட்டக்குழு நிதி ஒதுக்கீடு, மைய அரசு சட்டம் செய்யும்பொழுது மாநில அரசின் அதிகாரம் பறிபோதல், அகில இந்திய காவல்துறையில் எல்லைப்பாதுகாப்புத்துறை இவ்வாறெல்லாம் செய்வதன் மூலம் மாநிலங்களின் அதிகாரத்தை மைய அரசு தொடர்ந்து பறித்துக்கொண்டே இருக்கிறது. இவைகளின் உச்சாணி– அவசரநிலைப் பிரகடனம், தடுப்புக்காவல்சட்டம், மிசா, தேசிய பாதுகாப்புச்சட்டம் போன்றவையாகும்.

இப்பொழுது மாநில சுயாட்சி என்று பேசுவது ஏமாற்றுத்தனம். தன்னுரிமை அல்லது விடுதலை என்ற கோரிக்கைதான் இன்று பொருத்தமாக இருக்கும். மாநில சுயாட்சி என்ற முழக்கம் மக்களை ஏமாற்றுவதற்கான முழக்கமே. காவிரி பிரச்சினை என்பது இன்று கட்சி அரசியலாகிவிட்டது. கட்சி அரசியலை மீறி தமிழ்நாட்டில் உள்ள தமிழ் இனச்சார்புள்ள குழுக்கள் இப்பொழுது ஓரளவு திரண்டு வருகின்றன. டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களோடு நான் தொடர்பு கொண்டேன். நீங்கள் யாருக்காகச் சங்கம் வைத்திருக்கிறீர்களோ, அவர்கள் தான் இப்பொழுது பாதிப்புக்குள்ளாகிறார்கள், காவிரியில் நீர்வரத்துக் குறைவதால் நீங்கள் பாடுபடவேண்டாமா? என்று கேட்டேன்.

சாதிப் பிரச்சினை நல்ல மனிதர்களைக்கூட செயல்படாமல் தடுத்துவிடுகிறது. தென்புலத்தில் திருமலை நாயக்கர் காலம் முதல் சாதிகளுக்கிடையே அவர்கள் சண்டைகளை மூட்டி வந்திருக்கிறார்கள். ஆளும் வர்க்கத்திற்கு இப்படிச் செய்வது அவசியமாக இருக்கலாம். இன்று அந்த மோதல் முற்றிய நிலைமையில் இருக்கிறது. இப்பொழுது

www.tamilarangam.net



அனுமதி பெற்றவர்கள் ஒரு வகுப்பார், பெற முடியாதவர்கள் இன்னொரு வகுப்பு இவர்களுக்கு ஒரு தனி அரசியல், நீர் இறைக்கும் கருவிகளுக்கு குண்டு வைக்க வேண்டும் எனக்குரல் எழுப்புகிறார்கள். ஜனநாயக உரிமைகள் பின்னுக்கும் போய் சாதி முன்னுக்கு வந்து விடுகிறது. இப்படிப் பல உதாரணங்கள் கூறலாம்.

## தமிழகத்தில் அன்னியர் ஆட்சி

நாகர்கோயிலில் நடைபெற்ற தமிழ்நாடு வரலாற்றுப் பேரவை கருத்தரங்கில், பேராசிரியர் ஒருவர் பேசினார். திருவாங்கூரில் வேணாடு என்னும் பகுதியில் விவாசாயிகள் மீது வரி மேல் வரி போட்டு அவர்களின் இடுப்பை ஒடித்து அவர்கள் எந்த உரிமையும் கேட்க முடியாத அளவிற்கு அவர்களைச் சக்தியற்றவர்களாக மாற்றினார்கள், என்று கட்டுரை படித்தார். அந்த நிலைமைதான் இங்கும் இருக்கிறது தமிழ்நாட்டு மக்களும் இன்று உரிமையை கேட்க முடியாத அளவிற்கு அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அந்நிய ஆட்சி தமிழ்நாட்டில் ராஜராஜன் காலத்தில் தொடங்கியது. தன் நாட்டின் வட எல்லையைப் பாதுகாப்பதற்காக வேங்கிநாட்டு இளவரசனை பிடித்துவந்தான். தன் மகளை அவனிடம் அறிமுகப்படுத்தினான். அவர்களுக்குள் காதல் அரும்பியது அவர்களுக்கு திருமணம் நடந்தது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் தெலுங்கர் ஆட்சி இங்கு அதிகரித்தது. அவர்களின் தலைநகரம் கரூர். இன்று அவர்களின் அரண்மனையைத் தோண்டிக் கொண்டு இருக்கிறார்கள். இஸ்லாமியர்கள், மராட்டியர்கள், என்று எத்தனையோ அன்னியர்களின் ஆட்சி கடந்த ஆயிரம் ஆண்டுகளாக தமிழகத்தில் நடந்தது. ஆந்திராவிலோ, கர்நாடகத்திலோ இப்படி இல்லை ஆயிரம் ஆண்டுகள் ஆட்சியை இழந்ததால்தான் இத்தகைய அடிமைத்தனம் வந்திருக்கிறது.

## அடிமைத்தனம் எப்படி ஒழியும்

பெரியார் "திருமண முறையை முற்றாக மாற்ற வேண்டும்" என்றார். அய்யரை அகற்றுவதற்கு மட்டுமல்ல. சடங்கு முதலிய அனைத்தையும் இவற்றோடு சேர்த்து அடிமை மனப்பான்மையும் ஒழிப்பதற்காகத் தான் திருமண முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

இடஒதுக்கீடு எதற்குத் தேவை என்று சிந்திக்க வேண்டும் கீழே இருக்கிற சாதிகளும் அதிகாரத்தில் அமர வேண்டும். அப்போதுதான் ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட சாதியினரின் அச்ச உணர்வு ஒழியும் பிறகுதான் புரட்சிக்கு அவர்களைத் தயாரிக்க முடியும் என்று பெரியார் சொன்னார்.

துப்பாக்கிக் குழாயிலிருந்து அதிகாரம் பிறக்கிறது என்று மட்டுமே சிலர் சொல்கிறார்கள் அதிகாரம் துப்பாக்கியைக் கட்டுபடுத்தவும் வேண்டும். துப்பாக்கி அதிகாரத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது என்று சொல்வது இல்லை. 'சட்டம் ஒரு இருட்டறை வக்கீலின் வாதம் ஒரு

www.tamilarangam.net



விளக்கு’ என்பதோடு சிலர் நிறுத்திக் கொள்கிறார்கள் ‘ஏழைகளுக்கு இந்த விளக்கு எட்டாது’ என்று அண்ணா சொன்னதை இவர்கள் சொல்வதில்லை. காவிரி தமிழ்நாட்டின் பிரச்சினை என்று ஒருமுறைகூட நம் தலைவர்கள் சொன்னதில்லை தஞ்சை விவசாயிகள் பிரச்சினை என்றுதான் சொல்வார்கள். சொல்லின் அருமை தெரிந்தவர், சொல்லையே காசாக்கியவர். இப்படித்தான் பேசுவர். தமிழ்நாட்டின் பிரச்சினை என்று பேசினால் தமிழன உரிமைகாக்க ஏன் போராட்டம் நடத்தவில்லை? என்று கேள்வி எழும். ஆகவே தான் தஞ்சை தரணி என்று மட்டும் பேசுகிறார்.

தமிழர்களின் உள்ளத்தில் அடிமைத்தனம் எவ்வாறு ஏற்பட்டது என்பதை ஒருவாறு சுட்டிக் காட்டினேன். பொருளியல், சமூகம், பண்பாடு முதலிய பல துறைகளிலும் நம் உரிமைகளை இழந்து கொண்டிருக்கிறோம். உளவியல் ரீதியில் முதலாளியம் சாதாரண மக்களையும் பற்றிக் கொண்டிருக்கிறது. வந்தேறிகளின் வேட்டைக்காடு நூலை ஒரு உணவு விடுதியில் விற்பனைக்காக வைத்தேன். விற்பனையாகவில்லை. ஆனால் நம்மைத் தொண்டூழியச் சாதியாக மாற்றிய பகவத்கீதை விற்பனையாகிறது ரூ. 75/-ல், இந்த மனப்பான்மையை மாற்றாமல் பார்ப்பனீயத்தை எப்படித் தோற்கடிக்க முடியும். மக்கள் தாமே பார்ப்பனீயத்தை விரும்பி ஏற்றுக் கொண்டு வளர்கின்ற சூழல் உருவாக்கப்படுகிறது. இந்தச் சூத்திரன்தான் பகவத்கீதையை விரும்பி படிக்கிறான். “தமிழர் இழந்த மண்” நூலை தமிழன் படிப்பதில்லை.

"தர்மத்திற்கு ஆபத்து நேரும் போது நான் அவதரிப்பேன். தர்மத்தின் விரோதிகளை நிர்மூலமாக்கி சங்காரம் செய்து தலைமுறை தலைமுறைக்கும் தர்மத்திற்கு விரோதமாக அவர்கள் சிந்திக்காமல் செய்யும் வண்ணம் குரூரமாக அவர்களை அழித்தொழிப்பேன் என்ற நியமனத்தைக் கிருஷ்ணன் உலகத்திற்கு உணர்த்தவே அந்தஅவதாரத்தை எடுத்தார் இதுவே கிருஷ்ணாவதாரத்தின் பொருள் என்று திருமலை திருப்பதி தேவஸ்தான வெளயீடான சப்தகிரி ஏட்டின் தலையங்கத்தில் அந்த தேவஸ்தானத்தின் நிர்வாகத்தில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரி எழுதுகிறார். வன்முறையும் பயங்கரமும் எங்கே ஆரம்பிக்கிறது என்று சிந்தியுங்கள். இவர்கள்தான் ஈழத்தமிழர்கள் போராட்டத்தை வன்முறை என்று சித்தரிக்கிறார்கள்.

பார்ப்பானாகப் பிறந்தாலும், பாரதியிடம் தமிழத் தேசியத்தின் எல்லாக்கூறுகளையும் அவரிடம் நாம் காணலாம். சென்னைக்குப் போய் வைதீகர்களோடு சேர்ந்து பின்னாளில் அவர் கெட்டுப்போனார். இன்னும் கொஞ்சம் காலம் வாழ்ந்திருந்தால் ஒரு உஞ்ச விருத்தியாகக்கூட மாறியிருக்கலாம். ஆனால் பார்த்தசாரதி கோயில் யானையின் தயவால் நல்லபெயரோடு மறைந்தார். முன்னால் இருந்த பாரதி நமக்கு வேண்டியவர். முதற்கால பாரதியின் சீடராக இருக்தவர் பாரதிதாசன் அதனால் தான் பாரதிக்கு தாசன் என்பதில் அவர் பெருமை கொண்டிருந்தார்.

www.tamilarangam.net



## இந்தியச் சமூகத்திற்கு ஏற்ற மார்க்சியம்

தமிழ்நாடு விடுதலை பெறும்பொழுது அதற்குப் பெரியாரின் பங்களிப்பை நாம் புரிந்து கொள்ள முடியும். இன்று அரசியல்வாதிகள் கெடுத்தாலும் முழுவதும் கெடாமல் இருக்கிற தமிழத் தேசிய உணர்வை நமக்குள் விதைத்தவர் பெரியார்தான். அவருடைய முன்னோரின் மொழி கன்னடம் என்பதாலேயே அப்பார்வையோடு அவரை பார்க்க வேண்டியதில்லை. எல்லாவற்றையும்விட மிகவும் முக்கியம் தமிழ்த் தேசியப் பிரச்சினை என்றாலும் உழைக்கும் தமிழ் மக்களை அடிமைத் தனத்தில் இருந்து விடுவிப்பது என்றாலும், மார்க்சியம் தான் இறுதியாக அதனைச் செய்யமுடியும். இதுவரையிலான வரலாற்றில் மனித குலத்தின் கடைசிப் பெரும் சிந்தனை மார்க்சியம் புதிய சூழல்களில் மார்க்சியத்திற்கு சில தனி விளக்கங்கள் தேவைப்படலாம். மார்க்சியம் அதை ஏற்றுக்கொள்ளும். நம் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள சில முக்கிய மார்க்சிய நூல்களைப் படிப்பது அவசியம். ஸ்டாலின் அவர்கள் எழுதிய லெனினும் தேசியஇனப் பிரச்சினையும் என்ற சிறிய நூல் அவற்றில் ஒன்று. கீழ்திசை நாடுகள், ஐரோப்பிய நாடுகளில் இருந்து பல்வகைகளில் வேறுபட்டவை. சீனாவின் நிலைமைக்கு ஏற்ப மா வோ மார்க்சியதிதை வளர்த்தார். கடந்த 10 ஆண்டுகளாகத் தான் இந்தியச் சூழலுக்கு ஏற்றதான மார்க்சியத்தை இங்குள்ள சில அறிவாளிகள் கண்டறிந்து கொண்டிருக்கிறார்கள்.

நெடுங்காலமாக இந்தியாவில் பார்ப்பனர்களை உச்சத்தில் கொண்ட சமூகம் தான் நிலை பெற்றிருக்கிறது. மக்கள் மத்தியில் சமத்துவத்தை வலியுறுத்தியது பக்தி இயக்கம், கர்நாடகத்தில் பசுவேசுவரர் ஏற்படுத்திய வீர சைவம் சமத்துவத்தை நோக்கமாகக் கொண்டதுதான். பிறகுதான் நிலைமை மாறியது அதுவும் ஒரு மதமாக மாறியது பார்ப்பனீயத்தை எதிர்த்துத் தான் சீக்கிய மதமும் தோன்றியது. சமத்துவத்தை ஏற்படுத்தத்தான் நாராயண குரு பாடுபட்டார் இவர்கள் எல்லாம் மத எல்லைக்குள் இருந்து பாடுபட்டவர்கள். லோகியா, அம்பேத்கார் போன்றவர்கள் அதற்குப் பிறகு பெரியார் இவர்களெல்லாம் இந்து மதத்திற்குள் இருக்கிற ஏற்றத்தாழ்வை புரிந்து கொண்டு சமத்துவத்தை ஏற்படுத்தப் பாடுபட்டார்கள். இவர்களையெல்லாம் சேரித்துக்கொண்டு பிறகு இன்றைய நிலைமைக்கு ஏற்ப நாம் சமுதாய விடுதலைக்கோ ஆட்சியைக்கைப்பற்றி சாமான்யமக்களுக்கான சோவியத் ஆட்சி முறையைக் கொண்டு வருவதற்கோ அல்லது தேசிய இன விடுதலைக்கோ வருவதுதான் முறை.

பெரியாரைப் பற்றிச் சொல்வதைப்போல சன்யாட்சனைப் பற்றியும் குறை சொன்னார்கள். கொள்கை முன்னோடிகளை பார்க்கும்பொழுது கட்டுப்பெட்டித் தனமாகப் பார்க்கக் கூடாது என்று மா வோ கூறினார். அதைத்தான் இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பெரியவர்கள் சென்ற பாதையில் இருந்து நாம் இன்றைய தினம் செய்ய வேண்டிய கடமைகளை புரிந்து கொண்டு செய்ய வேண்டும். லோகியா சொன்னார்.

www.tamilarangam.net



ஆளும் கட்சியை டாக்டர் கிருஷ்ணசாமி ஆதரிக்கவேண்டி இருக்கிறது. எனவே தங்களைத் தாக்கும் வலுமிக்க சாதியினரை எதிர்த்து அவர் ஆளும் கட்சியோடு சேர்ந்து கொள்ள வேண்டி இருக்கிறது. கலைஞருக்கு வருத்தம் தரக்கூடாது என்பதற்காக காவிரிப் பிரச்சினையில் அவர் தலையிட விரும்பவில்லை போல் தெரிகிறது. கொடியன்குளம் பிரச்சினைக்காகவும் முதல்வரைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. சாதிப்பிரச்சினை இப்படி தேசிய இனநலன்களை பாதிப்பதோடு சாமான்ய மக்களின் நல்வாழ்விற்கும் இடையூறாக இருக்கிறது. நல்ல மனிதர்களையும் கூடக் கெடுத்துவிடுகிறது.

காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்துவிட்டது. எனவே நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீர் இறைத்து தொலைதூரம் எடுத்துச் சென்று பாய்ச்சக்கூடாது ஆனால் ஆயிரம் பத்தாயிரம் வாக்குகள் சேகரித்துக் கொடுத்தவர் கேட்கிறார் என்பதற்காக நாமக்கல், கரூர், குளித்தலை முதலிய பகுதிகளில் ஆளும் கட்சியினர் அவர்களுக்கு அனுமதி கொடுக்கின்றனர். இருபது ஏக்கருக்குக் கேட்டவர்கள் 200 ஏக்கருக்கு நீர் இறைத்துப் பயன்படுத்துகிறார்கள். எனவே தஞ்சையின் கீழ்பகுதிக்குப் நீர் மேலும் குறைகிறது. அனுமதி கொடுத்தது தவிர அதற்குமேலதிக நீர் இறைத்தது தவறு எனப் போராடுவதற்குப் பதிலாக பெரியாரும் சொன்னார். இதை நிறைவேற்றுவதற்குத் திட்டம் எங்கே? திட்டம் என்று சொன்னால் மார்க்சியத்திற்குத்தான் போகவேண்டும். உலகம் முழுவதும் மார்க்சியத்தின் போராட்ட அனுபவங்களில் இருந்து நமக்கு ஏற்றதை எடுத்துக் கொள்ள வேண்டும் நம் சூழலுக்கான தனித்தன்மை இருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கம்யூனிஸ்ட்டு கட்சியில் தனித்தன்மை பற்றிப் பேசமாட்டார்கள். ஜீவா தான் கொஞ்சம் பேசினார். கடந்த 10 ஆண்டுகளாக நம் இளைஞர்கள் சாதி, மொழிப் பிரச்சினை பற்றி எழுதுகிறார்கள்.

## நமது விடுதலைப் பாதை

ரஷ்யா 1900 வாக்கில் எப்படி இருந்ததோ அந்த நிலையில் இன்று தமிழ்நாட்டில் இருக்கின்றோம் என்று எனக்குப்படுகிறது. இப்பொழுது தான் தொடங்கியிருக்கிறோம் தமிழ்நாட்டின் விடுதலை என்பது மார்வாடிகள் முதலிய கொள்ளைக்காரர்களிடமிருந்து தமிழ்நாட்டை விடுதலை செய்வது மட்டுமன்று சர்வதேச அளவில் இருக்கின்ற வளர்ச்சி பெற்ற ஏழு நாடுகளின் (G7) ஆதிக்கமும் இங்கு வந்துவிட்டது. இப்படி எல்லாவற்றிற்கும் எதிரானதாக விடுதலை இயக்கத்தை மாற்றியாக வேண்டும் மொழி உணர்வு என்ற அடிப்படையில் மட்டும் சிந்தித்தால் போதாது. வெளிநாட்டு ஏகாபத்தியம், உள்நாட்டில்

www.tamilarangam.net



இந்தோனேஷ்யாவில் ஆட்சியைக்கைப்பற்றும் அளவிற்கு கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்த நிலையில் கிழவர்கள் அதற்கு வழி வகுக்காமல் தடுத்துக் கொண்டிருந்தார்கள். நிர்வாகக் குழுவில் பத்து பதினைந்து கிழவர்க்ள் இருந்தார்கள். இளைஞர்கள் அவர்களுக்கு அங்கே முடிவு கட்டிவிட்டார்கள். பிறகு மூன்று நான்கு ஆண்டுகளில் ஆட்சியையே கைப்பற்றுமளவுக்கு வளர்ந்துவிட்டார்கள். அவர்களிடம் ஆட்சி போகும் அபாயத்தைத்தடுக்க அனைத்து வெள்ளை ஏகாதிபத்தியங்களும் சேர்ந்து 13 இலட்சம் இளைஞர்களைச் சுட்டுக் கொன்று அந்த இயக்கத்தை அடக்கியது. ஒரு சர்வாதிகாரியிடம் தேசத்தை ஒப்படைத்தது அறிகா அரசியலை நடத்துகின்ற தமிழகத் தலைவர்கள் தமிழக விடுதலைக்கு இடைஞ்சலாக இருக்கிறார்கள். கட்சிகளையும் சாதிகளையும் பிரித்துச் சண்டை மூட்டுகிறார்கள்.

பாராளுமன்றத்தில் தமிழ்நாட்டு உறுப்பினர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று கோளாவில் அனைத்துக்கட்சி தீர்மானம் போடுகிறார்கள் அப்படி தீர்மானம் போட்ட சில தினங்களில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு பீஷ்மாச்சாரிய பட்டத்தைத் தந்தார்கள். இவரும் ஏற்றுக்கொண்டார். தமிழ்நாட்டிற்கு, பிரதமர் மிகவும் குறைத்துக்கொடுத்த 6 டி.எம்.சி. நீரையும் அணையிலிருந்து திறந்துவிடக்கூடாது என்று ஆயிரக்கணக்கான மைசூர்காரர்கள் அணையின் கீழ்படுத்து மறியல் செய்தார்கள். அது நடந்த 10 தினங்களுக்குள் கலைஞர் அவர்கள் மைசூர் தலைப்பாகையும் சரிகைத்துப்பட்டாவும் அணிந்து படங்களுக்குக் காட்சியளித்தார்.

## காவிரிச் சிக்கல் எப்படித் தீரும்

20 ஆண்டுகளுக்கு முன் இப்படி எல்லாம் நடக்க முடியாது தற்பொழுது நிலைமை மாறிவிட்டது நம்மால் இதை புரிந்து கொள்ளுவது சற்றுக்கடினமாக இருக்கிறது. அரசியல் உணர்வு படைத்த தலைவர்களை வைத்துத்தான் தமிழ்நாட்டு விடுதலையைப் பெறமுடியும். ஆனால் இவர்களே கட்சி சாதி என்று பிரிந்து விட்டால் பிறகு விடுதலைக்கு எங்கே பாடுபடுவது. நம் தலைவர்கள் எல்லாம் உலகம் முழுவதும் சென்று காயகல்பம் சாப்பிட்டு நன்றாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் அரசியல் தலைமை தமிழ் மக்களுக்கு விரோதமாக வெளிப்படையாகச் செயல்படுகிறது இப்பொழுது கௌடாவை பிரதமராகத் தேர்ந்தெடுத்ததைவிட வேறு துரோகம் என்ன இருக்கிறது!

ஏற்கனவே காவிரிச் சிக்கல் தொடர்பாக நடைபெற்ற எல்லாப் பேச்சுவார்த்தைகளிலும் நாம் தோல்வியைத் தழுவினோம். மறுபடியும் பேச்சுவார்த்தை என்று சொல்லுகிறார்கள். ரங்கநாத அய்யங்கார் போய் சொல்லிக் கொடுக்கிறான் . குகனும்தான் . உடனே மகிழ்ச்சி வரவேற்கின்றேன் என்று கர்நாடக முதல்வர் பட்டேல் தெரிவிக்கிறார். மீண்டும் பேச்சுவார்த்தை என்று கலைஞர் உளறுவது ஏன் என்பது என் கேள்வி. இப்பொழுது குழுவையைக் காக்க எண்ணி 28.5.96 அன்றே

www.tamilarangam.net



மார்வாடி, குஜராத்திகளின் ஏகாதிபத்தியம், அத்துடன் தமிழ்நாட்டினுள் இருக்கிற முதலாளியம் நில உடைமை ஆதிக்கம் முதலியவற்றுக்கும் எதிராக தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிற பிளவுகளையெல்லாம் சரி செய்து தமிழ்த் தேசிய இன விடுதலைக்காக நாம் செயல்பட்டாக வேண்டும்

மக்களை எவ்வாறு ஒன்றுசேர்ப்பது என்பது இங்கு பெரும் பிரச்சினை. நட்பு முரண்பாடுகளாக இருக்கவேண்டியவை இங்கு பகை முரண்பாடுகளாக இருக்கின்றன. உழைக்கும் சாதியினர் ஒருவரை மற்றவர் ஒழிக்க முயற்சி 'எங்கள் முதலாளி தங்க முதலாளி' என்று அவர்களால் சுரண்டப்படுகிறவர்களே பாட்டுப் பாடுகின்றனர். இந்தச் சூழ்நிலையில்தான் 'எஜமான் காலடி மண் எடுத்து நெற்றியில் பொட்டு வைத்து' என்ற பாட்டு தோன்றுகிறது. எல்லாமே பத்து பதினைந்து ஆண்டுகளுக்குள் தலைகீழாக மாறிவிட்டன. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் தகர்த்துக் கொண்டு மேலே செல்லும் பொறுப்பை இளைஞர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் தியாகம் செய்யாமல் சுதந்திரம் கிட்டாது.

"அக்கா வந்து அள்ளிக் கொடுக்க

சுக்கா, மிளகா சுதந்திரம் கிளியே!" என்றார் பாரதிதாசன்

விலை கொடுக்காமல் எந்தச் சுதந்திரமும் வராது விலை கொடுக்கத் தயாராக இல்லாததாலும் விலைக்கு நம் உரிமைகளை விற்றதினாலும்தான் தமிழ்நாடு இந்த நிலைக்கு வந்திருக்கிறது.

காவிரிப் பிரச்சினை தீராமல் மத்திய அமைச்சரவையில் சேரக்கூடாது என்று தீர்மானம்போடுகிறார்கள். காவிரிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு செய்யாமல் தமிழ்நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளே போகக்கூடாது என்று தீர்மானம் போட்டார்கள். மறுநாள் டாக்டர் சிவசாமி தலைமையிலுள்ள விவசாய சங்கமும் போட்டது இந்த நிலையில்தான் ரங்கநாத அய்யரிடம் விவசாய சங்கத்தை கூட்டி பேச்சுவார்த்தை வேண்டும் என்பதாக அவர்கள் தீர்மானம் போடவேண்டும் என்று கலைஞர் கூறியுள்ளார். ரங்கநாத அய்யரும் அவ்வாறே தீர்மானம்போடுகிறார் அதைச்சாக்கிட்டு கலைஞரும் பழையபடி பேச்சுவார்த்தை என்று ஆரம்பித்துவிட்டார். இனி மீண்டும் யானை சேற்றில் சிக்கிக்கொண்டது மாதிரிதான். நடுவர் மன்றத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு விதிமுறைகளே வகுக்கப்படவில்லை மூன்று வகையில் அதை நிறைவேற்றலாம். நடுவர் மன்ற ஆணைக்கு மேல்முறையீடு என்பதே கிடையாது

1. நடுவர் மன்ற ஆணையை மீறினால் அரசியல் அமைப்பு 356-வது பிரிவின்படி அந்த அரசைத்தூக்கி எறிந்துவிட்டு மத்திய அரசே நடுவர் மன்ற ஆணையை நிறைவேற்றலாம் இந்தச் சட்ட நிலையை நாங்கள் 92-இல் மாநாடு போட்ட பொழுது உயர்நீதிமன்றநீதிமன்ற நீதிபதியை வைத்து இதனைச் சொன்னோம் இது சரி தான் என்று பல்கீவாலா போன்றவர்கள் அறிக்கை விட்டார்கள். 356வது பிரிவை அம்பேத்கார் எதற்காக அரசியல் சட்டத்தில் வைத்தாரோ அதற்காக அவர்கள் மாநில அரசைக் கலைக்கவில்லை, வேறு அரசியல் காரணங்களுக்காக 100 முறை கலைத்திருக்கிறார்கள்.

2. மத்திய மாநில அரசு உறவுகள் பற்றி சர்க்காரியா அறிக்கையில் எழுதி இருக்கிறார். நடுவர் மன்றத்தீர்ப்பை உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பாணையாகக்

www.tamilarangam.net



கருதவேண்டும் எனச் சட்டத்திருத்தம் செய்ய வேண்டும் என அவர் பரிந்துரை செய்திருக்கிறார். இதுவும் இதுவரை செய்யப்படவில்லை

3. இராச்சியங்களுக்கிடையேயான நதிநீர்த்தாவா சட்டத்தின் 6 (ஜி) பிரிவின்படி விதிகள் வகுத்து நடுவர்மன்றத்தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யவேண்டும். இதுவும் செய்யப்படவில்லை கலைஞருக்கு இது தெரியாதா? இவர்தான் உலகத்தமிழினத் தலைவராயிற்றே? எதிர்க்கட்சியாக இருந்தபொழுது இந்தத் திருத்தம் கொண்டுவா என்று கன்னடக்காரியைக் கேட்டிருக்கலாம். பாராளுமன்றத்தில் இவர்களின் உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள் அவர்களை விட்டு எப்பொழுதாவது கேட்டு வைத்திருக்கிறார்களா. விவசாய சங்கங்களின் தீர்மானங்களின் படி குறுவையைக் காப்பாற்ற தண்ணீருக்கு ஏற்பாடு செய்ய கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கோட்டையில் சென்று சந்தித்தோம் நான் "நடுவர் மன்ற தீர்மானத்தை நிறைவேற்ற விதிகள் வகுக்கப்படவேண்டாமா? இப்பொழுது நமது அரசுதானே மத்தியில் உள்ளது" என்று கூறினேன் அதற்கு முதல்வர் "காவிரிக்காகவா நாம் மத்திய அரசில் சேர்ந்தோம்" என்று என்னைத் திருப்பிக்கேட்டார். "பின் எதற்காக நாம் சேர்ந்தோம்?. நடப்பது நம் அரசுதானே? " என்றேன் . "கர்நாடகக்காரர்கள் உரிமையை விட்டுத்தருவார்களா? " என்றார் முதல்வர் . எது அவர்கள் உரிமை? காவிரி நடுவர் மன்றத்தீர்ப்பை நிறைவேற்றவிடாமல் தடுப்பது தான் கர்நாடகக்காரர்கள் உரிமையா?

நடுவர் மன்ற ஆணை என்பது ஒரு ஏட்டில் எழுதிய சர்க்கரை. விதிகள் வகுக்கப்படாத நிலையில் அது ஓர் ஏட்டுச் சுரைக்காய்தான். எனவே அவ்விதம் விதிகள் வகுப்பதை நான் வற்புறுத்திக்கூறிவிட்டு நிறுத்திக்கொண்டேன். ஆனால் குறைந்தபட்சம் நடுவர்மன்ற முடிவு என்ற தீர்ப்பை வாங்கி வைப்பது தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கு அவசியம் பிறகு "காவிரிச் சிறப்பு அமைப்பு " (செல்) தலைவர் மோகனகிருஷ்ணன் அழைத்துக்கேட்டார். காவிரிச் சிக்கல் தொடர்பான அனைத்து விபரங்களையும் விரல் நுனியில் வைத்திருப்பவர் அவர். கர்நாடக அணைகளில் தண்ணீர் ஏராளமாக இருக்கிறது. கடந்த நூறு ஆண்டுகளில் பெய்யாத அளவிற்கு மழை மெர்க்காராவில் பெய்துள்ளது. மூன்று அணைகள் நிரம்பிவிட்டன. நான்காவது அணை நிரம்பிக்கொண்டிருக்கிறது என்றார் அவர். உடனே முதல்வர் டெல்லியில் உள்ள மாறனிடம் தொலைபேசியில் பேசினார் "பிரதமரிடம் சொல்லி உடனே காவிரியில் நீர்விட சொல்லுங்கள்" என்றார் . பதில் வர 14 நாட்கள் ஆயின. "திறந்து விட முடியாது" "ஒரு சொட்டுத்தண்ணீர் கிடையாது" என்று கன்னத்தில் அறைந்தது மாதிரி பாட்டில் பதில் சொன்னார். ஆனாலும் அடுத்த நாளே யார் தலையிட்டதாலோ ஆடி நோன்பிற்கு 5 டிஎம்சி நீர் திறந்து விடப்பட்டது. இது சம்பாவுக்கும் ஆகாது குறுவைக்கும் ஆகாது. ஆனால் இதனாலேயே பிரதமர் மாண்டியா, ஹாசன் தொகுதிகளில் பாராளுமன்றத்திற்கு போட்டியிட முடியாத அளவிற்கு கர்நாடகத்தில் கர்நாடகத்தில் எதிர்ப்பு நிலவுகிறது அதாவது கர்நாடகத்துக்காரர்களுக்குத் தமிழர் விரோதம் என்பது உச்சத்துக்குப்போய்விட்டது. ஆகவே இனி காவிரிநீரை மீட்பதென்பது அமிர்தலிங்கம்பாணி அரசியலால் முடியுமா? என்பது சந்தேகமே

www.tamilarangam.net



## கேள்வி நேரம்

கனல் மைந்தன்

**கேள்வி :** இந்தியாவில் மார்க்சியம், பெரியாரியம்தான் என்பதை நீங்கள் ஏன் மறுக்கீறீர்கள்?

**பதில் :** பொதுவாக ஏற்றதாழ்வான சமூகம் ஏற்பட்ட பிறகு, ஒடுக்கப்பட்டவர்கள் சார்பாகச் சிந்தித்து, செயல்பட்டு, போராடி, வெற்றி அல்லது தோல்வி கண்டவர்களின் சொல், செயல் இவைகளைப் படித்தறிந்து அவர்களின் அனுபவத்தை உள்வாங்கிப் பிறகு மார்க்சிய முறையில் அச் சிந்தனை, செயல்பாடுகளை உயர்த்தி, மார்க்சியர்களின் இதர நாட்டுப் புரட்சி யுக்திகளை இந்த நாட்டுச் சூழ்நிலைக்கேற்பக் கையாண்டு சமுதாயப் புரட்சி நடத்துவதே சிறந்தது.

பெரியார் இந்தியாவில் மார்க்சியத்தின் முன்னோடி. இதுபோன்ற கேள்விகள் கேட்பது பெரியாரை மார்க்சியர்களுக்கு எதிர்நிலையில் கொண்டு சேர்க்கவே பயன்படும். மார்க்சிய ஆசான்களின் கருத்துக்களுடன் பெரும்பாலான பெரியாரின் கருத்துக்கள் ஒத்துப் போகின்றன.

புத்தமதத்தை வீழ்த்திய பிறகு, பார்ப்பனிய – சத்ரியக் கூட்டணி, மனுதர்மத்தை மேலும் திருத்தி அதைக் கடுமையாக அமல்படுத்தியதன் விளைவாக உருவானதே நாம் இன்று காணும் சமுதாய அமைப்பாகும். எனவே அப்படி ஏற்பட்ட சமூக அமைப்பின் ஏற்றத்தாழ்வுத் தன்மைகளை படம்பிடித்துக் காட்டும் பெரியாரது கருத்துக்களை அசை போட்டு ஜீரணித்து, பிறகு இந்தியத் தனித் தன்மையான ஏற்றத்தாழ்வை ஒழிக்க வழி காணபதில் மார்க்சிய இயங்கியல் பார்வையும் செயல்திட்டமும் அமைந்தால் இந்திய மக்கள் விடுதலைக்கு ஏதுவாகும்.

பெரியாரின் கருத்துக்கள் செயல்பாடுகள் எவ்வகையில் இருப்பினும் சமூக விடுதலை என்னும் போது அதற்குரிய கோட்பாட்டு விளக்கத்தை நாம் கண்டிப்பாக மார்க்சிய அணுகுமுறையில்தான் கண்டெடுக்க முடியும். இப்படிச் செய்வது நாம் பெரியாரை மறுப்பது, சிறுமைப்படுத்துவது ஆகாது என்பது என் கருத்து.

குமரவேல்

**கேள்வி :** காவிரி நீர் உரிமை கிடைக்காத நிலையில், விவசாயம் மட்டுமல்லாது பிறதொழில்களில், சுற்றுச் சூழலில் ஏற்படும் கேடுகள் உண்டா?

**பதில் :** தமிழகத்தில் 20 இலட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்காது என்பது முதல் அடி. அது தவிர, வேளாண்மையினை மையப்படுத்தி, அதை நம்பியிருந்த தொழில்கள் பாதிக்கப்படும். கரும்பாலைகள் ஓடாது, நெல்வாங்கி விற்கிறவர்களுக்குத் தொழில் இருக்காது. நெல் அரவை ஆலைக்கும் வேலை இருக்காது. கூலித் தொழிலாளர்கள் வெளியேற வேண்டியிருக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறு விவசாயிகள், மத்திய தர விவசாயிகள் என எல்லோரும் கடனில் மூழ்குவர். இவை இல்லாமல் காவிரிப் படுகை நெடுகிலும் குடிநீர்ப் பிரச்சினை வரும். தமிழகத்தில் நிலத்தடி நீர் மறுசுழற்சி ஆவது 40 % காவிரியினால் தான் நடக்கிறது. அது தடைப்படும். இப்பொழுதே தஞ்சாவூரில் நிலத்தடி நீர் மிக ஆழத்திற்குச் சென்றுவி . து. அதனால் ஏற்படும் பல்வேறு இழப்புகளைத் தமிழகம் தாங்காது. அரிசி விலை ஏறிவிடும். நாம் ஆந்திராவில் இருந்து வரவழைக்க வேண்டிவரும். தமிழகப் பொருளாதாரத்தில் பெரும் சரிவு ஏற்படும்.

நண்பர் ஒருவர் :

**கேள்வி :** கோவையில் மார்வாடிகள் ஆதிக்கம் பற்றிப் பேசுகிறார்கள் மலையாளிகள் ஆதிக்கம் பற்றி என்ன கருதுகிறீர்கள்.

**பதில் :** கேரளாவிற்கு அருகில் கோவை இருப்பதால் அங்கு பிழைப்புக்கு வழியில்லாமல் இங்கு ஏராளமாக வந்துள்ளனர். முன்பு அரபுநாடுகளுக்கு வேலை தேடி நிறையபேர் சென்றனர். அங்கிருந்து சம்பாதிப்பதை வைத்துத் தமிழகத்தில் குறிப்பாக, ஈரோடு, கோவை முதலிய நகரங்களில் அதிகம் நிலம் வாங்குகின்றனர். ஆகவே, கோவையில் மலையாளிகள் ஆதிக்கம் என்பது கவலைப்படத்தக்க ஒரு செய்திதான்.

பழனிவேலனார் :

**கேள்வி :** தமிழர்களின் தாயகம் குமரிக் கண்டம். ஆஸ்திரேலியா, ஜப்பான் முதலிய நாடுகளில் இதற்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன. தமிழ்மொழிதான் உலகின் முதல் மொழி. இப்படி வாழ்ந்த தமிழன் இன்று தமிழனாக இல்லை தமிழ்நாட்டில் இன்று பெரும்பகுதி வந்தேறிகளே வாழ்கின்றனர் இவர்கள் பேசும் மொழி தமிழும் அல்ல. இவர்களை எப்படி மாற்றுவது?

**பதில் :** நீங்கள் சொல்வது உண்மைதான் முன்பு திராவிட மொழிகள் 14 என்று சொன்னார்கள் இப்பொழுது 84 என்று கண்டறிந்துள்ளனர். ஜப்பான் மொழிக்கும், கொரியா மொழிக்கும் கூட தமிழ்தான் மூலமொழி வடமொழிகூட அழிந்து போயிற்று பிற செவ்வியல் மொழிகளிலும் தமிழும் சீனமும்தான் இன்றும் வழக்கில் உள்ளன. எனினும் காலத்திற்கேற்றவாறு நம்மொழியை வளர்க்கவில்லை என்றால் நம்மொழியும் அழிந்துவிடும். தமிழ்நாட்டின் மீது நடந்த படையெடுப்புகளெல்லாம் கலாச்சாரப் படையெடுப்புக்கள்தான். இன்று மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் உச்சநிலையில் இந்தப் படையெடுப்பு நடைபெறுகிறது. மேல்தட்டு மக்களின் மொழி என்றைக்கும் கலப்பு மொழியாகவே இருக்கின்றது. முன்பு மணிப்பிரவாளம் இப்பொழுது ஆங்கிலக்கலப்பு இடைக்காலத்தில் குழந்தைகளின் பெயர்களைத் தமிழில் மாற்றினோம் இப்பொழுது மீண்டும் வடமொழி இந்தி மயமாகி வருகிறது. சாதாரண மக்களின் மொழியிலும் நாகரிகக் கலப்பின் விளைவாக பிறமொழிச் சொற்கள் கலந்து வருகின்றன. ஆகவே நாகரீகம் அந்தஸ்து என்ற பெயர்களில் மேல்தட்டிலும் சரி, கீழ்த்தட்டிலும் சரி மொழிக்கலப்பு அதிகரித்து வருகிறது. இந்தப் போக்கைத் தடுக்கும் இயக்கங்கள் இன்று வலிமை குன்றியுள்ளன.

www.tamilarangam.net



தொலைக்காட்சியின் காரணமாக சென்னை மக்கள் பேசிய தமிங்கலம் இப்பொழுது திருநெல்வேலியையும் பாதிக்கிறது. அக்ரஹாரம் காலியாகி விட்டது என்பது உண்மைதான். ஆனால் ஜனநாயகம் தந்த வசதி காரணமாக சென்னை இப்பொழுது பெரிய அக்ரஹாரமாக மாறிவிட்டது. சர்வதேச அளவுக்கு இந்த அக்ரஹாரம் விரிந்து கொண்டிருக்கிறது. ஆந்திராவிலிருந்து தெலுங்கர்களின் வருகை அதிகரித்து வருகிறது. மொழிக்கலப்பு இயக்கங்கள் நாணயமாகச் செயல்படவில்லை. பல்கலைக்கழகங்கள், தமிழாய்வு நிறுவனங்கள் முதலியனவற்றில் பணிபுரியும் பேராசிரியர்கள் நுகர்வுப் பண்பாட்டுக்கு இடம் கொடுத்ததன் விளைவாக நாணயமாகச் செயல்படுவதில்லை. அன்னிய சக்திகளின் காரணமாகத் தமிழ்நாட்டில் பொருளாதாரம் பாதிப்புக்குள்ளாகிறது. வட நாட்டுக்காரர்களும், தமிழகத்தில் பொருளாதாரச் சக்திகளாக மாறியுள்ளனர். இதன் காரணமாக இவர்களிடம் பணிபுரிபவர்கள் இப்பொழுதெல்லாம் அதிக ஊதியம் பெறுகிறார்கள். இந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அமெரிக்கா ஆஸ்திரேலியாவிற்கெல்லாம் போகிறார்கள். அன்று மிட்டா மிராசுதாரர்கள் – இப்பொழுது இந்தப் புதிய பதவிக்காரர்கள். இவர்கள் எல்லாம் தமிழுக்கு எதிரிகளாக இருக்கிறார்கள். தமிழ்ச் சான்றோர் பேரவை இப்பொழுது தமிழுக்காகக் குரல் கொடுக்கிறது என்பது உண்மைதான். ஆனால் மேலிடத்தில் உள்ளவர்களின் கருத்து எதுவோ அதற்கு ஏற்றவாறு இந்தப் பேரவை தீர்மானம் இயற்றுகிறது. மாற்று மொழிக்காரர்கள் பகைமையும் இப்பொழுது அதிகரித்து வருகிறது எனினும் நாம் அஞ்ச வேண்டியதில்லை நமக்குச் சாதகமாக இப்பொழுது புதிய அறிகுறிகள் தோன்றியுள்ளன.

குமரவேல்

**கேள்வி :** தமிழக விடுதலைக்குப் பாட்டாளி இயக்கங்கள் இன்று உறுதுணையாக இல்லை வேளாண்மைத்துறை இன்று பெரும் சிக்கலுக்கு உள்ளாகியிருக்கிறது. உழவர்களை நாம் திரட்ட வேண்டும். எப்படி?

**பதில் :** தத்துவ ரீதியாக பாட்டாளி வர்க்கம் வளர்ச்சி பெறவில்லை. நகரம், ஊதியம் என்ற அளவில் முடங்கிவிட்டார்கள். கிராமப்புரங்களில் நடுத்தர விவசாயிகள் கடனாளிகளாக இருக்கிறார்கள் சிறு, குறு விவசாயிகள் வறுமைப் பிடியில் இருக்கிறார்கள். இவர்களும் சாதிப்பிடிப்பில் இருக்கிறார்கள் பட்டியல் சாதிகள்' எனப்படுவோர் 90% வறுமையில் வாழ்கிறார்கள். இவர்களின் 10% படித்துவிட்டு அரசு வேலையில் இருக்கிறார்கள். இவர்கள் தான் சாதி அடையாளங்களை மறைத்துக்கொண்டு மேல் தட்டோடு சேர்ந்து கொள்ள முயற்சிக்கிறார்கள். இவர்கள் கீழிறங்கி வரமாட்டார்கள். ஆக கிராமத்து உழவர்களைத் திரட்டி இயக்கம் அமைத்து போராடி வெற்றி பெறுவதென்பது திக்குத்தெரியாத காட்டில் கண்களைக்கட்டி

www.tamilarangam.net



தன்மானன்

**கேள்வி :** நகர்ப்புற வளர்ச்சியைத் தடுப்பது எப்படி?

**பதில் :** நகர்ப்புற வளர்ச்சியைத் தடுப்பது முடியாது. கிராமங்களில் வேலையில்லாதவர்கள் நகரத்திற்குச் செல்வதைத் தடுக்க முடியாது. நகரத்திலும் வேலை வாய்ப்புக்கள் இல்லை. கிடைத்த தொழிலைச் செய்து கொண்டு உயிர் வாழவேண்டும். திருட்டு, புரட்டு முதலியவற்றில் இருந்து இவர்கள் தப்ப முடியாது. சிறிய தேநீர்க்கடை முதலியவற்றை வைத்து இவர்கள் பிழைத்தாக வேண்டும். இவர்களால் சுற்றுச்சூழல் மாசடைகிறது என்று பேசிப் பயனில்லை. குறைந்த அளவு வேலைக்கு உறுதிப்பாடு, கல்வி வாய்ப்பு இவர்களுக்கு தேவை. இன்றைய பொருளாதார முறை இதற்கு இடம் தராது.

கல்வி நிலையங்களில் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்குப் பதிலாகப் புதிய ஆசிரியர் நியமனம் இல்லை. அரசுப் பணிகளிலும் இதே போன்ற நிலை. நீதிமன்றங்களிலும் இதே நிலை. ஆகஎதுவும் இனி நகரமுடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அரசு இனி பயன்படாது. புதிய வகை அரசு தேவை.

எல்லோருக்கும் கல்வி, வேலைவாய்ப்பு பண்பாடு தேவையென்றால் புதிய பொருளாதார அமைப்பத் தேவை. தமிழ்த் தேசியம் என்று பேசுவது இதனையெல்லாம் உள்ளடக்கித்தான். மொழிவழி மாநிலம், மாநில சுயாட்சி என்பனவெல்லாம் கவர்ச்சியான முழக்கங்கள்.

**கேள்வி :** நுகர்வு வெறியைத் தடுப்பது எப்படி?

**பதில் :** பணக்காரர்களுக்கு உரியதாக இன்றைய பொருளாதார அமைப்பு தொடர்ந்து மாற்றப்படுகிறது. இவர்களின் வாழ்க்கை வசதிக்காகத்தான் புதுப்புது வகையான நுகர்வுப் பொருட்கள் உற்பத்தியாகின்றன. சந்தைக்கு வருகின்றன. இவர்களின் தேவைதான் எல்லா மக்களுக்குமான தேவையாக பிரச்சாரம் செய்யப்படுகிறது. இப்படித்தான் நுகர்வுவெறி தூண்டப்படுகிறது. அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை இந்தப் போக்கை ஊக்குவிக்கிறது. திரும்பவும் நமக்கு அதே பிரச்சினைதான். இந்த அரசு நமக்கு வேண்டாம். இந்நிலையில் நுகர்வுவெறி என்பதை வைத்தே பத்திரிகைகள் வெளியிடுவது விற்பனை செய்வது என்று ஏமாற்றியிருக்கிறார்கள். இதே மாதிரித்தான சூழலியல் சிக்கல்களையும் பத்திரிகையாளர்கள் கையாள்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் மூலவேர் யார் என்பதை இவர்கள்சொல்ல மாட்டார்கள். தமிழ்த் தேசியம் என்று பேசும்பொழுது இவற்றையெல்லாம் நாம் கவனித்தில் கொள்ள வேண்டும். தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழறிஞர்கள் இதைப் பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும்.

**கேள்வி :** தமிழ் வளர்ச்சிக்கும் தன்மான வளர்ச்சிக்கும் திராவிட இயக்கத்தினர் என்ன செய்தனர்?

www.tamilarangam.net



விட்டது மாதிரி இருக்கிறது. இப்படி இந்த மக்களைக் கொண்டு ஓட்டால் வெற்றிபெற முடியுமா? என்றெல்லாம் சிந்திக்க வேண்டி இருக்கிறது.

**பதில் :** இவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு நாணயமாகப் பாடுபடவில்லை, மொழியியல் துறை முதலியவற்றில் நவீன சாதனங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தினால்தான் ஆய்வுகள் வளர்ச்சி பெறும். உலகில் பல மொழிகள் இத்துறையில் பெரும் வளர்ச்சியை அடைந்துள்ளன. தமிழில் இத்தகைய வளர்ச்சியை இவர்கள் செய்யவில்லை. வெள்ளையர்கள் இருந்த காலத்தில் எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடைபெற்றன. கல்வெட்டுக்கள் முதலியவை தொகுக்கப்பட்டன. இந்த ஆராய்ச்சிகளை இவர்கள் தொடரவில்லை. அவர்கள் காலத்தில் செய்த ஆய்வுக்களைக்கூட இவர்கள் இன்றும் வெளியிடவில்லை. ஆவணக் காப்பகங்களைக் கரையான்கள் அரித்துக் கொண்டிருக்கின்றன. தொல்பொருள் ஆய்வு என்ற முறையில் நாம் செய்யவேண்டியவற்றை அளவிடமுடியாது. இவற்றில் இவர்களுக்கு அக்கறை இருப்பதாகச் சொல்ல முடியாது. வட்டார வழக்குகள் பழமொழிகள் என்றெல்லாம் தொகுக்கவேண்டும். இப்படியெல்லாம் செய்தால்தான் தமிழ் வளரும். தமிழ்ச் சமூகம் முன்பு பெற்ற வளர்ச்சியை எதிர்காலத் தேவை கருதி இன்று பதிவு செய்து வைப்பது இன்றியமையாதது.

மொழிக்காகவோ, நாட்டுக்காகவோ இவர்கள் எதையும் செய்யவில்லை. அரசைக் கைப்பற்றித் தமிழர்களையும், தமிழையும் அழித்துவருகிறார்கள். தமிழ் தமிழ் என்று இவர்கள் பேசுவதால் இப்படிச் சொல்ல வேண்டியுள்ளது வெளிப்படையான எதிரிகள் நம் கண்களுக்குத் தெரிகிறார்கள். இவர்களை மட்டும்தான் இப்படி நாம் சொல்கிறோம் என்று கருதிவிடக்கூடாது. கம்யூனிஸ்டுகள் தமிழுக்காக என்ன செய்தார்கள்? காங்கிரசுக்காரர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வாழ்வா? சாவா? என்ற நெருக்கடியில் நாம் இருக்கிறோம். ஆகவேதான் இப்படிச் சொல்கிறோம். இதனால்தான இன்று தமிழ்த்தேசியம் பற்றிப் பேசுகிறோம். தமிழ்த் தேசியம் என்று இன்று பேசக்கூடாது என்று சொல்பவர்கள் தமிழினத்தை அழிப்பவர்கள. இவர்கள் தமிழினத்தின் துரோகிகள். முப்பதாண்டுகளுக்கு முன் நம்மிடம் வளர்ந்த தேசிய உணர்வு இன்று கர்நாடகத்தில் இருக்கிறது. நாம் தேசிய உணர்வில் சரிந்து விட்டோம். அவர்கள் எழுச்சி பெற்று இருக்கிறார்கள். அவர்களை நாம் குற்றம் சொல்லமுடியாது, பாராட்ட வேண்டும்.

www.tamilarangam.net



## தமிழ்த் தேசியம் - நேற்று - இன்று - நாளை

**சிந்தனைச் செம்மல். கு. ச. ஆனந்தன்**

'தமிழ்த் தேசியம்' ஆய்வரங்கக் கட்டுரை, மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. 'தேசியம்' 'தேசிய இனம்' பற்றிய வரையறை, விரிவாக்கங்கள் முதல் பகுதியிலும், இந்திய நாட்டின் தேசிய இனங்களின் தோற்றம், வளர்ச்சி, சிக்கல்கள் இரண்டாம் பகுதியிலும், தமிழ்த்தேசியம் நேற்று - இன்று - நாளை பற்றியவை மூன்றாம் பகுதியிலும், முடிவுரையில் தீர்வுகளும் சுருக்கமாகத் தரபட்டுள்ளன.

'தேசியம்' என்றால் என்ன? 'தேசிய இனம்' என்பதன் கருத்துப் பொருள் யாது? ஒரு குறிபிட்ட சமுதாய (தேசிய இன) மக்களிடையே மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, மரபுகள், நிலவெல்லைப்பகுதி போன்றவை உளப்பூர்வமான பிணைப்பை ஏற்படுத்திவிடும். அதனைத் "தேசியம்" அல்லது "நாட்டுப்பற்று" என்கிறோம்.

தேசிய இனம் (Nationality) என்ற சொல்லுக்கு ஈடான " Nation" என்ற ஆங்கிலச் சொல் "Natio" என்ற இலத்தின் மொழிச் சொல்லை மூலமாகக் கொண்டது. "Natio" என்றால் " பிறந்தது", "பிறந்த இடம்" எனப் பொருள். உண்மையில் அதன் வேர்ச் சொல்லான "Natus" என்பது தமிழில் "நாடு" என்ற சொல்லின் பொருளைக் கொண்டது. எனவே நிலைத்த வரையறுக்கப்பட்ட வாழ்விடமான நாடு அல்லது நிலப்பகுதியை ஒட்டியே தேசியஇனம் அமைகிறது.

இன்றைய நிலையில் "தேசியஇனம்". என்பதற்கு விரிவான விளக்கம் தரப்படுகிறது. "ஒரு பொது மொழியையும், வாழ்க்கை முறையையும், வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பையும், பொதுப் பொருளியல் அமைவையும், தனிப்பண்பாட்டின் சிறப்பியல்புகளையும், அவற்றால் உருவான உளவியல் உருவாக்கத்தையும் பெற்ற வரலாற்று அடிப்படையில் அமைந்த ஒரு நிலையான சமுதாய மக்களே," "தேசிய இனம்" என வரையறைப் படுத்தப்படுகிறது.

### முதல்நிலை - சார்நிலைப் பண்புக்கூறுகள்

தோழர் ஸ்டாலின் அவர்கள் கருத்துப்படி, ஒரு தேசிய - இனத்திற்கு நான்கு சிறப்புக்கூறுகள் தேவை 1. பொதுமொழி 2. தொடர்ச்சியான ஆட்சி எல்லை, 3. பொதுவான பொருளியல் வாழ்வு, 4. பொதுப்பண்பாட்டில் வெளிப்படும் உளவியல் உருவாக்கம்.

இந்நான்கு சிறப்புக்கூறுகளும் ஒரு மொழித் தேசிய இனத்தைக் (Linguistic Nationality) குறிப்புணர்த்தக் கூடிய " முதல்நிலைப் பண்புக் கூறுகள் ". (Primary Factors) சான்றாக இந்தியத் துணைக் கண்டத்தில் வரையறுத்த நிலப்பகுதிகளில் தனிமொழி, பண்பாடு, வரலாறு,

www.tamilarangam.net



மரபுகளுடன் கூடிய தமிழர், ஆந்திரர், மராத்தியர், வங்காளியர் போன்ற இருபதுக்கும் மேற்பட்ட மொழித்தேசிய இனங்கள் நிலை பெற்று வாழ்கின்றன.

இவை தவிர தனிமொழி, பண்பாடு போன்ற முதல்நிலைப் பண்புக் கூறுகளைப் பெருமளவில் பெற்றிராத வேறு சில மக்கட் சமுதாயங்களும் தனி நிலவெல்லைப் பகுதிகளில் பண்டுதொட்டு வாழ்ந்து வருகின்றன. மலைவாழ் மக்கள் இனங்களும் பழங்குடி மக்களும் இவ்வகையைச் சார்ந்தவர். அவர்கள் தேசிய இனத்தன்மையைப் (Nation Hood) பெறுவதற்காக முயன்று வருகின்றனர்.

ஒரு மக்கட் சமுதாயம் முதல்நிலைப் பண்புக் கூறுகளைத் தன்னகத்தே பெற்றிருந்தாலும், அல்லது பெறாமலிருந்தாலும், தாம் தேசிய இனமாக அமைய வேண்டும் என்ற உறுதிப்பாடு, தான் வாழும் நிலப்பகுதி தம்முடையது என்ற உளவியல் உருவாக்கம், மக்களாட்சியின் மாண்புகள் தரும் உரிமைகள்- மேம்பாடுகள், பொருளியல் - சமுதாயச் சமனியம் ஆகியவற்றைப் பெற வேண்டுமென்ற பேரூக்கம், இறையான்மை கொண்ட நாட்டரசை (Nation State) அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற குறிக்கோள் திட்டம், இன ஒற்றுமையை ஏற்படுத்திப் பேணிக் காக்கும் நடைமுறைச் செயல்திறன் ஆகிய சிறப்புக் கூறுகளைப் பெற்றியங்கினால் அது தேசிய இனத் தன்மையும், செயலாக்கத்தையும் கொண்ட 'தேசிய இனமாக'வளர்ந்துவிடும். இச்சிறப்புக் கூறுகளை 'சார்நிலை ஆக்கக் கூறுகள்' (Subsidiary Factors) என்று கூறலாம்.

முதல் நிலைப் பண்புக்கூறுகள் ஒரு மக்கட் சமுதாயத்தை மொழித் தேசிய இனம் என அடையாளப் படுத்தக்கூடிய வகையில் உருவாக்கம் தரும் அளவுடன் நின்று விடுகின்றன. அது தேசிய இன ஆக்கத்தைப் பெற்றுவிட்டது என்று கூறமுடியாது. ஆனால் சார்நிலை ஆக்கக்கூறுகள் தான் அதனை மெய்யான தேசிய இனமாக வளர்க்கிறது. அதற்குரிய ஆக்க வள இயக்கத்தையும் தருகிறது. முதல்நிலைப் பண்புக் கூறுகளைப் பெற்றிராத மக்கட் சமுதாயங்களையும் கூட முழுத் தேசிய இயல்புடன், தேசியஇனமாக அமைத்து விடுகிறது. எனவே சார்நிலை ஆக்கக் கூறுகளே, தேசிய இனத் தகு நிலையை நிர்ணயிக்கின்றன.

'ஓரினம்' என்பது தற்போதைய நிலையில் மொழி - இன - பண்பாட்டு வரையறையைக் கடந்து நிற்கும் புதிய பரிமாணங்களைக்கொண்ட மக்கள் சமுதாயங்களையும் குறிக்கக்கூடிய விரிவாக்கத்தைப் பெற்றுள்ளது.

**தேசியத்தின் புதிய பரிமாணங்கள்**

இந்தியாவில் பொருளியல், சமுதாயப்புலங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகங்களும், ஒருமைப்பாட்டைப் பெற்ற மலைவாழ் மக்களினங்களும், மற்ற மொழித் தேசிய இன மக்களால் சுரண்டலுக்கு ஆளான பழங்குடி மக்களும், தத்தம் தனி வரலாறுகளின் அடிப்படையில், அரசியல், சமுதாய, பொருளியல் மேம்பாடுகளைப் பெற வேண்டுமென்ற

www.tamilarangam.net



தகுதிநிலைகளைக் காட்டி, அதற்கேற்ற தேசிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காகத் தன்னாட்சிப் போராட்டங்களை நடத்தி வருகின்றன. அவை 'தேசிய இனத்தன்மை' பெறுவதற்கான விழிப்புணர்ச்சியுடன் 'சார்நிலை ஆக்கக் கூறுகளையும் ' வளர்த்து வருகின்றன.

சான்றாக ஒன்றுக்கொன்று வேறுபட்ட மொழிகளையும் மாறுபட்ட பழக்க வழக்கங்களையும் கொண்ட பதினான்கு மலைவாழ் மக்களினங்கள் இணைந்த 'நாகாலாந்து விடுதலை இயக்கம்' மிசோக்கள், மெயிட்டிகள், குக்கிகளின் தன்னாட்சிப் போராட்டங்கள், செம்பாதி தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்டதும், பொருளியல் புலத்தில் அடிமைப்படுத்தப்பட்டதுமான ஜார்க்கண்டு மக்களின் தன்னுரிமைக் கிளர்ச்சிகள் போன்றவை

ஒரே மொழி, இன, பண்பாட்டைக் கொண்ட மக்களில் ஒரு பகுதியினர், அதே மொழி மக்களின் வேறொரு பகுதியினரின் ஒடுக்குமுறைக்கு ஆளாகிப் பொருளியல் விடுதலை பெறுவதன் அடிப்படையில் தனி மாநில அமைப்பைப் பெறுவதற்குரிய நோக்கும் போக்கும் பெற்றுத் திகழ்வதை நடைமுறையில் காண்கிறோம். சான்றாக ஆந்திரத்திலிருந்து அதே தெலுங்கு மொழி பேசும் தெலுங்கானாப்பகுதி, தனிமாநிலக் கோரிக்கையை முன்வைத்து நடத்தும் போராட்டம், உத்தர்கண்டு, பந்தர்கண்டு மக்கள், தம் மொழி மாநிலமான உத்தரப்பிரதேசத்திலிருந்து பிரிந்து தன்னாட்சி கொண்ட தனி மாநிலங்களாக வேண்டும் என்று கோரி நடத்தும் கிளர்ச்சிகள், பீகாரிலிருந்து, பிரிந்து தனிமாநிலமாக 'ஜார்க்கண்டு' அமைய வேண்டுமென்ற கோரிக்கை, குசராத்திலிருந்து 'சவுராட்டிரப்' பகுதியும், ராஜஸ்தானத்திலிருந்து 'சித்தகார்ப்' பகுதியும் மகாராஷ்டிரத்திலிருந்து 'விதர்பமும்' தனிமாநிலங்களாக வேண்டுமென்ற கிளர்ச்சிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம் குறிப்பிட்ட மதமக்களைத் தேசியஇனமாக முன்னிலைப்படுத்தி, தனியாட்சிகோருகிற தேசியத்தின் பிற்போக்குப் பரிமாணமும் கூட அதன் வளர்ச்சியில் வெளிப்படுகிறது. இவற்றையெல்லாம் வெறும் 'சார்புத் தேசியம்' ( Sub Nationalism) என்று கூறி, ஒதுக்கிவிட முடியாது.

**தேசிய இனஇயல்பும் செயல்முறையும்**

எனவே ஒரு மக்கட் சமுதாயம், தன்னைத் தேசிய இனம் என்று முன்னிலைப்படுத்தும்போது, அதன் மெய்யான தேசிய இன இயல்பையும் முற்போக்கு அல்லது பிற்போக்குத் தன்மையையும், புலனறிந்து கொள்வது எப்படி?.

தேசியத்தின் இரண்டு முற்போக்கான உட்கூறுகளின் வளர்ச்சியை ஒட்டியே, அத்தகைய சமுதாயக் குழுவின் மெய்யான

www.tamilarangam.net



தேசியப் பண்பை அறிந்து கொள்ளமுடியும் 1. அதன் அனைத்துப் புலங்களிலும் சமுதாய மாற்றத்தை நோக்கிச் செலுத்துகிற சமூகச் சீர்திருத்தங்கள். 2. ஆட்சியியல் பொருளியல் துறைகளில் ஜனநாயக உரிமைகளையும் சமனியத்தையும் ஒட்டு மொத்தமான மேம்பாடுகளையும் வழங்கத்தக்க மாற்றங்கள்.

தேசிய இனவளர்ச்சியை ஓராண்டிலோ அல்லது சில ஆண்டுக்களுக்குள்ளோ பெற முடியாது. லெனின் அவர்கள் தேசிய இன வளர்ச்சியை ஒரு "திறன்மிக்க தொடர் செயல்முறை" (Process) என்கிறார். அச்செயல்முறை தேசிய வாழ்க்கை விழிப்புணர்ச்சி, தேசிய இயக்கங்கள், தேசிய இனத்தின்மேல் ஏவப்படும் அடக்கு முறைகளை எதிர்த்து நடத்தும் போராட்டங்கள், தேசிய அரசை நிறுவுதல் ஆகிய நான்கு படிக்கட்டுகளைக் கொண்டது என்றும் விளக்குகிறார்.

அந்த ஆக்க வழியினதான செயல்முறையானது ஒரு குறிப்பிட்ட தேசிய இன மக்களிடையே நிலவும் வேறுபாடுகளை ( சாதி, சமய, சமுதாய, பொருளியல், மொழி போன்ற பலவகை வேறுபாடுகளை) போக்கி, ஒற்றுமைச் செயற்படுத்துவதற்கும், தம் வாழ்க்கையைத் தாமே முடிவு செய்வதற்கும், தேசியத்தை வளர்ப்பதற்கும், நவீன அறிவியல் தொழிலியல், பொருளியல் உயர்வைப் பெறுவதற்கும், சமுதாயச் சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை தந்து, ஏற்றத்தாழ்வை அகற்றுவதற்கும், இவற்றிற்கெதிராகவுள்ள சக்திகளை அடையாளம் காட்டி அவற்றை வெல்வதற்கும், ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்கும் தன்னாட்சி அமைப்பதற்கும், தேவையான அனைத்தையும் வல்லமையுடன் நடைமுறைப் படுத்த வேண்டும். இதன் இறுதிநிலை, கூட்டுடைமையையும் முழுச் சமுதாயமாற்றத்தையும் பெறுவது. இத்திறன் மிகு செயல்முறை தேசிய அரசை நிறுவிய பின்னரும் பல்லாண்டுகள் தொடர்ந்து உயிரோட்டத்துடன் இயங்கிவரும்.

தேசிய இனத்தின் இயக்கங்களும் போராட்டங்களும், சமுதாய மாற்றத்தை நோக்கிச் செலுத்தும் அடிப்படைக்கூறுகளை சுடர்விடச் செய்துகொண்டே, முழு இறையாண்மையைப் பெறுவதற்குரிய வகையில் நடைபெற வேண்டும்.

## II

## இந்தியாவின் தேசிய இனங்கள்

இந்தியத் துணைக் கண்டம், ஒரே தேசியத் தன்மையும், ஓரினப் பரிணாமத்தையும் உளப்பூர்வமான ஒரே தேசியத்தையும் ஒரே தட்பவெப்ப நிலநூல் தன்மையையும் ஒரே வரலாற்றையும் கொண்ட ஒரு தனி நாடன்று. பல மொழிகளையும் பல தேசிய இனங்களையும், பல வரலாறுகளையும் வேறுபாடுகளையும் உள்ளடக்கிய ஒரு துணைக் கண்டம்.

www.tamilarangam.net



வளமார்ந்த தனிமொழிகள், வரையறுத்த தாயகங்கள் அவற்றால் வடிவமைக்கப்பட்ட இனக்கூறுகள், பண்பாடுகள், தனிச்சமுதாய அமைவுகள், தன்னாட்சிகள் போன்ற சிறப்பியல்புகளின் கூட்டுவிளைவால், இந்தியத் தேசிய இனங்களிடையே, அதனதன் தேசிய உணர்வுகளும் இனக் கருத்துப் போக்குகளும், நாட்டுரிமைப் பண்பும் பண்டு தொட்டு நிலவி வந்தன. அவை முறையாக வளர்க்கப்படவில்லை. "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்ற முடியாட்சிகளின் அரசியல் சூழ்நிலையில், அம்மொழி இன மக்களின் உணர்வுகளுக்கு ஆட்சியினர் மதிப்பளிக்கவில்லை. ஆக்கமும் தரவில்லை. காலப்போக்கில் மொழிஇனத் தேசியம் மங்கியது.

**மொழித் தாயகங்களின் மூவகைக் தடைகள்**

தேசிய இனங்களின் பரிணாம வளர்ச்சி என்பது ஒரு மொழி, ஒரு நாடு, ஓரினம், ஒரு நிர்வாகம், அதற்குரிய தன்னாட்சி, தனியாட்சி, இறையாண்மை, விரும்பினால் மற்ற தேசிய இன அரசுகளுடன் இயைந்த கூட்டாட்சி என்ற படிநிலைகளைக் கொண்டது.

ஒரு தேசிய இன மக்கள், மற்றவரிடமிருந்து பிரித்து தம்மைக் குறிப்பிட்டு காட்டும் வகையில், தனி இனமாக அமைத்துக் கொள்வதற்கும், மொழி, பண்பாட்டைப் பேணுவதற்கும், தமக்குரிய தேசிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும், அரசியல் பொருளாதாரம் - சமுதாயப் புலங்களில் மேம்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், அதற்குரிய ஆட்சியை அமைத்துக் கொள்வதற்கும், அடிப்படையாகத் தேவைப்படுவது "மொழித் தாயகம்" (Home Land).

இந்திய நாட்டின் தேசிய இனங்கள் தத்தம் தகைமைக்குரிய தாயகங்களைப் பல நூற்றாண்டுகளாகப் புனைந்து கொள்ள முடியவில்லை. குறிப்பாகப் பிரித்தானியப் பேரரசின் பலமொழி மக்களை அடைத்த மாகாண நிர்வாகப் பகுப்புகளும், வல்லாண்மை கொண்ட ஒற்றையாட்சி மைய அரசும், நூற்றுக்கணக்கான சமஸ்தானங்களும், அவற்றில் நிலவிய முடியரசுகளும், ஆங்கிலேயர் கடைப்பிடித்த ஆட்சிக் கொள்ளைகளும் இதற்கு மூல காரணங்கள் எனலாம்.

வெள்ளையர் அரசு, பல்வேறு தேசிய இன மக்களிடையே நாட்டுப் பற்றுறுதியை வளராமல் தடுப்பதற்காக, "பிரித்தாளும் சூழ்ச்சிக் கொள்கையின்" அடிப்படையில் இருபெரும் தடைகளை உருவாக்கி, நிலைப்படுத்தி விட்டது. 1. ஆட்சி எல்லைகளை வகுக்கும்போது, ஒரு மொழி மக்கள் - ஒரு நிர்வாகம் என்ற சீர்மைக் கொள்கையைப் பின்பற்றாமல், வெறும் நிர்வாக வசதிக்காக, வெவ்வேறு மொழி மக்களை ஒவ்வொரு பகுதியிலும் வல்லந்தமாக இணைத்துப் பல்வேறு காலகட்டங்களில் பல வகையான மாகாணங்களாகப் பகுத்தது. 2. பேரரசின் மேலாண்மைக்குள் அடங்கிய ஏறத்தாழ 562 சுதேச

www.tamilarangam.net



சமஸ்தானங்களில் மாகாணங்களிலிருந்து எஞ்சிய மொழி இன மக்களைப் பலகூறுகளாகப் பிரித்தும், வெவ்வேறு மொழியினங்களை இணைத்தும் வைத்தது.

இத்தடைகள் இரண்டும் வெள்ளையன் இந்திய நாட்டை விட்டு வெளியேறும் காலம் வரை - ஏன் அதற்குப் பின்பும் சில ஆண்டுகள் கூட - நடைமுறையில் நிலைத்து நின்றிருந்ததால், அந்தந்த மொழித் தேசிய இனங்கள் நாட்டுரிமைப் பண்பையும், முற்றொருமையையும் (Identity), ஒருங்கிணைப்பையும் இறுதிவரை பெற முடியவில்லை. பன்மொழி மாகாணங்கள் என்ற கொதிகலனுக்குள் உருத்தெரியாமல் வெந்து வந்தன. அதனால் பல கொடிய விளைவுகள் ஏற்பட்டன. ஒரு மொழி சார்ந்த இனக்கூறுகளிடையே தேசியத் தன்மையில் வேறுபாடு, அயல் நிலப்பகுதிகளைச் சேர்ந்தவர் என்ற பாகு பாடு, மொழி, இன, வளர்ச்சியில் கூறுபாடு, கருத்துப் போக்குகளில் முரண்பாடு, இவை தோற்றுவித்த தனித்தனி உளப்பாடு போன்றவை விரிந்து வளர்ந்துவிட்டன.

திப்பு சுல்தான் வீழ்ச்சிக்குப் பின்னர், 1956-ஆம் ஆண்டு வரை, சென்னைத் தலைமாகாணம், 9 தெலுங்கு பேசும் மாவட்டங்களையும், திருவாங்கூர் – கொச்சி சமஸ்தானப்பகுதி நீங்கலாக மற்ற கேரளப் பகுதியையும், கர்நாடகத்தின் சில பகுதிகளையும், தமிழகத்தையும் உள்ளடக்கிக் கொண்டிருந்தது. மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட பின்னரே, தமிழகம் தனி மாநிலமாயிற்று.

தேசிய இனங்கள் விடுதலை அடைவதற்கும், மொழித் தாயகங்களைப் பெறுவதற்கும், மொழி அடிப்படையில் இணைவதற்கும் பெருந்தடையாக இரண்டு நூற்றாண்டுகள் நிலபெற்றிருந்த சுதேச மன்னர்களின் ஆட்சி, 1948-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து பூண்டோடு அழிக்கப்பட்டது.

21.2.1948 ஆம் நாளில் 'இந்திய அரசியல் சட்ட வரைவு' அரசமைப்புச் சபையில் வைக்கப்படும் முன்பே, 562 மன்னர் பகுதிகளும் 19 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு, சுதந்திர இந்திய அரசுப் பகுதிகளாக ஆக்கப்பட்டு விட்டன. மன்னர்களின் உள்வாட்டு நிர்வாகமும், முழுமையாக ஒழிக்கப்பட்டது. 1949-ஆம் ஆண்டின் இறுதியில் அரசமைப்பிச் சட்டம் அறுதி வடிவம் பெற்ற போது மன்னர் பகுதிகள் எல்லாம் எட்டு0 'பி' பிரிவு மாநிலங்கள் ஆகவும், மைய நேரடி ஆட்சிக்குட்பட்ட ஒன்பது 'சி' பிரிவு மாநிலங்களாகவும் வகைப்படுத்தப்பட்டு, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெறலாயிற்று.

அடுத்து இந்தியத் தேசிய இனங்களிடையே மொழி இனத்தேசியம் முழுமையாக வளராததற்கு, மிகப் பெருந்தடை அமைவாகச் செயல்பட்ட அதிகாரமையம், இந்திய (பிரித்தானிய ஆட்சியின்) மத்திய அரசே, ஆங்கிலேய

www.tamilarangam.net



அரசு தனது ஆதிக்கத்தை நிரந்தரமாக நிலைநிறுத்துவதற்று "ஒருமுக வல்லாட்சியை" (Unitary Government) நிறுவியது இந்த ஆதிபத்திய மைய அரசு, அதன் பல்வேறு நிர்வாக அமைப்புகளுடன் நாடு விடுதலை அடையும்வரை, தேசிய இனங்கள் தன்னுணர்வுடன் வளர்வதையும் உரிமைகளைப் பெறுவதையும் தாயகங்களை அமைத்துக் கொள்வதையும் முற்றாகத் தடுத்து நிறுத்தி விட்டது.

மொழித்தாயகப் போராட்டங்கள்

19 - ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இந்திய மொழிகளின் சிறப்பான வளர்ச்சிக் காலம் தொடங்கியது. அமைதியான மொழி வளர்ப்பியக்கங்களால் மொழி சார்ந்த மக்களிடையே பல இலக்கியங்களும் மொழி ஆய்வுகளும் வளரலாயின. ஒரு மொழி பேசும் மக்களை, மொழியுணர்வு ஒற்றுமைப்படுத்திற்று. அவர்களிடம் தனி இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற விழிப்புணர்ச்சியும் தோன்றிற்று. மொழி ஒருமைப்பாட்டுணர்ச்சியால் உந்தப்பட்ட ஒவ்வொரு மொழி சார்ந்த நிலப்பகுதி மக்களும் அரசியல் - நிர்வாகம் -சமுகத்துறைகளில் ஒரே சீரான வளர்ச்சியைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன், "இந்திய மாகாணங்கள் மொழிவாரியாகச் சீரமைக்கப்படவேண்டும்" என்ற மாநிலப்பற்றைத் தீவிரமாக வளர்த்து வந்தனர்.

1906 - ஆம் ஆண்டில், தேசிய இனங்களில் வளர்ச்சிக்குரிய அடிப்படை நிலையான மொழித் தாயகங்களைக் கோருவதற்குரிய முதல் வரலாற்றுச் சூழ்நிலை உருவாயிற்று. அரசுப் பிரதிநிதி ( வைஸ்ராய்) கர்சான் அவர்களால் வங்காள மொழிப்பகுதி, கிழக்கு வங்கம், மேற்கு வங்கம் என்ற இரு கூறுகளாகப் பிளக்கப்பட்டது. கிழக்கு வங்கம் அசாமுடனும், மேற்கு வங்கம் பீகார், ஒரிசா ஆகியவற்றுடனும் சேர்க்கப்பட்டன. கிழக்கு வங்கத்தில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். ஆனால் இப்பிரிவினையை, மொழி உணர்வில் அடிப்படையில் முஸ்லீம்களே கூட எதிர்த்தனர். மிகப்பெரிய மக்கள் புரட்சி வெடித்தது பிரித்தானிய உற்பத்திப் பொருட்களை மறியல் (Boycot) செய்தனர். வெளிநாட்டுத் துணிகள் பரவலாக எரிக்கப்பட்டன. அம்மொழி உணர்வு ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வாகக் கால்கொண்டது நாட்டின் மற்ற பகுதிகளிலும் கிளர்ச்சிகள் பரவின. விடுதலைப் போராட்டத்திற்கும், அதன் உள்ளீடான பல்வேறு மொழித் தாயகக் கிளர்ச்சிகளுக்கும், வங்கப்பிரிவினை வழிவகுத்தது.

அதனையடுத்து ஐம்பதாண்டுகள் மொழிவழி மாநிலக் கோரிக்கைகளும், கிளர்ச்சிகளும் தொடர்ந்து நடைபெற்றன. அவற்றை மூன்று வகைகளாகப் பகுக்கலாம் **1.** ஒரு மொழி பேசும் மாகாணங்கள் பிரிக்கப்படும்போதும் பெரும் எதிர்ப்புகள் தோன்றின. **2.** தனிமாகாணம்

www.tamilarangam.net



பெறும் தகுதியைப் பெற்றிருந்தும் அதற்குரிய தன்னாட்சி தரும் மாகாணத் தகுநிலையை அடைவதற்காகக் கோரிக்கைகள் வலுப்பெற்றன.

**3.** வெவ்வேறு மொழியினர், நிர்வாக வசதிக்காக இணைக்கப்பட்ட மாகாணங்களிலிருந்து, அவ்வேற்று மொழியினர் விடுபட்டு, தத்தம் மொழித் தாயகமான தனிமாகாணத்தைப் பெறுவதற்காக மிக வன்மையான தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. "ஒருமொழி ஒரு (மாகாண) நிர்வாகம்" என்பதே இத்தகைய கிளர்ச்சிகளுக்குப் பொதுவான அடிப்படை. ஆனால் அசாம், சிந்து மாகாணங்கள் நிறுவப்பட்டதைத் தவிர வெள்ளையன் வெளியேறும் வரை இவை வெற்றி பெறவில்லை. மேலும் இருபது ஆண்டுகள் அதற்குத் தேவைப்பட்டது.

இந்திய அரசமைப்பில், மொழிவாரி மாநிலங்கள் இடம் பெறவில்லை. மாறாக தேசிய மொழிகள் மட்டும் குறிப்பிடப்பட்டன. எந்தஒரு மொழிப் பகுதியையும் வேறு எந்த மாநிலத்துடனும் இணைக்கவும் விரும்பினால் ஒரு மொழி மாநிலத்தை இந்திய வரைபடத்திலிருந்தே நீக்கிவிடவும், தேவையான அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கும் சட்டப்பிரிவு 3அதில் சேர்க்கப்பட்டது. இன்றும் அது உயிரோடு உள்ளது. வரலாறு மாறிய பின்பும், அவ்வரலாற்றின் பின்னனி மாறவில்லை. தொடர் விளைவாகத் தேசிய இனங்களின் உயிர்க்கோரிக்கைகள் அரசமைப்பின் பெயரால் மறுக்கப்படுகின்றன.

## மொழித் தேசியம் – எதிர்இந்திய மதத் தேசியம்

இந்தியத்துணைக் கண்டத்தைப் பொறுத்தவரை மொழித்தேசிய இனங்களின் "தன்னாட்சி" என்பது ஒரு வெறும் "அரசியல் கொள்கை" மட்டுமல்ல, விடுதலை இயக்கத்தின் ஒவ்வொரு காலகட்டத்திலும் சுதந்திரத்தின் கருப்பொருளாகவும் அனைத்துகட்சித் தலைவர்களால் ஒருமித்து ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஓர் அடிப்படைக் கோட்பாடாகவும் திகழ்ந்து வந்துள்ளது. மாகாணச் சட்டமன்றங்களில் இந்தியர்கள் அதிகமாகப் பங்கு கொள்ளக்கூடிய குடியாட்சி முறையும், மாகாணத் தன்னாட்சிக் கொள்கையும் வருங்கால இந்தியச் சுதந்திரத்தின் ஒருங்கிணைந்த சிறப்பியல்புகளாக கட்சி – மத வேறுபாடுகளைக் கடந்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதன் தொடக்கநிலையாக வெள்ளையரின் அரசு தந்திரக் கொள்ளையான "அதிகாரப் பரவலாக்கம்"எதிர்பாராதோர் அரசியல் விபத்தாகத் தோன்றிப் பெரும்பயனை விளைவித்தது எனலாம். மூன்று "இந்திய மன்றங்களின் சட்டங்களும்" அதிகாரப் பரவலாக்கத்தை ஓரளவிற்குத் தந்தன.

1914 முதல் 1918 ஆம் ஆண்டுவரை நடந்த முதல் உலகப்போர் முடிந்த பின்னர் "ஓரினம், ஒருநாடு" என்று தனியாட்சித் தரும் சுயநிர்ணய உரிமையைப் "பன்னாட்டுக் கழகம்" ( League of

www.tamilarangam.net



Nations), உலகளாவிய செயற் கொள்கையாக ஏற்றுக் கொண்டது. பல குடியேற்ற நாடுகளும் விடுதலையடைந்தன. உலகச் சூழ்நிலையின் காரணமாக இந்தியாவில் மொழித் தேசிய இனங்களிடையே விடுதலை உணர்வும், தன்னாட்சித் தேட்டங்களும் வெளிப்படலாயிற்று. அம்மொழியின மக்கள் அளவான குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து வந்ததால், மேலும் ஊக்கம் கொள்ளலாயினர். மொழி இன மக்கள் தன்னாட்சியைப் பெற துடித்து நின்றனர். மெல்லமெல்லத் தன்னுரிமை பெறுவதற்குக் கிடைத்த சூழ்நிலையையும் வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டனர். மாகாண நிர்வாகங்களில் பங்கேற்றனர்.

1919 -ஆம் ஆண்டின் இந்திய அரசுச்சட்டம் தேசிய இனங்களின் தன்னாட்சிக்கு வித்திட்டது. "1935-ஆம் ஆண்டின் இந்திய அரசுச்சட்டம்" மாகாணங்களுக்கு வரையறுத்த தன்னாட்சி உரிமைகளை வழங்கிற்று. ஆனால் பின்னர் அது வளர்ந்து மலரவில்லை. அதற்கெதிராக, "இந்தியதேசியமும், மதவழித் தேசியமும்" இரு தடைக்கற்களாகி நின்றன. "இந்திய அரசமைப்பு" தேசிய இனங்களின் தன்னுரிமைகளை இறுதியில் முற்றாக முடக்கிவிட்டது.

தேசிய இனங்கள் தன்னுணர்வு பெற்று, தத்தம் தாயகங்களுக்காகப் போராடத் தொடங்கிய இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே மொழித் தேசியத்தை முடக்கக்கூடியதோர் எதிர்நீரோட்டம் தோன்றி வளரலாயிற்று. அதுவே "இந்திய தேசியம்" பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை வன்மையுடன் எதிர்த்துப் போராடுவதற்காக, "வேற்றுமைகளில் ஒற்றுமை" காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலமுழக்கம் "இந்திய ஒருமைப்பாடு".

விடுதலை இயக்கம் மொழி இனத் தேசிய மக்களுக்குப் பல உறுதிகளை வழங்கியிருந்தது. குடியாட்சிமுறை, மொழிஇனங்களின் சமத்துவம், மொழிவாரி மாநிலங்கள், மாநிலத் தன்னாட்சி, மெய்யான கூட்டாட்சி, சுயநிர்ணய உரிமை போன்றவற்றை இந்தியச்சுதந்திரம் பெற்றதும் தரப்படுமென்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் அவையனைத்தையும் விடுதலை இயக்கத்தின் மூலமாகத்தான் அடையமுடியும் என்று கருதிய மொழி,இனமக்கள் முற்றாக அதில் பங்கேற்றனர். வேறுசில சிறப்புக்கூறுகளும் பின்னணியாக அமைந்தன.

"இந்தியத் தேசியம்" அல்லது இந்தியத்தேசபக்தி என்பது அண்மைக்காலத்துப்பயிர். அது இந்திய வரலாற்றின் பரிணாம வளர்ச்சியில் ஊடுருவி நின்று நிலை பெற்றுவிடவில்லை. எனினும் நாடு விடுதலை அடைந்தவுடன் அதனையே ஒரு வாய்ப்பாக்கிக்கொண்டு, அதுவரையும் உருவமைத்துக் காட்டிவந்த "அனைத்திந்திய ஒற்றுமை" என்ற நிழலையே அடிப்படையாக வைத்து இந்தியத் துணைக்கண்டத்தின் பலமொழி தேசிய இனங்களுக்கு முழு சுயாட்சி வழங்காததும் கூட்டாட்சிச்சாயலை மட்டும் கொண்டதுமான ஓர் அரசமைப்பை உருவாக்கிவிட்டனர்.

இந்தியமொழித் தேசிய இனங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பைக்

www.tamilarangam.net



கொண்ட விடுதலை இயக்கத்தினூடே வளர்ச்சிபெற்றபின்னர், இறுதிநிலைத் தன்னுரிமை பெறுவதைத் தடுத்து நிறுத்திய மற்றொரு பெருந்தடை, "மதவழிப்பட்ட தேசியம்" அது விடுதலை இயக்கம் வீரியத்துடன் நடைபோட்டபோது அதனிற்றும் வெளியேறி, அதனையே முறியடிக்கவும் முனைந்து நின்றது.

அஃதேபோல இசுலாமியமத அமைப்புகளும், தீவிரத்தன்மையுடன் இயங்கலாயின. கிலாபத் இயக்கம் அதனை வளர்ச்சியுறச் செய்தது. முஸ்லீம் மக்களின் தனிஉரிமைகளையும், சமுதாய அரசியல், பொருளியல் உரிமையையும் பாதுகாப்பதற்காக முஸ்லீம்லீக் தோன்றியது. அது இந்து -முஸ்லீம் பாகுபாட்டை வளர்த்தது. இந்து -முஸ்லீம் சிக்கல் சுதந்திரம் பெறுவதற்கும் தடையாக அமைந்தது. "முழுத்தன்னாட்சி கொண்ட மாநிலங்களும், அவை இணைந்து உருவாகும் இந்தியக் கூட்டாட்சிதான் அச்சிக்கலைத் தீர்க்க வல்ல ஒரே வழி" என்று 1937ஆம் ஆண்டு வரையும் முஸ்லீம் லீக் உட்பட மற்ற அரசியல் கட்சிகளும் அறிஞர் பெருமக்களும் ஆங்கிலஅரசினர் கூடக் கருதியிருந்தனர்.

உண்மையில் ஜின்னா மதவழிப்பட்ட தேசியத்தைத் தோற்றுவிதத முதல் தலைவர் அல்லர், மாறாக இந்துமகா சபையின் தலைவர் ள்1937ஆம் ஆண்டு அகமதாபாத்தில் நடைபெற்ற இந்துமகாசபை மாநாட்டில், தன் தலைமை உரையில், புதிய மதவழிப்பட்ட தேசியஇனக் கொள்கையை வெளியிட்டார். "இந்திய மக்களெல்லாம் ஒரே(தேசிய) இனத்தைச் சார்ந்தவர்கள் என்று நாம் கொள்வதற்கில்லை மாறாக இந்தியாவில் தலையான இரண்டு தேசிய இனங்கள் உண்டு. அவை இந்துக்களும், முஸ்லீம்களும் ஆகும்" என விளக்கினார். இந்துமகா சபையின் தீவிரமும், காங்கிரசின் சில நடவடிக்கைகளும் முஸ்லீம் லீக்கின் நாட்டுப் பிரிவினைக்கு இட்டுச் சென்றன. 1940 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் நடந்த முஸ்லீம் லீக் மாநாட்டில், "பாகிஸ்தான் பிரிவினைத் தீர்மானம்" நிறைவேற்றப்பட்டது. "கனவுக் கொள்கை" என்று கூறப்பட்ட, "பாகிஸ்தான் பிரிவினை" ஏழு ஆண்டுகளில் நடைமுறை ஏற்பாடாகிவிட்டது.

தேசிய இனங்களின் வரையறை அல்லது விரிவாக்கங்களில் மதம் மூலக்கூறாகக் கொள்ளப்படவில்லை. ஆனால் மதத்தின் அடிப்படையில் மக்களின் வெறியுணர்வைத் தட்டி எழுப்பி, அவர்களை ஒரு "தேசிய இனமாக" முன்னிலைப்படுத்திய "பிற்போக்கு மதவழிப்பட்ட தேசியம்" இந்தியாவில்தான் நடைமுறைக்கு வந்தது எனலாம். இன்றும் கூட பஞ்சாப், காசுமீர் மாநிலங்களில் மதத்தேசியம் முதன்மைப்படுத்தப் படுகிறது. வீரசாவர்க்காரின் "இந்து தேசிய இனக் கொள்கையின்" மறுபதிப்பே இன்றைய "இந்துத்துவம்" தேசிய இனங்களின் வளர்ச்சி நிலையில் எதிர்காலத்தில் மதவழிப்பட்ட தேசியம் பெருந்தடைக்கல்லாக அமையும் வாய்ப்புள்ளது.

www.tamilarangam.net



## தேசிய இனச்சிக்கலின் ஊற்றுக்கால்

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாளில் இந்திய வானில் சுதந்திர வெள்ளி முளைத்தெழுந்தது. விடுதலை இயக்க காலத்தில் அகில இந்தியக் காங்கிரசுக் கட்சி மக்களுக்குக் கொடுத்த பல வாக்குறுதிகளை, ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதும் காற்றிலே பறக்கவிட்டுவிட்டது. "வயது வந்தவர்களெல்லாம் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்டு இந்திய அரசமைப்புச் சபை உருவாக்கப்படும். மொழி, இன பண்பாட்டிற்கேற்ற வகையில் மாநில -தேசிய இனமக்களுக்கு உரிமைகள் தரப்படும். மொழிவழித் தாயகங்கள் அமைக்கப்படும் அந்தந்தத் தாய்மொழிகளுக்கு ஊறுநேராது. முழுமையான தன்னாட்சி பெற்ற தேசிய இனங்களின் மாநிலங்கள், மெய்யானதொரு கூட்டாட்சியில் இணையும் அதற்கேற்ற அரசமைப்பு அமைக்கப்படும்." என்பன போன்ற வாக்குறுதிகளை நிறைவேற்றத்தக்க குறிக்கோள்-நடைமுறைகளை உள்ளடக்கிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கவில்லை.

இவ்வகையில், 90 ஆண்டுகளாகப் படிப்படியாக வளர்ந்து எழுச்சி பெற்ற மொழித் தேசிய இனங்களின் தன்னாட்சி, 1947 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் நாள் தொடங்கி, 1947, ஆகஸ்டு 15 க்குள், 90 நாட்களில் வேருடன் வீழ்த்தப்பட்டது. இந்திய வரலாற்றில் கறைப்பட்ட அத் தொண்ணூறு நாட்கள்தான், எதிர்கால இந்திய அரசமைப்பைத் தேசிய இனங்களுக்கு முற்றும் எதிரானதாக மாற்றியமைத்து விட்டன. மொழி இனங்களின் ஆட்சியியல் பொருளியல், பண்பாடு, இனத் தன்னுரிமைகளையும், அவை இறுதியாக பெறவிருந்த தன்னாட்சியையும் அரசமைப்பிலிருந்து அடியோ நீக்கிவிட்டனர். இலண்டனிலிருந்து ஏகாதிபத்தியம் டெல்லிக்கும், பிரித்தானியப் பேரரசிடமிருந்து மத்திய ஒருமுகவல்லாட்சி அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சிக்கும் கைமாறி விட்டன. விளைவு? தேசிய இனங்களுக்கு விடுதலை கிடைக்கவில்லை. பல்லாண்டுகள் மேலும் போராடவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டன.

இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்களில் தீர்க்க முடியாத சிக்கல்கள் உருவாகி வளர்வதற்கு வற்றாத ஊற்றுக்காலாக விளங்குவது இந்திய அரசமைப்பே.

## அரசமைப்பு -அடிமைமுறி

இந்திய அரசமைப்பு 13.12.1946 முதல் 26.11.1950 வரை ஏறத்தாழ 1138 நாட்களில் பல பேரறிஞர்களின் கடும் உழைப்புக்குப் பிறகு உருவாயிற்று. அக்காலப்பகுதி இந்திய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றுப் பகுதி. ஆனால் அதில் வரையப்பட்ட

www.tamilarangam.net



மைய-மாநில உறவுகளோ ஆங்கில ஏகாதிபத்திய அரசு, அடிமை இந்தியாவிற்குத் தந்த "1935-ஆம் ஆண்டில் இந்திய அரசுச் சட்டத்தின்" மறுபதிப்பாக விளங்குகின்றன. அரசமைப்பின் வழியாக மெய்யான கூட்டாட்சி அமையவில்லை, மாறாக அதன் சாயல் மட்டுமே அதில் இடம் பெற்றது. வல்லாண்மை நடுவண் அரசும் வலியுற்ற மாநிலங்களும் அதன் சிறப்புப் படைப்புகள். 'எஞ்சிய அதிகாரங்கள்' உட்பட்ட மாநில அரசுகளை ஆட்சிப் படைக்கும் மிக வலிவான அதிகாரங்களை நடுவண் அரசு பெற்றுக் கொண்டது. குறுக்கப்பட்ட சில தன்னாட்சி அதிகாரங்களை மட்டும் மாநில அரசுகள் பெற்றன.

இந்திய அரசமைப்பில், ஆட்சி அதிகாரங்கள் மூன்று பட்டியல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை 'சட்டமியற்று அதிகாரங்கள்' எனப்படும் மத்திய அரசின் சட்டமியற்றும் பட்டியலில் 97 அதிகாரங்களும் மாநில அதிகாரப் பட்டியலில் 66 இனங்களும், மைய-மாநில அரசுகள் இரண்டும் செயல்படத்தக்க பொதுப் பட்டியலில் 47 அதிகாரப் பதிவுகளும் இடம் பெற்றுள்ளன. அரசமைப்புத் திருத்தத்திற்குப் பின்பு மாநில அதிகாரங்கள் 61- ஆகக் குறைந்து விட்டன. பல விதிகளின் செயற்பாட்டின் காரணமாகத் தற்போது மாநில அரசுகள் வெறும் 19 அதிகாரப் பதிவுகளில் மட்டுமே தனித்தும் முழுமையாகவும், பயனுடனும் சட்டமியற்றி, ஆட்சி செய்ய இயலும். ஆனால் மைய அரசோ பொதுப் பட்டியலில் 47 இனங்களையும் சேர்த்து 144 அதிகாரங்களுடன் இயங்கி வருகிறது. இவையன்றி மாநில அரசுகளைக் கொத்தடிமைகளாக்கும் வேறு பல ஏற்பாடுகளும் நேரடியாகவும், மறைமுகமாகவும் செய்யப்பட்டுள்ளன. மாநிலங்கள் மேல் மைய அரசு பிறப்பிக்கும் நிர்வாகக் கட்டளைகள், அதன் முகவரான ஆளுநரோ மாநில அரசின் தலைவர்; அவருடைய வரையறை செய்யப்படாத 'விருப்பு அதிகாரங்கள்' (Discretionary powers) முறை, அனைத்திந்திய அரசுப்பணிகள் (All India Services) மூலமாக மாநில அரசுகளை முடமாக்கும் வழிகள்; மாநில ஆட்சிகளை காரணமின்றிக் கலைக்கும் சட்டப்பிரிவு -356 போன்ற கொடுமையான நெருக்கடிநிலை விதிகள்; இந்திய ஆட்சிமொழியின் வல்லாண்மை, அரசியல் சட்டத் திருத்தத்தில் மாநிலங்களுக்குப் பங்கின்மை; மாநில மக்களுக்குத் தனி "மாநிலக் குடியுரிமை" (State Citizenship) வழங்கப்படாமை, மாநிலங்களுக்கு இறையாண்மையின்மை. மாநிலங்களை நிலையான வறுமையில் ஆழ்த்தும் சுருங்கிய நிதி மூலங்கள், நாடாளுமன்றச் சட்டங்களுக்கும் நடுவண் அரசின் நிர்வாகத்திற்கும் இயைந்தே மாநில அரசுகள் இயங்க வேண்டிய கட்டுப்பாடு, பொதுப் பட்டியலில், நடுவணரசு சட்டமியற்றினால் மாநிலங்கள் சட்டமியற்ற முடியாமை, மாநிலங்களின் நிலப்பகுதிகளைத் திருத்தவும், மாற்றவும், அழிக்கவும், மாநிலச் சட்ட மேலவைகளைப் படைக்கவும், அழிக்கவும் மைய அரசு பெற்ற பேரதிகாரம், மாநிலப் பட்டியலில் அதிகாரங்களை மாநிலங்களவைத் தீர்மானத்தின்

www.tamilarangam.net



மூலமாகப் பறித்துக் கொள்வதற்குரிய வழிவகை, நாடாளுமன்றம் சில சூழ்நிலைகளில் மாநில ஆட்சி அதிகாரங்களில் ஊடுருவும் இயல்பு, இன்னோரன்ன மொழிஇன மக்களின் தன்னாட்சியை முறியடிக்கும் வேறுபல ஏற்பாடுகளும் இன்றைய நமது அரசமைப்பில் இடம்பெற்றுள்ளன. அது மாநிலங்களின் உரிமைப் பட்டயம் அன்று ; மாறாக மாநிலங்களின் அடிமை முறி.

## நடுவண் அரசு - ஒடுக்குமுறை

இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த 1950 ஆம் ஆண்டு சனவரி 26-க்குப் பின்னர், சில ஆண்டுகளிலேயே, மைய-மாநில உறவுகளில் பல சிக்கல்கள் தோன்றிவிட்டன. மாநில எல்லைப் போராட்டங்கள், நதிநீர்ச் சிக்கல்கள், தனிமாநிலக் கோரிக்கைகள், தன்னாட்சிக் கிளர்ச்சிகள், நிதி மூலங்களில் விரிவு வேண்டுதல், மொழி உரிமை நசுக்கப்படுதல், தொழில்களை அமைப்பதில், மைய அரசின் மாற்றாந்தாய்ப்போக்கு, தனிநாடு கோரிக்கைகள், போன்றவை அவற்றில சில. என்றும் விடுதலை இயக்கத்தின் பலமூத்த தலைவர்கள், மாநில முதல்வர்களாகப் பின்னர் பொறுப்பேற்றிருந்ததால், முறையற்ற மைய - மாநில உறவுகளும், மாநிலக் கோரிக்கைகளும் 'அனைத்திந்திய ஒருமைப்பாடு' என்ற பனிப்படலத்தால் மூடி மறைக்கப்பட்டன. மைய - மாநில உறவுகளில் மாநிலங்களுக்கு அதிகத்தன்னாட்சி அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கைகளும், அரசமைப்பு மறுபரிசீலனை செய்யப்படவேண்டுமென்ற அறிவுநிலை விளக்கங்களும் குறுகிய 'பிராந்தியவாதம்' 'பிரிவினை முயற்சி' என்ற கொச்சைப்படுத்தப்பட்டு, மையஅரசால் ஒதுக்கித்தள்ளப்பட்டன. பல்வேறு மாநில மக்களின் உரிமைக் கோரிக்கைகளும், பொருளியல் வளர்ச்சியும் புறந்தள்ளப்பட்டன.

மையத்திற்கு எதிரான தேசிய இனங்களின் எழுச்சிக்கு, வேறு பல பொதுவான காரணங்களும் உண்டு. சென்ற 45 ஆண்டுகளில், மத்திய அரசு, அரசமைப்புக்கும் அப்பால் சென்று, அதன் ஆட்சிக் கட்சியான அனைத்திந்தியக் காங்கிரசு, ஆட்சிமொழி, இந்தி, மத்திய மயமாக்கப்பட்ட திட்டக்குழு, ஐந்தாண்டுத் திட்டங்கள், ஒருமலையாகத் தரப்படும் 'விருப்பமான்யங்கள்' மத்தியக்கடன்கள், பஞ்சாயத்து ராஜ்யம் என்ற பெயரில் மாநில ஊராட்சி, உள்ளாட்சிகள் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த நடைமுறை, புதிய கல்வித்திட்டம், மாநில உயர்நிர்வாகக் காவல்துறை அலுவலர்கள் மாநாடுகள் மூலமாக மாநிலத்திற்கு எதிராகத் திருப்பிவிடும் போக்கு, மற்றும் இன்னோரன்ன ஒற்றையாட்சி முறையை மேலோம்பும் நிர்வாக நிதி-சதி முறைகள் போன்றவை மூலமாக மாநில அரசுகளை, முற்றிலும் முடமாக்கிவிட்டன.

www.tamilarangam.net



## தேசிய இனங்களின் போராட்டங்கள்

தற்போது இந்தியத்தேசிய இனங்கள் மையஅரசை எதிர்த்துப் பல்வகையான கிளர்ச்சிகளை நடத்தி வருகின்றன. அவற்றில் தீவிரத்தன்னுரிமை வெளிப்படும், வன்முறை கொண்ட பிரிவினைப் போராட்டகளாகவும், வலிவான தன்னாட்சிக் கிளர்ச்சிகளாகவும், தேசிய இன விழிப்புணர்ச்சி கொண்ட நியாயமான கோரிக்கைகளாகவும், தனி மாநிலத் தாயகக் கிளர்ச்சிகளாவும், வளர்ந்துவிட்டன. காசுமீரமும், பஞ்சாபும் ஆயுதமுறையைக் கைக்கொண்டு முழுவிடுதலை கோருகின்றன. நாகலாந்து, மேகாலயா போன்ற வடகிழக்கு மாநிலங்கள் மற்ற இந்திய மக்களை அயல் நாட்டினர் என்று சாற்றி, கமுக்கமான சுய நிர்வாகத்தையும் நிறுவிக்கொண்டு, வன்முறை வழியில் பிரிவினையைக் கேட்கின்றன.

தமிழ்நாடும், மேற்குவங்கமும், முழு மாநிலத் தன்னாட்சி தரவேண்டுமென்ற பேரியக்கங்களையும், அரசியல் கட்சிகளையும் கொண்டு இயங்குகின்றன. இந்திய அரசமைப்பு ஒரு 'மோசடி ஆவணம்' என்பதை வெளிப்படுத்தி அதனை முற்றாக ஒழித்துவிட்டு மாநிலங்களில் முழுத்தன்னாட்சியையும், கொண்ட பிரிவினைப் போராட்டங்களாகவும் வலிவான தன்னாட்சிக் கிளர்ச்சிகளாகவும், தேசிய இன விழிப்புணர்ச்சி கொண்ட நியாயமான கோரிக்கைகளாகவும் தனி மாநிலத் தாயகக் கிளர்ச்சிகளாகவும் வளர்ந்துவிட்டன. மாநிலங்களில் முழுத் தன்னாட்சியையும், மையத்திலே மெய்யான கூட்டாட்சியையும் அமைக்கத்தக்க புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டுமென்று பல்லாண்டுகளாக மக்கள் இயக்கங்கள் நடந்து வருகின்றன.

இன்னொரு தீவிரப் பகுதியினர், பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய 'சுயநிர்ணய உரிமையை வழங்கும் அரசமைப்பு உருவாக வேண்டுமென்று போராடுகின்றனர். அஸ்ஸாமில் வெளி மாநிலத்தவரை வெளியேற்றி, சுரண்டலை அகற்றும் தீவிரக் கிளர்ச்சிகள், மராட்டியத்தில் மொழி வழி உணர்வுஅரும்பிய தேசிய இன வேட்கை, ஆந்திரத்தில் தெலுங்கு மொழித் தேசிய இனத்தீவிர விழிப்புணர்ச்சி, கர்நாடகத்தில் நடுவண் அரசுதான் தேசிய இனச்சிக்கல்களுக்கு முதன்மைக் காரணம் என்பதை அறியாமல், அதனை எதிர்க்கும் உணர்வின்றி அண்டை தேசிய இனமான தமிழர்களை எதிர்த்துத் தன்னுரிமை என்ற பெயரால் நடந்து வரும் திசை மாறிய கிளர்ச்சி, விதர்ப்பா, சித்தகார்மக்களும், போடுகளும் நடத்தும் தனித் தாயக மாநிலப் போராட்டங்கள், மற்ற மொழிப் பண்பாட்டுத் திணிப்பையும், சுரண்டலையும், எதிர்த்தும் தனி மாநிலக் கோரிக்கைகளையும் கொண்ட தார்க்கண்டு - சந்தால் இயக்கங்கள், இவை போன்றவை அவ்வப்போது மத்திய அரசை ஆட்டிப்படைக்கின்றன.

1/3 பங்கு வடகிழக்கு மாநிலங்களில் மக்களும், 1/4 பங்கு காசுமீர மக்களும் இராணுவத்தின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர்.

www.tamilarangam.net



இவற்றின் வடிவங்கள் வெவ்வேறானாலும் வேர்ப்பகுதி ஒன்றே. மத்திய அரசு கனவு காண்பதைப் போல, 'இந்திய ஒருமைப்பாடு' என்ற வெற்று முழக்கத்தாலோ, இன்றைய அரசமைப்பின் எல்லைக்குள் நின்றோ, அவற்றைத் தீர்க்க முடியாது. படைகொண்டு தாக்கியோ அடக்குமுறையின் மூலமாகவோ தேசிய இனச்சிக்கல்களால் உருவான இப்போராட்டங்களையும் இயக்கங்களையும் நசுக்கிவிட முடியாது.

பல தேசிய இனங்கள் ஒன்றை மற்றொன்றுடன் மோதவைத்து, அவற்றினிடையே முரண்பாடுகளை உருவாக்கி, தீராத கசப்புணர்ச்சியை விளைந்தது. அவற்றை நடுவண் அரசிடம் மண்டியிட வைக்கும் சூழ்ச்சிகளும், மாநில எல்லைச் சிக்கல்களையும் நதிநீர்ப்பங்கீடுகளையும் கிடப்பில் போட்டு, தேசிய இனங்களிடையே பகைமையை நிலைத்திடச் செய்யும் மைய அரசின் கபட முயற்சிகளும் பலனளிக்கவில்லை. மாறாகத் தேசிய இனச்சிக்கல்கள் கூர்மையடைந்து விட்டனர். போராட்டங்களும் வலிவடைந்துவிட்டன. காரணம், இவையனைத்தும் தேசிய இனங்களின் 'சுயநிர்ணயஉரிமையில்' முந்தைய படிநிலை.

தனிமாநில கோரிக்கைகளில் இனத்தேசிய தன்மைகளை வெளிப்படுத்தக்கூடிய தீவிர வேட்கையும் பொருளியல் மேம்பாட்டு ஆர்வமும் உயிரோட்டமாக உள்ளன. தனி தேசிய இனமாக ஆக்கம் பெறுவதற்கு மொழி, இன, பண்பாட்டுக் கூறுகளுக்கும் அப்பாற்பட்டு, சில தனிநிலை வரலாற்றுக் காரணங்களுக்கும் பொருளியல் மேம்பாட்டுத் தீவிர தேட்டமும் - அதாவது மற்ற தேசிய இனங்களின் ஒடுக்கு முறையிலிருந்தும், ஒரே மொழி மாநிலத்தில், மற்றொரு பகுதியினரின் சுரண்டலிலிருந்தும், வேறு ஏதேனும் வகையில், பொருளியல் துறையில் தளர்ச்சியை அடைவதிலிருந்தும் விடுதலை பெற்று, மேம்பாடு அடைய வெண்டுமென்ற அறிவு நிலையில் எழுச்சியும் -சமுதாய, அரசியல் புலங்களில் சமனிய வாய்ப்புக்களும் சார்பு நிலைக் கூறுகளாக அமைகின்றன, என்பதைத் தேசிய இனங்களின் போராட்டங்கள் தெளிவுப்படுத்துகின்றன.

## தேசிய இனச்சிக்கல்கள் கூர்மை அடைந்ததேன்?

வளரும் அறிவியலான மார்க்சியத்தை வெறும் வறட்டியமாக்கி, அதனடிப்படையில் இந்திய நாட்டின் தேசிய இனங்களின் சிக்கல்களை அணுகி ஆராய்ந்தால் திசை திருப்பம் ஏற்படும். சென்ற ஐம்பது ஆண்டுகளில் தேசிய இனச்சிக்கல்கள் மேலும் கூர்மையடைந்து, இக்கட்டானதொரு நிலையை அடைந்ததற்கு வேறு சில அடிப்படைக் காரணங்களும் உண்டு.

1. அரசமைப்பு தந்த -அடக்குமுறை நிறைந்த - மைய அரசின் மேலாண்மை; 2. குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே மூலத் தொழில்களும் பெருந் தொழில்களும் சீர்மையற்று அமைக்கப்பட்டதால் ஏற்பட்ட

www.tamilarangam.net



பொருளியல் பின்னடைவு 3. பொருளியல் மற்றும் சமுதாய மேம்பாட்டுக் காரணங்களுக்காக முறையான-இயைபுடைய-தனி மாநிலக் கோரிக்கைகள் முதலாளிய அழுத்ததால் மறுக்கப்பட்டமை 4. மாநிலப் பகிர்வு அதிகாரங்களை மைய அரசு தன்னகத்தே பெற்றுள்ளமை 5. மொழித் தேசிய இன மாநிலங்கள் தத்தம் நிலைகளுக்கேற்ற அளவில் முழு வளர்ச்சியை அடைவதற்கு இயலாமல் அரசமைப்பு மற்றும் மைய அரசின் தடைகள்.6. தனித்த முழுமைபெற்ற பொருளாதார அலகுகளாக (Economic Units) தேசிய இன மாநிலங்கள் இயங்குவதற்கு அரசமைப்பும், மைய அரசும் அனுமதிக்காத நிலை. 7. ஒரு பகுதியினரின் பண்பாடு மற்றொரு பகுதியினர் மேல் மொழி, பொருளியல், மானியங்கள் போன்றவற்றால் திணிக்கப்பட்டமை 8. ஒரு மொழி மாநில மக்களின் இயல்பான வளமைகளையும், தொழில்களையும், சொத்துக்களையும், பிற மாநிலத்தவர் நேரடியாகத் தமதாக்கிக் கொண்டு முழுச் சுரண்டலுக்கு வழியமைத்து விட்டதற்கு மூலகாரணமான 'மாநிலக் குடியுரிமை வழங்காமை' 9. வர்க்கம் என்பது வர்ணம்-சாதியத்துடனே பின்னிப்பிணைந்து வளர்ந்துள்ளது. அது இந்திய நாட்டில் தேசிய இன வளர்ச்சிக்குத் தடை. 'எங்கெல்லாம் சமுதாயப் பலத்தில் சாதி, வருண அடிப்படையில் சுரண்டப்படுகிறார்களோ, அவர்கள் பொருளியல் துறையிலும் சுரண்டப்படுகின்றனர் என்ற அடிப்படை நிலையை தெளிவாக்கிக் கொள்ளாமல் வெறும் வர்க்கப் புரட்சியை மையப்படுத்தியமை (எ.கா.:- ஜார்கண்டு, சட்டீஸ்காரி இயக்கங்கள்) 10. வளர்ச்சி குன்றிய பகுதிகளை வளர்ச்சியடைந்த பகுதிகள் பழைய குடியேற்ற நாடுகளைப் போலவே சுரண்டி, வருகிற நிலை ; அதைப்போலவே வளர்ச்சியற்ற மக்களை வளர்ச்சி பெற்ற இன்னொரு பகுதிமக்கள் சுரண்டும் நிலை. இவற்றைத் தடுக்காததால் சமுதாயம் பிளவுபட்டு நிற்கிறது. அதனால் ஏற்பட்ட அரசியல், பொருளியல் சிக்கல்கள். 11. மைய அரசு நாட்டின் பல பகுதிகளுக்கிடையே நிலவுகிற ஆழ்ந்தகன்ற பொருளாதார இடைவெளிகளைக் குறைக்காமை. 12. அதுபோன்றே பல்வேறு வகையான 'சமுதாயக் குழுக்களிடையே' (Social Groups) நிலைபேறு அடைந்துவிட்ட ஏற்றத்தாழ்வு இடைவெளியை நீக்குவதற்கு எல்லாவகையான முயற்சியும் மேற்கொள்ளாமை ; 13. சில 'தேசியஇன மக்கள் குழுக்கள்' (National Groups) பொருளாதார, சமுதாயப் புலங்கள் மிக முன்னேறிய நிலையில் இருப்பினும், மற்ற இன மக்கள் குழுக்கள் எல்லா நிலைகளிலும் பின்தங்கியுள்ள நிலை. 14. எல்லா சமுதாய-தேசிய இனக் குழுக்களிலும் (National and Social Groups) தாழ்த்தப்பட்டவர்களும், ஆதிவாசிகளும் சராசரி நிலைக்கும் குறைந்த அளவில் மிகமிகப் பின்தங்கிய நிலையில் உள்ளமை; அதே நேரத்தில் பார்ப்பனரும் மேல்சாதியினரும் தொடர்ந்து சமுதாய ஆட்சியில் புலங்களில் உயர்ந்த நிலையில் தொடர்ந்து நீடிப்பது. 15. மிகத்தீவிரமான போராட்டங்களுக்குப் பின்னர்கூட மாநிலங்கள் இன்னும் முழுமையாகப்

www.tamilarangam.net



பகுக்கப்படாமை, 16. ஆளும் வர்க்கம் முதலாளிகளின் நலனை முதன்மைப்படுத்திச் செயல்படும் அவலநிலை ,17. சுரண்டுகிற வர்க்கம் மொழி இனங்களுக்கு முழுத் தன்னாட்சி உரிமையையோ தருவதற்குத் தடைக்கல்லாக நின்று மைய அரசின்மேல் ஏற்படுத்தும் அரசியல், பொருளியல் அழுத்தங்கள் அதற்குக் காரணம் எல்லா தேசிய இனங்கள் வாழும் மாநிலங்களிலும் 'அனைத்திந்தியா' என்ற பெயரில் முதலாளிகள் சுரண்டுவதற்கு மொழித் தேசிய தன்னாட்சி அமைப்புகள் பெரும் இடையூறாக உள்ளன. தேசிய இனங்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட 'அனைத்து இந்தியாவே' முதலாளியச் சுரண்டலுக்கு வாய்ப்பாக உள்ள நிலை. 18. கற்பனையான இந்தியத் தேசியத்தையும், எதற்கெடுத்தாலும் இந்தியா கூறுபடாமை ( Intentity) என்பதையும் முன்னிலைப்படுத்தி வரும் முதலாளியமும் அதனைச் சார்ந்த மைய ஆளும் வர்க்கமும், 19. ஒரு மாநில மக்கள் மற்ற மாநிலத்திற்குள் அவ்வப்போது பெருந்திரளாகச் சென்றுகுடி யேறுவதையும், தொழில் செய்து சொத்துக்களை ஈட்டுவதையும் காப்புறுதி செய்யும் இந்திய அரசமைப்பு (சான்றுகள்: அசாம், விதர்ப்பம் வடகிழக்கு மாநிலங்கள். சித்தகார் ; ஓரளவிற்குத் தமிழ்நாடு). அரசமைப்பில் 'மாநிலக் குடியுரிமை' இடம் பெற்றிருந்தால் ஒரு மாநிலத்தின் மக்கள் மேல் வேற்று மாநிலத்தவர்களின் சுரண்டல்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். இந்திய அரசமைப்பாலோ அன்றி தற்போதுள்ள வலிமை மிக்க மைய அரசாலோ தேசிய இனச் சிக்கல்களைத் தீர்த்து விட முடியாது. காரணமே, காரியமாக முடியாதல்லவா? இவையிரண்டும் மாற்றப்பட்டாலன்றி, தேசிய இனங்களுக்கு விடுதலை இல்லை.

## தேசிய இனத் தன்னுரிமையை நோக்கி

புவியியலாலும், வரலாற்றாலும் உருவாக்கி வளர்க்கப்பட்ட இந்தியப் பன்மொழி நாட்டினங்கள், பேரரசுகள் காலத்தில் மட்டும் தன்னாட்சியை ஓரளவு இழந்து நின்று, எஞ்சிய காலப் பகுதிகளில் மொழி, இன பண்பாட்டு உரிமைகளுடன் இயங்கி முகலாயப் பேரரசுக் காலத்தில் வாள்முனையால் அடக்கப்பட்டு, தன்னிலை இழந்து அது வீழ்ந்ததுடன் மெல்லத் தம் கோருரிமைகளை மீட்டுப் பெற்றது. ஏறத்தாழ 66 ஆண்டுகள் இந்திய அரசியல் வானில் அதிகார ஈட்டம் கொண்ட ஒரு நடுவண் அரசு இல்லாச் சூழலில் மீண்டும் தன்னாட்சி உரிமைகளுக்காக ஏங்கியது, துப்பாக்கி முனையில் வெள்ளையர் ஆதிக்கத்திற்குப் பலியாகி ; தம் தனித்தன்மைக்கு முரணான மையப்படுத்தப்பட்ட ஆட்சியில் மூன்று தலை மாகாணங்களில் தங்கி வாழ்ந்து, வெள்ளையர் நிர்வாக வசதிக்காகப் பின்னர் அமைக்கப்பட்ட பல்வேறு மாகாணங்களிற் பகுக்கப்பட்டுக் கிடந்தது ; அதிகாரப் பரவலாக்கத்தினால் மேலோட்டமாகச் சில அரசமைப்பு உரிமைகளை அடைந்து ; 1917- ஆம் ஆண்டு மாநிலத் தன்னாட்சியின் உயிர்க்

www.tamilarangam.net



கூறுகள் தோன்றிய பின்னர் அடிமை நாட்டிலேயே குறுக்கப்பட்ட மாநிலத் தன்னாட்சியில் 1935 -ஆம் ஆண்டின் அரசமைப்புச்சட்டத்தால் வழங்கப்பெற்ற கட்டுப்படுத்தப் பட்ட மாநிலத் தன்னாட்சியுடன் இயங்கி; விடுதலைக்குப் பின்னர் சுதேச மன்னர்களின் கோலாட்சிக்குள்ளிருந்த பகுதிகளும் ஆங்கில அரசின் பகுதிகளும் இணைக்கப்பட்ட நிலையில் மீண்டும் பலதரப்பட்ட பன்மொழி மாநிலங்களில் வீழ்ந்து இந்திய விடுதலை இயக்கத்துக்குத் தலைமைதாங்கிய காங்கிரசின் பெரும்பான்மையைக் கொண்ட அரசமைப்பு அவையில் பேனா முனையால் உருவாக்கப்பட்ட இன்றைய அரசமைப்பால் மீண்டும் முழுத் தன்னாட்சி உரிமைகளை இழந்து ஒரு நூற்றாண்டுக்காலப் போராட்டத்தின் விளைவாக மொழி, இன பண்பாட்டு உரிமைகளைப் போற்றிக் காக்கும் தன்னாட்சி உணர்வுகள் மீதூர்ந்து? சென்ற 35 -ஆண்டுக் காலமாக முழு மாநிலத் தன்னாட்சிக்காகப் போராடி; இந்திய அரசமைப்பு வரலாற்றில் பரிமாண வளர்ச்சியோடு இணைந்து நின்று இறுதிக் குறிக்கோளான சுயநிர்ணய உரிமையை நோக்கி, பலவகைப் போராட்டங்களின் வாயிலாக, விரைந்து நடைபோடுகின்றன. இன்றிருக்கும் அரசமைப்பு அதற்குத் தடைக்கல்லாக நிலவினாலும், வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் அது பழங்கனவாகிவிடும்

## III

## தமிழ்த் தேசியம்

ஒரு நாட்டு மக்கள், மொழி, இலக்கியம், மரபு, பண்பாடு, வரலாறு, பொருளியல் முறை, வாழ்வியல் நிலை போன்றவற்றுடன் அந்நாட்டுடன் ஒன்றிய ஆழ்ந்த இபல்பையே இன்றைய நிலையில் 'தேசியம்' என்கிறோம். சங்கத்தமிழகத்தில் இவ்வகையிலான மொழி, இனத்தேசியம் உருவாகி வளரவில்லை எனலாம். தேசிய இனங்களைப் பற்றி ஆராய்ந்த மார்க்சிய அறிஞர். மைக்கல் லோயி (Michael Lowy) அவர்கள்,

"பண்டைய நாடுகளான இந்தியா, சீனா போன்றவற்றில் மொழி, வரலாறு, பொதுப்பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில், பல தேசிய இனங்கள் இருந்தன. அம்மொழித் தேசிய இனங்களிடம் 'நாட்டின் அமைவும் (Nation Hood) இருந்தது. ஆனால் (தனித்தன்மை கொண்ட சில விந்தையான வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாக அவை முழுத்தன்னுணர்வுடன் (Full Consciousness) வளரவில்லை' —என விளக்குகிறார்.

தமிழ்ச் சமுதாயம் ஒரு தேசிய இனமாக முழுத்தன்னுணர்வுடன்

www.tamilarangam.net



வளர்வதற்கு வாய்ப்பை நல்காத 'விந்தையான வரலாற்றுச் சூழ்நிலைகளை பார்ப்போம்.

## தமிழியல் தாழ்வு

பல்லவர் அரசு தமிழை வளர்க்கவில்லை; தமிழரையும் ஓர் இனம் என்கிற அளவிற்கு வளரவிடவுமில்லை. அரசியல் புலத்தில் தமிழ் மக்கள் பல்லவர் ஆண்ட பகுதிகளில் மட்டுமன்றி, கொங்குநாடு, பாண்டியநாடு, அவற்றுள் அமைந்த சிற்றரசுகள் ஆகிய பல தனி நிருவாகங்களின் கீழ் சிதறுண்டு கிடந்தனர். தமிழ்நாடு முழுவதும் ஒரு குடை ஆட்சியில் கீழ் அப்போதும் வரவில்லை.

சமுதாயப் புலத்திலும் தமிழர்களைப் பல்வேறு பகுதியினராகப் பிரிப்பதற்குரிய அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்தன. பல்லவப் பேரரசால் வடமொழி வளர்க்கப்பட்டது. தமிழ்மொழி தாழ்ந்தது. வருணாசிரம முறைகள் ஏற்றத்தாழ்வைப் புகுத்தின. சாதியம் முளைவிட்டது. சமஸ்கிருத அமைப்புகள் வல்லாண்மை செலுத்தின.

அக்காலப் பகுதியில் தோன்றி வளர்ந்த குல–சாதிப் பிரிவுகளும் பார்ப்பனிய மேல் ஆதிக்கமும், தமிழ் மொழியில் பிறமொழிக் கலப்பும், இன்னோரன்ன மற்ற தமிழியல் அழிவுக் கூறுகளும் துறைகள் தோறும் பரவலாக வளர்ந்து விட்டன. அன்னியப் பழக்க வழக்கங்களும் சமயக் கருத்துகளும், பண்பாடும் தமிழ் மரபைச் சீரழித்து விட்டன. தமிழ் நூல்கள் பல தோன்றினாலும், அவற்றால் சமுதாய அடிமட்டத்தில் தமிழியப் பிடிப்பை ஏற்படுத்த இயலவில்லை.

## ஐவகைத்தடைகள்

எதிர்காலத் தமிழகத்தில் மக்களாட்சியல் மாண்புகள், மொழி–இன உரிமைகள் நடைமுறைக்கு வந்து ; சமூக வரலாற்று அடிப்படையில் முதலாளியம் முகிழ்த்து வளர்ந்த பின்பும் தமிழ் மக்கள் தம் மொழி, இன, பண்பாட்டு வழியிலான ஒரு தேசிய இனமாக வளர்வதற்கு முற்றிலும் எதிரான ஐந்து வகைத் தடைகளின் மூலக்கூறுகள் மூன்று முதல்–ஏழாம் நூற்றாண்டின் வரையிலான காலப்பகுதியிலேயே உருவாகி விட்டன. அத்தடைகள் அடுத்து வந்த பேரரசுகளின் காலத்தில் பல்திறப் பிற்போக்கு நிலையைச் செயல்படுத்தும் பெரு வளர்ச்சியைப் பெற்றுவிட்டன. அவையாவன: 1. சாதியம் ; 2. இன்றைய நிலையில் இந்து மதம் என்றழைக்கப்படும் பல்சமயக் கதம்பக்கூளம்; 3. மனித முயற்சியை ஒடுக்கும் பக்திமார்க்கம்; 4. பண்பாட்டுப் புலத்தில் படுகைநிலையில் ஏற்பட்ட மேலடுக்கு–கீழடுக்குகள்; 5. அரசோடும், நாட்டோடும் தொடர்பற்ற பொதுமக்களுக்கும் அவர்களை ஆட்டிப் படைக்கும் ஆளும் வகுப்புக்கும்

www.tamilarangam.net



இடையே நிலவிய ஆழ்ந்தகன்ற இடைவெளி இவையனைத்தும் தமிழரின் விழிப்புணர்ச்சியையும் தேசிய இன அமைவு வாய்ப்பையும் தவிடு பொடியாக்கி விட்டன.

சமுதாய மட்டத்தில், "என்றுமே மாற்ற முடியாதது" என்ற இறுக்கமான பிடிப்புள்ள ஏற்றத் தாழ்வுகளை நிலைப்படுத்திவிட்ட சாதியமும்; பொருளியல் துறையில் பிறப்பினடிப்படையில் விதிக்கப்பட்ட சாதியம் தழுவிய தொழில் நிலை அமைப்பும் சமயப்புலத்தில் வைதீகத்தில் வேர்களுடன் அமைக்கப்பட்ட புதிய பார்ப்பனீய விரிவாக்க வெளியீடுகளான அறுவகைச் சமயங்களும்; அகநிலையில் மடைமையையும் செயல்நிலையில் இயக்கமற்ற தன்மையையும் மனித முயற்சியில் ஊக்கமின்மையையும் வளர்க்கும் மௌடீக உணர்வார்வ பக்தி மார்க்கமும்; அதன் உள்ளீடான வழிபாட்டில் வல்லாண்மையைப் பரப்பிய ஆகமங்களும் ; பண்பாட்டு நிலையில் ஒரே மொழி சார்ந்திருக்கும் சமூகத்தை இரு கூறுகளாகப் பிளக்கும் ஈறடுக்குக் கலவை நிலையும்; மொழிப்புலத்தில் வேத, வேள்வி, சாத்திரங்களின் வல்லாண்மையைக் கொண்ட சமற்கிருதமும்; ஆட்சியலில் இவையனைத்தையும் வீரியத்தோடு செயல்படுத்திய அரசர்கள், அமைச்சர்கள், புரோகிதர்கள் அலுவர்கள் போன்றோரைக் கொண்ட ஆளும்வர்க்கம், நாட்டிலே என்ன நடைபெறுகிறது என்பதைக்கூட அறிவதற்கு வக்கில்லாத பொது உணர்வற்ற கல்வி மறுக்கப்பட்ட–பேரளவினரான பொதுமக்களும்; இவ்விருதரப்பினருக்கும் தொடர்பை அறுத்த ஆழ்ந்தகன்ற அரசியல்–சமூக இடைவெளியும்; அன்றும்–ஏன்–இன்றும் கூட மொழி–இன பண்பாட்டை உள்ளீடாகக் கொண்ட "தமிழ்த் தேசியம்" வளர்வதற்கெதிரான விந்தையான சில வரலாற்றுத் தடைகள்.

அரசியல் ஆதிக்கம், சமயச்செருக்கு, செல்வாக்கு, சமுதாய உயர்வு (வருணத்தில் மட்டுமல்ல, வருக்கத்திலும்) பெற்றுக்கொண்ட பார்ப்பனர் தம் மேலாண்மையை நிலைப்படுத்துவதற்காக, மக்களிடையே குலங்களையும் பாகுபாடுகளையும் மேலும் உருவாக்கினர். அதற்குச் சாத்திர, புராண, அமைதிகளும் காட்டப்பட்டன. பார்ப்பனர் உயர்ந்தோர், பூசுரர் என்று காட்டும் சமற்கிருத நூல்களையும் எழுதினர். பொருளியல் துறையில் பெரும் நிலப்பரப்புகளாகி அவற்றின் தனிநிருவாகத்தையும், தாமே அமைத்துக் கொண்டவர். அரசு அலுவலகங்களிலும், நிறுவனங்களிலும் முதன்மைபெற்றனர். அதற்கு அவர்தம் சமற்கிருதமொழி ஒரு வலிமை வாய்ந்த கருவியாகப் பயன்பட்டது. இம்மேல்மட்டநிலை, பாண்டிய, விசயநகரப் பேரரசுகளின் காலத்தில் மேலும் பரவலாக வளர்ந்து, ஆங்கிலேயர் காலத்தில் அரசு அலுவல்களையும், உயர் பணிளையும் கைப்பற்றி எல்லாத் துறைகளிலும் வல்லாண்மை செலுத்துவதற்குப் பெரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. அதன் மூலமாக ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்பே சோழப் பேரரசு காலத்தல் செயல்திறம் பெற்றுச் செப்பமடைந்து விட்டது.

www.tamilarangam.net



## பிறமொழியினரின் குடியேற்றம்

சோழர் காலத்தில் நிகழ்ந்த வேறோர் விந்தையான வரலாற்று வளர்ச்சி, வேற்று நாடுகளிலிருந்து வந்த பார்ப்பனர் மற்றும் அயல் மொழி மக்களின் குடியேற்றம். அதனை அடுத்துத் தொடர்ந்த எண்ணூறு ஆண்டுக் காலப்பகுதியல் பல்வேறு அரசு ஆட்சியிலும், இவ்வேற்று மொழியினர் குடியேற்றம் விரிவாகவும் தடையின்றியும் நீடித்தது. அவ்வேற்று மொழியின மக்கள் தமிழரோடு கலந்து வாழும் கணிடிதச் சூழ்நிலை சோழர் காலத்தில் உருவாகிப் பின்னர் வளர்ந்தது. காரணம், சோழப் பேரரசுக்குள், வேற்றுமொழி நிலப்பகுதிகளும் அடங்கியிருந்தன. அனைத்துப் பகுதிகளையும் மைய அரசு இயக்கியது. பல பொருளியல் வாய்ப்புக்களும், தமிழரின் அதே சமய, சாதிய, கலப்புப் பண்பாட்டை அம்மாற்று மொழியின மக்கள் கொண்டிருந்ததும் வேறு காரணங்கள். அன்றைய நிலையில் அவர்கள் மொழி வேறு. ஆனால் காலப்போக்கில் தமிழையே அவர்கள் தம் தாய்மொழியாக்கிக் கொண்டனர். வேற்றுமொழி பேசுவோர் தம்மொழியைப் போற்றாமல், தமிழையும் கலப்புத் தமிழ்ப் பண்பாட்டையும் ஏற்றுக் கொண்டு தமிழரிடையே பரவலாகக் கலந்து விட்டனர்.

மொழி என்பது மக்களை ஒருங்கிணைக்கும் ஒருவலிமையான உந்துவிசை தான். ஆனால் பல்வேறு வல்லாண்மையால் விசையொடிந்த தமிழ்மொழி, தாழ்நிலையைப் பெற்றுவிட்டது. இயங்காற்றலையும் இழந்து நின்றது. அத்துடன் சமூக அமைப்புகள் யாவும் அயல்வழித் தன்மையுடன் ஏற்றத் தாழ்வைக் கொண்டு இயங்கின. தமிழியத்திற்கு மாறானவையாகவும் மாறிவிட்டன. ஆட்சிநிலையில் முடியரசு இருந்ததால் மொழி அடிப்படையில் ஓர் இனம் என்ற கருத்தாக்கமும் கருக்கொள்ளவில்லை. மக்களும் சமுதாய ஒருங்கிணைப்பைப் பெறவில்லை. தமிழ் பண்பாடு என்பது அடையாளம் கண்டு கொள்ளமுடியாத அளவிற்கு, கலப்புப் பண்பாடாக உருமாறி விட்டது. இந்நிலையில் மொழி, இன, உணர்வுகள் தோன்றுவதற்கு வாய்ப்பேது?

## இசுலாம் மதத்தேசியம்

தமிழகத்தில் 14–15 நூற்றாண்டுகளில் பாண்டிய அரசு மேலோங்கி விளங்கியது பாண்டியர், தமிழகம் முழுவதையும் தம்மாட்சியின் கீழ் கொண்டுவரவில்லை. கொங்கு–சேரநாடுகள் தனியாட்சிகளை நடத்திவந்தன. எனவே தமிழ் மக்கள் அனைவரையும் ஓர் ஆட்சியின் கீழ் இணைக்கும் 'தமிழ்நாடு' அப்போதும் மலரவில்லை. அரசியல் ஒருங்கிணைப்பு அமைவதற்கும் வாய்ப்பேற்படவில்லை. மொழி, சமய, சமுதாயத் தளங்களில், சோழப் பேரரசின் தொடர் நிலையாகவே, பாண்டிய அரசும் செயல்பட்டது.

www.tamilarangam.net



கி.பி 1311–ஆம் ஆண்டில், மாலிக்காபூர் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான்-தமிழக வரலாற்றில் முதன் முறையாக மதுரை, இசுலாமியரிடம் வீழ்ந்தது. அப்போதைய மன்னனான வீரபாண்டியன் படையில் இடம் பெற்றிருந்த 20,000 முச்லிம் படைவீரர்கள் மத அடிப்படையில் துரோகமிழைத்து மாலிக்கபூர் படையுடன் சேர்ந்து கொண்டு பாண்டியனைத் தோற்கடித்து, இசுலாமிய ஆட்சியைத் தமிழகத்தில் நிறுவுவதற்கு முதற் காரணமாயினர்.

முச்லிம் மன்னர் ஆட்சி, 67-ஆண்டுகளே, தமிழகத்தில் நடைபெற்றிருந்தாலும், மொழி, இன, பண்பாட்டுப் புலங்களில், மிகப் பெரிய நிலையான எதிர் விளைவுகளைத் தந்து சென்றது. கலப்பு மொழியான உருது மொழி இலக்கிய மொழியாக உருவங்கொண்டது. ஆட்சி மொழி ஆயிற்று. தமிழ் மொழியில் உருது, அரபி, பார்சிச் சொற்கள் பெருவாரியாகப் புகுந்தன. தமிழகத்தில் முற்றிலும் வேறுபட்ட, மத அடிப்படையிலான வாழ்க்கை முறை, வழிபாடு, மொழி, ஒரு பிரிவினரின் தனிச்சமுக அமைப்பு புதிய பழக்க-வழக்கங்கள், மதப் பண்பாடு போன்றவை மொத்தத் தீவிரத்துடன் நடைமுறைக்கு வந்தன.

## மற்ற தமிழரின் தேசியம்

பாண்டியரை அடுத்துத் தோன்றிய விசயநகரப் பேரரசும் அதன் பின்னர் வந்த நாயக்க, மராட்டிய அரசுகளும் அயல் மொழியினர் அரசுகள. முந்தைய பேரரசுகளில் நிலை பெற்றிருந்த அதே சமய, சாதிய, சமுதாய, சமற்கிருத, பார்ப்பனிய மேலாதிக்க நிலைகள் மேலும் விரிவாக்கம் பெற்று நீடித்தன.

விசயநகரப் பேரரசு காலத்தில், ஆந்திரமும் கர்நாடகமும் தமிழ்நாடும் தனித்தனி ஆளுநர்களால் ஆளப்பட்டாலும், ஒரே மைய அரசின் கீழ் இருந்ததால், இன்றைய நிலையிலிருப்பதைப் போலவே, ஒருமொழியினர், மற்ற மொழிப்பகுதிகளில் குடியேறுவதற்கும் தொழில் செய்வதற்கும் தடையேதும் விதிக்கப்பட்டிருக்கவில்லை. தெலுங்கர்களும் கன்னடியரும் ஆட்சியாளரின் அரவணைப்புடன், ஆயிரக்கணக்கில் தமிழகத்தில் குடியேறினர். இவ்வகை மாற்று மொழியினர் குடியேற்றம் நாயக்கமன்னர், போசளர் காலத்திலும் தொடர்ந்து நடந்தது. மராத்தியர் காலத்தில் நூற்றுக்கணக்கானவர் - குறிப்பாக மராத்தியப் பார்ப்பனர் தஞ்சையிலும் தமிழகத்தில் ஆங்காங்கேயும் குடியேறினர்.

தொடக்கநிலையில் தெலுங்கு - கன்னட மொழிகளைத் தாய் மொழியாகப் பெற்றிருந்தவர், காலப்போக்கில் சில தலைமுறைகள் நிலையாகத் தமிழகத்தில் வாழ்ந்த பின்னர், அவர்தம் மொழிகளும் தமிழோடு கலந்து, எழுத்து முறையற்ற - பேச்சு வழக்கை மட்டும் கொண்ட - திரிபடைந்த மொழி எச்சங்களாகி, அவரவர் வீட்டளவில் மட்டும் இடம்பெறும் கலவைப் 'பேச்சு மொழியாக' (Dialect ) மாறிவிட்டன. பல நூற்றாண்டுகளாக

www.tamilarangam.net



வழிவழியாகத் தமிழ் நாட்டைத் தம் தாயகமாகவும் தமிழ் மொழியினைத் தம் மொழியாகவும் ஏற்றுக்கொண்டு, தமிழியத்துடனும் தமிழ்ப் பண்பாட்டுடனும் அவர்கள், இரண்டறக் கலந்து விட்டனர். மற்ற தமிழர்களைப் போலவே, தமிழ்த் தேசியத்தையே மையமாகக் கொண்டியங்குகின்றனர். சாதிகளினடிப்படையில் பாகுபாடுகள் உண்டே தவிர அவர்தம் வீட்டு மொழி நிலையில் மற்ற தமிழரிடமிருந்து அவர்கள் மாறுபட்டவர் அல்லர். தேசிய இன அடிப்படையில் அவர்களும் தமிழரே. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், பச்சைத்தமிழர் வேறு, மற்ற எச்சத் தமிழர் வேறு என்று தமிழ்ச் சமுதாயத்தில் மேலும் ஒரு செங்குத்தான பாகுபாட்டைப் புதிதாகத் தோற்றுவிக்க முயற்சிப்பது பாய்ந்தோடிய பெரு வெள்ளத்தில், ஒன்றிப் பிணைந்துவிட்ட மண்ணகப் பண்பைப் பிரித்தெடுப்பதைப் போன்ற பயனற்றதொரு வீண் முயற்சி. இனி வளர வேண்டிய தமிழ்த் தேசிய இன ஒற்றுமைக்கு எதிரான - வரலாற்றுக் காலங்களில் இல்லாத - இன்னுமொரு பெருந்தடையைப் பொருளற்ற அம்முயற்சி படைத்துவிடும். தமிழர் மேலும் பிளவுண்டு போய் விடுவர்.

## முழுத் தன்னுணர்வு பெற

இத்துணை வேற்றுமொழி, பண்பாடு, சமுதாய அழுத்தங்களும் தமிழ்த் தேசிய உணர்வைத் தடம் புரள வைத்தனவேயன்றி, அடியோடு அழித்தொழிக்க வில்லை. ஒவ்வோரு காலப் பகுதியிலும் தமிழ் இலக்கியங்கள், வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவிற்கு, மேன்மேலும் தோன்றி வளர்ந்து கொண்டே வந்துள்ளன. தமிழ் அறிவர்களும் வடமொழி, சாத்திர, சமய வல்லாண்மையையும்; வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் சாதியத்தையும் பிற்போக்கு நிலையையும் எடுத்து விளக்கி அவற்றை எதிர்த்தே வந்துள்ளனர் ; விந்தையான பல வரலாற்றுச் சூழ்நிலைகளினால் தமிழ்த் தேசியம் முழுமையாக தன்னுணர்வுடன் வளரவில்லை என்பது உண்மைதான். அது மங்கிக் கிடக்கிறது மறைந்து போய்விடவில்லை. தமிழினம் தேசிய இனமாக வளர்வதற்கு எதிரான "விந்தையான வரலாற்றுச் சூழ்நிலையைக் கடந்து, விழிப்புணர்ச்சி பெற்று, "முழுத்தன்னுணர்வுடன் எழுச்சி பெற, மேலும் சில நூற்றாண்டுகள் தேவைப்பட்டன.

☆☆☆

www.tamilarangam.net



# IV
# தமிழ்த் தேசியம் இன்று

## பழையன கழிதலும்

தமிழகத்தில் வெவ்வேறு அரசுகளின் கீழ் பல ஆண்டுகள் வாழ்ந்த மக்களையெல்லாம் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்து சேர்த்த வரலாற்று அமைவு ஆங்கிலேயர் வருகைக்குப் பின்பு தான் ஏற்பட்டது. என்றாலும் தமிழ் மக்கள், ஆந்திரர்கள், கன்னட மொழி மக்கள், கேரள மக்கள் இணைந்த சென்னை மாகாணம் என்ற ஓர் ஆட்சிப் பகுதியாக ஏறத்தாழ 150 - ஆண்டுகள் வரலாற்றில் நிலை பெற்று விட்டது. இருப்பினும் 'தமிழருக்கும் ஒரு நாடு 'என்ற தகுநிலை 19- ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து உருவாக்கம் பெற்றுவிட்டது.

அரசியல் அடிப்படையில் ஏதேச்சதிகாரமும் பொருளாதார அடிப்படையில் நிலப்பிரபுத்துவ முறையும் சமூக அடிப்படையில் சாதி, மத, தீண்டாமையும் ஒரு குலத்திற்கு ஒரு நீதி என்ற பாகுபாடும் ஏற்றத் தாழ்வு நிலையும் மத அடிப்படையில் சமற்கிருத வல்லாண்மை அமைப்புகளுடன் கூடிய வைதீகத் தாக்கமும் கொண்டிருந்த தமிழ்ச் சமுதாயம் 19 -ஆம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக மேலைநாடுகளின் தனித்தன்மை வாய்ந்த சிந்தனைகளையும் நடைமுறைகளையும் ஏற்று செயல் நிலையில் புதிய மாற்றத்தை நோக்கி விரைந்து நடைபோட்டது.

## புதியன புகுதலும்

மனுதரும சாத்திரத்தின்படி கல்வி, சூத்திரர்களுக்கும், தீண்டப் படாதவருக்கும் பல நூற்றாண்டு காலம் மறுக்கப்பட்டது. பார்ப்பனரே சாத்திர - சமற்கிருத - கல்வியில் முதன்மை பெற்றிருந்தனர். நவீன கல்வியமைப்புகள் தோன்றியவுடன் அவற்றை முற்றாகப் பார்ப்பனர் பற்றிக் கொண்டனர். பிரித்தானிய இந்திய அரசின் பொரும்பாலான நிர்வாகப் பதவிகளைத் தமதாக்கிக் கொண்டனர். அரசியலிலும் முதன்மை பெற்றனர். அறிவு நிலையான சுய தொழில்களிலும் முன் நின்றனர். பேரரசுகள் காலம் முதல் தம் வருண மரபு வழி அமைந்த கல்விச் சலுகைளைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவும் அரசியல் பொருளாதார உயர்வுகளைப் பெறவும், தம் இனத்தாரை மேலும் வளர்க்கவும் முனைந்து செயல்பட்டனர். சமற்கிருத மேலாண்மை அவர்களுக்குப் பெருந்துணையாக இருந்தது. ஆனால் கல்வி மறுக்கப்பட்ட மற்ற சாதியினரோ கல்வியிலும் பதவிகளிலும் தனித்த அறிவுத் தொழில்களிலும் பின்னடைவு பெற்றனர். ஆனால் அன்றிருந்த தாய் மொழி - சமுதாய விழிப்புணர்ச்சியினால் கல்வி, பதவிகள் போன்றவற்றின் இன்றியமையாமையை விரைவில் உணர்ந்தனர். வணிக வேளாண் வகுப்பினரும் பிற்பட்ட சாதியினரும் தத்தம் பல்லாண்டுகால குலத் தொழில்களிலிருந்து நீங்கி, ஆங்கிலக் கல்வி பெற சாதி மத வேற்றுமையின்றிப் பெருவாரியாக வரத் தலைப்பட்டனர். தமிழ், தமிழன

www.tamilarangam.net



விழிப்புணர்ச்சி மேலும் இருவகை ஆக்கக் கூறுகளைத் தந்தன. வடமொழியின் பாற்பட்ட - பார்ப்பனரால் கட்டுமானமாக நிலையாக்கப்பட்ட சமய மரபுச் சமுதாய அமைவுகளும், அதனைச் சாாந்திருந்த மரபுவழி வல்லாண்மையும் ஆட்டங் கண்டன.

அரசியல் அடிப்படையில் 'சட்டத்தின் ஆட்சி' என்ற கோட்பாடு, நவீன ஜனநாயக அறிவு, கட்டுக் கோப்பான அமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அதிகார வர்க்கம் பொருளாதார அடிப்படையில் முறைப்படுத்தபட்ட குறைந்த அளவினதான வேளாண் மற்றும் இதர சீர்திருத்தங்கள், தொழில் பொருளாதாரம் (Industrial Economy) சமூக அடிப்படையில் சமதத்துவச் சிந்தனைகள், வரையறுக்கப்பட்ட குடியுரிமைகள், அனைவருக்கும் சாதி - மத - பேதமில்லாமல் கல்வி கற்கும் சம வாய்ப்பு, மத அடிப்படையில் மனித நேயம், மொழி இலக்கியத் துறைகளில் புதிய பார்வைகள், பொதுவுடைமை, சம உடைமைக் கருத்துக்கள் போன்ற அரிய சிந்தனைகள் தமிழக மக்களின் கருத்தோட்டங்களில் ஊடுருவிப் பாய்ந்தன.

## தமிழ்த் தேசியக் கருநிலை

மொழி இனத் தேசியம் ஆக்கம் பெறுவதற்குரிய கரு நிலையாகத் 'தமிழ் மொழி வளர்ச்சியும் அதனூடே தழைத்த தமிழ் நாட்டுப் பற்றும்' தலையெடுத்தன. தமிழின மறுமலர்ச்சிக்கு வித்தூன்றியவர் மூவர். அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார், நீதிபதி வேதநாயகர், பேராசிரியர் சுந்தரனார்.

வள்ளலார் சமய அடிப்படையில் பார்ப்பனீயமும் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் ஆகியவையும் காரணங்கள் என்பதைக் கண்டு தெளிந்து அவற்றை எதிர்த்தார். அன்றைய வெகுமக்கள் மேற்கொண்டிருந்த இந்துக்கடவுளரை விடுத்து, வருணம், சாதி, முதலியவற்றிலிருந்து விடுபடுவதே 'இறை நெறி' என்றும் தமிழ் மக்களுக்குத் துணிவுடன் எடுத்து உணர்த்தினார். நீதிபதி வேத நாயகர் கல்வி, நிருவாகம், நீதி முதலிய துறைகளில் தமிழ் முதலியம் பெற வேண்டுமென்பதை வலியுறுத்தியும், பெண் கல்வியின் இன்றியமையாமையை எடுத்துரைத்தும், பாடல்கள், கீர்த்தனங்கள், புதினங்கள் போன்றவற்றை நவீன முறையில் இயற்றிப் பாமர மக்களுக்கு விழிப்பூட்டியும், தமிழின விழிப்புணர்ச்சிக்கு வழியமைத்தார்.

மனோன்மணியம் என்னும் புதிய நாடகக் காப்பியம், தமிழர் வரலாறு பற்றிய ஆய்வு போன்றவற்றால் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தமிழ் மக்களைத் தட்டி எழுப்பினார். கால்டுவெல் அவர்களின் திராவிட மொழிகளின் ஆய்வை மையமாக வைத்து தமிழரின் (திராவிடரின்) நாகரிகச் சிறப்பையும், தமிழ் மொழியின் தொன்மை, முதன்மை, செம்மை, இளமை ஆகியவற்றை ஆதாரங்களுடன் நிறுவினார். 'தமிழ்த்

www.tamilarangam.net



தேசியம்' துளிர்விட்டது. இம்மூவரும் எதிர்காலத் தமிழகம் செல்ல வேண்டிய தமிழ்த் தேசியப் பாதையை அமைத்துத் தந்தனர்.

தமிழ் மொழி இன விழிப்புணர்ச்சிக்கு ஜியு போப் போன்ற பல மேல் நாட்டினரின் பங்களிப்பு அளவிடற்கரியது. குறிப்பாக ராபர்ட் கால்டுவெல் அவர்கள் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் ஆராய்ந்தும் தமிழுடன் பல மொழிகளின் மூலங்களை ஒப்பீடு செய்தும் எழுதிய முதல் நூலான 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்', அவையனைத்தும் தனித்த திராவிட குடும்பத்ததைச் சேர்ந்தவை என்பதை அறிவியல் அடிப்படையில் நிலை நாட்டியது. அதுவரை தமிழ் மொழி, திராவிட மொழிகளின் தாய் என்பது அறியப்படாமலிருந்தது. ஒப்பிலக்கணத்தின் பின்னர் திராவிட நாகரிகம் என்பது பழந்தமிழ்ப் பண்பாட்டின் மூலம் என்பது ஏற்கப்பட்டது. இன்றைய தமிழகத்தின் மொழி உணர்வுக்கும் தமிழின எழுச்சிக்கும் அடிப்படைக் கருத்தோட்டமாகவும் எதிர்காலச் செயல் நிலைக்கு மூலவித்தாகவும் திகழ்ந்தது.

19, 20 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய தமிழ் அறிஞர்களின் முதல்நிலைக் கருத்துகளும் ஆய்வுகளும் அச்சாக்கப்பட்ட அரிய நூல்களும் வழங்கப்பட்ட தமிழியல் கோட்பாடுகளும் தமிழினப் பண்பாடு, மொழி, சமுதாய மறுமலர்ச்சிக்குக் கிளை வேர்களாக அமைந்தன. அன்றைய காலப் பகுதியில் தமிழினத்திற்கு விழிப்புணர்வு ஊட்டிய முன்னோடிகள், திரு குணா அவர்கள் கூறுவதைப் போல் 'திராவிடக் கொள்கையில் தங்களைப் புதைத்துக் கொள்ளவில்லை. அது முரணியத் தன்மையுமன்று. தமிழியத்தின் முதல்நிலைத் தன்மை; இயல்பான வரலாற்றியல் வடிவமைவு '. ஆனால் தமிழ்த் தேசியக் கருவோட்டத்தை உள் வாங்கிக் கொண்ட தமிழக வெகுமக்களுக்கான ஓர் இயக்கம் 1916 ஆம் ஆண்டு வரை உருவாகவில்லை. காரணம் பொதுமக்களில் படித்தவர்கள் மிகச் சிலர்; இயக்கம் காண்பதற்கு எதிரான அயல்நாட்டு அரசின் ஆதிக்கம் தீவிர விழிப்புணர்ச்சியின்மை அரசுப்பணிகளிலும் சமுதாயப் புலத்திலும் மொழியுணர்வற்ற சமற்கிருத அமைவுகளைப் போற்றும் பார்ப்பனிய உயர்நிலை, இயங்காற்றால் கொண்ட தலைமையின்மை போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

## எதிர் நீரோட்டங்கள்

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழின உணர்வுக்கு எதிரான இருவகை அரசியல், சமுதாய அடிநீரோட்டங்கள் வளர்ந்து பாய்ந்தன. பண்டைய இந்து வேதங்களையும் சாத்திரங்களையும் போற்றிய 'தெய்வ ஞான சபை' (Theosophical Society). இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டு, வேதங்களைத் தழுவிய 'இந்திய நாகரிகத்தை' முன்னிலைப்படுத்தியது. அதற்கு முன்பு இந்தியத் துணைக்கண்டத்தை அரசியல் பண்பாட்டு அடிப்படையில் இணைக்கும் கருத்துக்கள் உருவாகவில்லை. இந்து மத மறுமலர்ச்சிக்கு பேராக்கம் தந்தது

www.tamilarangam.net



உலகியத்தை எதிர்த்து பிற்போக்குச் சாதியச் சமுதாயத்தை மீண்டும் வலிவுடன் வளர்த்தது. இச்சபையில் பார்ப்பனர், பார்ப்பனரில்லாத வணிகப் பெருமக்கள் செல்வர்கள், அறிவுத் தொழில்களைச் செய்வோர், அரசாங்க அலுவலர்கள், உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் பெருவாரியாக இடம் பெற்றிருந்தனர். தமிழகத்தில் முதன்முதலாக அனைத்திந்திய நாட்டமைவுக் கோட்பாடு படித்தவர் பார்ப்பனர், செல்வரிடையே மெல்ல மெல்ல வலுப் பெற்றது.

பிரித்தானிய அரசுக்கெதிரான போக்கை அமைதிப்படுத்துவதற்காக தெய்வ ஞான சபையின் உறுப்பினரான ஏ.ஓ.ஹியூம் ஓர் அனைத்திந்திய அரசியல் அமைப்பை உருவாக்க முயன்றார். இந்தப் பின்னணியில 1885 ஆம் ஆண்டில் அனைத்திந்தியக் காங்கிரஸ் தோன்றியது. வெள்ளையர் வெளியேறிய போது காங்கிரசிலிருந்த முற்போக்காளர்களிடமே அதிகாரம் தரப்பட்டது. ஆனால் தீவிரத்தன்மை கொண்ட இந்து மத பிற்போக்காளர்களும் அரசியல் தீரவாதிகளும், வன்முறையாளர்களும் மிக முக்கிய பகுதியினராக இடம் பெற்றிருந்தனர். அவ்வப்போது அக்கட்சியின் உள்ளேயும் வெளியேயும் தத்தம் கோட்பாடுகளையும் செயல் முறைகளையும் நடைமுறையாக்க வலிவுடன் அழுத்தத்தைத் தந்தே வந்துள்ளனர். அன்றிருந்த சென்னை மாகாணக் காங்கிரசு முற்போக்கு இந்து மதத்தை மலர்விக்கப் பாடுபட்ட குழுக்களுடன் இணைந்து செயல்பட்டதேயன்றி, வெகுமக்கள் இயக்கமாக நடைபெறவில்லை.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் மொழித் தேசியக் கூறுகள் ஆழமாகக் கால் கொண்டிருந்தாலும், மத மாற்றத்தைத் தடுப்பதற்காக இந்து மத மறுமலர்ச்சிக்குத் துணை நின்ற உயர்சாதியினர் நிறைந்த பொது அமைப்புகளும், வேத இந்தியாவை நிர்மாணிக்கும் தெய்வ ஞான சபையின் தீவிரமும், பார்ப்பன - உயர்சாதிக்காரர்களுக்கு மட்டுமே இயங்கிய சென்னை மாகாண காங்கிரசும், செயற்கையான இந்திய தேசியத்தை உருவாக்க முனைந்த மற்ற அமைப்புகளும், புதிய பார்ப்பனிய அதிகார வர்க்கமும் தமிழ் தேசியக் கூறுகள் வளர்வதற்கு முற்றும் எதிராகச் செயல்பட்டன. இதனைச் சரியாகப் புரிந்து கொண்டால்தான், ஏன் பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் தோன்றி தமிழ்த்தேசிய (திராவிட) இயக்கமாக வளர்ந்தது என்பதையும் 'திராவிடக் குருதியின' அடிப்படையில் 'தமிழ்த் தேசியம்' பின்னால் தொடர்ந்து தழைத்தது என்பதையும் முறையாகத் தெளிய முடியும்.

## தன்னாட்சிப் பயிற்சிக்களம்

சாதிப்பிடிப்பையும் இந்து சமயப் பற்றையும் கடந்து இன, மொழி, உணர்வு மேலோங்கப் பெற்றவர் 'இன' அடிப்படையில் இயக்கமும் 'மொழி' ஏற்றமும் தேவை என்பதை உணர்ந்தனர். 1912 - இல் தோன்றிய

www.tamilarangam.net



பார்ப்பனரல்லாதார் அமைப்பான ‘சென்னை ஐக்கிய மன்றம’ அதன் அடுத்த ஆண்டிலேயே ‘திராவிட கழகம்’ என்ற பெயர் பெற்றது. அதன் செயலாளர் டாக்டர் சி.நடேசனார். தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர், போதிய முன்னேற்றம் அடையும் வரையில், படிப்படியான சுயாட்சி பெறுவதை அரசியல் குறிக்கோளாகக் கொண்டும் அனைத்துத் துறைகளிலும் மேலாண்மை செலுத்தி வந்த பார்ப்பன ஆதிக்கத்தை முறியடிக்கவும், இனஉணர்வை வளர்க்கவும் சமூக நீதி பெறவும் திரு. பிட்டி தியாகராயர், டி.எம் நாயர், கே.வி.ரெட்டி, கேசவபிள்ளை, நடேசனார் ஆகிய தலைவர்கள் ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை’ 1916-இல் ஏற்படுத்தினர். 1917-ஆம் ஆண்டின் ‘நீதி’ என்ற இதழைத் தொடங்கினர். எனவே இது ‘நீதிக் கட்சி’ என்ற பெயர் பெற்றது.

1917-ல் அமைக்கப்பட்ட மாண்டேகு - செம்ஸ் போர்டு குழு தந்த அறிக்கையின் அடிப்படையில் ‘1919ம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம்’ நிறைவேற்றப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களால் அமைக்கப்பட்ட அமைச்சரவையும் ஆளுநரால் நியமிக்கப்பட்ட நிர்வாகிகளின் அவையும் (Councils) சேர்ந்து இரட்டையாட்சி முறையில் மாகாண நிர்வாகங்கள் நடைபெற அச்சட்டம் முதன் முதலாக வழி வகுத்தது. 1916 ஆம் ஆண்டின் நீதிக்கட்சியின் அறிக்கையை மையமாக வைத்து, 1920 ல் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி வென்று அமைச்சரவையை அமைத்தது. கலப்பு மொழித் தேசிய இனங்களுக்குத் தரப்பட்ட குறுகிய மாகாணத் தன்னாட்சி உரிமைகளைப் பயன்படுத்தி 1920 முதல் 1936 முடிய 16 ஆண்டுகள் வளத்தோடு செயல்பட்டது 1920 ஆம் ஆண்டு முதல் ‘சுய நிர்ணய உரிமை’யின் தொடக்கநிலையான ‘இந்திய அரசுக்கள்ளேயே முழு மாநிலத் தன்னாட்சி’யையும் கோரி வந்தது. இவ்வகையில் சென்னை மாகாண மக்கள் நிர்வாகத்தில் பங்கேற்கும் முதல் ‘பயிற்சிக்களத்தை அமைத்துக் கொடுத்தது’ என அதனைக் கூறலாம்.

## தமிழ்த் தேசியக் கூறுகளின் வளர்நிலை

காங்கிரசைச் சாராத அன்றைய சில தமிழகத் தலைவர்களின் கருத்து விளக்கங்களில் தன்னுரிமை பெறும் மொழிமாநில ஆக்கமும் மையத்தில் மெய்யான கூட்டாட்சி அமைவும் தெறிக்கின்றன. திரு. சி சங்கரன் நாயர் அவர்கள், அன்றைய தில்லி ‘மாநிலங்களவையில் (Councils of States) 15.3.1926 இல் உரையாற்றியபோது’ தமிழ் பேசுகின்ற மரபினத்தவர் வாழ்கின்ற பத்து மாவட்டங்களை முழுமையான தன்னாட்சியைக் கொண்ட ஒரு மாநிலமாக கட்டமைப்பதற்கும் அதற்குத் தனி நிலப்படை, கடற்படை, வான்படை வைத்துக் கொள்ளும் உரிமை பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு இந்திய அரசு ஆங்கிலப் பேரரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும் என்று முழங்கினார்.

www.tamilarangam.net



காங்கிரசின் சுயராஜியக் கட்சியைச் சார்ந்த டாக்டர். பி. வரதராசுலு நாயுடு அவர்கள் 'ஒன்றியத் தமிழ் இந்திய நாட்டைத் தோற்றுவிக்கவும், வளர்க்கவும்' ஓர் அமைப்பை 9.10.1926 இல் தொடங்கினார் எனப்படுகிறது. பார்ப்பனரை எதிர்க்காமலேயே ஆங்கிலேயருடன் போராடிக் கொண்டே திராவிடர் நலனைப் பேண முடியும் எனக் கருதிய வ. உ. சிதம்பரனார், திரு.வி.க, வரதராசுலு நாயுடு, ஆகியோர் 1917 இல் 'சென்னை மாகாண சங்கத்தை' அமைத்தனர். பட்டு கேசவப் பிள்ளை அதன் தலைவர், தந்தை பெரியார் அவர்கள் அதன் துணைத் தலைவர். நவசக்தி ஏட்டைத் தொடங்கிய தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாண சுந்தரனார் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்பன பற்றிய தெளிவான கருத்தாக்கத்தை வலியுறுத்தியும் மொழியால் இனமும், இனத்தால் நாடும், அமைவுறுகிற மொழித் தேசியப் பரிணாமத்தை விரிவாக எடுத்துக் காட்டியும் பல நூல்கள் எழுதினார். மறைமலை அடிகள் தனித்தமிழை இயக்கம் ஆக்கினார் இவை அனைத்தும் 19 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து தொடங்கிய தமிழ் உணர்வின், தமிழின விழிப்புணர்ச்சியின், தமிழ்த் தேசியக்கூறுகளின் வளர்ச்சி நிலை எனலாம்.

## தேசியக்கூறுகளின் எதிர்நிலை

தமிழ்த் தேசியத்தைப் பற்றிய சரியான கருத்துக் கணிப்பினைப் பெற வேண்டுமென்றால் 1920 முதல் 1945-ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் சென்னை மாகாணத்திலும் இந்திய அளவிலும் நிலவிய சில அரசியல், சமுதாய, மொழி, இன நிலைமைகளை தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். 1906-ஆம் ஆண்டிலிருந்து 1930 சனவரி 26 வரை விடுதலை இயக்கத்தால் 'பூரண சுயராஜ்ஜியம்' கோரப்படவில்லை. வெள்ளையர் ஆட்சியில் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்போரும், அவ்வகை அமைப்புகளைச் சார்ந்தோரும் கடுமையான அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டனர். எனவே 'டொமினியன் தகுதி' பெறுவதுதான் சுயராஜ்ஜியத்திற்கு உரிய அன்றைய செயல் திட்டமாகக் கருதப்பட்டது. அன்று இருந்த அகில இந்தியக் கட்சிகளில் பொது உடைமைக் கட்சி தொடக்க வளர்ச்சி நிலையில் இருந்தது. சிற்சில பகுதிகளில் மாகாணக் கட்சிகள்; வேறு பெரிய அகில இந்தியக் கட்சிகள் வளரவில்லை. முஸ்லீம் லீக் கட்சி அகில இந்திய மட்டத்தில் காங்கிரஸிற்கு எதிராக வலிமையுடன் திகழ்ந்தது. மத அடிப்படையில் மாகாண முழுத்தன்னாட்சியையும் வலிவற்ற மையத்தையும் முஸ்லீம் லீக் கோரி வந்தது. அந்நிலையில் பண்டித மோதிலால் நேரு அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட 'நேரு குழு' 1928 ஆம் ஆண்டில், எதிர்கால இந்திய அரசமைப்பைப் பற்றித் தந்த அறிக்கையில் பன்மொழி இன மாகாணங்களின் அரைகுறைத் தன்னாட்சியும் வலிவான மைய அரசும் இடம் பெற்றன. மொழி வழி மாநிலங்கள் கூட அதில் இல்லை. முஸ்லீம் லீக் அதனை எதிர்த்து, எஞ்சிய அதிகாரங்கள் உட்பட முழு மாநிலத் தன்னாட்சியைக்

www.tamilarangam.net



கோரியது. விளைவு, இந்து முஸ்லீம் சிக்கல் வளர்ந்தது. இந்தியச் சுதந்திரம் என்பது நடைமுறையில் நிகழுமா? என்ற உறுதியற்ற நிலை. காங்கிரசின் போராட்டங்களைத் தவிர, பன்மொழி மக்கள் கொண்ட மாகாணங்களின் அரசியல் தேட்டங்கள், வெறும் மொழி வாரி மாநிலக் கோரிக்கைகள் மட்டுமே. மொழித் தேசியங்கள் வளரவில்லை. அதனை முற்படுத்தும் வலிவான மக்கள் இயக்கங்களும் தோன்றவில்லை. 'நாட்டுப் பிரிவினை' அல்லது 'சுயநிர்ணயம்' என்பவை தலைதூக்கவில்லை. காங்கிரஸ் கட்சியோ இந்திய நாட்டை மொழி - இன - அடிப்படையில் காணாமல் இந்திய தேசீயத்தையே வலியுறுத்திற்று. மொழி - இனத் தேசியஅடிப்படையில் அதனை இயக்க ரீதியில் லீக் தவிர வேறு எந்த அமைப்பும் எதிர்க்கவில்லை.

## தமிழ்த் தேசிய (திராவிட) இயக்கம்

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தான் சென்னை மாகாணத்தில் தமிழ்த் தேசியத்தின் 'பண்புக்கூறுகளை' வெளிப்படுத்தி, தமிழ்த்தேசிய இனமாக மலர்வதற்குரிய 'ஆக்க வளக் கூறுகளை', நடைமுறையில் வளர்த்த இயக்கம் தந்தை பெரியார் தலைமையில் இயங்கிய திராவிட இயக்கம் என்றால் மிகையாகாது. தந்தை பெரியார் 1919-இல் காங்கிரசில் சேர்ந்து, 1922-இல் பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தனி ஒதுக்கீடுகள் கேட்டு, 1924-இல் வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு, காங்கிரஸ் பிராமணர்களின் பாசறை, அதில் சாதிய ஒழிப்புக்கு இடமில்லை என்பதை உணர்ந்து, அதனை விட்டு வெளியேறி, 'தன்மான இயக்கத்தைத்' தொடங்கினார். 'பகுத்தறிவைப் பயன்படுத்தி சிந்திக்க வேண்டும். அச்சிந்தனை முடிவுகளை செயற்படுத்த வேண்டும். சாத்திரம், வேதம், கடவுள், மதம் போன்ற அனைத்தும் மனிதனால் கற்பிக்கப்பட்டவை பகுத்தறிவைத் தடை செய்கின்ற, மனித உரிமைகளைத் தகர்க்கின்ற அவற்றை ஒழிப்பது, மானுடத்தின் நல்வாழ்விற்கு இன்றியமையாதது' என்பதே தன்மானக் கொள்கையின் அடித்தளம்.

தமிழ்இனம் என்பது தனியினம் என்பதை திராவிட இன, நாகரிக, வரலாற்றடிப்படையில் உணர்த்தி, தமிழ்த் தேசிய இனம் 'இந்து' 'இந்தியா' என்ற இருவகையான அடிமைத் தளைகளால் கட்டுண்டு கிடப்பதை மெய்ப்பித்து, அவற்றிலிருந்து விடுதலை அடைவதையே 'தன்மானம்' என விளக்கினார். 'தமிழன் தன்னை 'இந்தியன்' என்று கருதியதால் தமிழ்நாட்டையும், வீரத்தையும், கலையையும், நாகரிகத்தையும் மறந்தான். தமிழன் தன்னை 'இந்து' என்று கருதியதால் தனது மானத்தையும் ஞானத்தையும் பகுத்தறிவையும் உரிமையையும் இழந்தான். இப்போது தமிழன் 'இந்தியன்' என்பதையும் 'இந்து' என்பதையும் மறப்பதன் மூலமாகவே, அக்கட்டுகளிலிருந்து விடுபடுவதாலேயே, தான் இழந்தவற்றிற்கு ஒரு காலத்தில் உறைவிடமாக இருந்தவன் என்பதை உணர்வான்'.

www.tamilarangam.net



1930-ஆம் ஆண்டிலேயே தந்தை பெரியார் அவர்கள் இந்தியா என்ற நிலப்பரப்பு ஒரு நாடல்ல. பல தேசிய இனங்கள் வாழும் துணைக்கண்டம் என்பதைத் தெளிவுபடுத்தினார். ‘இந்தியா’ ஒரு நாடல்ல. பல மொழிகள், இனங்கள், சாதிகள், மதங்கள் கடவுள்களைத் தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கும் ஒரு பொருட்காட்சி சாலை’ என்று கூறினார்.

மீண்டும் 19.9.1937-இல் ‘தமிழ்நாடு ஒரு தனிநாட்டினத்தைக் கொண்ட நாடு அதற்குப் பெயர் திராவிடம். தமிழரின் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் மற்ற வட்புல மொழியினரிடமிருந்து வேறுபட்டவை. இதனை நான் 1921-லிருந்து - காங்கிரசில் இருந்த போதிருந்தே - சொல்லி வருகிறேன். எவ்வகையாலேனும் எந்த அடிப்படையிலேனும், வட இந்தியாவிலிருந்து நமது அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொண்டாலன்றி தமிழனத்திற்குச் சுதந்திரமும் இல்லை, தன்மானமும் இல்லை’.

தந்தை பெரியார் அவர்கள் திராவிடம் என்று குறிப்பிடும்போது ‘தமிழ் இனம்’ என்ற ஆழ் பொருளையே உணர்த்தியே வந்தார். ஆனால் 150 ஆண்டுகளுக்கும் மேலாக நிலைபெற்று விட்ட அன்றைய சென்னை மாகாணம் என்ற ஆட்சிப் பகுதியில் பிற திராவிட மொழி பேசுபவரை உள்ளடக்கியே இயக்கம் நடத்த வேண்டியிருந்தது. நீதிக் கட்சியின் மரபும் அதனைச் சார்ந்தே அமைந்தது. எனப் பேராசிரியர் கு.வெ.கி. ஆசான் அவர்கள் விளக்கினார். திராவிடம் என்ற சொல்லாக்கம் வரலாற்றுக் காரணங்களினாலேயன்றி தமிழ், இன மொழி, மரபைத் தாழ்த்தி அல்லது புறந்தள்ளி மற்ற மொழியினத்தினரை தாங்குவதற்கல்ல என்று அனைவருக்கும் புரியும்.

## தமிழ்நாடு தமிழருக்கே

1937ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் முதன் முதலாக மூதறிஞர் இராசாசி அவர்களின் தலைமையில் காங்கிரசு ஆட்சி அமைந்தது. 30.3.1938-இல் சென்னை மாகாணத்தை மொழி வழியில் பிரித்திட வேண்டுமென்ற தீர்மானத்தைச் சட்ட மன்றம் இயற்றியது. அதனையே கூட அரசுச் செயலரான செட்லாந்து கோமகன் கடுமையாக எதிர்த்தார். காங்கிரசின் ‘நிர்மாணத் திட்டங்களை’ நடைமுறைப் படுத்துவதாகக்கூறி சென்னை மாகாணப் பள்ளிகளில் கட்டாய இந்தி நுழைக்கப்பட்டது. அந்நிலையில் தான் தமிழ்த் தேசியம் வெளிப்பட்டுச் சிலிர்த்து எழுந்தது. தந்தை பெரியார் தலைமையில் இந்தி எதிர்ப்புப் போர் மூண்டது. 11.9.1938-இல் சென்னை கடற்கரையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கேற்ற பொதுக் கூட்டத்தில் தான் பெரியார் அவர்கள் ‘தமிழ் நாடு தமிழருக்கே’ என்ற எதிர்கால நடைமுறைத் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை முன் வைத்தார். பின்னர் 23.10.1938-

www.tamilarangam.net



இல் வெளியான 'விடுதலை' யின் அறிக்கையில் அதன் விளக்கத்தைத் தெளிவாக்கினார். 'தமிழ் நாட்டுக்கு பூட்டப்பட்ட விலங்கை சுக்கு நூறாக்குங்கள்' என்ற வேண்டுகோளை தமிழ் மக்கள் முன் வைத்தார். மத அடிப்படையில் பாகிஸ்தான் பிரிய வேண்டுமென்ற (23.3.1940) தீர்மானத்திற்கு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக்கு முன்பே தமிழ்த் தேசியத்தின் அடிப்படையில் ' தமிழ் நாடு தமிழருக்கே 'என்ற முழுத்தன்னுரிமை முழக்கம் இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்தில்தான் எழுந்தது. பெரியார் அவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அக்கட்சியை விடுதலை இயக்கமாக மாற்ற எல்லா முயற்சிகளையும் மேற் கொண்டார். 1940 -இல் ஜின்னா அவர்களும் 1942 -இல் இராசாசி அவர்களும் அதனை ஆதரித்தனர். இராசாசி அவர்கள் கருத்து தெரிவித்தபோது, 'தமிழர்கள் தமிழ்நாட்டை ஆளவேண்டும் என்று சொல்வதில் தவறில்லை. தமிழ்நாட்டின் 1/4 பங்கு பரப்பளவு உள்ள அயர்லாந்தை ஈமன் டிவைரலா ஒரு தனி நாடாக ஆளும்போது தமிழ்நாடு ஏன் தனித்து இயங்காது 'என்றார் 29.4.1942 -இல் அலகாபாத் காங்கிரஸ் காரியக் குழுவில்' வட இந்திய விடுதலை இயக்கத் தலைவர்களால் சென்னை மாகாணம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதால் இந்திய துணைக் கண்டத்திலிருந்து சென்னை மாகாணமும் பிரிவினை செய்யப்பட வேண்டும்' என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். காங்கிரஸ் மாநாட்டிலும் முன் வைத்தார். கடுமையான கண்டனங்களுடன் அவர் வெளியேற்றப்பட்டார்.

தனித்தமிழ்நாடு இயக்கம் 1938 -முதல் 1944 -ஆகஸ்ட் வரை தொடர்ந்து வீரியத்துடன் நடைபெற்றது. பின்னர் மொழியின அடிப்படையில் பிரிந்தும், குருதியின அடிப்படையில் கூட்டாட்சியில் இணைந்தும் அமைக்கப்படுகின்ற 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கோரிக்கையாக இருந்தாலும் பின்னர் ஏறத்தாழ 20 -ஆண்டுகள் தமிழ்த்தேசிய இனத்தின் தன்னுரிமைகோரும் விடுதலை இயக்கமாக வீறுடன் வளர்ந்தது. 1949 -செப்டம்பர் 17 -இல் தி.மு.கழகம் தோன்றியது. முந்தைய கோரிக்கையில் நிலவிய பார்ப்பனீய மற்றும் மதஎதிர்ப்பு நீங்கலான அரசியல், பொருளியல், மொழி, இன உரிமைகளைப் பெறுவதற்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஓர் அரசியல் கட்சியாக தொடர்ந்து தீவிரத்துடன் பணியாற்றியது.

## தி.மு.கழகமும் தமிழ்த்தேசியமும்

தமிழ் மக்களை குருதியினம் என்ற அடிப்படையில் 'திராவிடர்' என்றும் தேசிய இனம் என்ற வகையில் 'தமிழர்' என்றும் தி.மு.கழகம் எடுத்துக்காட்டி; தமிழர் வரலாறு, பண்பாடு தன்னுரிமைகள் போன்றவற்றை நிலைநாட்டி மொழி இனத் தேசியத்தைத் தட்டியெழுப்பி,

www.tamilarangam.net



தமிழகம் தன்னாட்சி பெறுவதற்கான பின்னணிகளைப் படைத்தது. திராவிட நாடு கோரிக்கையைப் பெயரளவில் கூறி வந்தாலும் படக் காட்சிகள். கிழமை, மாத இதழ்கள், கவிதைகள், இலக்கியங்கள், கலைகள், பொதுக் கூட்டங்கள் போன்ற பொது மக்களின் அனைத்துச் செய்திச் சாதனங்கள் மூலமாக தமிழ்த் தேசியத்தையே வளர்த்தது.

1956-ஆம் ஆண்டில் ஆந்திர, கேரள, கர்நாடக பகுதிகள் நீங்கிய தமிழ்த் தாயகம் மலர்ந்தது. தமிழ்த் தேசியமும் எழுச்சி பெற்றது. அதனைத் தடுக்க 1961-ம் ஆண்டில் மைய அரசு பிரிவினை தடைச் சட்டத்தை இயற்றி நடைமுறைப் படுத்தியது. தி.மு.கழகம் பிரிவினையைக் கை விட்டது. அதன் காரணங்களை கைவிடவில்லை. அக்காரணங்கள் வேறு ஏதும் அல்ல தமிழ்த் தேசிய இனம் முற்றான தன்னாட்சி பெறுவதற்குரிய அரசியல், அரசமைப்பு, பொருளியல், மொழி, பண்பாட்டுக் காரணங்களேயாம். 1963-ம் ஆண்டிலிருந்து தமிழகம் முழுமையான தன்னாட்சி பெற வேண்டும் . மைய அரசு மெய்யான கூட்டாட்சியாக மலர வேண்டும் என்ற நடைமுறைக் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது . 1965-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போர் மத்திய வல்லாட்சியை எதிர்த்த முதல் தமிழ் தேசியப்புரட்சி. தமிழ்த்தேசிய இனம் தன்னுரிமை பெறுவதற்கு முதற்படியாக 9.8.1969-இல் 'மைய மாநில ஆய்வுக் குழுவை' நீதியரசர் இராசமன்னார் தலைமையில் டாக்டர் கலைஞர் அவர்கள் அமர்த்தம் செய்தார். அக்குழு தந்த அறிக்கையின் அடிப்படையில் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள், போக்குவரத்துத் தொடர்புகள், நாணயச் செலாவணி ஆகிய தேசிய நலத்துக்குறிய அதிகாரங்களை மைய அரசு பெற வேண்டும்; எஞ்சிய அதிகாரங்கள் உட்பட அனைத்து அதிகாரங்களையும் மாநிலங்கள் பெற வேண்டும்' என்ற வரலாற்றுச்சிறப்பு மிக்க தமிழ்த் தேசிய இன மாநில தன்னாட்சித் தீர்மானம் இந்தியாவிலிலேயே முதன்முதலாக 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டின் சட்டப் பேரவை மேலவைகளில் தி.மு.க. அரசால் நிறைவேற்றப்பட்டது. அதன் காரணமாக-வேறு குற்றச்சாட்டுகளைக்கூறி அந்த அரசும் 1976-இல் கலைக்கப்பட்டது.

## தமிழ்த் தேசியத்தின் தேக்கம்

1938-ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து தமிழக வரலாற்றுப் போக்கில் வளர்த்த தமிழ்த் தேசியம் 1976-ஆம் ஆண்டிலிருந்து, பின்னடைவைப் பெற்றது. இந்திய அளவில் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட அரசியல் அழுத்தங்களும், தமிழகத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும், அதற்கு மூல காரணங்கள் எனலாம். இந்திராகாந்தி தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின் சில ஆண்டுகளில் சர்வாதிகாரப் போக்குகள் நடை முறைக்கு வந்தன. மொழித் தேசியம் வளர்வதற்கும் , காங்கிரஸை ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்கி, மாநில மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும், செயல்பட்ட மாநிலக் கட்சிகளை

www.tamilarangam.net



அழிப்பது அல்லது பிளப்பது என்ற கொள்ளையைக் காங்கிரசுக் கட்சி கடைப்பிடித்தது அதற்கேற்றவகையில் நடுவண் அரசின் பல துறைகளையும் அமைப்புக்களையும் இயக்கலாயிற்று. 1972-ஆம் ஆண்டின் இறுதியில் தமிழ்த் தேசியத்தை வளர்த்து எழுச்சி பெறச் செய்த திமு. கழகத்தை திரு. எம்ஜி.ஆர். மூலமாக இந்திராகாந்தி இரண்டாகப் பிளந்தார். கொள்கையும் குறிக்கோளுமற்ற அதிமுகழகம் காங்கிரசு மைய அரசின் வாழ்த்துக்களுடன் தோற்றமெடுத்தது. மைய - மாநில உறவுகளில் பெருமாற்றங்கள் நிகழ்ந்தன.

1975-ஆம் ஆண்டு, சூன் 25-ஆம் நாளில் 'நெருக்கடி நிலை' நடைமுறைக்கு வந்தது. அரைகுறைக் கூட்டாட்சியும் மறைந்து, சர்வாதிகார ஆட்சி தோன்றியது. தி.மு.கழகம் அதனை முழுமுச்சுடன் எதிர்த்தது. மைய அரசின் ஆணைகளை நிறைவேற்ற மறுத்தது. ஏழு மாதங்களில் அரசு கலைக்கப்பட்டது. மத்திய ஒற்றையாட்சியின் அடக்கு முறை தாண்டவமாடிற்று. பின்னர் 1977-இல், ஆட்சிக்கு வந்த அ.தி.மு. கழகம் மைய அரசுக்கு இயைந்த வகையில் சந்தர்ப்பவாத உறவைக் கொண்டு இயங்கியது. அவ்வப்போது, தெளிவில்லாமல் "மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்" என்ற கூக்குரலை மட்டும் தன்னை அடையாளம் காட்டிக் கொள்வதற்காக எழுப்பி வந்தது. 1983-ஆம் ஆண்டின் இறுதியில் "தமிழ்த் தேசியத் தன்னுரிமைக்" கெதிரான நிலைபாட்டையும் மேற்கொண்டு, முழுமாநிலத் தன்னாட்சியையும் கைவிட்டு, "மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும்" என்றதீர்மானத்தைத் தமிழகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றியது. கவர்ச்சிக்கு ஆட்பட்டிருந்த தமிழ் நாட்டு மக்களைத் 'தமிழ்த் தேசியம்' நோக்கிச் செலுத்தாமல் அ.தி.மு.க. அரசு திசை திருப்பிவிட்டது. தி.மு. கழகமும் ஆட்சியைப் பெறுவதற்கு முனைந்தது. தமிழ்த் தேசியத்தில் தேக்கம் ஏற்பட்டது.

1983-ஆம் ஆண்டின் மைய அரசால் நீதியரசர் சாக்காரியா தலைமையில் அமைக்கப்பட்ட "மத்திய - மாநில உறவுகள் ஆணைக்குழு தந்த அறிக்கையும் இராசீவ் அரசால் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. மைய அரசின் ஒற்றையாட்சிப் பேரரசுகள் தமிழகத்திலும் மேலும் வலிவுடன் தொடர்ந்தன. அன்றிருந்ததை தமிழக அரசோ, 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்' என்பதையும் கூடக் கைவிட்டு விட்டது.

## தமிழ்த் தேசியத்தின் மலர்ச்சி

நீறு பூத்த நெருப்பாகவிருந்த 'தமிழ்த் தேசியத்தை', எரிதணலாக்கிய திருப்புமுனை, "தமிழ் ஈழம்". திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநிலத்தன்னாட்சித் தீர்மானத்தில் இடம் பெற்றிருந்ததைப் போன்ற முழுமாநிலத் தன்னாட்சியை மட்டுமே, தொடக்கத்தில் ஈழத் தமிழர் கோரி வந்தனர். அது மறுக்கப்பட்டதால், விடுதலை வேட்கையைப் பெற்று, வீரப்புலிகளாகி, "தமிழ் ஈழம்" என்ற தனிநாடு வேண்டினர். அது போராட்டமாக மாறி, புரட்சியாக வெடித்தது, இறுதியில் பனிப்

www.tamilarangam.net



போராகிவிட்டது. மொழித் தேசிய இனங்களுக்குரிய – தன்னுரிமையை நல்கும் 'முழுமாநிலத் தன்னாட்சி' மறுக்கப்பட்டால், இறுதிவிளைவு 'தனியாட்சியே' என்பது, இந்திய, பாகித்தானிய, இலங்கை வரலாறுகள் தரும்பாடம். ஈழத் தமிழரின் வீரமும், தியாகமும், தேசியமும், தமிழ்நாட்டில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. ஈழத் தமிழரின் போராட்டத்திற்கு தமிழரும் பேராதரவு தந்தனர். தமிழ் நாட்டில் 'தமிழ்த் தேசியம்' மறுமலர்ச்சி பெற்றுள்ளது. இந்திய நாட்டின் தமிழ் மக்களின் உணர்வை, மொழித் தேசியத்தை மதிக்காமல், "இந்திய அமைதிப் படையை" இலங்கைக்கு அனுப்பி, தமிழ் இன அழிப்பற்கு இந்தியஅரசு துணை நின்றது. அதனால் இந்திய அரசு, தமிழினத்திற்கே எதிரானதோர் அடக்குமுறை அரசு என்பதை, இந்தி எதிர்ப்புப் புரட்சிக்குப் பின்னர், இரண்டாம் முறையாகத் தமிழ் மக்கள் தெளிவாக உணர்ந்தனர். மக்கள் உளவாளிகளில் மைய அரசுக்கு எதிரான மாறாத வெறுப்புணர்ச்சியும், எதிர்நிலைப்போக்கும் வளர்ந்து விட்டது. 'தமிழ்த் தேசியம்' உசுப்பிவிடப்பட்டதால், 'தனித் தமிழ்நாடு' கோரும் அமைப்புகளும், 'சுயநிர்ணய உரிமையை' நடைமுறையாக்கக் முயலும் தீவிரவாத குழுக்களும், தமிழகத்தில் தோன்றி இயங்குகின்றன. அவை தமிழக மக்களால் ஒத்திவைக்கப்பட்ட பிரிவினைக் கருத்துக்களுக்கு மீண்டும் புதிய வடிவம் தந்துள்ளன. 1991-ஆம் ஆண்டின் இடைப்பகுதியிலிருந்து 1996-ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்த நரசிம்மராவ் மைய அரசும் அ.தி.மு.க. தமிழக அரசும் வற்றாத ஊழல் அரசுகள். அவை வரலாறு காணாத அளவிற்குத் தமிழ்மக்களை அனைத்துப் புலங்களிலும் தாழ்வடையச் செய்தன. 'தமிழ்த் தேசியம்' கூர்மையடைந்தது. எதிர்விளைவுகளால் ஊட்டம் பெற்றது.

## புதிய ஊழி

1996-ஆம் ஆண்டு 'மே' திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில், 'தமிழ்த் தேசியம்' பேரெழுச்சி பெறுவதற்கியைபான, புரட்சிகரமானதோர் அரிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. இன்றைய மொழித் தேசிய இனங்களின் சிக்கல்களுக்கு மூலகாரணமான வலிமையான மைய அரசையும், உரிமையற்ற மாநில அரசுகளையும் உருவாக்கிய அரசமைப்பையும், அதனை நடைமுறைப் படுத்தும்போது முற்றுமே ஒற்றையாட்சியாக மாற்றிவிட்ட மோசடியையும் தன் ஆதிபத்தியக் கருவிகளாக்கிக் கொண்ட காங்கிரஸ் கட்சி, பல மொழி இன மாநிலங்களில் மிகப் பெரிய தோல்வியை அடைந்தது. எந்த ஓர் அனைத்திந்தியக் கட்சியும் நடுவணில் ஆட்சி அமைக்கும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. பாரதிய ஜனதாக் கட்சியின் 'இந்துத்துவம்' மக்களால் ஏற்கப்படவில்லை. மொழித் தேசியத்தையும், மாநில மக்களின் நலன்களையும் உரிமைகளையும் முன்னிலைப்படுத்தி, செயலாற்றி வந்த மாநிலக்கட்சிகளை மக்கள் ஆட்சியில் அமர்த்தினர்.

www.tamilarangam.net



இயற்கையான 'மொழி வழித்தேசிய' செயற்கையான 'மதவழித் தேசியத்தையும்,' திணிக்கப்பட்ட "பாரதத் தேசியத்தையும்" வெற்றி கொண்டது.

மாநில மக்களின் கோருருமைகளைச் செயல்படுத்துவதாக உறுதிகொண்ட, சில புதிய மாநிலக் கட்சிகளும் முளைத்துள்ளன. வருங்காலத்தில் மாநில மக்களின் தன்னுரிமை எழுச்சிக்கு இணக்கமான வகையில் மட்டுமே மத்திய அரசை நடத்த முடியும் என்ற நிலை முதன்முதலாகத் தோன்றியுள்ளது. மாநிலக்கட்சிகளை அடியொற்றித்தான் அனைத்திந்தியக் கட்சிகள் இயங்க வேண்டிய நிலையும், மாநிலக்கட்சிகளின் ஆதரவில்லாமல் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறமுடியாத சூழலும், ஆட்சியை அமைக்க முடியாத கையறு நிலையும் மொழித் தேசிய எழுச்சியில் புதியதொரு திருப்புமுனையைப் படைத்துள்ளது. ஏறத்தாழ 36 கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட இன்றைய நாடாளுமன்றத்தில், தமிழ்த் தேசியத்தை மையப்படுத்திச் செயலாற்றிய தி.மு.க, ஆந்திரத்தின் தெலுங்கு தேசக்கட்சி, பஞ்சாப்பின் அகாலிதளம், அஸ்ஸாமின் கனதந்திர பரிஷத், தமிழ்நாட்டுக்குத் திரும்பிய தமிழ் மாநிலக் காங்கிரஸ் போன்ற மாநிலக்கட்சிகளுடன் இணைந்தே, அனைத்திந்தியக் கட்சிகள் மையத்தில் ஐக்கிய முன்னணி ஆட்சியை அமைத்துள்ளன. விளைவு, நடுவண் அரசின் அதிகாரக் குவிப்புக்கும், மாநில உரிமைகள் பறிபோவதற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. மாநிலங்களுக்கு 'அதிகாரப் பரவலாக்கம்' ஏற்பட வித்தூன்றப்பட்டுள்ளது. மைய அரசும் பொறுப்புகளில் மாநில அரசுகள் பொறுப்பேற்கவும், மாநில நிதி மூலங்கள் விரிவடையவும் ஆட்சிக்கலைப்புக்குக் காரணமான பிரிவு 356 -ஐ நீக்கவும் ஐக்கிய முன்னணி உறுதி கூறியுள்ளது. செயற்படுத்துமா என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும். பொதுவாக மொழித் தேசிய இனங்களைத் தன்னாட்சி நோக்கிச் செலுத்தும் "புதிய ஊழி" உருவாகியுள்ளது.

**தமிழ்த்தேசியம் நாளை**

நாளை என்பது நேற்றைய - இற்றைய - வரலாற்றுப் போக்குகள் விளைவிக்கும் எதிர்கால நிகழ்வுகள். அதில் கணிப்புகளும், எதிர்ப்புகளும், செயற்பாடுகளும் அடங்கும். அனைத்திந்திய நிலையை ஒட்டியே தமிழ்த் தேசிய இன எதிர்கால வரலாறும் அமையும். தற்போதைய மொழி இனங்களுக்குரிய நல்ல அரசியல் மற்றும் அரசமைப்புச் சூழ்நிலை மட்டுமே ஏற்பட்டுள்ளது. விடியலுக்கு முன்பு வெள்ளி தோன்றுவதைப் போல, தமிழ்த் தேசியம் இனி நெடும் பயணம் செய்ய வேண்டும். அதற்கு ஆட்சியியல், அரசமைப்பு, தமிழ்ச் சமுதாய நிலை, சென்று நின்ற இயக்கங்கள், வந்த பாதையில் ஏற்பட்ட வழுக்கல்கள், பட்டறிவு, வரலாற்றுப் போக்கு போன்ற பல சிறப்புக் கூறுகளினடிப்படையில், தமிழகத்தின் தனித் தன்மையை மையமாக வைத்து, வெறும் வறட்டியக்

www.tamilarangam.net



கோட்பாடுகளுக்குள் அடைத்துக் கொள்ளாமல், இயன்றவரை நடைமுறை வழிவகைகளைச் செவ்வனே ஆராய்ந்து கண்டறிய வேண்டும். படிநிலைகளை அறிந்து, உரிய செயல்நிலைகளை மேற்கொள்ள வேண்டும் இறுதிக் குறிக்கோளை அடைவதற்கு அதற்கிணையான முந்தையநிலைக்குரிய ஆக்க முறைகளைக் கைக் கொள்வதில் தவறில்லை. எந்நிலையிலும் இயக்கமும் அமைப்பும் செயலற்றதாக ஆகிவிடக் கூடாது. அவ்வப்போது அதற்குரிய தந்திரங்களைக் கடைப்பிடிப்பதில் தவறில்லை. இயக்கமே வேர்விடாதபோது, போராட்ட இயல்பென்ன, யார் பங்கேற்க வேண்டும், எந்தப் பகுதியினரை ஒதுக்க வேண்டும், இறுதிப் போரை யார் நடத்த வேண்டும். எவ்வகையில் என்பன போன்றவற்றையெல்லாம் வெறும் விமரிசனங்கள் வாயிலாக நடை முறைச் சிக்கல்கள் முற்றுமே உணராத காலப்பகுதியில், முடிவு செய்ய முடியாது. இயன்ற அளவிற்கு மக்கள் இயக்கமாக மலர்விக்க வேண்டும். மக்களின் விழிப்புணர்ச்சி முதன்மையானது. ஓரளவிற்கு அதனை "இயக்க வளர்ச்சியில்," "பொது மக்கள் ஆதரவு" என்ற அளவில் பெற்று விட்டால், பின்னரே போராட்டத்தைப் பற்றிய செயல்நிலைச் சிந்தனைகள் சரியான அளவில் அமையும். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய புரட்சிகளும், உரிமைப் போர்களும், மக்கள் போராட்டங்களும் இயல்பளவிலும், செயல்முறைகளிலும், முந்தைய புரட்சிகளிலிருந்து, சற்று மாறுபட்டவை என்பதையும் எண்ண வேண்டும். பெருமளவில், புறச்சூழல்களும் ஆதரவுகளும், ஆக்க சக்திகளாகப் பயன்படுகின்றன. ஏறத்தாழ ஒரே குறிக்கோளுடைய மற்ற பகுதியினருடன் தன் தனித்தன்மை மாறாமல் கூட்டமைப்புக்களை ஏற்படுத்திக்கொண்டு, இந்தியச் சூழ்நிலையில் செயல்படுவதும் இன்றியமையததாகும். அதேநேரத்தில் ஒவ்வொரு மொழியின மக்களின் தேசிய வளர்ச்சிநிலைகளும, தரமும், இயல்பும் போராட்டங்களும் தனித்தன்மை கொண்டதாக இருக்கலாம். பொது நிலையில் உள்ளவற்றின் உடன்பாட்டு அமைதி, போராட்டத்துக்குத் துணையாக அமையலாம் "இயக்கம்" வளரவளர அவ்வளர்ச்சிக்கு அடுத்த கட்ட செயல்நிலைகளும் முறையாக வளரும்.

எனவே 'தமிழ்த் தேசியக்' கொள்ளையூற்றம் கொண்டதும் கட்சி சார்பற்றதும், கட்டுப்பாட்டுடன் இயங்கக்கூடியதுமான "தமிழ்த் தேசியத் தன்னுரிமை இயக்கத்தை" அமைத்து, மக்களிடம் விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்து, தமிழினம் முழுமையானதொரு "தேசிய இனமாக" வளர்ச்சி பெறப் பணியாற்ற வேண்டும். அது மெள்ளமெள்ள, மக்களியக்கமாக எழுச்சி பெற்றுப் பரவ வேண்டும். தேசிய இனத்தின் "முதல்நிலைப் பண்புக்கூறுகளான" மொழி, இனம், பண்பாடு, அவற்றில் வெளிப்படும் உளவியல் உருவாக்கம் போன்றவற்றைத் தமிழ் மக்களுக்கு முதல்நிலையில் உணர்த்துவதுடன் தமிழ்த் தேசிய இனத்தின் ஆக்கத்தைப் பெற்றுத்தரத் தக்க "சார்புநிலைக் கூறுகளான"

www.tamilarangam.net



இன ஒற்றுமை, அனைத்துப் புலங்களிலும் ஏற்றத் தாழ்வை அகற்றல், சமுதாய மாற்றத்தை நோக்கிச் செலுத்துகிற சமுதாயச் சீர்திருத்தங்கள், சாதிய ஒழிப்பு, ஜனநாயக உரிமைகளையும், சமனியத்தையும், ஒட்டுமொத்த மான மேம்பாடுகளையும் வழங்கத்தக்க மாற்றங்கள் போன்றவற்றைச் செயற்படுத்த முனைந்து பணியாற்ற வேண்டும். பகுத்தறிவின் அடிப்படையிலும் அறிவியல் ரீதியாகவும் எதனையும் அணுகும் முறையைக் கைக் கொள்ள வேண்டும் இவற்றிற்கெதிராகவுள்ள சக்திகளைக் கலந்து தெளிந்து, அடையாளம் காட்டி, அவற்றை வெல்வதற்கும், ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கும், தன்னாட்சியை அமைப்பதற்கும், இறுதியில் தன் நாட்டரசைப் பெறுவதற்கும் தேவையான அனைத்தையும் வல்லமையுடன் செயல்படுத்தவேண்டும். இறுதி எல்லை செயல்முறையைத் 'தமிழ்த் தேசியத் தன்னுரிமை இயக்கம்' தொடர்ந்து திட்டத்துடன் இயக்கினால் தமிழ்த் தேசியம் முழுமை பெறும், தமிழினம் தன்னுரிமை பெறும்.

இப்புதிய சூழலில், இனிவரும் அண்மைக்கால நிலையை எண்ணிப் பார்ப்போம். ஐக்கிய முன்னணி அரசு ஒருக்கால் வீழ்ந்தால், அடுத்துவரும் தேர்தல்களில் மாநில மொழி இனமக்களின் உரிமைகளையும் நலன்களையும் போற்றாத – அனைத்திந்திய கட்சி எதுவும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது. மாநிலக்கட்சிகளையும் சேர்த்த புதிய முன்னணி அரசே அமையும். அதுவும் வீழ்ந்துபடலாம். குறுகிய காலத்திற்கு மேல் எந்த ஓர் அனைத்திந்தியக் கட்சியின் ஆட்சியும் நீடிக்காது. அறுதிப்பெரும்பான்மையையும் பெறமுடியாது. இப்படி இனிவரும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அரசுகள் மாறி –மாறி அமையும், மடியும். நிலைத்து நிற்காது. அதன் பின்னர் ஒரு கால வட்டத்தில், மொழி இனங்களின் மற்ற தேசிய இன வளர்ச்சிபெற்ற மக்களின் பல்லாண்டு கோரிக்கைகளை முழுவதும் ஏற்று, முறையாக அணுகித் தேசியத் தன்னுரிமைக் கூறுகளைச் செயல்படுத்தும் ஒரு திறன் மிக்க அரசு மட்டுமே நிலைக்க முடியும். அது ஏதோ ஒருவகையான கூட்டணி அரசாகவும் இருக்கலாம் அல்லது தேசிய அரசாக (National Government)-வும் அமைலாம். இதற்கிடையில் தற்போதைய இந்திய அரசமைப்பின் வகையங்களைத் திரிபுபடுத்தித் தலைமை அமைச்சர், குடியரசுத்தலைவர், நாடாளுமன்றம், இராணுவம் போன்றவற்றின் இசைவுடன் (அல்லது எதிர்ப்புடன்) சர்வாதிகாரியாக ஆகும் வாய்ப்புள்ளது. இதற்குரிய முழு ஏற்பை அளிக்கும் வெளிப்படையான விதிகள் அரசமைப்பில் நேரடியாக இல்லை. சர்வாதிகார ஆட்சி அமையும் வாய்ப்பு அருகிலேயே காணப்படுகிறது. நாடு தழுவிய இராணுவ ஆட்சியும் வரஅதிக வாய்ப்புக்களில்லை.

எனவே எதிர் வரும் ஒரு காலப்பகுதியில் இந்திய அரசியல் மற்றும் அரசமைப்புப் புலங்களில் "உறுதியற்ற நிலை" ( Un certainity)

www.tamilarangam.net



உறுதியாகத் தோன்றும் தீர்க்க முடியாத "அரசமைப்பு நெருக்கடிகள்" ( Constitutional Dead Lock) வளர்ந்து விடும். அவற்றை இன்றைய அரசமைப்பால் அணுகக்கூட இயலாது. மெய்யான இந்திய ஒருமைப்பாட்டுக்குரிய செப்பமான தீர்வைப் (Solution) பெற்றே தீர வேண்டிய கண்டிதநிலை ஏற்படும். அந்நிலையில் தேசிய இனங்களுக்குச் "சுய நிர்ணய உரிமையை" வழங்குகிற அல்லது மொழியின மாநிலங்களுக்கு "முழுத்தன்னாட்சியைத்" தருகிற வரலாற்றுக் கட்டாயம் வந்தே தீரும். அடக்குமுறையைக் கைக்கொண்டால் நாடு பிளவுபடும். இந்திய நாட்டின் பல்வேறு மொழித் தேசிய இனங்களும், தேசிய இன வளர்ச்சி பெற்ற மற்ற சமுதாயங்களும், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய "இந்தியக் குடியரசுக் கூட்டுடைமைக் கூட்டாட்சி" அரசமைப்பை இயற்றி ஏற்கும்.

உறுதியற்ற அரசியல் சூழ்நிலைக்கும் உறுதியான புதிய அரசமைப்பு உருவாகும் காலப் பகுதிக்கும், இடைநிலையில், தமிழ்நாடும் இந்தியத் துணைக்கண்டமும் நிலையான மாற்றத்துக்கு முந்தைய பேறுகால வேதனையைத் தாங்கியே தீரவேண்டும். தமிழ்த் தேசிய இனம், மற்ற நாட்டினங்களுடன் இணைத்து, நாடாளுமன்றத்தில் மிகப் பெரும்பான்மையைப் பெற்று, புதிய அரசமைப்புக்கு வழிவகை செய்யும் சட்டமுறையை இயற்றலாம். அல்லது இறுதிநிலைப் போராட்டத்தை நடத்தி வெற்றி காணலாம்.

## IV

## முடிவுரை

தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சி நிலையில், எதிர்காலக் குறிக்கோளையும் அதனையடையும் செயல்முறைகளையும் வகுத்துக் கொள்வதற்கு, முந்தைய நிகழ்வுகள், ஏற்பட்ட தவறுகள் போன்றவற்றை நடுவுநிலையில் நின்று ஆராய்ந்து தெளிய வேண்டுவது மிக இன்றியமையாதது. ஆனால் இற்றைய கொள்கை நிலை, நடை முறை போன்ற அளவுகோல்களையே வைத்து, முந்தைய போக்குகளைக் கணிப்பது, தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லும். கால இடைவெளி, கருத்து வளர்ச்சி, சூழ்நிலைகள், இயல்பான தடைகள், இயலும் அளவுநிலை போன்ற அற்றைய தனிச் சிறப்புக்கூறுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டே, உரிய குறை – நிறைகளைக் காண வேண்டும்.

### தன்னாட்சியா, தனிநாடா, தன்னுரிமையா?

தமிழ்த் தேசியத்தின் குறிக்கோள் 'தன்னுரிமை' பெறுவது, விடுதலை அடைவது. அதற்குக் கோரிக்கையாக அமைய வேண்டியது முழுத்தன்னாட்சியா? தனிநாடா? பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையா? இவையனைத்துக்கும் எதிரானது இன்றைய இந்திய அரசமைப்பு. தேசிய இனங்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கும்

www.tamilarangam.net



மைய ஆட்சியாளர்கள் தரும் ஒரே மறுவிடை இந்திய அரசமைப்புக்குள் நின்று, இந்தியாவின் கூறுபடாமைக்கு ஊறு இன்றித் தீர்வு காண வேண்டும் என்பதே. எனவே ஆளும் வகுப்பினரைப் பொறுத்த அளவில், இவை அனைத்துமே 'பிரிவினை' என்ற பெயரைப் பெறும்.

இவை மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை படிநிலைகளில் வெவ்வேறானவை. தேசிய இன விடுதலையைப் பொறுத்த அளவில், 'தனிநாடு' கோருவது, இறுதிநிலை. அதற்கு முந்தைய படிநிலைகளில், 'பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை' என்பது இன்றியமையாததொன்று. தோழர். ஸ்டாலின் கருத்துப்படியும், ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறந்த வரையறைகளின் படியும், "சுயநிர்ணய உரிமை" என்பது, ஒரு தேசிய இனம் அதன் தேசிய வாழ்க்கையை, அது விரும்பும் வகையில், அமைத்துக் கொள்வது. அதனைத் தன்னாட்சியின் (Autonomy) அடிப்படையில் அமைத்துக் கொள்ளும் உரிமை, மற்ற நாட்டரசுகளுடன் கூட்டாட்சி உறவுகளை வைத்துக் கொள்ளும் உரிமை, முழுமையாகப் பிரிந்து போகும் உரிமை, நாட்டினங்கள் யாவும் இறையாண்மை கொண்டவை, சம உரிமைகளைப் பெற்றவை.

எனவே 'சுய நிரிணய உரிமை' என்பது முற்றும் தனிநாடாக இயங்குவதை மட்டுமே குறிப்பிடுவதில்லை. இறையாண்மையும், சம உரிமைகளும் கூடிய தனி நாட்டினங்கள், அவற்றிற்கு ஊறுநேராமல், மெய்யான கூட்டாட்சியில் இணைவதையும் உள்ளடக்கமாக - செயல்முறையாகக் கொண்டது. கூட்டாட்சியில் இணைந்தாலும் அல்லது தேவையேற்படும்போது பிரிந்தாலும், ஒரு தேசிய இனம் தன்னாட்சியின் அடிப்படையில், அதன் தேசிய வாழ்க்கையை அது விரும்பும் வகையில் அமைத்துக் கொள்வதே மூலஉரிமை என்பது பெறப்படுகிறது. 'கூட்டாட்சி' அமைவு என்பது, தனிநாட்டினங்கள் இணையும் போது அவற்றின் இறையாண்மையிலிருந்து, கூட்டாட்சி நாட்டுக்குத் தேவையான சில அதிகாரங்களை விட்டுக் கொடுப்பதாகும்.

இந்தியத்துணைக் கண்டத்திலிருக்கும் சில நாட்டினங்களுடன், தமிழ்த் தேசிய இனமும் வாய்ப்பும், வசதியும், மேம்பாடும், பாதுகாப்பும், கருதி கூட்டாட்சியாக இணையலாம் , அல்லது தேவையினடிப்படையில், வரலாற்றின் படிநிலை வளர்ச்சியினால் உருவாகிவிட்ட 'இந்தியா' வின் அனைத்து நாட்டினங்களுடனும் சேர்ந்து கூட்டாட்சியாக அமையலாம். தற்போதைய நிலையில் தன்னாட்சியின் அடிப்படையில், கூட்டாட்சிக்களித்த அதிகாரங்கள் நீங்கலான முழு இறையாண்மையைக் கொண்ட, தமிழினம் விரும்பும் தமிழ் தேசிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வது அடிப்படையானது.

ஆனால் "தன்னாட்சி" என்பதைப் பல வகைகளில் திரித்துக் கூறுகிறார்கள். அது வெறும் "அதிகாரப்பரவலாக்கத்தைக்" குறிக்கிறது

www.tamilarangam.net



என்றும் "அதிக அதிகாரங்களைப் பெறுவது" மட்டுமே என்றும் விளக்கம் அளிக்கின்றனர். முழுமையான தன்னாட்சி எது என்பதையும் மெய்யான கூட்டாட்சி எத்தகையது என்பதையும் என் "மலர்க மாநில சுயாட்சி" நூலில் தெளிவாகக் காட்டியுள்ளேன். அது ஏறத்தாழ பிரிந்துபோகும் உரிமையைத் தற்போதைய நிலைக்கேற்பத் தவிர்த்த 'சுயநிர்ணய உரிமையே' என்பதும் தேசிய இன அரசுகள் அமைந்து இணைந்து பெறும் கூட்டாட்சி முறையே என்பதும் தெளிவாகும். இறையாண்மை கொண்ட தேசிய இனங்களின் பிரதிநிதிகளால் அமைக்கப்படும் அரசமைப்புச்சபையின் மூலமாகவே, புதியதோர் அரசமைப்பை இயற்றித்தான் - முழுத்தன்னாட்சி பெற்ற மொழி இனத்தாயகங்களான மாநிலங்களையும், மெய்யான கூட்டாட்சியையும் அமைக்கமுடியும். இற்றைய அரசமைப்பின் திருத்தங்களால் அது இயலாது. எனவே 'பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய' என்ற தொடர்களைச் சேர்க்காமலேயே, 'சுயநிர்ணய உரிமை' என்பதும் அதே பொருளைத் தரும். தன்னாட்சி மறுக்கப்பட்டால் தனியாட்சி என்பது வரலாற்றின் போக்கு.

காசுமீரம், பஞ்சாப், வடகிழக்கு மாநிலங்கள் போன்றவற்றில் மட்டுமே தேசிய இனப்போராட்டங்கள் 'தனிநாடு' எல்லையைத் தொடுகின்றன. ஆந்திரம், கர்நாடகம், கேரளம் உட்பட மற்ற மாநிலங்களில் தீவிர மொழித் தேசிய உணர்வு ஓங்கியிருப்பதாகக் கருதப்பட்டாலும், எந்த மாநிலமும் அரசமைப்பு மாற்றத்தையோ, முழுத் தன்னாட்சியையோ, சுயநிர்ணய உரிமையையோ கோருவதில்லை. அவ்வப்போது அதிக நிதியதிகாரங்களை மட்டுமே கோருகின்றன. மற்றவை மாநிலங்கள் கோருகின்றன. இந்நிலையில் தமிழ்த் தேசிய இனம் தனியாக நின்று எவ்வளவு போராடினாலும் அது எளிதாக நசுக்கப்பட்டுவிடும். "எத்துணை நியாயமான பெரிய போராட்டமும் தனிநிலையில் மேற்கொள்ளப்பட்டால், முதலில் நடைபெற அனுமதிக்கப்பட்டு, அயர்வு உண்டாக்கப்பட்டு, போராளிகளிடையே ஒழுக்கம், நாணயச் சிதைவுகளை விதைத்து, இறுதியில் இராணுவம் மூலம் அடக்கி விடும்" என்ற சிந்தனையாளர் வே. ஆனைமுத்துவின் கருத்து நடைமுறை நிலையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டும். தமிழ்நாட்டில் எழுந்துள்ள தேசிய எழுச்சியை சரியாகக் கொண்டு செல்ல வேண்டும். வெறும் விமர்சனத் தீவிரங்கள் கருதுவதைப்போல தமிழரிடம் மற்ற மொழியினத்தவரைப்போல 'மொழியினத் தேசியம்' இல்லை, வீரமும் இல்லை என்பது உண்மைக்கு மாறானது. ஏனெனில் வீரம்என்பது இன்று 'குறிக்கோளுக்காக விவேகத்துடன் போராடும் வல்லுணர்வு'. ஈழத் தமிழர்கள் நம்மைப்போன்றவரே! வீரம் பெறவில்லையா? தமிழ் மொழியின இயக்கம் ஆட்சிக் கட்சியாகி, அதில் மூழ்கி விட்டதால், மொழித் தேசிய எழுச்சியில் சற்றுப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஆனால் இன்றும் 100-க்கு 67-பேர், 1967-லிருந்து இன்று வரை தமிழ் தேசியத்தைக் கைக்கொண்ட அமைப்புக்களையே ஆதரிக்கின்றனர்

www.tamilarangam.net



என்பதை மறுப்பதற்கில்லை. மீண்டும் தனி இயக்கரீதியாக, விட்ட இடத்தில் இருந்து தொட்டுச் செயல்பட்டால் இந்தியநாட்டில் இனிவரும் சூழ்நிலைகளின் கையறுகட்டத்தில், புதிய தன்னாட்சி வாய்ப்புக்கள் வந்தே தீரும். மேலும் சென்ற உட்தலைப்பில் விளக்கியபடி, இந்திய-தமிழக வரலாற்றுப் படிநிலை வளர்ச்சியில் அடுத்த அரிய திருப்பம், தமிழ்த் தேசிய இனத்தின் - இந்திய தேசிய இனங்களின் - இறுதிநிலைக் குறிக்கோளான தன்னுரிமையைத்தரும் புதியதோர் அரசமைப்பு, அதற்குரிய தகுநிலையுடன் நாம் செயல்பட வேண்டும்.

எனவே 'தனிநாடு' என்பதைத் தவிர்க்கலாம். "சுய நிர்ணய உரிமையைக்" கோரலாம். மெய்யான இந்தியக் கூட்டாட்சி அமையும் நிலை ஏற்பட்டால், முழுமாநிலத் தன்னாட்சியை முதல்நிலையில் பெறலாம்.

☆☆☆

## கருத்துரை

**ஞானி :**

இன்று கெங்குசாமி நாயுடுவின் அரசியல் பற்றி விவாதம் வந்தது. இந்த விவாதம் புறக்கணிக்கக் கூடியதென்று நான் கருதவில்லை. கெங்குசாமி நாயுடு சொல்கிற மக்கள்தொகைக் கணக்கு 2 கோடியா 3 கோடியா என்பதை மெதுவாக நாம் போட்டுக் கொள்ளலாம் தமிழ்த் தேசிய இனம் தன்னைத் திரட்டி வலுப்படுத்திக் கொள்ள வேண்டுமானால், தமிழக எல்லைக்குள்ளிருந்து தமிழ்த்தேசிய உணர்வுக்கு எதிரான இயக்கங்கள் உருவாகிறது என்று சொன்னால் நாம் முழு கவனத்தோடு இருந்தாக வேண்டும். கெங்குசாமிநாயுடு தமிழ் பேசுகிறாரா, தெலுங்கு பேசுகிறாரா என்பது முக்கியமாகத் தோன்றவில்லை. கரூர் குப்புசாமி அவர்கள் சொல்வது போல ஆயிரம் ஆண்டு அடிமைத்தனம் தமிழகத்தில் இருக்கிறது. வடக்கிலிருந்து வந்தவர்களில் பெரும்பகுதி தெலுங்கர்தான். அவர்களோடு வந்தவர்கள் பார்ப்பனர்கள். அந்தமாதிரி இவர்கள் தமிழ் நாட்டிற்குள் வந்து ஏராளமான பாதிப்புகளை வரலாற்றில் ஏற்படுத்தியதை பார்க்கிறோம். குணா இந்தப் பிரச்சினைகளை கிளப்பியிருக்கிறார், இன்று நாம் இந்தப் பிரச்சினையின் மீது ஒரு மறு பார்வை செலுத்த வேண்டியுள்ளது. தேவேந்திரகுல வேளாளர்கள் என்பவர்களும் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியுள்ளனர்.

www.tamilarangam.net



தாய்மொழி என்பது பற்றிய வரையறை என்ன?

நான் தமிழன் என்கிறபோது என்னுடைய வீட்டுமொழி தமிழ் என்பதால் நான் தமிழன் என்பது ஒரு காரணம் ஒருவர்தன் வீட்டிலே தெலுங்கு பேசுபவராக இருந்தாலும், வெளியில், சமூகத்தில், கல்விக் கூடங்களில், ஆசிரியர்களிடத்தில் அவர் தமிழில்தான் கல்வி பெறுகிறார். பத்திரிகைகள் முதலியவற்றை தமிழில்தான் படிக்கின்றார், சமூகத்தில் பலநூறு பேர்களுடன் தமிழில்தான் உரையாடுகின்றார். அப்படியென்றால், எவர் ஒருவருக்கு தன்னுடைய அறிவையும் உணர்வையும் திரட்டிக் கொள்வதற்கு ஒரு மொழி, ஒரு தாய் போலப் பயன்படுகின்றதோ அந்த மொழிக்குத்தான் தாய் மொழி என்று பெயர்.

வீட்டில் பேசக்கூடிய தமிழோ, கன்னடமோ முழு அளவில் அறிவையோ உணர்வையோ திரட்டிக் கொள்ளப் பயன்படுவதில்லை. கலை உணர்வு முதலியவற்றைத் தீர்மானிக்கக்கூடியதில் தாய்மொழியின் பங்குதான் மிக அதிகம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்தான் பெரும்பாலான மக்களின் அறிவையும் உணர்வையும் திரட்டிக் கொள்வதற்கான மொழியாக உள்ளது. இந்த வடிவத்தில் கன்னடர்கள், தெலுங்கர்கள் எனப் பிரித்து அவர்களை நாம் வேறுபடுத்த வேண்டியதில்லை. ஆனால், தமிழ் மக்களை அடிமைப்படுத்துபவர்கள், யாராக இருந்தாலும் அவர்கள் மார்வாடிகளோ, தெலுங்கர்களோ, அல்லது அவர்கள் தமிழர்களேயானாலும் நமக்கு எதிரிகள்தான். இன்றைய நிலையில் வீட்டில் தெலுங்கு பேசினாலும் பள்ளியில் தமிழ் படித்து, பட்டம்பெற்று, தமிழ் இயக்கங்களில் பங்கு பெற்று, தமிழ்நாட்டு விடுதலை இயக்கங்களில் பங்கு கொண்டிருப்பவர்கள் எல்லோரும் தமிழர்தான் . அவர்களை நாம் பிரித்துப் பேச வேண்டிய அவசியமில்லை.

கெங்குசாமி நாயுடு, வீட்டில் தெலுங்கு பேசுபவர்களையெல்லாம் நீங்கள் தெலுங்கர்கள் என்றும் நீங்கள் ஒரு தேசிய இனம் என்றும் தமிழர்களுக்கு நீங்கள் எதிரானவர்கள் என்றும் எங்களுடைய மொழிக்கு இன்னும் கூடுதலான உரிமை வேண்டுமென்றும் சொல்லிச் செயல்படுகிறார் என்றால் நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவேண்டும் நிச்சயமாகத் தமிழ்த் தேசிய இன உணர்விற்கு எதிரான கருத்தை ஒரு அரசியல்வடிவில் வளர்க்கிறார்கள். இந்த இடத்தில்தான் குணா போன்றவர்கள் நீதிக்கட்சி பற்றி வைக்கிற விமர்சனமெல்லாம் இருக்கின்றன. இன்னும் தமிழ்நாட்டில் பொருளாதார ஆதிக்கம் செலுத்துபவர்களாகத் தெலுங்கர்கள் இருக்கின்றார்களென்றால் நாம் மிகவும் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும்.

அண்மையில் சென்னையில் ஆந்திர மகிளசபாவில் நடைபெற்ற விழாவில், ஒரு பெரிய மருத்துவர், தெலுங்கர் என அறிவிக்கப்பட்டவுடன், ஒரே கூச்சல் கைதட்டல். இசைத்துறையிலே ஒரு வல்லுநர் என்று பரிசு கொடுக்கும்போது அதே போல் தெலுங்கர் என்று சொல்லி பயங்கரக் கூச்சல், இளைஞர்களின் கைதட்டல், இது எனக்கு மிகவும் அதிர்ச்சியாகத்தான் தோன்றுகிறது .

www.tamilarangam.net



கெங்குசாமி நாயுடுவின் அரசியல் என்பது தமிழ்த் தேசிய இன உணர்விற்கு எதிராகத் திரட்டக்கூடிய அரசியல்தான். கெங்குசாமிநாயுடுவின் அரசியல் உணர்வென்பது ஆர்.எஸ்.எஸ். கூடாரத்துக்கு ஆதரவாகத்தான் மாறும். எங்கே தங்களைத் துரத்திவிடுவார்களோ என்ற பயத்திலும், தங்களுக்கு இந்த நாட்டில் 40% உரிமை உண்டு என்கிற போலித்தனமான கணக்கெடுப்பில் தொடங்கும் இவர்கள் நாளடைவில் நமக்கே எதிராகப் போவார்கள்.

இதை நாம் கண்டிப்பதைக் காட்டிலும், வைகோ, கு. இராமகிருட்டிணன், கனல் மைந்தன், குவெகி ஆசான் போன்றோர் சொல்லவேண்டும். "ஐயா, நாங்கள் தமிழர்களாக மாறிப் பல நூற்றாண்டுகள் ஆகி விட்டன. தயவு செய்து எங்களை மீண்டும் தெலுங்கர்களாக மாற்ற வேண்டாம். ஆந்திரா என்பது எங்களது தேசமல்ல, தமிழ்நாடுதான் எங்கள் தேசம், தமிழ்தான் எங்கள் தாய்மொழி, தமிழ் இனத்தோடுதான் எங்களுக்கு வாழ்வு என்று வெளிப்படையாக இவர்கள் எச்சரிக்கை விட வேண்டும். ஏன் வாய் மூடி இவர்கள் மௌனமாக இருக்கிறார்கள், தமிழ்த்தேசிய இன உணர்வைத் திரட்டுவது என்றால் என்ன அர்த்தம். உழைக்கும் மக்கள் தமிழ் உணர்வு கொண்டவர்கள். நெடுங்காலத்திற்கு முன்பே இங்கு வந்து இன்னும் உழைப்பாளியாக வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள். இவர்கள் எல்லாம் தமிழர்கள்தான்.

கொள்ளையடிக்கிறவன், அரசியலில் ஆதாயம் தேடுபவன், அவன் எவனாக இருந்தாலும் தமிழ்மக்களுக்கு எதிரிதான். அப்படித் தொகுத்தோமென்றால் யாரேல்லாம் எதிரி என்கிற பட்டியலை மிக எளிதில் தொகுக்க முடியும். இந்த விவாதங்களை நாம் முறையாக நடத்தியாக வேண்டும். கர்நாடகத்திலிருந்து தமிழர்கள் அடித்துத் துரத்தப்பட்டபோது இங்குள்ள கன்னடர்கள் யாராவது தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார்களா? தமிழர்கள் கொல்லப்பட்டு, கற்பழிக்கப்பட்டு, சொத்துகள் முதலியவற்றையெல்லாம் இழந்து அனாதைகளாகத் திரும்பி வந்தபோது, தெலுங்கு இனம் சார்ந்த ஏதாவது ஒரு சபை தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததா? நினைத்துப் பாருங்கள். அப்படியானால் இவர்களின் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருப்பது என்ன உணர்வு?

தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் இதையெல்லாம் பற்றிப் பேசமாட்டார்கள். எல்லாம் வாக்கு அரசியல். வை.கோ. நடைப்பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் அவருக்குப் பின்னால் திரளக்கூடிய கூட்டத்தில் ஒரு பெரும் பகுதி யார்? கோவையிலுள்ள நாயுடுமார்கள் வை.கோவுக்கு ஏன் பொருளைக் கொட்டுகிறார்கள்? என்ன நோக்கத்தோடு அப்படிக் கொட்டுகிறார்கள். இவையெல்லாம் நாம் எல்லோரும் பேசிக் கொள்கிற செய்திதான். மேடையில் பேசவில்லை.

www.tamilarangam.net



ஆனால் பேசித்தான் ஆகவேண்டும் ஏதோ ஓர் உணர்வு தமிழ்த்தேசத்திற்குள் தமிழின உணர்வுக்கு எதிராக ஓடிக் கொண்டிருப்பதை நாம் நன்கு தெரிந்து கொண்டு செயல்படவேண்டும். இந்த தமிழ்த்தேசியம் என்பதை மிகப் பெரிய கோட்பாட்டளவிற்கு நாம் உயர்த்தியாக வேண்டும்

## அறிவன்

கு.ச. ஆனந்தன் அவர்கள் தமிழர்களைக் கலப்பினம் என்று சொல்கிறார். நெடுங்காலத்திற்கு முன்பே ஆரியர்களும் திராவிடர்களும் கலந்துவிட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால் இன்றுவரை ஆரியத்திற்கும் திராவிடத்திற்கும் இடையிலான போராட்டம் ஓயவில்லை என்பது எதைக் காட்டுகிறது. ஆனந்தன் அவர்கள் கூறுவது போல ஆரியர், திராவிடர் என்பது மரபு இனம் அதாவது குருதியினம். குருதிகள் கலந்துவிட்ட நிலையிலும் இன அடிப்படையிலான அரசியல் இங்கு தொடரத்தான் செய்கிறது. ஆரியம் தமிழை அழித்தது என்பது தமிழை, தமிழ்ப் பண்பட்டைச் சிதைத்தது என்பது உண்மை. ஆரியத்திலிருந்து தமிழ் விடுதலை பெற நடத்தும் இன்றைய போராட்டத்தைக்கூட ஒப்புக்கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள். இந்த ஆரியர்களுக்கு இந்தியா வேண்டும். முதலாளியம், ஏகாதிபத்தியம் என்று எல்லாமே வேண்டும். பிரச்சினைகளை இப்படி அரசியல் தளத்திற்கு நகர்த்திப் பார்த்தால் நமக்கு உண்மை புரியும்.

தமிழ் மக்கள் குருதியில் எத்தனை சதம் அன்னியர்களின் குருதி என்ற ஆராய்ச்சிக்குப் பொருள் இல்லை. தமிழர்கள் என்று இன்று நாம் பேசுவது ஓர் அரசியல். தமிழருக்கு நிலம் வேண்டும், இயற்கை வேண்டும், நாடு வேண்டும், இவற்றைத் தீர்மானக்கிற தன்னுரிமை வேண்டும். இது தமிழர்களின் அரசியல். கலப்பினம் என்று சொல்வதன்மூலம் இந்த அரசியலை நாம் மறைத்துவிட முடியாது ஆனந்தன் அவர்களும் இதை ஒப்புக் கொள்கிறாரா?

சாலை போடுகிற தெலுங்கனையும், செருப்புத் தைக்கிற அருந்ததியரையும், எங்களோடு சேர்த்துக் கொள்வதில் எங்களுக்குச் சிக்கல் இல்லை. முதலாளியாக இருக்கிறவனோடுதான் எங்களுக்குச் சிக்கல். தமிழர்கள் என்று வாய்கிழியப் பேசுபவர்கள் இந்த இடத்தில் மௌனமாக இருந்து விடுகிறார்கள். இவர்களின் தமிழ் உணர்வு ஐயுறத் தக்கதாக இருக்கிறது. குணா சொல்வதில் அர்த்தமிருக்கிறது. அருந்ததியினரைக் கூட அன்னியர் என்று அவர் சொல்வது எங்களுக்கு உடன்பாடில்லை. ஆனால் தமிழ் இனச் சிக்கல் என்று வருகிறபொழுது, கர்நாடகத்திலோ, வேறு இடத்திலோ கலவரங்கள் தூண்டப்படுகிறபோது, கருணாநிதியோ, மற்றவர்களோ ஏன் வாய் திறப்பதில்லை. தமிழர்களின் நலன்களை தமிழகத்திற்குள் வந்தேறிகள் அபகரிக்கும்போது உங்கள் தமிழ்ப்பற்று ஏன் வாய் மூடிக் கிடக்கிறது.

www.tamilarangam.net



## தமிழ்த் தேசியஇனச் சிக்கலும் தீர்வும்.

*தியாகு, பொதுச் செயலாளர், தமிழ் - தமிழர் இயக்கம்*

தேசிய இனச்சிக்கல் இன்று அறிஞர் பெருமக்களின் விவாதப் பொருள் என்ற நிலையிலிருந்து, அரங்கங்களின் பேச்சுத் தலைப்பு என்ற நிலையிலிருந்து, ஒரு நடைமுறைச் சிக்கலாக, போராட்டத்திற்கும் கிளர்ச்சிக்கும் உரிய சிக்கலாக, நமது சமூகத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய சிக்கலாக வளர்ந்திருக்கிறது. நான் தத்துவ வல்லமை பெற்றவன் என்பதற்காக அல்ல, இந்தச் சிக்கலை ஆள்கிற பொறுப்பிலே இருக்கிற இயக்கத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில்தான் இந்தத் தலைப்பு எனக்கு அளிக்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

### தமிழ் – என் இயக்க அனுபவம்

எனது பொது வாழ்வின் தொடக்கம் என்பது கடவுள்மறுப்பு, சாதி, சமயமறுப்பு என்பதிலிருந்துதான் தொடங்கிற்று. மொழிப்பற்று என்பதாக ஒன்று அப்பொழுது எனக்கு இல்லை. 1964 - 65 ல் மொழிகுறித்து நானும் என் நண்பர்களும் கொண்டிருந்த கருத்து, அது ஒரு கருவி அல்லது சாதனம் . மொழியைப் போற்றுவது, புகழ்வது, அதன் மீது பற்று பாசம் வைப்பதெல்லாம் தேவையில்லாதது என்று அப்பொழுது கருதினோம். 1967 தேர்தலுக்கு முன்னர் பெரியார் வழியாகக் காமராசர் மீது ஒரு பற்று வந்தது. காங்கிரசுக் கட்சியின் மாணவர் இயக்கத்திலும் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. அன்றைக்கிருந்த மொழிக் கொள்கை என்னவென்றால் 'தமிழ்நாட்டுக்குத் தமிழ், இந்தியாவிற்கு இந்தி, உலகத்திற்கு ஆங்கிலம்' என்ற மும்மொழிக் கொள்கைதான். 1967 தேர்தலில் காமராசர் தோல்வி கண்டார். தோல்விக்குக் காரணம் மொழிகுறித்து தாங்கள் கொண்டிருந்த நிலைப்பாடுதான் என்று அவர் கருதினார். மொழிப் போராட்ட மாணவர் தலைவர் சீனிவாசன் அவர்களாலேயே காமராசர் தோற்கடிக்கப்பட்டார்.

காங்கிரசுக்கட்சிக்கு ஆதரவான சில மாணவர்கள் தலைவர்களை காமராசர் அழைத்து, கட்சிக்கு தமிழகத்தில் செல்வாக்கு குறைந்து விட்டதால் தமிழ் என்று பெயர் வருமாறு ஒரு அமைப்பைத் தொடங்குமாறு கேட்டுக் கொண்டார். அதன் பின்னர்தான் தேசிய மாணவர் தமிழ் வளர்ச்சிக் குழு தொடங்கப்பட்டது. தஞ்சை இராமமூர்த்தி அக்குழுவிற்குத் தலைவராக இருந்தார். வாழப்பாடி இராமமூர்த்தி பொருளாளராக இருந்தார். அதில் நானும் இடம்பெற்றிருந்தேன். அப்பொழுது தேனாம்பேட்டை கண்காட்சித் திடலில் தேசிய மாணவர்கள் தமிழ் வளர்ச்சிக் குழுவின் முதல் மாநாடு நடைபெற்றது. ஈ.வெ.கி.சம்பத், கவிஞர் கண்ணதாசன், ஜெயகாந்தன், தமிழ்வாணன், பாலதண்டாயுதம் என எல்லோரும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள். மேடையில்

www.tamilarangam.net



'தமிழ்த்தாய்' சிலை ஒன்று வைக்கப்பட்டது. எல்லோரும் தமிழ்ப்பற்றோடு பேசியது மட்டுமல்ல, இந்தியைக் கடுமையாக எதிர்த்தும் பேசினார்கள்.

மோகன் குமாரமங்கலம் தமிழ்ப்பயிற்று மொழியின் தேவைகுறித்தும் பேசினார். அவர் மேடையில் தமிழில் பேசமாட்டார். "I am going to Speak for Tamil in English" என்று ஆரம்பித்துப் பேசினார். திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து இந்தி எதிர்ப்பு ஆயுதத்தைப் பிடுங்கி விடுவதும் அவர்கள் நோக்கமாக இருந்தது.

மாநாட்டின் இறுதிக்கட்டத்தில் என்னைப் பேசுமாறு சொன்னார்கள் "இங்கே பேசியவர்கள் தமிழை ஒளி என்றும் விழி என்றும் பலவாறு போற்றினார்கள், என்னைப்பொறுத்தவரை மொழி ஒரு சாதனம், தேவைப்படும்பொழுது வைத்துக் கொள்ளலாம். தேவையில்லையெனில் ஒதுக்கி விடலாம். காலில் போட்டிக்கிற செருப்பைப்போல மொழியை விட்டுவிடவோ வைத்துக் கொள்ளவோ முடியும்", என்று நான் பேசினேன். எல்லோரும் அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தார்கள் எதிர்த்துக் குரல் கொடுக்குமளவுக்கு மொழிப்பற்றில் ஊறிவளர்ந்த கூட்டமாக அவர்கள் இல்லை என்பதும் ஒரு காரணம். பேசிமுடித்தபின்னர் பாலதண்டாயுதம் என்னை அழைத்து "நீங்கள் இவ்வளவு வெளிப்படையாகப் பேசக்கூடாது" என்றார். பேசியது சரியா, தவறா என்று மட்டும் சொல்லுங்கள் என்று நான் கேட்டபொழுது அவர் பதில் சொல்லாமல் நகர்ந்து விட்டார்.

இவ்வாறு தமிழை வைத்து அரசியல் மறுவாழ்வு தேடிய அதே காமராசர், தமிழ் பயின்றோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்ற அறிவிப்பினைக் கருணாநிதி தலைமையிலான அரசு வெளியிட்டவுடன், மாணவர்களைத் தூண்டிவிட்டு எதிர்ப்புக் காட்டச் செய்தார். எனவே காமராசரிடம் தமிழ்மொழிப்பற்று என ஒன்றும் இல்லை. சந்தர்ப்பவாதமாகத் தமிழைப் பயன்படுத்தினார், அவ்வளவுதான். பின்னர் மார்க்சிய லெனினிய அணிக்கு வந்தோம். அவர்களும் தமிழ்மொழி ஒரு கருவி என்ற கருத்தில்தான் இருந்தனர். மார்க்சிய லெனினிய இயக்கத்தின் முதல் மாநில மாநாடு நடைபெற்றது.

"அனைத்திந்திய அமைப்பின் ஒரு பகுதியாக தமிழ்மாநிலக் குழு இயங்கக்கூடாது. தமிழ்நாட்டுக்காக நாம் போராட வேண்டும். புரட்சி என்றாலே அது தமிழ்நாட்டுப் புரட்சிதான்." என்று ஒரு தோழர் சொல்கிறார். இதனை நாம் ஏற்கமுடியாது. ஏனென்றால் இது பிரிவினைவாதம் என்று தோழர் சுப்பு அறிவித்தார்.

'இந்தத் தோழர் யார்?' என்று நான் கேட்டபொழுது சத்திமங்கலம் நாகராசன் என்ற ஒரு தோழர் என்று சொன்னார்கள். அவரின் அந்த அறிக்கையினை அப்பொழுது நாங்கள் கவனத்தில் கொள்ளவில்லை. அண்மையில்தான் அதனை நான் வாசித்தேன்.

www.tamilarangam.net



சிறையில் விவாதம் வந்தது. அழித்தொழிப்பு சரியா தவறா ஆயுதப் போராட்டம் சரியா, தவறா? எனப் பல்வேறு வகையில் விவாதம் செய்தோம். அன்றைய விவாதங்களில் தந்திரவுத்தி பற்றிதான் கவலைப்பட்டோம். வெடிகுண்டு பயன்படுத்துவதா, அரிவாள், கத்திபயன்படுத்துவதா, மக்களைத் திரட்ட வேண்டாமா, அழித்தொழிப்பு சரியா இப்படி. இந்த விவாதங்களின் முடிவில் எல்லாவற்றையும் மாவோவின் தலையில் சுமத்திவிட்டோம்.

அப்பொழுது சாருமஜீம்தார் ஒரு முழக்கம் தந்திருந்தார். 'சீனத்தின் பாதை எங்கள் பாதை. சீனத்தின் தலைவர் எங்கள் தலைவர்', என்று இந்தமுழக்கத்தை நீதிமன்றங்களில் கூட எழுப்பினோம். பிற்காலத்தில் மாவோவே கூட இதை ஏற்கவில்லை என்பதை நாங்கள் நம்ப மறுத்தோம். அப்பொழுது சாருமஜீம்தார் பீகாரில் ஒரு பேட்டி கொடுத்தார். அதாவது சீனாவைப் போலவே இந்தியாவிலும் நாங்கள் நீண்ட பயணம் நடத்துவோம் என்றார். அது பற்றிய விவாதம் சிறைக்குள்ளே வந்தபோது நான் சொன்னேன். சீனாவைப் போல் ஒரு நீண்டபயணம் ஒரு போதும் இந்தியாவில் நடக்காது. ஏனெனில் சீனா ஒரே மொழி பேசுகிற ஒரே இன மக்கள் வாழ்கிறநாடு. இங்கு அப்படி இல்லை. இங்கே இருக்கின்ற பல்வேறு மொழிகள் நம் மக்களை ஒன்று படவிடாமல் புரட்சிக்குத் தடைச் சுவர்களாக எழுந்து நிற்கின்றன.

அதாவது தேசிய இனச்சிக்கல் என்பதாக ஒரு சிக்கல் இருக்கிறது, இதற்கும் புரட்சிக்கும் என்ன தொடர்பு? என ஆராய்வதற்குப் பதிலாக புரட்சிகர நடைமுறைக்கு என்ன சிக்கல் வருகிறது? அதை எப்படிக் களைவது என்ற முறையிலேதான் மொழிச் சிக்கலை அன்று பார்த்தோம். பின்னர் மார்க்சிஸ்டு கட்சியில் இருந்துகொண்டு விவாதித்தோம். அங்கேயும் இது பற்றிய விவாதம் இடம்பெற்றது என்றாலும் இன்றைக்கு இருக்கின்ற அளவில் இல்லை. ஆனால், இந்தியாவில் தேசிய இனச் சிக்கல் குறித்த வெளிச்சம் வந்தது என்பது ஈழப் போராட்டம் மூலம்தான்.

ஈழப் போராட்டத்தை மறுப்பதற்கும் அந்த மக்கள் மீதான ஒடுக்குமுறையை நியாயப்படுத்துவதற்கும் எந்தத் தத்துவமும் உதவிக்கு வரவில்லை. வெறும்தத்துவ வேறுபாடாக இதனை நாங்கள் கருதமுடியவில்லை. இது வெளிப்படையாக ஒரு துரோகத்திற்குத் துணை போகிறோம், என்ற எண்ணத்தை எங்களுக்குள் ஏற்படுத்தியது. வெளியில் ஈழ மக்களுக்கு ஆதரவாக நடைபெற்ற பெரும் போராட்டங்களைப் போலவே சிறைக்குள்ளும் போராட்டம் நடைபெற்றது. மதுரைச்சிறையில் செயவர்த்தனா கொடும்பாவியை எரித்தார்கள். திருச்சி சிறைக்குள்ளே ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தினோம். சிறையிலிருப்போர் தமது உணவை நிறுத்தி அதனை ஈழத்தமிழர்களுக்கான நிதியாக வழங்கினார்கள். 1983 காலகட்டங்களில் சிறை உரிமைகோரும் போராட்டங்களில் ஈழத் தமிழர்களுக்கு உதவும் உரிமை வேண்டும் என்றும் கோரினோம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதற்குப் பிறகுதான் இந்திய ஆளும் வர்க்கத்தின் வாலாகவே இந்தியக் கம்யூனிஸ்ட்டு கட்சிகள் ( CPICPIM ) இரண்டும் செயல்படுகின்றன என்ற உறுதியான முடிவுக்கு வந்தோம். இது என்னுடைய பரிணாம வளர்ச்சி.

சாதாரணமாக ஒருவரை அறிமுகம் செய்கிறபோது, 'இவர் தமிழ்மேல் பற்றுள்ளவர், இன உணர்வாளர்', என்று சொல்கிறபோக்கு தமிழகத்தில் உண்டு. அப்படி என்றால் இதற்கு மாறானவர்களும் இருக்கின்றார், நாமெல்லாம் அதில் மாறுபட்ட மொழிபற்றுள்ளவர்கள் என்றாகிறது, மொழி என்பது வெறும் கருவிதான். ஒருவர் சொல்வதை உள்வாங்கிக் கொள்வதற்கும், வெளியிடுவதற்குமான ஒரு சாதனம் என்பதற்குமேல் அதில் ஒன்றுமில்லை. இவர்கள் ஏதோ மொழி அது இது வென்று தட்புடல் செய்கிறார்கள். கிளர்ச்சி செய்கிறார்கள், என்ற கருத்து பலருக்கு உண்டு. உண்மையிலேயே இப்படி மொழியின் பேரால் மோசடி செய்தவர்கள் இதற்கான பழியை ஏற்கவேண்டும். மொழியைச் சொல்லியே ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் ஒன்றும் செய்யாமல் ஏமாற்றிவிட்டதால், மொழியைப்பற்றிப் பேசுபவர்கள் எல்லாமே இப்படித்தானோ என்கிற ஐயம் எழுவது இயற்கைதான்.

## மொழி கருவியா? ஊடகமா?

மொழி குறித்த மார்க்சிய அணுகுமுறை என்ன? நாங்கள் மார்க்சியத்தின் பேரால் மொழிப்பற்றை, இனஉணர்வை கடந்த காலங்களில் நிராகரித்தது சரியா? மார்க்சியம் அப்படித்தான் சொல்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. கருத்துக்களை வெளியிடுவதற்கு முன்னால் அதை அவர் உருவாக்கிக் கொண்டிருக்கவேண்டும். யாரும் கை, கால்களோடு பிறப்பதுபோல கருத்துக்களோடு பிறப்பதில்லை. கருத்துக்கள் எங்கிருந்து எவ்வாறு கிடைத்தன? புற உலகிலிருந்து கிடைத்தன. நாம் மார்க்சியப் பொருள்முதல் வாதத்தைப் பயில்கிறோம். புற உலகின் பிரதிபலிப்பு மூளையில் நடக்கிறது. இந்தப் பிரதிபலிப்பின் காரணமாக நமக்குக் கருத்துக்கள் கிடைக்கின்றன. இதற்கெல்லாம் எது ஊடகம்? மொழி. எண்ணங்களை உள்வாங்குவதற்கும் வெளியிடுவதற்கும் மொழிதான் ஊடகம். சிந்தனையின் கருவியாக மொழி இருக்கிறது. சிந்தனைக்கு அடிப்படை புறஉலகம். சிந்தனையின் உறுப்பு மூளை. சிந்தனையின் ஊடகம் மொழி.

சரி அப்படியென்றால் சிந்தனை அதுவாகவே மனிதனுக்குக் கிடைக்குமா? எங்களைக்கொண்டு போய் தனியாகக் காட்டிலே விட்டு விட்டால் எங்களுக்கு சிந்தனை சுரக்குமா?. நல்ல புரட்சிக்காரர்களை ஆண்டுக்கணக்கில் எதிரி தனிமைச் சிறையில் அடைத்து விடுகிறானே ஏன்?. சமூகத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கின்றபொழுது எவ்வளவு சிறந்த மூளையானாலும் சிந்திக்க முடியாமல் சிதைந்து போகின்றது. மூளை சிந்திக்கிற இயல்பைக் கொண்டிருப்பதற்கு அதன் தனியான

www.tamilarangam.net



வேதியல் இயல்புகள் மட்டும் காரணமல்ல. ஒரு காலத்தில் தமிழகத்தில் ஒரு பேச்சு இருந்தது, அதாவது ராஜாஜிக்கு அபாரமூளை அவரது மூளையை அமெரிக்காகாரன் கேட்டிருக்கிறான் என்று. இது வெறும் கட்டுக்கதை. மூளையின் வெறும் பௌதீக அளவு, வேதியல் பண்பு சிந்தனையைத் தீர்மானிப்பதில்லை. எந்தச் சமூக வாழ்க்கையிலிருந்து சிந்திக்கிறான் என்பது தான் முக்கியம்.

இன்றைய மனித மூளைக்கும் 10ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மனித மூளைக்கும் பெரிய மாறுதல் இல்லை. ஆனால் ஓராயிரம் ஆண்டுகட்குமுன்பு இருந்த மனித அறிவையும் இன்றைக்கு இருக்கிற மனித அறிவையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஒரு 5 வயது குழந்தை இன்று தொலைக் காட்சிப்பெட்டியை இயக்குகிறது. தாத்தா சொல்கிறார், 'அதையெல்லாம் தொடாதே மின்சாரம் தாக்கிவிடும்'. பேரன், 'தாத்தா உனக்கு ஒன்றும் தெரியாது பேசாமல் இரு' என்று சொல்கிறான்.

ஏனெனில் தாத்தா வளர்ந்த சமூகச் சூழலும், சிறுவன் வளரும் சமூகச் சூழலும் வேறுபடுகின்றன. சமூகம் இதுவரை பெற்றிருக்கின்ற அனுபவத்தின் சாரமாக இருக்கிற நிலையிலிருந்து பெறப்படுகிற அறிவு. அப்படிப் பெறப்படுகிற அறிவையெல்லாம் தொகுத்துப் பகுத்துப் பிரித்து ஆராய்ந்து புதியனவற்றை உருவாக்கி அதையும் சோதித்துப்பின் படைத்துச் செல்லுகிற பகுத்தறிவும், பட்டறிவும், படைப்பறிவும் இவற்றுக்கெல்லாம் ஓர் ஊடகம் உண்டென்றால் அதுதான் மொழி. மொழி இல்லையென்றால் மனிதனே மனிதனாயிருக்க மாட்டான்.மனிதக்குரங்கிலிருந்து மனிதன் மாறிச் சென்றதில் உழைப்பு வகித்த பங்கு என்பது பற்றி ஏங்கல்ஸ் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் , கை என்பது உழைக்கிற உறுப்பு மட்டுமல்ல, உழைப்பால் படைக்கப்பட்ட உறுப்பும் ஆகும், என்று சொல்கிறார். கால்கள் கைகளாக மாறியது மட்டும் என்றால், இரண்டுகால் குரங்காக இருந்திருப்போம். கைகளில் ஏற்படும் மாற்றம் உடம்பில் ஏனைய உறுப்புகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அப்படி அடைகிற மாற்றங்களில் முக்கியமான மாற்றம் பேசுகிறதிறன். உழைப்பு இவ்விதமாக மொழியின் ஆரம்பமாகிய பேச்சை உருவாக்குகிறது. மொழி என்பது மனிதனை உருவாக்குகிறது. அன்று மனிதனும் அரை மனிதன். மொழியும் அரைமொழி.உருவாகிக் கொண்டிருந்த மனிதன் உருவாகிக் கொண்டிருந்த மொழியைப் படைத்தான். மனிதன் மொழியைப் படைக்கிறான் என்பது மட்டுமல்ல, மொழிதான் மனிதனைப் படைக்கிறது. மொழி இன்றேல் மனிதன் இல்லை. உழைப்பதற்கு, உழைப்பதற்காக சிந்திப்பதற்கு, சிந்தனையைப் பரிமாறிக் கொள்வதற்கு, பரிமாற்றத்தினை புரிந்து கொண்டு புதியன படைப்பதற்கு மொழி இன்றியமையாதது. எனவே சமூகவாழ்வின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊடகமாக மொழி இருக்கிறது. இப்படி இருக்கும்பொழுது எப்படி மொழியிலிருந்து மனிதனைப் பிரிக்கமுடியும்.

நாங்கள் முன்பெல்லாம் ஒரு முழக்கம் எழுப்புவோம், , சாதியில்லை, மதங்கள் இல்லை, தொழிலாளிக்கு பேதங்களில்லை, மொழி இல்லை, தேசம் இல்லை, இனம் இல்லை, பாட்டாளிக்கு பேதம் இல்லை.' சாதி இல்லை என்பது சாதி கூடாது என்பதைக் குறிக்கிறது. மதம் இல்லை என்பது மதம் கூடாது, மதத்தை மீறி ஒன்றுபட வேண்டும். என்பதைக் குறிக்கிறது. மொழி இல்லை என்பது மொழியை மறுப்பது அல்லது மொழி கூடாது என்பது ஆகும் மொழி கூடாதென்று சொன்ன பிறகு எப்படி முழக்கம் எழுப்பமுடியும். முழக்கம் எழுப்பவே மொழி தேவைப்படுகிறது . ஆக இது ஒரு முட்டாள்தன முழக்கம்.

தேசிய இனம் என்பதற்குரிய முதல்கூறு மொழி என்பதுதான் மார்க்சிய அணுகுமுறை. மொழியற்றவர்கள் என்று ஒருவரும் கிடையாது. மொழியற்றவர்கள் என்றால் பேச்சற்றவர்கள். பேச்சற்றவர்கள் என்றால் சிந்தனையற்றவர்கள். பிறகு எப்படி மனிதர்களாக இருக்க முடியும்? ஆக மனிதன் மனிதனாக இருக்க வேண்டுமானால் அவன் ஏதாவது ஒரு மொழிக்குச் சொந்தக்காரனாக இருப்பான். நீங்கள் பற்றுக் கொண்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் நீங்கள் ஏதாவது ஒரு மொழி சார்ந்த இனமாகத்தான் இருக்கமுடியும். இன்னும் சொல்லப் போனால் வர்க்க சமுதாயம் தோன்றுவதற்கு முன்பிருந்தே மனிதன் மொழியோடிருக்கிறான்.

பல்லாயிரம் ஆண்டுகளாகவே மனிதனுடைய சமூக வாழ்க்கை என்பது மொழி வழியாகத்தான் நடந்திருக்கிறது. மனிதன் ஒரு சமூக பிராணி. மற்றவையெல்லாம் இயற்கையின் படைப்புகள். ஆனால் மனிதன் மட்டும்தான் வரலாற்றைப் படைக்கிறான். மனிதனோடு தான் வரலாறு தோன்றுகிறது என்று எங்கல்ஸ் சொல்லுகிறார். மொழியை நீக்கினால் சமூக வாழ்க்கை கிடையாது. சரி. தாய்மொழி பிறந்தவுடனே தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு, அயல் நாட்டுச் சூழலில் வேறு மொழியில் பழகி விடுகிற விதிவிலக்குகளைப் பற்றி கவலை இல்லை. தாய்மொழி என்றால் என்ன? நான் அமெரிக்கா சென்றிருந்த போது தாய் மொழிக் கல்வி பற்றி நிறைய பேசினேன். அவர்கள் என்னிடம் கேட்டார்கள். இங்கு எங்கள் குழந்தைகளுக்கு தமிழிலிலேயே கல்வி கற்பிக்கச் சொல்கிறீர்களா?. ஏனென்றால் எங்களது தாய்மொழியும் தமிழ்தான் என்றனர். இந்த நாட்டில் பிறந்த உங்கள் குழந்தைகளின் பூர்வீகத் தாய்மொழியாகத்தான் தமிழ் இருக்குமே அன்றி, இக்குழந்தைகளின் சமூகத்தாய் மொழி ஆங்கிலம் என்று நான் கூறினேன்.

பெற்றதாயின் அல்லது தந்தையின் வழியாகக் கிடைப்பது மட்டுமல்ல தாய்மொழி. அந்தக் குழந்தை வாழ்கிற சமூகச் சூழலில் என்ன மொழி நிலவுகிறதோ அதுதான் அவன் தாய்மொழி. அந்தமொழிதான் அதன் சிந்தனைக்குரிய ஊடகம். நாம் வாழ்கிற

www.tamilarangam.net



சமூகக் குழுவின் தாய்மொழிதான் நமது தாய்மொழி. அமெரிக்காவில் மூன்று வயது வரை உங்கள் குழந்தைகளை அறைக்குள் வைத்திருக்கிறீர்கள். அந்தக் காலங்களில் நீங்கள் தமிழ் கற்றுக் கொடுக்கிறீர்கள் என்று வைத்துக கொள்வோம். குழந்தை பார்க்கிற தொலைக் காட்சியை உங்களால் தடுக்கமுடியுமா? அந்தக் குழந்தையின் விளையாட்டுக் கூட்டாளிகள் எல்லாம் யார்?. ஒரு மின்சார கம்பிக்கு ரப்பர்உறை போடுவது போல உங்கள் குழந்தைகளை இன்சுலேட் செய்து வளர்க்கமுடியாது.

செயலூக்கம் மிக்க ஒரு சமூகம் தனக்குள் வந்து சேர்கிற மக்களின் மேல் தனது சமூக வாழ்க்கையினை செலுத்த முடியவில்லை. மக்களின் மேல் தனது சமூக வாழ்க்கையினை செலுத்த முடியவில்லையென்றால், அந்த சமூகத்தின் இயங்காற்றல் மிகவும் குறைந்து விட்டது என்று பொருள். ஆகவே சமூக ஊடகமான மொழியை விடுத்து சமூக மாற்றத்திற்கு நாம் செல்ல முடியாது. மொழியின் துணை இல்லாமல் எப்படி வாழ முடியாதோ அதைப் போலவே மொழியின் துணை இல்லாமல் சமூகத்தை மாற்றவும் முடியாது புரட்சி செய்யவும் முடியாது மொழி இணைக்கிற கருவிதானே அன்றி பிளக்கிறதல்ல. இணைக்கமுடியாததை இணைக்கமுயற்சி செய்தால் அது பிளவுபடுத்தும்.

நான் இவ்வளவு சொல்வதற்குக் காரணம், ஏதோ மொழி உணர்வும் இன உணர்வுமுள்ள ஒரு புண்ணிய சாதி இருப்பது போலவும், இவர்கள் ஒருவருக்கொருவர் குழு ஊக்குறியிலேயே பேசிக் கொள்கிறார்கள் என்பது போலவும் கருத்து பல இருக்கிறது. இவர்களுக்கெல்லாம் அறிவியலறிவு இல்லை, இவர்கள் எல்லாம் குறுகிய கண்ணோட்டமுடையவர்கள் அல்லது இவர்கள் பிளவு மனப்பான்மை கொண்டவர்கள் என்கிறார்கள். நாம் நிச்சயமாக மொழிவாதிகளோ இனவாதிகளோ அல்ல.

## தேசியம் வரையறையும் வரலாறும்

மக்களுக்கிடையிலான பிணைப்பிற்கும் தொடர்பிற்கும் மொழி தேவைப்படுகிறது. மக்கள் கூட்டத்தின் பரிமாண வளர்ச்சியில் மாறாமல் இருந்து வருகிற ஒன்று அவர்களுடைய மொழிதான். இவர்களின் வளர்ச்சிக்கு ஏற்ப, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கேற்ப தொழில் நுட்ப அறிவியல் வளர்ச்சிக்கேற்ப புதிய வடிவங்களை மொழி மேற்கொள்கிறது. ஆனால் மொழி என்கிறபோது இழை மாறாமல் இருக்கிறது. அது தேசிய இனம், தேசம் வரைக்கும் வருகிறது. ஒரு மொழி பேசுகிற மக்கள் கூட்டம், ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பில் வாழ்ந்து, அப்படி வாழ்வதால் ஏற்படுகின்ற ஒத்த மனநிலை. நாம் என்கிற உணர்வு நிலை வரலாற்று வழியில் வளர்ச்சி பெற்று, அவர்களுக்கு இடையில் சரக்கு பொருளுற்பத்தியில் வளர்ச்சி பெற்று,

www.tamilarangam.net



அவர்களுக்கு இடையில் சரக்கு பொருளுற்பத்தியில் ஏற்படுகிற பொருளாதாரப் பிணைப்புகள் . இவை எல்லாம் இணைந்துதான் தேசிய இனம் உருக்கொள்கிறது.

இந்த நான்குகூறுகளின் எண் கணிதக் கூட்டுத்தொகையல்ல தேசியஇனம். அந்த தேசிய இன உருவாக்கத்தில் வரலாற்றின்பங்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் வேறுபடும். தேசிய மனோநிலை தேசியப் பண்பாடு என்பதில் சமயத்திற்கு இடமில்லை. இஸ்லாமிய சமயம் ஒரு தேசத்தை உருவாக்கி விடவில்லை. ஸ்பெயினும், போர்ச்சுகலும் கிறித்துவம் என்பதற்காக ஒன்றுபட முடியவில்லை. பாகிஸ்தானும் வங்க தேசமும் மதத்தால் இணையமுடியவில்லை. ஆனால் ஒரு மக்கள் கூட்டத்தின் மீது காலங்காலமாக செலுத்தப்படுகிற இழிவுக்கும் ஒடுக்கு முறைக்கும் சமயமே ஒரு காரணியாகிறபொழுது அந்தச் சமயம் தேசியத்திற்கான ஒரு கூறாக மாறுகிறது. இதை யூதர்களின் இஸ்ரேல் தொடர்பாகப் பார்க்கலாம்.ஏனென்றால் எல்லா தேசங்களும் நேர்வழியாகப் பார்க்க காரணிகளல்லாமல், எதிர் கூறுகள் இல்லாமல் வளர்வதில்லை.

தேச உருவாக்கத்தில் அயலவர் தாக்கத்திற்கும் ஒரு பங்கிருக்கிறது அயலவர்களால் ஏற்படுகிற தடைகளும் சேர்ந்துதான் ஒரு தேச உருவாக்கம் நிகழ்கிறது. எதிர்வகை தேசியங்களும்கூட இதனால் உருவாகின்றன. இந்தியத்தேசியம் என்பது எதிர் வகை தேசியத்திற்கு நல்ல உதாரணம் இது உருவான காலத்தையும் வரலாற்றுப் பின்னணியையும் வைத்து, கற்பிக்கப்பட்ட தேசியம் என்று நான் சொல்லவில்லை.

200-க்கு மேற்பட்ட மொழிகளைக் கொண்டமிகப் பரந்த கண்டம், 500-க்கு மேற்பட்ட சமஸ்தானங்களைக் கொண்டபகுதி எப்படி ஒரு தேசமாக உருவாகமுடியும்? என்று வெள்ளையர்கள் கேட்டார்கள். இந்தக் கேள்வியை அவர்கள் எழுப்பிய போது, இந்தியா வை ஒரு தேசமாக உருவகம் செய்வதற்கு, அல்லது உருவாக்குவதற்கு எந்த அடிப்படையும் இல்லை. ஆனால் ஆதிக்கத்திற்கு எதிரான பொது உணர்வு தேசிய உணர்வாக உருப்பெற்றது. அதற்கு ஒரு வரலாற்றுத் தேவை இருந்தது. அந்தத் தேவை நிறைவுற்ற பிறகு இந்த எதிர்வகைத் தேசிய உணர்வே சமூக மாற்றத்திற்கு தடையாக இருக்கிறது.

ஆகவே தேசிய இனம், தேசியம் என்பது வரலாற்று வழியில் புறநிலையில் உருவாகிற ஒரு கூறு. இது வெறும் இயற்கைக் கூறு மட்டுமல்ல, மரபினம் சார்ந்த இயற்கைக்கூறு என்பது தட்ப வெப்பநிலையைப் பொறுத்தது. தோலின், முடியின் தன்மை, மண்டை ஓட்டின் அளவைப் பொருத்து மாறுபடும். ஆப்பிரிக்க யானைக்கும், இந்திய யானைக்கும் வேறுபாடு இருப்பது போல, வெள்ளை இனத்தவனுக்கும் மஞ்கள் இனத்தவனுக்கும் உள்ள வேறுபாடு இயற்கையில் வருவது. ஆனால் தேசிய இனம் என்பது மரபினம் சார்ந்த வேறுபாடு அல்ல. இது சமூக வரலாற்றில் உருப்பெறுகிறது. அப்படி உருவாகிற

www.tamilarangam.net



தேசத்திற்கு ஒரு சுயேச்சையான இருத்தல் உண்டா? இல்லையா? தேசியம் உருப்பெற்றதை வர்க்கக் கண்ணோட்டத்தில் விளக்கியுள்ளார்கள். தேசம் என்று சொல்கிற பொழுது அதை முதலாளி வர்க்கம் தனது சந்தை நலனுக்காக உருவாக்குகிறது. முதலாளியம் தனக்குத் தேவையான கச்சாப் பொருட்களை பெறுவதற்கும் உழைப்புச் சக்தியைப் பெற்று உபரி மதிப்பை அபகரிக்கவும், உற்பத்திப் பொருட்களை மீண்டும் விற்பதற்கும் ஒரு சந்தை தேவைப்படுகிறது. அந்தச் சந்தையில் அது தேசியத்தைக் கற்றுக் கொள்கிறது என்று லெனின் சொல்கிறார்.

தேசியம் என்பது முதலாளியத்துவக் கருத்தியல் என்று மாவோ சொல்லியிருக்கிறார். தொழிலாளிக்கு தேசம் இல்லை என்ற பொருளில் மார்க்ஸ் சொல்லியுள்ளார். அப்படியானால் வர்க்க நலனின் வெளிப்பாடுதான் தேசமா? முதலாளிக்கு சமூக வரலாற்றில் ஒரு முற்போக்குப் பாத்திரம் இருப்பது போல, தேசம், தேசியம் என்பதற்கும் ஒரு முற்போக்கு பாத்திரம் உண்டென்று அங்கீகரிப்பதா? அல்லது ஒரு வரலாற்றுக் கட்டத்தில் முதலாளியம் காலாவதியாவது போல தேசமும் தேசியமும் போய்விடும் என்பது பொருளா? மார்க்ஸ் பல நாடுகளின் பாட்டாளி வர்க்க இணைப்பால்தான் புரட்சி சாத்தியம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். ஆனாலும் ஒரு இடத்தில் மார்க்ஸ் சொல்லுகிறார். “பாட்டாளி வர்க்கம் தேசிய அடிப்படையில் ஒன்று திரளும் ஆற்றல் கொண்டது”, . ஏனென்றால் சோவியத் புரட்சி நடக்கும் வரையில் ஒரு நாட்டில் மட்டும் புரட்சி என்ற கருத்து மெய்ப்பிக்கப்படவில்லை. தொழிலாளி வர்க்கம் தன்னை அமைப்பு வழியில் திரட்டிக் கொள்வதைத் தவிர வேறு எந்த ஆயுதமும் அதனிடம் இல்லை ஏனென்றால் முதலாளி வர்க்கம் எல்லா ஆயுதங்களும் ஏந்தி நிற்கிறது. அது வெறும் அடக்குமுறைக்கான ஆயுதங்களை மட்டுமல்ல, பிரசாரத்திற்குரிய ஆயுதங்களையும் வைத்துள்ளது. ஒரு சமூகத்தின் ஆளுமையை நிர்ணயிக்கக் கூடிய எல்லா சாதனங்களும் ஆளும் வர்க்கத்திடம் இருக்கின்றன. உழைப்புச் சக்தியை மட்டும் கொண்டிருக்கிற தொழிலாளி வர்க்கம் எப்படித் திரளுவது? வெல்வது? என்று சொன்னால் அதற்கு ஒரே வழி ஒழுங்கமைப்பு.

அவ்வாறு ஒழுங்கமைத்துக் கொள்வது என்பது தேசிய அளவில்தான் சாத்தியம் என்றார் மார்க்ஸ். ஒரு தேசமாகத்தான் தன்னைத் தொழிலாளி வர்க்கம் ஒழுங்கமைத்துக் கொள்ளும் ஏனென்றால் பொது மொழி, பொதுப்பரப்பு சேர்ந்து வாழக்கூடிய மனோநிலை என்ற இந்தக்கூறுகள் இல்லாமல் ஒழுங்கமைப்பு என்பது சாத்தியமில்லை. இப்பொழுது நமக்கு கிடைத்த அனுபவங்களும் இதையே நமக்குக் காட்டுகின்றன. நவீன காலத்தின் எல்லாப்புரட்சிகளுமே அவற்றின் எல்லைப் பரப்பில் தேசியப் புரட்சிகள்தான். ருஷ்யப் புரட்சியும் ஒரு தேசியப் புரட்சிதான். பல தேசப்புரட்சியல்ல. அதன்விளைவுகள் தேசியம் தாண்டி சர்வ தேசியமாக இருக்கலாம். பின்னர் தான் அந்தப்

www.tamilarangam.net



புரட்சி ஜார் ஆட்சி செய்த மற்ற தேசங்களுக்கும் பரவியது. ஏனென்றால் ஆதிக்கம் ஒழிந்தது அப்பொழுது தான். இவ்வளவு காலம் ஆகியும் பக்கத்திலுள்ள பின்லாந்திற்குள் புரட்சி தோன்றவில்லை.

தேசிய அரசுகள் உருவாகுவதற்கும் மனித குலத்தில் ஏற்பட்டுள்ள முற்போக்கான செயல்களுக்கும் தொடர்பு உள்ளது. ஐரோப்பாவில் நடந்த ஒவ்வொரு முதலாளித்துவப் புரட்சியும் ஒரு தேசியப்புரட்சி. பிரான்சில், ஜெர்மனியில், பிரிஷ்யாவில், பிரட்டன் என எல்லா நாடுகளிலும் தேசிய எழுச்சிக்கான தேவை இருந்தது. அந்தத் தேவை இந்தக் காரணத்தாலேயே அது ஒன்றும் ஐரோப்பியப் புரட்சியாகி விடவில்லை. அந்தந்த தேசங்களுக்குரிய புரட்சியாகத்தான் அது இருந்தது. தேசங்கடந்திருந்த பழைய அரசுகள் சிதைந்து புதிய அரசுகள் உருவாகுவதற்கு தொழிற்புரட்சியும் அரசியல்புரட்சியும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் சென்றன. ஒன்றுக்கொன்று துணையாகவும் இருந்தன. உற்பத்திச் சக்திகளில் ஏற்படுகின்ற மாற்றம் உற்பத்தி உறவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும். ஒரு புதிய சமூகத்திற்குப் பொருத்தமான அரசும், அரசு அமைப்பும் தேவைப்படுகிறபொழுது அந்த அரசமைப்பும் அரசும் தேசிய அரசுகளின் உதயத்தில் இருக்கின்றன. தேசிய அரசுகள் என்பதுதான் வளர்ச்சிக்குப் பொருத்தமான அரசு வகைகள்.

மன்னராட்சியின் கீழிருந்த வரை பிரஷ்யாதான் அதில் ஜெர்மனியின் ஒரு கூறு இருக்கிறது. மார்க்ஸ் பிறந்தது பிரஷ்யாவில். ஆனால் அவர் ஒரு போதும் பிரஷ்யராக இருந்ததில்லை, ஜெர்மனியராகவே இருந்தார். மக்கள் கூட்டம் என்பது பொதுத்தன்மையால் விளைவது. மக்களைப் பல விதமாக சமுதாயப்படுத்தலாம் ஆண், பெண் என்கிறபோது பால் அடிப்படையாகிறது. நம்பிக்கைகள் வழிபாடு என்கிறபோது சமயக் குழுக்களாகப் பிரிக்கலாம் பின்னர் அதற்குள் இருக்கிற துணைக்குழுக்கள் இருக்கின்றன. இந்தியாவில் சாதிச் சமூகம் இருக்கிறது. இவையெல்லாம் ஒரு வகை.

இன்னொரு வகை என்பது ஒரு அரசின் கீழ் இருக்கின்ற மக்களெல்லாம் ஒரு சமூகப்பிரிவு. தமிழர்கள் ஒரு தேசமாக வளர்வதற்கு முன்பே ஒரு மொழி வழிப்பட்ட சமுதாயமாக இருந்தார்கள். தமிழ்த்தேசமோ, தமிழ்நாடோ இல்லாத போதே தமிழ்கூறும் நல்லுலகத்தை வரையறை செய்யமுடிந்தது. சேரனின் கீழ் வாழ்கிற மக்களும் சோழனின் கீழ் வாழ்கிற மக்களும் மொழிவழிச் சமுதாயம் என்கிறபோது ஒன்று. ஆனால் அரசு சமுதாயம் என்கிறபோது வேறு.

வரலாற்றில் தேசங்கள் உருவாவது முற்போக்கான தேவை மட்டுமல்ல. தவிர்க்கமுடியாத நிகழ்வு இது இல்லையென்றால் சமூக மாற்றமில்லை இந்த தேசங்களுக்கும் வர்க்கங்களுக்கும் உள்ள தொடர்பென்ன? தேசியப் போராட்டத்திற்கும் வர்க்கப் போராட்டத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? ஒரு தேசமென்றால் பல வர்க்கங்கள் இருக்கும். இயற்கைப் பொருள் உற்பத்திக் கட்டத்திலிருந்து, சரக்குப்பொருள் உற்பத்திஎன்ற நிலை

www.tamilarangam.net



வருகிறபொழுது அதுவே பெரும்பான்மையான பொருள் உற்பத்தியாக ஆகிறபொழுதுதான் தேசம் தோன்றுகிறது. இந்த வளர்ச்சி ஏற்படுவது ஒரு குறிப்பிட்ட வர்க்க வளர்ச்சியின் பின்னணியில்தான்.

ஒவ்வொரு தேசிய சமூகமும் வர்க்க சமூகமாக இருக்கிறது. அந்தச் சமூகத்தில் முதலாளி, தொழிலாளி, நிலச்சுவான்தார், நடுத்தர வர்க்கம் என வர்க்கப்பிரிவினரும் இருப்பர். அப்படியானால் தேசம் என்பது வர்க்கங்களின் கூட்டுத்தொகைதானா?

## தேசியப் போராட்டம் வர்க்கப் போராட்டமா?

தேசியப் போராட்டம் என்பது வர்க்கப் போராட்டத்தின் ஒரு வடிவம் என்று சொல்லப்படுகிறது. தில்லி ஆதிக்கத்தை எதிர்த்து தமிழ் தேசியப் போராட்டம் என்றால் வர்கப் போராட்டத்தைக் கைவிட்டுத் தேசியப் போராட்டத்தை எடுத்துவிட்டீர்களே என்று கேட்டார்கள், என்ன பதில் சொல்வது? இதுவும் வர்க்கப் போராட்டம்தான். தில்லி அரசு என்பது ஒரு வர்க்க அரசுதான். அதை எதிர்த்துப் போராடுகிற தமிழ்த் தேசிய இனம் பல வர்க்கங்களைக் கொண்டதாக இருக்கிறது. ஒருவர்க்கக்கூட்டணி ஆதிக்கவர்க்கத்தை எதிர்த்துப் போராடுகிறது. ஆகவே அதுவும் வர்க்கப் போராட்டம் தான் என்று இதற்கு விளக்கம் தரப்படுகிறது.

தேசத்தை வர்க்கங்களின் கூட்டுத்தொகையாகவும், தேசியப் போராட்டத்தை வர்க்கப் போராட்டத்தின் ஒரு வடிவமாகவுமே கருதுவது தவறானது. ஒருதேசத்திற்கு என்று சுயேச்சையான இருத்தலைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். சோவியத் யூனியன் உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளில் ஏற்பட்ட சரிவுக்கு ஒரு காரணம் தேசிய இனப் பன்மையை அங்கீகரிக்க மறுத்து சர்வ தேசியம் என்று சொல்வது. தேசங்கள் மறைவதோ, அவற்றை மறுப்பதோ அல்ல. தேசங்கள் இருப்பதும் அவை சமத்ததுவத்தோடு இருப்பதும்தான் சர்வ தேசியம். கண்ணுக்குத் தெரியாத ஒரு நீண்ட எதிர்காலத்தில் என்ன நிகழ்கிறது என்பது நமக்கு முக்கியமல்ல, நம் கண்ணுக்கெட்டிய வரலாற்றுக்கும் நடைமுறைக்கும் என்ன தேவையோ அதை நாம் நிறைவேற்றுவோம்.

தேசம் வரலாற்று வழியில் வந்தது என்பதாலேயே அது மறைந்துவிடும் என்பதல்ல. மறைந்துவிட்டதால் அந்த இடத்தில் என்னவரும்? மொழியற்ற மனிதனை எப்படி நம்மால் எண்ணிப் பார்க்கமுடியாதோ, அதைப் போலவே தேசமற்ற மனிதனையும் எண்ணிப் பார்க்கமுடியாது. வர்க்கப் போராட்டம் வரலாறு முழுவதும் நிகழ்ந்துள்ளது என கம்யுனிஸ்டு கட்சி அறிக்கையில் எழுதினார்கள் பின்னர் அதில் ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள்.

ஏட்டறிந்த வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்ட வரலாறே. ஏனெனில் புராதன பொதுவுடமைச் சமுதாய வரலாறு என்பது

www.tamilarangam.net



எழுதப்படாத வரலாறு. அது வர்க்க சமுதாயம் இல்லையென்பதால் அங்கே வர்க்கப் போராட்டங்கள் இல்லை. ஏடறிந்த வரலாறு அடிமைச் சமூகத்திலிருந்து தொடங்குகிறது. எனவே ஏடறிந்த வரலாறெல்லாம் வர்க்கப் போராட்டங்களுக்கு என்ன பொருள்? இந்த அடிப்படையை எல்லாப் போராட்டங்களிலும் இயந்திரத்தனமாகத் தேடிக் கொண்டிருக்கும் செயல் மார்க்சியவாதிகளிடம் உள்ளது. ஒவ்வொரு தனி நிகழ்விலும் இதே போல் ஒரு வர்க்கச் சார்பை ஏற்றிச் சொல்வது என்பது மார்க்ஸ் காலத்திலேயே நடந்தது. பிரெஞ்சு நாட்டில் இளம் மார்க்சிஸ்டுகள் அரசியலில், கலையில், இலக்கியத்தில், மொழித்துறையில், சமயத்துறையில் எதில் என்ன நடந்தாலும் அது முழுவதற்கும் பொருளாதார மூலத்திலிருந்து ஒரு விளக்கத்தைக் கைக் கொண்ட போது மார்க்ஸ் சொன்னார். இதைப்பற்றி ஏங்கல்ஸ் சொன்னார். “இவர்கள் இப்படிச் சிந்திப்பதற்கான பழியில் ஒரு பகுதி எங்களையும் சாரும் ”.

பொருளாதார அடித்தளத்திற்கும் அதாவது வர்க்க உறவுகளுக்கும் ஏனைய கூறுகளுக்கும் உள்ள தொடர்பு என்னவென்றால், பொருளாதார அடித்தளத்தின் மீது கட்டி எழுப்பப்படுகிற மேல்கட்டுமானத்திற்கு அதாவது அரசியல், கலை, இலக்கியம் சமயம், பண்பாடு இவற்றுக்கெல்லாம் தனக்கென்று சுயேச்சையான வரலாறு இல்லை என்பதல்ல. ஒரு ஆற்றின் கரைகளுக்கு இடையே நீரோட்டம் அடைவது போல, பொருளாதார உறவின் கரைகளுக்கு இடையில் அரசியல், கலை, இலக்கியம் என்ற எல்லா மேற்கட்டுமான செயல்களும் ஓடுகின்றன. ஆனால் எப்படி வெள்ளப்பெருக்கு எடுக்கிறபொழுது ஆற்றின் கரையினை உடைத்து வெள்ளம் பாயமுடியுமோ அதைப் போலவே, வரலாற்றில் பொருளாதார உறவுகள் என்கிற அடித்தளத்தினை உடைத்து மேற்கட்டுமானம் செல்லமுடியும். இன்னும் சில நேரம் இன்றைக்கு காவிரி இருப்பது போல கரையைத்தொடாமலேயே கூட நீர் செல்லலாம். கரை இருப்பதாலேயே எப்பொழுதும் கரைக்குள் அடங்கியிருக்கிறது என்று பொருள் கிடையாது. தேசம், தேசிய இனம் என்ற கூறுவர்க்கங்கள் என்ற கூறினப் பின்னங்கள் ஆகக் கொண்டுள்ளது. ஆனால் இதன் வளர்ச்சி முழுவதும் வர்க்க வளர்ச்சியின் வரலாறாக இருக்க வேண்டிய கட்டாயமில்லை.

தேசியப் போராட்டங்களுக்கு என்று சுயேச்சையான போக்கு உண்டு. வர்க்கப் போராட்டம் அதற்கு ஒரு பின்னணியாக இருக்கிறது. ஆகவே தான் ஏடறிந்த வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறு என்பதை நாம் எப்படிப் புரிந்து கொள்ள வேண்டுமெனில், வர்க்கப் போராட்டங்களின் பின்னணியில் நிகழ்ந்த வரலாறு என்று தான் புரிந்து கொள்ள வேண்டும். வர்க்கமற்ற சமுதாயத்திலும் தேசமும், தேசிய இனமும் நீடிப்பதற்குத் தான் எல்லா வாய்ப்புகளும் உள்ளன. தேசியம் என்பது ஒரு முதலாளித்துவக்

www.tamilarangam.net



கருத்தியல் என்கிறபோது அது முதலாளிக்கான கருத்தியல் என்பதல்ல பொருள் ஒரு ஜனநாயகப் புரட்சியை முதலாளித்துவப் புரட்சி என்கிற போது ஏன் அது முதலாளித்துவப் புரட்சி? சுரண்டலை அடியோடு ஒழிக்காததால் அது முதலாளியப் புரட்சி, எல்லா ஜனநாயகப் புரட்சிகளும் சாரத்தில் முதலாளித்துவப் புரட்சிகளே.

முதலாளித்துவப் புரட்சி என்பதாலேயே அது சுரண்டலுக்கான புரட்சி என்பதல்ல. தேசியம் என்பது முதலாளித்துவ பாதையை உருவாக்குவதற்காக என்றே வந்தது என்பதல்ல. தொழிலாளி வர்க்கத்தை தேசிய அடிப்படையில் மட்டும்தான் ஒன்று திரட்ட இயலும் என்கிறபோது அது ஒரு வர்க்கத்தின் கருத்தியல் அல்ல, அது ஒரு சமுதாயத்தின் கருத்தியல். வளருகிற தேசியத்திற்கு தொழிலாளி வர்க்கத்துடன் முரண்பாடு இல்லை.

தேசியம் என்பது ஒரு தேசிய சமுதாயம் முழுவதன் வளர்ச்சிக்கான கருத்தியல். அது அச்சமூகத்தின் அனைத்துக்கூறுகளுக்கும் பொதுவானது. அதில் முதலாளிக்கும் அக்கறை உண்டு, தொழிலாளிக்கும் அக்கறை உண்டு. வர்க்கப் போராட்டத்தின் பின்னணியில் மட்டும் சமுகத்தை ஆராயாமல், எல்லாவற்றிலும் எப்பாடுபட்டேனும் வர்க்கப் போராட்டத்தைக் காண்பது என்பது மார்க்சியத்தைக் குறுக்கி விடுவது அல்லது கொச்சைப்படுத்துவது எனக் கருதுகிறேன். இதை வர்க்கச் சுருக்கவாதம் ; (ClassReduction) என்று சொல்லலாம்.

தேசிய இனச் சிக்கல் குறித்த மார்க்சிய அணுகுமுறை என்று லெனின் சொல்லும் பொழுது மூன்று அடிப்படைகளைச் சொல்வார்.

1. வெவ்வேறு தேசிய இன உழைக்கும் மக்களுக்கிடையிலான ஒற்றுமை.
2. தேசிய இனங்களிடையே முழுவதும் சமத்துவம்.
3. எல்லா தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தேசிய சுய நிர்ணய உரிமை.

இந்தியாவில் C P M கட்சியின் நிலைப்பாடு இதற்கெதிரானது. சுயநிர்ணய உரிமையை ஒத்துக் கொள்ளக்கூடாது என்று அவர்கள் நிலை எடுத்திருக்கிறார்கள். தொடக்கத்தில் 1972- ல்ஒரு தீர்மானம் போட்டார்கள். மிக, மிக கேலிக்குரிய ஒரு வாசகம் அதில் உள்ளது. “1947-ல் இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியாவில் தேசிய இனச் சிக்கல் முடிந்துவிட்டது”. என்று எழுதியுள்ளார்கள். ஆனால் இன்னொரு கருத்தும் சொன்னார்கள் அதன் உரிமையை அங்கீகரிக்கலாம், ஆனால் இந்தப் பிரிவினை சக்திகள் இடையில் புகுந்து உழைக்கும் மக்களின் ஒற்றுமையைக் குலைத்து விடும். உரிமைக்குப் போராடவேண்டும் என்பதெல்லாம் அவர்களுக்குக் கிடையாது.

“மக்கள் ஜனநாயக இந்தியா என்பது தேசிய இனங்கள்

www.tamilarangam.net



விரும்பித் தேர்ந்த ஒன்றியமாக இருக்கவேண்டும் என்றும் எழுதினார்கள். உரிமை வேண்டும் என்று கேட்டவர்களைப் பார்த்துச் சொன்னார்கள், பார்த்தீர்களா விரும்பித் தேர்ந்த ஒன்றியம் என்று எழுதிவிட்டோம்" எனவே சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்துவிட்டோம்.

மற்றொரு பிரிவினரைப் பார்த்து "பார்த்தீர்களா நாங்கள் சுயநிர்ணய உரிமை என்று எழுதவில்லை. ஆதலால் பிரிவினைக்கு இடம் இல்லை" என்றார்கள்.

இந்த விலாங்கு வித்தையை கம்யூனிஸ்டுகள் எங்கிருந்து கற்றார்கள் என்றால், காங்கிரஸ்காரர்களிடமிருந்துதான். தென்னாப்பிரிக்காவில் இருந்து முதலில் இந்தியா வந்ததும் காந்தியார் சொன்ன முதல் கருத்தே காங்கிரஸ் அமைப்பை மொழிவழியாகப் பிரிக்க வேண்டும் என்பதுதான். அப்பொழுது ஒரு நிருபர் காந்தியாரைப் பார்த்து "மொழி வழி மாநிலங்களுக்கெல்லாம் சுதந்திரம் உரிமை என்கிறீர்களே எந்த அளவு உரிமை? என்று கேட்டார்., இந்தியாவிற்கு எவ்வளவு சுதந்திரமோ அவ்வளவு சுதந்திரம்"என்று காந்தியார் பதில் அளித்தாராம்.

சீர்திருத்தவாத சுதந்திர இயக்கத்தின் பின்னால் இந்தியாவின் அனைத்துப்பகுதிகளையும் திரட்ட வேண்டுமானால் இந்தியச் சமூகத்தின் சாதி, மொழி என்ற இரட்டைச் சிக்கலைக் கண்டு கொள்ளாமல் இருக்கக்கூடாது என்று காந்தியாருக்குத் தெரிந்து இருந்தது. அந்த அடிப்படையில்தான் காங்கிரஸ் அமைப்பு மொழிவழி மாநிலப் பிரிவுகளாகப் பிரித்து அமைக்கப்பட்டது. அன்றைக்கே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று வந்து விட்டது. பெரியார் தலைமை வகித்ததும் இந்தக் கமிட்டிக்குத்தான். கம்யூனிஸ்டுகளோ, திராவிடக்கட்சிகளோ முதலில் இதனைச் செய்யவில்லை. பின்னால் காமராசர் மெட்ராஸ் என்று சொன்னால் தான் நமது சரக்கை வாங்குவான் இல்லாவிட்டால் வாங்கமாட்டான் என்று சொன்னார். சங்கரலிங்கனார் தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கோரி உண்ணாவிரதம் இருந்த பொழுதுதான் இப்படிச் சொல்லி மறுப்புத் தெரிவித்தார்.

இந்தியாவின் பல்வேறு மொழி வழிப் பகுதிகளையும் கட்டாயப்படுத்தி சேர்த்து வைக்கக்கூடாது, அப்படிக் கட்டாயப்படுத்தி சேர்த்து வைத்திருப்பது என்பதை எங்களால் எண்ணிப்பார்க்க முடியாது அதே நேரத்தில் இந்தியா சிதறுண்டு போவதையும் சகித்துக் கொள்ளமுடியாது. இதுதான் 1946-ல் காங்கிரஸ் கமிட்டி இயற்றிய தீர்மானம். இதிலிருந்து தான் சி.பி.எம். காப்பியடித்தது. நான் முன்பு சொன்ன தீர்மானத்தை இயற்றி உள்ளது. இப்போது இவர்கள் என்ன சொல்கிறார்கள்? "சுயநிர்ணய உரிமையா? அதை நாங்கள் எதிர்க்கிறோம்".

சோவியத் ஒன்றியத்தில் கோர்ப்பசேவ் இருக்கும்பொழுது, இராணுவக் கவிழ்ப்பு ஒன்று நடந்தது. இதனை சி.பி.எம். ஆதரித்தது. அப்பொழுது கோர்ப்பசேவைக் கைது செய்தார்கள். அது ஒரு மக்கள்

www.tamilarangam.net



போராட்டமோ, புரட்சிக் குழுவின் செயலோ அல்ல அதை எப்படி சி.பி.எம். ஆதரிக்கலாம்? என்று கேட்ட பொழுது சுர்ஜித் "சோவியத் ஒருமைப்பாட்டைக் காட்டிலும் எங்களுக்கு இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிதான் கவலை" என்று பதில் சொன்னார். சோவியத் யூனியன் சிதறுண்டு போனதற்கு கோர்ப்பசேவ் சொன்ன விளக்கம் என்னவெனில் உலகத்திலேயே மிக அதிக அளவிற்கு அதிகாரம் மையப் படுத்தப்பட்ட அரசாக சோவியத் இருந்தது எனவேதான் இந்த நிலை ஏற்பட்டது.

சட்டத்தில் எல்லாம் இருந்தது ஆனால், நடைமுறையில் ஏதும் இல்லை. ஜனநாயகத்திற்குரிய எல்லா உரிமைக்கூறுகளும் எப்படி பெயர் அளவிற்கோ, அதைப் போலவே தேசியஇனங்களின் சுயநிர்ணய உரிமையும் பெயரளவிற்கே.

அரசமைப்பில் ஜனநாயகமரபு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்று எத்தனை முறை சொன்னாலும் நடைமுறையில் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகாரமாகவே இருந்தது.

அரசியல் சட்டப்படி சோவியத் யூனியனில் உள்ள எல்லாக் குடியரசுகளுக்கும் இறைமை உண்டு. பைலோ ரஷ்யா போன்ற சில குடியரசுகள் ஐ.நா. அமைப்பிலேயே அங்கம் வகிக்கிற அளவுக்கு உரிமை இருந்தது. ஆனால் அது ஒரு நாளும் சோவியத் யூனியனுக்கு மாறாக வாக்களித்தது கிடையாது என்ன காரணம்? சுய நிர்ணய உரிமையும், ஜனநாயகமும் பெயரளவிற்குத்தான் இருந்தன. இதனுடைய விளைவு சமூகத்திலும் கட்சி அமைப்பினுள்ளும் ஜனநாயகம் தொலைந்து மையப் படுத்தப்பட்ட அதிகாரக்குவிப்பு நடைமுறையில் இது கட்சியின் சர்வாதிகாரமாக மாறியது.

1957லும் 1960லும் உலகெங்கிலும் உள்ள கம்யூனிஸ்டு கட்சிகள் கூடி வெளியிட்ட அறிக்கைகளைப் படித்தோமானால், அவற்றில் உள்ள அவசரவாதம் நன்கு புரியும். 1957ம் வருட மாநாட்டில் அரசாளுகிற கட்சிகள் இருந்தன. யூகோஸ்லேவியா மட்டும் இல்லை. அதில் மாவோவுக்கும் பங்குண்டு. 1960-ம் வருட அறிக்கையிலும் சமச்ச வாசகங்கள் இடம் பெற்றிருந்தன. இவற்றின் அதிகாரம் என்னவென்றால், தேசிய இனங்களின் போராட்டம் என்பது ஏறத்தாழ முடிவுக்கு வந்துவிட்ட மாதிரியும் இனிமேல் சோசலிச புரட்சி மட்டுமே போதும் என்கிற மாதிரியும் ஏகாதிபத்தியம் இறுதி அழிவை நோக்கியும், சோசலிசம் இறுதி வெற்றியை நோக்கியும் செல்கிறது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது. அதற்கு நேர்மாறாக சோலிச நாடுகள் என்று சொல்லப்பட்டவை உட்பட எல்லா நாடுகளிலும் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் நடந்து கொண்டுள்ளன என்பதுதான் உண்மை.

இன்றைய வரலாற்றுக்கட்டம் என்பது தேசிய இன போராட்டங்களின் வரலாற்றுக்கட்டம் என்று நாம் வரையறுக்கலாம்.

www.tamilarangam.net



இதுதான் சோசலிசத்திற்கு, சமூக நீதிக்குப் படி நிலை என்று நான் கருதுகிறேன்.

## இந்திய – தேசிய இனங்களின் தொகுப்பு

இந்தியாவில் மொழிவழிச் சமூகங்கள் என்ற முறையில் கருநிலையில் தேசிய இன உருவாக்கம் என்பது அன்னிய ஆட்சி வருவதற்கு முன்பே தொடங்கிவிட்ட ஒன்று. ஆனால் இவை தேசிய இனங்களாகப் பரிணமித்த நிகழ்முறை ஏகாதிபத்தியத்தினால் மேலிருந்து திணிக்கப்பட்ட உற்பத்தி உறவுகளின் பின்னணியில் நிகழ்ந்தது. இந்தியா ஒரு தேசமல்ல, பல தெசங்களை உள்ளடக்கிய ஒரு துணைக்கண்டம் என்பதை சுட்டிக்காட்டியவர்கள் பிரித்தானியர்கள். இவர்களில் சிலர் கூறியவற்றை ரஜினிபாமிதத் "இந்தியா டுடே" நூலில் மேற்கோளாகக் கொடுத்திருக்கிறார். இந்தியா என்பது ஒரு அரசியல் பெயரல்ல. அது ஒரு புவியியல் பெயர்தான் எப்படி ஆப்பிரிக்கா என்பது ஐரோப்பா என்பதும் கண்டப்பரப்பின் பெயரே தவிர நாடுகளின் பெயரல்லவோ அதைப் போலவேதான் இந்தியா என்பதும் இந்தியாவின் பன்முகத் தன்மையை மிக விரிவாக வெளிக்கொணர்ந்தது சைமன் அறிக்கைதான். 1930 - ல் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை பன்முகத் தன்மையை வெளிக் கொணர்ந்தது மட்டுமல்ல, சற்றே மிகைப்படுத்தியும் கூறியது. அன்றைக்கு அன்னிய ஆட்சியாளர்களுக்கு அது தேவைப்பட்டது. மதத்தால், சாதியால், மொழியால், இனத்தால், இயற்கைச் சூழலால், பல வகையிலும் வேறுபட்டிருக்கிற இந்தியாவிற்கு சுதந்திரமோ, சுயாட்சியோ, தன்னாட்சியோ வழங்க முடியாது என்பதை வலியுறுத்துவதற்காகவே அவ்வாறு சொல்லப்பட்டது. அதனால்தான் வெறும் பேச்சு வழக்காக இருந்த மொழிகளையெல்லாம் சேர்த்து, 222 - க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுவதாக சைமன் அறிக்கை கூறியது. இங்கேயிருந்த சமஸ்தானங்களின் எண்ணிக்கையை எல்லாம் கூட்டி 500 - க்கும் மேற்பட் குறுநில ஆட்சிகள் இருப்பதாக அந்த அறிக்கையில் எடுத்துக் காட்டினார்கள். இப்படி சொல்வதற்கெல்லாம் ஒரு உள் நோக்கம் இருந்தது என்பதை ஒதுக்கிவிட்டுப் பார்ப்போமானால், இதை மறுக்க முற்பட்ட இந்திய தேசிய இயகத்தினுடைய தலைவர்கள், "இந்தியா ஒரு தேசம், இதற்கெனப் புராதன வரலாறும் கலாச்சாரதேசியமும் உண்டு" என்று வாதித்தார்களே தவிர, பன்முகத்தன்மையை அங்கீகரித்து வேற்றுமைக்குள் ஒற்றுமை காணமுடியும் என்பது அவர்களிடமிருந்து பதிலாக வரவில்லை. சமத்துவத்தைக் கொண்டு வர

www.tamilarangam.net



தடுத்து நிறுத்தித் தங்களது வளர்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதற்கு ஒரு சாக்காகத்தான் இதை அவர்கள் செய்வதாக நான் கருதுகின்றேன்? இந்த பன்முகத் தன்மையில் மிகவும் முக்கியமானது மொழி பற்றிய சிக்கல். இந்திய தேசிய இயக்கத்தின் சீர்திருத்தவாதத் தலைமை இந்தச் சிக்கலை எப்படித் தீர்க்க முயன்றது என்று நாம் பார்க்க வேண்டும். கட்சி அமைப்பில் மொழிவழிப்பட்ட தன்மையைக் காங்கிரசார் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தக் கட்சி, அனைத்திந்திய அளவில் நடத்தக் கூடிய மாநாடுகளில் ஆங்கிலத்தில் பேசுவதுதான் வழக்கமாக இருந்தது. ஏனென்றால் இந்திய தேசியம் என்பதை முதலில் ஒரு கருத்தாக்கமாகக் கொண்டு வந்ததும், அதற்குரிய நியாயங்கள் கற்பித்ததும், அதனை மக்களிடம் ஒரு கருத்தியலாகப் பரப்பியதும் படித்த நடுத்தர வர்க்கத்தினர்தான். இது பொதுவாக எல்லாத் தேசிய இனங்களுக்கும் கருத்தியல்களுக்கும் பொருந்தக் கூடியதுதான். இது ஒன்றும் அதிசயமல்ல, இயல்பாகவே ஒரு கருத்தியலை அறிந்து கொண்டு புரிந்து கொண்டு, உள்வாங்கிக் கொண்டு, அதை மக்களிடம் கொண்டு சேர்க்கிற வாய்ப்பு எழுதப் படிக்கத் தெரியாதவர்களிடத்தில் முதலில் வருவதில்லை.

டாக்டர் அம்பேத்கர் 1930- ல் இந்தியத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பேராயத்தினுடைய தலைவராக இருந்து உரை நிகழ்த்தியபோது சொன்னார்.

இந்தியாவில் இருக்கிற வருந்தத்தக்க நிலைமைகளை பிரிட்டன் விளம்பரப்படுத்துவதற்குக் காரணம் சாதி, மத வேறுபாடு, தீண்டாமை, ஒடுக்கப்பட்டோர் நிலைமை இவற்றைப் போக்க வேண்டும் என்பதற்காகவே சமத்துவத்தைக் கொண்டு வர வேண்டுமென்பதற்காவோ அல்ல. இந்தியாவின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தித் தங்களது வளர்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதற்கு ஒரு சாக்காகத்தான் இதை அவர்கள் செய்வதாக நான் கருதுகின்றேன்?

இந்த பன்முகத் தன்மையில் மிகவும் முக்கியமானது மொழி பற்றிய சிக்கல். இந்திய தேசிய இயக்கத்தின் சீர்திருத்தவாதத் தலைமை இந்தச் சிக்கலை எப்படித் தீர்க்க முயன்றது என்று நாம் பார்க்க வேண்டும். கட்சி அமைப்பில் மொழிவழிப்பட்ட தன்மையைக் காங்கிரசார் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தக் கட்சி, அனைத்திந்திய அளவில் நடத்தக் கூடிய மாநாடுகளில் ஆங்கிலத்தில் பேசுவதுதான் வழக்கமாக இருந்தது. ஏனென்றால் இந்திய தேசியம் என்பதை முதலில் ஒரு கருத்தாக்கமாகக் கொண்டு வந்ததும், அதற்குரிய நியாயங்கள் கற்பித்ததும், அதனை மக்களிடம் ஒரு கருத்தியலாகப் பரப்பியதும் படித்த நடுத்தர வர்க்கத்தினர்தான். இது பொதுவாக எல்லாத் தேசிய இனங்களுக்கும்

www.tamilarangam.net



கருத்தியல்களுக்கும் பொருந்தக் கூடியதுதான். இது ஒன்றும் அதிசயமல்ல, இயல்பாகவே ஒரு கருத்தியலை அறிந்து கொண்டு புரிந்து கொண்டு, உள்வாங்கிக் கொண்டு, அதை மக்களிடம் கொண்டு சேர்க்கிற வாய்ப்பு எழுதப் படிக்கத் தெரியாதவர்களிடத்தில் முதலில் வருவதில்லை. சமூகத்தின் ஒரு மூலையில் ஒதுங்கி, ஒடுக்கப்பட்டவர்களிடத்தில் அது வருவதில்லை. அந்த வாய்ப்பு முதலில் யாருக்கு வருகிறதோ அவர்கள் அதை மற்ற பிரிவினருக்குக் கொண்டு சேர்க்கிறார்கள். இதிலிருந்து அந்தக் கருத்தாக்கம் முதலில் யாரைப் பற்றியதோ அவர்களுக்கு மட்டும் உரியது, மற்றவர்களுக்கு உரியதல்ல என்று பொருள் கிடையாது. லெனின் அடிக்கடி தனது நூல்களில் வலியுறுத்துவதெல்லாம் "சோசலிசம் என்ற கருத்தாக்கம் தொழிலாளி வர்க்கத்திற்குள்ளிருந்து இயல்பாக வராது. தன்னெழுச்சியாகவே தொழிலாளர்கள் சோசலிஸ்டுகளாக மாறிவிடமாட்டார்கள். அந்த சோசலிசம் வெளியிலிருந்துதான் தொழிலாளி வர்க்கத்திற்குக் கொண்டு சேர்க்கப்படவேண்டும்" என்பதுதான்.

சோசலிச மூலவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள், அதாவது கற்பனாவாத சோசலிஸ்டுகளில் இருந்து அறிவியல் வகைப்பட்ட சோசலிசவாதிகள் உட்பட அனைவரும் நடுத்தரவர்க்கப் படிப்பாளிகளாக அமைந்துவிட்டது. தற்செயல் அல்ல. அவர்களில் அநேகமாய் யாரும் தொழிலாளி வர்க்கத்துக்குள்ளிருந்து வரவே இல்லை.

வர்க்க உணர்வைப் பெறுதல், வர்க்கத்தின் பொருளாதாரத் தேவைகளை உணர்ந்து அவற்றைக் கோரிக்கைகளாக மாற்றுதல் என்பதுதான் ஒரு வர்க்கத்தின் இயல்பான வாழ்க்கையிலிருந்து வருமே தவிர சமூக மாற்றத்திற்கான விஞ்ஞானம் என்பது சமூகத்தில் யாருக்கு முதலில் அந்த விஞ்ஞானத்தைப் பற்றிக் கொள்ளவும், பயின்று கொள்ளவும் யாருக்கு வாய்ப்பிருக்கிறதோ அவர்களுக்குத்தான் வரும். தமிழ்த் தேசியத்தினை முதன்முதலில் கருத்தாக உருவகித்தவர்கள். உயர்சாதியினராக இருப்பார்களானால் தமிழ்த் தேசியமே உயர்சாதிக் கருத்தாகிவிடாது. மற்றவர்களுக்கு இது தேவையில்லை என்றும் பொருள்படாது. அந்தத் தேசியத்தினுடைய தேவை புறநிலையில் யாருக்கெல்லாம் உண்டோ அவர்கள் அத்தனை பேருக்கும் உரித்தான கருத்தியல்தான் அது. இன்னும் சொல்லப் போனால், முதலில் உள்வாங்கிக் கொண்டவர்களுக்குத் தேவைப்படுவதைவிட பின்னாலே வந்து சேருகிறவர்களுக்குத்தான் இதனுடைய சமூகத் தேவை கூடுதலாக இருக்கும். சோசலிசம் படிப்பாளிகளை விட பாட்டாளிகளுக்குத்தான் முதலில் தேவை. படிப்பாளிகள்தான் பரப்பினார்கள் என்பதனால் பாட்டாளிகளுக்கு அது தேவையில்லை என்றாகிவிடாது.

இந்திய தேசியம்கூட முதலில் இந்திய தேசியத்தின் கருத்தியல் பிரதிநிதிகளான நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்துதான் – வெள்ளையர்களிடம் கல்வி பெற்றுப்

www.tamilarangam.net



படிப்பாளிகளானவர்களிடமிருந்துதான் வந்தது. அவர்களெல்லாம் ஆங்கிலம் படித்தவர்கள்.

"உனக்கான கோரிக்கையைக் கூட உனது மொழியில் சொல்ல முடியவில்லை உனக்கெப்படி நான் சுதந்திரம் கொடுக்கமுடியும்"? என வெள்ளையன் சொல்வான் என்பதால், இனிமேல் யாரும், காங்கிரசுக்காரன்கூட கூட்டங்களில் ஆங்கிலத்தில் பேசக் கூடாது என்று காந்தியார் உத்தரவிடுகிறார். சரி, ஆங்கிலத்தில் பேசக் கூடாதென்றால் அவரவர் தாய்மொழியிலாவது பேசிக் கொள்ளலாமா என்றால் அதுவும் கூடாது. ஏனென்றால் அது இந்திய தேசிய ஒற்றுமைக்கு ஊறாக அமைந்துவிடும். எனவே இனிமேல் எல்லோரும் இந்துஸ்தானியில்தான் பேச வேண்டும். இந்துஸ்தானி என்பது எழுத்து வடிவத்தைப் பொறுத்து இந்தி அல்லது உருது. அதில் இன்னொரு உள்நோக்கமும் இருந்தது. இந்துக்களுக்கு இந்தி, முஸ்லிம்களுக்கு உருது. இந்து முஸ்லிம் ஒற்றுமையையும் அதற்குள்ளே அடக்கியாகி விட்டது. ஆனால் இது இந்தியாவின் மொழிச் சிக்கலுக்கான தீர்வு ஆக மாட்டாது. ஆனால் காந்தியார் ஒரு புது விளக்கமளித்தார். அதாவது, இந்தியாவில் உள்ள மவுல்விகள் உருதிலும், இந்து மதபோதகர்கள் இந்தியிலும்தான் இந்தியா முழுமையிலும் பேசுகின்றனர். மக்கள் அதனைப் புரிந்து கொள்கின்றனர். எனவே, இந்துஸ்தானியை இந்தியாவில் தேசிய மொழி ஆக்கி விடலாம் என்றார் காந்தி. நமக்கு நன்றாகத் தெரியும், இது உண்மையல்ல. ஆனால் காங்கிரசுக் கட்சியின் மொழி அணுகுமுறை இதுதான். 'ஆம் நாங்கள் பல மொழி பேசுகிற மக்கள்தான். பல தேசிய இனங்கள் வாழ்கிற நாடுதான். ஆனால் அதற்காக அன்னிய ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை' என்பதுதான் இந்தச் சிக்கலுக்குரிய ஜனநாயக முறையிலான விடையாக இருக்கமுடியும். அந்த விடை காங்கிரசுக்காரர்களிடமிருந்து வரவில்லை. சாதிகள் இருப்பதை ஒப்புக்கொண்டு பாரதி பாடினார்.

"ஆயிரம் உண்டிங்குசாதி எனில்
அன்னியர் வந்துபுகல் என்ன நீதி?"

மொழிகள், தேசிய இனங்கள் தொடர்பாக இது போன்ற பதிலை காங்கிரசு இயக்கம் தரத் தவறியது. ஆக மொத்தத்தில் இந்திய தேசியக் காங்கிரஸ் என்பது, அது சாதித்த அந்த அரசியல் அதிகார மாற்றம் என்பது, இந்தியாவின் தேசிய இனச்சிக்கலைத் தீர்த்துவிட்டது என்ற கூற்று சரியில்லை. இது இன்றைக்குக் கண்கூடாகத் தெரிகிற உண்மை.

ஆனால் இந்தியாவில் 'பொதுவுடைமை இயக்கம் 1920-களிலே தொடங்கி இயங்கி வந்த இயக்கம் . இடையிடையே தடை செய்யப்பட்டது உண்டு. அவர்கள் இந்தக் காலம் முழுவதும் தேசிய இனச் சிக்கல் குறித்து என்ன நிலை எடுத்திருந்தார்கள். 1912-லேயே அப்படி இருந்தும்கூட மக்கள் இயக்கமாகப் பொதுவுடைமை இயக்கம் வளர்ச்சி பெற்ற பகுதிகளில் அந்த மக்களுடைய கோரிக்கைகளை

www.tamilarangam.net



ஸ்டாலின் "இந்தியாவில் முதலாளித்துவ வளர்ச்சியினால் அதுவரை உறக்கத்திலிருந்த தேசிய இனங்கள் விழிப்புற்றெழும்" என்றார். ஆனால் இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கமானது 1942-வரை தேசிய இனச் சிக்கல் குறித்து ஒரு தீர்மானம்கூட இயற்றவில்லை. 1942-இலும் கூட ஒரு நிலை எடுக்க வேண்டியதன் தேவை பாகிஸ்தான் கோரிக்கையினால்தான் வந்தது.

1940-இல் இரண்டாம் உலகப் போரின் பின்னணியில் வெள்ளையாட்சிக்கு ஏற்பட்டுள்ள போர் நெருக்கடியைப் பயன்படுத்தி அவரவர் முடிந்ததைக் கறக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருந்த போதுதான், பாகிஸ்தான் கோரிக்கையை முஸ்லிம் லீக் எழுப்பியது. அப்படிக் கோரும்பொழுதுகூட, ஒரு முஸ்லிம் அரசு வேண்டும் என அந்தக் கோரிக்கை எழவில்லை. வடக்கிலும் வடகிழக்குப் பகுதியிலும் பல்வேறு முஸ்லிம் சுயாட்சி அரசுகள் ஒன்றிணைந்த ஒரு முஸ்லிம் கூட்டாட்சி அரசு என்ற வகையில்தான் அந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டது.

இதற்குப் பின்னர்தான் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் மத்தியக் குழு தோழர் அதிகாரி தலைமையில் ஓர் ஆணைக்குழுவை அமைத்தது. 1942-இல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி இதற்கான தீர்மானத்தை இயற்றியது. அந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதி ( இதுதான் கம்யூனிஸ்டுகட்சி முதன்முதலாக தேசிய இனப் பிரச்சினை குறித்து எடுத்த முதல் நிலைப்பாடு).

"இறைமை வாய்ந்த அரசுகளின் விரும்பிச் சேரும் உரிமை கொண்ட ஜனநாயக ஒன்றியத்திற்காகவே கம்யூனிஸ்ட் கட்சி போராடுகிறது. ஒரே ஒன்றியத்தில் சகோதரத்துவத்துடன் இணைந்து இருப்பதன் மூலம் அனைவரின் ஒத்துழைப்பும் கொண்டு சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் வறுமைச் சிக்கலுக்குத் தீர்வு காணவும், அனைவரும் இணைந்து ஓர் ஒன்றியமாக இருப்பதுதான் மிகச் சிறந்தது என்று அது உறுதியாக நம்புகிறது. ஆனால், மேலே சுட்டியதுபோல் சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டை பயன்படுத்துவதின் அடிப்படையில்தான் இந்திய ஒற்றுமையைப் பாதுகாக்க முடியும்".

அதே தீர்மானத்தில் இந்தியாவில் எத்தனை தேசிய இனங்கள் உள்ளன என்பதையும் பட்டியலிட்டிருந்தனர். அதன்படி, தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மராட்டியம், குசராத், இராசஸ்தான், சிந்து, பலுசிஸ்தான், பத்தான்லாந்து, காஷ்மீர், பஞ்சாப், இந்துஸ்தானம், பீகார், அஸ்ஸாம், ஒரியம், வங்காளம் இவையெல்லாம் தேசங்கள் என்று எடுத்துக் காட்டினார்கள். அப்பொழுதும்கூட இந்திய ஒற்றுமையைப் பேணுவதற்குரிய உத்திகளில் ஒன்றாகத்தான் இந்தச் சிக்கல் அணுகப்பட்டதே அன்றி வேறில்லை. ஆனால் இன்று அவர்கள் எடுத்துள்ள நிலையைப் பார்ப்போமானால், எந்த அளவுக்குத் தங்களது நிலையிலிருந்து சரிந்து பின் வாங்கியுள்ளனர் என்பது நமக்குப் புரியும்.

www.tamilarangam.net



அவர்கள் பிரதிபலிக்க நேரிட்டது அதனுடைய விளைவுதான். 1947-க்குப் பிறகு மொழிவழி மாநிலம் என்பதை காங்கிரசுக்கட்சி தயங்கித்தயங்கி இழுத்தடித்தபோது, மொழிவழி மாநிலக் கோரிக்கைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுக்கட்சியும் பங்குபெற்றது.

குறிப்பாக தெலங்கானா விவசாயிகள் போராட்டம் என்பது, நைசாமுக்கும் பிரபுத்துவத்துக்கும் மட்டும் எதிரானதல்ல, தெலுங்கு தேசியத்திற்குமான போராட்டமாக அது இருந்தது. அந்தப் போராட்டத்தின் முழக்கமே, விசாலாந்திரத்தில் மக்கள் இராச்சியம் என்பதுதான். ஏனென்றால் ஆந்திரதேசம் துண்டாடப்பட்டு, அதன் ஒரு பகுதி நைசாமின் ஆளுகையில் ஐதராபாத் சமஸ்தானத்திலும் மற்றொரு பகுதி பிரித்தானிய இந்தியாவில் ஒரு கூறாக சென்னை மாகாணத்திலும் இடம்பெற்றிருந்தது.

அதே போல கேரளத்திற்கான போராட்டத்திலும், கன்னட தேசியத்திற்கான போராட்டத்திலும் அன்றைக்கிருந்த கம்யூனிஸ்டு கட்சி ஈடுபட்டது. முறையாக அவர்கள் தொடர்ந்து சென்றிருந்தால் இந்தியாவின் திசைவழியே, வரலாறே வேறுமாதிரியாக இருந்திருக்கும். ஆனால் அனைத்திந்தியப் புரட்சி என்பது மையப்படுத்தப்பட்டதால், தேசிய இனப் போராட்டங்கள் அவற்றின் தர்க்கரீதியான வளர்ச்சிக்குக் கொண்டுசெல்லப்படவில்லை. விசால ஆந்தரதேசம் உருவாக்கப்பட்டதா, இல்லை. ஆந்திர மாநிலம்தான் உருவானது. கேரள தேசத்திற்குக் பதிலாக கேரள மாநிலம் உருவானது.

தமிழகத்திலும் எல்லைப் போராட்டங்கள் நடந்தன. ஆந்திரத்துடனோ, கேரளத்துடனோ ஒப்பிடும் அளவிற்கு தமிழ்த் தேசிய எழுச்சி ஏற்படாமல் போனதற்கு இரு காரணங்கள் :

1. திராவிட இயக்கம் சென்னை மாகாணம் முழுவதையும் உள்ளடக்கிய திராவிடப் பார்வையில் இருந்தது.
2. கம்யூனிஸ்டுக் கட்சி இந்திய தேசியக் கண்ணோட்டத்தில் இருந்தது.

எனவே எல்லைப் போராட்டம் ஒரு சில சதுர மைல் நிலப்பரப்பை மீட்பதற்கான போராட்டமாக மட்டும் இருந்தது. தேசிய இனப் போராட்டமாக வடிவு கொள்ளவில்லை. காங்கிரசுக் கட்சியிலிருந்த இந்திய தேசிய வாதிகளும் இந்த எல்லைப் போராட்டங்களில் முன்னுக்கு நின்றனர். திருத்தணிப் போராட்டத்தில் ம.பொ.சி. பங்கு பெற்றார். கன்னியாகுமரியைத் தக்க வைத்துக் கொள்ள நேசமணி, பி. எஸ்.மணி போன்றோர்கள் இதெல்லாம் இந்திய தேசியத்தோடு எந்த முரணையும் காணவில்லை. இன்றும் நமது எல்லைப்பகுதிகள் முழுமையாக மீட்கப்படவில்லை.

மதவழிப்பட்ட வகையில் பாகிஸ்தான் பிரிந்தபோது கம்யூனிஸ்ட் கட்சி அதனை ஆதரித்தது. அதுகூட இந்திய ஒற்றுமைக்கு காங்கிரசும், முஸ்லிம் லீக்கும் ஒற்றுமையாக இருத்தல் அவசியம் என்ற

www.tamilarangam.net



அவர்களது உள்ளீடு என்பது தமிழ்த் தேசியம்தான். இன்றைக்கு அதனுடைய நிலை என்ன என்று பார்த்தால், இன்று (24.11.96) இந்து ஏட்டில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள், "தமிழ்த் தேசியம் அன்றும் இன்றும்" என்ற கட்டுரையில் "தமிழர்களுக்கு ஒரு தாயகம், தமிழ்த்தேசியம் என்ற முழக்கங்கள் தமிழகத்தில் ஒரு காலத்தில் பிரிவினைக் கோரிக்கைக்கு மேடை அமைத்துக் கொடுத்தன. ஆனால் இன்று அதே இயக்கங்கள் இந்திய தேசியத்தினைத் தாங்கி நிற்கக்கூடிய தூண்களாக மாறிவிட்டன." என்று எழுதுகிறார்கள். அதாவது அந்தக் கட்டுரையின் சாரம் என்பது, திராவிட இயக்கம் என்பது, இன்று இந்திய தேசியத்திற்கு நல்ல பாதுகாப்பான சக்தியாக உள்ளது.

தில்லியில் மாநிலக் கட்சிகள் கூட்டணி அமைத்து விட்டதற்காக சிலர் மகிழ்ச்சி அடைகின்றனர். இனிமேல் கூட்டாட்சி வந்துவிடும் என்றெல்லாம் பேசுகிறார்கள். ஆனால், இந்த மாநிலக் கட்சிகளின் முகத்திரை, இந்திய தேசியத்திற்கு மிகப் பாதுகாப்பானதாக இருக்கின்றது என்பதே உண்மை.

இந்திய தேசியவாதிகள் இப்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எப்படி இந்த நிலை வந்தது? இந்தச் சீரழிவு பல்வேறு தேசிய இனங்களுக்கு எப்படி நேர்ந்தது என்று பார்த்தோமானால் இங்குதான் இந்திய அரசமைப்பு குறித்து, இந்திய ஜனநாயகம் குறித்து, தமிழ்த் தேசியம் என்ற கண்ணோட்டத்தில், மக்களின் நலன், மக்களுக்கு சமூக நீதி என்ற கண்ணோட்டத்தில் ஒரு தெளிவைப் பெற்றாக வேண்டும். இல்லையேல் இந்திய அரசமைப்பை நாம் விளங்கிக் கொள்ள முடியாது. ஆட்சியில் இருப்பது தேவகவுடாவாக இருக்கலாம் அல்லது நரசிம்மராவாக இருக்கலாம் அங்கே தமிழ்நாட்டுக்குத் துணை அமைச்சர் பதவி, இணை அமைச்சர் பதவி கிடைக்கலாம், அல்லது முழு அமைச்சர்பதவி கிடைக்கலாம். அதனாலெல்லாம் அரசு, அரசமைப்பின் தன்மை மாறிவிடுவதில்லை.

ஒரு தேசிய இனமாக அல்லது தேசமாக நம்மை திராவிட இயக்கத்தினரோ அல்லது சட்டப்பூர்வ இடதுசாரிகளோ அங்கீகரிக்கிறார்களா என்பது முதல் கேள்வி. தேர்தலில் தோற்றுப் போகிற போதெல்லாம் "ஐயோ, தாழ்ந்த தமிழகமே!" என்பது வென்று விட்டால் "உயர்ந்து வந்த தமிழினமே!" என்று மகிழ்வது. தோற்றால் தூற்றுவது, வென்றால் போற்றுவது. இப்படி வார்த்தை ஜாலங்களுக்குள் ஒளிந்திருக்கின்ற செய்திகளை வெளிப்படுத்திப் புரிந்து கொள்ள வேண்டுமானால், எந்த அரசமைப்பிற்குள் இவர்கள் ஆட்டமிடுகிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

நம்மை ஒரு தேசிய இனமாக இந்த அரசு ஏற்கவில்லை என்பதிலிருந்துதான் தேசிய இனச்சிக்கலே தொடங்குகிறது. பிரதமர் பதவி என்ன உ.பி. மாநிலத்திற்கே பட்டா போட்டாயிற்றா என்று முன்பெல்லாம் குறை சொல்லிக் கொண்டிருந்தீர்கள். பிறகு

www.tamilarangam.net



வேட்டி கட்டியவரா, பைஜாமாப் போட்டவரா ஆட்சி நடத்துகிறவர் என்பதை வைத்துத்தீர்மானிக்கிற செய்தி அல்ல. நமக்கு இன்று கண்கூடாகத் தெரிந்துவிட்டது. வேட்டி கட்டியவர் பிரதமர் ஆனாலும் காவிரி வற்றித்தான் கிடக்கிறது. அல்லது பைஜாமாப் போட்டவர் போனவுடன் இந்திக்குப் பதில் தமிழ் ஆட்சிமொழியாக மாறியா விட்டது? எனவே, அடிப்படையில் இருந்து வந்தாக வேண்டும். இந்த அமைப்பு எப்படிக் கட்டப்பட்டிருக்கிறது. "ஒரு ஆளுகிற வர்க்கம் ஆளப்படுகின்ற வர்க்கத்தினரிடமிருந்து மிகச் சிறந்த சக்திகளை இனம்கண்டு தன் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்கிறபொழுது, அது மிகவும் வலிமை பெற்றதாகிறது, ஆகவே ஆபத்தானதாகின்றது" என்று மார்க்ஸ் சொல்லுவார்.

"ஆளும்வர்க்கம் பதுங்கிக்கொள்வதாலேயே அது பாதுகாப்பானது அல்ல. அந்த அளவு மேலும் ஆபத்தானது. எனவே முன்னிறுத்தப்படுகிற ஆட்களை வைத்துத் தீர்மானிக்கப்படுவதல்ல இது. தேசிய இன ஒடுக்குமுறை என்றால் என்ன? தேசிய இனத்திற்கு அடிப்படைக் கூறுகளில் ஒன்றாக மொழி இருக்கிறதென்றால் அந்த மொழியின் வளர்ச்சிக்கு இருக்கிற தடை என்பது அந்த இனத்தின் மீதான தடை அல்லது ஒடுக்குமுறை இருப்பதற்கான ஒரு மூலம். மொழிச் சிக்கலை வெறும் மொழிச் சிக்கலாய் நாம் பார்த்ததின் விளைவுதான் 65-ஆம் ஆண்டு இந்திஎதிர்ப்புப்போராட்டம் எழுந்து அடங்கிய புயல் போலாகிவிட்டது. அதே மொழிப் போராட்டம் ஈழத்திலும் வந்தது. ஸ்ரீ என்ற சிங்கள எழுத்தை எதிர்த்துப் போராடினார்கள், ஆட்சி மொழிச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார்கள். அந்தப் போராட்டம் அப்படியே நின்று விடவில்லை. சில ஆட்கள் மாறினார்கள். சிந்தனையால் வயது முதிர்ந்தவர்கள்ஒதுங்கிப் போனார்கள். ஆனால் அரசியலில் இளமையோடு இருந்தவர்கள், தொடர்ந்து அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள் இன்று அது தேசிய இன விடுதலைப் போராட்டமாகக் மாறியுள்ளது. 1965-ஆம் வருடம் மதுரை, தெப்பக்குளக் கரையில் இருந்து அரசியல் சட்டத்தைக் கொளுத்திய மாணவர் தலைவர்கள் இப்பொழுது எங்கே என்று தேடிப்பாருங்கள். இன்று "மாலை மலர்" பார்த்துவிட்டுதான் சொல்லவேண்டும் யார் எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று. ஆனால் ஈழத்திலே அந்த மாணவப் போராட்டத்தின் தளபதிகள் இன்று விடுதலை போராட்டத்தின் தளபதிகளாகக் களத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மொழிச் சிக்கலை வெறும் மொழிச் சிக்கலாகப் பார்க்கவில்லை. தேசிய இனப் பிரச்சினையின் ஒரு கூறாக எண்ணினார்கள். அவர்களுக்கு ஒரு போதும் குழப்பம் வந்ததேயில்லை. மொழியில்லாமல் மனிதன் இல்லை. மனிதன் மொழியைப் படைத்தது எப்படி உண்மையோ, அதே போலத்தான் மொழி மனிதனைப் படைத்தது என்பதும் உண்மை.

ஆனால் ஒருவர் பேட்டியிலே சொல்கிறார். நான் தமிழன் என்பதைக் காட்டிலும் இந்தியன் என்பதைக் பாட்டிலும் மனிதன் என்பதில் பெருமை கொள்கிறேன். இந்தியன் என்று ஒரு ஜீவராசி இதுவரை இல்லை.

www.tamilarangam.net



ஆனால் நீ மனிதனாக இருக்க வேண்டுமானால் தமிழனாக இருக்க வேண்டும். இந்தக் குழப்பம் ஈழத்தில் ஒரு போதும் கிடையாது.

ஈழத்தில் 1948-லேயே தந்தை செல்வா தெளிவாக அறிவித்தார். தனி நாடு கேட்கவில்லை, விடுதலை கேட்கவில்லை. ஆனால் தமிழர்கள் யார்? சிங்களர் யார் என்பதில் அவருக்குக் குழப்பமில்லை. "நாம் தமிழ்த் தேசிய இனம், சிங்களர்கள் மற்றொரு தேசிய இனம். இப்படி நாம் இரண்டு வேறு இனமாக இருப்பதனாலேயே பிரிந்துபோக வேண்டுமென்றோ சண்டை போட்டுக் கொள்ள வேண்டுமென்றோ நான் கேட்கவில்லை".

"இரு மொழிகள் – இரண்டுக்கும் சமத்துவம் என்பதை ஆளுகிற அரசு ஒத்துக் கொள்ளுமானால், ஒரே நாடாக இருப்போம். இல்லை சிங்களம் மட்டும்தான் என்றால் நாம் இரு நாடுகளாகப் போய்விடுவோம்" என்றார்.

ஒரு சிங்கள தேசிய இனவாதி கொல்வின் டி சில்வா, SWRD பண்டார நாயகாவைப் பார்த்து "நீங்கள் இரு மொழிகளை ஒத்துக் கொண்டால் ஒரு நாடு கிடைக்கும். இல்லை சிங்களம் மட்டும்தான் என்றால் ஒரு மொழி இரண்டு நாடுகள் கிடைக்கும்" என்றார். அதே கொல்வின் டி சில்வா பின்னால் திருமதி பண்டார நாயகாவின் கட்சியில் சேர்ந்து சிங்கள பௌத்தக் குடியரசின் அரசமைப்பை வரைந்தவர்களில் ஒருவர் என்பது தனிச் செய்தி.

இன்றைக்கும்கூட ஈழத்தில் உள்ள பல்வேறுபோராளிக் குழுக்களுக்கும் சிங்களப் பேரினவாத ஆட்சியின் கீழே இருக்கிற போராளிக் குழுக்களுக்கும் கூட இதில் குழப்பமில்லை சேர்ந்திருப்பதா பிரிந்திருப்பதா என்பதில்தான் கருத்து வேறுபாடு. மற்றபடி தமிழ்த் தேசிய இனம் தனித்தது என்பதில் குழப்பமில்லை. ஆனால் இங்கு அப்படி இல்லை.

"தமிழர்களாகவும் இருப்போம், இந்தியர்களாகவும் இருப்போம் அதுவும் நல்ல இந்தியர்களாக இருப்போம்", என்று பெரும் குழப்பம். அவசர நிலைக் காலத்தில் சஞ்சாய் காந்தி "Be Indian, buy Indian Goods" என்ற முழக்கத்தை வெளியிட்டார்.

அதில் நமது கலைஞர் ஒரு திருத்தம் சொன்னார்:
"Be good Indians, buy Indian goods".

இந்தியன் என்றொரு தேசிய இனம் கிடையாது. திராவிடம் என்ற மரபினத்தோடு தேசிய இனத்தை முதலில் குழப்பினார்கள். பின்னால் இந்தியா என்ற அரச சமுதாயத்தோடு தமிழ்த் தேசிய சமுதாயத்தைக் குழப்பினார்கள். அது இன்றுவரை தொடர்கிறது. மாநில சுயாட்சி கேட்கிறார்கள். மாநில மக்களுக்கு நன்மை, உரிமை வேண்டுமென்று கேட்கிறீர்களா என்றால் "இல்லை, இந்திய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்க இதை விட்டால் வேறு வழியில்லை என்று பதில் சொல்கிறார்கள். ஆக எல்லாமே இந்திய ஒற்றுமை என்ற

www.tamilarangam.net



புனிதப்பசு. அதனிடம் இவர்களுக்கு வேண்டியதைக் கறந்து கொள்ள வேண்டும் அவ்வளவுதான். இந்த முதலாளி மறுப்பு என்பதுதான் இன ஒடுக்கு முறையின் தொடக்கம். பாலஸ்தீனர்கள் தங்களது நாட்டை விட்டுத் துரத்தப்பட்டார்கள். நாடும் அரசுரிமையும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன. வாழ்வுரிமை பறிக்கப்பட்டது. ஆனால் இதையெல்லாம் செய்வதற்கும் முன் சியோனிசம் முதலில் செய்த காரியம் என்னவென்றால், பாலஸ்தீனர் என்ற முகவரியை மறுத்ததுதான். சமீபத்தில் யாசர் அராபத் இஸ்ரேலிய அரசாங்கத்திடம் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளும் வரையில் பாலஸ்தீனர்கள் என்று ஒரு இனம் இருப்பதாகவே இஸ்ரேலிய அரசு காட்டிக் கொள்ளவில்லை. அவர்களுக்கு உரிமை உண்டா இல்லையா என்பது அடுத்த பிரச்சினை. அவர்களுடைய இருப்பையே மறுதலித்ததுதான் முதலில் நடந்தது.

இந்திய அரசின் பார்வையும் இதுதான். இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களும் இருப்பதை மறுக்கிறார்கள். தமிழர்கள், இந்தியாவைப் பொறுத்தவரை, தமிழர்கள் என அழைக்கப்படுபவர்கள் என்றுதான் பொருள் (So-called Tamils.) தமிழர்கள் யார்? மாநில மக்கள், வட்டார மக்கள். அவர்கள் ஒரு தேசிய இனமல்ல. தமிழ் மொழி வட்டார மொழிதான். அப்படிப் பார்த்தால் இந்தி உட்பட எல்லாமே வட்டார மொழிகள்தானே? ஆனால் இந்தி தேசிய மொழியாம்! அதை மேலும் வளப்படுத்த வேண்டுமாம்! ஏனைய மொழிகளிடமிருந்தெல்லாம் சொல் வளத்தை பெற்று அதற்குக் கொடுக்க வேண்டுமாம். அந்த ஏனைய மொழிகளிலும் கூட மற்ற மொழிகளை விட சமக்கிருதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமாம். இவை இந்திய அரசமைப்புச் சட்டம் எழுதி வைத்துள்ள வாசகங்கள்.

ஒரு காலத்தில் ஐரோப்பாவில் மதக் குருமார்கள், பிரபுக்கள் கை ஓங்கியிருந்த பொழுது அங்குள்ள பல்வேறு இன மொழிகள், வட்டார மொழிகள் (Vernacular Languages) என்ற பெயரில் ஒடுக்கப்பட்டன. ஆங்கிலத்திற்கும் அதே நிலைதான் இருந்தது. அதைப் போலவே தமிழ்நாடு பெயருக்கு நாடாகவும் உண்மையில் மாநிலமாகவும், தமிழ்மொழி வட்டார மொழியாகவும் கருதப்படுவது ஏதோ அந்த நேரத்தில் வருகிற பிரதமர், ஆளுகிற அமைச்சரவையின் முடிவல்ல. அது இந்திய அரசமைப்பின் அடிப்படைத் தன்மை.

## இந்திய அரசியல் சட்டம் ஒரு மோசடி

அரசமைப்பின் முகவுரை குறித்து கிருஷ்ணய்யர் போன்ற நல்ல நீதிபதிகள், சட்ட அறிஞர்கள் சொல்லுவார்கள். "இது ஒரு புரட்சிகரமான முகவுரை". "இந்திய மக்களாகிய நாம்" என்று அந்த முகப்புரை தொடங்கும். இந்த அரசமைப்புச் சட்டம் என்பது அரசர்கள் வழங்கியதல்ல, மதகுருமார்கள் சொன்னதல்ல, சட்டம் செய்ய வேண்டி புனிதக்கட்டளை வாங்கி வந்தவர்கள் தந்ததல்ல. இது

www.tamilarangam.net



மக்களாகிய நாமே நமக்கு வழங்கிக் கொள்கிற ஒரு சட்டம்.

ஆனால் உண்மை என்ன என்றால் இந்த முகப்பிரையிலிருந்துதான் இந்திய அரசின் இன ஒடுக்குமுறையே தொடங்குகிறது. வெறும் சொல்லில் என்ன இருக்கிறது என்று பாராமல் ஆராய்ந்தோமானால் இந்திய மக்களாகிய நாம்" என்ற தொடக்கம் இந்தியா முழுவதையும் எல்லா இன மக்களையும் ஒரே இன மக்களாகக் கருதுகின்றது என்று பொருள். இது உண்மையில் புரட்சிகரமாகக்கூட வேண்டாம் ஜனநாயகப் பூர்வமாக இருக்க வேண்டுமானால் "இந்திய மக்களினங்களாகிய நாம்" என்றுதான் தொடங்கவேண்டும். People என்று சொல்வது நவீன அரசியலில் தேசிய இனத்திற்கு நிகரான சொல். ஜார் ஆட்சியை லெனின் " Prison house of Peoples " என்று சொன்னதை 'தேசிய இனங்களின் சிறைக்கூடம்' என்று நாம் மொழி பெயர்க்கிறோம். இன்று இந்தியாவில் State என்பதை இரண்டு விதமாகப் பொருள் படுத்துகிறோம் ஒன்று அரசு, மற்றொன்று மாநிலம். அரசுக்கும், அரசாங்கத்திற்கும் வேறுபாடு உண்டு. வெறும் நிர்வாகம் அல்ல அரசு என்பது அது நாட்டையும் சேர்த்துச் சொல்லுகிற ஒரு சொல். ஒரு தனி அரசுக்காகப் போராடுகிறபொழுது அந்த அரசுக்கு இறைமை வேண்டும். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இருந்த சமஸ்தானங்கள் எனலாம் States என்று அழைக்கப்பட்டன.

இப்போதெல்லாம் காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்று அடிக்கடி சொல்கிறார்களே அதன் உண்மையான பொருள் எந்தக் காலத்திலும் அது இந்தியாவின் பகுதியாக இருந்தது இல்லை என்பதுதான். அலகாபாத் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி என்று எந்தப் பிரதமரும் சொல்வதில்லை அல்லவா?.

ஆங்கிலேயே ஆட்சிக் காலம் முழுவதும் ஒரு தனி சமஸ்தானமாக இருந்த பகுதி காஷ்மீர். பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்களாக இருந்த போதிலும் இந்து அரசர்களால் ஆளப்பட்ட பகுதி. அத்தகைய சமஸ்தானங்களுக்குத்தான் அன்று State என்று பெயர். வெள்ளையர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெரிய அளவில் இருந்த மாநிலங்கள் 'Presidency' என்று அழைக்கப்பட்டன. அதற்குட்பட்ட பகுதிகள் மாகாணங்கள் (Provinces) என்று அழைக்கப்பட்டன. ஏன் ஒன்றை State என்றார்கள்? ஒன்றை மாகாணம் என்றார்கள்? மாகாணங்களுக்கும், மாநிலங்களுக்கும் இறைமை கிடையாது. ஆனால் சமஸ்தானங்களுக்கு இறைமை உண்டு. தனி அரசு என்றுதான் பொருள்.

1857 சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர் விக்டோரியா மகாராணி வெளியிட்ட அறிக்கையில் தெளிவாக அறிவித்துவிட்டார்கள். "சமஸ்தானங்களெல்லாம் தனி அரசுகள், இனிமேல் பிரித்தானிய ஆட்சி உங்கள் ஆட்சியில் குறுக்கிடாது. நீங்களே ஆண்டு கொள்ளுங்கள்". எனவே இறைமை இருந்தால் அவை States. இறைமை இல்லாதவை மாநிலங்கள். இன்றைக்கு இந்தியாவில் தமிழ் நாடு, ஆந்திரம் இவையெல்லாம்

www.tamilarangam.net



மாநிலங்கள். இன்றைக்கு இந்தியாவில் தமிழ் நாடு, ஆந்திரம் இவையெல்லாம் மாநிலங்கள். இவற்றிற்கெல்லாம் இறைமை உண்டா? கிடையாது. உண்மையில் தமிழ்நாடு, ஆந்திரம் இவையெல்லாம் தேசங்கள். அப்படியானால் இந்தியா என்பது தேசங்கள் அடங்கியிருக்கிற ஒரு அரசு. It is a State of Nations ஆனால் அரசமைப்பு எப்படிக் காட்டுகிறதென்றால் A nation of States என்று காட்டுகிறது.

பல தேசங்களை உள்ளடக்கிய இந்திய அரசு தன்னை ஒரு தேசமாகக் காட்டிக் கொண்டு, தேசங்களை மாநிலங்களாகக் காட்டுகிறது. அதனுடைய நடைமுறை விளைவு என்ன? தேசத்திற்கு என்ன வேண்டும்? முதலில் ஒரு இனம் வாழ வளர நிலப்பரப்பு கட்டாயம் வேண்டும். சந்திர மண்டலத்திலே போய் இனம் வளர்க்க முடியாது. தேசம் என்பது கொடியும் பெயர்ப் பலகையும் மட்டுமல்ல. இவையெல்லாம் அடையாளங்கள். தேசம் என்பது மக்கள் சமூகம். நிலப்பரப்பு ஒப்புக் கொள்ளப்படாமல் தேசம் என்ற பெயருக்கு அர்த்தமில்லை. மாநிலத்தையே நாளைக்குப் பெயர் மாற்றிவிடலாம். நம் வேட்டி கட்டிய பிரதமர் இருக்கிறார் இதெற்கெல்லாம். 'Nation' என்று பெயர் மாற்றிவிடலாம். அப்போது இது நாடாகி விடுமா? ஆகாது.

நீங்கள் அடிக்கடி கேள்விப்பட்டிருப்பீர்கள். இருநாட்டு தலைவர்கள் சந்தித்துக் கொள்ளும்பொழுது தவறாமல் ஒரு ஒப்பந்தம் போடுவர். என்ன ஒப்பந்தம் அது?" ஆட்சிப் பரப்பின் கட்டுக்கோப்பை நாங்களும் ஒருவருக்கொருவர் ஒப்புக் கொள்கிறோம்" என்பதுதான் அது செவில்ஸ் நாட்டுப் பிரதமர் இந்தியாவிற்கு வந்தால்கூட உன்னுடைய பரப்பில் நான் குறுக்கிடவில்லை, என்னுடைய பரப்பில் நீ குறுக்கிட வேண்டாம் என ஒப்பந்தம் போடுவர். ஏன்? ஒரு தேசத்திற்கு அதன் எல்லைகள் என்பது மிகவும் முக்கியம். பூடானுக்கு நிலப்பரப்பு உத்தரவாதம் உண்டு, இந்தியாவின் தயவு இருக்கிற வரைக்கும் பக்கத்திலுள்ள மாலத்தீவு நேபாளத்திற்கும்கூட உண்டு. ஆனால் தமிழ்நாட்டுக்கு உண்டா? யார் முதல்வரானாலும் கிடையாது.

ஈழப் போராட்டத்தின் முதன்மையான சிக்கல் என்ன? தாயகப் பரப்பிற்காக அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் இன்று சிங்கள மாவட்டங்களாக இருக்கிற பல பகுதிகள் ஒரு காலத்தில் தமிழர்களின் ஆட்சிப் பரப்பாக இருந்தது. அங்கே சிங்களர்கள் குடியேற்றப்பட்டார்கள்.

சந்திரிகா அம்மையார் ஒரு திட்டம் வெளியிட்டார். அதிகாரப் பரவலாக்கம், இது மையத்திலிருந்து கலைத்துப் பெறப்படுவதல்ல. மையம் பார்த்துக் கொடுப்பது என்று பொருள். ஈழத் தமிழர்கள் இதை அரசியல் பொதி என்று அழைத்தார்கள். அந்தத் திட்டத்தில் அவர், நிலப்பரப்பை மறுவரைவு செய்ய அதாவது மக்கள் தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப எல்லையை மறுவரைவு செய்ய முன்மொழிந்தார். அப்படிப் பார்த்தால் தமிழர் மாவட்டமாக இருக்கிற

www.tamilarangam.net



அம்பாறை முழுவதும் சிங்களப் பகுதியாக மாறிவிடும். அவ்வளவு சிங்களக் குடியேற்றம் நடத்தப்பட்டுள்ளது. திரிகோணமலையில் ஒரு பகுதி போய்விடும். மட்டக் களப்பில் ஒரு பகுதி போய்விடும். கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 7000 சதுர கிலோ மீட்டரைத் தமிழர்கள் இழக்க நேரிடும். அது மட்டுமல்ல தமிழ் ஈழத்தின் தொடர்ச்சி துண்டிக்கப்படும். இவற்றை நாம் நன்றாகப் புரிந்து கொள்கிறோம். இது போன்ற சிக்கல் தமிழகத்திற்கும் உண்டு என்பது நமக்குத் தெரியுமா?

இனம் வாழ்வதற்கும் வளர்வதற்கும், அதன் உரிமையை, நீதியை நிலை நாட்டிக் கொள்வதற்கும் அதற்கென்று ஒரு மண் பரப்பு வேண்டும். தமிழ் மக்களுக்கு இந்தியாவின் ஆட்சி அமைப்பில் அதற்கான உத்தரவாதம் உண்டா? இல்லை. இப்படி எந்த உரிமையுமே இல்லாத ஒரு அரசு யாருக்கு என்பதில் மிகப் பெரிய அரசியல் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. யார் முதல்வராவது? யார் அமைச்சர்களாவது? யார் மாண்புமிகு? யார் வணக்கத்திற்குரியவர்? இந்தப் பதவி எல்லாம் ஏதாவது செய்யுமா, நமது நிலப்பரப்பை உத்தரவாதம் செய்ய இந்தியாவிற்கு மட்டும்தான் நிலப்பரப்பு உத்தரவாதம் உண்டு, இந்தியாவிற்குட்பட்ட எந்த மாநிலத்திற்கும் நிலப்பரப்பு உத்தரவாதம் இல்லை. அதுவும் என்ன எழுதி வைத்திருக்கிறார்கள்? இந்தியாவில் என்னென்ன நிலப்பரப்புக்கள் உண்டு எனப் பட்டியலிட்டுள்ளார்கள். முதலில் மாநிலம், இரண்டாவது யூனியன் பிரதேசங்கள், மூன்றாவதாக இருப்பது ஈட்டிச் சேர்த்து உருவாக்குகிற பரப்பு என ஒன்று உண்டு. அப்படி ஈட்டுவது என்றால் என்ன? நாடாளுமன்றத்தில் ஒப்புதல் வாங்கினால் போதும். எவ்வளவு பெரும்பான்மை? சாதாரணப் பெரும்பான்மை இருந்தால் போதும். 1974-75 ல் சிக்கிமை இப்படித்தான் சேர்த்துக் கொண்டார்கள். இதை இந்திய தேசியம் பேசுகிற யாராவது எதிர்த்தார்களா? இல்லை. முதலில் இணை அந்தஸ்து என்றார்கள். பின்னர் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம், அது இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகிவிட்டது.

காஷ்மீரை இணைக்கும் பொழுது என்ன சொன்னார்கள்? ஐ. நா. வில் போய் இந்தியா உறுதிமொழி கொடுத்தது- 'நாங்கள் சுதந்திரமான வாக்கெடுப்பின் மூலமே தீர்மானிக்கப் போகிறோம்? பின்னர் என்ன நடந்தது? வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று காஷ்மீரில் சொன்னவர்களைப் பிடித்து சிறையில் போட்டுவிட்டு, இணைத்துக் கொண்டார்கள். இப்பொழுது எங்கு போனாலும் காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி என்று வாய் கூசாமல் சொல்கிறார்கள்.

தமிழகத்தில் ஆட்சிப் பரப்பிற்கு உத்தரவாதம் இல்லை என்பதற்கு நமக்கு முன்னால் இருக்கிற மிகப் பெரிய சான்று கச்சத்தீவு. கச்சத் தீவைக் கொடுப்பதற்கு முன்னர் அன்றைக்கு இருந்த தமிழக முதல்வருடன் கலந்தார்களா, சட்டப்பேரவையைக் கேட்டார்களா? கேட்க வேண்டும். என்று சட்டத்தில் இல்லை. தமிழகத்தின் எல்லைப் பகுதிகளை, தில்லி தீர்மானிக்க முடியுமே தவிர தமிழகத்திற்கு அந்த

www.tamilarangam.net



உரிமை இல்லை. ஏற்கனவே செங்கோட்டை, தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகள் கேரளத்தோடு இணைக்கப்பட்ட போது இன்றைக்கு இருந்த முதல்வர் காமராசரிடம் முறையிட்டதற்கு "குளமாவது மேடாவது எல்லாம் இந்தியாவில்தானே இருக்கிறது" என்றாராம். அது இந்திய தேசியத்தின் பேரால் கொடுக்கப்பட்டது நமக்கு ஒரு ஆட்சிப் பரப்பு சார்ந்த கட்டுக்கோப்பு இல்லை. நாம் ஒரு தேசிய இனமாக, தேசமாக அங்கீகரிக்கப்படுவோமென்றால், அதற்கு என்ன பொருள்? நமக்கு ஒரு மண் பரப்பிற்கான உத்தரவாதம் இருக்கும். உண்மையில் நமக்கு வரலாற்று வகைப்பட்ட எல்லைப்பரப்பு உண்டு. அந்தப்பரப்பு தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது. இனியும் எப்படி மீறப்படும் என்று நாம் சொல்ல முடியாது.

இந்த அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட விதம் இதற்கான அரசியல் நிர்ணயசபை உருவாக்கபட்ட விதம், இதனுடைய பல்வேறு விதிகளும் முறைகளும் விவாதிக்கப்பட்டு இயற்றப்பட்ட முறை எல்லாமே ஜனநாயகத்திற்குப் புறம்பானவை. எல்லாரும் சொல்கிற ஒரு காரணம் என்னவென்றால், சுதந்திர இந்தியாவில் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசமைப்பு நிர்ணய சபை இந்த அரசமைப்பை உருவாக்கவில்லை என்பது. இது ஒரு கோணம் மட்டும்தான். இது மட்டுமே காரணமாகிவிடாது. வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்பது இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்குமான தனி மனித உரிமையினை உறுதி செய்கிறதே தவிர, அது இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களின் உரிமையையும் தேசிய இனங்களின் சமத்துவத்தையும் உறுதி செய்வதில்லை.

சோவியத் யூனியன் நாடாளுமன்றம் இரண்டு அவைகளைக் கொண்டது. ஒரு அவையின் மக்கள் தொகைக்கு ஏற்ப உறுப்பினர்கள் இருப்பர். இன்னொரு அவையின் மக்கள் தொகை வேறுபாடின்றி எல்லா தேசிய இனங்களுக்கும் சம எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருப்பர். அமெரிக்காவில் செனட் சபையும் பிரதிநிதிகள் சபையும் இணைந்ததுதான் அமெரிக்கப் பாராளுமன்றம் பிரதிநிதிகள் சபையில் ஒவ்வொரு மாநிலத்திலும் மக்கள் தொகைக்கு ஏற்ப உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். வாஷிங்டனுக்கு இருக்கிற அதே எண்ணிக்கை அலாஸ்காவுக்கு இருக்காது ஆனால் செனட் என்று சொல்லபடுகின்ற மாநிலங்களவையில், ஒவ்வொரு மாநிலத்திலும் இரண்டு சென்ட்டர்கள் வீதம் 50 மாநிலங்களிலிருந்தும் சம எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இடம் பெறுவர். இது அங்கே மாநிலங்களுக்கிடையிலான சமத்துவத்தை உறுதி செய்கிறது. பெரும்பான்மையை வைத்துக்கொண்டு சிறுபான்மையினரை நசுக்கிவிடக் கூடாது என்பதற்கான ஏற்பாடு இது. பிரதிநிதிகள் சபை இயற்றுகின்ற எல்லாச் சட்டங்களையும் செனட் சபையும் அங்கீகரித்தால்தான் சட்டம் நிறைவேறும். பதவி நியமனங்கள் உட்பட அங்கே சென்று ஒப்புதல் பெற்றால்தான் நிறைவேறும். இது வடிவ அளவில் சோவியத்திலும் இருந்தது.

www.tamilarangam.net



இந்தியாவில் சமத்துவ உரிமை தேசிய இனங்களுக்கிடையில் இல்லாத காரணத்தால்தான் இந்தி ஆட்சி மொழியாக உயர்ந்தது. எனவே இது ஜனநாயகத்திற்குப் புறம்பான முறையில் இயற்றப்பட்ட அரசமைப்புச் சட்டம். பிற தேசிய இனங்களெல்லாம் சேர்ந்து ஒரு தேசிய இனத்துக்கு விரோதமான சட்டத்தை இயற்றும் சூழலில் அதை நிராகரித்து விட்டு அந்தத்தேசிய இனம் பிரிந்து போகிற உரிமையும் இருந்தால்தான் உண்மையில் அது ஜனநாயகம் இது எதுவும் இல்லை என்கிற காரணத்தால் இது மக்களாட்சித் தத்துவப்படி உருவாக்கப்பட்ட சட்டம் என்பதற்கும் பொருள் இல்லை. நாம் அப்படி அங்கீகரிக்கவில்லை.

அடுத்ததாக நம்முடைய பொருளாதார வாழ்வு தமிழகம் எத்தகையதொரு பொருளாதார வாழ்வை உருவாக்கிக் கொள்வது? நாம் இங்கே சாதிகள் ஒழிய வேண்டுமென்று ஆசைப்படுகிறோம் சுரண்டலும் ஒடுக்குமுறையும் இருக்கக்கூடாது என்கிறோம். ஆணாதிக்கம் இருக்கக்கூடாது என்றெல்லாம் சொல்கிறோம். பொருளாதாரத்துறையில் ஒரு அடிப்படையான மாற்றம் கொண்டு வராமல் இதற்கெல்லாம் ஒரு தீர்வை நாம் கொண்டு வர முடியாது. அப்படி ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்கிக் கொள்கிற உரிமை நமக்கு உண்டா?

00 ஆண்டுகளுக்குப் பிறகு ஹாங்காங்கை பிரிட்டனிடம் இருந்து சீனாவிடம் இணைக்கப் போகிறார்கள். அதற்காக ஒரு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அதில் ஒரு முக்கியமான விதி என்னவென்றால் ஹாங்காங் மீது, ஒரு சமூகப் பொருளாதார அமைப்பைச் சீனஅரசு திணிக்காது. ஒரு நாடு, இரு சமூக அமைப்புகள். சீனம் சோசலிக சமூக அமைப்பைக் கொண்டது. ஹாங்காங் முதலாளித்துவ அமைப்பைக் கொண்ட நாடு. முதலாளித்துவ அமைப்பு வேண்டுமென்றால் அதைத் தீர்மானிக்கும் உரிமை ஹாங்காங் நாட்டிற்குத்தானே தவிர சீனாவுக்கல்ல.

1917 ருஷ்யப் புரட்சிக்குப் பின்னர் சோவியத் யூனியனிலிருந்து பின்லாந்து பிரிந்து போக விரும்பி தீர்மானம் இயற்றியது. அதை பிரிந்து போக விடக்கூடாது அப்படிப் பிரிந்து போனால், பின்லாந்து தொழிலாளி வர்க்கத்திற்கு சோசலிசம் கிட்டாமல் போய்விடும் என்று லெனினிடம் முறையிட்டனர். அதற்கு லெனின் சொன்னார். “ஒரு மனிதனைச் சொர்க்கத்திற்கு அனுப்புவதென்றால் கூட தடியால் அடித்து அனுப்பக்கூடாது. அவனே விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்றார். சோசலிசத்தின் பேரால்கூட பிரிந்து போகும் உரிமையினைத் தடுக்க முடியாது. சோசலிசமும் சுதந்திரமும் முரண்பட்டதல்ல. சுதந்திரம் இருந்தால்தான் சோசலிசமே மலரும். ஹாங்காங் தனக்கு எத்தகைய பொருளாதாரம் வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை உடையது. ஆனால் இந்தியாவில் தமிழகம் சாதாரண மாநில உரிமைகளைக் கூடப் பெற முடியவில்லை. இட ஒதுக்கீட்டுத் தீர்மானத்திற்கு, நிலச் சீர்திருத்த சட்டத்திற்கு என்ன கதி ஏற்பட்டது?.

உண்மையில் நமக்கான சட்டத்தை நாம் இயற்றிக் கொள்கிற

www.tamilarangam.net



சாதாரண உரிமைகூட நமக்குக் கிடையாது. சட்டப் பேரவை இயற்றுகின்ற சட்டம் உண்மையிலேயே சட்டமாக வேண்டுமானால் அது குடியரசுத் தலைவரிடமோ அல்லது தில்லியின் உளவாளியான ஆளுனரிடமோ ஒப்புதல் பெற்றாக வேண்டும். நாம் நினைப்பதுபோல எல்லாக் காலங்களிலும் ரப்பர் ஸ்டாம்ப் அல்ல இந்தப் பதவிகள். ஆட்சியினைக் கலைக்கலாம் என்று ஆளுநர் அறிக்கை அளித்தல் உடனே கலைக்கிறார்கள். அப்போது ஆளுநருக்கு எங்கிருந்து அதிகாரம் வருகிறது? தங்களது ஆதிக்கத்திற்குத் தொல்லையில்லை என்கிறவரைக்கும் தில்லியானது மாநிலங்களில் குறுக்கிடுவதில்லை. ஆண்டைக்கு கீழே வேலை செய்துகொண்டிருக்கும் வரைக்கும் கங்காணியை, தானே ஆண்டை போல நினைத்துக் கொள்ள ஆண்டை அனுமதிப்பான். சிறையில் கான்விக்ட் வார்டர் போலத்தான் நமது முதல்வர் பதவி என்பதும். கான்விக்ட் வார்டர்களுக்கு நல்ல உடைகொடுத்திருப்பார்கள். ஒரு விசிலும் தடியும் கொடுத்திருப்பார்கள். தலைக்குத் தனி விதமான தொப்பியெல்லாம் உண்டு. இந்த உடையோடு இருக்கும் வரை இவரே ஒரு சிறை அதிகாரி போலத் தன்னை நினைத்துக் கொள்வார். கான்விக்ட் வார்டர்களிடமிருந்து என்றைக்கு தொப்பி முதலியவற்றைப் பறிக்கின்றார்களோ அன்றைக்குத்தான் ஒரு கைதி என்பது தெரியும். அதைப் போலத்தான் தமிழக முதல்வர் பதவியை "தில்லி நினைத்த போதெல்லாம் பறிக்கிறது. எவ்வளவு பெரும்பான்மை பெற்றிருந்தாலும் கலைக்கும் உரிமை தில்லிக்கு உண்டு. தில்லிக்குப் பெரும்பான்மை தேவையா கலைப்பதற்கு என்றால் வேண்டியதில்லை. சந்திரசேகர் எவ்வளவு பேரோடு ஆட்சி புரிந்தோர், வெறும் 55 உறுப்பினர்களைக் கொண்டு ஆட்சி அமைத்தார். ஆனால் அவர் 140 பேருக்கும் அதிகமான உறுப்பினர்களுடன், பெரும்பான்மை பலத்துடன் இருந்த கலைஞர் ஆட்சியைக் கலைத்தார். இப்போது தேவகவுடா வெறும் 45 பேர்களை மட்டும் கொண்டு ஆட்சி அமைத்துள்ளார்.

நினைத்தபோது கலைக்கலாம் என்ற நிலையிலுள்ள இந்த ஆட்சி நமக்கு வேண்டாம் என்று சொல்லுகிற தன்மானம் நமது அரசியல் தலைவர்களுக்கு உண்டா? கிடையாது. உதைக்கின்ற காலைத் தொட்டுக் கும்பிடுகிற நிலைதானே இருக்கிறது. இல்லை, எந்த முதல்வராவது 356 ஐ நீக்கினால்தான் பதவி ஏற்பேன் என்று சொல்கிறாரா? அல்லது மந்திரி சபை கூடியவுடன் இதையா விவாதத்திற்கு எடுத்துக் கொள்வார்கள்? புலிகளுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் தடை போடலாமா என்றுதான் யோசிப்பார்கள். தேர்தலில் அப்படியா உறுதி கொடுத்து ஓட்டுக் கேட்டார்கள்? "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் புலிகளுக்கு மேலும் 2 ஆண்டு தடை விதிப்போம்." என்று?

தமிழக முதல்வர் பதவிக்கு என்ன மரியாதை இருக்கிறது? என்ன தன்மானம் இருக்கிறது? என்ன இனமானம் இருக்கிறது? ஒன்றே ஒன்று இருக்கிறது. வருமானம் கிடைக்கிறது. இது நம் மக்களுக்கு

www.tamilarangam.net



உரிமை இல்லை என்பதைக் காட்டுகிறது. தமிழ் மக்களுக்கு உரிமை இல்லை, அரசியல் உரிமை இல்லை என்பதன் வெளிப்பாடுதான் இது. இந்தியாவில் தேசிய இனம் என்கிற முறையில் நாம் அடிமைகளாக இருக்கிறோம் என்று பொருள். இந்த உண்மையை மூடி மறைப்பதற்கு பளபளப்பான சில கங்காணிகளை நிறுத்தியிருக்கிறார்கள். இதிலே ஆளை மாற்றுவதால் எந்தப் பலனும் கிடையாது. அவர் ஆட்சிக்கு வந்தால் தேனும் பாலும் ஓடும் என்பதெல்லாம் ஒன்றும் கிடையாது. நல்ல தலைவர், உணர்வாளர் இருக்கிறார் என்று சொன்னால் அவரை நாம் பாதுகாத்துக் கொள்வதற்கு ஒரே வழி, அவர் ஆட்சிக்கு செல்லாமல் தடுப்பதுதான். அந்த நாற்காலி விக்கிரமாதித்தனின் நாற்காலியைப் போன்றது. தன்மேல் உட்கார்கின்றவர்களைப் பிடித்துத் தன்வயமாக்கிக் கொள்ளும் தன்மை அதற்கு உண்டு. கோட்டைக்கு அனுப்பப்படுகிற தலைவர்களை நாம் கோட்டை விட்டுவிடுவோம்.

நமக்கு அரசியல் உரிமை இல்லை என்பதால் நமக்கான சட்டங்களை நாம் இயற்ற முடிவதில்லை. அடிக்கடி நமது தேசியத் தலைவர்கள்" சொல்வார்கள். சுதந்திரத்தின் பலன் இன்னும் மக்களுக்குச் சென்றடையவில்லை. எப்படிச் சென்றடையும்? மக்களை உரிமையற்ற அடிமைகளாக வைத்துக் கொண்டு சுதந்திரத்தின் பலன் கிட்டவில்லையென்றால் எப்படிக் கிட்டும்?

தமிழ்த் தேசியக் கோரிக்கையின் நோக்கம் என்ன? தமிழ்த் தேசியம் தமிழ் மக்களுக்காக என்றால் தமிழ் மக்களுக்கு முன்னால் இருக்கின்ற சிக்கல்களை, துயரங்களைப் போக்குவதற்காக என்றால், தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தேசியத்திற்கும் இடையிலான உறவை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையினை எடுத்துக் கொள்வோம் இட ஒதுக்கீட்டிற்காக தமிழகத்தில் நீண்ட நாள் மக்கள் போராடியிருக்கிறார்கள் தனக்குத் தேவையான இட ஒதுக்கீட்டுக் கொள்கையினைச் சட்டம் ஆக்கிக் கொள்ளும் உரிமை தமிழகத்திற்கு உண்டா? 69% இட ஒதுக்கீடு கொண்டு வந்தார்கள். தமிழகத்தில் எதிர்ப்பே கிடையாது. "சமூக நீதி காத்த வீராங்கனை" பட்டம் கொடுத்த விழாவில் பாரதிய ஜனதா கட்சித் தலைவர் ஒருவரும் கலந்து கொண்டார். தமிழகத்தின் ஒருமித்த கருத்து இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவு. யாருக்காவது எதிர்ப்பு இருக்குமேயானால் அதை ரகசியமாகப் பேசிக் கொள்ளலாமே தவிர வெளியே வந்து பேச முடியாது. தமிழ்நாடு பிராமணர் சங்கம் இடஒதுக்கீட்டை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தார்கள் எங்கே? திருவல்லிக்கேணியில் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் இருந்தார்கள் ஏன் பனகல்பூங்காவில் உண்ணாவிரதம் இருக்கலாமே? முடியாது. தமிழகத்தில் யாருமே எதிர்க்காத ஒரு தீர்மானத்தை ஏன் நாம் சட்டமாக்கிக் கொள்ள முடியவில்லை. இதற்கு உயர்நீதி மன்றம் தடைவிதித்தது. உச்சநீதி மன்றமும் தடைவிதித்தது. பின்னர் இதற்கு என்ன தீர்வென்று யோசித்து, அரசமைப்புச் சட்டப் பிரிவொன்றின் அட்டவணையில்

www.tamilarangam.net



இதனை இணைத்தால் சரியாகிவிடும் என்று அதெற்கென ஒரு தீர்மானம் ஏகமனதாக சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பினார்கள். அந்த சமயத்தில் தமிழகத்தில் அரசியல் கட்சிகளிடையே விவாதம் நடந்தது.

ஒரு கட்சி இன்னொரு கட்சியைப் பார்த்துச் சொல்கிறது.

"நீங்கள் சட்டப் பேரவையில் தீர்மானம் இயற்றியதோடு பேசாமல் இருந்து விட்டீர்கள் தொடர்ந்து தில்லிக்குச் சென்று வலியுறுத்தவில்லை". ஆளுங்கட்சியின் பதிலென்ன?.

"இல்லை நாங்கள் தில்லி சென்றோம் எங்களோடு தில்லி வந்து ஒத்துழைப்புக் கொடுக்க நீங்கள் மறுத்து விட்டீர்கள்" இன்னொரு கட்சி சொன்னது :

"நாங்கள் உடன் வந்தோம், எங்களை ஓட்டலில் விட்டு விட்டு நீங்கள் மட்டும் போய் பார்த்துவிட்டு வந்துவிட்டீர்கள்".

சட்டப் பேரவையில் சட்டமியற்றியபின் முதல்வர் வலியுறுத்தினால் என்ன? ஒரு அய்.ஏ.எஸ். அதிகாரி வலியுறுத்தினால் என்ன? அல்லது கூரியர் சர்வீசில் அனுப்பினால்தான் என்ன? இதிலென்ன வேறுபாடு? உண்மை என்னவென்றால் தமிழக சட்டப் பேரவை உட்பட இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களின் சட்டப் பேரவைகளும் உண்மையில் மசோதா மன்றங்களே. யாராவது செத்துப் போனால் இரங்கல் தீர்மானம் இயற்றலாம். இரங்கல் தீர்மானத்திற்கு குடியரசுத் தலைவரோ, ஆளுனரோ ஒப்புதல் அளிக்க வேண்டிய அவசியமில்லை. நமக்கு இறைமை இல்லை. சட்டமியற்றும் உரிமை இல்லை. சின்னச் சீர்திருத்தம் கூட செய்ய முடியாது.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் பினாமி நில ஒழிப்புச் சட்டம் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தார். எஸ்.டி. சோமசுந்தரம் அந்தக் காலத்தில் அரசு வருவாய்த்துறை அமைச்சராக இருந்தார். முதன்முதலாக 1959-இல் நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்று கொண்டு வந்தார்கள். அதன்படி அன்று தமிழகத்தில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்துக்கு மேல் இருக்கின்ற நிலமெல்லாம் அரசாங்கத்திற்குச் சேர்ந்துவிடும்.

இந்த சட்டம் வந்தால் மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாவது காங்கிரசுக் கட்சியிலுள்ள முன்வரிசைத் தலைவர்கள்தான். அந்தக் கட்சியின் மாவட்டத் தலைவர்கள் பட்டியலை எடுத்தால் நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழில் அதிபர்களும், நிலவுடைமையாளர்களும் வந்துவிடுவார்கள். பொள்ளாச்சி மகாலிங்கம், நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியார், காளியண்ணக் கவுண்டர், சேலம் ராமசாமி உடையார், கல்கொண்டார் கோட்டை சாமிநாதய்யர், தஞ்சாவூர் கருப்பையா மூப்பனார், பூண்டி வாண்டையார், கருப்பம்பலம் வெங்கடாசலத் தேவர், சிதம்பரம் ,கவரப்பட்டு வாண்டையார் என யாரும் சிறு நிலவுடைமையாளர்களே கிடையாது. எல்லாமே பெரும் நிலச்சுவான்தார்களே. திருவாரூர் வி.எஸ். தியாகராச முதலியாருக்கு

www.tamilarangam.net



1001 வேலி நிலம். அவருக்குப் பெயர் கொடுத்த தியாகராஜ சுவாமிக்கு 1000 வேலி. ஆனால் அந்த சாமி நிலத்தையும் சேர்த்து இந்த ஆசாமிதான் அனுபவித்தார். இப்படிப்பட்ட பண்ணையார்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டுதான் காமராசர் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்தார்.

அந்தச் சட்டத்தில் விதிவிலக்குகள் இருந்தன. ஆலை நிலங்களுக்கு இந்த உச்ச வரம்பு கிடையாது. நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியாருக்கு ஜிவகாருண்யம் அதிகம். அவரிடம் இருந்ததெல்லாம் மேய்ச்சல் நிலங்கள் என கணக்கு காட்டினார்கள். அறக் கட்டளைச் சொத்துக்களை எடுக்க முடியாது. உத்தமபுத்திரர் கருப்பையா மூப்பனார் ஒரு அறக்கட்டளை நிறுவியிருந்தார். அவரை இப்பொழுது தமிழகத்தில் மிகப் பெரிய புனிதராகக் காட்டுகிறார்கள் முதல்வர்களெல்லாம் இடையில் வந்த கொள்ளைக்காரர்கள். பண்ணையார்களெல்லாம் பிறவிக் கொள்ளைக்காரர்கள். கருப்பையா மூப்பனார் ஒரு அறக்கட்டளை வைத்தார் – கோவிந்தசாமி மூப்பனார் கல்வி அறக்கட்டளை என்று. அவருடைய அப்பா பேரில் அறக்கட்டளை வைத்திருந்தார். இடையில் ‘ இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ’ இதழ் மூப்பனாரின் பினாமி சொத்துக்களைப் பற்றியும் இடதுசாரிகள் நடத்திய போராட்டத்தைப் பற்றியும் ஒரு செய்தி வெளியிட்டார்கள். மூப்பனாரிடம் கேட்டார்கள் “அறக்கட்டளை மூலம் எத்தனை கல்வி நிறுவனங்களை நடத்துகிறீர்கள்” என்று கேட்டார்கள். “அதெல்லாம் ஒன்றும் கிடையாது” என்று அவர் பதில் சொன்னார். கருப்பையா மூப்பனார் சொத்து அறக்கட்டளையின் பேரில் இருக்கும், அவ்வளவுதான். “பினாமிகள் பேரில் நிறைய எழுதி வைத்திருக்கிறீர்களே” என்று நிருபர் கேட்டதற்கு “எல்லாரும் செய்தார்கள் நானும் செய்தேன்”– இது மூப்பனாரின் பதில். சரி, இவ்வளவு வெளிப்படையாக பதில் சொல்கிறாரே என்று பிரசுரித்தார்கள். பத்திரிகை வெளி வந்த நாளில் யாருக்கும் ஒரு பத்திரிகை கூட கிடைக்கவில்லை. எல்லாவற்றையும் மூப்பனார் ஆட்கள் வாங்கிக் கொளுத்தி விட்டார்கள். 1957-ல் காமராசர் சட்டத்தை எழுதி வைத்துவிட்டு இதற்காகவே ஒரு சுற்றுப் பயணம் மேற்கொண்டாராம்“ இது மாதிரி சட்டம் வரப்போகிறது உஷார் உஷார் ” என்று எல்லோரையும் எச்சரித்தாராம். அதற்காகவே 2 வருடம் அவகாசம் கொடுத்து 1959-ல் சட்டத்தை நிறைவேற்றினார்கள்.

இந்த 1957 க்கும் 59 க்கும் இடையிலே நடந்த பினாமி நில மாற்றத்தையெல்லாம் தடை செய்ய வேண்டும் என்று எம்ஜிஆர். ஆட்சிக் காலத்தில் ஒரு கோரிக்கை எழுந்தது. அந்த நிலங்கள் யார் மீது இருக்கிறதோ அவர் அதைத்தன்னுடையது என்று நிருபிக்க வேண்டும் எனச் சட்டம் செய்யப்பட்டது. அந்தச் சட்டத்தை எதிர்த்து தினமணி சிவராமன் மட்டும் தலையங்கம் எழுதினார். இதனால் நிறையப் பேர் பாதிக்கப்படுவார்கள் என்றார். இதனால் விவசாயிகள் பலனடைவார்கள் என்பது பற்றியெல்லாம் அவருக்கு அக்கறை கிடையாது. அந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டபோது சட்டசபை காங்கிரசுக் கட்சித்

www.tamilarangam.net



தலைவராக மூப்பனாரே இருந்தார். அவர் இதனை எதிர்க்கவில்லை. தி.மு.க. எதிர்க்கவில்லை. ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தில்லிக்கு அனுப்பப்பட்டது. அங்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மூப்பனார் சட்டப்பேரவையில் மசோதாவைத் தடுக்க நினைக்கவேயில்லை. அதற்காகக் கவலைப்படவும் இல்லை. அவருக்கு தெரியும் தில்லி எப்படியும் இதனைச் சட்டமாக்க விடாது என்று.

ஆக, வெறும் நிலச் சீர்திருத்தச்சட்டம் ஒன்றையே நம்மால் இயற்றமுடியவில்லை. ஏனென்றால் நமக்கு அரசுரிமை இல்லை. ஆனால் டெல்லி ஆண்டுதோறும் ஒரு சுற்றறிக்கை அனுப்புகிறது. என்ன அறிக்கை? மாநிலங்கள் உருப்படியான நிலச் சீர்திருத்தங்கள் (Effective land Reforms) செய்ய வேண்டுமாம் ஒரு சிற்பி சிலை வடிக்கிறபொழுது அந்தச்சிற்பி சிலையினைக் காலால் மிதித்துக்கொண்டு செதுக்குகிறார். ஒருவர் கேட்கிறார் "கடவுளை இப்படி காலால் மிதிக்கிறாயே!" சிற்பி சொல்கிறார். "இப்பொழுது இது வெறும் கல்தான் மந்திரம் ஓதி பிரதிஷ்டை செய்தால்தான் அது கடவுள்", அதைப் போல வெறும் கற்சிலைகளைத்தான் தமிழ்நாடு சட்டப்பேரவை செதுக்க முடியும் கடவுளாக்கிப் பிரதிஷ்டை செய்வது தில்லிக்காரன். அவன் ஒப்புக் கொண்டால்தான் அது சட்டம். இதற்கென ஒரு சட்டப்பேரவை தேவையா? என்ன வகையான சட்டம் இயற்றும் அதிகாரங்கள் இருக்கின்றன? இங்கேதான் நாம் புரிந்துகொள்ள வேண்டியது தமிழ்த் தேசத்திற்கு நேரக்கூடிய சுமை உரிமையின்மை, அடிமைத்தனம் யாரைச்சாரும் என்றால், இந்திய தேசியத்தின் பேரால் யார் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு கீழ் நிலையில் இருக்கின்றார்களோ அந்த உழைக்கும் மக்களைச் சாரும்.

இன்று சமூகநீதி அரங்கிலே உள்ள முதன்மையான விவாதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை வேண்டும் என்பதுதான். அதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. அடிமைப்பட்ட மக்களுக்கு விடுதலைதான் வேண்டும், வேறெதுவும் வேண்டாம். என்ன வகையான விடுதலை? வெறும் தீண்டாமைக் கொடுமைகளிலிருந்து மட்டும்தான் என்றால், அது ஏற்கனவே பல பகுதிகளில் சாதிக்கப்பட்டுள்ளது. உற்பத்திமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் மக்களின் விழிப்புணர்வு மற்றும் ஒழுங்கமைப்பினால் அது ஏற்கனவே சாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் விடுதலை என்பது தீண்டாமை வடிவங்களிலிருந்து மட்டுமல்ல, மொத்தத்தில் ஆதிக்கத்திலிருந்தான விடுதலை என்றால் அதற்கு என்ன பொருள்? மார்க்ஸ் சொன்னார்.

> "தொழிலாளி வர்க்கம் சுரண்டலிலிருந்து தன்னை
> விடுவித்துக் கொள்ள வேண்டுமானால், அது சமூகம்
> முழுவதையும் விடுவித்தால்தான் முடியும் "

## தமிழ்த் தேசியம் – சாதியும் வர்க்கமும்

சாதி அமைப்பின் கீழடுக்குகளில் இருக்கின்ற மக்கள் விடுதலை

www.tamilarangam.net



பெற வேண்டும் என்று சொன்னால், கீழடுக்கிலே இருக்கிறவர்கள் மேலடுக்குக்கு வருவதோ மேலடுக்கிலே இருக்கிறவர்கள் கீழடுக்குக்கு வருவதோ அல்ல. தாழ்த்தப்பட்டவர் வேறொரு இடத்திற்கு மாறிவிடுவதல்ல விடுதலை. சாதிக் கோபுரத்தை அடியோடு தகர்ப்பதுதான் விடுதலை. இதன் பொருள் என்ன? சாதி ஏற்றத்தாழ்விலிருந்து ஒட்டுமொத்த மக்களையும் விடுவிக்காமல் தன்னை மட்டும் விடுவித்துக் கொள்ள முடியாது. அப்படியானால் இதற்கு இன்றைக்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

சாதிக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான உறவைப் பற்றி நிறையப் பேசவும் எழுதவும் பட்டுள்ளது. இரண்டும் ஒன்று அல்ல, ஆனால் தொடர்பற்றவையும் அல்ல. இது வெறும் பண்பாட்டுத் தளத்தில் மட்டுமோ அல்லது கருத்தியல் தளத்தில் மட்டுமோ இயங்குவதல்ல. இது மன மாற்றம் சம்பந்தமான ஒன்றும் அல்ல. ஒரு ஆத்திகரை நாத்திகரமாக மாற்றுவது போல ஒரு பார்ப்பானைப் பறையனாக மாற்ற முடியாது. வர்க்கம் எப்படி ஒரு பொருண்மிய வாழ்வைக் குறிக்கிறதோ அதே போல் சாதியும் ஒரு பொருண்மிய வாழ்வைக் குறிக்கிறது. கூடுதலாக அரசியல், பண்பாட்டு வாழ்வையும் குறிக்கிறது. ஒன்று – உடைமை, இரண்டு – செய்கிற தொழில். இவற்றோடு சாதிக்கிருக்கிற தொடர்பு இழையை அறுக்காமல் சாதியின் பொருண்மிய அடித்தளத்தைப் போக்க முடியாது. உடைமைக்கும் சாதிக்கும் உள்ள உறவை எப்படி அறுப்பது?

நாம் நீண்ட காலமாகச் சொல்கிறோம், உழுகிறவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும். கிராமப்புறத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பவர்கள் நிலமற்றவர்களாகவும் இருக்கிறார்கள். சுரண்டப்படுகிற கடைக்கோடி மக்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள். சில இடங்களில் நிலம் கிடைத்துள்ளது. அதாவது போராடிப் பெற்றிருக்கிறார்கள், அல்லது வெளிநாடு சென்று சம்பாதித்து அதிலே வாங்கியிருக்கிறார்கள். ஒரு சில பகுதிகளில் சிறு நில உடைமையாளர்களாக இருந்த இடைச் சாதியினர் சிலர் அவர்களிடம் விற்றுவிட்டு ஓட்டாண்டிகளாகப் போயிருக்கிறார்கள். இதனால் ஒதுக்கம் நீங்கி விடவில்லை ஊருக்குள் இடைச் சாதியினர் வீடுகள் சிதைந்து தாழ்ந்திருக்கலாம். சேரிக்குள் தாழ்த்தப்பட்டவர்களின் வீடு சற்று உயர்ந்திருக்கலாம். யாரும் எந்தத் தொழிலும் செய்யலாம் என்ற நிலை வரும்வரை குலத் தொழிலின் இன்றைய வடிவங்கள் மறைய மாட்டா. குலத் தொழில் என்றால் அன்றைக்கு இருந்தபடி அப்படியே நீடிக்கின்றது. என்பது யாருடைய வாதமும் அல்ல. ஆனால் இது வேறொரு வடிவத்தில் இன்று தொடர்கிறது.

மைய அரசின் ஒரு அலுவலகம், ஒரு வங்கி, ஆயுள்காப்பீட்டுக் கழகம் ஏதாவது ஒரு இடத்திற்குச் சென்று நாம் கணக்கெடுத்தோம் என்றால் தெரியும். இரயில்வேத்துறையில் இந்த நிலை எப்படி இருக்கிறது என்று கிருஷ்ணய்யர், சின்னப்பரெட்டி போன்ற நீதிபதிகள் சொன்ன

www.tamilarangam.net



மிகத் தெளிவான புள்ளி விபரங்கள் நம்மிடம் இருக்கின்றன. தொடர் வண்டித் துறையின் நான்கு பிரிவுகளில் முதல் பிரிவில் முழுக்க பார்ப்பனர்களின் ஆதிக்கம் இருக்கிறது. பிரிவு கீழே இறங்க இறங்க பார்ப்பனர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. கடைசிப் பிரிவுக்கு அவர்கள் போட்டியிடுவதேயில்லை. தோட்டி, துப்பரவுத் தொழிலாளி போன்ற இடங்களில்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் இடம் பெற்றுள்ளனர். தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு இத்தனை ஆண்டு காலம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட துறையில் இந்த நிலைமை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் கூட இட ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்ட தலைமைச் செயலகம் போன்ற இடங்களில் கூட கணக்கெடுத்துப் பார்க்கலாம். ஆக, ஒட்டுமொத்தத்தில் சாதிப் பிரிவினை ஒரு புதிய வடிவினை எடுத்துள்ளதை இன்று நாம் பார்க்கிறோம். இது அரசுத்துறை வேலைவாய்ப்பில் மட்டும் உள்ள புள்ளி விவரம். மொத்தமுள்ள வேலைவாய்ப்புக் கடலில், அரசு வேலை என்பது ஒரு தீவு மட்டுமே. தனியார் தொழில் நிறுவனங்களில் பார்த்தோமானால் பழைய குலத்தொழில் முறை அப்படியே வேறு வடிவில் இருப்பதை நாம் காணலாம். தொழில்நுட்ப அறிஞர்கள் யார், மேலாளர்கள் யார்? இடையில் உடலுழைப்பாளிகள் யார்? தினக்கூலிகள் யார்? TVS, TI சைக்கிள் இன்னும் எத்தனையோ தொழிற்சாலைகளில் இதனை நாம் பார்க்கலாம்.

சாதிக்குள் திருமணம் செய்கிற அகமண முறை தகர்க்கப்படாவிட்டால் பொருண்மிய அடித்தளத்தை இழந்த பிறகும், பண்பாட்டு அடித்தளத்தில் சாதியம் உயிரோடு இருக்கும். ஆனால் இந்தப் பண்பாட்டு அடித்தளத்தைத் தகர்ப்பது என்பது சட்டம் போட்டு அல்ல. பொருண்மிய அடித்தளத்தை வீழ்த்திய பிறகுதான் பண்பாட்டு அடித்தளத்தை அறவே வீழ்த்த முடியும். இன்றைக்கும் கிராமப்புறத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஆணும், ஆதிக்க சாதியைச் சேர்ந்த பெண்ணும் காதலித்தால் என்ன நேரும்?

நான் "காதல் படிக்கட்டுகள்" கட்டுரையில் ஒரு உண்மைக் கதையினை எழுதியுள்ளேன். பெண்ணைப் பெற்றவர்களே தூக்கிலிட்டுக் கொன்று விடுகிறார்கள். ஏனெனில் தெருவில் தலை நிமிர்ந்து நடக்க விரும்புகிறார்கள். அந்தப் பெண்ணால் இவர்களின் கௌரவம் பாதிக்கப்படும் என்று நினைக்கிறார்கள் அந்த ஊரிலிருந்து ஓர் இளைஞர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். தூக்கில் போட்டவுடன் அந்தப் பெண் சாகாததால், பெண்ணின் தந்தை கால்களைப் பிடித்துத் தொங்கி மகளைச் சாகடித்தாராம். ஒரு சின்னப் கற்பனை. அதே இருவரும் இங்கே கோவையில் ஒரு வங்கியில் வேலைப்பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? பெற்றோர் ஒத்துக் கொள்ளாவிட்டாலும் திருமணம் நடக்கும். என்ன காரணம்? பொருண்மிய அடித்தளம் அறுபட்டு விடுகிறது. எனவே பண்பாட்டுத் தளத்தில் தங்களது திருமணத்தை

www.tamilarangam.net



ஆக அரசியல் அதிகாரத்தின் மூலம் சாதியின் பொருண்மிய அடித்தளத்தை நாம் வீழ்த்துகிற போது, அது சாதி ஒழிப்பாக இருக்காது. சாதிகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வை ஒழிப்பதாகவே இருக்கும். சாதிகளுக்கிடையிலான ஏற்றத் தாழ்வை அகற்றாமல் சாதியை ஒழிக்க முடியாது. சாதி ஒழிப்புக்கான படிநிலை சமூக நீதி . எப்படி சோசலிசத்திற்கு ஒரு படிநிலை இருக்கிறதோ, அது போன்ற படிநிலைதான் இந்த சமூக நீதி. அது ஏதோ அரசுத்துறையில் குறிப்பிட்ட இடஒதுக்கீடு செய்வதால் மட்டுமே கிடைத்துவிடாது. ஆனால் அதுதான் சமூகநீதி என்று கருத்து இங்கே உருவாக்கப்பட்டுள்ளது. அதுவும்கூட சமூகநீதியின் ஒரு கூறு. ஆனால் அதுவே சமூக நீதியல்ல. அந்த முழுமையான சமூக நீதியைத்தான் நாங்கள் புரட்சிகர சமூக நீதி என்கிறோம். அந்தப்புரட்சிகர சமூக நீதியை நிலைநாட்ட நமக்கு தேசிய அரசியல் அதிகாரம் வேண்டும். நாம் உருவாக்கக்கூடிய அரசு, வர்க்கக் கோணத்திலே இது மக்கள் ஜனநாயகம், புதிய ஜனநாயகம், தேசிய ஜனநாயகம் என்று வரையறுப்பது போல, இங்கே வர்க்கம் மட்டுமல்ல சாதி, பாலியல் ஒடுக்குமுறை இவையெல்லாவற்றையும் உட்படுத்துகிறவகையில், இந்த ஆதிக்கங்களுக்கெதிராக ஒரு அரசியல் அதிகாரம், அந்த அரசியல் அதிகாரம் ஒரு புதிய சமூகத்துக்கு அடித்தளமிடுகிறது என்ற பொருளில் தமிழ்த் தேசிய சமூக நீதிக் குடியரசு ஒன்றினை நாம் நிறுவ வேண்டும். அதற்கான போராட்டத்தைத்தான் நாம் இங்கே தமிழ்த் தேசியத்திற்கான போராட்டமாகக் கருதுகிறோம். அத்தகைய ஒரு புரட்சிக்காகத்தான் நாம் தமிழ்த் தேசிய சமூக நீதி எனும் கருத்தியலை முன் வைக்கிறோம்.

## கேள்வி நேரம்

**கனல் மைந்தன் :**

தோழர் தியாகு நேற்று பேசும்போது, வரலாற்றில் சோவியத் புரட்சி என்று நாம் பேசுவது உண்மையில் ரஷ்யப்புரட்சிதான் என்றார். ரஷ்யாவின் தேசிய உணர்வு, பண்பாடு ஆகியவற்றின் எழுச்சியாகத் தொடங்கிய ரஷ்யப்புரட்சி சோவியத் புரட்சியாக மலர்ச்சிபெற்றது. பிரெஞ்சுப் புரட்சிகூட தேசிய புரட்சிதான். இவ்வாறு வரலாற்றில் நடைபெற்ற எல்லாப்புரட்சிகளும் தேசியப் புரட்சிகளே என்றுநாம் புரிந்து கொள்கிறோம். இன்று பேசும்பொழுது தேசியத்தின் தோற்றத்தை, வளர்ச்சியை முதலாளியத்தோடு தொடர்புபடுத்திப் பேசினார். இவரது பார்வை சர்வதேசபார்வையாக, மார்க்சியவாதியின் பார்வையாகவே இருக்கிறது. இறுதியில்தான் சாதிச் சிக்கலை தொட்டுக் காட்டினார். தமிழ்த் தேசியத்திற்கும் சாதியச் சிக்கலுக்கும் உள்ள உறவு என்ன? என்பதைக் குறித்து இன்னும் அவர் சொல்லியிருக்க வேண்டும். மார்க்சியரைப் பொறுத்தவரை, எல்லாப் பிரச்சினைகளுக்கும் சர்வரோக நிவாரணியாக அவர்கள் முன்வைப்பது வர்க்கப் பார்வையைத்தான். இதே பார்வைதான் தியாகுவையும் தொற்றிக்

www.tamilarangam.net



கொண்டிருக்கிறது. தேசிய அளவில் ஆட்சி அதிகாரம் நமக்குக் கிடைத்தால் சாதியச் சிக்கலைத் தீர்க்க முடியும் என்று சொல்கிறார். ஆனால், பெரியாருடைய பார்வையும், அம்பேத்கருடைய பார்வையும் இன்று வேறுவிதமாக இருக்கிறது என்பதைத் தியாகு அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சர்வதேசியத்திலிருந்து தேசியத்திற்கு தியாகு வருகிறார். இது மார்க்சியரின் பார்வை. தேசியத்திலிருந்து சர்வ தேசியத்தைப் பார்த்தாலொழிய இந்தியாவில் சாதிப் பிரச்சினை தெரியாது. பெண் விடுதலை, தலித் விடுதலை எல்லாவற்றையும் உள்ளடக்கியதுதான் தேசிய இன விடுதலை. பெரியாரியத்தையும் அம்பேத்கரியத்தையும் உட்கொண்டுதான் தியாகு பேசினாரா? அல்லது ஒதுக்கி வைத்துவிட்டுப் பேசுகிறாரா?.

பதில் : நேரத்தை நான சரியாகப் பகுத்துக் கொள்ளவில்லை என்பதை உணர்கிறேன். இந்தியாவிலேயே சாதீயச் சிக்கலையும், தேசிய இன விடுதலைச் சிக்கலையும் இணைத்துப் பேசியவர் பெரியார் ஒருவர்தான். மகாத்மாபூலே, போன்றவர்கள் சாதீயச் சிக்கலைத்தான் முன்னிருத்திப் பேசினார்கள். பழைய அகாலி இயக்கம் மகந்துகளுக்கு எதிராகவும், வெள்ளையர் ஆட்சிக்கு எதிராகவும இயக்கம் கண்டார்கள். பெரியார் தன் இறுதி உரையில் ஒன்றைத் தெளிவாகக் கூறினார். தமிழ்நாட்டுக்கு விடுதலை இல்லாமல், பார்ப்பானையும், பணக்காரனையும் ஒழிக்க முடியாது என்று பெரியார் வெளிப்படையாகச் சொன்னார். பெரியார் தன் காலத்தில் காமராசரைப் புகழ்ந்தார். கழக ஆட்சியைக் கண்டித்தார். பிறகு கலைஞரைப் புகழ்ந்தார். கலைஞருக்குத் திராவிடர் கழகம் சிலைவைக்க வேண்டுமென்றார். இவை எல்லாவற்றையும் பெரியார் இந்தப் பேச்சில் ஒரே அடியாக நொறுக்கி விடுகிறார். காமராசர் யார் கலைஞர் யார்? என்றெல்லாம் தெளிவுபடுத்திவிடுகிறார். தமிழ்நாட்டின் விடுதலை இல்லாமல் சாதியை ஒழிக்க முடியாது, பார்ப்பானை ஒழிக்க முடியாது, பணக்காரனை ஒழிக்க முடியாது என்று சொல்கிறார். இன்று தமிழ்த் தேசியம் என கருத்தியலாக எதை நாம் தெளிவுபடுத்தி முன்வைக்கிறோமோ அதை தன் இறுதி உரையில் பெரியார் தெளிவாகச் சொன்னார். நேற்றே நான் தெளிவுபடுத்தியது போல என்னுடைய அடிப்படை அணுகுமுறை மார்க்சிய அணுகுமுறை வேறு எதையும் நான் கற்றுக் கொள்ள மாட்டேன் எதிராகத்தான் நிறுத்துவேன் என்பது இதன் பொருள் அல்ல. மாவோ அடிப்படையில் மார்க்சியவாதி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் புரட்சிக்கான தயாரிப்பில் அவர் சன்யாட்சனை எடுத்துக் கொள்கிறார். சன்யாட்சன் மார்க்சியவாதி இல்லை. சன்யாட்சன் கோமிண்டாங் இயக்கத்தை நிறுவியவர். அதில் இவர்களெல்லாம் இருந்தார்கள். அதுஒரு புரட்சிகர ஜனநாயக இயக்கம் ஒவ்வொரு நாட்டின் புரட்சிகரப் பாரம்பரியங்களை உள்வாங்காமல், வெறும் மார்க்சியத்தை வைத்துக் கொண்டு புரட்சி செய்ய முடியாது.

www.tamilarangam.net



மாவோ மார்க்சியத்தில் மட்டும் தேர்ந்தவராக இருந்தால் சீனப்புரட்சியை செய்திருக்க முடியாது. சீன வரலாற்று அறிவிலும் அவர் தேர்ந்தவராக இருந்தார். சீனவரலாற்றின் புரட்சிகர மரபுகளை உள்வாங்கி மார்க்சியத்தை அவர் செழுமைப் படுத்தினார்.

இங்கு நாம் அம்பேத்கரையும், பெரியாரையும் உள்வாங்க வேண்டியுள்ளது. சாதியின் அரணாக நிலவுகிற அகமணமுறை என்பதை அம்பேத்கர்தான் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். இராசபுதனத்தில் பெண்சிசுக்கொலைக்கும் சாதியமுறைக்கும் உள்ள தொடர்பை அம்பேத்கர் விளக்கியதுபோல எந்த மார்க்சியவாதியும் விளக்கவில்லை. இன்ன இன்னாரிடம் இருந்து இவற்றை எடுத்துக் கொண்டேன் என்று விளக்குவதற்கு, எனக்கு நேரமும் இல்லை.

எந்த மாக்சியவாதியும் மார்க்சுக்காக உயிரைத் தரவேண்டியதில்லை. அதேபோல எந்த பெரியாரியரும், அம்பேத்கரியரும், பெரியாருக்காக, அம்பேத்கருக்காக உயிரைக் கொடுக்க வேண்டாம். என்னுடைய முதல் விசுவாசம் என் சமூகத்திற்குத்தான், எந்த இசத்திற்குமல்ல. என்னுடைய சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கு மார்க்சியம் ஓர் அறிவியல் அணுகுமுறையைத் தருகிறது. இதற்காகத்தான் எனக்கு மார்க்சியம் தேவை. இது போதவில்லையென்றால் வேறு எந்த அணுகுமுறையையும் நான் எடுத்துக் கொள்ளத் தயார். எந்த அணுகுமுறையும் சமூகத்திற்குத் தேவையென்றால் அது நிற்கும். தேவையில்லையென்றால் காலாவதியாகிவிடும். சுரண்டலும் ஒடுக்குமுறையும் உலகில் இருக்கும்வரை அதைப் புரிந்து கொள்வதற்கும் ஒழிப்பதற்கும் மார்க்சியம் என்னும் பேராயுதம் உயிரோடிருக்கும். அதை யாரும் அழித்து விடமுடியாது.

பெரியார் 45 வயதில் பேசியதற்கும் 90 வயதில் பேசியதற்கும் வேறுபாடு உண்டா, இல்லையா? வளர்ச்சி என்பது எல்லோருக்கும் உரியது, தேவைப்படுவது. அவருடைய அனுபவம் அவரது கருத்துக்களைச் செழுமைப்படுத்தியிருக்கிறது. அவர் இன்று உயிரோடு இருந்தால் 95வயதுப் பெரியாரிலிருந்து 125 வயதுப் பெரியார் வேறுபட்டிருப்பாரா? இல்லையா? அவர் இல்லாத காலத்தில் சமூக இயக்கத்தின் போக்கை, வளர்ச்சியை புரிந்துகொள்வதும் வெளிப்படுத்துவதும் ஆகிய கடமை நமக்கு இருக்கிறது. ஆகவேதான் மார்க்சோடு, பெரியாரோடு நாம் நின்றுவிடமாட்டோம். அவர்களெல்லாம் நம் வழியைத் தடுக்கிற தடைகளல்ல. அவர்களெல்லாம் நாம் ஓடுவதற்கான குதிபலகைகள். நாம் மேலே போகவேண்டும் இல்லையென்றால் அவர்களைக் காப்பாற்றமுடியாது.

உலகளாவிய தேசிய இனச்சிக்கல் பற்றிப்பேச நேற்று எனக்கு நேரம் கிடைக்கவில்லை. புரட்சியின் ஒரு கட்டத்தில் அணிச் சேர்க்கை என்பது புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆதரவாக இருக்கவேண்டும். நெல்சன் மண்டேலா, கம்யூனிஸ்டுகள் உட்பட ஒரு அணிச் சேர்க்கையை உருவாக்கியதால்தான், போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். பாலஸ்தீனத்திலும் கம்யூனிஸ்டுகளை உள்வாங்கி

www.tamilarangam.net



கொண்டதாகத்தான் விடுதலைப் போராட்டம் இருந்தது. சார்டினிஷ்டுகளுக்கும் இந்தத் தெளிவு இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இந்தத் தெளிவு இருக்கிறது. அவர்களை நாம் புகழ்வதோடு இருந்துவிடமுடியாது. கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கான கருத்தியலை நாம் நிறுவிக் கொள்ளவேண்டும். நான் கேட்டுக் கொள்வது இதுதான். தலித் விடுதலை என்பது இன்னதுதான் என்பதில் முதலில் நாம் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும். தலித் விடுதலை என்றால் சாதி அமைப்பை அடியோடு தகர்ப்பது. சாதி அமைப்பை வைத்துக் கொள்வதல்ல. அது வெறும் தீண்டாமையிலிருந்து விடுபடுவது மட்டும் என்றால் நகரப் பகுதியிலிருந்து தீண்டாமை பெரும்பாலும் ஒழிந்து விட்டதென்று வைத்துக் கொள்ளலாம் தனியாக டம்ளர்தான் என்றால் கீழைத் தஞ்சையில் அதை ஒழித்துவிட்டார்களென்றே வைத்துக் கொள்ளலாம். சாணிப்பால், சவுக்கடிதான் தீண்டாமை என்றால் சீனிவாசராவ் தலைமையில் அதை என்றோ ஒழித்துவிட்டார். இவையெல்லாம் சாதியின் வெளிப்பாட்டு வடிவங்கள். சாதி அமைப்பை அதனுடைய பொருளியல் அடித்தளத்தை உடைக்காமல் தகர்க்க முடியாது. பொருளியல் அடித்தளத்தை தகர்ப்பதென்பது சாதிய ஏற்றத்தாழ்விலிருந்து விடுதலை பெறுவது. தென்னாப்பிரிக்காவில் கறுப்பன், வெள்ளையன் எல்லோருக்கும் ஆளுக்கு ஒரு வாக்கு என்ற நிலை முதலில் ஏற்படவேண்டும். பிறகுதான் நிறவேற்றுமையை ஒழிக்கமுடியும். இங்கும் சாதி ஒழிப்பதற்கு ஒரு படிநிலை இருக்கிறது. அதுதான் புரட்சிகர சமூக நீதி என்ற படிநிலை. சோசலிசத்திற்கு முன்னர் ஜனநாயகம் தேவைப்படுவது போல், பொதுவுடைமைக்கு முன்னால் சோசலிசம் தேவைப்படுகிறது. மனிதனுக்கு மனிதன் சமம் என்ற நிலையைத் தோற்றுவிக்காமல் தலித் விடுதலைக்கு நாம் போக முடியாது.

நேற்றே நான் கூறியபடி தேசியப் போராட்டம் என்பது தனக்கே உரிய ஒரு தனி இருப்பையும் பெற்றுள்ளது. அதே நேரத்தில் வர்க்கப் போராட்டத்தின் வடிவமாகவும் இருக்கிறது. சீனப்புரட்சியும், வியட்நாம் புரட்சியும் வர்க்கப் போராட்டமில்லையா? வெறும் தேசியப் போராட்டம்தானா? வெறும் தேசியப் போராட்டமென்றால் அது எப்படி சோசலிசத்திற்கு வழி வகுக்க முடியும்? வெறும் இந்திய சுதந்திரம் என்பது அரைகுறைச் சுதந்திரம்.
போகிறோமா? எந்த இலக்கு? வர்க்க வழியில் உழைக்கிற மக்களுடைய சாதி வழியில் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுடைய அரசியல் அதிகாரத்தை நிறுவ போராடுகிறோம். அதற்கு தேசிய எல்லைப்பரப்பு எது? உலகமா?, இந்தியாவா? தமிழ்நாடா? உலகஅளவில் புரட்சியை ஒரேயடியாகச் சாதிக்க முடியுமா? அதேபோல இந்தியப் புரட்சி? வர்க்கப் போராட்டத்திற்கு தேசியக்களம் இருக்கிறது. ஒடுக்கப்பட்ட

www.tamilarangam.net



தலித் விடுதலைக்கான களம் என்ன? அதை முதலில் வரையறை செய்ய வேண்டும். அமெரிக்காவில் உள்ள நீக்ரோ மக்கள், கிழக்கில் உள்ள மஞ்சள் இனமக்கள் இப்படி எல்லோரையும் இணைத்துத்தான் ஒரு விடுதலையைச் சாதிக்கப் போகிறோமா? நமக்கு ஒரு தெளிவு வேண்டும். சாதி என்பது மனநிலை மட்டுமல்ல. அது பொருளியல் அடித்தளத்தோடு தொடர்புடையது. பொருளியல் அடித்தளத்தை உடைக்காமல் மன மாற்றத்தைச் சாதிக்க முடியாது. அந்தரத்தில் இருக்கிற வெறும் பண்பாட்டு இருப்பல்ல சாதி. அதற்கு ஒரு பொருளாதார அடித்தளம் இருக்கிறது. அதைப் பாதுகாக்கிற அரசியல் மேல் கட்டுமானம் இருக்கிறது. அரசியல் கட்டுமானத்தை இன்று கைப்பற்றினால் பொருளியல் அடித்தளத்தை மாற்றலாம். பொருளியல் அடித்தளத்தை மாற்றும்பொழுது அது வெறும் பண்பாட்டு இருப்பாக இருக்கும். அப்பொழுது அதை ஒழிக்க முடியும். அதற்கு முன்னால் பண்பாட்டைக் கவனிக்க வேண்டாம் என்று பேசினால் அது தவறு.

வர்க்க அமைப்பைப் போல சாதி அமைப்பு இருக்கிறது. இரண்டும் ஒன்றாக இல்லை. சாதியும் வர்க்கமும் ஒன்றல்ல. ஒருவரின் வர்க்கம் தெரிந்தவுடன் சாதி தெரிந்துவிடாது. சாதி தெரிந்தவுடன் வர்க்கம் தெரிந்துவிடாது. இன்று இடையிலுள்ள சாதிகளுக்குள் வர்க்க வேறுபாடு நுழைந்துள்ளது. இப்படி நுழைந்த வர்க்க வேறுபாடு சாதியை இன்றும் ஒழிக்கவில்லை. சாதியும் வர்க்கமும் கலந்த நிலையில் உள்ளன. சாதிக்கும் வர்க்கத்திற்கும் இடையில் உள்ள வரவு இயங்காற்றல் மிக்க உறவு. ஒட்டுமொத்தத்தில் இன்றைய நிலையில் சமூக நீதிக்கான போராட்டம் என்பது வர்க்க போராட்டமாகவும் இருக்கிறது. ஒரு பக்கம் இது பொருளியல் ஆதிக்கத்திற்கெதிரான போராட்டமாக இருக்கிறது. மறுபக்கம் சாதிகளுக்கிடையிலான சமத்துவத்திற்கான போராட்டமாக இருக்கிறது. இரண்டும் இணைந்ததுதான் இன்றைய போராட்டம்.

அதேபோல இன்றிருக்கும் பொருளாதாரஅமைப்பில் பெண் விடுதலை எப்படிச் சாத்தியமாகும்? பொருளியல் அமைப்பு மாறும் வரை பெண்கள் அடிமையாகத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல என் வாதம். போராட்டம்தான் விடுதலைக்கான அணியை உருவாக்கும். தமிழ்த் தேசிய விடுதலைக்கான அணி என்பது சமூக நீதிக்கான போராட்டத்திலிருந்து வரும். இட ஒதுக்கீட்டிற்காகப் போராடுகிறோம். தமிழ்ப் பயிற்று மொழிக்காகப் போராடுகிறோம். பள்ளிகள் இல்லாத ஊரில் பள்ளிகளுக்காக, சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கு எதிராகப் போராடுகிறோம். அதீத பொருளியல் சுரண்டலுக்கு எதிராகப் போராடுகிறோம். புதிய காலனியத்தை எதிர்த்துப் போராடுகிறோம். இந்தப் போராட்டங்களுக்கு எந்த அரசியல் குறிக்கோளை வைக்கப் போகிறோம்? ஒவ்வொரு ஊரிலும தனித்தனியாகப் போராடப்

www.tamilarangam.net



மக்களை தேசியம் என்ற களத்தில்தான் திரட்டமுடியும். தேசிய எல்லைப் பரப்பை வகுத்துக் கொள்ளாத புரட்சி சாத்தியம் இல்லை.

www.tamilarangam.net



# 'தமிழ்த் தேசியமும்' கூட்டாட்சியும் – பேருரை

தோழர் வெ. ஆனைமுத்து

நான் சொல்லுகின்ற எந்தக் கருத்தானாலும் அது நான் சார்ந்திருக்கிற மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் கருத்தேயாகும் எனக்கென்று எந்த ஒரு சிக்கலிலும் சொந்தக் கருத்து எதுவும் இல்லை. தேசியம் என்பதன் தோற்றுவாயைப்பற்றி நாம் பார்ப்பது நல்லது. பழங்கால கிரேக்கத்திலும் உரோமிலும் நகர அரசுகள் இருந்தன என்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட அரசுகள் இந்தியாவிலும் இருந்தன என்று நாம் ஊகித்துக் கொள்வதற்கு நல்ல எடுத்துக்காட்டு புத்தர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடு, அவரைப் போலவே அருகில் இருந்த மன்னர்களும் மற்றவர்களும் ஆண்ட சிறு சிறு நாடுகள் எல்லாம் என்னுடைய பார்வையிலே கிரேக்கநாட்டு, உரோமநாட்டு நகர அரசுகளோடு ஒத்துப்பார்க்க வேண்டியவை. புத்தர் ஒரு பெரிய நாட்டின் தலைவரல்ல, அவர் ஒரு சிற்றரசர் அந்தச் சிற்றரசு என்பது மேலை நாடுகளின் நகர அரசு (City States) களைப் போன்றவைதான் என்று நான் கருதுகின்றேன். பின்னாலே மேலைநாடுகளிலே மிகப்பெரிய பேரரசுகள் உண்டாயின. இந்தியாவிலும் பேரரசுகள் உண்டாயின.

இந்தப் பேரரசுகளுக்கு அடித்தளமாக சில வரலாற்று நிகழ்ச்சிகளை நாம் பார்க்கமுடியும் புராணங்களிலே நாம் படிக்கிறபடி ஏதோ ஒரு காலத்தில் 56 தேசங்களைக் கொண்ட ஒரு பகுதியாக இன்றைய இந்தியா இருந்ததை நாம் பார்க்கிறோம் அந்த 56 தேசங்கள் துல்லியமாக எவை என்று நமக்குத் தெரியாவிட்டாலும், கோசலம் என்றும் – கலிங்கம் என்றும் சில நாடுகளைப் பற்றிப் பார்க்கிறோம் அப்போது சிறு சிறு பகுதிகளாகத்தான் இந்தியா இருந்தது. அவையெல்லாம் இந்துக்களாலே ஆளப்பட்ட காலத்திலும் சரி, இஸ்லாமியர்களாலே ஆளப்பட்ட காலத்திலும் சரி, வரலாற்று ஆய்வுக் கண்ணோட்டத்தோடு நாம் பார்க்கிறபோது – கிபி 1310 வரையிலே நாசிக் என்கிற இடத்துக்குத் தெற்குப்பகுதியிலே எந்த வடநாட்டு ஆட்சியின் ஊடுருவலும் இங்கு இல்லை. மிகப்பெரிய பேரரசை வென்றெடுத்த அக்பரோ, அவருக்கு முன்னாலே இருந்த அசோகரோ நாசிக்கைத் தாண்டி வரவில்லை என்பது ஒரு வரலாற்றுச் செய்தி. ஆனால் அதற்குத் தெற்கேயுள்ள மக்கள் அந்தந்த நாட்டிலே பெரும்பான்மையாக இருக்கிறவர்களாலேயே ஆளப்பட்டார்கள் என்றால், அது கேள்விக்குரியது. அவ்வப்போது பக்கத்து நாட்டுக் காரர்களாலே சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு, அதற்குப் பின்னால் 16 ஆம் நூற்றாண்டு வரையிலே, தமிழகத்திலே, தெலுங்கர்கள் ஆட்சி, மராட்டியர்கள் ஆட்சி அதே நேரத்தில் வெள்ளையர்கள் ஆட்சி இந்த மூன்றும் ஒரு சேர இருந்ததையும் நாம் பார்க்கிறோம். கிபி1600 க்குப் பின்னாலே வெள்ளையர் ஆட்சியும் ஏறக்குறைய 1700 வரையிலே தெலுங்கர்கள், மராட்டியர்கள் ஆட்சியும் தமிழகத்திலே நடைபெற்று வந்ததை நாம் பார்க்கிறோம்.

www.tamilarangam.net



இப்போது நான் இதைக்கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம் 'தேசியம்' என்பது (National State) நேஷன் ஸ்டேட் என்கிற ஐரோப்பிய எண்ணத்தினுடைய ஒரு விளைவு தான் என்பதை குறிக்கவே. அதன் தொடக்கம் 1930 கள் என்று நாம் சொல்லலாம் இந்த 1930- கள் என்று நாம் சொல்கிறபோது அது ஐரோப்பிய நாடுகளைத் தளமாகக் கொண்ட ஒரு சிந்தனை அதன் வெளிப்பாடுதான் ஜெர்மானியர்களின் எழுச்சி யூதர்களிடத்தில் அவர்கள் சினம் கொண்டனர். 'ஜெர்மானியன்தான் உலகத்திலேயே சுத்த இரத்தத்தினைக் கொண்ட ஆரிய இனத்தைச் சேர்ந்தவன்'. "The Word German means, the most superior Aryanblood" அப்படித்தான் அன்று ஜெர்மானியர்கள் சொன்னார்கள். அந்த சொல்லுக்கே அப்படித்தான் பொருள் என்று அவர்களாலே சொல்லப்பட்டது

இந்த ஆரிய ஆதிக்கத்தை ஐரோப்பா முழுவதிலும், உலகம் முழுவதிலும்பரப்புவது என்பதுதான் ஹிட்லருடைய கோட்பாடு ஹிட்லர் இந்தக் கோட்பாட்டை எடுத்து அந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்திய யூதர்களை கண்டபடியெல்லாம் சின்னாபின்னப்படுத்திக் கொன்றான். நமக்குத் நன்றாகத் தெரியும் அதைப்பற்றி நாம் அதிகம் பார்க்க வேண்டியதில்லை இங்கே இதனை நான் சொல்லுவதற்கு அடிப்படை Nation State என்கிற இந்தக் கருத்து உருவாக்கம் ஐரோப்பிய நாடுகளிலே முளைத்ததுதான் என்பதைக்கூறுவதற்காகவே ஆகும் அதைப்பின்பற்றித்தான் பிரிட்டீஷ் இந்தியா என்று இருந்த காலத்திலும், சுதேசி இந்தியா என்று இருந்த காலத்திலும், பிரிட்டீஷார் வெளியேறிய பின்னாலும் இந்தக் கருத்துக்கு படிப்படியாக இங்கு ஆதரவு ஏற்பட்டது.

இந்திய தேசியக் காங்கிரசுக் கட்சியில் 1921ல் மொழிவழியாக காங்கிரசு மாகாண சபைகளை அமைப்பது என்று முடிவாகிறது. அந்தந்த மொழி பேசுகிற மாகாணத்துக்கு ஒரு காங்கிரசு கமிட்டி அப்பொழுது கம்யூனிஸ்டு கட்சி இல்லை. நீதிக்கட்சி இருந்தது. அதைச் செயல்படுத்தின அவர்கள் காங்கிரசுக்கட்சிக்கு மொழிவழியான கமிட்டிகளை அமைப்பதை ஏற்றுக் கொண்டார்களே தவிர, நீண்ட நாள் வரையில் மொழிவழி மாநிலம் அமைவதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் மொழிவழி மாநிலம் கேட்பது என்கிற போராட்டம் ஆந்திரா, தமிழகம், கேரளம் ஆகியவற்றில் நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே முளைத்து விட்டது. அது காங்கிரசுக்காரர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

## தமிழ்த் தேசியம் – தோற்றம் – வரையறை

மிகப்பெரிய நெருக்கடி ஏற்பட்ட பின்னால் தென்னகத்தைப் பொறுத்தவரையில் 1953ல் மொழிவழியாக மாநிலங்கள் பிரிக்கப்படுவது தொடங்கியது. இந்தச் சூழ்நிலையிலே தேசியம், தமிழ்த்தேசியம், தெலுங்கு தேசியம், கன்னட தேசியம் என்று சொல்லப்படுவதெல்லாம் முதன்மையாக, அது பெரும்பான்மையான மக்களால் வழங்கப்படுகின்ற மொழியை அடிப்படையாகக் கொண்டதுதான். அதனால்தான் தமிழ்த்தேசியம்,

www.tamilarangam.net



தெலுங்கு தேசியம், கன்னட தேசியம் என்கிறோம்.

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த "தமிழியம்" இயக்கத்தைப் பொறுத்தவரையிலே தம்ழ்த்தேசியம் என்பதிலே தமிழர்கள் என்பவர்கள் யார்? தமிழ்த்தேசியம் என்றால் என்ன? என்பது குறித்து ஒருவரையறை வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

எந்த மாநிலமாக இருந்தாலும் அங்கு பெரும்பான்மை மக்களாலே பேசப்படுகின்ற மொழியை வைத்துத்தான் மொழிவழித்தேசியம் என்பது உருவாக்கப்படுகிறது. ஆனால் அந்தந்த மாநிலத்தில் பெரும்பான்மை மக்களாலே பேசப்படாத சிலமொழிச் சிறுபான்மையர்கள் இருப்பார்கள். அவர்களை நாம் எப்படிக்கருதுவது என்பது ஒரு சிக்கல். இது நமக்கு மட்டும் உரிய சிக்கலல்ல. எல்லா மொழிக்காரர்களுக்கும் இந்தச் சிக்கல் உண்டு. தேசிய இனம் என்கிற பொதுத்தன்மைக்கு என்ன விளக்கம் இருக்கிறது? இந்த விளக்கம் ஐரோப்பிய நாட்டில் எப்படிச் சொல்லப்பட்டது? சோவியத்து நாட்டிலே எப்படிச் சொல்லப்பட்டது? என்றெல்லாம் நாம் ஆய்வு செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். ஏனெனில் இந்தக் கருத்துருவாக்கமும் நமக்குச் சொந்தமானதல்ல. அதைப்போலவே அரசியல் அமைப்புச் சட்டம் என்ற கருத்துருவாக்கமும் நமக்குச் சொந்தமானதல்ல. இவையெல்லாமே கடன் வாங்கப்பட்டவை. தமிழ்த்தேசியம் என்று நாம் சொல்கிற பொழுது யாரையெல்லாம் குறிக்கிறோம், எதைக் குறிக்கிறோம்? என்பதிலே ஒரு தெளிவு இருப்பது இன்றியமையாதது என்று நான் கருதுகிறேன். எங்களைப் பொறுத்தவரையில் தேசிய இனம், தேசிய இன விடுதலை என்பதை மார்க்சிய அடிப்படையில்தான் குறிக்கிறோம்.

ஒரு நீண்ட வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களாய் இருக்கிற மக்கள், நீண்டகாலம் ஓர் இடத்தை வாழ்கின்ற பகுதியாகக் கொண்ட மக்கள், குறிப்பிட்ட எல்லைக்குள் வாழ்கின்ற மக்கள், ஏறக்குறைய ஒரே பண்பாட்டை மேற்கொண்டிருக்கிற மக்கள், ஒரே மொழியைப் பேசுகிற மக்கள் என்ற இப்படிப்பட்ட அடிப்படைகளைக் கொண்டே ஒரு தேசியத்தை வரையறை செய்கிறோம். இப்படி இதுவும் மேலைநாட்டினுடைய சிந்தாந்தம்தான். சோவியத்து ஆட்சி இப்படி உருவாக்கப்பட்ட பின்னால் ஏறப்பட்ட கருத்துத்தான்.

தமிழ்த்தேசியம் என்கிறபோது இங்கே தமிழ் பேசுகிறவர்கள் மட்டும் தமிழ்த் தேசியத்திற்கு உரியவர்களா? இங்கே, தமிழ்ப்பகுதிகளிலே வாழ்கிற பிறமொழி பேசுகின்ற சிறுபான்மையர்களும் அதில் உள்ளிட்டவர்களா?, தமிழ்பேசுகிறவர்களாகவே பெரும்பான்மை எண்ணிக்கையில் இருக்கின்ற இயல்பாக அமைந்துவிட்ட இந்துக்கள் அல்லாதவர்களும் தமிழ்த்தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களா? என்பவற்றைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

இத்தனைக் கேள்விகளையும் எழுப்பி நாம் விடைகாணவேண்டும்

www.tamilarangam.net



இவற்றையெல்லாம் புறக்கணித்து ஒதுக்கிவிட்டுத் தமிழ்த் தேசியத்தைப் பேசுவது பொருத்தமாக இருக்காது, என நான் நினைக்கின்றேன்.

தமிழகத்தைப்பொறுத்தவரையிலே, பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்படுகிறது. மொழிவழி விழுக்காடு, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 85 விழுக்காடு. தமிழைத்தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் வெறும் 15 விழுக்காடு. அவர்கள் பேசுகிற மொழி பெரிதும் தெலுங்கு, அடுத்து கன்னடம், சிறுபான்மை சௌராஷ்டிரம், மிகச் சிறுபான்மை மராட்டியம். மிகச் சிறுபான்மை உருது, மிகமிகச் சிறுபான்மை ஆங்கிலம். இதற்கு மேலும் சில மொழிகளை பேசுபவர்கள் இருக்கலாம். அவர்கள் எல்லாம் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆயிரக்கணக்கான மக்கள். தொகையினைக் கொண்டவர்கள்.

அடுத்து மத வழிப்படி எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், தமிழகத்தைப் பொறுத்தவரை 5% இஸ்லாமியர்கள், 4% கிறிஸ்தவர்கள், மீதி எல்லோரும் இந்துக்கள்தான். வைணவத்தைப் பின்பற்றினாலும் சைவத்தைப்பின்பற்றினாலும் எல்லோரும் இந்துக்கள்தான். மற்றவர்கள் மதச்சிறுபான்மைக்காரர்கள். இந்த மதச் சிறுபான்மைக்காரர்களை நாம் இரண்டு வகையிலே பார்க்கவேண்டும். இங்கே மதமாற்றம் என்பது கிபி 1310க்குப் பின்னாலேதான் தொடக்கம் இஸ்லாமிய மதத்திற்கு மாற்றப்படுவது தொடங்கியது அப்போதுதான். 1600 க்குப் பின்னாலேதான் கிறிஸ்தவத்துக்கு மத மாற்றம் செய்வது தொடங்கியது. இப்படி மதம் மாறியவர்களில் எல்லாக் கால கட்டங்களிலும் இந்து சமூக அமைப்பின் கொடுமைகளில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்பதற்காக மதம் மாறியவர்கள்தான் அதிகம். இந்தக் கொடுமைக்கு ஆட்பட்டிருந்தவர்களில் பெரும்பாலோர் தீண்டப்படாதவர்களாகவும், சூத்திரர்களாகவும் உள்ள சாதிக்காரர்கள்தான். அதே நேரத்தில் வெள்ளைக்காரன் மதம் என்பதனாலே இங்கே சில மேல் சாதிக்காரர்களும் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். அதற்கு நல்ல எடுத்துக்காட்டு கேரளம். அங்கேயிருக்கிற நாயர்கள், ஈழவர்கள் என்பவர்களில் நிரம்பப்பேர் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். நம்முடைய தமிழகத்திலே பார்ப்பனர்கள், வெள்ளாளர்கள் (வேளாளர்கள்), ரெட்டி, இப்படி பலபேர் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். ஆனால் எண்ணிக்கையிலே இவர்கள் மிகக்குறைவு மிகப்பெரும்பான்மை பற்றிப்பேச வேண்டுமானால் முதலில் ஆதித்திராவிட மக்கள், அடுத்து நாடார்கள், அடுத்து அவர்களைப்போல தீண்டப்படாதவர்களாகக் கருதப்பட்ட மக்கள். அதற்குப் பின்னாலே பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகின்ற சூத்திரவகுப்பைச் சேர்ந்த கொஞ்சம்பேர். முக்குலத்தோர், வன்னியர், செங்குந்தர், என்று இருப்பவர்களில் மிகமிகக் குறைந்த அளவில் மதம் மாறினர். கவுண்டர்களில் மதம் மாறியவர்கள் இருக்கலாம். இவர்கள்

www.tamilarangam.net



அனைவரும் காலங்காலமாக இந்த நாட்டுக்குச் சொந்தக்காரமக்களாக இருந்தவர்கள். இவர்கள் எல்லோரும் பேசுவது தமிழ். ஆனால் பெரும்பாலானவர்களிடத்தில் இருந்து அவர்கள (கிறித்துவர்) வேறு பட்டிருப்பது சமயத்தால், ஆனால் ஒன்றுபட்டிருப்பது என்பது மொழியால். தேசிய இனத்திற்குரிய மற்ற கூறுகளைப்பார்க்கும் பொழுது ஒன்றுபட்டிருக்கிறவர்கள், நீண்டகாலமாக ஒன்றுபட்டு இருக்கிறவர்கள். கிறிஸ்தவர் வீட்டுப் பொங்கலும் நம் வீட்டு பொங்கலும் ஒன்று போலத்தான் இருக்கிறது. சில கிறிஸ்தவர்களும் காளியம்மன் கோவிலுக்குப் போய் பூசை போடுவார்கள். இசுலாமியர்கள்கூட சத்திரம் பார்ப்பவர்கள்தான். இஸ்லாமியர்களும் இந்துமதத்தின் கீழ்ச்சாதிகளிலிருந்து இசுலாமுக்குப் போனவர்கள்தான். மேல்சாதியிலிருந்து இசுலாமியர்களாக மாறியவர்கள் தமிழ்நாட்டில் குறைவு, கேரளாவில் அதிகம், வடநாட்டில் மிக மிக அதிகம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசிய இனம் என்கிற வரையறையில் யாரையெல்லாம் உள்ளடக்குவது?. ஏன் உள்ளடக்கவேண்டும்? அப்படி உள்ளடக்குவது முறையானதா? சரியானதா?என்பதை நாம் முதலில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது நல்லது.

சரி. இவர்கள் எல்லோருக்கும் முன்னால் இங்கு வந்தவர்கள் பார்ப்பனர்கள். பார்ப்பனர்கள் இன்ன காலத்தில்தான் இங்கு வந்தார்கள் என்பதற்கு நமக்குச் சான்றுகள் இல்லை. ஆனால் பாாப்பன மதக் கருத்துக்கள் இங்கு வந்துவிட்டன. இதற்குத் தெளிவான சான்று சிலப்பதிகாரத்தில் இடம் பெறுகிறது. கலித்தொகையிலும் இடம் பெறுகிறது. பிற்கால இலக்கியங்களிலே, பார்ப்பனர்களின் செல்வாக்கு என்பது தமிழர்களின் அன்றாட வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்த முற்பட்டு விட்டதைக் கொண்டு நாம் இதை அறிவோம். எது எப்படி இருந்தாலும், பல்லவர் காலந்தொட்டு இங்கே சமக்கிருத ஆதிக்கம், பார்ப்பனர் ஆதிக்கம், இந்துமதச் செய்திகள் இவையெல்லாம் முழுவீச்சோடு இங்கே வளர்ந்தன என்று நாம் திட்டமாகக் கொள்ளலாம். அதற்கு முன்னால் பரவியிருந்தாலுங்கூட பிற்காலச்சோழர், பிற்காலப் பாண்டியர் அவர்களுக்கு முந்தைய இராசராச சோழன் காலத்திலிருந்து தொடங்கினீர்கள் என்றால் இந்துமத ஆதிக்கம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பரவியது என்றாலும் கூட, அது அடித்தட்டு மக்கள் வரையில்போய்ச் சேரவில்லை சமுகத்தின் மேல்மட்டமக்கள் என்று கருதப்பட்டவர்களோடு நின்றது. அதாவது வணிகர்கள், பெரிய நிலவுடைமைக்காரர்கள், சமூகத்தின் மேல்தட்டிலே இருந்தவர்கள் ஆகியோர் நீண்ட காலத்திற்கு முன்பாகவே ஆரியக்கோட்பாட்டிற்கு அடிமைப்பட்டு விட்டார்கள். அது கீழ்த்தட்டு வரையிலே போய்ச் சேருவதற்கு நீண்டகாலம் ஆகியிருக்கிறது. அந்தப் ‘பரவுதல்முறையை’

www.tamilarangam.net



வேகப்படுத்திய காலம் பல்லவர் காலம். ஏனெனில் பல்லவர் காலத்திற்குப் பின்பு இங்கு பவுத்தத்திற்கும் சமணத்திற்கும் இருந்த செல்வாக்கு அடித்து வீழ்த்தப்பட்டது. அப்பொழுதுஇருந்தது இந்து மதம் ஒன்றுதான். அதை எதிர்த்துப் போராடிய வர்ணசிரமக் கொள்கையை எதிர்த்த பவுத்தமும், சமணமும் சாய்க்கப்பட்டு விட்டன. ஒட்டுமொத்தச் செல்வாக்கு இந்து மதத்திற்கு வந்துவிட்டது.

## வர்ணாசிரமதர்மம்-தமிழ்த்தேசிய உருவாக்கத்திற்குத்தடை

இந்து மதத்தை அரசர்கள்தான் வாழ்க்கைச் சட்டமாக எல்லா நிலைகளிலும் அறிமுகப்படுத்தினார்கள்.

நான் என்னுடைய 'தமிழ்நாட்டில் பண்பாட்டுப்புரட்சி' என்கிற நூலிலே இதுபற்றி விரிவாகச் சில செய்திகளை எழுதியுள்ளேன். 1980-களிலே வெளிவந்த நூலில் இது பற்றிய செய்திகளை எழுதியுள்ளேன். திருக்குறள் 2000 ஆண்டுகளாக இந்த நாட்டிலே இருந்த நூல். 1800 க்கு முன்னாலே திருக்குறளைப்பற்றி எந்த தமிழ்ப்புலவராவது எழுதியுள்ளாரா? அதாவது திருக்குறள் வெண்பாப்பாடியவர்களை விட்டுவிடுங்கள் திருக்குறளை வைத்துச் சமயக் கருத்துக்களை எழுதியவர்களை விட்டுவிடுங்கள் அவையெல்லாம் 10 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் வந்த நூலகள். ஆனால் திருக்குறள் என்பது அறநூல். சில வாழ்க்கை நெறிகளைக்கற்பிக்கக்கூடிய நூல் என்பதைத் தமிழ் அரசர்கள் உணர்ந்திருந்தனரா? சமூகத்தின் மேல்தட்டு மக்கள் உணர்ந்திருந்தார்களா? தமிழ்அறிவாளிகள் உணர்ந்திருந்தார்களா? என்று கேட்டால் இல்லை என்பதுதான் விடை

இங்கே அரசர்களும், மேல்தட்டு மக்களும், தமிழறிஞர்களும் எதைப்பரப்பினார்கள்? புறப்பொருள் வெண்பா மாலை என்பது கிபி 12, 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் இலக்கண நூல். அதில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்று சொல்லப்படுகிறது. அது பிராமணன், சத்ரியன் வைசியன், சூத்திரன் என்று சொல்லப்படக்கூடியதன் தமிழ்மொழி பெயர்ப்புத்தான்.

'மேல்வருணத்தாராகிய பிராமணன், சத்ரியன், வைசியன் என்கிற இந்த மூன்று பிரிவினருக்கும் மனம் மகிழ்ச்சி ஏற்படும்படியாக அவர்களுக்குச் சேவை செய்வதே வேளாண் மக்களுடைய கடமை' என்று அதில் கூறப்பட்டுள்ளது. இது வேளாண்மக்களுடைய கடமை என்கிற தலைப்பின் கீழே வருகிறது. வேந்தன் கடமை ,வணிகன் கடமை என்று சொன்ன பிறகு வேளாண் மாந்தன் கடமை சொல்லப்படுகிறது.

'மேல் மூவரும் மனம் புகல
வாய்மையான் வழி ஒழுகின்று'

என்பது புறப்பொருள் வெண்பா மாலையில் வருகிறது. இதை நீங்கள் ஒரு கால எல்லைக்கல்லாக வைத்துப் பார்த்தீர்களானால், தமிழகத்தில் ஆரியக் கலாச்சாரம் –பார்ப்பனக்கலாச்சாரம் வாழ்க்கையினுடைய அன்றாட நடப்பிலே, அரசின் கட்டளைப்படி

www.tamilarangam.net



ஆக்கப்பட்டது என்பதை நீங்கள் பார்க்க முடியும் .இந்த நடைமுறை, தமிழகத்தில், குறைந்தது ஒரு 1200 வருடங்களாவது இங்கு இருக்கின்றது வீடுகள் அமைப்பு, தெருக்கள் அமைப்பு கோயில் அமைப்பு ஊர்த்தொண்டு செய்தல், புரோகிதம் செய்தல் இப்படி எந்த நிகழ்ச்சியை நீங்கள் எடுத்துக்கொண்டாலும் (ஊர் அமைப்புஎன்பதே சாஸ்திரப்படிதான் எல்லாமே சாஸ்திரப்படிதான் கோயில் அமைப்புஎன்பது சாஸ்திரத்தின்படிதான் ) ஒரு தமிழனுடைய அன்றாட வாழ்க்கை என்பதே இந்த ஆரியர்களின் சாஸ்திரத்தின்படிதான். அப்படியானால் திருக்குறள், தமிழ்ச் சமூகத்தில இந்த 1800- ஆண்டுகளில் விளைவித்த தாக்கம் என்ன? அது திருக்குறளின் பிழையா? திருவள்ளுவரின் பிழையா? இல்லை. இந்த நாட்டிலிருந்த அரசர்கள், தலைவர்கள், அறிஞர்கள் இப்படிப்பட்டவர்களுடைய பெரிய பிழை திருக்குறள்நம் வாழ்க்கைக்குப் போதுமானதா இல்லையா என்பது வேறு, நான் போதுமானதில்லை என்கிற கருத்துடையவன்.

திருக்குறள் 'அரசைப்' பற்றிப் பேசுகிறது.

படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

இதெல்லாம் போதாது . ஆனாலும் அதில் அரசு என்பது பற்றி ஒரு விளக்கம் இருக்கிறது.

என்றைக்கு அர்த்த சாஸ்திரம்தான், இந்தியாவில் இருக்கிற மன்னர்களுக்கு - தமிழ்நாட்டிலே இருக்கிற மன்னர்களுக்குச் சட்டப்புத்தகம் என்று ஆயிற்றோ, அன்றைக்கு திருக்குறளுக்கு எந்த வேலையும் கிடையாது. ஏன்?

அரசன் அல்லது ஆட்சிக்காரன் மக்கள் கூட்டத்தை எப்படியெல்லாம் அடிமைப்படுத்தமுடியும், சுரண்ட முடியும், வன்மையாக ஒடுக்கி ஆட்சி செய்ய முடியும் என்பதையெல்லாம் மிக விஞ்ஞானரூபமாக அருமையாக கௌடல்யன் எழுதியிருக்கிறான் . அப்படித் திருக்குறளில் ஒன்றும் கிடையாது. அதாவது மனித சமுகத்தினுடைய வாழ்க்கையில் தோன்றக்கூடிய -நிகழக்கூடிய எல்லாவற்றைப்பற்றியும் விரிவாகச் சிந்தித்து அர்த்த சாஸ்த்திரத்தில் எழுதியிருக்கிறான். ஏன்? அவனுடைய ஆட்சியை - மேன்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால, அதற்கு வழி செய்ய வேண்டும் என்று கருதி ஒட்டுமொத்த சமூகத்தின் எல்லாக்கூறுகளைப் பற்றியும் நுட்பமாகச் சிந்தித்து, எல்லாவற்றிலும் அதைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டான். இந்தத் தன்மையில் அதற்குச்சமமாக ஒரு நூல் உண்டேன்று சொன்னால் மாக்கியவல்லி எழுதிய இளவரசன் (The Prince) நூல்தான்.

இதைப் பற்றி நான் பெங்களூரில் ஒரு திருக்குறள் மாநாட்டில் நான் பேசியபொழுது எல்லாப்புலவர்களும் என்னைக் கடிந்து பேசினார்கள். நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. என்னுடைய தாழ்மையான கருத்து, பெரியார் இயக்கத்திலே உள்ளவர்கள்கூட

www.tamilarangam.net



மனுநீதியை முழுமையாகப் படித்ததில்லை, அர்த்தசாஸ்திரத்தைத் திருப்பிக்கூடப் பார்த்ததில்லை. அவற்றையெல்லாம் படித்திருந்தால் இன்னும் ஆவேசமாக ஆரியத்திற்கு எதிராக நம்மவர்கள் புறப்பட்டிருப்பார்கள். பெரியார் எதை எடுத்துச் சொன்னாரோ அதை மட்டும் படித்தார்கள். பெரியார் குறிப்பிட்ட சில செய்திகளைத் தொகுத்துச் சொல்லி விட்டுப்போனார். எம்.ஏ.படித்தவர் முதற்கொண்டு பெரியார் சொன்னதை மட்டும் படித்தார்கள்.அப்படிப்பட்டவர்கள் இவற்றைப் படித்திருக்க வேண்டும். மனுநீதியையும் அர்த்த சாஸ்திரத்தையும் இங்கே உள்ள பொதுவுடைமைவாதிகள் படிக்கவில்லை, திராவிட இயக்கத்துக்காரர்கள் விரிவாகப் படிக்கவில்லை. இங்கே மிகப்பெரிய அரசியல்வாதிகள் என்பவர்கள்கூட, சில பார்ப்பனர்களை தவிர யாருமே இவற்றைப் படிக்காததாலே, இந்த சமூகத்தை அவர்களால் சரியாக ஆய்வு செய்ய முடியவில்லை. அர்த்த சாஸ்திரத்திலும், மனுநீதியிலும் என்னென்ன சமூக அடிப்படைகள் என்னென்ன பொருளாதார அடிப்படைகள் என்று எழுதியிருக்கிறான்? இந்த நூல்களில் தான் கீழ்ச்சாதி மக்களுக்குச் சொத்துரிமை கூடாது, பெண்களுக்குச் சொத்துரிமை கூடாது, பெண்ணுக்கு மோட்சம் கிடையாது என்றிருக்கிறது. இந்த நூல்களில்தான் பெண்ணுக்கு ஆண்களுக்குள்ள எந்த உரிமையும் கிடையாது என்றிருக்கிறது. இன்றைய வரைக்கும் அப்படியே இது இருக்கிறதா , இல்லையா? இந்தியா முழுவதிலும் எடுத்துக் கொண்டாலும், தமிழ்நாடு என்பதை மட்டும் பிரித்துப் பாத்தாலும், கீழ்ச்சாதி மக்கள் என்று நாம் யாரைக் கருதிக்கொண்டிருக்கிறோமோ அந்த மக்கள் உடைமை இல்லாதவர்கள். உடைமை இல்லாதவர்கள் என்று சொன்னால் சோம்பேறிகளா?, உழைக்காமல் சாப்பிடுகிறவர்களா? இல்லை. அவர்களது உடம்பு மட்டும்தான் அவர்களுக்கு உடைமை என்று பொருள். இது அப்படித்தான் இருக்கவேண்டும் என்று எதிலே எழுதியிருக்கிறது என்று கேட்டால், வெள்ளைக்காரன் வந்து இப்படி எழுதவில்லை. மனுநீதியிலே தான் இப்படித் தெளிவாக எழுதினான், அர்த்த சாஸ்திரத்திலேதான் இப்படித் தெளிவாக எழுதியிருக்கிறான். ‘பெண் என்பவள் ஒரு தோல் பை’ அதற்கு மேல் அர்த்தசாஸ்திரத்தில் அவன் எழுதவில்லை.

இந்த இந்திய சமூகம் அல்லது இந்து சமூகம் - அதிலே ஒரு கூறாக இருக்கிற தமிழ்ச்சமூகம், அரசியல் தளம், சமூகத்தளம், பொருளாதாரத்தளம் என எல்லாவற்றிலும் மிக இறுக்கமாக எதனடிப்படையிலே காட்டப்பட்டிருக்கிறது என்று கேட்டால் அர்த்த சாஸ்திரம் -மனுநீதி அடிப்படையில்தான். இதைப் பற்றிப் பல்கலைக்கழகங்களில் எடுத்து ஆய்வு செய்திருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு இதைச் செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது ஆனால் இவர்கள் செய்யமாட்டார்கள்.இவர்கள் அவ்வளவு துணிச்சலானவர்களும் இல்லை. அவ்வளவு அறிவாளிகளும் இல்லை. அப்படி ஒன்றும் பெரிய அறிவாளிகள் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்துவிடவில்லை. துணிச்சலானவர்களும் ஆட்சிக்கு வந்தது கிடையாது. ஆனால் பார்ப்பானுக்குத் துணிச்சல் இருந்தது. அவன்

www.tamilarangam.net



எப்பொழுதெல்லாம் பதவிக்கு வந்தானோ அப்பொழுதுதெல்லாம் தன்னுடைய நிலைப்பாட்டில் ஒரு விழுக்காடு கூட அவன் தாழ்த்திக்கொள்ளவில்லை. செய்ய முடியவில்லையென்றால், பதவியை விட்டுவிட்டு ஓடினானே தவிர, தன் முடிவை விடவில்லை. சி ராஜகோபாலாச்சாரி தன்னுடைய பிடியிலிருந்து, ஒரு தப்படிகூட கீழே இறங்கவில்லை. 1937 - 1939 லும், 1954லும் அப்படித்தான் ஆச்சாரியார் செய்தார். 1939- ல் "நான் எதையும் மாத்திக்க முடியாது, நான் சொன்னது சொன்னதுதான், நான் முடிவெடுத்தது முடிவெடுத்ததுதான், அதை நான் மாத்திக்க முடியாது. பதவியை வேண்டுமானால் தியாகம் செய்கிறேன். ஆனால் நான் எடுத்த முடிவை - இந்தியைத் திணிப்பதென்றால் திணித்துத்தான் தீருவேன்" என்றார். நாங்கள் எதிர்த்தோம். அவர் இந்தியை அப்படியே வைத்துவிட்டுப் பதவியை விட்டுத்தான் ஓடிப்போனார்.

ஆச்சாரியார் 1954 ல் சாதிக்கல்வித்திட்டம் கொண்டு வந்தார். நாங்கள் அதை நீக்க வேண்டும் என்று கேட்டோம். எடுக்கமுடியாதுன்னு சொன்னாரு அவரு. அன்றைய சட்டமன்றம் அந்தக் கல்வித் திட்டத்தை எடுத்துவிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. "சட்டமன்றம் சொல்வதை நான் கேட்க வேண்டிய அவசியமில்லை, நான் சங்கரர்" மாதிரின்னு சட்டமன்றத்திலேயே சொல்லிவிட்டார், "பார்ப்பனர் வீட்டைக் கொளுத்துவேன்" என்றார் பெரியார். "நீ கொளுத்திக்கோ" என்றார் ஆச்சாரியார். என்ன செய்தார்? குலக்கல்வித்திட்டத்தை அப்படியே வைத்துவிட்டுப் பதவியை விட்டுவிட்டுப் போனார். அதுதான் பார்ப்பானுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடு. அவன் எந்தச்சூழ்நிலையிலும் அதாவது உன்னைக்கொல்லுவேன் என்று சொன்னாலும், அதையெல்லாம் தாங்கிக்கொண்டு அந்தக் கொள்கையிலே கொஞ்சம்கூட நழுவாமல், பார்ப்பான் வெற்றியடைந்தான்.

நாம் தேசிய இனம் என்று சொல்லுகிறபொழுது, இங்கே உள்ள சமூக அமைப்பு எப்படி இருக்கிறது என்பதை முதலில்நாம் புரிந்து கொள்ளவேண்டும். நாம், தமிழ் பேசுகிற மக்கள் என்றைக்குத் தோன்றினோம் என்று சொல்லமுடியாத பழமை கொண்ட வரலாற்றை உடையவர்கள், குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள்ளாகப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இருக்கிறவர்கள் ஏறக்குறைய ஒரு தன்மையான பழக்க வழக்கங்களைக் கொண்டவர்கள் என்று நான் சற்று முன்பு கூறினேன். ஆனால் நீங்கள் நுணுகிப்பார்த்தால் ஒவ்வொரு சாதிக்கும் ஒரு பண்பாடு உண்டு. பொதுப்பண்பாடு என்று ஒன்று தமிழனுக்கு இருக்கிறதா என்று சொன்னால் விழாக் கொண்டாடுவதில் இருக்கும், அதெல்லாம் வெளி வடிவம் - புறத்தோற்றத்தில் இருக்கும். ஆனால் நுணுகிப் பார்த்தீர்களானால் ஒவ்வொரு சாதிக்கும் ஒரு சாதியப் பண்பாடு இருக்கிறது. அது சடங்கு வடிவத்தில் இருந்தாலும் கொள்வினை, கொடுப்பினை வடிவத்தில் இருந்தாலும் - எப்படியிருந்தாலும் ஒவ்வொரு உள்சாதிக்கும் ஒரு பண்பாடென்று இங்கே இருக்கிறது. அதனால்தான் தமிழ்ப்பண்பாடு என்று

www.tamilarangam.net



ஒன்று முழு ஆக்கம் பெறவில்லை. அப்படி ஒன்று முகிழ்க்கவேயில்லை. அதனால் தான் இந்துப் பண்பாட்டை எதிர்த்து இவன் போராட முடியவில்லை.

சரி இந்துப் பண்பாடு என்றால் என்ன? பார்ப்பானைத் தலைவனாக ஏற்றுக் கொள்வது முதல்தேவை. சிலையைக் கும்பிடுவது இரண்டாவது தேவை. சாஸ்திரங்களில் சொல்லியபடி மனிதன் அன்றாடம் வாழவேண்டும் இது மூன்றாவது தேவை. இப்போது மிகத் துல்லியமாகத் தெரிகிறது. நாம் தமிழன் என்று சொல்கிறோமே வன்னியர், கொங்கு வேளாளக் கவுண்டர், செங்குந்தர், முக்குலத்தோர், நாடார் எல்லோரும் தமிழர்தான். வெள்ளாளர், வெள்ளாளமுதலியார் தமிழர்கள்தான். பள்ளர், பறையர் தமிழர்தான். இவர்களுக்கெல்லாம் ஒரே பண்பாடு என்று எதைச் சொல்ல முடியும்? பண்பாடு என்றால், அது என்ன என்று தெரியவேண்டும்.

'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்பதெல்லாம் இங்கு பொருந்தாது. பண்பாடு என்பது வேறு. எப்படிச் சொன்னாலும், இங்கே தமிழ்பேசுகின்ற மக்கள் ஒரே பண்பாட்டை அல்லது ஒரே வாழ்க்கை நெறியைப் பின்பற்றுகிறோமா என்று நடுநிலையோடு ஆராய்ந்து பார்த்தோமானால், ஒவ்வொரு உள்சாதிக்காரரும் கொஞ்சம், கொஞ்சம் வேறுபாட்டோடு கூடிய, பல்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ளனர். அதாவது பழக்கம், வழக்கம், நாகரிகம் இவ்வளவையும் உள்ளிட்டதுதான் பண்பாடு.

தமிழகத்தில் கிட்டத்தட்ட 400 உள்சாதிகள் உள்ளன. இந்த 400 உள்சாதிக்காரர்களுக்கும் தங்களுக்கென்று எதில் ஒரு பண்பாட்டைக் கொண்டுள்ளனர்? எடுத்துக்காட்டாக தாலி அணியும் வழக்கத்தினை எடுத்துக் கொள்வோம். எல்லோரும் பயன்படுத்தும் தாலியும் ஒரே மாதிரி உள்ளனவா? இல்லை. ஆனால் ஓமம் வளர்க்காமல் ஒரு வீட்டிலும் திருமணம் நடப்பதில்லை. அது பார்ப்பானின் பழக்கம். சிலப்பதிகாரத்தில் வருகிறதே, கோவலனும் கண்ணகியும் கையைக் கோத்துக் கொண்டு தீயை வலம்வரும் காட்சி. எது நிலைகுலையாமல் இருக்கிறது - சிதையாமல் இருக்கிறது - வாழ்க்கையிலே படித்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது - அதற்கு எது பாதுகாப்பு அரணாகவிளங்கியது என்று பார்த்தால், இதற்கு மக்களுடைய பழக்க வழக்கங்கள் மட்டும் பாதுகாப்பாக இல்லை. அரசு என்பதே இதற்குப் பாதுகாப்பு மக்கள் கூட்டத்திற்கு எதிரி யார் என்று பார்த்தால், அவ்வப்போது இருந்த அரசே எதிரி ஆகும்.

## தமிழ்த்தேசியம் - யாரை உள்ளடக்குவது?

தமிழ் அரசர்கள், அதற்குப் பின்னால் பல்லவர்கள், அதற்குப் பின்னால் இசுலாமியர்கள், மராட்டியர்கள், தெலுங்கர்கள், எல்லோருக்கும் பின்னாலே ஆங்கிலேயர்கள், கடைசியில் தற்பொழுது இந்தியாவை

www.tamilarangam.net



ஆள்பவர்கள். இவர்கள் அனைவரும் இதனை மாற்ற முயற்சி செய்யவில்லை. தமிழ்த் தேசிய இனம் என்றால் அதில் யாரெல்லாம் அடங்குவார்கள்? இன்றைக்குள்ள தமிழகத்திலே நாம் யாரையெல்லாம் ஏற்றுக்கொள்வது என்று நாம் சிந்திக்க வேண்டும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே இங்கே சிறுபான்மை என்றிருக்கின்ற பிறமொழி பேசுபவர்கள் எல்லாம் தமிழ்த்தேசியத்தைச் சேர்ந்தவர்கள்தான். அதில் எந்த ஐயப்பாடும் கிடையாது. அதேபோல் இங்கே இருக்கின்ற இசுலாமியர்களும், கிறிஸ்தவர்களும் - அவர்கள் மதத்தால் வேறானாலும் தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களே. திருச்சி மாவட்டத்தில் ஆண்டிமடம் என்றொரு பகுதி. அங்கே கும்பல் கும்பலாய் வன்னியராக இருந்து கிறிஸ்துவர்களாக மாறியிருக்கிறார்கள் இந்த ஒரு தொகுதியை எடுத்துக்கொண்டீர்களானால் 10,000 20,000 வாக்காளர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பார்கள், அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறி விட்டார்கள் என்பதற்காக அவர்கள் தமிழ்த்தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று சொல்ல நமக்கு என்ன உரிமை இருக்கிறது?. அதைப்போலவே தெலுங்கு பேசுபவர்கள் என்பவர்கள் இந்த நாட்டிலே கோமுட்டிகள். பல ஊர்களில் நிரந்தரமாக இருப்பவர்கள். அடுத்து ரெட்டி. தெற்கே அயோத்திரெட்டி என்று சொல்வார்கள், தென்னார்க்காடு மற்ற பகுதிகளிலே பந்தாரெட்டி, இன்னும் கொஞ்சம் வடக்கே போனால் தாசிரெட்டி. ரெட்டிகள் தெலுங்கு பேசுபவர்கள. பலிஜாநாயுடு, கம்மவார் நாயுடு இவர்களும் தெலுங்கு பேசுபவர்கள். அதைப்போலவே கன்னடத்துக்காரர்கள். இவர்கள் எப்போது இங்கு வந்தார்கள் என்று துல்லியமாக ஆராயவேண்டும். கன்னடத்துக்காரன் இங்கு வந்து ஆட்சிசெய்யவில்லை. அவன் இங்கு பஞ்சத்துக்குப் பிழைக்க ஓடி வந்தவன். தெலுங்கன் அப்படி அல்ல, அவன் ஆட்சியே செய்தான். மராட்டியனும் ஆட்சி செய்தான். கன்னடத்தான் மட்டும் அங்கே பஞ்சம் வந்தபோது, ஆட்சியாளர்களிடம் அனுமதி கேட்டு இங்கு ஓடி வந்தவன்.

இப்போது இங்கே பல்வேறு மொழி பேசுகின்ற மொழிச் சிறுபான்மை மக்கள் இருக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் இவர்கள் எல்லோரும் தமிழ்த்தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களே. இவர்களையும் உள்ளிட்ட தமிழ்த் தேசிய இனத்திற்குத்தான் விடுதலை வேண்டும், என்று துல்லியமாகத் திட்டவட்டமாக மாக்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக்கட்சி கருதுகிறது.

## பெரியாரும் தமிழ்த்தேசியமும்

இனிமேல் கூட்டாட்சியா, சுதந்திரத் தமிழகமா என்று நாம் பார்க்கவேண்டும். பெரியார் அவர்கள் மறைகிற வரையிலே அவருடைய கொள்கை தனிச் சுதந்தரத் தமிழகம்தான். அதிலே பெரியாருக்கு எந்த நடுக்கமும் இல்லை. 1945க்குப் பின்னால் அந்தக் கொள்கையில் பெரியாருக்கு நழுவலோ, வழுவலோ கிடையாது. அதற்கு முன்னால் நடுக்கம் இருந்தது.

www.tamilarangam.net



தெளிவு புரிதல் இல்லாமல் இருந்தது. 1945லே, வெள்ளையன் பெரியாருடைய கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றவுடனே, வெள்ளையன் மேலே கோபம் வந்தது பெரியாருக்கு. அப்போதுதான், முதன்முதலில் பெரியார் சொல்கிறார். "வெள்ளையன் நமக்குத் துரோகம் பண்ணிவிட்டான். அவன் முழுக்க முழுக்கப் பார்ப்பான் பக்கம் சாய்ந்துவிட்டான். இனிமேலே வெள்ளையனைக் கண்ணை மூடிக்கொண்டு எதிர்க்கவேண்டும்" என்று தெளிவாக முடிவு செய்தார். அதற்கு முன்னாலே "வெள்ளையன் ஆட்சியின் கீழே இருந்தாலும் இருக்கலாம். இந்தப் பார்ப்பான் ஆட்சிக்குக்கீழே இருக்கக் கூடாது" என்று பெரியார் கருதினார். பெரியாருக்கு மட்டுமல்ல இந்தக்கருத்து ஏ.இ. ராமசாமி முதலியாருக்கும், ஊ.பு.அ. சௌந்தர பாண்டியனாருக்கும் இதே கருத்து இருந்தது மற்றும் எல்லாத் தலைவர்களுக்கும் இருந்தது. அப்பொழுது அண்ணாத்துரை அவர்கள் கட்சியில் இருந்தார். அவருக்கும் இந்தக் கொள்கை உடன்பாடு என்றுதானே அர்த்தம் ?

அப்பொழுது இருந்த பிரிட்டீஷ் அரசாங்கம், இந்திய அரசியல் சிக்கலை எப்படித்தீர்ப்பது என்று ஆய்வு செய்யும் பொருட்டு பிரிட்டீஷ் மந்திரி சபை தூதுக்குழு (British cabinet Mission) வினை சர்ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் (Sir. Stafford Cripps) என்பவர் தலைமையில் 1942ல் இந்தியாவிற்கு அனுப்பியது. அதனுடைய வேலை இங்கேயிருக்கின்ற அரசியல் கோரிக்கைகளுக்கு உரியவர்களைப் பார்த்துச் சான்று பெற்று முடிவு சொல்லுவது என்பதாகும். எல்லாக் கட்சிகாரரையும் அந்தக்குழு சந்தித்தது. பெரியார், சவுந்தரபாண்டியன், என்.ஆர். சாமியப்பா, எம்.ஏ.முத்தையா இவ்வளவு பேரும் போய் கிரிப்ஸ் குழுவினை 30.3.42- ல் பார்த்தார்கள். அவர்கள் கோரிக்கையின் உண்மையான படி (Copy) நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவன் (வெள்ளையன்) வெளியிட்டிருக்கிறான். அதிகாரமாற்றம் (Transfer of Power) என்று சொல்லி ஒரு வரிசை வெளியிட்டுள்ளான். அது ஒவ்வொன்றும் ஆயிரம் பக்கம் கொண்டது. பல தொகுதிகள் வெளிவந்துள்ளன.

இதிலே கிரிப்ஸ் சொல்கிறான், 'நீதிக்கட்சித் தலைவர்கள் நான்குபேர் என்னைச் சந்தித்தார்கள். அவர்கள் கோரிக்கையை நான் ஏற்க முடியவில்லை. அதற்குக் காரணங்கள் பின்வருமாறு.

1. முதலில் இவர்கள் சொல்லுகிற 'திராவிடம்' என்கிற பகுதியின் மொத்தப் பிரதிநிதிகளாய் இவர்கள் இல்லை.
2. இவர்கள் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் என்ற கோரிக்கையை வைத்து நாட்டுப் பிரிவினை கேட்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்தக் கோரிக்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆய்வு செய்ய முடியாது.
3. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்துக்கள், இசுலாமியர்கள், சீக்கியர்கள், ஆதி திராவிடர்கள், கிறிஸ்தவர்கள் இந்த ஐந்து வகையாகத்தான் இந்திய மக்களைப் பார்க்கிறது.

எனவே, 1945-க்குப் பின்னால் பெரியாருக்கு சுதந்தரத் தமிழகம் வேண்டும்

www.tamilarangam.net



என்பதில் எந்த நழுவலும் வழுவலும் இல்லை. அதில் அவர் தெளிவாக இருந்தார். ஆனால் போதுமான நடவடிக்கை எடுத்தார்களா? என்றால், இல்லை. எடுத்துக்காட்டாக திராவிடம் என்று சொன்னவுடனே கேரளம், கர்நாடகம், ஆந்திரம் இங்கேயெல்லாம் கட்சிக்குக் கிளைகள் வைத்திருக்க வேண்டும் பிரச்சாரம் மேற்கொண்டிருக்கவேண்டும் அந்த மொழிகளிலெல்லாம் ஏடுகள் துவங்கியிருக்க வேண்டும் அங்கேயும் போராடியிருக்க வேண்டும் அதனைச் செய்யவில்லை. அடுத்ததாக நேரடி நடவடிக்கை என்பதை ஒரு கட்டத்தில் பெரியார் தீர்மானித்தார். பாகிஸ்தான் கேட்டவுடனே 1.7.47 ல் ஜின்னா அவர்கள், வெள்ளைக்காரனை எதிர்த்துக் 'கோரிக்கைநாள்'( Demands Day) என்று கொண்டாடினாரே, அதைப் போலவே பெரியார் அவர்கள், 1.7.47 அன்று, முதல் முதலாக 'திராவிடநாடு பிரிவினைநாள்' என்று அறிவித்து தமிழ்நாடு முழுவதும் கொண்டாடினார். ஆனால் இந்தக் கொண்டாட்டங்கள் ஆந்திராவிலோ, கன்னடத்திலோ, கேரளத்திலோ இல்லை. அந்தக் கருத்தில் அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் வேறுபாடு கொண்டிருந்தார்கள். இது வெளிவராத ஒரு செய்தி அவர் வாய்மொழியாகச் சொன்னதை, அவருடைய வீட்டில், நான் கேட்டிருக்கின்றேன். அதாவது 1.7.47 திராவிடநாடு பிரிவினைக்கோரிக்கை நாள் கொண்டாடியதில் அண்ணாதுரைக்கு உடன்பாடு கிடையாது. ஆனால், அதற்குப்பின்னால் சுதந்தரதினத்தை ஆதரித்து திராவிடநாடு பத்திரிகையில் எழுதினார் அண்ணாத்துரை. ஆனால் பெரியாருடைய கொள்கை - நான் சார்ந்திருந்த திராவிடர் கழகத்தின் கொள்கை பெரியார் சாகும் வரைக்கும்கூட தமிழ்நாடு தனிநாடாகப் பிரிய வேண்டும் என்பதுதான்.

ஆனால் 1975 ல் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நான், 1976 ல் புதிய ஓர் அமைப்பைத் தொடங்கி இரண்டாண்டுகள் கொள்கைகளை வரையறை செய்து, 1980ல் தான் முடிவு செய்தோம் 1978-1980 ல்தான் நான் வடநாடு சென்று வந்தேன். 1980-களில் உலகமெங்கும் உள்ள சமதர்ம அரசுகளுக்கு எதிராகத் தாக்குதல் தொடங்கிவிட்டது. அது முழுமைபெற்றது 1988-89 ல். ஆனால் தொடங்கப்பட்டது, 1980-லே. சீனத்தில், சோவியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஊடுருவல் தொடங்கியது. மதவாதிகள் ஊடுருவல், கிறிஸ்தவ மதத்தலைவர்கள் ஊடுருவல், இசுலாம் மதத்தலைவர்கள் ஊடுருவல் நடந்தது. சோவியத்தில் கிறிஸ்தவ மத ஊடுருவல் அரசாங்கத்தின் அனுமதியோடு மிகப்பெரிய அளவில் இருந்தது.

## காஷ்மீர் சிக்கல்

ஜம்மு – காஷ்மீர் பிரச்சினையையும் இந்த நேரத்தில் நாம் கவனிக்க வேண்டும். இன்று இந்தியாவிலுள்ள காஷ்மீர் பகுதி என்பது அரைக்காஷ்மீர். மீதிக் காஷ்மீர் பாகிஸ்தான் பகுதியில் உள்ளது. பாகிஸ்தானுக்குத் தனிப்பிரதமர், பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீருக்கு தனிப்பிரதமர், இந்தியாவுக்குத் தனிப்பிரதமர். இந்தியாவிலே ஒரு மாநிலம் காஷ்மீர். அதிலே

www.tamilarangam.net



ஒரு பகுதி பாகிஸ்தான் வசம் உள்ளது. பாகிஸ்தான் வசமிருக்கிற இந்தியா – இழந்துவிட்ட காஷ்மீரோடு நம் காஷ்மீர் இணைந்துவிடக்கூடாது. அடுத்து பாகிஸ்தான் காஷ்மீரைப் பிடித்துக் கொள்ளக்கூடாது. ஜம்மு காஷ்மீர் இஸ்லாமியர்கள் பாகிஸ்தானியர்களோடு சேர்ந்துகொண்டு தாங்களே விரும்பியோ அல்லது வேறுவிதமாகவோ பாகிஸ்தானுடைய பகுதியாக ஆகிவிடக்கூடாது. இதுதான் அதில் அடங்கியுள்ளசெய்தி.

1951 ல் தொடங்கி இன்று வரைக்கும் ஜம்மு காஷ்மீருக்கு இராணுவச் செலவு கணக்கில் அடங்காது. 1951 ல் இந்திய வரவுசெலவு திட்டத்தில், மொத்தச் செலவு 360 கோடி ரூபாயில் 180 கோடி ரூபாய் காஷ்மீருக்காகச் செலவிடப்பட்டது, சரிபாதி காஷ்மீருக்குச் செலவிடப்பட்டது. இன்றைக்கும்கூட படைக்கு என்று செலவிடப்படுகின்ற தொகையில் ஜம்மு காஷ்மீருக்கு என்று ஒதுக்குவது மிகமிக அதிகம். இந்திய அரசு வரவு செலவில் அடிப்படைக்கல்விக்கு ,குடிநீர் வசதிக்கு, புதிய வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு அதிக ஒதுக்கீடுகள் கிடையாது. ஆனால் படைக்கு அதிக ஒதுக்கீடு அதுவே தவறு. ஆனால் இன்று வளர்ந்து வரும் ஏகாதிபத்திய நாடுகளின் இராணுவ வலிமை பார்க்கிற பொழுது பெரும் இராணுவம் வேண்டுமென்று சமாதானம் சொல்லி இராணுவத்தைப் பெருக்குகிறான். இராணுவத்திற்கு ஒதுக்கப்படும் தொகையில் பெரும்பகுதி காஷ்மீருக்கு செலவிடப்படுகிறது. காஷ்மீர் என்பது இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி இந்தியாவுடன் இரண்டாகக்கலந்துவிட்ட ஒருபகுதி என்று சட்டத்தில் இருக்கிறது. அப்படி எழுதப்பட்டு இன்றைக்கு 47 ஆண்டுகள் முடிந்துவிட்டன. 47 ஆண்டுகளில் இரண்டுபோர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடந்தன. இரண்டு போரிலும் வெற்றி பெற்றுவிட்டோம். அதற்கப்புறமும் இந்தப்பிரச்சினை தீரவில்லை என்னும்பொழுது இந்திய ஆட்சிக்கு காஷ்மீர் மிகப்பெரிய தலைவலியாக இருக்கிறது. இல்லையா?

இந்திய அரசியல் பிரச்சினைக்கு மூன்று பேர் தீர்வுகள் சொன்னார்கள். 1942ல்தான் இராஜகோபாலாச்சாரிதான் முதலில் தீர்வு சொன்னார். பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்தார். அப்போது நான் 8வது படித்துக்கொண்டிருக்கிறேன். அப்போ ஆச்சரியாகைக் கண்டித்து நாங்களெல்லாம், தெருவில் பாடிக்கொண்டு செல்வோம்.

“இராசகோபாலாச்சாரிக்கு சாவு வராதா
தெய்வம் சோறு போடாதா?” என்று.

அவர் பாகிஸ்தான் பிரிவது சரி என்று சொன்னார். அதுக்காக விவாதமும் செய்தார். காங்கிரசுக் கட்சியை விட்டு அவரை நீக்கினார்கள். ‘நீ நீக்கினாலும் சரி நான் சொல்வதைவிட மாட்டேன்’ என்றார் அவர். பெரியார் பாகிஸ்தான் பிரிவினை கருத்து உருவாவதற்கு முன்னாலேயே ஜின்னா அவர்களை சந்தித்தார். முஸ்லீம்லீக் என்பது ஓர் அரசியல் கட்சியாக அப்போது இயங்கவில்லை. அது ஒரு பண்பாட்டுப் பாதுகாப்புக் கட்சியாக – இட ஒதுக்கீடு கோருகிற அதாவது அதிகாரத்தில் பங்கு கோருகிற கட்சியாகத்தான் இருந்தது.

www.tamilarangam.net



## பாகிஸ்தான் பிரிவினை–தொடங்கியது

பெரியார் அவர்கள் பம்பாயில் 8.1.40ல் ஜின்னாவைப் பார்த்தார். முதல்நாள் கூட்டத்தில் பெரியாரும் அம்பேத்கரும் பேசினார்கள். அப்போது அண்ணாதுரையும் பெரியாருடன் சென்றுள்ளார். பி பாலசுப்பிரமணியம் என்று இன்னொருவரும் பெரியாருடன் சென்றிருந்தார். டி.ஏ.வி. நாதன் என்று ஒருவரும் சென்றிருந்தார். இவர்களெல்லாம் நீதிக்கட்சிப் பத்திரிக்கைகளின் ஆசிரியர்கள். ஆங்கிலத்தில் நிபுணர்கள். பாலசுப்பிரமணியம் 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர்.

பெரியார் அப்பொழுது திராவிடநாடு பிரிவினை கேட்டுக்கொண்டிருந்த காலம் (1939 ). அப்போ பெரியார் ஜின்னாவிடம் என்ன சொன்னார் என்று பம்பாய் பத்திரிக்கைகளில் விபரமாக வந்துள்ளது. "ஜின்னா அவர்களே! காங்கிரசுக்காரன் சுதந்திரம் கேட்கிறான். அரசியல் நிர்ணயசபைன்னு ஒண்ணு ஆரம்பிக்கறேன்னு சொல்றான். அப்படி அவன் சொல்வதை நீங்கள் ஒத்துக்கொள்ளக்கூடாது. இந்தியா முழுவதும் ஒரே அரசியல் நிர்ணயசபை என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் ஒரு தனி அரசியல் நிர்ணயசபை கேட்க வேணும்" என்று பெரியார் சொல்கிறார். அதற்கு மேல் அந்தப்பத்திரிகையில் ஒன்றும் விபரம் இல்லை. இது 8.1.40- ல் நடந்தது. முஸ்லீம் லீக் பாகிஸ்தான் பிரிவினை கேட்டுத் தீர்மானம் போடுவது 1940 மார்ச். சரி, ஜின்னா கேட்டார் பாகிஸ்தான். சி. இராசகோபலாச்சாரி பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்தார், பெரியார் ஆதரித்தார்.

இந்த மூன்று பேருக்கும் மேலே அம்பேத்கர் பாகிஸ்தான் பிரிவினையை முழுமையாக ஆதரித்தார். "முடியாதுன்னா பிரிச்சுக்கொடுத்துவிட்டு போயேம்பா, முஸ்லீம் அதிகமாக இருக்கிற பகுதியைப் பிரிச்சுக்குடுத்திடு . ஏன் வைத்துக்கொண்டு தடுமாறுகிறாய்?" என்று அம்பேத்கர் சொன்னார்.

தற்பொழுது காஷ்மீரில் இராணுவம் எதைக் காப்பாற்றுகிறது? வெறும் பணிப்பாறையைக் காப்பாற்றுகிறது. அங்கே புல்லும் முளைக்காது, நெல்லும் முளைக்காது, மனிதனும் குடியிருக்க முடியாது. அந்தப் பணிப்பாறையைக் காப்பாற்றிவது என்பது எல்லையைக் காப்பாற்றுவது என்கிற பேரால் நடந்து கொண்டிருக்கிறது. அதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகிறது.

சரி, தமிழ்நாடு தனியாகப் பிரிந்துவிடுகிறது என்று வைத்துக் கொள்வோம் கண்டிப்பாக நமக்கு ஒரு படை என்று வைத்துக்கொள்வோம் பக்கத்தில் கன்னடத்துக்காரன் அவனுக்கு ஒரு படை பக்கத்திலிருக்கிற ஐதராபாத்காரனுக்கு ஒரு படை. ஒவ்வொரு நாட்டுக்கு ஒரு இராணுவம். இந்த இராணுவத்தைக் கட்டி மேய்க்கிறது இருக்கிறதே, இதற்கே பெரும்பகுதி பணத்தை நாம் செலவு செய்தாக வேண்டும். இது ஒன்று.

இரண்டாவதாக, நான் தொடக்கத்திலே சொன்னதுபோல், சமதர்மம்

www.tamilarangam.net



என்கிற ஆட்சி அமைப்பு– அரசியல் அமைப்பு என்பதற்கு ஓர் அறைகூவல், ஒரு சவால் 1980 களில் எழுந்தது. சமதர்ம நாடுகளில் ஊடுருவல் செய்து பண்பாட்டுக்கேட்டை, நாணயக்கேட்டை, ஒழுக்கக்கேட்டை உண்டாக்கினார்கள். சோவியத்திலே கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் என்ற பெயரிலே கூட்டுறவுகளிலும் ஆட்சிப்பொறுப்புகளிலும் இருந்தவர்கள் அதிகார வர்க்கத்தார் செயல்படுத்துகிற சோசலிசம் என்று ஆரம்பித்தனர். அதிகார வர்க்கம் என்று ஒன்று இருப்பதே கூடாது. அப்போ இத்தகைய சீரழிவுகள் வந்தபின்பு தனிநாடு என்று கேட்டு அத்தனிநாட்டைக் கட்டிக்காப்பதற்கென்று ஒரு இராணுவத்தை நாம் நிறுவ வேண்டும். அது இல்லாமல் ஒரு தனிநாடு இருக்க முடியாது. முதல் பெரிய செலவு இராணுவச்செலவு.

அடுத்து, 1945 க்குப் பின்னாலே நம்முடைய தோழர்கள் நாட்டுப் பிரிவினை என்று கேட்டாலும் சரி, கூட்டாட்சி என்று கேட்டாலும் சரி,– அரசியல் புரிதலும், பொருளாதாரப் புரிதலும் வந்தால் அப்போது எது சரி, எது பிழை என்று புரியும் என்று எங்களது கட்சி நிலைபாட்டில் இருந்து நான் சொல்கிறேன்.

அரசியல் விடுதலை என்று தனியாக ஒன்று இருக்காது, கூடாது ஏனென்றால் எந்தவொரு நாடாக இருந்தாலும் அந்த நாட்டில் இருக்கிற சமுக்த்திற்கு விடுதலை, அதாவது சமூக சமத்துவம் பெறுவதற்குத் தடையாக இருப்பவற்றிலிருந்து விடுதலை-அதைவிட முதன்மையானது பொருளாதார விடுதலை. இந்த இரண்டு விடுதலைகளையும் உள்ளிட்ட விடுதலை என்பதுதான் உண்மையான விடுதலை. அரசியல் விடுதலை என்று தனியாக அதையும் பிரித்துப்பார்க்க முடியாது.

காங்கிரசுக்காரர்களும் விடுதலை (சுயராஜ்யா) கேட்டார்கள். 1929 ல் விடுதலைபற்றிப் பேச ஆரம்பித்தார்கள். 1931 ல் அதைக் கோரிக்கையாக வைத்தார்கள். அதற்கு முன்னால் அது ஒரு செய்தியாகப் பேசப்பட்டது. செய்தியாகப் பேசப்பட்ட அக்காலத்திலேயே, ம. சிங்காரவேலர்தான் முதன் முதலில், சுயராஜ்யம் பற்றிய கேள்வியை காங்கிரசுக்குள் எழுப்பினார். கம்யூனிஸ்ட் கட்சி தோன்றாததற்கு முன்னாலேயே, 1922 ல் என்று நினைக்கிறேன். "சுயராஜ்யா என்று சொல்கிறீர்கள், எதற்காக சுயராஜ்யம்? யாருக்காக சுயராஜ்யம்? இதற்கு முதலில் பதில் சொல்லுங்கள். அப்புறம் சுயராஜ்யத்தைப்பற்றி பேசுங்கள்". என்றார், சிங்காரவேலர். தயவு செய்து நினைத்துப் பாருங்கள். இப்பொழுது, காங்கிரசுக்காரர்கள் சுதந்திரம் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். கம்யூனிஸ்டுத் தோழர்களும் கொஞ்சம் கூடக் கவலைப்படாமல் சுயராஜ்யம் வந்த நாள் என்று கொண்டாடினார்கள். சுயராஜ்யம் வந்திருக்கிறதா? சரி வந்திருக்கிறது. யாருக்கு வந்திருக்கிறது? என்று ஒரு கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். அப்பொழுது மக்களுக்கு உண்மையான சுயராஜ்யம் வரவில்லை என்று தெரியும்.

இங்கு ஆதிக்க சக்திகளுக்கும், மேல்தட்டு வர்க்கத்தினர் என்று சொல்லப்படுகிறவர்களுக்கும் மட்டுமே சுயராஜ்யம் வந்துள்ளது. அப்புறம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்படி அது உண்மையான சுயராஜ்யமாக இருக்க முடியும் விடுதலைக்காக விடுதலை வந்துள்ளது. கலைக்காகக் கலை என்கிற மாதிரி ,தியாகராஜபாகவதர் சொன்னது போல, கலைக்காகக் கலை -அதிலுள்ள கருத்து உனக்குப் பயன்பட்டாலென்ன பயன்படாவிட்டாலென்ன, புரிந்தாலென்ன, புரியாவிட்டாலென்ன, இசை ஞானத்திற்காகவே – இசை மேன்மைக்காகவே இசைக்கலை. இந்தக்கருத்து எப்படிச் சரியாக இருக்கமுடியும்?. சிங்காரவேலர் 1902 ல் இலண்டனுக்குச் சென்றார். அன்றிலிருந்து அவர் மார்க்சிய சித்தாந்தத்துக்கு ஆளாகிவிட்டார். அவருடைய கருத்திலிருந்து ஒரே ஒரு வேறுபாடுதான் பெரியாருக்கு 1935 ல் ஏற்பட்டது. இட ஒதுக்கீட்டைப்பற்றிய வேறுபாடுதான். அது, வேறு எந்த வேறுபாடும் கிடையாது. சிங்காரவேலருக்குப் பெரியாரை ரொம்பப் பிடிக்கும்.

## பெரியாரும் சமதர்மமும் பிரிக்கமுடியாதது

சோவியத்திலிருந்து திரும்பி வந்தவுடன் பெரியார் முதல் அழைப்பு சிங்காரவேலருக்குத்தான். "கூப்பிடு பெரியவரை" என்றார். அவரை வைத்துக்கொண்டு தான் சமதர்மம் என்றால் என்னவென்று நாம் புரிந்து கொள்ளவேண்டும் என்றார். ஏனெனில் பெரியார் அவ்வளவு படிக்கவில்லை. சிங்காரவேலர் பெரிய படிப்பாளி அன்றைக்கெல்லாம் தமிழர்களில் வக்கீலே கிடையாது. அன்றைக்கு, என் வயதிலே, நான் பார்த்தது எந்த அலுவலகத்திலே நீங்கள் போனாலும் விசிறி இழுக்கிறவன்மட்டும்தான் தமிழன். அவனும் இருப்பான். இல்லையென்றால் முஸ்லீமாக இருப்பான். ஏனெனில் நாயக்கன் அப்பொழுதுதான் ஆட்சி செய்து ஒதுங்கிய நேரம், முஸ்லீமும் ஆட்சி செய்துவிட்டு ஒதுங்கின நேரம் வேற எந்தச்சாதிக்காரனும் இருக்கமாட்டான். எந்த அலுவலகத்திற்குப் போனாலும், அப்படிப்பட்ட காலத்திலே இந்தச் சிந்தனைகள் உருவாக்கப்படுவதென்பது ஒரு பெரிய சிக்கலாக இருந்தது.

பெரியார் அவர்கள் ஈரோட்டுக்கு சிங்காரவேலரை அழைத்து இரண்டு நாட்கள் பேசி "ஈரோடு சமதர்மத்திட்டம்" என்று அதற்குப் பெயரும் இட்டார். அவர்கள் இரண்டு பேருக்குமிடையில் புரிதல் என்பது முதன் முதலில் 1929 ல் வந்தது. 1929 ல் இருந்து படிப்படியாக வளர்ந்து, 1932 ல் "சரி, சமதர்மம்தான் விடிவு. அதைச் சமைப்பதுதான் அரசியல் விடுதலை. அதற்கு அப்பால் அரசியல் விடுதலை என ஒன்று இல்லை" என்கிற முடிவு வந்துவிட்டது. ஆனால், பெரியார் சமதர்ம கொள்கையினைப் பிறகு விட்டுக்கொடுத்துவிட்டார் என்று ஒரு பொய்யான கருத்து இருக்கின்றது. அது உண்மையிலே நல்ல பொய், எப்படி?

பெரியார் 1934 ல் தீவிரமாக சமதர்மத்தைப் பிரச்சாரம் செய்கிறார். அப்போது கம்யூனிஸ்டுக்கட்சி கொஞ்சம் செல்வாக்கோடு வளர்ந்து

www.tamilarangam.net



"நம்மளையும் தடை பண்ணப்போறாங்க. தடைபண்ணிட்டா நாம்ப பார்ப்பான், தமிழன் என்று பேசமுடியாது. இந்தத் தடை பண்ணுவதிலிருந்து நாம் தப்பிக்கவேணும். அதற்காகத் தற்காலிகமாக சமதர்மப் பிரச்சாரத்தை நிறுத்திவைக்கலாம்" என்று பன்னீர்ச்செல்வம் சொன்னார் அந்த நேரத்தில், இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்? என்ற தலைப்பில் பெரியார் கட்டுரை எழுகிறார். அவர் மேல் வெள்ளைக்காரன் வழக்குப் போடுகிறான். பெரியார் வெள்ளைக்கார மாவட்டக் கலெக்டரிடம் வந்து வாக்குமூலம் கொடுக்கிறார். "என் கொள்கை சமதர்மம்தான், நான் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக அதைத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். இப்போ நான் பேசுவது தப்புன்னு நீங்க நினைச்சா நீங்க கொடுக்கிற தண்டனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய அமைப்பைப் பாதுகாப்பதற்காக இந்தப் பிரச்சாரத்தைக் கொஞ்ச நாட்களுக்கு மெதுபோக்கில் பண்ணிக் கொள்கிறேன்" என்று வாக்குமூலம் கொடுக்கிறார். இது ஒரு செய்தி.

இப்போ யாருக்கும் தெரியாத செய்தி ஒன்று இருக்கிறது. மேலே கண்டபடி வாக்குமூலம் கொடுத்த பெரியார், அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அவர் எழுதிக்கொடுத்தது 1934 ஜனவரி என்று நினைக்கின்றேன். அவர் உடனடியாக சீனாவுக்குச் செல்ல விசா கேட்டு அரசுக்கு மனுச்செய்கிறார். இதை பின்னால் பெரியார் என்னிடம் வாய்மொழியாகச் சொன்னபோது நான் புரிந்து கொண்டேன். "ஏம்பா நான் ரஷ்யாவிற்குப் போனானே திரும்பி வர்றதாக நான் போகல. அங்கேயே இருந்து நல்லாப் புரிஞ்சிக்கிட்டு வந்து அதை அப்படியே இங்கே நிர்மாணிக்கறதுக்குத்தான் போனேன். என்கூட வந்தவங்க அங்கே சரியா நடந்துக்கல. நான் மே 28 ந் தேதி ஸ்டாலினை சந்தித்துப் பேசுறதுக்கு நான் குறிச்சுத் தந்தாங்க. ஆனால் அதிகாரிங்க வந்து, உன் ஆளுக நடவடிக்கைகள் சரியில்லை. நீ 19 ம் தேதியே வெளியேறவேணும் அப்படின்னு சொன்னான் நான் வந்துட்டேன்" என்று வாய் மொழியாக என்னிடம் சொன்னார் ஐயா.

வாய்மொழியாகச் சொன்னதற்கு என்ன ஆதாரம்? பெரியார் மாஸ்கோவில் உட்கார்ந்து கொண்டு எழுதிய நாட்குறிப்பு என்னிடம் இப்பொழுது கிடைத்துள்ளது. அதிலே தெளிவாக இருக்கிறது. அதிகாரி 17 ஆம் தேதியே டிக்கெட்டோட வந்து வெளியேற்றிவிட்டான் . பெரியார் 1939 ல் சென்றவர் 1972ல் என்னிடம் சொல்கிறார். அதிகாரிகள் வெளியேற்றாவிட்டால் அவர் வந்திருக்கமாட்டார். அவர் சோவியத்தின் மீது காதலால் செல்லவில்லை ஒரு சரியான புரிதல் அவருக்குத் தேவைப்பட்டது. இப்படிப்பட்ட ஆட்சி நம் நாட்டிலே வந்தாத்தான் பார்ப்பான் ஆதிக்கம் ஒழியும் என்று அவர் நம்பினார். அவர் சமதர்மத்துக்கு பயந்து கொண்டு கோவை கலெக்டரிடம் வாக்குமூலம் கொடுத்தது உண்மையானால், அவர் ஏன் சீனா செல்ல அனுமதி கேட்க வேண்டும்? அவருடைய மனு சென்னை மாகாணத் தலைமைச் செயலகத்திற்குச் செல்கிறது. அங்கேயுள்ள தலைமைச் செயலாளர் இவ்வாறு எழுதுகிறார். "ஈ.வெ. ராமசாமிநாயக்கரைச் சீனாவுக்குச் செல்ல அனுமதிக்கக்கூடாது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏனென்றால் இவர் ஒரு புரட்சிச் சிந்தனை உள்ளவர். அடுத்தாற்போல் இவருடைய தோழர்களும் இவரும் இப்போதும் சோஷியோ கம்யூனிசம் பேசிக்கொண்டிருக்கிறார்கள் இவரைப்போக அனுமதித்தால், இவரைப்போல ஏற்கனவே அங்கே சென்றுள்ள ராஷ்பிகாரிபோஸ் என்பவருடன் சேர்ந்து இவர் புரட்சிக்குத் தயராகிவிடுவார். எனவே அனுமதிக்கக்கூடாது" இந்த பதில் டெல்லிக்குச் செல்கிறது டெல்லிக்காரன் அதை ஏற்று பெரியாரின் விசாகோரும் மனுவைத் தள்ளுபடி செய்கிறான்.

அதற்குப் பிறகு சமதர்மத்தைப்பற்றி பெரியார் நிறைய பேசுகிறார். 1954 க்கும் 62 க்கும் இடையில் 8 ஆண்டுகள் அதிகமாகச் சமதர்மம் பற்றிப் பேசவில்லை. ஆனால் 1962-க்குப் பின்னால், முதல் நாள் சாதி ஒழிப்பு மாநாடு, இரண்டாவது நாள் சமதர்ம மாநாடு என்றுதான் தொடர்ந்து நடத்தினார். மாநாட்டில் காங்கிரஸ்காரர்களையும் கம்யூனிஸ்டுகளையும் வைத்துகொண்டே சமதர்மம் பற்றித்தான் பேசுவார்.

அடுத்து எந்த ஒரு தனி நாடாக இருந்தாலும், அது சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் - இராணுவம் கட்டாயம் தேவை அதற்குச் செலவிடும் பெரும் தொகையானது கண்டிப்பாக மக்களது வாழ்க்கையினைப் பாதிக்கும் மேலும் இன்று எல்லா நாடுகளையும் ஏகாதிபத்தியச் சுரண்டல் என்பதுபுதிய வடிவில் தனது ஆக்டோபஸ் கரங்களால் கவ்விப் பிடித்துக்கொண்டுள்ளது. அதிலிருந்து மீள எத்தனை நூற்றாண்டுகள் ஆகும் என நம்மால் சொல்லவே முடியாது ஏனென்றால் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆற்றல் என்பது மிகவும் சரிந்துள்ளது.

அதாவது சமதர்மத்தை சோவியத்தில் கட்டி எழுப்ப 1917 லிருந்து 1935 வரை ஆகியது. எல்லோருக்கும் கல்வி என்பது சோவியத்தில் 1935 ல் தான் நிறைவேறியது. எல்லோருக்கும் படிப்பு எல்லோருக்கும் வேலை ,வீடு, இலவச மருத்துவம் என்ற தன்னிறைவு 1935 க்குள் முற்றுப் பெறுகிறது. ஆனால்1935 க்குப் பின்னால் பாய்ச்சல் வேகத்தில் வளர்ந்திருக்க வேண்டிய சோசலிசம் டிராஸ்கியவாதிகள் பிரச்சினை மற்ற பிரச்சினை என்று இன்னும் பல சிக்கல்கள் இருந்தாலும் ஸ்டாலின் இருக்கும்வரை சோவியத் ஆட்சி கட்டுக்குலையாமல் இருந்தது.

ஆனால் ஸ்டாலின் காலத்திலேயே சோவியத்து ஆட்சிக்கு ஏற்படக்கூடிய அறைகூவலைச் சந்திப்பதற்கான பாதுகாப்பை அவரும் தேடவில்லை, டிட்டோவும் தேடவில்லை. அப்பொழுது மாவோ வெற்றி பெறவில்லை, மாவோவும் பின்னால் இதில் வெற்றிபெறவில்லை . அல்பேனியாவின் அதிபர் என்வர்ஹோக்சா என்ற சமதர்மப் புரட்சியாளர், அவரும் வெற்றிபெறவில்லை. என்வர்ஹோக்சா இன்றைக்கு 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். சாவதற்கு முன்னர் அவர் ஒரு சட்டம் இயற்றினார். என்ன சட்டம்? எந்த ஒரு குழந்தையின் பெரும், அதன் பெயரைக்கொண்டு இசுலாமியக் குழந்தை என்று தெரியக்கூடாது அப்படித் தெரிந்தால் தண்டனை என்றார். பெயர் வைக்கத் தெரியவில்லை என்றால் அரசாங்கம் பெயர் வைக்கும் என்றார். உலகின் ஒரே சமதர்ம - நாத்திக நாடான அல்பேனியாவில் இன்று பசி, பட்டினி, கொலை, கொள்ளை,

www.tamilarangam.net



விபச்சாரம் எல்லாமே நடக்கின்றன. அதேபோன்று இன்று சோவியத்திலும் நடக்கின்றது.

அதாவது இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் உலகிலுள்ள சமதர்ம நாடுகளையெல்லாம் திட்டமிட்டுச் சீரழித்ததை சமதர்மத் தலைவர்கள் எப்படி எதிர்கொண்டார்கள் என்பதை நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும். இரண்டாம் உலகப் போரில் வெள்ளைக்காரன் தோற்றுவிடக்கூடாது என்று பெரியார் சொன்னபோது ,பெரியார் வெள்ளைக்காரனுக்கு அடிமையாகிவிட்டதாக இங்குள்ள கம்யூனிஸ்டுகள் சொன்னார்கள். இதுபற்றியும் பொதுவாகவும் பிரிட்டீஷ் கம்யூனிஸ்டு கட்சி என்ன சொன்னதோ அதை அப்படியே நம்ம ஊர் கம்யூனிஸ்டுகளும் சொன்னார்களே தவிர இவர்களுக்கென்று சொந்தப் புத்தியில்லை. இந்திய கம்யூனிஸ்டுக்கட்சி என்பது நீண்ட காலமாக பிரிட்டீஷ் கம்யூனிஸ்டு கட்சியின் வழிகாட்டுதலை மட்டுமே ஏற்றுக் கொண்டது. ஆனால் பெரியார் அவர்கள் ஏன் வெள்ளைக்காரனை ஆதிரித்தார்? ஜெர்மன்கரான் வெற்றி பெறக்கூடாது – கண்டிப்பாக அவனைத் தோற்கடிக்க வேண்டும். இந்தியாவில் மதுரையில் முதன் முதலில் அப்போது நடந்த நாசிச எதிர்ப்பு மாநாட்டில் பேசியவர் பெரியர். ஏனெனில் ஹிட்லர் சொன்னான் “ஜெர்மன் என்ற சொல்லின் பொருள் மிகச் சிறந்த ஆரிய ரத்தம் அது தான் உலகை ஆளும் ”என்றான் அவன். அப்படிச் சொன்ன அடுத்த நாளிலிருந்து திருச்சியில் உள்ள பார்ப்பனர்கள், தேசியக் கல்லூரியிலும் செயின்ட் ஜோசப் கல்லூரியிலும் சேர்ந்து ஜெர்மன் மொழியினைக் கற்றார்கள். ஏனென்றால் ஜெர்மன்காரன் நமது நாட்டைப் பிடித்தவுடன் அப்போது பெரிய அதிகாரிகளாக உட்கார ஜெர்மன் மொழி அவசியம் என இங்குள்ள பார்ப்பனர்கள் நினைத்தார்கள். இந்தியாவில் பொதுவுடைமைக்காரர்கள் இந்திய சமூகக் காரணிகளை ஆராய்ந்து அதிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை.

## இந்தியாவில் சாதிச் சமூக அமைப்பு

மார்க்ஸ் மூலதனத்தின் முதல் தொகுதியில் மனுநீதியைப்பற்றி மிகத் தெளிவாகச் சொல்கிறார். புத்தகத்தின் இடையில்கூட எழுதவில்லை. முகவுரையில் எழுதுகிறார். பொதுவாக முகவுரையில் எழுதுவதெல்லாம் முதன்மையானது “ஓர் இந்து தன்னைப் போன்ற மனிதன் செத்துக்கொண்டிருந்தால் அதைப் பார்த்துக்கொண்டிருப்பான். அதே இந்து ஒரு பசுமாடு செத்துக் கொண்டிருந்தால் அதைப்பார்த்துக்கொண்டிருக்கமாட்டான்.” என மார்க்ஸ் எழுதி அது மனுநீதியிலே எந்த அத்தியாயம் எத்தனாவது ஸ்லோகம் என்றெல்லாம் அவரே குறிப்பிடுகிறார். இதிலிருந்து நாம் புரிந்து கொள்வதென்ன? இந்து என்பவன் மனித மனம் படைத்தவனல்ல, மிருக மனம் படைத்தவன், பசுமாடு இறந்தால் பார்ப்பான் இறந்தது போலாகும் பார்ப்பான் இறந்தால் பாரப்பன தோஷம் ஏற்பட்டுவிடும். எனவே மனிதன் மேல் காட்டும்

www.tamilarangam.net



அக்கறைவிட ஓர் இந்து பசுவின்மேல் அதிக அக்கறை கொள்வான், அதற்குப் புல்லும் போடுவான். நம்ம ஆள் இதனைச் சீவகாருண்யம் என்று சொல்வான். மனிதன் மேல் காருண்யம் இல்லை இந்த மிருகத்துக்கு, அந்த மிருகத்தின்மேல் இந்த மிருகத்துக்கு எப்படி காருணயம் வரும்?

மேலும் மார்க்ஸ் சொல்லுகிறார் "Sugar is sugar; in certain circumstances it becomes a commodity. A Negro is a Negro. In certain circumstances he becomes a slave". "சமூக அமைப்பை ஒவ்வொரு சமூகப் புரட்சிக்காரனும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்." என்கிறார் மார்க்ஸ் "சர்க்கரை, சர்க்கரையாகத்தான் இருக்கிறது ஆனால் அது எப்பொழுது பண்டமாக மாறுகிறது என்று சொன்னால் விற்கப்படும்பொழுது, வாங்கப்படும்பொழுது தற்பொழுது இது வாணிபம் எனப்படுகிறது அதைப்போல் நீக்ரோ மனிதனாகத் தானே பிறக்கிறான் அவனை யார் அடிமைப்படுத்தியது? சூழல் என்ன சூழல்? அவன் வாணிப் பொருளாக ஆக்கப்படும் சூழலில் அடிமையாகிறான். அதைப் போலவே இந்தியாவில் உள்ள வெகுமக்கள் மனிதர்களாகத்தான் பிறந்தார்கள். பெரும் எண்ணிக்கையில் உள்ள மக்கள், தாழ்த்தப்பட்டவர்களாக, ஒடுக்கப்பட்டவர்களாக, நசுக்கபட்டவர்களாக, எழுத்தறிவில்லாதவர்களாக, நிலவுடைமையற்றவர்களாக, இழிசாதிகளாக ஆக்கப்பட்டதற்கான சூழல் என்ன? வெள்ளையன் தந்த படிப்பினாலே இங்கே உருவான சமூக விஞ்ஞானிகள் என்பவர்கள் பார்ப்பனர்கள். இன்றைக்கு இருக்கிற பெரிய சமூக விஞ்ஞானி எம்என் சீனிவாஸ் என்கிற கர்நாடகத்துப் பார்ப்பான்தான். மண்டல் உட்பட பெரிய பெரிய வெள்ளைக்காரன்கூட அந்தப் பார்ப்பான் சொன்னதையே மேற்கொள் காட்டுகிறார்கள். அவன் இன்னமும் நான் பிராமணன்தான் என்று சொல்கிறான். தான் பிராமணன் என்று சொல்கிற ஒருவன் இந்திய சமூக விஞ்ஞானியாக எப்படி இருக்க முடியும்? கூடாது. என்னைப் பொறுத்தவரை அம்பேத்கர் மிகச்சிறந்த சமூக விஞ்ஞானி. சாதியையவ் பற்றிய அறிவியல் ஆய்வில் பெரியாரைவிட அம்பேத்கர் ஆய்வு மிகச் சிறந்தது.

மார்க்ஸ் சொல்கிறார். "ஒரு சோசலிசப் புரட்சியாளன் தான் எந்த நாட்டின் எந்த சமூகத்தில் சோசலிசப் புரட்சியை உண்டாக்க விரும்புகிறானோ, அந்த சமூகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அமைப்பையும் தெள்ளத்தெளிவாக ஆய்வு செய்ய வேண்டும் அதற்கு ஏற்றாற்போல் புரட்சி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்" என்று.

லெனின் சொல்கிறார். "புரட்சி என்பது இரஷ்யாவில் போலவே இங்கிலாந்தில் வராது; இங்கிலாந்தில் புரட்சி வருவது போன்று இத்தாலியில் வராது. இத்தாலியில் வருவது போலவே பிரான்சில் வராது. ஏனென்றால் ஆங்காங்கு உள்ள சமூக அமைப்பில் வேறுபாடு உள்ளது" என்று.

www.tamilarangam.net



இப்பொழுது, பெரியார் கொச்சை நாத்திகம் பேசினாரா-கொச்சை சமதர்மம் பேசினாரா என்பதை நீங்கள் விவாதத்திற்கு உட்படுத்தலாம் அதற்குப் பதில் சொல்ல நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இந்தியச் சமூகத்தில் கடந்த இரண்டாயிரம் ஆண்டகளாகப் பார்ப்பான் செய்த உற்பத்தி என்ன? துணி உற்பத்தி செய்தானா? தோல் உற்பத்தி செய்தானா? எந்த உற்பத்தியும் செய்யக் கிடையாது. பொய்யையே உற்பத்தி செய்தான். சமூக விரோதமான சிந்தனைகளையே உற்பத்தி செய்தான். ஆட்சிக்காரனாகவும், ஆலோசனைக்காரனாகவும், இராணுவத் தளபதியாகவும் ஒவ்வொரு ஆட்சிக்காலத்திலும், வெள்ளைக்காரன் காலம் உட்பட நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, வயிறை வளர்ப்பவனாகவே பார்ப்பான், பிள்ளை பெறுகிறவனாக இருந்தான். இதெல்லாம் மனிதன் செய்கிற வேலையா? இங்கே வெகு மக்கள் என்பவர்கள் எல்லோரும் உற்பத்தியாளர்களே. பார்ப்பான் அல்லாத மற்ற எல்லாச்சாதிகளும் மனித வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து வந்திருக்கிற சாதிகள் உற்பத்தி என்று சொல்லுகின்றபொழுது, அதன் பிரிக்கமுடியாத பகுதிகளாக இருந்தவர்கள்-இருப்பவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதப்பட்ட இந்துக்கள்.

இங்குள்ள ஊரறிந்த கம்யூனிஸ்டுகாரர்கள் (Conventional Communists) மற்றும் மார்க்சியவாதிகள் இந்த சமூகக் காரணிகளை – சமூக அறிவை ஏனோ ஒதுக்கிவிட்டார்கள்! ஏனென்றால், தலைவர்கள் அத்தனைபேரும் பார்ப்பனர்களாக இருந்தார்கள். ஆனால் மிகப் பெரிய படிப்பாளிகள் நம்பூதிரிபாட் மிகப்பெரிய அறிவாளி. அவருக்கு சமஸ்கிருதம், ஆங்கிலம், மலையாளம், தமிழ் எனப் பல மொழிகள் தெரியும் அவருடைய அறிவுக்காகவும் தியாகத்திற்காகவும் அவரை நாம் மிகவும் மதிக்கிறோம்.

டாங்கே மிகப்பெரிய அறிவாளி. ஆனால் அவர் கிழவனாக ஆகஆக அப்போது அவருடைய உண்மை உருவம் வெளிப்படுகிறது. அசல் பார்ப்பான்தான் அவர். இதே சிந்தனைதான் பி.இராமமூர்த்தி, பி.டி. ரனதிவே, கிரேன்முகர்ஜி, புன்னையா, நாகிரெட்டி இவர்கள் எல்லோருக்கும் இருந்தது. இந்த நாட்டின் உற்பத்தியில் ஈடுபட்டு செல்வங்களை உருவாக்குகிற வெகு மக்கள்தான் கம்யூனிஸ்டுக் கட்சியின் எல்லா நிலைகளிலும் இருக்க வேண்டும். அதற்கு மாறாக, உழைக்காத மேல்தட்டு வர்க்கத்தினர் மட்டுமே கம்யூனிஸ்டுக் கட்சியின் உயர் பீடங்களில் இருந்தனர்.

## அமெரிக்க மேலாதிக்கம்

எனவே, இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாட்டுக்கு விடுதலை என்பது சாத்தியமா, இல்லையா, வேண்டுமா? வேண்டாமா? என்று யோசித்தால்- விடுதலை என்பது, ஒரு வகையில் கெடுதலையாகத்தான் முடியும். நாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலை பெற்று ஓர் இராணுவத்தையும் வைத்துக்கொண்டு–மிகச் சிறிய நாடாகவும் இருந்தால் இன்று உலகத்தையே சுரண்டிக்கொண்டிருக்கின்ற ஏகாதிபத்திய, பகாசுர முதலாளித்துவ சக்திகளுக்கு எளிதில் இரையாகி விடுவோம்.

இன்றைக்கு உலகில் 185 சுதந்திர நாடுகள் இருக்கின்றன. எந்த ஒரு சுதந்தர நாட்டிலாவது பொருளாதார சுதந்தரம் இருக்கிறதா? இல்லை.

அன்று காலனிய நாடுகளைச் சுரண்டும் உரிமை இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் மட்டும் இருப்பதை அமெரிக்க ஏகாதிபத்தியம் பொறுத்துக் கொள்ளவில்லை. இரண்டாம் உலகப்போரின்போது ஜெர்மன் படை இலண்டன்மீது குண்டு போட்டது. சர்ச்சில் பெரிய இராசதந்திரி. அவரே அலறி விட்டார். அப்பொழுது இங்கிலாந்தை நான் காப்பாற்றுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. உன்னிடமுள்ள காலனிகளுக்கெல்லாம் விடுதலை கொடுத்துவிட வேண்டும் என்று அமெரிக்கன் சொல்கிறான். அதே போல் சோவியத்தில் லெனின்கிராடு விழுந்தது. இலட்சக்கணக்கான சோவியத்து மக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான பயிர்கள் அழித்து நாசமாக்கப்பட்டன. ஸ்டாலினுக்கு சோவியத் யூனியனைக் காப்பாற்ற முடியுமா என்கிற பயம் வந்தது. நேச ஒப்பந்தம் பேச முன் வந்தார் ஸ்டாலின். அப்பொழுது அமெரிக்கா "நீ மூன்றாவது கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைத்தால்தான்2 உன்னோடு பேச்சு" என்றது. அதன்படி மூன்றாவது கம்யுனிஸ்டு அகிலம் கலைக்கப்பட்டது. அதன்பிறகுதான் அமெரிக்கா-இங்கிலாந்து-சோவியத்து மூன்று நாடுகளிடம் ஒப்பந்தம்-நேசம் ஏற்படுகிறது. இவர்களால் ஜெர்மனி தோற்கடிக்கப்படுகிறது. போரின் முடிவில்-ஐ.நா. சபை ஏற்படுத்தப்படுகிறது. ஐ.நா. பாதுகாப்பு அமைப்பும் (Security Council) ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இவ்வமைப்புகள் அமெரிக்காவுக்கு மட்டும்தான் பாதுகாப்பளித்தன. உலக வங்கி, பன்னாட்டு நிதியம், உலக வணிக அமைப்பு (W.T.O.) என எல்லாமே அமெரிக்காவின் ஆளுமையின் கீழ் வந்தன. அமெரிக்க ஏகாதிபத்தியம் பெருமளவுக்கு வளர்ந்து வந்த அதே நேரத்தில், அதனை எதிர்த்து உலக சோசலிச நாடுகள் ஓரணியாகத் திரண்டு ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. சமதர்ம நாடுகள் நவகிரகங்கள் போல இருந்தன. ஒரு கோட்டில் ஓரணியாகக் கூட நிற்கவில்லை. ஆனால் அமெரிக்காவும் G-7 எனப்படும் செல்வந்த நாடுகளும், இன்னும் 15 பணக்கார நாடுகளும் ஒன்றிணைந்து சமதர்ம நாடுகளை ஒழிப்பதில் ஒன்றுபடுகின்றன. "எல்லோருக்கும் எல்லாம்" என்ற மிக உயர்ந்த இலட்சியங்களை நோக்கி வளர்ந்து கொண்டு வந்த சோசலிச நாடுகள் அழிக்கப்பட்டன.

ஆகவே இன்றைய சூழலில் ஏகாதிபத்திய பன்னாட்டு முதலாளிய சக்திகள் தமது ஆக்டோபஸ் போன்ற கரங்களை விரித்துள்ள நிலையில், அரசியல் சுதந்திரம் அடைந்துள்ள ஒவ்வொரு தனி நாடும், பொருளாதார நிலையில் அடிமையாகத்தான் இருக்கமுடியும். இது எங்களது உறுதியான கருத்து.

www.tamilarangam.net



தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால், "186வது சுரண்டப்படக்கூடிய அடிமை நாடாகத்தான்" இருக்கும். எனவே தான் நாங்கள் கட்சி தொடங்கியவுடன், இந்தியாவில் சமதர்ம ஆட்சி அமைப்பைக் கொண்டு வருவதுதான், இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் பொருளாதார-அரசியல்-சமூக விடுதலையாக இருக்கும், உண்மையான விடுதலையாக இருக்கும் என்று நம்பினோம், இன்னும் நம்புகிறோம். இதற்கு இன்று நாம் என்ன செய்யலாம்?

## இந்திய அரசியல் சட்டம் ஒரு மோசடி

உலகத்தில் இருக்கின்ற அரசியல் சட்டங்களிலேயே இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் மிக மோசமான-திருட்டுத்தனமான - அயோக்கியத்தனமான-மக்கள் விடுதலைக்கு எதிரான ஒரு சட்டம். இப்படிச் சொல்லுவது அம்பேத்கர் அவர்களை அவமானப்படுத்துவதில்லையா என நீங்கள் கேட்கலாம். இல்லை அவரே நாடாளுமன்றத்தில் 2.9.1953 இல் சொல்கிறார் "இது ஒரு மோசமான சட்டம். என்னுடைய நோக்கத்திற்கு விரோதமான சட்டத்தை எழுதச்சொல்லி நான் பணிக்கப்பட்டேன். பணிக்கப்பட்ட வேலையை நான் செம்மையாகச் செய்தேன்" என்று.

இந்தச் சட்டம் 26.11.1949 இல் நிறைவேற்றப்படுகிறது. அதற்கு முதல் நாளே 25.11.1949இல் சொல்கிறார். "என்னுடைய மக்களுக்குச் சில உரிமைகளை நான் வாங்கிக் கொடுத்திருக்கிறேன். அந்த உரிமைகள் பறிக்கப்படாமல் இந்தச்சட்டத்தில் இடம் பெற வேண்டும். அந்த ஒரு நோக்கத்திற்காகவே நான் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினரானேன்" என்கிறார்.

எனவே அம்பேத்கர் எழுதிய சட்டத்தை ஆனைமுத்து போன்றவர்கள் விமர்சிக்கிறார்களே என்று அம்பேத்கர் பற்றுள்ள எந்தத்தோழரும் நினைக்க வேண்டாம். நான், 1980 ல், "இந்திய அரசியல் சட்டம் ஒரு மோசடி" என்ற ஒரு பெரிய நூலை எழுதினேன். அந்தப் புத்தகத்தின் கருத்து ஓட்டம் எனக்குப் பெரியார் தந்தது. 1958இல் பெரியார் வடநாடு சென்றபோது பம்பாயில் கரண்ட் (Current) பத்திரிக்கைக்காரன் பேட்டி எடுக்கிறான். ஏனெனில், 26.11.57 அன்று நான் உட்பட, பத்தாயிரம் கருப்புச்சட்டைக்காரர்கள் இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்தினோம். எல்லோரையும் சிறையிலடைத்தார்கள். அதிலிருந்து விடுதலையாகி வடநாடு செல்கிறார் பெரியார். அப்போதுதான் "கரண்ட்" பத்திரிக்கைக்காரன் கேட்கிறான் "நீங்கள் ஏன் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினீர்கள்?" பெரியார் பதில் சொல்லுகிறார் "இந்திய அரசியல் சட்டம் ஒரு மோசடியானது" என்று. அவன் உடனே படம் பிடித்து, முதல் பக்கத்தில் போட்டுவிட்டான்.

இந்த அரசியல் சட்டத்தின் தோற்றுவாய் என்பதே மிகவும் பிழையானது. இன்றைக்கு இருக்கிற அரசியலமைப்பை அடியோடு மாற்ற வேண்டும். முதலில் இருக்கிற அமைப்பை-கட்டுக்கோப்பை உடைக்க வேண்டும். சட்டம் எப்படி இருக்கிறது என்று தெரிந்தால்தானே அதை எப்படி மாற்றி

www.tamilarangam.net



அமைப்பது என்பது நமக்குப் புரியும். எப்படி மாற்றி அமைக்கப் போகிறோம் என்று தெரியாமலேயே இந்த அமைப்பை மாற்ற வேண்டும் என்று சொல்லுவது எப்படிச் சரியாகும்?. அரசியல் சட்டத்தை எல்லோரும் படிக்கவேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் ஒரு கட்சியிலோ அமைப்பிலோ கொள்கை வகுப்போர்களாக இருப்போர் மற்றும் பிரச்சாரர்கள், தலைவர்கள் என்பவர்கள் கண்டிப்பாக அரசியல் சட்டத்தைக் கரைத்துக் குடித்திருக்க வேண்டும். அப்படிப் படிக்காதவர்கள் இதனைப்பற்றிப் பேசத் தகுதியற்றவர்கள். இந்த அரசியல் புரிதல் என்பது இந்தியாவில் எந்தக் கட்சிக்கும் வரவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களில் பலருக்கும் இது பற்றி ஒன்றும் தெரியாது. கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களுக்கு ஓரளவு தெரியும். ஆனால் அவர்கள் பெரும் குழப்பத்தில் உள்ளனர். நம் நாட்டு அரசியல் கட்சிகள் பெரும்பாலானவற்றிற்கு இலக்கே கிடையாது. திராவிடக் கட்சிகளுக்கும் இலக்கு கிடையாது, காங்கிரசுக் கட்சிக்கும் கிடையாது, எந்தக்கட்சிக்கும் கிடையாது.

இந்தச் சட்டம் ஏன் மோசடியானது என்கிறோம்? ஒரு நாடு விடுதலை அடைந்த உடன் செய்ய வேண்டிய முதல் செயல் சட்டம் எழுதுவதுதான். நாடு சுதந்திரம் அடைந்தபோது 33 கோடி மக்கள் இந்தியாவில் இருந்தனர். அத்தனைப் பேரும் டெல்லியில் போய் உட்கார்ந்து சட்டம் எழுதமுடியாது. எனவே மக்கள் பிரதிநிதிகள்தான் சட்டத்தை எழுதவேண்டும்.

"சுதந்தரம் பெற்ற இந்தியாவில், வாக்குரிமை பெற்ற வயது வந்த மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பர். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தான் அரசியல் சட்டத்தை வகுப்பார்கள்" என்றுஇ முதன்முதலில், இந்தியாவிற்கென்று அரசியல் சட்டம் எப்படி வகுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை, காந்தி அவர்கள், 1921ல் வெளியிட்டார். அது திரு காந்தியார் அவர்களின் தனிப்பட்ட கருத்தாகவே இருந்தது. அது காங்கிரசின் கருத்தாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பின்னர் 1935ல் காங்கிரசுக்கட்சி பீகாரில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. "இந்திய தேசியக் காங்கிரசு இந்தியர்களுக்கு விடுதலை வேண்டும் என்பதற்காகப் பாடுபடுகிறது, விடுதலைபெற்ற இந்தியாவில், வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை கொடுத்து, வெளியார் தலையீடு இல்லாமல், அவர்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மன்றத்தைக்கொண்டு ஒரு சட்டத்தை இயற்றுவோம்" என்பதே காங்கிரசின் 1935ஆம் ஆண்டைய தீர்மானம்.

இந்திய அரசியல் சட்டம் என்பதற்குத் தோறுவாய் 1909. அடுத்த கட்ட வளர்ச்சி 1919. அப்பொழுதுதான் இந்தியர்களுக்குச் சில அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பது எனத் தொடங்குகிறான் வெள்ளையன். நீதிக்கட்சி 1920இல் ஆட்சிக்கு வருகிறது. அப்போது அது இரட்டையாட்சி (Diarchy) எனப்படுகிறது. நிதி, நிர்வாகம் போன்ற துறைகளுக்கு வெள்ளைக்காரன2 மந்திரியாக இருப்பான். மற்ற கல்வி, சுகாதாரம் இவற்றிற்கு இந்தியர் மந்திரியாக இருப்பர். பிரிட்டிஷ் இந்தியாவில், நீதிக்

www.tamilarangam.net



கட்சி ஆட்சிதான், முதன்மதலில், பார்ப்பானுக்குத் தனி, பார்ப்பானல்லாதவனுக்குத்தனி, இஸ்லாமியனுக்குத்தனி, கிறிஸ்தவனுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனி என 5 பிரிவுகளாக மக்களைப் பிரித்துத் தனி இட ஒதுக்கீடு அளித்து 1921ல் சட்டம் செய்கின்றது. 1927 வரை இது அமுல் படுத்தப்படவில்லை. அதுவரை இந்தியாவின் எந்தப் பகுதியிலும் ஆதித்திராவிடருக்கு ஒதுக்கீடு கிடையாது. 1943 வரையில்கூடக்கிடையாது. 1936 ல் சென்னை மாகாணத்தில் மட்டும் மத்திய அரசாங்க வேலைகளிலும் பார்ப்பனரல்லாதருக்கும், ஆதித்திராவிடருக்கும் தனித்தனி இட ஒதுக்கீடு அமுல் செய்யப்பட்டது.இதையும் நீதிக்கட்சியே சாதித்தது.

1935 ஆண்டுச் சட்டத்தில் மாகாணங்களுக்குச் சில அதிகாரங்களையே கொடுத்தான். உதாரணமாக கல்வி என்பது மாகாணங்களுக்கு மட்டுமே உரியது கல்விக்கொள்கையினை அந்தந்த மாகாணங்களே வகுத்துக் கொள்ளலாம் இதில் டெல்லிக்காரன் தலையீடே கொஞ்சம்கூடக் கிடையாது 1949 ல் அம்பேத்கர் எழுதிய சட்டம் என்பது, 1935 ம் ஆண்டு வெள்ளைக்காரன் செய்த அதே சட்டங்களை அப்படியே எடுத்துக்கொண்டு விதிகளின் எண்கள் மட்டும் மாற்றப்பட்டன. ஆனால் அரசியல் அமைப்பின் மூலம் என்பது அப்படியே வெள்ளையன் வைத்திருந்த சட்டம். இதன் நகலைத் தயார் செய்தவன் கூட ஒரு பார்ப்பான்தான். கோடிக்கணக்கில் செலவழித்துக்கொண்டு உலகம் முழுவதும் சென்றான். அமெரிக்கா சட்டத்திலிருந்து இங்கிலாந்து சட்டத்திலிருந்து அயாலாந்து சட்டத்திலிருந்து இத்தாலி சட்டத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்து எல்லாத்தையும் ஒட்டி இதுதான் இந்திய அரசியல் சட்ட நகல் என்று பார்ப்பான் கொடுத்தான். அவன் பெயர் பெனகல் நரசிங்கராவ் (B.N. RAU). அம்பேத்கரேகூட அவருக்கு இதற்காக நன்றி தெரிவிக்கிறார். "அவர்தான் உலகமெல்லாம்சென்று சட்டத்தின் நகலைத் தயாரித்தவர் . நான் அதைச் செப்பம் செய்தேன் என்கிறார்" அம்பேத்கர். இதை மிக நாணயமாகத்தான் சொல்லியிருக்கிறார். ஆனால், அம்பேத்கரைப் பாராட்டுகிற நாம் இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்தினால் அவருக்கு அவமரியாதை நேர்ந்துவிட்டதாக நினைத்துக்கொள்கிறோம். அப்படியானால் அம்பேத்கர் எழுதியதில் தப்புக்கள் இருப்பதை நாம் சொல்லக்கூடாதா? பெரியார் எழுதியதில் நாம் தப்புகள் சொல்லக்கூடாதா ? பெரியார் என்ன விவாதத்திற்கு அப்பாற்பட்டவரா? எல்லாமே அவருக்குத் தெரியும் என்று நாம் நம்புவதா?

இந்திய அரசியல் சட்டம் கடந்த 47 ஆண்டுகளில் 80 திருத்தங்களைக்கொண்டிருக்கிறது. இப்போ, இந்தக் கட்டடம் இருக்கிறது. இதை நான் பத்தாண்டுகளுக்கு முன்னால் பார்த்ததைவிட இப்போது திருத்திக் கட்டியிருக்கிறார்கள் என்றால் என்ன பொருள்? இந்தக்கட்டத்தில் ஏதோ குறை இருக்கிறது, அதனைச் சரிசெய்து கட்டியுள்ளனர் என்றுதானே பொருள்? ஆனால் இந்த அயோக்கியர்கள், இந்த திருடர்கள் திருத்தியது

www.tamilarangam.net



என்பது நேற்று இருந்ததைவிட மோசமாக ஆக்குவதற்க்காகத் திருத்தியிருக்கிறார்கள். 26.1.1950 ல் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது இந்த நாட்டு மக்களுக்கு எந்தஎந்தத் துறைகளில் என்னென்ன உரிமைகள் வழங்கப்பட்டதோ, அந்த உரிமைகளை, ஒவ்வொன்றாகப் பறிப்பதற்கு என்றே சட்டத்தைத் திருத்தினான். இதைக் காங்கிரசுக்காரன் புரியாமல் இருக்கின்றானா? கம்யூனிஸ்டுகாரன் புரியாமல் இருக்கின்றனா? இப்போது பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாராட்டுகிறார்களே கம்யூனிஸ்ட்டுகள் – 1955 ல் தொடங்கி, இந்த 42 ஆண்டுகளில் நேருவை இவர்கள் மன்னிக்கக்கூடாது, இந்திராகாந்தியை மன்னிக்கக்கூடாது, எந்தப் பிரதமரையும் மன்னிக்கக்கூடாது. 1950 லே நிறைவேற்றப்பட்ட சட்டத்தினுடைய உயிரை, சாரத்தை, எப்பொழுது முதலில் அழிக்க ஆரம்பித்தார்கள் என்றால், 1955 ல்.

இந்தச் சட்டம் இந்தியாவிலிருக்கிற எந்த மொழித்தேசிய இன மக்களையாவது, சாதாரண உரிமைகளுடனாவது வாழவிடுமா? கற்பனையாக நான் சொல்லவில்லை இன்றைக்குக் கல்வியின் நிலைமை எப்படி உள்ளது? இதன்பேரில் மாமியாரும் அதிகாரம் செய்வாள், மருமகளும் அதிகாரம் செய்வாள் மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி அதிகாரத்தைப் பொது அதிகாரப்பட்டியலுக்கு மாற்றியாகிவிட்டது. இதைத் தி.மு.க. இன்று எதிர்த்துப் போராடுகிறதா? பேசுகிறதா? ஆனால் மாநில சுயாட்சி என்று உளறுகிறார்கள். இருந்ததையே இழந்த பின்னர், மாநில சுயாட்சி என்ற ஒன்று இருக்கிறதா? ஆக இவர்கள் மக்களைப் பச்சையாக ஏமாற்றுகிறார்கள் என்பது தெளிவாகிறது.

இந்த அரசியல் சட்டத்தின் செயல் வடிவமாக இருக்கின்ற நாடாளுமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை இந்த மூன்றும் இப்பொழுது இருக்கும் இதே வடிவத்தில் இருக்கும்வரை, இந்தியாவில் எந்த மாற்றமும் வராது. இன்றைக்கு இருப்பதைவிட இனிமேல் மோசமாகத்தான் இருக்கும். கல்வியைப பொது அதிகாரப்பட்டியலுக்கு எடுத்துக்கொண்டான். இனி வேளாண்மையை, நெடுஞ்சாலைத் துறையை எடுக்கப்போகிறான். இதையெல்லாம எடுக்கப்போகிறேன் என்று முன்னாடியே சொல்லிவிட்டான். ஏனென்றால், தேசத்தின் மீது அவனுக்கு அவ்வளவு பக்தியா? இல்லை. இந்தியா உடையாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் சுரண்டிக்கொண்டிருக்க முடியும். அதாவது விடுதலை வந்ததாகச் சொல்லி, விடுதலைபெற்ற இந்தியாவுக்கு என்று தனி அரசியல் சட்டம் இயற்றப்பட்டதாகச்சொல்லி அது அமுலுக்கு வந்த நாளான 26.1.50 க்கு பிறகு இந்த 47 ஆண்டுகளில் வெகு மக்களுக்குக் கேடான வகையில் திருத்தியுள்ளனர்.

அதாவது 1950 களில் இருந்த உரிமைகூட, இப்பொழுது

www.tamilarangam.net



மாநிலங்களுக்கு கிடையாது. இந்த புரிதல் கட்சி வேறுபாடின்றி நம் எல்லோருக்கும் வரவேண்டும். இதில் கருத்து வேறுபாடு கொள்வதற்கு உங்களுக்கும், எங்களுக்கும் உரிமை கிடையாது. அப்படிக் கருத்து வேறுபாடு கொள்வேன் என்று சொன்னால் அவன் அயோக்கியன், நம்மை ஏமாற்றுகிறவன் என்று அர்த்தம். இதிலெல்லாம்நாம் தெளிவாக இருக்கவேண்டும். ஆனால் எந்த வகையான மாற்றம் கொண்டுவர வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

## கூட்டாட்சி – எங்கள் கொள்கை

எங்கள் கட்சியின் நிலைபாட்டின்படி, இந்தியாவானது சமதர்ம , சமூக அமைப்பை அடிப்படையாகக் கொண்ட, பல்வேறு மொழித்தேசிய இனங்களை உள்ளிட்ட, ஒரு கூட்டாட்சியாக இயங்க முடியுமானால் அதற்கு முயற்சி செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு உடனடியாக நாம் என்ன செய்வது என யோசிக்கலாம்.

அரசியல் சட்டத்தில் விதிகள் 153 முதல் 158 வரை மாநில ஆளுநரைப்பற்றியவை இடம் பெற்றுள்ளன. நமது சட்டம் பிரிட்டீஷாரின் சட்டத்தை ஒட்டி எழுதப்பட்டது. பிரிட்டீஷ்காரன் ஆளுநர் வைத்திருந்தான். ஆளுநர் பதவி என்பது அவன் காலத்தில் வந்ததுதான். அவன் உருவாக்கியபதவி இன்றைக்கும் இருக்கிறது. 1920 களிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி அமைக்கப்பட்டது. அன்றைக்கு பிரிமீயர் என்று பெயர், சில இடங்களில் பிரதம மந்திரி என்றே பெயர். வெள்ளைக்காரன் காலத்தில் முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்தோம். வெள்ளைக்காரன் போய்விட்டான். இப்போ ஏன் கவர்னரைத் தேர்ந்தெடுக்கக்கூடாது? இந்தக் கேள்வியை யாரும் எழுப்பவில்லை. திராவிடக் கட்சிகள் ஒரு கட்டத்தில் எழுப்பின, சில முற்போக்குச் சக்திகள் எழுப்பின. ஆளுநர் செய்கின்ற வேலை என்ன ? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரை ஆளுநர் எப்படி நீக்க முடிகிறது? ஏனென்றால் அவன் டெல்லிக்காரனின் உளவாளி, டெல்லிக்காரன் கைக்கூலி, மாநில ஆட்சியைப் பற்றிய துப்பறிந்து டெல்லிக்குச் சொல்கிறவன். இது எப்படி இருக்கிறதென்றால், திருடனிடம் போய் சாவியைக் கொடுத்துக் காவல் காக்கச் சொன்னது போல் உள்ளது. கூட்டாட்சியல் ஆளுநர் பதவி தேவை என்று சொன்னால், அவன் எல்லா தமிழக மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவனாகத்தான் இருக்கவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவன் மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவன். ஆனால் இப்போது இருக்கிற ஆளுநர் டெல்லிக்காரனுக்கு மட்டுமே பதில் சொல்லக்கடமைப்பட்டவன். முதலமைச்சருக்குக்கூட அவன் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இது எப்படி நியாயமாகும்? இன்றைக்கிருக்கிற அரசியல் சட்டத்தில் ஆளுநர் பதவி என்பதை முதலில் எடுக்க வேண்டும். அப்படி 'இருக்கவேண்டும் என்று சொன்னால் அவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேர்ந்தெடுக்கப்பட்டவனாக இருக்கவேண்டும். அடுத்து இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன.

1. யூனியன் அரசுக்குரிய அதிகாரங்களின் பட்டியல்
2. மாநில அரசுகளுக்குரிய அதிகாரங்களின் பட்டியல்
3. பொது அதிகாரப்பட்டியல்

மேற்கண்ட மூன்றிலும் சொல்லப்படாத, Residuary Powers மிச்ச அதிகாரம் என்று ஒன்று உள்ளது. அதாவது, திடீரென்று தோன்றுகின்ற - எதிர்பாராத சிக்கல்களைப்பற்றிய முடிவுகளை எடுப்பதற்குரிய அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசுக்கே உரியது. இது மிகவும் ஆபத்தானது. மிக மிகத் திருடர்கள் இந்த சட்டத்தை இயற்றியவர்கள். என்றைக்குமே, இந்திய ஒற்றுமைக்கு எதிரான ஆற்றல்கள் வலிவுபெறாமல் – ஒன்று சேரவிடாமல் செய்வதற்கு எவ்வளவு சட்டப்பாதுகாப்பு வைத்திருக்கிறான் பாருங்கள். எதிர்பாராத சிக்கல்களைப் பற்றிய விதிகள் அரசியல் சட்டத்தில் 242 முதல் 245 வரையுள்ள விதிகளில் உள்ளன. இந்த விதிகளை முதலில் நீக்க வேண்டும். இந்த அதிகாரம் டெல்லிக்கு இருக்கக்கூடாது.

அடுத்ததாக, ஆட்சி மொழிச்சிக்கல் பொதுவாகத் தமிழகம் என்றால் அது இந்திக்கு எதிரான ஒரு நாடு என்பது இந்தியா முழுவதும் பரவியிருக்கிற ஒரு கருத்து. இந்தி எதிர்ப்புப் பிரச்சினையில் திராவிட இயக்கத்தைப்போலப் பொய்யைச் சொல்லிக் கொண்டுள்ள ஒரு இயக்கத்தை வேறு எங்கும் பார்க்கமுடியாது. ஏன் இப்படிச் சொல்லுகிறோம்?

தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளியிலோ, மேல்நிலைப்பள்ளியிலோ, கல்லூரியிலோ, பல்கலைக்கழகத்திலோ ஒரு பாடமாகவோ – பயிற்சி மொழியாகவோ இந்தி இருக்கும் என்று இந்திய அரசியல் சட்டத்தில் இல்லை. இந்திய அரசியல் சட்டம் மிகவும் மோசமான சட்டம் என்று நான் சொன்னேன். அந்த மோசமான சட்டத்தில் கூட ஒரு மாநிலத்தில் இந்தி ஆட்சிமொழியாக-பயிற்சி மொழியாக இருக்கும் என்று சொல்லப்படவில்லை. அடுத்ததாக ஒரு மாநில அரசின் ஆட்சி என்பது இந்தியில் நடைபெறவேண்டும் என்று சட்டத்தில் இல்லை. மாநிலச் சட்டமன்றம் இந்தியில் நடைபெற வேண்டும் என்றும் சட்டத்தில் இல்லை. அப்போ எதிலிருந்து நீ இந்தியை அகற்றியுள்ளாய்? மறுபடியும் சொல்கிறேன். அரசியல் சட்டப்படி இந்திக்கு உள்ள உரிமை-இந்திக்கு உள்ள இடம் இந்திய மைய ஆட்சியின் நிர்வாக மொழியாக இருக்கும் – ஆட்சி மொழியாக இருக்கும் அலுவல் மொழியாக இருக்கும் என்பதுதான். இன்றைக்கு மத்திய அரசின் அலுவலகங்களில் ஆட்சி, நிர்வாக மொழியாக இந்தி ஆகிவிட்டது. மாநிலங்களின் குரல்வளையை இந்தி இன்னும் பிடிக்கவில்லை, உங்க பிள்ளை காலத்தில் பிடிக்கும். ஏனென்றால், இன்றைக்கு தமிழகத்தில் உள்ள மைய அரசு அலுவலகங்களில் வேலை செய்யும் எல்லோரும் கட்டாயமாக இந்தி படித்தாக வேண்டும்.

www.tamilarangam.net



நெடுஞ்சாலைத்துறை, ஆயுள்காப்பீட்டுக்கழகம் என நாட்டில் இருக்கிற எல்லா மத்திய அரசு ஊழியருக்கும், நம் வரிப்பணத்தில் கட்டாயமாக இந்தி கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதற்குப் பெயர்தான் இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி. தமிழகத்தில், எல்லா மத்திய அரசு அலுவலகங்களிலும் இந்தி மெதுவாக-திருட்டுத்தனமாக ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டுவிட்டது. இப்போது நீங்கள் இந்தியை எதிர்க்கிறேன் என்று சொல்லுவது ஒரு மோசடிதானே. இதற்கு நாம் என்ன மாற்றுச்சொல்கிறோம்? ஒன்றும் இல்லை.

தமிழகத்திலுள்ள வங்கிகளை எடுத்துக்கொள்வோம். தமிழகத்தில் பெரும்பாலும் தமிழர்கள்தானேவங்கிக்குச் செல்வார்கள், தமிழர்கள்தானே வாடிக்கையாளர்கள்? ஆக தமிழ்தானே வங்கி அலுவல் மொழியாக இருக்க வேண்டும். தொடர் வண்டித்துறையிலும் தமிழ்தானே இருக்கவேண்டும்? அஞ்சல் துறையிலும் தமிழ்தானே இருக்கவேண்டும்? சரி தமிழ்நாட்டுக்குத் தமிழ்; தெலுங்கு நாட்டுக்கு தெலுங்கு; கன்னடநாட்டுக்கு கன்னடம்; பஞ்சாப் நாட்டுக்கு பஞ்சாப்; வங்காள நாட்டுக்கு வங்காளம் இவ்வாறு இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தின் எல்லைக்குள்ளிருக்கிற எல்லா மய்ய அரசு அலுவலகங்களிலும் அந்தந்த மாநில மொழி மட்டுமே ஆட்சிமொழி-நிர்வாக மொழி என்று சொன்னால், எந்தத் தெலுங்கு நாட்டுக்காரன் வேண்டாம் என்று சொல்லுவான்? எந்த மலையாளி வேண்டாம் என்று சொல்வான்? தமிழனைவிட அவர்கள் விரைவில் இதை ஏற்பார்கள். இதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

எனவே இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி வேண்டும் என்று போராட்டம் தொடங்கினால், இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள் அனைத்திலும் அந்தந்த மாநில ஆட்சி மொழியே இடம் பெற வேண்டும் என்பதை முதல் கோரிக்கையாக வைக்க வேண்டும். செருப்பில் அடித்தது போல் டெல்லிக்காரனும் விழித்துக் கொள்வான். அதிலே தமிழன் வேண்டுமானால் பின்வாங்குவான், இவன் கோழை. தமிழனைத் தாழ்த்த வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை; என்னை மன்னிக்கவேண்டும். இங்கு தெலுங்கன் வந்து ஆண்டான்; தமிழன் அடிமையாகத்தானே இருந்தான்? மராட்டியன் ஆண்டான்; இன்னும் நவாப் ஆண்டான் தமிழன் பேசுகிற வீரமெல்லாம் கடையில் விற்கிற வீரம், பூரம் கடையில் விற்பதைத்தான் இவன் வீரம் என்று எண்ணியிருப்பான்.

எனவே முன்னால் நான் சொன்ன இந்தக் கருத்துக்களை அவரவர் தாய்மொழியிலேயே அச்சிட்டு-அதாவது இந்தி, உருது, பஞ்சாபி, கன்னடம், தெலுங்கு என முக்கிய இந்திய மொழிகளில் மொழி பெயர்த்துக் கொண்டு சென்றால், அவர்கள் கண்டிப்பாக நமது கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. தெலுங்கனிடம் போய் ஆங்கிலத்தைக் காட்டினால் அவன் ஏன் அதைப் படிக்க வேண்டும்? இல்லை தமிழைக் கொடுத்தால் அவன் ஏன் படிக்க வேண்டும்? நமது நோக்கம் என்ன? காட்டாக, தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இட

www.tamilarangam.net



வங்கி, இரயில்வே, வருமானவரி, தபால், சுங்கவரி அலுவலகம், மய்யஅரசு ஒதுக்கீடு வேண்டும் என்கிற கருத்தை நாம் பரப்ப வேண்டும். அதை அவரவர் தாய்மொழியிலேயே கொடுக்க வேண்டும். தமிழன் தனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதற்காக ஆங்கிலத்தில் அச்சிட்டுக்கொண்டு செல்வான். ஆனால் நாங்கள் முக்கியமான இந்திய மொழிகளில் இதுபற்றி அறிக்கை அச்சிட்டுக்கொடுத்தோம். அந்தந்த மொழிக்காரரும் புரிந்துகொண்டு எங்கள் முயற்சிக்கு ஆதரவு தந்தார்கள் வெற்றி கிடைத்தது.

அண்ணாதுரை அவர்களின் கோரிக்கையை ஏற்று நேரு அவர்கள் ஒரு உறுதிமொழி கொடுத்தார்.

"இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் இந்தியோடு கூட ஆங்கிலமும் இந்தியாவில் ஆட்சிமொழியாக இருக்கும்".

அதாவது இந்திதான் ஆட்சி மொழி என்பதை உறுதி செய்துவிட்டான். 'ஆங்கிலமும்' என்றுதான் சொல்கிறானே தவிர, ஆங்கிலமே என்று சொல்லவில்லை. இது மிகப் பெரிய மோசடியாகும் இதை வைத்துக்கொண்டு, நாங்கள் 'இந்தியைத் தடுத்துவிட்டோம் என்று இங்குள்ள திராவிடக்கட்சி ஆட்சியாளர்கள் சொல்வது முட்டாள்தனமானதாகும்எனவே கூட்டாட்சியில் நம்பிக்கை உடைய கட்சிகள், அமைப்புகள் இந்தக் கருத்துக்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக அய். ஏ. எஸ், அய்.பி.எஸ். முதலானவை பற்றிச் சிறிது ஆராய்வோம். அய்.ஏ.எஸ். படிப்பதற்கு ஏதாதொரு பட்டம் பெற்றிருந்தால் போதும். "பார்–அட்–லா" ( Bar-at-Law) படிப்பதற்கு மெட்ரிக்குலேசன் தேர்ச்சி பெற்றிருந்தால்போதும் காந்தியார் மெட்ரிக்குலேசன் படித்துவிட்டுத் தான் இலண்டனுக்குப் போனார். அங்கு அய்.சி.எஸ். (I.C.S.)படிக்கப் போனவர்களுக்கு , வெள்ளைக்காரன், கல்வி கற்றுத்தரவில்லை. 'இந்தியர்கள் என்ற அடிமைகளை எப்படி நடத்துவது என்பது பற்றித்தான் சொல்லிக்கொடுத்தான். காட்டாக நேர்முகத்தேர்வு நடத்தும்பொழுது, பையன் அறைக்குள் நுழைந்து கொண்டே இருப்பான். தேர்வு செய்பவன் தன் கையிலுள்ள தாள் ஒன்றினை வேண்டுமென்றே தவறவிடுவான். வந்தவன் அந்தந்த தாளை எடுத்துக்கொடுத்தான் என்று சொன்னால், அவன் தகுதி இழந்தவனாவான். தாளை எடுப்பதற்கு வேறு கீழ் நிலை ஆட்கள் இருக்கிறார்கள். இவன் அடிமை வேலை செய்யத்தான் தகுதி ஆவான் என்று கருதி ஒதுக்கிவிடுவார்கள். இது வெள்ளைக்காரன் காலத்துமுறை இதுவே இன்றும் இங்கே நீடிக்கிறது.

அய்.சி.எஸ். தேர்வில் முதலில் தேர்வு பெற்றவர்கூட இரவீந்தரநாத் தாகூர் குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். வெள்ளையனிடம் முஸ்லீம்கள் கேட்டார்கள் "இந்தியஊழியத்தை இந்தியர் மயமாக்குவது என்றால் பிராமணமயமாக்குவது, இந்து மயமாக்குவது என்றா பொருள்? நாங்கள் இந்தியர்கள் இல்லையா?" என்று, எவ்வளவு அறிவு பூர்வமான கேள்வி பார்த்தீர்களா? பிறகு திராவிட இயக்கத்துக்காரன் வைத்த கேள்வி "நானும்

www.tamilarangam.net



இந்துதான் நீயும் இந்து என்று சொல்கிறாய், ஆனால் அய்.சி.எஸ். ஆக வருகிறவரெல்லாம் பார்ப்பானாக இருக்கின்றானே. இது எப்படி நியாயம்" என்று. 1916 வரையிலே பார்ப்பான் மட்டுமே உயர்பதவிகளுக்கு வந்தான். வெள்ளைக்காரன் போனவுடனே, பார்ப்பானையும் மூட்டைகட்டி அனுப்பியிருக்கவேண்டும்.

1947 அக்டோபரில், இந்தியாவிலுள்ள மாகாண முதல்வர்களையெல்லாம் வல்லபாய்பட்டேல் டெல்லிக்கு அழைத்தார். தற்பொழுது அய்.சி.எஸ். என இருப்பதை அய்.ஏ.எஸ். என மாற்றப்போகிறேன் என்றார். நம்ம சென்னை மாகாண முதல் மந்திரியைத் தவிர எல்லோரும் வாயைமூடிக்கொண்டு அதை ஒத்துக்கொண்டு கையெழுத்துப் போட்டு விட்டார்கள். அதுதான் இப்பொழுது இந்திய ஆட்சிப்பணி–I.A.S. இதில் பலவிதப் பதவிகள். இத்தனைப்பதவிகளும் தன்மையில் ஒன்று. ஒருவன் காட்டுத்துறையில் இருப்பான், ஒருவன் இராணுவத்தில் இருப்பான், நிர்வாகத் துறையில் இருப்பான், பொருளாதாரத்துறையில் ஒருவன் இருப்பான். ஆக இந்த அமைப்பு என்பது வெகு மக்களுக்கு எதிரான நிர்வாக உயர்அமைப்பு நம் ஊரில் நிர்வாகம் செய்ய வேண்டிய ஒரு மாவட்ட ஆட்சியரை, டெல்லிக்காரன் என்ன தேர்வு வைத்து எடுக்கிறது? இந்தியா என்பது உடையாமல் இருப்பதற்கு இந்த உயர் அதிகார மய்யத்தையெல்லாம் தன் கையில் டெல்லிக்காரன் வைத்துக் கொண்டான். ஆளுநர் என்பவன் எப்படி மத்திய அரசின் உளவாளியோ, அதைப்போலவே, மாவட்ட ஆட்சியர் என்பவனும் The Collector of a district is the Governor of the district- மய்ய அரசின் மாவட்ட உளவாளி. மாவட்ட ஆட்சியர் என்பவன் மாவட்டத்தின் ஆளுநர். இவர் எம்.எல்.ஏ. சொல்வதை, எம்.பி. சொல்வதைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. நிர்வாகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தலையிடமுடியாது. கொள்கைவகுக்கும் அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு செயல்படுத்துகிற அதிகாரம் மாவட்டஆட்சியருக்கு, ஆக மக்களுக்கு விரோதமான-டெல்லிக்காரனுக்கு உளவாளியாக இருக்கக்கூடிய இந்தப்பதவிகளை நாம் உறுதியாக எதிர்க்க வேண்டும். இதைபடித்தவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பதவிகளுக்கு ஆட்சிளைத் தெரிவு செய்கிற அதிகாரம் மாநில அரசுக்கு வேண்டும் என்று கோரிக்கை வைக்க வேண்டும்.

அடுத்ததாக, இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களை ஒவ்வொன்றையும் மூன்றாக, நான்காக உடைக்க வேண்டும். ஏனெனில் இன்றைக்குள்ள ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்குள்ள மறைமுகமான உதவியாக இருப்பவை இந்தப்பெரிய பெரிய மாநிலங்கள். உத்திரப்பிரதேச மாநிலம் 13 கோடி மக்கள் கொண்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



85 பேர் எம்.பி.க்கள். சரி, இப்படி இருப்பதனால் இந்திய ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் உ.பி. மாநிலம் ஏதாவது பங்களிப்புச் செய்துள்ளதா என்றால், இல்லை. இன்று தமிழகத்தில் எழுத்தறிவு பெற்றோர் 60 விழுக்காடு. ஆனால் உத்திரப்பிரதேசத்தில் 40 விழுக்காடுகூட வரவில்லை. ஒன்பது இந்தியப்பிரதமர்களை உருவாக்கிய மாநிலம் உத்திரப்பிரதேசம். அங்கு ஆதித்திராவிடர்கள் கல்வி விழுக்காடு மிகமிகக் குறைவு. எனவே பிரதமராக வந்த ஒன்பதுபேரும் திருடர்களே. 1950 லிருந்துபத்தாண்டுகளுக்குள் இந்தியாவிலுள்ள 14 வயது நிரம்பிய எல்லோரையும் எழுத்தறிவுள்ளவர்களாக மாற்றுவேன் என்று நேரு சொன்னார். அவர் செய்யவில்லை. அவர் படித்தவராக இருக்கலாம், அறிவாளியாக இருக்கலாம், அது வேறு. அவர்16 ஆண்டுகள் பிரதமராக இருந்து விட்டுப்போய்விட்டார். இந்திராகாந்தி 17 ஆண்டுகள் இருந்தார். அவரும் செய்யவில்லை. அப்புறம் யார், யாரோ இருந்தார்கள். ஒருவனும் செய்யவில்லை. ஆளும் வர்க்கம் மேல்-சாதிவர்க்கம், அதிக எண்ணிக்கையைக் கொண்ட கீழ்ச்சாதி மக்களுக்கு அறிவைக்கொடுத்தால் – இவனைத் தூக்கி வீசிவிடுவான் என்று நினைத்துதான் கல்வி கொடுக்காமல் இருந்தார்கள். இப்பொதே இவர்களைத் தூக்கி எறிந்து விட்டான். ஒரு மாயாவதி, ஒரு முலாயம்சிங் நிலை என்ன அவர்கள் நல்லவர்களா கெட்டவர்களா என்பது வேறுசெய்தி. அங்கே முதலமைச்சராக வந்த எல்லாப் பார்ப்பானும் உத்தரகண்டபார்ப்பானே. வேறு எந்தப் பார்ப்பானும் வரகிடையாது. உத்தரகண்டபார்ப்பான் என்று சொன்னால் வெறிபிடித்த பார்ப்பான் என்று பொருள். எச்.என். பகுகுனா, என்.டி.திவாரி இவர்களெல்லாம் உத்தரகண்ட பார்ப்பனர்கள். பெரியார் இதைத்தான் உங்களுக்குச் சொன்னாரா என்று நீங்கள் கேட்கலாம். பார்ப்பான் சிந்தனையில் அயோக்கியன். பார்ப்பனியம் அதைவிட அயோக்கியத்தனமானது. அது எல்லாச் சாதிக்காரனிடத்திலும் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவன், பிற்படுத்தப்பட்டவன், காங்கிரசுக்கட்சிக்காரன்; கம்யூனிஸ்டுக்கட்சிக்காரன், மற்றும் தி.மு.க. காரனிடம், தி.க. காரனிடம் என்று எல்லாரிடமும் பார்ப்பனியம் இருக்கிறது. அது பார்ப்பானைவிடக் கொடுமையானது.

ஜார்க்கண்ட் மிகவும் இயற்கை வளம் நிறைந்த பகுதி. அங்கு நிறைய நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. ஆனால் அங்குள்ள மக்கள் மிகவும் வறுமையில் உழல்கின்றனர். நான் அங்கு அடிக்கடி சென்றுவந்துள்ளேன். அந்த மக்களை ஜார்கண்ட் இயக்கத் தலைவர்களாக இருக்கின்ற அயோக்கியர்களும், அவர்களைக் கட்டி மேய்க்கின்ற அரசியல்வாதிகள் என்கிற தேசியவாதிகளும், கம்யூனிஸ்டுகளும் எவ்வளவு கொடுமை செய்கிறார்கள் தெரியுமா? சுரங்கத்துக்கு வெளியில் கிடக்கிற நிலக்கரியை ஒருவன் ஏலம்

www.tamilarangam.net



எடுத்தால் போதும், கோடிக்கணக்கில் சம்பாதிக்கலாம். ஆனால் அங்கு எடுக்கப்படுகிற நிலக்கரியையெல்லாம் திருட்டுத்தனமாக எடுத்துப்போகிறவர்கள்தான் அதிகம். இதற்கு இந்திராகாந்தி, மொரார்ஜி தேசாய் என்று எல்லாக் கட்சி எம்.பிக்கள் என அனைவரும் ஒத்துழைக்கின்றனர், இது நியாயமா? ஆக, இந்த ஆளும் வர்க்கம் என்பது கல்வி அறிவு கொடுக்காமல், வயிற்றுப்பாட்டிற்கே திண்டாடும் நிலையில் அங்குள்ள உழைக்கும் மக்களை வைத்துள்ளது. ஜார்கண்ட் மாநிலத்தைத் தனியே பிரித்துக்கொடு என்று சொன்னால், லல்லு பிரசாத் யாதவ் முடியாது என்கிறான். பிரித்துக் கொடுத்தால், இவன் திருட முடியாது. அதைப்போலவே உத்தர்கண்ட், பந்தல்கண்ட், சதிஷ்கர், விதர்பா, தெலிங்கானா, உதய்சல், மிதிலா (பீகாரில் ஒரு பகுதி) எனப் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்படவேண்டும்.

அதேபோல் ராஜ்யசபையில், மக்கள் தொகை வேறுபாடுகருதாமல், சம எண்ணிக்கையில் உறுப்பினர்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். தமிழகத்தில் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 ராஜ்யசபை உறுப்பினர்கள் என 59 பேர். ஆனால் உத்திரப்பிரதேசத்தில் 85 பேர்எம்.பிக்கள் எருமைமாடு போல இருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் ராஜ்யசபையில் 25 பேர். மொத்தம் 110 பேர்வந்துவிடுகிறார்கள். மொத்த எண்ணிக்கையே 775 தான். என்றைக்கு நாம் நம் பங்கைப் பெறுவது? ஆகவே ஆதிக்கம் செலுத்தும் பெரிய பெரிய மாநிலங்கள் உடைத்துச் சிறிதாக்கப்பட வேண்டும்.

எனவே இந்தியாவில், சமதர்ம ஆட்சி முறையே பொருளாதார –அரசியல் – சமூக விடுதலையைத் தரும் என யாருக்கெல்லாம் நம்பிக்கை அக்கறை இருக்கிறதோ அப்படிப்பட்ட ஒரு ஆட்சி வந்தாலும், இந்தியா என்பது ஒரு தொள தொளவென்றிருக்கிற-தாராளமாக உரிமைகள் இருக்கிற மாநிலங்கள், தாங்கள் விரும்பி மய்ய அரசுக்கு அளிக்கிற அதிகாரங்களை மட்டும் வைத்துக்கொண்டு, கூட்டாட்சியாக இயங்குகிற சமதர்ம மாநிலங்களைக் கொண்டதாக ஆக்கப்பாடுபடவேண்டும். எங்கள் கட்சியின் அனுபவத்தில் நாங்கள் கண்ட 4 வேலைத் திட்டங்கள் உள்ளன.

1. ஆளுநர் கூடாது
2. மாநிலங்களில் உள்ள மய்ய அரசுத்துறை அலுவலகங்களில் அந்தந்த மாநில மொழியே ஆட்சிமொழி
3. உயர் அதிகார-அகில இந்திய நிர்வாகப்பணிகளை ஒழித்தல்
4. பெரிய மாநிலங்களை இரண்டாகவும், மிகமிகப் பெரிய மாநிலங்களை மூன்றாகவும் பிரிக்க வேண்டும்.

www.tamilarangam.net



தோழர்களே இதுவரை நான் தெரிவித்தவை எங்கள் கட்சியின் கருத்துக்கள். இவற்றை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு ஏற்புடையவற்றை ஏற்றுக்கொண்டு, தள்ள வேண்டுமென நீங்கள் கருதுகிறவைகளை நீக்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## கேள்வி நேரம்

**ஞானி :** அரசியல் சட்டத்தில் நீங்கள் சொல்லக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்தினால் சமதர்மம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா?

**பதில் :** வாய்ப்பு இல்லை; ஏற்படாது; உறுதியாக ஏற்படாது, ஆனால் இன்றைக்கு இருக்கிற அமைப்பை உடைக்க-வலுவிழக்கச் செய்வதற்கு இவற்றைப் பயன்படுத்தலாம். அதை மெதுவாகத்தான் செய்யமுடியும். ஆனால் இறுதிக் குறிக்கோள் சமதர்ம அரசைச்சமைப்பதுதான் என நாம் விரித்துக் கொள்ள வேண்டும்.

**நித்திலன்பனார் :** அரசியல் சட்ட முகப்பிலே மிகப்பெரிய மோசடி இருப்பதாகக் கேள்வி தொடங்கினார்கள். அதை அப்படியே சொல்லாமல் விட்டுவிட்டீர்களே?

**பதில் :** 1950 ல் அரசியல் சட்ட முகவுரையில் "இந்தியா என்பதுஒரு ஜனநாயகக் குடியரசு "என இருந்தது. ஆனால் 1976 ல் திருத்தப்பட்ட போது "மதச் சார்பற்ற சோசலிச ஜனநாயகக் குடியரசு " என்று மாற்றியிருக்கிறார்கள். இதில் ஜனநாயகம் என்பது பொய் ஏனெனில், ஆளுநர் மற்றும் உயர் அதிகாரப் பதவி என்றாலும், உயர் நீதிபதிப்பதவி என்றாலும் அதுவும் தேர்தல் மூலம் வருவதற்குப் பெயர்தான் மக்கள் நாயகம். அதுதான் ஜனநாயகம். பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது மட்டும் ஜனநாயகமல்ல. இவர்கள் சட்டமியற்றுகிறவர்கள். சட்டத்தை நடைமுறைப் படுத்துகிற உயர்மட்ட அதிகாரி ஜனநாயக முறைப்படித் தேர்ந்தேடுக்கப்பட்டால்தான் அது ஜனநாயக அரசு. சோசலிஸ்டு மற்றும் மதச்சார்பற்ற என்று சொல்கிறான். இந்தச் சொற்களுக்கு 1976 லும் சரி, அதற்குப்பிறகும் விளக்கம் சொல்லப்படவே இல்லை. 1970 களில் இவர்கள் சோசலிச வேடம் போட்டார்கள். வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்ட காலத்தில் சோசலிசம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினால் முற்போக்கு சக்திகளைக் கவரலாம் அல்லது அவர்களை முடமாக்கலாம் என்ற எண்ணம்தான் இதற்குக் காரணம்.

செக்குலர் என்ற சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர் ஜார்ஜ் ஜேக்கப் ஹோலியோக் என்கிற பிரிட்டீஷ்காரர். Rationalist Press Association என்ற பகுத்தறிவு அமைப்பை இலண்டனில் நிறுவியவர்களுள் ஒருவர்.

பள்ளிக்கூடத்துல பொட்டு வைக்காம ஒரு பெண் பிள்ளை வந்தால், ஏண்டி நீ என்ன கிறிஸ்தவச்சியா நெற்றியிலே ஒண்ணும்

www.tamilarangam.net



வைக்காம வர்றே என்று, ஆசிரியர் கேட்பார். ஆனால் நம்ம நாட்டில் கப்பல் ஓட்டப் போனால் பைபிள் படிக்கிறான், குரான் படிக்கிறான்; கீதை படிக்கிறான். எல்லா மதமும் ஒன்று என்பதுதான் செகுலரிசம் என்கிறான். சரஸ்வதி பூஜை வந்தா கலெக்டரும் கொண்டாடுகிறான், பியூனும் கொண்டாடுகிறான் நாம் மனிதர்களாகவே இல்லையே.

பெரியார் சொன்னார், செகுலர் என்ற சொல் மேல்நாட்டுக்காரன் கண்டுபிடித்தது. அந்தச் சொல்லுக்கு அவன் என்ன பொருள் சொன்னானோ அதைத்தான் நீ கொள்ள வேண்டுமே தவிர, எல்லா மதங்களையும் ஒன்றுபோலக் கருதுகிறேன் என்று சொல்வது எப்படியிருக்கிறது என்று சொன்னால் பெண்கள் ஒரு மாநாடு கூட்டி, எல்லா ஆண்களையும் தன் கணவன்போல் கருதவேண்டும், அப்படிப்பட்ட பெண்தான் பத்தினிண்ணு சொன்னா எப்படியிருக்குமோ அது மாதிரி இருக்குதும்மா நீ சொல்றது. இவ்வாறு இந்திரா காந்தி காலத்தில் பெரியார் சொன்னார்.

கல்வியிலிருந்து அரசிலிருந்து ஒழுக்கம் என்பதிலிருந்து மதத்தைப் பிரிக்க வேண்டும். அதுதான் உண்மையான சரியான மதச்சார்பின்மை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இன்றைய வரலாற்றுச் சூழலில் தமிழ் மக்களின் வாழ்வும் வளர்ச்சியும்

பெ. மணியரசன்

இன்றைய வரலாற்றுச் சூழல் என்று எடுத்துக் கொண்டால் தமிழ்நாட்டு அரசியலில் ஓர் இருண்ட காலம் நிலவுகிறது. இந்த இருண்ட காலத்திலிருந்துதான் நாம் எதிர் காலம் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

1965ஆம் ஆண்டு நிகழ்ந்த மாபெரும் மொழிப்போர், தமிழ்த்தேசிய இன உணர்வும், தமிழ் விழிப்புணர்வும் கொழுந்து விட்டு எரிந்த காலம். அதன் பிறகு மெல்ல மெல்ல அந்த தீச்சுடர் குறைந்து மங்கி புகை மண்டலம் மேலோங்கி ஓர் இருண்ட காலம் உருவாகியிருக்கிறது. வரலாற்று ஆசிரியர்கள் இருண்டகாலம் பற்றிக் குறிப்பிடும்பொழுது அந்த காலத்தில் நெருப்பே இல்லை என்று குறிப்பிடுவதாகப் பொருள் இல்லை. நெருப்பு இருக்கிறது ; ஆனால் புகை சூழ்ந்திருக்கிறது. சாம்பல் படிந்திருக்கிறது. சாம்பல் துகள்களை அப்புறப்படுத்தி விட்டு தீயை வளர்க்க முயற்சித்தால் தீ மறுபடியும் கொழுந்து விட்டு எரியும் என்கிறார்கள். தமிழக அரசியல் சூழலில் நீறு பூத்ததாய் நெருப்பு இருக்கிறது. புகை மேலோங்கி இருண்ட காலமாய் இப்பொழுது தெரிகிறது. இது தமிழர்களின் இன்றைய சூழல் இதிலிருந்து மாற்றம் கண்டுதான் தமிழர்களின் வாழ்வு-வளர்ச்சி என்பவற்றுக்கான பாதை சமைக்க வேண்டியிருக்கிறது.

தமிழர்கள் சந்திக்கின்ற முக்கியச் சிக்கல்களாக, இன்று இருப்பவை: 1. தமிழர்களின் அடையாளம் மறுக்கப்படுகிறது. 2. தமிழர்களின் பொருளாதார நெருக்கடி 3. தமிழர்களின் பண்பாட்டிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி; ஒடுக்கு முறை.

### தமிழன் - அடையாளச் சிக்கல்

தமிழர்களின் அடையாளம் இன்று மறுக்கப்படுவது என்பது தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதை மறுப்பதிலிருந்து தொடங்குகிறது. தமிழர்கள் என்ற தேசிய இனம் இந்திய அரசியல் சட்டத்தில் இல்லை. இப்படிப் பேசினால் கூட அது பிரிவினை வாதம், பிராந்திய வாதம் என்று கண்டனத்திற்குரியதாகிறது. தமிழனுடைய முகத்தில் இன்னொரு முகமூடி மாட்டப்பட்டுள்ளது. அது இந்தியன் என்ற முகமூடி. தமிழனின் அசல் முகத்தை இந்த முகமூடி மறைக்கிறது. முகமூடியைக் கழற்றி விடுங்கள் என்று சொன்னால்அது தேசத்திற்கு ஆபத்து என்கிறார்கள். எங்கள் தமிழ்த்

www.tamilarangam.net



தேசத்துக்கு இது ஆபத்தாக இல்லையா என்றால் உங்களுக்கு ஏது தேசம் என்கிறார்கள். இப்பொழுதுதான் நாமே அந்த முகமூடியைக் கிழித்து எறிந்துவிடலாம் எனத் தோன்றுகிறது.

உலகில் மனித சமூகம் பல்வேறு பிரிவுகளாக இருந்தாலும், தேசிய இன அடிப்படையில் பிரிந்திருப்பதுதான் மிக் முக்கியமான அடிப்படையான பிரிவு. கண்டங்களாக, நாடுகளாக, வர்க்கங்களாக, சாதிகளாக உலகம் பிரிந்திருக்கின்றது. இவற்றில் தேசிய இனமாகப் பிரிந்திருப்பது முற்போக்கானது. வளர்ச்சிக்குரியது. நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியது. வர்க்கங்கள் மறைந்த பிறகும்கூட, தேசிய இன வேறுபாடுகள், மொழி வேறுபாடுகள் நிற்கும். எனவே வர்க்கத்திற்கும் மேம்பட்டதாகத் தேசிய இனம் இருக்கிறது. தேசிய இனத்திற்குள்ளேதான் வர்க்கம் இருக்கிறது. ஒரு சமூகம் சோசலிச அமைப்பைப் பெற்றிருக்கிறதா என்பதை விடவும் அது சுதந்திரம் பெற்றிருக்கிறதா என்பது முக்கியம். ஏனெனில் சுதந்திரத்தைப் பெறாத எந்த இனமும் சோசலிசத்தைப் படைத்ததாக வரலாறு இல்லை. எனவேதான் மாமேதை இலெனின் "முதல் தேவை தேசிய இன உரிமை - பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை" என்று முழக்கம் கொடுத்தார்.

1917 ஆம் ஆண்டு மாபெரும் இரஷ்யப் புரட்சி வெற்றி பெற்றபோது பின்லாந்து பிரிந்து போக வேண்டும் என்று கேட்டது. இமய மலை வீழ்ந்ததுபோல ஜார் அரசன் வீழ்ந்தான் என்று பாரதி கூறியதற்கேற்ப வெற்றியின் உச்சியில் இருந்தபோது அங்குள்ள கம்யூனிஸ்ட்கள் சிலர் கூறினார்கள். "நாம் சோசலிசத்தை ஈட்டியுள்ளோம். இந்த நேரத்தில் பின்லாந்து பிரிந்தால் அது முதலாளியத்திற்குப் போய்ச் சேரும். நாம் அனுமதிக்கலாமா?" என்று கேட்டார்கள். லெனின் சொன்னார் "சொர்க்கத்திற்கு யாரையும் தடியால் அடித்து விரட்டாதீர்கள். சொர்க்கத்திற்கான பாதையை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்" எனவே தன்னுரிமை முக்கியம் பின்லாந்து பிரிந்து தனிநாடாகப் போக வேண்டுமென்றால் அதை அனுமதிக்க வேண்டும். சோசலிசமா முதலாளியமா என்பதை அவர்கள் தீர்மானிக்கட்டும் என்று லெனினும், கம்யூனிஸ்ட் கட்சியும் தீர்மானித்தார்கள். அதனால்தான் சோசலிசம் என்பதை விடவும் ஒரு இனத்தின் சுதந்திரம் முதல் தேவையாக உள்ளது. தன்னை அடையாளம் காணாத, தன்னுடைய விடுதலையைச் சிந்திக்காத ஒரு இனம் சோசலிசத்தைப் பற்றிச் சிந்திக்காது.

www.tamilarangam.net



எனவே 1917 ஆம் ஆண்டு நடந்த ரஷ்யப் புரட்சியில் பிரிந்து போகும் உரிமையை வற்புறுத்தினார்கள். தேசிய இனங்கள் பிரிந்தன. பிறகு கூட்டாட்சியை உருவாக்கின.

சோவியத் ஒன்றியத்தை தேசங்களின் ஒன்றியம் (Union of Nations என்று அழைத்தார்கள். இது இறையாண்மையுள்ள தேசங்களின் ஒன்றியம்.அதனால்தான் தமிழர்களின் அடையாள மீட்பு அவர்களின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு சமதர்ம நோக்கத்திற்கு முதல் தேவை என்கிறோம். தமிழ்த் தேசியம் என்பதுதான் தமிழர்களின் அடையாளம். தமிழ்த்தேசியம் இல்லாத அடையாளம் வேறு இல்லை. இந்தியன் என்று சொல்லி தமிழர்களின் அடையாளத்தை மறைத்து வைத்திருக்கிறார்கள்.

## இந்திய தேசியம் - ஒரு மாயை

இந்தியன் என்று ஒரு தேசிய இனம் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. இந்தியா என்பது ஒரு தேசமே இல்லை. இந்திய அரசியல் சட்டமே இந்தியாவை ஒரு தேசம் என்று குறிப்பிடவில்லை. இந்தியா ஒரு தேசம் (Nation) என்ற சொல் இந்திய அரசியல் சட்டத்தில் எந்த இடத்திலும் இல்லை. India, that is Bharath shall be a Union of states. இந்தியா, அதாவது பாரதம் என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்கிறது அரசமைப்பின் முதல் விதி.

டாக்டர் அம்பேத்கார் இதுபற்றிக் குறிப்பிடுகிறார். "இந்திய அரசியல் சட்டத்தை இயற்றும்பொழுது எங்களுக்கு எழுந்த முதல் சிக்கல், இதற்கு என்ன பெயர் சூட்டுவது என்பது பற்றியது. இந்தியாவை ஒரு தேசம் என்று குறிப்பிடலாமா என்று சிந்தித்தோம். அப்படிக் குறிப்பிட முடியாது. ஒரு மொழி, ஒரு இனம், ஒரு பண்பாடு இருந்தால் இதை தேசம் என்று குறிப்பிடலாம். அப்படி இங்கு இல்லை. எனவே தேசம் என்று குறிப்பிடுவது பொருந்தாது என்று முடிவு செய்தோம். ஒரு கூட்டரசு (Federation) என்று குறிப்பிடலாமா என்று சிந்தித்தோம். அதுவும் சரியில்லை. உலகில் முதன்முதலாக ஏற்பட்ட கூட்டரசு அமெரிக்க ஐக்கிய நாடுகள். 13 நாடுகள் தனித்தனியாக இருந்தவை ஒன்று சேர்ந்து தங்களுடைய அதிகாரங்கள் சிலவற்றை ஒரு கூட்டு மையத்திற்கு விட்டுக் கொடுத்து ஒரு கூட்டாட்சி உருவாக்கின. இந்தியாவிலோ ஏற்கனவே எல்லா அதிகாரங்களும் ஒரு மையத்தில் குவிக்கப்பட்டுவிட்டன. இனிமேல் மையம், சில அதிகாரங்களை மாநிலங்களுக்கு கொடுக்கவேண்டியுள்ளது. இந்த நிலையில் இதைக் கூட்டரசு என்று சொல்வதும் சரியில்லை.கடைசியில் Union - ஒன்றியம் என்று முடிவு செய்தோம்" என்று அம்பேத்கார் கூறுகிறார்.

www.tamilarangam.net



ஆகவே இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் இந்தியா ஒரு தேசம் என்று குறிப்பிடுவதை மறுதலித்து விட்டார்கள். தில்லி அரசு கூட இந்திய அரசு என்றும் யூனியன் கவர்ண்மெண்ட் (Union Government) ஒன்றிய அரசு என்றும் அழைக்கப்படுகிறதே தவிர மத்திய அரசு என்று அழைக்கப்படவில்லை. அவ்வாறு அரசியல் சட்டத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. மத்திய அரசு என்பதை பின்னர் தில்லி ஆட்சியாளர்கள் புனைந்து கொண்டார்கள். ஆட்சியாளர்கள் தம் விருப்பத்திற்கேற்ப இப்படிப் புனைந்து கொண்டார்களே தவிர அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் மத்திய அரசு என்று பெயர் சூட்டவில்லை.

"இந்திய அரசு" எப்படி உருவாயிற்று. பிரிட்டீஷ்காரர்கள் இங்கே வந்து பல்வேறு மன்னர் ஆட்சிகளையெல்லாம் வீழ்த்தி, ஒரு நிர்வாக நிலப்பரப்பை உருவாக்கினார்கள். அந்த நிர்வாக நிலப்பரப்பில் தற்போதைய இந்தியா, பர்மா, ஆப்கானிஸ்தான், இலங்கை, பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகியவை இருந்தன. பரிட்டீஷார் தம் ஆட்சிக் காலத்திலேயே ஒவ்வொன்றாக கழற்றிவிட்டார்கள். ஆப்கானிஸ்தான், பர்மா, இலங்கை என்பனவற்றைத் தனி நிர்வாகத்தில் கொண்டு போனார்கள். சுதந்திரத்தின் போதுஇந்தியாவென்றும் பாகிஸ்தான் என்றும் அவர்களே பிரித்தார்கள். பிரிட்டீஷார் தம் காலத்தில் ஒரு மைய அரசை உருவாக்கினார்கள். சென்னை கவர்னரும், பம்பாய் கவர்னரும் கல்கத்தா கவர்னருக்குக் கீழ்பட்டவர்கள். கல்கத்தாவிலிருந்தவர் கவர்னர் ஜெனரல். 1971 இந்திய ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் இப்படி நிர்வாகத்தை ஏற்படுத்தினார்கள். நிர்வாகம்தான் அவர்களுக்குத் தேவை. இந்திய தேசம் என்று அவர்களுக்கு இல்லை. ஏனென்றால் ஏகாதிபத்திய வாதிகள் தங்களுக்குள் தேசியத்தை உருவாக்கிக் கொண்டு மற்றவர்களின் தேசியத்தை அழித்தவர்கள். ஐரோப்பியர்கள் 19ஆம் நூற்றாண்டில் தங்களுக்குள் தேச அரசுகள் (Nation States) என்பதை உருவாக்கிக் கொண்டார்கள். அதற்கான வரைவிலக்கணத்தை வகுத்தார்கள். தமக்குள் சரி செய்துகொண்டு புறப்பட்டு உலகத்தில் தேசங்களையெல்லாம் காலனிகளாக மாற்றினார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்திய தேசம் பற்றியெல்லாம் கவலை இல்லை. பல பகுதிகளை ஒன்றிணைத்து இந்தியா என்று பெயர் கொடுத்தார்கள். அதற்கு முன்பு இந்தப் பெயர் இல்லை.

சிந்து நதியை ஒட்டியுள்ள பகுதியை "இந்து" என மேற்கத்தியர்கள் சொன்னார்கள். கிரேக்கர் காலத்திலேயே சிந்துச் சமவெளி என்பதை இண்டஸ்வேலி (ஸ் என்பதற்கு ஒலிக்குறிப்பில்லை) என்று சொன்னார்கள். இந்தப் பகுதி வரலாற்றை எழுதும்பொழுது மெகஸ்தனிஸ் இண்டிகா என்று அந்நூலுக்குப் பெயர் சூட்டினான்.

www.tamilarangam.net



இந்தப் பகுதியிலுள்ள கடலுக்கு இந்துக்கடல் என்று பெயர் சூட்டினார்கள். மற்றபடி பாரம்பரியமாக இங்கு இந்திய தேசம் என ஒன்றில்லை. இந்தியன் என்ற பெயரில் ஒரு இனம் இல்லை.

இந்து மதம் என்பதும் அப்படித்தான் வைதிக மதம், வேத மதம், பிராமண மதம் என பல்வேறு பெயர்கள் இருக்கின்றன. காலஞ்சென்ற சங்கராச்சாரியர் சொன்னது "தெய்வத்தின் குரலில்" வந்துள்ளது. நாமெல்லாம் சிவனை, வழிபடுபவர்கள். விஷ்ணுவை வழிபடுபவர்கள் காளியை வழிபடுபவர்கள், வைசேசிகர்கள், நியாய வைசேசியர்கள், சாங்கியர்கள் என்று பல்வேறு பிரிவுகளாக பிரிந்து கிடந்தோம். ஐரோப்பியர்கள் இங்கே வந்து நம்மையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து இந்து என்று சொன்னார்களோ நாம் பிழைத்துக் கொண்டோமோ" என்றார். இவர்கள்தான் கடவுள்களையும் தேசிய மயமாக்கினார்கள். இந்திய தேசியம் என்பது கடவுளுக்கும் உண்டு. நம் குறிஞ்சி நிலக் கடவுள் முருகன் இந்திய தேசியக் கடவுளாக மாறும்பொழுது சுப்பிரமணியம் ஆகிறான். தமிழ்நாட்டில் முருகனுக்கு மனைவி வள்ளி. வடநாட்டில் சுப்பிரமணியனுக்கு மனைவி தேவயானை. இந்திய தேசியக் கடவுளான பிறகு இவனுக்கு இரண்டு மனைவிகள்.

## காலவதியாகிவிட்ட "இந்திய தேசியம்"

இந்திய தேசியம் சுதந்திரப் போராட்ட காலத்தில் வலுவாகக் கிளம்பியது வெள்ளையனை எதிர்த்துப் போராடும்பொழுது எல்லோரும் ஒன்று சேரவேண்டும் என்ற தேவை இருந்தது. இன்று (23.3.97) பகத்சிங்கின் நினைவு நாள். பகத்சிங், ராசகுரு, சுகதேவ் முதலியவர்கள் விடுதலைக்காகப் போராடினார்கள். வெள்ளையர் வந்த தொடக்க காலத்தில் கட்டபொம்மன் போராடினான். ஜான்சிராணி போராடினாள். எவ்வளவோ மன்னர்கள் போராடினார்கள் 1857ல் படைவீரர்கள் போராடினர். சன்னியாசிகள் கலகம் செய்தார்கள். இவர்களால் வெற்றி பெற முடியவில்லை. அங்கங்கே கலகம் செய்து தனித்தனியாகப் போராடி வெற்றி பெற முடியாது என்று கண்டு ஒன்று சேர்ந்தார்கள். வெற்றி பெற்ற பிறகு நமக்குள் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற கருத்தில் தேவை காரணமாக ஒன்று சேர்ந்தார்கள். காங்கிரசுப் பேரவை ஒரு தேவையாக அமைந்தது. ஒரு தேவையை அடிப்படையாக வைத்து தேசியத்தை உருவாக்கினார்கள். இது கற்பனையான தேசியம். அதற்காக இந்து மதத்தை, கலாச்சாரத்தைப் பயன்படுத்தினார்கள். காசிக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் மக்கள் போய் வந்து கொண்டிருக்கிறார்கள். நாமெல்லாம் இந்தியர்கள் என்றார்கள். இந்தியா என்று சொன்னால் ஒரு மாற்றுக் குறைவாக இருக்கின்றது. ஆகவே பாரதம் என்று கூறுவோம் என்றார்கள். இரண்டு சக்திகள் இப்படி பரப்பினார்கள். 1. முதலாளிய சக்திகள் 2. பார்ப்பனிய சக்திகள்.

www.tamilarangam.net



இந்த நிலப்பகுதி முழுவதும் தொழில்களைத் தொடங்குவதற்கு பொருட்களை விற்பனை செய்வதற்கு முதலாளிகளுக்கு ஒரு தேசியம் தேவைப்பட்டது. அவர்கள் இந்திய தேசியம் என்று சொன்னார்கள். சாதிமுறையில் ஆதிக்கம் செய்தவர்கள், வர்ணாசிரமம் என்று சொன்னவர்கள் இந்த பார்ப்பனர்கள் இந்தியா முழுவதும் ஆதிக்கம் செய்வதற்கு தேசியம் என்றார்கள். இவர்கள் தமக்குள் சமரசம் செய்து கொண்டு இந்திய தேசியம்-பாரத தேசியம் என்ற கருத்தை உருவாக்கி வளர்த்தார்கள். இப்படி வரும்பொழுதுதான் மொழிவாரி தேசியங்களையெல்லாம் கீழே தள்ளி இந்திய தேசியம் என்ற கருத்தாக்கத்தை உருவாக்கினார்கள். இது அன்று வரலாற்றுத் தேவை இந்தக் கருத்தை வலுவாக ஏற்படுத்தினால்தான் இந்தியப் பெரும் முதலாளிகளுக்கு இந்தியாவில் எங்கு செல்வதற்கும் தொழில் தொடங்குவதற்கும் வாய்ப்பாக இருக்கும். இந்தியா முழுவதும் பரவி இருப்பவர்கள், பார்ப்பனர்கள். அவர்கள் ஒரு வர்ணம், சாதியல்ல. பிராமண என்ற பெயரில் எல்லா இனத்திலும் இவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பெயரில் எல்லா இனங்களிலும் இருக்கிற சாதியாக இவர்களைத் தவிர வேறில்லை. இங்கே உள்ள கோனார்கள். வட நாட்டிலுள்ள யாதவர்கள் எல்லாமே ஒரு சாதி என்பது, உண்மையில்லை. பின்னால் இட்டுக் கட்டிக் கொண்டது. இதே போலத்தான் சத்ரியர்கள் என்பதும். பிராமண வர்ணம்தான் இந்தியா முழுவதும் ஒரே இலக்கணத்தில் இருக்கிறது. மொழி வேறுபாடு இருந்த போதிலும் இவர்கள் ஒரு வர்ணம் இவர்கள் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்தியவர்கள். நிலக்கிழார்களாக உத்தியோகஸ்தர்களாக இருந்தவர்கள்.

அரசியல் சட்டத்தை உருவாக்கும்பொழுது இந்தியாவிற்கு என்ன பெயர் சூட்டுவது என்ற கேள்வி எழுந்தபொழுது, இந்து மதவாதிக ளெல்லாம் குரல் கொடுத்தனர். இந்தியா என்ற பெயரை எதிர்த்தார்கள். பாரதம் என்று சொல்ல வேண்டும் என்றார்கள். "பாரத வர்ஷ" என்று சொல்ல வேண்டும் என்றார்கள். அரசியல் அமைப்பு அவையில் நீண்ட விவாதம் நடந்தது. இந்து வகுப்புவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்தனர். கடைசியில் ஏற்பட்ட சமரசத்தின் விளைவாகத்தான் இந்தியா அதாவது பாரதம் என்று பெயர் ஏற்பட்டது. தொடர்பே இல்லாத இரண்டு பெயர்கள் சூட்டப்பட்டது. பாரதம் என்ற பெயருக்கு என்ன ஆதாரம்? செப்பேடுகள் கல்வெட்டுக்களில் ஆதாரம் உண்டா? இல்லை. புரோகிதர்களின் மந்திரங்களில் இருக்கிறது. வீடுகளுக்கு புண்ணிய ஸ்நானம் செய்ய வந்தால் புரோகிதர்கள் பரதகண்டே, பரதவர்ஷே என்று தொடங்குவார்கள். இதுதான் ஆதாரம். பரதன் என்று ஒருவன் ஆண்டதாகப் புராணம் இருக்கிறது. இமயமலை முதல் கடல் வரை அவன் ஆண்டான் என்று சொல்கிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரம் இல்லை.

www.tamilarangam.net



இந்தியா என்றபெயரிலேயே ஒரு வகுப்புவாதம் இருக்கிறது. பாரதிய ஜனதா கட்சி மட்டும்தான் வகுப்பு வாதக் கட்சி என்பது உண்மையல்ல. வகுப்புவாதம் அந்தக் கட்சியில் கூடுதலாக உள்ளது. இந்திய தேசியத்தை ஏற்றுக்கொள்கிற பிற எல்லாக் கட்சிகளுக்குள்ளும் வகுப்புவாதம் இருக்கிறது. எவருடைய வாய் இந்திய தேசியம் என்று உச்சரிக்கின்றதோ. அவருடைய கால் தெரிந்தோ தெரியாமலோ இந்து வகுப்பு வாதத்தில் பதிந்திருக்கிறது. பாபர் மசூதி இடிக்கும்பொழுது அத்வானி "ராம பக்தி ராஷ்டிர சக்தி" என்றார். ராமபக்தி என்பது நாட்டின்சக்தி. ராமன் இந்திய தேசியத்தின் சின்னம். இது அத்வானியின் கோட்பாடு. இந்திய தேசியம் இந்து வகுப்பு வாதத்தின் மேல் எழுப்பப்பட்டுள்ளது.

மதவாதிகளாவது இந்திய தேசியத்திற்கு ஒரு கோட்பாட்டைத் தருகிறார்கள். மதச் சார்பற்றவர்கள் என்று சொல்பவர்களுக்கு ஒரு கோட்பாடும் இல்லை. நாம் சுதந்திரத்திற்காக ஒன்று சேர்ந்து போராடினோம். ஏகாதிபத்திய எதிர்ப்பில் இந்தய தேசியம் உருவானது என்கிறார்கள். இதில் எந்த அளவு உண்மை உள்ளது? இரஷ்யாவில் தேசிய இனங்கள் இணைந்து போராடினார்கள். ஜார்ஜியர்களும், ருஷ்யர்களும், உக்ரேனியர்களும் ஒன்றிணைந்து இரத்தம் சிந்தி போராடினார்கள். ஆனாலும் ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு அங்கு ஒரு தேசிய இனம் உருவாயிற்று என்று யாரும் சொல்லவில்லை. இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லரை எதிர்த்துப் போராடி வெல்வதற்கு அவர்கள் கொடுத்த விலையை வேறு யாரும் கொடுக்கவில்லை. பல்வேறு இனங்களைச் சேர்ந்த 2 கோடி மக்களின் இரத்தம் கலந்து வெள்ளமாய் ஓடியது. இது பைலோ ரஷ்யன் குருதி, இது ரஷ்யன் குருதி இது உக்ரேனியன் குருதி என்று பிரிக்க முடியாத அளவுக்கு ஒன்று கலந்து போராடினார்கள். நாடே ஓர் உடம்பு எடுத்து போராடியது. அதற்குப் பிறகும் அங்கே சோவியத்து தேசிய இனம் உருவானதாக ஸ்டாலின் சொல்லவில்லை. அரசியல் சட்டத்திலும் தேசங்களின் ஒன்றியம், யூனியன் ஆப் நேசன்ஸ் என்றுதான் சொன்னார்கள். பல்தேசியநாடு என்றுதான் சொன்னார்கள்.

இந்தியாவில் அந்த அளவுக்கு இரத்தம் ஓடவில்லை. கத்தியின்றி, இரத்தமின்றி போராடியதாகச் சொல்லப்படும் இந்த நாட்டில் மட்டும் எப்படி ஒரு தேசிய இனம் உருவாகும்? இதுதான் பெருமுதலாளிகள், பார்ப்பனர்களின் சூழ்ச்சி. இந்திய தேசியம் என்பது சுதந்திரத்திற்காகப் பயன்பட்டிருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு முறை முற்போக்கான பங்கு வகித்திருக்கின்றது என்பதைக் கூட நான் ஓரளவுக்கு ஒப்புக்கொள்கிறேன். ஆனால் 1947 ஆகஸ்ட் 15க்குப் பிறகு அதற்கு என்ன தேவை இருக்கிறது? 47 ஆகஸ்ட்டோடு அதுகாலவதியாகிவிட்டது.கற்பிதம் செய்துகொண்ட, இட்டுக் கட்டிக்

www.tamilarangam.net



கொண்ட - இயற்கைக்கு முரணான இந்திய தேசியம் காலாவதியாகவிட்டது. ஆகவேதான் காங்கிரசைத் தாண்டி ஓர் அனைத்திந்தியக் கட்சி உருவாக முடியவில்லை. பாரதமாதா பேசக்கூடிய இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி அனைத்திந்திய அளவில் வளர்ந்திருக்கிற கட்சிகளா? என்றைக்கு அனைத்திந்தியப் புரட்சி நடத்தப் போகிறார்கள்? புரட்சியைக் கைவிடுவதற்குச் சொல்லப்படும் எளிதான காரணம் அனைத்திந்திய அளவில் நாம் வளரவேண்டும் என்பது. இது ஒரு சந்தர்ப்பவாதம் இவர்கள் பாரத தேச வெறியைக் கிளப்புகிறார்கள்.

ஜனதா தளம் ஒரு அனைத்திந்தியக் கட்சியா? பாரதிய ஜனதா அனைத்திந்தியக் கட்சியா? இந்து வகுப்புவாதம் மேலோங்கியிருக்கிற பசுமாட்டு வட்டாரத்தில்தான் அதற்குச் செல்வாக்கு, உத்திரப்பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான் ஆகிய இந்திப் பகுதியிலேதான் இவர்களின் வலு இருக்கிறது. எவ்வளவு சீரழிந்தாலும் காங்கிரசுக் கட்சிதான் அனைத்தந்தியக் கட்சியாக இருக்கிறது. தொடர்ந்து அது தேய்ந்து வருகிறது. புத்தர் கூறினார். ஆற்றைக் கடக்கும் பொழுது படகு தேவை கடந்த பிறகு நன்றி உணர்ச்சிக்காகப் படகைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு போகாதீர்கள். உங்கள் பயணம் தடைப்படும். 1957க்குப் பிறகு இந்திய தேசியம் என்ற படகைச் சுமந்து பயணத்தை முடக்கி விட்டார்கள்.

ஆகவே இந்திய தேசியம் தமிழனுடைய அடையாளத்தை மறுக்கிறது. தமிழன் அடையாளமிழந்து ஒடுக்கப்பட்டிருக்கிறான். நான் தமிழன் என்றும் என் தாய்மொழி தமிழ் என்றும், எனது நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும், பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள இயலாத நிலையிலுள்ள தேசிய இனம் தன் எதிர்காலத்தை எப்படி உருவாக்கிக் கொள்ள இயலும். இது தமிழர்களுக்குப் பெரும் சிக்கல். பெரும் முட்டுக்கட்டை. நம் முன்னேற்றத்துக்குத் தடை. தமிழனுடைய இருப்புக்கே இது கேள்வி எழுப்புகிறது. சமூக மாற்றத்திற்கு இது தடை.

## தமிழர்கள் மீது மார்வாடிகளின் ஆதிக்கம்

அடுத்ததாகப் பொருளாதாரச் சிக்கல். தமிழர்கள் மீது செலுத்தப்படும் பொருளாதார நெருக்கடி இந்திய தேசியத்திலிருந்துதான் வருகிறது. எதையும் குறிப்பாகச் சொல்லவேண்டும். பொதுவாகச் சொல்வது எளிது. முதலாளித்துவம் ஒழிக என்று பொதுவாகச் சொன்னால் யாரும் கவலைப்பட மாட்டார்கள். காற்றில் ஓங்கிக் குத்தினால் யாருக்கு வலிக்கும்? அதுபோல பூர்வீக கம்யூனிஸ்ட்டுகள் முதலாளித்துவம் ஒழிக என்று பொதுவாகச் சொன்னார்கள். குறிப்பாக வர்கள்தான் தமிழ்த்தேசம் சுரண்டப்படுவதற்கு

www.tamilarangam.net



நாங்கள் சொல்கிறோம். எங்களுக்குத் தடை வருகிறது. இந்தியாவில் பொதுவாக முதலாளிகள் கிடையாது. மார்வாடிகள் குசராத்திகள், சேட்டுகள் இவர்கள்தான் இந்தியாவில் பெரும்பான்மையான பெருமுதலாளிகள். இமுக்கியக் காரணம். இவர்கள் வழியாகத் தான் பன்னாட்டு முதலாளிகள் இங்கு வருகிறார்கள். இந்த நாட்டைக் கொள்ளையடிக்கிறார்கள்.

சிலர் ஒரு தத்துவம் சொல்கிறார்கள். எல்லா தேசிய இனங்களில் இருந்தும் பெரு முதலாளிகள் உருவாகியுள்ளனர் என்பது இவர்களின் தத்துவம். மேகாலயாவிலிருந்து, நாகலாந்திலிருந்து, அஸ்ஸாமிலிருந்து, ஓரியாவிலிருந்து, காஷ்மீரிலிருந்து வந்த பெருமுதலாளி யார்? எத்தனை பெருமுதலாளிகள்? நாம் பட்டியலிடக் கூடிய பெரு முதலாளிகளில் 100க்கு 80 பேர் ராசஸ்தானில் மார்வாரிலிருந்து வந்த மார்வாடிகள், குசராத்திலிருந்து வந்த சேட்டுகள் இவர்கள்தான் இந்தியாவின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்க முடிகிறது. இவர்களின் மடியில்தான் டில்லி அரசு உட்கார்ந்திருக்கிறது. இவர்களின் நலன்தான் இந்திய அரசுக்கு முதல் தேவை. நீங்கள் எந்த உப்பு போட்டுச் சாப்பிடுவது என்பதை இவர்கள் தீர்மானிக்கிறார்கள். 1995 ஜனவரி முதல் தேதியிலிருந்து தமிழ்நாட்டில் சாதாரண உப்புக்குத் தடை விதித்துள்ளார்கள். அயோடின் கலந்த உப்புதான் விற்கவேண்டும். அயோடின் கலந்த உப்பை மொத்தமாக உற்பத்தி செய்வதும், வாணிகம் செய்வதும் மார்வாடிகள், சேட்டுகள். வேதாரண்யத்திலுள்ள தாரங்கதாரா கெமிக்கல்ஸ், அதன் உரிமையாளர் சாகு ஜெயின். தூத்துக்குடியிலும் இவர்க்கு ஆலை உள்ளது. இப்படி ஐந்து சேட்டுக்கள்தான் வெளிநாட்டிலிருந்து அயோடின் இறக்குமதி செய்ய உரிமம் பெற்றுள்ளார்கள். சங்க காலத்தில் உமணர்கள் உப்பு விற்றார்கள். இன்று நம் உப்பை தடை செய்கிறார்கள்? யாருக்காக? மார்வாரி, குசராத்தி சேட்டுக்காக, மான்செஸ்டர் துணி விற்பனைக்காக. டாக்கா மஸ்லின் துணியை உற்பத்தி செய்த நெசவாளர்களின் கட்டை விரலை வெட்டிய வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கும், இன்றுள்ள டெல்லி ஏகாதிபத்தியத்திற்கும் என்ன வேறுபாடு? நம்முடைய பாரம்பரிய உற்பத்தியாளர்கள் உப்பைத் தயார் செய்யலாம். ஆனால் விற்கக் கூடாது.

நம் முதல்வருக்கு அதிகாரமில்லை. இவர்கள் டெல்லிக்கு கங்காணிகள். மார்வாடிகள் அறிமுகம் செய்திருக்கும் பான்பராக். இதனால் புற்று நோய் வருகிறது. மலட்டுத் தன்மை உருவாகிறது. இதை அதிகமாகப் போட்டவர்கள் வாயைத் திறந்தால் மூட முடியவில்லை. ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் அரசாங்கமே ஒரு

www.tamilarangam.net



நிபுணர் குழு போட்டு இந்தப் பாக்கைத் தடை செய்யலாமா என்று அறிக்கை கேட்டுள்ளார்கள். இந்தப் போதைப் பாக்குக்கு இங்கு தடை உண்டா? மாணிக்சந்த், குட்கா என்றெல்லாம் விற்பனையாகின்றன. இவற்றுக்குத் தடை இல்லை. கும்பகோணம் ஏ ஆர் சீவல் படுத்துவிட்டது. இப்பொழுது இவர்களும் பான்பராக் போல ஒரு சீவல் தயாரிக்கிறார்கள். கோத்தாரி என்ற மார்வாடி இந்த பான்பராக்கை அறிமுகப்படுத்தினார். உடல் நலத்திற்குக் கேடு செய்யும் இந்த பான்பராக்குக்குத் தடை இல்லை. அயோடின் கலவாத உப்பைப் பயன்படுத்தினால் முன் கழலை நோய் வருகிறது என்று சொல்கிறார்கள். கடல் மட்டத்திலிருந்து 1,000 மீட்டர் உயரத்தில் வசிக்கும் 10,000 பேரில் ஒருவருக்கு இந்த நோய் வருகிறது. அதற்காக எல்லோரும் அயோடின் கலந்த உப்பைத்தான் பயன்படுத்த வேண்டும் என்கிறது அரசு. இந்திய அரசின் இம்முடிவை மாநில அரசு செயல்படுத்துகிறது.

இப்படி இந்திய அரசின் திசைவழியைத் தீர்மானிப்பவர்கள் இந்த மார்வாடிகள். தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியை மார்வாடிகள் வாங்கிவிட்டனர். நாடார்கள் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்பட்டது இந்த வங்கி. கோவையில் ஆர். கே. சண்முகம் செட்டியாரின் குடும்பத்திற்குச் சொந்தமான வசந்தா மில், விஸ்கோஸ் செயற்கை இழை ஆலை போன்றவை மார்வாடிகளுக்குச் சொந்தமாகிவிட்டது. திருப்பூரில் பனியன் உற்பத்தி செய்பவர்கள் நம்மவர்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்பவர்கள் மார்வாடிகள். 0 இலட்சம், 12 இலட்சம் முதலீடு போட்டு பனியன் உற்பத்தி செய்பவர்கள் மார்வாடிகளிடம் மாட்டிக் கொண்டு அலைகிறார்கள். மொத்தமாக உள்ளாடைகளை வாங்கும்பொழுது 5 இலட்சம் என்றால் 1 இலட்சம் கழிவு கேட்கிறார்கள். புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கு மிச்சமில்லை. அன்னியச் செலாவணியில் பெரும்பகுதியைத் தட்டிக் கொண்டு செல்பவர்கள் மார்வாடிகள். எந்தக் காஷ்மீரி அல்லது மேகாலாந்துக்காரன் இங்கு திருப்பூருக்கு வந்தான். எல்லாத் தேசிய இனங்களிலிருந்தும் பெரும் முதலாளிகள் வந்துள்ளனர் என்று சொல்வது பொய். இந்த மார்வாடிகளுக்கு தொழில்நுட்பம் போதாது. மேற்குலகில் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. எனவே இவர்கள் கொள்ளையடிப்பதற்காக மேற்கிலிருந்து, கிழக்கிலிருந்து பன்னாட்டு நிறுவனங்களை அழைத்து வருகிறார்கள். எனவே பன்னாட்டு நிறுவனங்களை எதிர்ப்பது, காட்டை எதிர்ப்பது என்றெல்லாம் பொதுப்படையாகச் சொலி

www.tamilarangam.net



மார்வாடிகளை எதிர்க்காமல் இருப்பது பம்மாத்து. சாக்கடையை மூடமாட்டேன். கொசுவைக் கொல்வதற்காக மருந்து அடிப்பேன் என்று சொன்னால் மருந்து அடித்துக் கொண்டேயிருக்க வேண்டியதுதான். எப்படி பாரத தேசியத்தை மறுதலிக்காமல் இந்திய தேசியத்தை மறுதலிக்க முடியாதோ அதுபோல மார்வாடிகள், சேட்டுகளை எதிர்க்காமல் பன்னாட்டு நிறுவனங்களை எதிர்க்க முடியாது. இவன்தான் அழைத்து வருகிறான். இவனை விட்டுவிட்டு இவனோடு விருந்தாளிபோல வருகின்றவனை எதிர்ப்பதென்றால் அது உண்மையான எதிர்ப்பல்ல. இவர்கள்தான் இன்று பொருளியலில் மட்டுமல்லாமல் அரசியலிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். விருதுநகரில் நவதானிய வியாபாரம் தமிழர்கள் செய்தனர். ஒரு திரைப்படப் பாடல் கூட உண்டு. "மணப்பாறை மாடுகட்டி மாயவரம் ஏருபூட்டி" என்று.

"பொதியை ஏத்தி வண்டியிலே
பொள்ளாச்சி சந்தையிலே
விருதுநகர் வியாபாரிக்கு செல்லக்கண்ணு
நீயும் வித்துப்போட்டு பணத்தை எண்ணு"

ஆனால் தற்பொழுது, "மார்வாடி சேட்டுக்கு வித்துப்போடு செல்லக்கண்ணு" என்றுதான் பாடமுடியும். விருதுநகரிலேயே தமிழன் வியாபாரம் இல்லை. மார்வாடிதான் இருக்கிறான். சிவகாசியில் எழுதுபொருட்கள் முழுவதும் மார்வாடியின் கைகளில்தான் உள்ளது. அசோக்லேண்ட் தொழிற்சாலை இந்துஜாவிற்குச் சொந்தமானது. இப்படி கனரகத் தொழில் தொடங்கி சிவகாசி தாள் விற்பனை வரை எல்லாவற்றையும் கட்டுப்படுத்துவதும் கொள்ளையடிப்பதும் மார்வாடி சேட்டுகள்தான். கோவையில் இந்து வகுப்புவாதத்தை ஊட்டி வளர்ப்பவர்கள் யார்? மார்வாடி குசராத்தி சேட்டுகள்தான். சென்னையில் விநாயகர் ஊர்வலம் என்று பெரிய கலவரத்தை தூண்டுவது யார்? மார்வாடி குசராத்தி சேட்டுகள். அவர்கள்தான் பிள்ளையார் ஊர்வலத்திற்கு இனிப்பு வழங்குகின்றனர். குளிர்பானம் வழங்குகிறான். நிதி தருகிறார்கள். பாபர் மசூதி இடிப்பிற்காக, வகுப்பு வாத சக்திகளுக்கு திரும்பி வரும் பயணச் சீட்டுடன் பதிவு செய்து கொடுத்தவன் யார்? மார்வாடி குசராத்தி சேட்டு. இந்த மார்வாடிகளின் ஒரு பகுதியினர் சமணர்கள். இவர்களுக்கு மத ஒழுக்கம் கூடக் கிடையாது. இந்துக் கடவுளை ஏற்றுக்கொள்ளக்கூடாது. மகாவீரரை ஏற்றுக் கொண்டவர்கள் இலட்சுமி, சரசுவதி போன்ற கடவுள்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது. ஆனால் அவர்கள் கடையில் இலட்சுமி படம் வைத்திருப்பார்கள். மார்வாடிகளில் இந்துக்களும் இருக்கின்றனர். சமண மதத்தைச் சேர்ந்த மார்வாடிகள் உட்பட எல்லோரும் இந்துக் கடவுளைத்தான் மாட்டுகின்றனர்.

www.tamilarangam.net



## தி.மு.க.வின் தலைகீழ் மாற்றம்

டால்மியாபுரம் என்ற பெயரை மாற்றுவதற்காக முன்பு கருணாநிதி போராடினார். உண்மையில் இது வெறும் பெயர் தொடர்பான போராட்டமல்ல. தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்த வந்த மார்வாடி சேட்டுகளை எதிர்த்த போராட்டம் அது. ஆனால் அதே கருணாநிதி, 1989-ல் முதல்வரானபோது சென்னையில் மார்வாடிகள் சங்கம் ஒரு விழா நடத்தியது. அதில் ஒரு கோரிக்கை வைத்தார்கள். அதாவது தங்கள் சங்க நிறுவனர் சோர்டியா மால்மன் ஜெயின் அவர்கள் பெயரை ஒரு தெருவுக்குச் சூட்டுங்கள் என்றனர். அந்த மேடையிலே கருணாநிதி அறிவித்தார். தங்க சாலையின் ஒரு பகுதி சோர்டியா மால்மன் ஜெயின் சாலை என்று பெயர் வழங்கப்படும் என்றார். "டால்மியாபுரம்" என்று செந்தமிழ்ச் சிற்றூருக்கு வடநாட்டார் பெயரா என்று குமுறி எழுந்து தண்டவாளத்தில் தலை வைத்துப் போராடிய இளம் கருணாநிதி எங்கே! அதே வடநாட்டான் பெயரையே சாலைக்குச் சூட்டிய முதியவர் கருணாநிதி எங்கே! இதுதான் மாற்றம். நமக்கு ஏமாற்றம். மார்வாடிகளுக்கு மகிழ்ச்சியான வாய்ப்பு.

அதே போல் பொருளியலில் மட்டுமல்லாது அரசியலிலும் மார்வாடிகள் ஆதிக்கம் நீடிக்கிறது. திண்டிவனத்தில் ஹீராசந்த் என்ற மார்வாடியை எம்.ஜி.ஆர். நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கினார். அதே திண்டிவனத்தில் 1952 பொதுத் தேர்தலில் மார்வாடி ராம்நாத்கோயாங்கா நின்றார். அவரை எதிர்த்து திருக்குறள் முனுசாமி நின்றார். அந்தத் தேர்தலில் ஹெலிகாப்டரில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் தூவினார் கோயங்கா. மக்கள் மார்வாடியைத் தோற்கடித்து தமிழர் திருக்குறளார் முனுசாமி அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இன்றைக்கு திண்டிவன நகராட்சித் தலைவர் ஹீராசந்த். இவர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் ஆகியுள்ளார். நமது அரசியல் வாதிகளெல்லாம் தரகர்களாகிவிட்டனர்.

மார்வாடிகள் பார்ப்பனியப் பண்பாட்டைத் தனதாக்கிக் கொண்டு தமிழகத்தில் பண்பாட்டுச் சீரழிவை உண்டுபண்ணுகின்றனர். குசராத்தி மொழி நல்ல வளமானது. காந்தியடிகள் தனது சத்திய சோதனையைத் தனது தாய்மொழியான குசராத்தியில் எழுதினார். ஆனால் குசராத்தில் உள்ள சேட்டுகள் தனது கல்வி மொழியாக எதனை வைத்துள்ளான்? ஹிந்தி. ராசஸ்தான் மாநிலத்தில் ராசஸ்தானி கிடையாது. மழலையர் பள்ளி தொடங்கி எல்லா நிலைகளிலும் அங்கு இந்திதான். ராசஸ்தானி ஒரு மொழிப்பாடமாகக் கூடக் கிடையாது. குசராத்திலிருந்தும், இராசஸ்தானிலிருந்தும் வரக் கூடிய பெரு முதலாளிகள் தங்களை இந்தி மொழியோடு, இந்தி தேசியத்தோடு ஏன் இணைத்துக் கொள்கின்றனர்? இவர்களுக்கெல்லாம் இந்தி தாய்மொழியல்ல. இவர்களுக்குச் சந்தை முக்கியம். கொள்ளை முக்கியம்.

www.tamilarangam.net



துளசிதாசர் இராமாயணத்தை அவதி மொழியில் எழுதினார். இந்தி இராமாயணம் மொழி பெயர்க்கப்பட்டதே தவிர துளசிதாசர் இந்தியில் எழுதியதல்ல. அங்கே அவதி, கல்யாணி, போஜ்புரி, மைதிலி என பல மொழிகள் உள்ளன. இவைகள் சொந்த எழுத்துக்களற்ற, வளராத மொழிகள். இவர்களுக்கு ஒரு இணைப்பு மொழியாக இந்தி வந்தது. சமஸ்கிருத வரி வடிவத்தில் எழுதினால் இந்தி. அரபி வரி வடிவத்தில் எழுதினால் உருது. இரண்டும் ஒன்றுதான். தற்பொழுது இந்தியில் அதிக அளவுக்கு சமஸ்கிருதச் சொற்களைக் கலக்கிறார்கள். பார்ப்பனிய மயமாக்குகின்றனர். ஆக இந்தி தேசிய இனம் என்பது ஒரு செயற்கைத் தேசிய இனம்.

தமிழ்த் தேசியம், கன்னட தேசியம் என்பதெல்லாம் இயற்கையான வளர்ச்சியுடைய தேசியங்கள். தேசிய இனத்திற்குரிய வரையறைகளை ஸ்டாலின் சொல்லியுள்ளார். பொதுவாக அது பொருந்தக் கூடியது. அதில் விதிவிலக்குகள் உண்டு. அதாவது ஒரு பொது மொழி, தொடர்ந்தாற்போல் இருக்கின்ற நிலப்பரப்பில் வாழும் மக்கள் பொதுவான பண்பாடும் அதன் மூலம் உண்டான உளவியல் உருவாக்கமும் பெற்றிருந்தால் அது ஒரு தேசம், தேசியம் என்று ஸ்டாலின் கூறியுள்ளார். நமக்குப் பொதுவான மொழி என்பது தமிழ் சேர்ந்தாற்போல் வாழ்கிறோம். இது இயல்பானது. ஆனால் இந்திப் பகுதி உருவாக்கப்பட்டது. பல்வேறு மொழிகளை அழித்து அதன் மேல் இந்தி திணிக்கப்பட்டு, ஒரு இந்தி தேசிய இனம் பெரும் கூட்டமாக வளர்க்கப்படுகிறது. அதனோடு இணைந்து கொண்டால்தான் தமது பொருளியல் கொள்கைகள், உயர்வடையும் என்று கருதி, மார்வாடி சேட்டுகள் தங்களை இந்தியோடு இணைத்துக் கொள்கின்றனர். இவர்கள்தான் தமிழர்களுக்குப் பொருளாதார ரீதியிலும் கலாச்சார ரீதியிலும் எதிரிகளாக உள்ளனர். இவர்கள் தமிழ்நாட்டை ஆக்கிரமித்திருக்கிறார்கள். வருங்காலத்தில் தமிழ்நாடு தமிழர்களுக்கில்லை என்கிற அபாயம் உள்ளது. பாலஸ்தீனர்கள் யூதர்களிடம் தங்கள் தாயகத்தை இழந்துவிட்டு, தாயகத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

## பார்ப்பனியப் பண்பாடு

மார்வாடிகள் பார்ப்பனியப் பண்பாட்டைத் தங்களுடையதாக்கிக் கொண்டுள்ளனர். பார்ப்பனியப் பண்பாடு என்ன? கர்மம், தர்மம், தண்டம், என்ற மூன்றும் பார்ப்பனியம். முற்பிறப்பு, மறுபிறப்பு, முற்பிறப்பில் என்ன பாவம் செய்தீர்களோ அதற்கு அடுத்த பிறவிகளில் தண்டனை அனுபவிக்க வேண்டும். இந்தப் பிறவியில் உனக்கு என்ன தர்மமோ அதை நீ செய்யவேண்டும். சூத்திரனாக இருந்தால் உழைக்கவேண்டும். நீ போய் வில்வித்தை கற்றுக் கொள்ளாதே. படிக்காதே. உன் சுதர்மம் உழைப்பது. இதுதான் தர்மம்.

www.tamilarangam.net



அதாவது வர்ணாசிரம தர்மம். அடுத்து தண்டம். இதுபோல அவரவர் கர்மங்களைச் செய்யாதிருந்தால் அதற்குத் தண்டனை வழங்குதல். சங்கராச்சாரி கையில் தடி வைத்திருப்பது தண்டிப்பதைக் குறிப்பதாகும். ஜெயேந்திர சரசுவதி காஞ்சியை விட்டு ஓடிப் போனபோது எல்லோரும் சொன்னார்கள். தண்டத்தையே விட்டுவிட்டுப் போய்விட்டாரே என்று. தண்டிக்கின்ற ஆயுதம் தண்டம். யாரைத் தண்டிப்பது? பிறப்பினடிப்படையில் கடமைகளைச் செய்யாமல் இருப்பவனைத்தண்டிப்பது. இதுதான் பார்ப்பனியத்தின் சாரம். இதன் காரணமாகத்தான் வர்ணமும், சாதியும் இன்றும் நின்று கொண்டுள்ளன.

நாம் சாதி ஒழிப்புப் போராட்டம் நடத்தவேண்டுமென்றால், அந்த அந்த வட்டாரங்களில் நடத்தும் போராட்டம் ஒரு வகை. பிற்படுத்தப்பட்டவர்கள் தானே எங்களைத் தாக்குகிறார்கள் என்று தாழ்த்தப்பட்டவர்கள் சொல்வதில் ஒரு நியாயம் இருக்கிறது. பார்ப்பனர் நேரடியாகத் தாக்குவதில்லை. பத்திரிக்கைகளில், வானொலி, தொலைக்காட்சிகளில் முக்கிய இடங்களில் பார்ப்பனர்கள் இருக்கின்றனர். அரசிலே அதிகாரிகளாக உள்ளனர். இந்திய அரசிலே அமைச்சர்களாக, பிரதமர்களாக அமர்ந்துள்ளனர். உச்சநீதி மன்றத்திலே நீதிபதிகளாக அமர்ந்திருக்கிறார்கள். இப்படி முக்கியமான இடங்களில் அமர்ந்து கொண்டு நாட்டின் திசைவழியைத் தீர்மானிக்க முடிகிறது. இதை நமது மக்கள் உடனடியாக அடையாளங்காண முடியாது. ஆனால் முக்குலத்தோருக்கும் தாழ்த்தப்பட்- டோருக்கும், வன்னியர்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் உள்ள மோதல் வெளிப்படையாகத் தெரியும். இவை ஒழிய வேண்டும்.

## சாதியத்தின் ஊற்றுக்கண் - பார்ப்பனியம்

நான் பார்ப்பனர்களை எதிர்க்கிறேன், பார்ப்பனியத்தை எதிர்க்கிறேன் என்று சொல்லிக் கொண்டு "என் தெருவிலே நான் தாழ்த்தப்பட்டவர்கள் செருப்பு அணிந்து செல்ல அனுமதிக்கமாட்டேன்" என்று ஒரு தமிழன் சொன்னால், அவன் ஆதிக்கவாதி பிற்போக்குவாதி. தமிழன் என்றால் எல்லோரும் துண்டு போட்டுச் செல்லவேண்டும். எல்லோரும் செருப்பணிய வேண்டும். எல்லோரும் சமமாக இருக்கவேண்டும். அது இல்லாமல் நாங்கள் அப்படியேதான் இருப்போம் ஆனால் நாங்கள் பார்ப்பானை எதிர்ப்போம், இந்திய தேசியத்தை எதிர்ப்போம் என்றால் அது மோசடி, புதிய மோசடி என்று பொருள். பகை முகாம்களாக, தாழ்த்தப்பட்டோரும், பிற்படுத்தப்பட்டோரும் இருக்கக் கூடாது. இவர்களுக்குள் இணக்கம் வரவேண்டும். ஆனாலும் வெறும் இணக்கம் மட்டுமே சாதியத்தை வீழ்த்திவிடாது.

www.tamilarangam.net



பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களை உடன்பிறப்புகளாக நடத்த வேண்டும். சாதியத்தின் கங்கோத்ரி, பார்ப்பனியம். அந்த ஊற்றுக்கண்ணை அழிக்காமல் சாதியை ஒழிக்க முடியாது.

மண்டல் குழு பரிந்துரை அமுலாக்கம் செய்ய வேண்டும் என்ற அரசியல் சூழலில் இந்தியா டுடே இதழில் பாலகுமாரன் கதை வந்தது. கட்டை விரல் என்று அந்தக் கதைக்குப் பெயர். ஏகலைவனின் கதை. குருச்சேத்திரப் போர் நடக்கிறது. எவ்வளவு பேர் இறந்துவிட்டனர்! எவ்வளவு இரத்தம் ஓடுகிறது. ஏகலைவனே நீயும் வில்வித்தையை விடாமல் வைத்திருந்தால், உன்னால் எத்தனை பேர் இறந்திருப்பர், எத்தனை இரத்தம் சிந்தியிருக்கும். நீயே போரில் அழிந்திருக்கக் கூடிய வாய்ப்பும் இருக்கிறது. நல்லவேளை அன்றைக்கு உன்குரு துரோணாச்சாரியார் உனக்கு நன்மையே செய்திருக்கிறார். உன் கட்டை விரலைக் காணிக்கையாக வாங்கி உனக்கு எவ்வளவு பெரிய நன்மை செய்துள்ளார்! இதுதான் அந்தக் கதை. எந்தக் காலத்திலோ எங்கள் முன்னோர் செய்த தவறுக்கு எங்களுக்குத் தண்டனையா என்று சிலர் கேட்கின்றனர். பாட்டன்கள் மோசமாக இருந்தனர் அதைப்போலவே பேரர்களும் அப்படித்தானே இருக்கிறீர்கள்! ஆனந்த விகடனில் ஒரு கதை "மிட் நைட் டென்ஷன்" இது கதையின் பெயர். தமிழ்க்குடிமகன் திருப்தி அடைவாராக என்று ஒருகுறிப்பும் அதில் உள்ளது. முகமூடிக் கொள்ளையர்கள் இரவில் பல வீடுகளில் கொள்ளையடிக்கின்றனர். இறுதியாக ஒரு தமிழ்ப்புலவர் வீட்டில் கொள்ளையடிக்கச் செல்கின்றனர். தமிழ்ப்புலவர் திருடர்களை உபசரிக்கிறார். "வாருங்கள் உங்களுக்கு என்ன வேண்டும்" என்று நல்ல தமிழில் பேசுகிறார். வந்த முகமூடித் திருடர்கள் மிரட்சியடைகின்றனர். பின்னர் அவர்கள் சாவி கேட்கின்றனர். "என்ன திறவுகோல் கேட்கிறீர்களா" திறவுகோல் என்று சொல்லுங்கள் சாவி என்று சொல்லாதீர்கள்" என்கின்றார் புலவர். இப்படியே தொடர்ந்து நல்ல தமிழில் பேசுவதால் வந்தவர்கள் மருட்சி அடைகின்றனர். புலவர் தமிழ் பேசப்பேச, கொள்ளையர்கள் குழம்பி தப்பித்தால் போதும் என்று ஓடிவிடுகின்றனர். இந்தக் கதையிலுள்ள மனத்திற்குப் பெயர்தான் பார்ப்பனிய மனம்.

நம்முடைய மொழி, நம்முடைய நாட்டில், விளம்பரங்களில், பெயர்ப் பலகைகளில், ஆட்சியில் இருக்கவேண்டுமென்பது பைத்தியக்காரத்தனம், குழப்பம் என்று இவர்கள் தொடர்ந்து எழுதுவார்கள். அதை நாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? ஜுனியர் விகடன் இதழில் நாரதர் என்ற பெயரில் எழுதினார்கள். தமிழ்க்குடிமகன் பெயரை "தமிழ் டிரிங்சன்" என்று குறிப்பிட்டார்கள். இதற்கு என்ன பெயர்? இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டு, தமிழ்க்காற்றைச் சுவாசித்துக் கொண்டு, தமிழ்த் தண்ணீரைக்

www.tamilarangam.net



குடித்துவிட்டு தமிழன் உற்பத்திசெய்யும் சோற்றைச் சாப்பிட்டுவிட்டு, தமிழனுக்கெதிராய், தமிழுக்கெதிராய் உங்களால் எழுதமுடிகிறது? இதைச் சனநாயகத்தின் பேரால் சகித்துக் கொள்ளவேண்டுமா? அப்பன் பாட்டன் செய்த தவறுக்கு எங்களுக்குத் தண்டனையா என்கிறீர்களே இன்றைக்கு நீங்கள் சும்மா இருக்கிறீர்களா? பார்ப்பனர்கள் தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் கலக்கவேண்டும். அதற்கு எதிராக நிற்கக்கூடாது.

இவற்றைப் படிக்கிற பார்ப்பனரல்லாதவர்கள் என்ன நினைப்பர்? இதை ஏன் மாற்ற வேண்டும். ஐஸ்கிரீம் என்று இருந்தால் என்ன? பஸ் என்று சொன்னால் என்ன? என்று நம் மொழிக்காரனையே சொல்ல வைப்பது பார்ப்பனியம். அது ஒரு ஊற்றுக்கண். புதிய குழப்பங்களை அது உற்பத்தி செய்து கொண்டேயிருக்கும். மேட்டூரில் ஜலமட்டம் என்று தான் ஒரு காலத்தில் தினமணியில் வரும். இப்பொழுதுதான் நீர் மட்டம் என்கின்றனர். "காங்கிரஸ் அக்ராசனராகக் காமராஜ்" "அண்ணாமலை சர்வகலாசாலை உப அத்தியட்சர்" இப்படியெல்லாம் தான் தமிழ் சீரழிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர்தான், மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர் போன்ற பல தமிழறிஞர்களும், அரசியலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் போராடி தற்பொழுது நல்ல தமிழ் வந்து கொண்டுள்ளது. எழுத்து வடிவமில்லாத தோடர்களுக்கு அவர்களின் மொழிதான் அவர்களுக்குச் சிறந்தது. அவரவர் தாய்மொழிதான் அவரவர்களுக்கு மேலானது. அந்த மொழியில் வேற்று மொழயிலுள்ள அறிவியல் கலைச் சொற்களைக் கொண்டு வரலாமே தவிர இந்த மொழி இழிவானது விட்டுவிடு என்பது ஆதிக்கவாதிகளின் கருத்து.

உள்ளூரில் சாதி ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடும் அதே நேரத்தில் அனைத்திந்திய அளவிலான சாதி ஆதிக்கத்தை எதிர்த்தும் போராட வேண்டும். தத்துவார்த்தப் போராட்டம் நடத்த வேண்டும். அதை விடுத்து நாங்கள் உள்ளூர் போராட்டம் மட்டும்தான் செய்வோம் என்றால் ஆதிக்கவாதிதான் வெல்வான்.

"என் சாதிக்கிவன் சாதி இழிவென்று
சண்டையிட்டு பஞ்சாகிப் போனாரடி சகியே"

என்று தமிழ்த் தேசியக் கவிஞன் பாரதிதாசன் பாடியதுபோல் இன்னும் பாடிக் கொண்டேயிருக்க வேண்டியதுதான். சாதி ஆதிக்கத்தை எதிர்க்கும் பொழுதுகூட இந்திய தேசியத்தை எதிர்க்க வேண்டும். இந்திய தேசியம் என்பது பார்ப்பனியம், பெருமுதலாளியம். இந்திய தேசியம் என்ற கருத்தாக்கத்தை அப்படியே வைத்துக் கொண்டு சாதியத்தை வீழ்த்த முடியாது, பார்ப்பனியத்தை

www.tamilarangam.net



வீழ்த்த முடியாது, பெரு முதலாளியத்தை வீழ்த்த முடியாது. ஆக நமக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கலுக்கும், அரசியல் சிக்கலுக்கும், சாதியச் சிக்கலும் ஒரே தீர்வு இந்திய தேசியத்தை வீழ்த்திவிட்டு தமிழ்த் தேசியத்தை நிறுவுவதுதான். தமிழ்த் தேசியத்தின் கூறுகளாக, பன்னாட்டு எதிர்ப்பு, மார்வாடி குசராத்தி சேட்டுகள் எதிர்ப்பு என எல்லாம் இருக்கிறது.

## தமிழ்த்தேசியம் – குறுகிய வாதமா?

உலகமே ஒரு கிராமமாக மாறிவரும் இன்றைய சூழலில் தமிழ்த் தேசியம் என்பது குறுகிய வாதம் என்று சிலர் சொல்கின்றனர். உலகமே கிராமமாகும் பொழுது இந்தியத் தேசியம் என்பது குறுகிய வாதமில்லையா? தகவல் தொடர்பு சாதன வளர்ச்சி என்ன, இண்டர்நெட் என்ன/அது என்ன/இது என்ன? இப்பொழுதுபோய் தமிழ்த்தேசியம் நிலைக்குமா? அப்படி எனில் இந்திய தேசியம் மட்டும் நிலைக்குமா? அது நிலைக்கும்; இது நிலைக்காதா? சரி உலகமே ஒரு கிராமமாகி வருகிறது. கடவுச் சீட்டையும், நுழைவு சீட்டையும் நீக்கி விடுங்களேன் தயாரா?

காட் ஒப்பந்தத்தைத் திணித்த அமெரிக்கா, இறக்குமதிகளுக்கெல்லாம் தடை விதிக்கக் கூடாது என்று அடுத்தவர்களுக்கு அறிவுரை சொன்ன அமெரிக்கா என்ன செய்தது? தனது நாட்டில் ஜப்பான் கார்கள் அதிகமாக விற்றன. அமெரிக்க கார்கள் விற்காமல் போய்விடும் என்று கருதி அதனைக் கட்டுப்படுத்த ஜப்பான் கார்களுக்கு அதிக வரி போட்டார்கள். ஜப்பான் இதனை எதிர்த்தது. அமெரிக்காவின் ஒருலகக் கொள்கை என்ன ஆயிற்று? கியூபாவுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்கிறதே. அந்த ஒருலகுக் கொள்கையிலே கியூபா கிடையாதா? கியூபா கம்யூனிஸ்ட் நாடு என்பதற்காக, அந்தக் கோட்பாடு பரவாமல் நெருக்கடி கொடுக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் தடை விதிக்கிறது. ஆக ஒருலகக் கொள்கை என்பது ஒரு ஏமாற்று வேலை.

நவீன தொழில் நுட்பம் வளர்ந்து விட்டதாலேயே தேசங்களின் எல்லைகள் மறைந்துவிடாது. இன்னும் பல நூறு ஆண்டுகள் அது இருக்கும். ஆனால் அப்படி அழிந்து கொண்டிருப்பதாக, அழியப் போவதாகச் சித்தரிக்கின்றார்கள், ஆதிக்கவாதிகள். இட ஒதுக்கீடு சாதி அடிப்படையில் வேண்டுமென்றால், துக்ளக் சோ, அருண்செளரி போன்றவர்கள் என்ன கேட்கின்றனர். ஏன் சாதி கேட்கின்றீர்கள்? நீங்கள்தான் சாதியை உண்டாக்குகிறீர்கள் என்பார்கள். சாதி ஏற்றத்தாழ்வ, ஏற்கெனவே உள்ளது. சாதியத்தால் பாதிக்கப்பட்டவர்களை, சாதியால் அடையாளம் கண்டு கைதூக்கி விட வேண்டும் என்றால் நீங்கள் சாதியை வளர்க்கிறீர்கள் என்கின்றனர்.

www.tamilarangam.net



ஒடுக்கப்பட்ட சாதிகள் உரிமைகள் கேட்கும் பொழுது ஆதிக்க சாதியினர் சாதியே வேண்டாம் என்பர். ஏனென்றால் குருவிக்குக் கூடு தேவை. பருந்துக்குக் கூடு தேவையில்லை. காடே அதற்குக் கூடு. உலகமே ஒன்று என்று சொன்னால் அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு நன்மையாகிறது. ஏனென்றால் உலகெங்கும் அவர்கள்தான் மேய்ச்சல் செய்பவர்கள், கழுகுகள் அவர்கள்தான். குருவிகள் கூடுகளை இழந்து நிற்கும். சோவியத் யூனியன் இருந்த வரை இருமுனை உலகம் இருந்தது. வீழ்ந்தபிறகு ஒற்றைமுனை உலகம் வந்துவிட்டது. அவர்கள் தலைமையில் அவர்களுக்கான உலகம். நம்மைப் பொறுத்த வரையில் உலகம் பல நாடுகளைக் கொண்டது. இது இன்றைக்கு மாறாது பல நூறு ஆண்டுகள் நின்று நிலவும். நாட்டு எல்லைகள் இருக்கும். புதிதாக விசா கொடுக்கும் அதிகாரம் வேண்டும் என்று நாம் கேட்கும் பொழுது, நம்மைப் பார்த்துச் சொல்கிறார்கள் உலகம் ஒன்றாகிக் கொண்டிருக்கிறது. இதைக் கைவிட்டுவிடுங்கள் என்கின்றனர்.

தமிழ்த்தேசியம் என்பதுதான் புரட்சிகரமான முழக்கம். தமிழ்த்தேசத்தை மீட்டமைப்பதற்காகத்தான் நாங்கள் தமிழ்த்தேசத் தன்னுரிமை முழக்கத்தை வைத்திருக்கிறோம். சுய நிர்ணய உரிமை என்பதன் ஒரு வகையான தமிழாக்கம்தான் தன்னுரிமை என்பது. தன்னுரிமை என்பது ஒரு தேசிய இனத்தின் தனிப்பட்ட அடிப்படை உரிமை. இது பிரிந்து போய்த் தனி நாடாக தங்களைத் தாங்களே ஆண்டு கொள்வதற்கும், சமத்துவ ஒப்பந்தங்கள் செய்துகொண்டு பிற நாடுகளோடு கூட்டாட்சி ஏற்படுத்திக் கொள்வதற்குமான தாய் உரிமை. இந்தியாவிலே ஒரு புதிய ஒப்பந்தம் போட வாய்ப்பிருந்தால் ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்திக் கொள்ளலாம். நாங்கள் சொல்கின்ற தமிழ்த்தேசப் புரட்சியென்பது டில்லியைக் கைப்பற்றுவதல்ல. டில்லியின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவது. நாம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தூக்கிக் குப்பையில் போட்டுவிட்டு ஒரு புதிய ஒப்பந்தம் போடுவோம். அப்படி ஒரு கூட்டாட்சியை உருவாக்க முன்வந்தால் நாம் ஒன்றாக இருக்கலாம். அதற்கெல்லாம் வாய்ப்பில்லையென்றால் தனி நாடாகப் போகலாம்.

## வரலாற்றில் தன்னுரிமையும் புரட்சியும்

தன்னுரிமை என்பது இறையாண்மையுள்ள ஒரு குடியரசை நிறுவும் அதிகாரம். தன்னுரிமை பற்றிப் பல பேர் கருத்துக்கள் சொல்லியுள்ளனர். கம்யூனிஸ்ட்கள் மட்டும் சொன்ன கருத்துக்களல்ல இவை. பிரெஞ்சுப் புரட்சியே சுயநிர்ணய உரிமைக்கான புரட்சி என்று அவர்கள் சொல்கிறார்கள். 1776 ல் முதன்முதலில் அமெரிக்காவில் கூட்டாட்சி மலர்ந்தது. இதற்கு தன்னுரிமைதான் அடிப்படை என்று அவர்கள் சொன்னார்கள்.

www.tamilarangam.net



ஐ.நா.சபையில் 1950 ல் கிரீஸ் நாட்டுப் பிரதிநிதி பேசும்போது, "ஒட்டோமான் பேரரசிற்கு எதிராக 1821 ல் நடந்த கிரேக்கப் போரிலிருந்து தன்னுரிமை என்பது கிரேக்க மக்களின் முதன்மையான வழிகாட்டும் கோட்பாடாக உள்ளது. அப்போர் தேசிய சுதந்திரம் என்ற புரட்சிகரப் போக்கைஐரோப்பாவில் தொடங்கி வைத்தது" என்று பேசியுள்ளார்.

பிரிட்டனில் 1917 டிசம்பரில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி ஒரு அறிக்கை வெளியிட்டது. "நாங்கள் இரஷ்ய மக்களுக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறோம். 18ஆம் நூற்றாண்டில் அமெரிக்கக் காலனிகளிலிருந்து பாடங்கற்ற பின் கிரேட் பிரிட்டன் தனது காலனி நாடுகளுக்கு முழுத் தன்னுரிமை வழங்கிய முழு முதல் நவீன அரசு எடுத்துக்காட்டாக கனடா டொமினியன், ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா மற்றும் நியுசிலாந்து. இந்தியாவிற்கும் மற்றும் உள்ள காலனி நாடுகளுக்கும் அக்கோட்பாட்டின் படி தன்னுரிமை வழங்க ஒப்புக் கொண்டுள்ளோம்". இதன் பொருள் என்ன? தன்னுரிமை என்பது ஒரு கூட்டாட்சியில் இணைந்து இருப்பது மட்டும் அல்ல. சுதந்திரமாகப் பிரிந்து போவதும் தன்னுரிமைதான். இன்றுஈழ விடுதலைப் புலிகள் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு கேட்கிறார்கள். அதற்காக ஈழ விடுதலையை விட்டுக் கொடுத்ததாக அர்த்தம் அல்ல. சுய நிர்ணய உரிமை என்பதுதான் அடிப்படைத் தாய் உரிமை. அதனுடைய விரிவுதான் விடுதலை, தனிநாடு.

"ஜாரின் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையடைந்த நாடுகள் அனைத்திற்கும் தனியான அரசு அமைக்கும் உரிமையினை, அதாவது சுய நிர்ணய உரிமையினை உறுதியாக சமூக ஜனநாயகக் கட்சி வழங்க வேண்டும். சீனா, துருக்கி, பாரசீகம் போன்ற அரைக் காலனி நாடுகள் மற்றும் எல்லாக் காலனி நாடுகளும், இவை மொத்தம் ஆயிரம் மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டிருக்கின்றன. இந்த நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயக இயக்கம் அநேகமாகத் தொடங்கவில்லை. அல்லது அவை இன்னும் நெடுந்தூரம்போக வேண்டியுள்ளது. எல்லாக் காலனி நாடுகளுக்கும் நஷ்ட ஈடில்லாமல், நிபந்தனை அற்றமுறையில் உடனடிச் சுதந்திரம் அளிக்கவேண்டும். இந்தக் கோரிக்கையின் அரசியல் அர்த்தம் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. சோஷலிஸ்டுகள் ஒரு நாட்டோடு நின்றுவிடக்கூடாது. உலகிலுள்ள சோசலிச ஜனநாயக கட்சிகள் புரட்சிகரமான சக்திகளுக்கு உறுதியான ஆதரவு தர வேண்டும். தங்களை ஒடுக்கிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய வல்லரசிற்கு எதிராக, அவர்களின் ஆயுதந் தாங்கிய புரட்சிக்கு உதவி செய்ய வேண்டும்" என்று லெனின் கூறியுள்ளார்.

www.tamilarangam.net



காலனிநாடுகள் விடுதலை பெறுவதென்பதே தன்னுரிமையினை அடிப்படையாக வைத்துத்தான் என்று லெனின் சொல்கிறார் எனவே, தன்னுரிமை என்றாலே ஏதோ சேர்ந்திருப்பதை, நிபந்தனையாகக் கொண்டது என்று தவறாகப் புரிந்து கொண்டு சில தோழர்கள் பேசுகிறார்கள். மார்க்சிய மூலவர்கள் எப்படித் தன்னுரிமையைக் கையாண்டார்களோ அதேபோலத்தான் நாங்களும் கையாள்கிறோம்.

## நாம் என்ன செய்யவேண்டும்

உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்கிறார்களே அதை மாற்றிச் சொல்கிறோம். உரிமைக்குப் போராடுவோம் உறவுக்கு நிபந்தனை போடுவோம். இந்த அளவில்தான் தமிழ்த்தேசத் தன்னுரிமை முழக்கத்தை ஒரு புரட்சிகர முழக்கமாகப் பார்க்கிறோம். இந்தியாவில் அகில இந்தியப் புரட்சி நடக்காது. அகில இந்தியத் தன்மை வாய்ந்த தேசிய இனம் கிடையாது. இந்தியா என்பது பூகோள, அரசியல் பெயர். ஐரோப்பியர் என்பதைப் போல ஆப்பிரிக்கர் என்பதைப் போல இந்தியர் என்பதும் ஒரு பூகோள அரசியல் பெயர். எனவே, நாங்கள் தன்னுரிமைக்கான முழக்கத்தினை தமிழ்த் தேசியத்தின் அடிப்படையில் எழுப்புகின்றோம். இதனை இதற்கு முன்னர் பலரும் எழுப்பியுள்ளனர். 1946 ல் ம.பொ.சி அவர்கள் தமிழகத்திற்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று வெள்ளை வைஸ்ராய்க்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் திருவிக, காமராசர், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், ஜீவானந்தம் போன்ற 12 பேர் கையெழுத்திட்டுள்ளனர். அதன் பின்னர் திராவிட இயக்கம் திராவிட நாடு கோரினார்கள். திராவிட தேசியம் என்று ஒன்று கிடையாது. அது ஒரு மரபினம். திராவிட தேசியம் இன்று இல்லாதது. மாயையானது. இந்திய தேசியம் புரட்டு. திராவிட நாடு கேட்டபோதுகூட தமிழ்த்தேசிய அடிப்படையில்தான் மக்கள் திரண்டார்கள். ஆந்திராவிலோ, கேரளாவிலோ, கர்நாடகத்திலோ இதற்குக் கிளைகள் இல்லை. அதையும் பின்னர் கைவிட்டார்கள் சம்பத் அவர்கள் தமிழ்த் தேசியக் கட்சியை 1960-61 களில் தொடங்கி இதே தன்னுரிமைக் கோரிக்கையை எழுப்பினார். மக்களுக்குப் புரிவதற்காக ஒரு சொல்லாக்கத்தை அவரே உருவாக்கினார். வெட்டிக் கொள்ளும் உரிமையுடன் ஒட்டிக் கொள்ளும் உறவு என்றார். இது ஒரு கோட்பாடோ தத்துவமோ அல்ல. சுயநிர்ணய உரிமையை மக்களுக்குப் புரியும் வண்ணம் சொல்வதற்காக சம்பத் கையாண்ட பாணி அது அவரும் அதைக் கைவிட்டு காங்கிரஸில் சேர்ந்தார். 1965 மொழிப் போருக்குப் பிறகு அது ஒரு தேசிய எழுச்சியாக வெடிக்கவேண்டியதை, 1967 தேர்தலில் வெற்றியாகச் சுருக்கிய பிறகு தமிழ்த் தேசியம் வீழ்ந்தது. இருண்ட காலம் சூழ்ந்தது.

www.tamilarangam.net



இத்தனை பேர்கள் சொல்லி நிறைவேற்றாததை இவர்கள் எப்படி நிறைவேற்ற முடியும் என்று மக்கள் மத்தியில் அய்யம் எழுந்துள்ளது. ஒவ்வொருமுறையும் ஒரு அரசியல் கட்சி தோன்றி பெரும்பான்மை பெற்று, மக்களை எங்கோ சொர்க்கத்திற்கு அழைத்துப் போவதாகச் சொல்லி, வேறிடத்தில் தள்ளிவிட்டு தாங்கள் நாற்காலியில் அமர்ந்து விட்டு மக்களைக் கீழே தள்ளிவிட்டார்கள். எனவே இன்றைக்கு மக்களிடம் நம்பிக்கையின்மை ஏற்பட்டிருக்கிறது. இவர்களுக்கும் ஆள் சேர்ந்தால் தேர்தலில் வெற்றி பெரும் வாய்ப்புக் கிடைத்தால் நம்மைக் கைவிட்டு விடுவார்கள் என்று மக்கள் நம்மை போன்றவர்களை சந்தேகப் படுகின்றனர். நாம் என்ன சொல்கிறோம் என்றால், தமிழ்த் தேசியத்தை நாடளுமன்ற சட்டமன்றத்தின் மூலம் பெற முடியாது. வெளியில் போராடித்தான் பெற வேண்டும். வெளியில் போராடுவதென்றால் ஒரு கொரில்லாப் போர் நடத்த வேண்டும் என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அதுதான் நடத்த வேண்டும் என்பவர்கள் நடத்தட்டும். எங்களுக்கு அதில் உடன்பாடில்லை. எழுச்சி மிக்க மக்கள் இயக்கம் மூலம்தான் வெற்றி பெற முடியும். அப்படியானால் இவர்கள் ஆயுதமே பயன்படுத்த மாட்டார்களா என்றால் பயன்படுத்துவார்கள். அரசு பலாத்காரத்தை ஏவும்போது மக்கள் திரளும் ஆயுதங்களை ஏந்த வேண்டி வரலாம். எனவே சட்டமன்றத்தின் மூலமோ நாடளுமண்றத்தின் மூலமோ எதனையும் சாதிக்க முடியாது. தமிழகச் சட்டமன்றம் என்பது மசோதா மன்றம். 234 சோதாக்கள் கூடி மசோதாக்கள் நிறைவேற்றுவார்கள். தில்லி முகவரான ஆளுநரோ, தில்லி தலைவரான குடியரசுத்தலைவரோ கையொப்பமிட்டால் தான் இந்த மசோதா சட்டமாகும். இல்லையென்றால் வெறும் தீர்மானம்.

எனவே நமது இலக்கு தமிழ்தேசியக் குடியரசினை அமைப்பது. அந்த நோக்கத்திற்காக மக்களைத் திரட்டவேண்டும். போடோ மாணவர்கள் மக்களைத் திரட்டிப் போராடுகிறார்கள். டில்லி அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. அஸ்ஸாமில் போராடினார்கள். அடக்குவதற்கு ராஜீவ் காந்தி சட்டம் போட்டார். முடியவில்லை. அன்னியர்களை அஸ்ஸாமை விட்டு வெளியேற்றும் போராட்டம் மேற்கு வங்கத்திலிருந்தும் பீகாரிலிருந்தும் அஸ்ஸாமிற்குள் சென்றவர்கள் வெளியேற்றபடவேண்டும் என்று கோரினார்கள். அதற்கு ஒப்புக்கொண்டுதான் ராஜீவ் காந்தி ஒப்பந்தம் போட்டார். மார்வாடி, குசாராத்தி சேட்டுகளை வெளியேற்ற வேண்டும் என்று நாம் சொல்லும் போது இது நடக்குமா இந்தியாவில் என்கிறார்கள். நடந்திருக்கிறதே அஸ்ஸாமில். ஏன் தமிழ்நாட்டில் மட்டும் நடக்காது? 1956க்குப் பிறகு வந்த மார்வாடி சேட்டுகளைக் கணக்கெடுத்து வெளியேற்றி விடவேண்டும். நாம் மக்களை திரட்டிப் போராடினால்

www.tamilarangam.net



நம்மோடும் ஒப்பந்தம் போடுவார்கள். தமிழ் தேசக் குடியரசினை அடைவதுதான் நமது இலக்கு. அதன்மூலம் தான் நம்மிடம் உள்ள சாதி அழுக்கு, சாதி ஒடுக்குமுறை அழுக்கு, கல்லாமை அழுக்கு "என உள்ளவற்றையெல்லாம் ஒழிக்க வேண்டும். மாவோ சொன்னார்" எதிரியை எதிர்த்து போராடும்போது எதிரி மட்டும் அழிவதில்லை. நம்மிடம் உள்ள அழுக்குகளும் அழியும்"

ஒரு இலக்கு வைக்காத சமூகம் முன்னேறாது. மக்கள் தாமாக இலக்கை உண்டாக்க மாட்டார்கள். மக்களுக்கு வழி காட்ட வேண்டும். அது தான் தலைமை. ஒரு தேசியத்தலைமை உருவாகி மக்களை இந்த இடத்திற்குப் போ என்று விரட்ட வேண்டும். கொள்கைச் சாட்டையால் அடித்து விரட்ட வேண்டும். அப்படியெல்லாம் இல்லாமல் கோட்டைதான் இலக்கு என்றால், நாற்காலிதான் இலக்கு என்றால் எதுவும் நடக்காது. ஒரு அரசியல் இலக்கு வைக்கக்கூடிய தலைமை தமிழ்நாட்டில் கிடையாது. பிரபலக்கட்சி எதற்கும் கொள்கை கிடையாது. பொதுவுடைமைக் கட்சிகளுக்கு இலக்கு கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத்தில் அடைந்தால் திராவிடநாடு இல்லையேல் சுடுகாடு என்று முழங்கியது. அந்தக் கட்சிக்கு இன்று இலக்குக் கிடையாது. அதிலிருந்து பிரிந்த கட்சிக்கும் இன்று இலக்கு கிடையாது. எல்லோருக்கும் இலக்கு வாக்குச் சாவடிதான். இந்தப் படை போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா என்கிறார்களே அந்த படை அப்படியே வாக்கு சாவடிக்குச் சென்று வாக்கு போடுவதோடு சரி. அதற்கு மேல் அவர்களுக்கு இலக்கு இல்லை. நாம்தான் நம்மைப் போன்ற இயக்கங்கள்தான் ஒரு இலக்கு வைக்க வேண்டும். அதுதான் தமிழ்த்தேசக் குடியரசு என்ற இலக்கு. அந்த இலக்கை நோக்கி மக்களை அழைத்துச் செல்ல வேண்டும். உலகத்தின் முன்னேறிய சமூகங்களோடு தமிழ்ச் சமூகத்தையும் உயர்த்த வேண்டும், என்ற இலக்கோடு நமது தமிழ்த்தேசக் குடியரசு உருவாக்கம் என்ற நிகழ்வு நிறைவேறும்.

## கேள்வி நேரம்

**குமரவேல்** : 1. தமிழ்த்தேசியம் என்று பேசும்பொழுதுவேளாண்மைச் சிக்கலை முகாமையாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. வளர்ச்சி என்று சொல்லி, பசுமைப்புரட்சி, கனரகத் தொழில், நவீன அறிவியல் தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கொண்டு வருகிறார்கள். இவை தமிழ்த்தேசத்தை அழிக்கின்றன. இவை வளர்ச்சியல்ல. உங்கள் கருத்து என்ன?

பதில் : நவீன தொழில்நுட்பம் முற்றிலும் சரியல்ல என்பது பொருந்தாது. நம் மரபுக்கும் சூழலுக்கும் ஒத்த தொழில் நுட்பத்தை மேலும் வளர்த்தெடுப்பதற்கு நவீன தொழில் நுட்பத்தை நாம் பயன்படுத்திக்

www.tamilarangam.net



கொள்ள வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஒத்த முறையில், இன்ன உரம், இன்ன பூச்சிக்கொல்லி பயன்படுத்த வேண்டுமென்று நம் உழவர்களைக் கட்டுப்படுத்துவதை நாம் ஏற்க முடியாது. மரபு வழிபட்ட முறையில்தான் உழவுத் தொழிலைச் செய்வோம் என்று பின்னுக்குப் போகவும் முடியாது.

2. தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுக்க வேண்டிய சூழலில் தி.மு.க.வைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

தி.மு.க போன்ற கட்சிகளை புரட்சிகர தமிழ்த்தேசியவாதிகளாக, ஒரு கூட்டணிக்குரிய கட்சியாக கருத வேண்டியதில்லை. அதே சமயம் காங்கிரசு, பா.ஜ.க. போன்ற அனைத்திந்தியக் கட்சிகளைப் போலவும் கருதவேண்டியது இல்லை. தி.மு.க அரசை நாம் விமர்சனம் செய்யாமல் இருக்க முடியாது. டெல்லிக்கு அவர்களை நாம் காட்டிக் கொடுக்கக் கூடாது. இவர்கள் செய்யும் தவறுகள் போலித்தனங்கள், பம்மாத்துக்கள், இவற்றைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இவர்களைத் தமிழ்தேசியத்திற்கு உறுதுணையாக நாம் கருத முடியாது.

3. தமிழ்த் தேசியம் பேசக்கூடிய குழுக்கள், இயக்கங்கள் ஏன் ஒன்றிணையக் கூடாது?

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழ்-தமிழர் இயக்கம், தமிழர் தேசிய இயக்கம் ஆகியவை சில பிரச்சினைகளில் கூட்டாக இருக்கிறோம். தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சியோடு சில பிரச்சினைகளில் கூட்டாகச் செயல்படுகிறோம். இத்தகைய போக்கு வளரவேண்டும் என்று விரும்புகிறோம். இதற்கான முயற்சிகளை நாங்கள் செய்து கொண்டுள்ளோம். மற்றவர்களும் செய்ய வேண்டும்.

**ம.நா. ராமசாமி**

**கேள்வி** : தமிழ்த் தேசியத்தில் முதலாளிகளுக்குப் பங்குண்டா?

**பதில்** : சீன விடுதலைப் போரில் மக்கள் ஜனநாயகம் என்ற கருத்தை முன் வைத்தார்கள். அரசு மயமான தொழில்களும் இருக்கும், தனியார் தொழில்களும் இருக்கும். சீன விடுதலைப் புரட்சியில் தேசிய முதலாளிகளும் இடம் பெறலாம். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போரில் தேசிய முதலாளிகள் எங்களோடு கூட்டணியில் சேரலாம். உங்களுக்கும் சந்தை ஏற்பாட்டைச் செய்து தருவோம் என்று மாவோ கூறினார். காரணம் சமூக வளர்ச்சியில் இது ஒரு கட்டம். முதலாளியத்தை முற்றாக ஒழிப்பது இந்தக் கட்டத்தில் இல்லை. முடியாது. படிப்படியாக சமதர்மத்தை நோக்கி முன் செல்லக்கூடிய வாய்ப்பை தமிழ்த்தேசக் குடியரசு உருவாக்கும். அனைத்திந்திய முதலாளிகள் தமிழ்த் தேசியத்தை எதிர்ப்பார்கள். இந்திய தேசியத்தோடு நிற்பார்கள். அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் நாம் எதிர்க்க வேண்டும். தமிழ்த் தேசியத்தை ஏற்றுக்கொண்ட- அனைத்திந்திய முதலாளிகளால் பாதிக்கப்பட்ட முதலாளிகள் நமது நேச சக்திகள்.

www.tamilarangam.net



2. பார்ப்பனியம் என்பதற்கு யாரும் திட்டவட்டமான வரையறை சொல்லவில்லை. எதையெடுத்தாலும் பார்ப்பனியம் என்று சொல்வது பொருந்தாது? கர்மம்-தர்மம்-தண்டம் என்பதுதான் பார்ப்பனியம் என்று நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்?

கர்மம்-வர்ணாசிரம தர்மம்-தண்டம் என்பவை தான் பார்ப்பனியத்தின் உட்கூறுகள். இதுதான் அதற்கு வரையறை. பார்ப்பனியம் இந்து மதத்தின் வழி வருகிறது. மக்கள் அன்றாடம் மதப் பண்பாடுகளைக் கடைபிடிக்கிறார்கள். எனவே பார்ப்பனியம் எல்லாவற்றிலும் இருக்கிறது. அதனால்தான் பார்ப்பனியம் பற்றி அதிகம் பேச வேண்டி உள்ளது.

## கருப்புசாமி

**கேள்வி :** குறிப்பாகப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். மார்வாடிகளுக்குத் தரகர்களாக அல்லது மார்வாடிகள் போலவே இங்கு செயல்படும் தெலுங்கர்களை நாம் பார்க்க வேண்டும். தமிழகத்தில் 15% தெலுங்கர்கள் 45% சொத்துக்களை அனுபவிக்கிறார்கள். இவர்களும் வடக்கிலிருந்து வந்தவர்கள்தான்.

**பதில் :** மார்வாடிகளையும் தெலுங்கர்களையும் ஒன்றாகக் கருத முடியாது. தமிழ்நாட்டு எல்லையிலுள்ள தெலுங்கர்கள் சிறுபான்மை தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ்த் தேசியக் குடியரசில் அவர்கள் தெலுங்கில் படிப்பதற்கு நாம் வசதி செய்து தரவேண்டும். அதுபோல ஆந்திராவின் எல்லைப் பகுதியிலும் தமிழர்கள் சிறுபான்மையினர். ஆனால் 400,500 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்து தமிழ் நாட்டின் உட்பகுதியில் வசிப்போர், வீட்டில் தெலுங்கு பேசுவோர் - எல்லையில் வாழும் தெலுங்கு சிறுபான்மையினர் போன்றவர் அல்லர். இவர்களின் பொதுமொழி தமிழ். கல்விமொழியாக இவர்களுக்குத் தமிழ் இருக்கிறது. இவர்களில் ஒரு பகுதியினர் தமிழ்த் தேசிய உணர்வும் பெற்றுள்ளனர். இவர்கள் தங்களைத் தமிழர்களாக உணர்கிறார்கள். இவர்களுக்காக தெலுங்குப் பள்ளிகள் திறப்பதை நாம் எதிர்க்கிறோம். உள்நாட்டிலும் தெலுங்கு அல்லது கன்னடம் பற்றி அரசு செய்த சிறுபான்மை மொழிச் சட்டத்தை நாம் எதிர்க்கிறோம். தமிழ்த் தேசியத்தை ஒட்டுமொத்தமாக இவர்கள் எதிர்க்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை. கெங்குசாமி நாயுடுவை மட்டுமே தெலுங்கினத்தின் பிரதிநிதியாக நாம் கொள்ள முடியாது. தெலுங்கு பேசுபவரை கெங்குசாமி நாயுடுவின் பக்கம் நாம் திருப்பிவிடக் கூடாது. தமிழ்நாட்டில் தெலுங்கு இரண்டாவது ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று யார் சொன்னாலும் நாம் எதிர்ப்போம். தேசிய இன உருவாக்கத்தில் இப்படி நடக்கவும் முடியாது. தூய குருதி என்பது இல்லை. தேசிய இன உருவாக்கத்திலும் கலப்பு ஏற்படுகிறது. மரபு இனத்திலிருந்துதான் தேசிய இனம் உருவாகிறது.

www.tamilarangam.net



மரபு இனம் என்பதன் அடிப்படையில் பார்ப்பது இனவாதம். ஹிட்லர் பேசியது இனவாதம். தமிழ் இரத்தம் தூய்மையானது, தமிழர்கள்தான் உலகை ஆளவேண்டும் என்பது பாசிசம். தமிழ்த்தேசியப் பெருமை சொல்லவும் ஒரு எல்லை உண்டு. எல்லை தாண்டிப் போக முடியாது. ஹிட்லரின் பாசிசம் ஜெர்மானியர்களையே அடிமைப்படுத்தியது. அழித்தது ஹிட்லரின் சிறைச்சாலையில் இருந்தவர்களில் யூதர்களை விடவும் ஜெர்மானியர்கள் அதிகம். கொல்லப்பட்டவர்களிலும் ஜெர்மானியர்கள் அதிகம். குருதிவாதம் தமிழ்த் தேசியப் புரட்சிக்கும் அழிவைச் செய்யும். புரட்சி வெற்றி பெற்றாலும் தமிழ் மக்களில் உழைப்பவருக்கு எதிராக இது திரும்பும். கடைசியில் இதுவும் குறுகிய சாதி வாதமாக மாறிவிடும். மார்வாடி நமக்குப் பிரதான எதிரி. தமிழ் மக்கள் மத்தியில் முரண்பாடுகள் இருக்கலாம். இவற்றை முறையாகத் தீர்க்கவேண்டும். பார்ப்பனர்களிலும் உள்ள ஜனநாயக சக்திகளை நாம் ஏற்கிறோம். அதைப் போலத்தான் இந்தச் சிக்கலையும் நாம் பார்க்கவேண்டும்.

www.tamilarangam.net



## உலக வணிக அமைப்பும், தமிழ்த் தேசியமும்

கி.வெ. தமிழ்நாடன்

இன்று அமைப்புக்களிலும், இதழ்களிலும் அதிகம் பேசப்படும் சிக்கலாக இருப்பது தாராளமயம்-உலக மயம்-உலக மறு ஒழுங்கமைப்பு ஆகும். மார்க்சியரும் சமூக சிந்தனையாளரும் இந்த தாராளமயம் என்ற போக்கைக் கடுமையாக எதிர்க்கின்றனர். உலக மயமாக்கல் என்ற இந்தப் போக்குக்கு நாம் எதிரானவர்களா? என்றால், இல்லை என்பதே நம் பதில் உலகை புற ஒழுங்கமைப்பு செய்தல், தாராள மயமாக்கல் என்பதை ஒப்புக் கொள்கிறோம். பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியமென்பதே உலக மயமாக்குவதுதான். அப்படியானால் யாருடைய கருத்தை நாம் மறுக்கிறோம். எந்த நோக்கில் இருந்து மறுக்கிறோம். எந்த வர்க்கத்தின் நலனிலிருந்து நாம் பேசுகிறோம் என்ற கேள்வி எழுகிறது.

### உலக மயமாக்கல் - இரண்டு வகை

உலகம் முழுவதிலும் பொதுவுடைமை அமைப்பை ஏற்படுத்துவது பாட்டாளி வர்க்கத்தின் அனைத்துலகப் பார்வை. பாட்டாளி வர்க்கம் என்று சொல்லும்பொழுது எல்லாப் பாட்டாளிகளையும் நாம் ஒருசேரக் குறிப்பிடுவதில்லை. கஞ்சியும், கூழும் குடித்துக் கொண்டு வாழ்கின்றவர்களை நாம் பாட்டாளிகள் என்று சொல்வதில்லை. இன்றுள்ள சமூக அமைப்பை நிலை நிறுத்துகிற உற்பத்தி முறையை முழுமையாக மாற்றி இன்னொரு வகையான உற்பத்தி முறையை ஏற்படுத்த வேண்டுமென்று யார் முனைந்திருக்கிறார்களோ அவர்களைத்தான் பாட்டாளி வர்க்கம் என்று நாம் கூறுகிறோம். இன்றைய சமூக அமைப்பை முதலாளியச் சமூக அமைப்பு என்று சொன்னால் இதன் உற்பத்தி முறையை மாற்றி முற்போக்கான உற்பத்தி முறையை ஏற்படுத்துவது நம் கொள்கை. அதாவது உற்பத்தியைச் சமூக மயமாக்கவேண்டும். உலகின் ஒரு கோடியில், உற்பத்தியாகும் பொருள், இன்னொரு கோடியிலுள்ள மனிதனைத் தாராளமாக சேரவேண்டும். உலகத்தின் உற்பத்தியானது சமூக மயம் ஆக்கப்படவேண்டும். ஒரு குடும்பத்திலுள்ள அனைவரும் உணவு முதலியவற்றைப் பகிர்ந்து கொள்வது மாதிரி இந்த உற்பத்தி பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

பொதுவுடைமை சமுதாயத்தில் படைப்புகளெல்லாம் மக்களுடையதாக இருக்கும். முதலாளியம் அல்லது வல்லரசியம் சொல்லுகிற உலகமயமாக்கல் என்பதும் நாம் குறிப்பிடும் உலக மயமாக்கலும் ஒன்றல்ல; இரண்டிற்கும் அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. சொர்க்கத்திற்கும், நரகத்திற்கும் எவ்வளவு

www.tamilarangam.net



வேறுபாடு இருக்குமோ அந்த அளவுக்கு இவற்றுக்கிடையில் உண்டு. இதை விளக்க ஒரு கதையைப் பார்க்கலாம். காட்டில் பற்றியெறியும் தீயிலிருந்து தம்மைத் தற்காத்துக்கொள்ள மான்கள் ஒரு குகைக்குள் செல்கின்றன. அங்கு ஒரு கிழட்டு நரி முனிவர் போல அமர்ந்திருக்கிறது. உங்களைக் காப்பதற்காகத் தான் நான் இங்கு காத்திருக்கிறேன் என்று அந்தக் கிழட்டு நரி தத்துவம் பேசுகிறது. என்னைப் போல உங்களையும் நரியாக மாற்றிவிடுகிறேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவராக என்னிடம் நீங்கள் வரவேண்டும் என்றது அந்த நரி. நரி சொன்னமாதிரி ஒவ்வொரு நாளும் மான்கள் சென்றன. எல்லாமே நரியாக மாறிவிட்டன. வல்லரசியம் பேசுவது இந்த நரியின் தத்துவம்தான்.

இனி மான்களுக்கெனத் தனிப் பிரச்சினையில்லை. நரியின் பிரச்சினைதான் இனி அவற்றிற்கு. நாளடைவில் நரியின் நிலை என்னவாகும்? மான்களையெல்லாம் தின்று தீர்த்த பிறகு நரிக்கும், உயிர்வாழ்வு இல்லை. வல்லரசியத்திற்கும் நேரப்போவது இதுதான். இதற்கு மாறாக, பத்து மான்களும் இயற்கை வளத்தைப் பாதுகாத்து, ஒவ்வொரு மானின் நலத்திற்காக மற்ற மான்கள் இருப்பது என்பது நமக்கான உலக மயமாக்கல்.

## உலக மயமாக்கல் – வரலாறு

நரசிம்மராவும் மன்மோகன் சிங்கும் இப்பொழுது கவுடாவும் சிதம்பரமும் சொல்லும் உலக மயமாக்கல் எத்தகையது? உலக மயமாக்கல் 1990ல் திடீரென வந்துவிடவில்லை. முதலாளியம் இந்த உலகத்தில் தோன்றிய காலத்திலேயே சந்தைக்கான உற்பத்தியென்பது துவங்கிவிட்டது. ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டத்தை இன்னொரு நாட்டில் விற்க வேண்டும் அதற்குச் சாதகமான சூழலை ஏற்படுத்த வேண்டும் நாடுகளைப் பிடித்து அங்கு பொருள்கள் விற்பது ஒரு கட்டம் அடுத்த கட்டத்தில் மூலதனத்தை இன்னொரு நாட்டில் போட்டு பண்ட உற்பத்தியை அங்கிருந்தே செய்ய வேண்டும் இன்னொரு நாட்டில்போட்டப்பட்ட மூலதனம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் இவர்கள் நமக்கான அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டும் இப்படித்தான் நாடு பிடிக்கும் போராட்டங்கள் தொடர்ந்தன.

இப்படி நாடு பிடிக்க தொடங்கியதன் விளைவாக முதலாளிய அரசுகளுக்கிடையிலேயே போர்கள் தொடங்கின. முதல் இரு உலகப் போர்கள் நடைபெற்றன. இப்படி நடைபெறும் வரலாற்றுச் சூழலில்தான் சோசலிசப் புரட்சியும் ஏற்பட்டது.பாசிசப் போக்கும் இந்தச் சூழலில்தான் தோன்றுகிறது. இரண்டாவது உலகப் போரின் முடிவில் உலகத்தினமுகமே மாறிவிடுகிறது

www.tamilarangam.net



இங்கிலாந்தில் வேலை இல்லாத்திண்டாட்டம், பசிக் கொடுமை முதலியவை நடந்தன. போரில் வெற்றிபெற்றபோதிலும் இதிலிருந்து இங்கிலாந்து தப்பவில்லை. ஜெர்மனியும் ஜப்பானும் விழுந்து கிடக்கின்றன. இப்படி முதலாளிய நாடுகள் விழுந்து கிடக்கிற சூழலை தனக்கு முற்றிலும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்கா, உலக அரங்கில் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்தத் தொடங்கியது. இங்கிலாந்து முதலிய முதலாளிய நாடுகளைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவும், சோசலிச நாடுகளை மேலும் வளரவிடாமல் அழிக்கவும், அமெரிக்கா திட்டமிட்டது. ஐ. நா.சபை, உலக வங்கி, அனைத்துலக நிதி நிறுவனம் போன்ற புதிய அமைப்புக்களை அமெரிக்கா தோற்றுவித்தது.

நேரடியாக அமெரிக்கா இங்கிலாந்து முதலிய நாடுகளைப் கைப்பற்றிக் கொள்ள முடியாது. இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளிலும் விடுதலைக்கான போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்றன. நேரடியாக இராணுவத்தை இங்கெல்லாம் அனுப்ப முடியாது. இந்த நாடுகளை எல்லாம் காலனிகளாக மாற்றுவதற்கு ஒரு தந்திரமான திட்டத்தை அமெரிக்கா தயாரித்தது. இதற்காகத்தான் உலக வங்கி முதலியவை ஏற்படுத்தப்பட்டன.

புதிய காலனியம் என்ற போக்கு இப்படித்தான் துவங்கியது. இந்தியா முதலிய நாடுகளில் பொதுவுடைமை இயக்கங்களும் செயல்படுகின்றன. ஆகவே உடனடியாக முழுமையான காலனியாக இவற்றை மாற்றிவிட முடியாது. இப்படி ஏற்பட்டதுதான் கலப்புப் பொருளாதாரம் என்ற திட்டம். எங்களுக்கு முதலாளியமும் வேண்டும், சோசலிசமும் வேண்டும் என்ற போக்கு இங்கு ஏற்பட்டது. இந்தியா செயல்படுத்திய 5 ஆண்டுத் திட்டங்களெல்லாம் இப்படி உலக வங்கி முதலியவற்றால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள். நேரு உண்மையிலேயே சோசலித்திற்காகத்தான் இருக்கிறார் என்று பொதுவுடைமைக் கட்சிகள் நம்பி ஏமாந்தன. இந்தக் கட்டம் மாறியது. நக்சல்பாரி இயக்கம் தோன்றியது. இந்திராகாந்தி தந்திரமாகச் செயல்பட்டார். அரசு வங்கிகளை நாட்டுடைமை ஆக்கினர். 20 அம்சத் திட்டத்தை முன் வைத்தார். மக்களுக்காக அரசு செயல்படுவதைப் போன்ற மாயை உருவாக்கப்பட்டது. பசுமைப் புரட்சி என்ற திட்டத்தை முன் வைத்தார்கள். பணக்கார விவசாயிகளுக்குச்சாதகமாக இந்தத் திட்டம் பயன்பட்டது. உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், டிராக்டர் என்றெல்லாம் மேல் தட்டு விவசாயிகளுக்குத் தரப்பட்டன. நீர்ப்பாசன வசதிகளும் செய்து தரப்பட்டன. இவ்வாறு செய்ததனால் விவசாயிகளின் வாழ்க்கையிலும் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டதைப் போன்ற தோற்றத்தை உருவாக்கினார்கள்.

www.tamilarangam.net



இந்த நிலை தொடர்ந்து நீடிக்க முடியாது. சோவியத் யூனியனில் திரிவுவாத சோசலிசம் அம்பலமாயிற்று. அமெரிக்கா முதலிய நாடுகளிலும் பொருளாதார நெருக்கடி உச்ச அளவுக்குச் சென்றது. ஏராளமான நிறுவனங்கள் மூடப்படுகின்றன. ஜப்பானோடு நடைபெறும் வணிகப் போட்டியின் விளைவாக அமெரிக்கா திண்டாடியது. விரிவான சந்தை அமெரிக்காவுக்குக் கிடைத்தாலொழிய அமெரிக்காவால் நிற்க முடியாது. இந்தச் சூழலில்தான் தாராளமயமாக்கல் என்ற திட்டம் உலக அளவில் முன் வைக்கப்படுகிறது.

**உலக வணிக அமைப்பு இந்தியாவில் எப்படிச் செயல்படுகிறது?**

இந்தியா முதலிய நாடுகளின் எல்லைகளுக்குள் வளர்ச்சி பெற்ற நாடுகளின் பண்டங்கள் தாராளமாக வந்து இறங்கி விற்பனையாக வேண்டும். இப்படி வந்திறங்கிய பண்டங்கள் எவை? கோல்கேட், கொக்கோகோலா, ஹீரோ ஹோண்டா, மாருதி கார் இப்படி ஆடம்பரப் பொருட்கள் வந்திறங்கின. இந்தப் பொருட்களெல்லாம் மத்திய தர வர்க்கத்திற்கு ஏற்றவைகளாக இருக்கின்றன. தவணை முறையில் இந்தப் பொருட்கள் இவர்களுக்குக் கிடைக்கின்றன, வங்கிகளும் கடன் கொடுக்கின்றன. மத்திய தர வர்க்கம் தாராளமாக இவற்றை வாங்குகிறார்கள். நேரு முதலியவர்கள் பொதுத்துறை நிறுவனங்கள் என்றெல்லாம் ஏற்படுத்தி ஒரு மத்திய தர வர்க்கத்தை ஏற்படுத்தி வைத்திருந்தார்கள். ஹிந்துஸ்தான் லீவர், வொச் எம்.டி. முதலியவை இத்தகைய நிறுவனங்கள். இந்த 20 கோடி மத்திய தர வர்க்க மனிதர்கள், தாராளமயமாக்கல் என்ற தாக்குதலுக்கான இலக்குகள்.

இப்படி நுகர்வுப் பொருட்கள் மட்டுமல்ல நிதி மூலதனத்தையும் தாராளமாகக் கொண்டு வந்து இறக்க வேண்டும். இப்படித்தான் வெளிநாட்டு நிறுவனங்கள் நிதி மூலதனத்தோடு இங்கு வந்திருக்கின்றன. இந்த இறக்குமதிக்குத் தடைகள் இருக்கக் கூடாது இத்துடன் அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களை தனியாருக்கு விற்க வேண்டும். தனியார் என்பவர்களில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது அரசு வங்கிகள்கூட தனியார் வங்கிகளாக மாறிவருகின்றன. ஹெச்.எம்.டி, ஆல்வின் இப்படி அரசு நிறுவனங்கள்விற்கப்படுகின்றன. இவற்றில் வேலை செல்பவர்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்படுகிறது. இப்பொழுதுதான் வெளியேற்றலுக்கு எதிராகத் தொழிற்சங்கங்கள் போராடுகின்றன.

இதே கால கட்டத்தில் வேளாண்மைத் துறை குறிவைத்துத் தாக்கப்படுகிறது. ஏற்கெனவே பசுமைப் புரட்சியின் விளைவாக உழவர்கள் தம் மேலாண்மையை இழந்துவிட்டார்கள்.

www.tamilarangam.net



இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், வீரிய வித்துக்கள் முதலியவற்றிற்காக பிறரைச் சார்ந்து நிற்பவராகிவிட்டனர். இவையனைத்தும் வெளிநாட்டு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்படி நம் நாட்டு உழவர்கள் வெளிநாடுகளைச் சார்ந்து பிழைக்க வேண்டியவர்களாகிவிட்டனர். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற புதிய போக்கு என்னவென்றால் வெளிநாட்டு நிறுவனங்கள் இங்கு வந்து வேளாண்மை செய்யத் தொடங்கிவிட்டன. நிறைய இடங்களில் நிலங்கள் வாங்கப்படுகின்றன. பல்லடத்திற்கருகில் காற்றாலைகள் வைப்பதற்காகத் தென்மாவட்டங்களில் நிறைய நிலங்களை வாங்குகின்றன. இன்னொரு பக்கத்தில் இறால் பண்ணைகள். ஐம்பதாயிரம் பெறாத நிலங்கள் கூட 11/2 லட்சம், 2 லட்சம என்று விலைபோகின்றன. நிலத்தை இப்படி விற்ற பிறகு உழவர்கள் என்ன செய்வார்கள். பங்குச் சந்தைகளில் தம் பணத்தைப் போட்டார்கள். ஹர்ஷத் மேத்தாக்கள் தோன்றினார்கள். நிறைய உழவர்கள் தம் முதலீடுகளை இழந்தனர். இன்னும் நிதி நிறுவனங்கள் வந்தன. இவர்களும் உழவர்களின் பணத்தைக் கடத்திக் கொண்டு போனார்கள். உழவர்களுக்கு இப்பொழுது நிலமும் இல்லை. பணமும் இல்லை.

நிலத்தை விற்காமல் இன்னும் வேளாண்மை செய்கின்ற உழவர்களின் நிலை என்ன? இவர்கள் நிலங்களெல்லாம் தரிசு நிலங்களாகி வருகின்றன. ஒரத்துப்பாளையம் அணையைத் திறந்துவிட்டார்கள். இந்த அணையில் ஒரு கோடி கன அடி தண்ணீருக்குப் பதிலாக தேங்கியிருப்பது இரசாயனக் கலவை. இந்த அணையைத் திறந்து விடக் கூடாது என்பதற்காக உழவர்கள் போராடினார்கள். யாருக்கும் சொல்லாமல் அணையைத் திறந்துவிட்டதன் விளைவாக விளைச்சல் தரும் நிலங்கள் இப்பொழுது நாசமாகின்றன. குடிநீர் நஞ்சாக மாறுகின்றது. திருப்பூர் சாயப்பட்டறைகளுக்கு நிறையத் தண்ணீர் வேண்டும். திருப்பூருக்கு அண்மையிலிருக்கிற கிராமங்களிலுள்ள நிலங்களை வாங்கி 500 அடிக்கு மேல் ஆழ்குழாய்க்கிணறு போட்டு தண்ணீரை எடுத்துவந்து சாயப்பட்டறைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். சுற்றிலுமுள்ள விவசாயக் கிணறுகளில் தண்ணீர் என்னவாகும்? உழவர்கள் எப்படி வேளாண்மை செய்வார்கள்? இப்படி 60000 ஏக்கர் நிலம் பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கிறது.

பன்னாட்டு நிறுவனங்கள் எந்த வகை வேளாண்மையில் இங்கு ஈடுபடுகிறார்கள்? ஒரு ஏக்கர் நிலத்தில் கண்ணாடிக் கூண்டுகள் அமைத்து 1 கோடி ரூபாய் செலவில் பூக்களைப் பயிரிடுகிறார்கள். பூக்களை மிதமான, சீரான வெப்பத்தில் வைத்து வளர்க்கிறார்கள். அறுவடை செய்து விமானத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவார்கள். இதற்கும் வங்கிகள் கடன் தருகின்றன. இதற்கும் விவசாயக் கடன் என்று பெயர். அடுத்து வரும் ஆண்டுகளில் நாம் சந்திக்கவிருக்கும் பெரும் சிக்கல், உணவுச் சிக்கலாக இருக்கும்.

www.tamilarangam.net



இந்தியாவின் கடற்கரைப் பகுதிகளில் 75 இலட்சம் மீனவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் கடலின் மீன் வளத்தைத்தான் நம்பி வாழ்கின்றனர். வெளிநாட்டு நிறுவனங்கள் நம் நாட்டுக் கடலில் மீன் பிடிக்கலாமென்ற ஆழ்கடல் பற்றிய புதிய கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். ஓரியண்டல், ஏஞ்சல் என்ற இரு கப்பல்கள் வந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் 5000 குதிரைத்திறன் கொண்டவை. ஒரு முறை 4 மணி நேரம் ஒரு கப்பல் சுற்றி வந்தால் 2000 டன் மீன்கள் இது வாரி வரும். இதன் மதிப்பு 41/2 கோடி ரூபாய். இந்த அளவு மீன்களைப் பிடிக்க நமது மீனவர்கள் எவ்வளவு நேரம் கடலில் அலைய வேண்டியிருக்கும். கடற்கரைக்குள் அந்தக் கப்பல் வந்து சேர்வதற்குள் மீன்களைச் சுத்தப்படுத்தி, பக்குவப்படுத்தி, டின்களில் அடைத்து ஏற்றுமதிக்குத் தயாரான நிலையில் வைக்கிறார்கள். எல்லாவற்றையும் இயந்திரங்களில் செய்கிறார்கள். இந்தப் போக்கின் விளைவாக நமக்கு மீன்கள் கிடைக்காது. குறைந்தவிலையில் கிடைக்காது. மீனவர்களின் வாழ்க்கை முற்றாக அழிக்கப்பட்டுவிடும். இந்தக் கப்பல்கள் பயன்படுத்தும் வலைகள் மிகவும், நுண்ணியவை, உறுதியானவை, மீன்களின் முட்டைகள் உட்பட எல்லாவற்றையும் வாரி எடுத்து வரும். இதனால் மீன்கள் வாழ்வதற்கான சூழல் முற்றாக அழிந்து விடும். இந்தக் கப்பல்கள் விண்கோள்களோடு தொடர்புடையது. கடலில் எந்தப் பகுதியில் எந்த அளவுக்கு மீன்கள் இருக்கின்றன என்பதை கோள்கள் படம் பிடித்து அனுப்புகின்றன. 300 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு மீன்களில் இருப்பிடத்தை இவை படம் பிடிக்கின்றன.

இப்பொழுது ரயில் பாதைகளைப் போடுவது, பராமரிப்பது போன்றவற்றையும் தனியாருக்குத் தருகின்றனர். நெடுஞ்சாலைகளையும் தனியாருக்குத் தருகின்றனர். கல்விக் கூடங்களெல்லாம் தனியாருக்குத் தரப்படுகின்றன. இவை கல்விக் கூடங்களல்ல. இவை வணிக நிறுவனங்கள், தவிர ஆங்கிலத்தில் கல்வி.

ஆக, நிலங்கள் நம்மிடமிருந்து பறிக்கப்படுகின்றன. நம்முடைய தொழில், கல்வி, வேளாண்மை, கடல்வளம் எல்லாமே நம்மிடமிருந்து பறிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளநிறுவனங்கள் பலவற்றை வாங்குகிறார்கள். டாட்டா, பிர்லா நிறுவனங்களை இவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இனி கெல்வினேட்டர் குளிர்சாதனப்பெட்டி தயாரிக்கும் நிறுவனத்தை "வில்புல்" என்ற அமெரிக்க நிறுவனம் வாங்கிவிட்டது. இப்படிப் பார்க்கும்பொழுது இந்த உள்நாட்டு தொழிலதிபர்களும் இனி வாழ முடியாது. திருப்பூரை எடுத்துக் கொள்வோம். நிறைய முதலாளிகள் உற்பத்தியாளர்கள் எல்லோரும் தமக்கான தொழில் நிறுவனம், கார்,

www.tamilarangam.net



பங்களா என்றெல்லாம் அமைத்துக் கொண்டார்கள். இப்பொழுது நிறைய நிறுவனங்கள் மூடிக்கிடக்கின்றன. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி என்பது இப்பொழுது சில குடும்பங்களில் அடங்கி விட்டன. மார்வாடிக் குடும்பங்கள், உயர்சாதிக் குடும்பங்கள் என்ற முறையில் இவை இருக்கின்றன. வேலைவாய்ப்பு இப்பொழுது பெரும்பகுதி குறைந்துவிட்டது. திருப்பூரில் ஒரு உதிரிக் கலாச்சாரம் உற்பத்தியாகியிருக்கிறது. வேலை இல்லை என்ற நிலையில் சமூகக் குற்றங்கள்தான் பெருகுகின்றன. திருப்பூர் மட்டும் இப்படி பாதிக்கப்படவில்லை. சுற்றிலுமுள்ள 60000 ஏக்கர் நிலங்கள் பாலைவனமாக மாறிவருகிறது. வளம் அழிந்து வரும் நிலங்களின் மதிப்பை எப்படிக் கணக்கிடுவது? நீர் வளத்தின் மதிப்பென்ன? வாழ்விழந்த விவசாயிகள் எத்தனைபேர்? இப்படி அன்னியர் வருகையால் நமக்கு எத்தனை வகை இழப்புக்கள். இந்த நிலங்களையெல்லாம் மீண்டும் செழுமைப்படுத்து - வதென்றால் ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஆகலாம். ஜப்பானில் போடப்பட்ட அணுகுண்டுகளின் விளைவை திருப்பூரோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

## உலக வணிக அமைப்பு

ஐ. நா. சபை, உலக வங்கி, அனைத்துலக நிதி நிறுவனம் ஆகியவை தயங்கித் தயங்கித்தான் சில காரியங்களைச் செய்தன. ஆனால் தயக்கம் எதுவுமின்றி, தங்குதடையில்லாமல் இவற்றையெல்லாம் செய்வதற்குத்தான் உலக வணிக அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. டங்கல் என்றும் காட் என்றும் முன்பு இதைச் சொன்னார்கள். இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளது. World Trade Organisation - WTO. இது ஒரு தனி உலக அரசு போன்றது. எந்த நாட்டுக்கும் இது சட்டங்கள் போடும்.

வெளி நாட்டு வித்தொன்றை இந்திய நாட்டு விவசாயி மீண்டும் பயன்படுத்துவதை இந்த அமைப்பு தடுக்கும். அன்னிய நாட்டு நிறுவனத்தின் வரவை உள்நாட்டு சட்டத்தால் தடுக்க முடியாது. வேப்ப மரத்தைப் பயன்படுத்துவது இனி அமெரிக்க நிறுவனத்தின் உரிமையாகிவிடும். அமெரிக்க நிறுவனம் பெங்களூரில் ஒரு தொழில் நிறுவனத்தை அமைத்து வேம்பு மரத்தின் எண்ணையை நமக்கே விற்கப் போகின்றது. மஞ்சளும் இப்படி வெளிநாட்டில் அவர்களுடைய கண்டுபிடிப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. அதே போலக் கீழாநெல்லி, பாரம்பரியமாக நாம் கண்டுபிடித்து வைத்துள்ளதை அவன் திருடிக் கொண்டுபோய் பதிவு செய்து வைத்துக் கொண்டால் அதை நாம் பயன்படுத்த முடியாது. அவனுடைய மாட்டை நாம் வாங்கி வைத்து அது கன்று (பெண்) போட்டால் அது அவனுக்குச் சொந்தம். இந்த

www.tamilarangam.net



அமைப்பின் விதிகள் முழு அளவில் செயல்படும்போது தமிழ்நாடு அரசோ, மைய அரசோ தடுக்க முடியாது. இவை பொம்மை அரசுகளாகத்தான் இருக்க முடியும

வெளிநாட்டு நிறுவனங்கள் இங்கு வந்து செயல்படும்பொழுது நீதிமன்றத்தில் ஏதாவது வழக்குத் தொடரப்படுமானால் அங்கிருந்து வழக்குரைஞர்கள் வருவார்கள்.

## பண்பாட்டுச் சீரழிவு

நம்முடைய பண்பாட்டு வாழ்வு மிகப்பெரும் அளவில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் அன்னிய நாட்டுப் பண்பாட்டுச் சீரழிவுகள் நம்முன் கொட்டப்படுகின்றன. அமெரிக்காவில் 15 வயதிற்குக் குறைவான குழந்தைகள் குழந்தை பெறுகிறார்கள். குழந்தைகள் வன்முறைகளில் ஈடுபடுவதும் அமெரிக்காவில் தான் அதிகம். அமெரிக்காவில் 5% குழந்தைகள் துப்பாக்கியைப் பயன்படுத்தி ஏதாவதொரு வழக்கில் ஈடுபட்டுள்ளார்கள். 25% குழந்தைகள் ஏதாவதொரு வன்முறைச் செயலில் மாட்டிக் கொண்டுள்ளனர். அவர்களின் இந்தச் சமூக வாழ்வு தொலைக்காட்சிப் பெட்டிகளின் வழியாக நம் குழந்தைகளைப் பாதிக்கிறது. சென்னையில் 30% ஆங்கிலக் கல்வி பெறும் சிறுவர், சிறுமிகள் பாலுறவில் ஈடுபடுகிறார்கள். டேட்டிங் வைத்துக் கொள்ளாத குழந்தைகளுக்கு அந்தப் பள்ளிகளில் மரியாதை கிடையாது.

சுற்றுலாத் துறையை இப்பொழுது வளர்த்து வருகிறார்கள். சுற்றுலாத் தளங்களில் குழந்தைகளை பாலியல் உறவுக்காகப் பயன்படுத்துகிறார்கள். தம் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக அன்னியர்கள் இங்கு வருகிறார்கள். நம் கோவாவிலும், கோவளத்திலும் நடைபெறுகிற சுற்றுலா வளர்ச்சி என்பது இதுதான். நமக்கு முன்பே சுடுகாடு ஆகிவிட்ட நாடுகள் பல. மெக்சிக்கோவை இப்படித்தான் அமெரிக்க நிறுவனங்கள் அடியோடு அழித்தன. ஆப்பிரிக்காவில் எத்தியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளும் இப்படித்தான் அழிந்தன. காட்டு வளங்களைப் பெருமளவில் உடைய இந்த நாடுகளுக்கு அமெரிக்க நிறுவனங்கள் போய்ச் சேர்ந்தன. சோளம் பயிரிடுவது அறிவுடைமையாகாது, கோக்கோ செடி பயிரிடுவதால் செல்வம் கொழிக்கும் என்றார்கள். இலவசமாகக் கோக்கோ விதைகளையும் உரங்களையும் கொடுத்தார்கள். இலவசமாகப் பயிற்சி கொடுத்தார்களஇன்ன விலைக்கு வாங்கிக் கொள்கிறோம் என ஒப்பந்தம் போட்டார்கள். செடிகள் நான்காண்டு வளர்ந்த பிறகுதான் கொட்டைகள் உற்பத்தியாகும். விவசாயிகளின் 4 ஆண்டு வாழ்க்கைக்குக் கடன் தந்தனர். 4 ஆண்டு அளவில் ஒரு ஏக்கருக்கு வருமானம் 50,000. அடுத்த ஆண்டு ரூ. 60,000. எல்லா நிலங்களிலும் கோக்கோ பயிரிட்டார்கள். சோளம் விளைந்த நிலங்களில் கோக்கோ

www.tamilarangam.net



மரங்கள் வளர்ந்தன. கோக்கோ பயிரிடுவோர்களுக்கு ஏரோ, மாடுகளோ, கலப்பைகளோ தேவையில்லை. அவர்கள் சோளம் பயிரிடவில்லை. ரொட்டி வாங்கினார்கள். பழைய வேளாண்மை முறை அழிந்துவிட்டது.

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு உங்கள் நாட்டுக் கோக்கோவின் தரம் சரியில்லை. எங்களுக்கு வேண்டாம் என்றார்கள். ஆப்பிரிக்க விவசாயி கோக்கோ கொட்டையை வைத்து என்ன செய்ய முடியும்? இரண்டு வருடம் இருப்பு வைத்துப் பார்த்தார்கள். சோளப் பயிருக்குத் திரும்புவதென்றால் கோக்கோ மரங்களை வெட்ட வேண்டும் வேர்களைத் தோண்டியெடுக்க வேண்டும். ஏக்கருக்கு ரூ. 15,000 செலவாகும். ஏர்ஓட்டுவதற்கு மாடுகள், கலப்பைகள், விதைகள் கிடையாது. இனி அந்த நாட்டில் பஞ்சம் வராமல் என்ன செய்யும்? கோக்கோ, மரங்களை வெட்டாமல் விட்டுவிட்டார்கள். இப்பொழுது நம் நாட்டில் சோயா பயிரிடுகிறோம். இதன் விளைவு நமக்கு என்னவாக இருக்கப் போகிறது? நாம் சிந்திக்க வேண்டும். பிலிப்பைன்சையும் இப்படித்தான் வாழைச் சாகுபடி என்று கெடுத்தார்கள்.

கேரளாவில் பெருமளவு இரப்பர் சாகுபடிக்கு மாறியிருக்கிறார்கள். அவர்கள் காய்கறி பயிரிடுவதில்லை. காய்கறிகளுக்கு அவர்கள் பொள்ளாச்சி வருகிறார்கள். மைசூரிலிருந்து காய்கறிகள் போனால்தான் அவர்கள் சமையல் செய்ய முடியும். கேரளாவில் உள்ள மாடுகள் புண்ணாக்குத் தின்னவேண்டுமானால் ஈரோட்டிலிருந்து சென்றாக வேண்டும் இப்படி இந்தியாவை மாற்றிவிட்டால் நிலைமை என்னவாகும்? உணவுத் தட்டுப்பாடு அதிகரிக்கும், வேலையில்லாத நிலைமை அதிகமாகும். நமக்கு, நம் குழந்தைகளுக்கு எதிர்காலம் இல்லை.

## தீர்வு என்ன? மாற்றுக்கள் என்ன?

இப்படி உலக மயமாதல் என்பது நமக்கு வேண்டாம். இதை நாம் எல்லோரும் எதிர்க்கிறோம். இதை எப்படி நாம் தடுப்பது? இதற்கு என்ன தீர்வு? யார் இதை செய்யப் போகிறார்கள்? செய்வதாகசசொல்லும் பிறர் இதைச் செய்வார்களா? தவிர இதற்கு என்ன மாற்று? என்று நாம் சிந்திக்க வேண்டும். தன்னார்வக் குழுக்கள் சில கருத்துக்களைச் சொல்கிறார்கள். அன்னியர்களை வெளியேற்ற வேண்டுமென்கிறார்கள். வெளியேற்றிபின்பு என்ன செய்வது என்று சொல்வதில்லை. இன்னும், சிலர் சிலவற்றில் தாராளமயம் ஏற்றுக்கொள்ளலாம், வேறு சிலவற்றில் வேண்டும் என்கிறார்கள். மத்திய தர வர்க்கத்தினருக்கு நவீன சாதனங்கள் வேண்டும். ஆனால் நாங்கள் வேலை செய்யும் நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். டாட்டா, பிர்லாக்கள், கீழே இருக்கட்டும். அன்னிய நிறுவனங்கள் எங்களைச் சாப்பிடக்கூடாது என்கின்றனர்.

www.tamilarangam.net



நாம் என்ன சொல்கிறோம். இவற்றை எதிர்ப்பதென்றும் மாற்றுக்களைக் கண்டு பிடிக்க வேண்டும். அமெரிக்க இராணுவம் இங்கில்லை. ஜப்பான் இராணுவம் இல்லை. கோல்கேட் வடிவில் இங்கு அவர்களின் இராணுவம் இருக்கிறது. பெட்டிக் கடைகளில் கூட கோல்கேட் வடிவில் அவனுடைய துப்பாக்கிகள் தாங்கிக் கொண்டுள்ளன. இதற்கு மாற்று என நம்மிடம் இல்லையா? ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே வழக்காகச் சொல்லி வைத்துள்ளனர். பல் குச்சி கேவலமாகி விட்டதா? பற்பசையைப் பயன்படுத்த வேண்டுமென்று இன்று மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

அடுத்து காலையில் சவரம் செய்வதற்கு இரு முனை பிளேடுகள் என்று தொழில் நுட்பம் நமக்குத் தேவைதானா? இதற்கு மாற்று நம்மிடம் இல்லையா. மழித்தல் பற்றி வள்ளுவர் சொல்லியுள்ளார். அந்தத் தொழில் நுட்பம் என்னாயிற்று? நம் கோயில்களில் மாக்கல்லில் அற்புதமான சிலைகள் செய்திருக்கிறார்கள். கல்லிலேயே கண்ணாடி அதில் முகம் பார்த்து தன் முடியைச் திருத்திக்கொள்ளும் பெண் உருவம் இந்த நுட்பத்தைக் கல்லில் கொண்டு வந்திருக்கிறார்கள். கண்ணாடியில் தெரியும் முடியின் முடிவில் நீர் முத்துக்கள் தெரிகின்றன. கை வளையலுக்குள் இருக்கும் மணிகள் தெரிகின்றன. மிகச் சிறந்த தொழில் நுட்பம் இங்கு இருந்திருக்க வேண்டும். இந்த அளவு நுட்பமாக கல்லைச் செதுக்குவதற்குரிய உளி இருந்திருக்க வேண்டும். கருங்கல்லில் செய்வதைக் காட்டிலும் மாக்கல்லில் இப்படிச் செய்யும் பொழுது அதில் வழித்து எடுக்கக் கூடியதாக உளி அமைய வேண்டும். இந்த நுட்பத்தை நாம் மீட்டெடுக்க வேண்டும். இதற்குரிய ஆய்வை நாம் செய்ய வேண்டும்.

அவசரமாக உணவு தயாரிக்க நூடில்ஸ் தற்பொழுது வந்துள்ளது. இதைத் தயாரிக்கும் "நெஸ்டில்" நிறுவனம் உலகத்திலலேயே மிகப்பெரிய உணவு பதப்படுத்தும் நிறுவனம். ஹார்லிக்ஸ் தயாரிக்கும் நிறுவனமும் இதுதான். நூடில்ஸ் விற்பனை விலை பத்துருபாய், ஏழு ரூபாய் அவனுக்கு லாபம். இதற்கு மாற்று என்ன? அவுள் இதற்கு நல்ல மாற்று. அவுள் வேண்டுமென்றால், ராகியில் நூடில்ஸ் செய்யமுடியும். ராகியில் இப்படிச் செய்வதற்கு நிறுவனமில்லை விளம்பரம் இல்லை.

நம் இளைய தலைமுறையை ஆட்டிவைக்கும் பேயாக இன்று கோக்கோகோலா இருக்கிறது. ஒரு பாட்டில் கோக்கோ கோலா விலை ரூ.15. ஆனால் நம்நாட்டில் பாலின் விலை ரூ.10. இதற்கு மாற்று நம்மிடம் உள்ள இளநீர் விலை ரூ.5. சுரண்டிக் கொஞ்சம் தேங்காயும் தின்னலாம். சிறுநீரகக் கோளாறும் நீங்கும். செல்லும் இடங்களுக்கு எடுத்துச் செல்லுமாறு இளநீரை பாட்டிலில் அடைக்க முடியாதா?

www.tamilarangam.net



அடுத்து வேளாண்மைத் துறையில் யூரியாவைத்தான் பயன்படுத்த வேண்டுமா? பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்த வேண்டுமென்று வேளாண்துறை நிபுணர்களே சொல்கிறார்கள். தொடர்ந்து பயன்படுத்துவதால் விளைச்சல் குறைவதோடு பூச்சிகளின் எதிர்ப்புதிறனும் கூடிவிட்டது. நன்மை செய்யும் பூச்சிகளையும் பூச்சிகொல்லிகள் அழித்துவிடுகின்றன. கேரள வேளாண்மைப் பல்கலைக்கழக ஆய்வின்படி நெல்விளைச்சல் 15% இதனால் குறைந்துவிட்டது. இதனால் காடும் கெடுகிறது, சோறும் கெடுகிறது. நம்மிடம் உள்ள வேம்பு எண்ணெய்தான் மாற்று. தவிர பசுமாட்டின் சாணம், பூஞ்சானை கட்டுபடுத்துகிறது. வசம்பு, துலுக்கு மல்லிச்செடி, நன்னாரி வேரும் ஒரு மாற்று. நம் வேளாண்துறை நிபுணர்கள் நம்மை முழுவதுமாக ஏமாற்றிவிட்டார்ள்.

இவற்றையெல்லாம் நாம் மீட்க வேண்டும். பழங்காலத்திற்குப் போகச் சொல்கிறீர்களா? என்று சிலர் சொல்வார்கள். இது உண்மையல்ல நாம் வளர்ந்த தொழில்நுட்பத்தில் நிற்கிறோம். கணணி மட்டும்தான் வளர்ந்த தொழில்நுட்பமல்ல. பாரம்பரிய முறையில் மேம்பட்ட தொழில் நுட்பம் நமக்கு இருந்தது. அவற்றை இன்றைய சூழலுக்கு ஏற்ற முறையில் பெரும்பான்மையான மக்களுக்கு பயன்படும் வகையில் மாற்ற வேண்டும். மேற்கத்தியத் தொழில்நுட்பம் கொடுமையான,அராஜகமான, விலையுயர்ந்த தொழில்நுட்பம். மனித குல விடுதலைக்கு எதிரானது. தேவைக்கேற்றபடி வேட்டியோ, கால்சட்டையோ நாம் அணிந்து கொள்ளலாம். கால்சட்டை போட்டக்கொண்டால், குடைபிடிக்ககூடாதா? துண்டு போடக்கூடாதா?

மருத்துவத் துறையில் நாம் பெருவளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம். நாடி பார்த்து நோய்களை நம் மருத்துவர்கள் கண்டறிந்தார்கள். மொழி இலக்கணத்தைப் பொறுத்தவரை நிலங்கள், விலங்குகள், பறவைகள், தொழில்வகைகள். இசைக்கருவிகள் எனப்பாகுபடுத்தி வளர்த்திருக்கிறோம். வாழ்க்கையைச் சொல்வது தொல்காப்பியர் கண்ட தமிழ் இலக்கணம். கட்டிடக்கலை முதலியவற்றில் பாரம்பரியத் தொழில்நுட்பம் சிறப்பாகவே உள்ளது. இன்னும் நம்மிடையில் இத்தகைய நிபுணர்கள் வாழ்ந்து கொண்டுள்ளனர். நமது உழவர்கள் மிகச்சிறந்த விஞ்ஞானிகள். வேளாண்மையில் மட்டுமல்லால் இயந்திரவியலிலும் தேர்ந்தவர்களாக உள்ளார்கள். வேலைக்கு செல்லும் பெண்களுக்கு இங்கு டி.வி.எஸ். வாகனத்தை அறிமுகப்படுத்தினார்கள். நமது விவசாயி அதை தமக்குரிய லாரியாக மாற்றியிருக்கிறார். சில மாற்றங்களைச் செய்து தக்காளிக் கூடைகள் பின்னால் ஐந்து, முன்னால் ஐந்து, இடப்புறம் ஐந்து, வலப்புறம் ஐந்து என எடுத்து செல்கிறார்கள். ஐ.ஐ.டி.யில் படித்தவர்கள் இந்த தொழில்நுட்பத்தை

www.tamilarangam.net



உருவாக்க முடியாது. நம் ஊர் விவசாயி கொல்லன் உதவியுடன் இதை செய்திருக்கிறார். ஆழ்குழாய் கிணற்றிலிருந்து நீரெடுக்க ஏர்கம்ப்ரஸரை இன்று பயன்படுத்துகிறார்கள். மூன்று ஆண்டுகள் பொறியியல் படித்த எனக்கே இதன் இயக்கம் புரியவில்லை. படிப்பறிவில்லாத நம் விவசாயிக்கு இதன் இயக்கம் புரிந்திருக்கிறது. பழைய இன்ஜின் ஒன்றை வாங்கிச் சிலமாற்றங்களைச் செய்து அதை ஏர்கம்ப்ரஸராக மாற்றியுள்ளார். ஏழாம் வகுப்பில் ஆங்கில அறிவில் தோல்வி அடைந்த மாணவனின் மூளை இதை உருவாக்கியுள்ளது. இது தான் தேசிய தொழில்நுட்பம். இதைவளர்த்தெடுக்க முடியாதா? டெக்ஸ்மோவில் 25,000ரூபாய் கொடுத்து வாங்கும் மோட்டாரை இவர்கள் ரூபாய் ஐயாயிரத்தில் வடிவமைத்துள்ளனர். மூன்று பேஸில் ஓடக்கூடிய மோட்டாரை இவர்கள் இரண்டு பேஸில் ஓட்டுகிறார்கள். நிறுவனத்திலிருந்து வருபவர் அதிசயப்படுகிறார்.

ஆழ்துளைக் கிணறு போடும் நீரியல் இயந்திரத்தின் விலை 14 இலட்சம் ரூபாய். வல்லரசின் தொழில்நுட்ப இயந்திரம். இந்த இயந்திரத்தை திருச்செங்கோட்டில் உள்ள விவசாயி ரூ. 6 இலட்சத்தில் உருவாக்கியுள்ளார். 5 ஆண்டுகளாக இந்த இயந்திரம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆண்டனாவை நம் இளைஞர்கள் குறைந்த செலவில் உருவாக்குகிறார்கள்.

இவ்வாறெல்லாம் செய்தால் மட்டுமே ஏகாதிபத்யத்தை வெளியேற்ற முடியும். கோல்கேட், கோக்கோ கோலா, நூடுல்ஸ் முதலியவற்றை நாம் வெளியேற்றினால் அமெரிக்காவை பெரும்பகுதி வெளியேற்றிவிடலாம். இப்படிச்செய்ய முடியுமானால் அமெரிக்காவின் அணுகுண்டு நமக்குத் தூசு மாதிரி. காண்வெண்டில் படிக்கும் மாணவனால் மாற்று தொழில் நுட்பத்தை உருவாக்க முடியாது. மரபு முறையில் இருந்த தொழில் நுட்பங்களை உள்வாங்கி கொண்டவனால்தான் இங்கே உருவாக்க முடியும். தாவரங்கள் சூரிய ஒளியை தமக்குத் தேவையான ஆற்றலாக மாற்றுவது எப்படி என்று சிந்திக்கும் மாணவனால்தான் இதைச்செய்ய முடியும். நமக்கு அணு உலை வேண்டாம். சூரிய ஒளி போதும். இராமர் பெட்ரோலைக் கண்டுபிடித்தது உண்மையோ பொய்யோ நமக்கு தெரியாது. இங்கேயுள்ள தாவரங்களில் இத்தகைய ஆற்றல் இருக்கிறது. பொதிகை, கொல்லி மலைகளில் அற்புதமான தாவர வகைகள், மூலிகைகள் இருக்கின்றன. மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கக் கூடிய கல்விதான் இத்தகைய அறிவை மாணவர்களுக்குத் தரும். இந்தக் கல்வியை ஆங்கிலத்திலோ, இந்தியிலோ தரமுடியாது. தமிழில்தான் இதை கற்றுத்தர முடியும். தமிழ் வழிக் கல்வி வந்தால்தான் பாரம்பரியத்தை மீட்டெடுக்க முடியும்.

www.tamilarangam.net



தமிழ்க்கல்வி மூலம்தான், நம் தமிழ்ப்பண்பாட்டையும் மீட்டெடுக்க முடியும். புதியவர்கள் வீட்டுக்கு வந்தால் தண்ணீர் கொடுப்பது நம் பண்பாடு. உணவு, வீடு என எல்லாவற்றிலும் நமக்கென சில பண்பாடுகள் இருக்கின்றன. வாழ்வியலுக்கு தேவையானதாக நம் பண்பாடு இருக்கிறது.

## தேசிய இயக்கத்தின் தேவை

இவ்வாறெல்லாம் எல்லாத்துறைகளிலும் நம் தொழில்நுட்பம், கல்வி பண்பாடு ஆகியவற்றை மீட்டு அமைக்கும் முறையில் ஒரு தேசிய இயக்கம் தேவை. பிரான்சு முதலிய நாடுகளில் இதைத்தான் முதலில் செய்தார்கள். ஆங்கில ஏகாதிபத்தியத்தால் நமக்குள் திணிக்கப்பட்ட பண்பாட்டோடு வடக்கிலிருந்து வந்த சாதியப் பண்பாடு நம்மை கூறுபோட்டு அழிக்கிறது. தமிழ்ச் சமுதாயத்தைக் கூறு போடுகிற பார்ப்பனியப் பண்பாட்டை அழித்தொழிக்காமல் தேசிய இயக்கத்தைக் கட்ட முடியாது. செட்டியார் சங்கம், கவுண்டர் சங்கம், தாழ்த்தபட்டவர் சங்கம் என்று கட்டபடும் அமைப்புகள் தமிழ்த்தேசியத்திற்கு வழிவிடாது. பார்ப்பனியப் பண்பாட்டை ஒழித்தால்தான் தமிழ்த்தேசியம் என்பதை உழவர் வாழ்க்கையோடு இணைக்க முடியும், கலைஞருடைய அரசு இந்த தேசியப் பண்பாட்டைச் சாதிக்க முடியாது.

ஸ்டெர்லைட் ஆலையைத் தூத்துக்குடியை விட்டு வெளியேற்ற இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை. தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை இவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. இரயில் பயணச்சீட்டைக் கூட தமிழில் மாற்ற முடியவில்லை. காவடி தூக்குகிற அரசால் இதையெல்லாம் செய்யமுடியாது. ஏகாதிபத்தியத்தை வெளியேற்ற ஜனதாக் கட்சியால் முடியுமா? தமிழ்க் கல்வியை இவர்கள் செயல்படுத்துவார்களா? மாட்டார்கள். செய்யமுடியாது காரணம் இங்கிருக்கிற ஆளும் வர்க்கம், நிலக்கிழாரிய, பார்பனிய ஆளும் வர்க்கங்களின் பிரதிநிகளாகத்தான் இவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தரகர்கள். வல்லரசுக்களை அழைத்துக் கொண்டு வந்து இங்கிருக்கும் முதலாளிகளோடு பேரம் பேச வைப்பவர்கள் இவர்கள். இந்தியக் கட்டமைப்பு சிதைந்து போகாமல் பார்பணியக் கலாச்சாரத்தைக் காப்பாற்றுவதன் மூலம் பெரிய சந்தையை வளர்கிறார்கள். போலிப் பொதுவுடைமையர்களும் இதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அன்னிய நிறுவனங்களை இவர்கள் தனிப்பட்ட முறையில், ஆட்சியில் பங்கு பெறுபவர்கள் என்ற முறையில் ஏற்றுக் கொள்கிறார்கள்.

தேசிய இயக்கத்தைத் தலைமையேற்று நடத்தக்கூடிய ஆற்றல் மிகுந்தவர்களாக யார் இருக்க முடியும்? தன்னார்வக் குழுக்கள் இதைச் செய்வார்களா? இவர்கள் எதிர்ப்பார்கள். ஆனால் மாற்றுக்கள்

www.tamilarangam.net



பற்றி இவர்களுக்கு தெரியாது. இந்நிலையில் வல்லரசிய எதிர்ப்பு உணர்வுக்கு வடிகால் அமைப்பவர்கள் இவர்கள். வல்லரசின் கைக்கூலிகள் இவர்கள். இங்கிருக்கிற மாவெ குழுக்கள்தான் உண்மையிலே வல்லரசியத்தை எதிர்க்கிறார்கள். பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் ஒரு வேளாண்மை புரட்சியை இவர்கள் செய்ய விரும்புகிறார்கள். சாதிய சமூக அமைப்பைத் தகர்க்க இவர்கள் முனைந்து இருக்கிறார்கள். இவர்கள் இந்தியா முழுவதற்க்கும் ஒரு கட்சியைக் கட்டி ஏகாதிபத்தியத்தை ஒழிக்க விரும்புகிறார்கள். இவர்கள் எப்படி தேசிய இயக்கத்தைக் கட்ட முடியும்? கோக்கோ கோலாவை எதிர்பதற்க்கு இளநீர் காவடி எடுக்கிறார்கள். இதை காஷ்மீரிலும் பஞ்சாபிலும் செய்ய முடியாது. அங்கும் இதைச்செய்ய வேண்டுமானல் அங்குள்ள தேசிய மரபோடு ஒத்துச் செல்ல வேண்டும். அங்கு வேறு வடிவில் தேசிய இயக்கத்தைக் கட்ட வேண்டும். பல்வேறு தேசிய இயக்கங்களின் கூட்டமைப்பை கட்டுவதுதான் அறிவுடைமை. வெட்டிக்கொள்கிற உரிமையோடு ஒட்டிக்கொண்டு தமிழகத்தில் புரட்சியைச் சாதிக்கலாம் என்றும் சிலர் சொல்கிறார்கள். ஆனால் வெட்டிக்கொள்கிற இந்த உரிமையைத் தருவது யார்? தமிழ்த் தேசிய இனம் தனக்குச் சாதகமான நிலை உருவாகும் போது நான் வெட்டிக் கொள்கிறேன் என்று சொன்னால் இந்த உரிமையைத் தருவது யார்?

கேரள தேசிய இனம் தான் அடிமைப்பட்ட நிலையில் இப்படிச்சொல்ல முடியுமா? ஆந்திராவில் உள்ள மக்கள் போர்க்குழு இதைச் சொல்ல முடியுமா? வெட்டிக் கொள்கிற உரிமையை வழங்கக்கூடிய ஆற்றல் இந்தியாவில் உள்ள எந்தத் தேசிய இனத்திற்க்கும் இல்லை. காரணம் இந்தியாவில் உள்ள ஒடுக்குமுறை ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இங்கே தேசிய இனங்கள் இருக்கின்றன. ஆனால் ஒடுக்கும் தேசிய இனம் இல்லை. இந்தி மொழி நம்மை ஒடுக்குகிறது. சாதியப் பண்பாடு நம்மை ஒடுக்குகிறது. இந்திக்கும் சாதியப் பண்பாட்டிற்கும் இடையில் உள்ள தொடர்பு பார்ப்பனியப் பண்பாடு. இந்தி என்பது சமஸ்கிருத்தின் இன்னொரு வடிவம். பார்ப்பனியத்தின் இன்னொரு வடிவம். இன்று மொழியைச் செழுமைப்படுத்தும் முறையில் தொடர்ந்து சமஸ்கிருதமாக்கபடுகிறது. சாதியப்பண்பாடுதான் இந்தியாவை இணைத்திருக்கிறது. காஷ்மீரில் மேல்சாதிக்காரன் என்பவன் பார்ப்பனன். கன்யாகுமரியிலும் இவன் பார்ப்பனன். காஷ்மீரில் ஒடுக்கப்படும் மக்கள் சூத்திரர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள். கன்னியாகுமரியிலும் இவர்கள்தான். இப்படித்தான் இங்கு ஒருமைப்பாடு நிலவுகிறது. தேசிய ஒடுக்குமுறையின் தனித்தன்மையாகிய பார்ப்பனியத்தை உடைத்தால்தான் தேசிய இயக்கம் வளரும். இந்தியை எடுத்தால்தான் தமிழ் வளரும். தமிழ் மக்களின் வாழ்நிலை உயரும்.

www.tamilarangam.net



இந்தியை எடு என்ற முழக்கமும் இந்தியவை உடை என்ற முழக்கமும் ஒன்றுதான். வெட்டுவது ஒட்டுவது என்றால் எதுவும் இல்லை. இந்த திட்டம் தமிழ்த் தேசியத்திற்கான திட்டம். தமிழ்த்தேசிய அரசு தான் வல்லரசியத்தை வீழ்த்த முடியும். பாட்டாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட்ட, இங்கிருக்கும் பெரும்பான்மையான மக்கள், உழவர்களையும் உழவுத்தொழிலாளர்களையும் இணைத்துக் கொண்டு, நிலவுடைமையில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலையை முன்வைக்கிற, திட்டத்தைச் செயல்படுத்தகிற புரட்சியின் மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுகிற அரசாக இருக்கும். அந்த புரட்சித் தமிழ்த் தேசிய அரசுதான் உலகைச் சுரண்டுகிற வல்லரசியத்திற்கு முடிவு கட்ட முடியும்.

(15.2.97 அன்று நிகழ்த்தப்பட்ட பேருரை)

## கேள்வி நேரம்

**ஞானி** 1.அன்னிய நிறுவனங்கள் தொழில் வேளாண்மை மருத்துவம் முதலிய பல்வேறு துறைகளில் ஒவ்வொரு நாளும் வந்து புகுகின்றன. இவை பற்றி தொடர்ந்து வெளிவரும் விபரங்கள் நமக்கு அச்சம் தருகின்றன. இவற்றை நாம் தொடர்ந்து தொகுக்க வேண்டும்.

2. அன்னிய நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் சாதனங்களுக்கு நமது மரபில் இன்னும் தொடர்கிற அல்லது நாம் படைத்துக் கொள்கிற மாற்றுக்கள் எவை என்பது பற்றி நாம் தொடர்ந்து பார்க்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மாற்றுக்கள் உண்டா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

3. மேற்கத்திய நாடுகளிலிருந்து நமக்கு வந்து சேர்ந்திருக்கிற அரசியல் நிறுவனங்கள் ஜனநாயகம் என்ற ஆட்சிமுறை, கட்சி அமைப்பு முதலியவற்றையும் உள்ளடக்கி இவற்றையே நாம் வைத்திருக்க வேண்டுமா இவற்றுக்கு மாற்றுக்கள் தேட வேண்டுமா என்று நாம் பார்க்க வேண்டும்.

**அறிவன்** : காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நம்மை ஒடுக்குவது பார்ப்பனீயம் என்றால் இந்தப் பார்ப்பனீயத்திற்கு ஆதரமாக இருக்கக்கூடிய பொருளியல் என்று எதையாவது குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? பார்ப்பனீயம் என்பது கருத்தியலா அன்றியும் பொருளியலா?

**தமிழ்நெஞ்சன்** : நம் வாழ்வுக்குள் எவ்வளவோ நவீன சாதனங்கள் நுழைந்து விட்டன. இவை எல்லாவற்றுக்கும் இன்று மாற்றுக்கள் உண்டா? புதியதாக அமைத்துக் கொள்ளமுடியுமா? கோல்கேட்டுக்கு மாற்று பல்குச்சி அல்லது பல்பொடி டெரிகாட்டனுக்கு மாற்று பருத்தி ஆடை. பருத்தி ஆடைக்கு இப்பொழுது மாற முடியுமா.

வேணுகோபால் :எங்கள் தேனி, கம்பம், பகுதியில் குறிப்பிட்ட ஒரு வகைச் செடி நன்கு வளர்ந்திருக்குமானால், அந்த இடத்தில் தோண்டினால் நீர் கிடைக்கும் என்பது என் தாத்தாவின் அனுபவம்.

www.tamilarangam.net



அன்னிய உற்பத்திக் கருவியாகிய டிராக்டர் முதலியவற்றிற்கு நம்மிடம் மாற்று உண்டா? அவற்றோடு நாம் போட்டியிட முடியுமா? நான் தமிழ் படித்ததால் பேராசிரியராக முடியவில்லை. என் மகனுக்கு இந்த நிலை வரக் கூடாது. அவன் ஆங்கிலம் கற்றுக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். என் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் மொழிக்கும் என்ன உறவு இருக்க வேண்டும்? படித்திருந்தாலும் நான் விவசாயம் பார்க்கிறேன் என் மகன் அவ்வாறு செய்யமுடியாது.

**அறிவன்** : தொழில், வேளாண்மை, மருத்துவம், கல்வி ஆகியவற்றில் இன்றைக்கும் இருக்கிற மாற்றுக்களை நாம் ஒப்புக் கொள்கிறோம். அரசு ஒப்புக்கொள்வதில்லை. நாம் இன்று மிக்ச் சிலராகத்தான் இருக்கிறோம். மேலும் தேடி புதிய மாற்றுக்களைக் கண்டுபிடிக்க வேண்டும். பிறகு இத்தகையவர்களை இணைத்து இயக்கம் காணவேண்டும். இவர்கள் இன்றுள்ள கட்சி அமைப்புகளுடன் மோத முடியுமா? ஆக எங்கே தொடங்குவது எப்படி என்று சிந்திக்க வேண்டும். நாம் சிலரேனும் இவற்றையெல்லாம் கடைப்பிடிக்கத் துவங்கலாமா. தனி மனிதர்கள் கூடி ஒரு இயக்கமாகி மேற்கத்திய நாகரீகம் அறவே வேண்டாம், என்று ஒதுக்கிவிட்டு, ஒரு புதிய, எளிய வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கலாமா இப்படியும் கேள்விகள் எழுகின்றன. சோப்புக்குப் பதிலாக கடலை மாவைப் பயன்படுத்தலாம். இது உடலுக்கு ஆரோக்கியமானது தான். ஆனால் நாகரிகம் என்ற பெயரில் மனிதர்களை ஆக்கிரமித்துள்ள போக்கைக் களைய நாம் என்ன செய்ய வேண்டும்? யூரியா முதலியவற்றை ஒதுக்கிவிட்டு இயற்கை வேளாண்மைக்குத் திரும்புவதென்றால் இன்றைய நிலையில் அது சாத்தியமா? கால்நடைகளை யெல்லாம் வேளாண்மையில் இருந்து ஒதுக்கிவிட்ட நிலையில் தொழு உரம் முதலியவற்றிற்கு நாம் செல்ல முடியாது.

**தமிழ்நாடன்** : 1. ஒடுக்கும் தேசிய இனம் என்பது பண்பாட்டிலும் பொருளியலிலும், அரசியலிலும் தன் ஒடுக்குமுறையைப் பிற தேசிய இனங்கள் மீது செலுத்தும். பிற தேசிய இனங்களின் அரசியல் உரிமையைப் பார்ப்பனீயம் பறிக்கிறது. இந்தியாவிலுள்ள முதலாளிய அமைப்பினுள்ளும் சாதியம் நுழைந்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களில் முதலாளிகள் எழவில்லை. இந்தியாவில் தோன்றிய முதலாளிகள் மார்வாடி- களிடமிருந்தும் பார்ப்பனர்களிடமிருந்தும் தான் முதலில் தோன்றி இந்தியாவில் தோன்றிய முதலாளியம் சூத்திரன் தவிர்த்தவர்களின் முதலாளியம் தான். இன்றுள்ள தரகு முதலாளிகள் நிலக்கிழாரியத்தில் உள்ள சாதிமுறையைக் கட்டிக் காப்பாற்றுகிறார்கள். தரகு முதலாளிகள்

www.tamilarangam.net



இரு பிறப்பாளர்கள். இவர்களுக்கு இந்தியா என்று பெரிய சந்தை தேவைப்படுகிறது. இந்தியாவிலுள்ள சாதிமுறையோடு கூடிய நிலக்கிழரிய உறவு முறை பாதுகாக்கப்பட்டால்தான் பார்ப்பனர்களின் சாதி மேலாண்மை காக்கப்படும். இதற்கு மாறாக இங்கு வேளாண்மைப் புரட்சி நடைபெறுமானால் சாதிய முறை தகர்க்கப்பட்டுவிடும். ஆக உற்பத்தி முறையில் முதலாளிய முறை வந்துவிடக்கூடாது என்பதில் பார்ப்பனர்களின் நலன் உள்ளடங்கியுள்ளது. இம்முறையில் தான் அரசதிகாரம் பார்ப்பனர் கையில் உள்ளது. பிற தேசிய இனங்களின் மீது இத்தகைய ஒடுக்குமுறையைச் செயல்படுத்துவதற்கு இவர்களுக்கு இந்தி மொழி தேவைப்படுகிறது. பார்ப்பனர்கள் தமக்குரிய சமஸ்கிருத மொழியை இன்று எடுத்துச் செல்ல முடியாது. சமஸ்கிருதத்தில் உள்ள புராணங்கள் முதலியவைகள் இன்றும் இவர்களுக்குத் தேவைப்படுகின்றன. இந்துஸ்தான் மோட்டார் என்று இவன் பெயர் தருவது எதற்காக? இவ்வாறு அரசியல் பொருளியல் பண்பாடு அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனியம் செயல்படுகிறது.

சர்வரோக நிவாரணி போல எல்லாவற்றிலும் பார்ப்பனியம் ஊருடுவி இருக்கிறது. குழந்தைக்குப் பெயர் வைப்பது, வீடு கட்டினால் புண்ணிய அர்ச்சனை செய்வது, வங்கிகளில் வெள்ளிக்கிழமை பூசை செய்வது, இந்திய சுதந்திர நாளையும், நேரத்தையும் தீர்மானிப்பது என எல்லாவற்றையும் பார்ப்பனியம் தீர்மானிக்கிறது.

2. மாற்றுக்களே முன்வைப்பதென்பது தனிமனிதனிலிருந்து அல்ல இது தேசிய வடிவம் எடுக்க வேண்டும். இது ஏகாதிபத்தியத்தை விரட்ட மட்டுமல்ல. அடுத்து சோசலிசத்தைக் கட்டுவதற்கும் இது பயன்பட வேண்டும். கோல்கேட்டிற்குப் பதிலாக பல்குச்சியை மட்டும் கொண்டு வருவதல்ல. இந்த இயக்கத்தின்மூலம் அரசதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். புரட்சிகர பாட்டாளி வர்க்க அரசை நிர்மானிப்பதோடு இந்த இயக்கத்தை இணைக்க வேண்டும். இங்குதான் மாற்றுக்களே உற்பத்தி செய்வது பற்றிப் பேசுகிறோம். இவ்வகை உற்பத்தியில் முதலாளிகளும் கூட இருக்கலாம்.

தேசிய முதலாளிகளாக இவர்கள் இருப்பார்களானால் தமிழ்த் தேசிய நலனை இவர்கள் முன்னெடுத்துச் செல்ல முடியும். இவர்கள் சாதிமுறையை, நிலக்கிழாரிய முறையை எதிர்ப்பவர்களாக இருக்க வேண்டும். பார்ப்பனியத்தோடு கைகோர்த்துக் கொள்ளாதவன் தான் தேசிய முதலாளி. இங்கிருப்பவன் தரகு முதலாளிதான். ஆகவே தேசிய முதலாளிதான் என்ற கற்பனை நமக்கு வேண்டாம். இன்றைய நிலேயில் பாட்டாளி வர்க்கம் என்று சொல்லப்படுபவர்களுக்குள்ளும் சாதி உணர்வு இருக்கலாம். ஆனால் அந்த சாதி உணர்வுக் கெதிராகப் போராடுபவனைத் தான் நாம் பாட்டாளி என்று சொல்கிறோம். மார்வாடிகள் எல்லோரையும் நாம் எதிர்ப்பதில்லை. கூலிக்காரர்களாக

www.tamilarangam.net



இருக்கும் மார்வாடிகளை நாம் எப்படி எதிர்க்க முடியும்? ஒரு கவுண்டர் கூலித் தொழிலாளியாக இருக்கலாம். அவர் கூலித் தொழிலாளி என்பதைத்தான் நாம் பார்க்கவேண்டும். அதாவது நமக்குச் சாதிப்பார்வை வேண்டாம் வர்க்கப் பார்வை தான் வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பவர்கள் சாதி உணர்வோடு இருந்தாலும் இல்லா - விட்டாலும் பாட்டாளிகள்தான். அவர்களை இந்த இயக்கத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று தோழர் கருப்புசாமி சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தற்காப்புக்காக வைத்துக் கொள்ளுகின்ற சாதிச் சங்கங்களை குறை கூற முடியாது.

**கருப்புசாமி** : மலையாளமும், கன்னடமும், தெலுங்கும் சமக்கிருதச் சொற்களை அதிக அளவில் உள்வாங்கிக் கொண்டு தமிழ்ச்சொற்களை வெளியேற்றின. அப்படியானால் மலையாளிகள் முதலியவர்கள் அதிக அளவில் பார்ப்பனியத்திற்கு இடங் கொடுத்தார்கள். அன்றியும் அவர்கள் தங்கள் மாநிலங்களிலிருந்து தமிழ் மக்களைத் துரத்துகிறார்கள். தமிழகத்திற்குள்ளிருந்து மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் பேசுபவர்களும், தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் ஆதரவாக இல்லை. அப்படியானால் பார்ப்பனிய வயப்பட்ட இவர்களை நாம் என்ன செய்வது? சமக்கிருதம் எப்படி ஆதிக்க மொழியாக இருந்ததோ அதேபோல திராவிட மொழிகளில் இருக்கும் மலையாளமும், தெலுங்கும், கன்னடமும் தமிழின் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கின்றன.

www.tamilarangam.net



## ஏகாதிபத்திய எதிர்ப்பும், தமிழ்த்தேசியமும்

### எஸ். என். நாகராசன் – நேர்காணல்

(கேள்விகள் : ஞானி, குமரவேல், மருதுபாண்டியன்)

**கேள்வி :**

தமிழ்நாட்டில் இன்று தமிழ்த் தேசியம் என்ற கருத்து அதிகமாகப் பேசப்படுகிறது. குறிப்பாகச் சில இயக்கங்கள் மிகவும் தீவிரமாகப் பேசுகின்றன. தமிழ்த் தேசியத்தை மையமாகக் கொண்ட அரசியல் கட்சிகள் இல்லை என்றாலும் இளைஞர் இயக்கங்கள் பரவலாக உள்ளன. தமிழ்த் தேசியம் என்பது தன்னுரிமை அல்லது சுயநிர்ணய உரிமை என்றும் சில சமயம் விடுதலை என்றும் சொல்கின்றனர். இன்று மைய அரசு தமிழ்நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. மார்வாடிகளோடு அன்னிய நாட்டு பன்னாட்டு நிறுவனங்களும் ஆதிக்கம் செய்கின்றன. இயற்கை நாசமாகிறது. விவசாயம் அழிகின்றது. இந்த மாதிரி ஒரு சூழலில் தமிழ்த்தேசியம் என்ற குரல் எழுந்துள்ளது. பெண்ணியம் தலித்தியம் பேசுபவர்களும் தமிழ்த்தேசியம் பேசுகின்றனர். விடுதலை இறையியல் என்று பேசுபவர்களும் தமிழ்த் தேசியம் என்ற கருத்திற்கு வந்து சேர்ந்துள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று ஈழத்தில் தீவிரப்படுவதுபோல அதற்கு இணையான உணர்வெழுச்சி தமிழ்நாட்டிலும் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்த்தேசியம் என்ற கருத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. 1937 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினை தந்தை பெரியார் அவர்கள் தொடங்கியபோதே "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற குரல் எழுந்தது. 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று சொன்னது கூட, திராவிடன் என்று சொன்னாலும் அதுவும் தமிழன் என்றுதான் அர்த்தம், என்று பின்னாளில் ஈ.வெ.கி. சம்பத் போன்றவர்கள் சொன்னார்கள். ஒரு வகையில் அண்ணாதுரை அவர்கள் திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டதைக்கூட இந்த அடிப்படையில் நாம் புரிந்து கொள்ள முடியும். தேசிய இனப் பிரச்சினை என்பது தமிழ்நாட்டுக்கு மட்டும் வந்துள்ள பிரச்சினையல்ல. உலகில் பல நாடுகளில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அதனுடைய வரலாறு என்பது மிக நீண்டது. சோவியத் யூனியனில் லெனின், ஸ்டாலின் போன்றவர்கள் இதனை எப்படிப் பார்த்தார்கள் என்பதெல்லாம் இருக்கிறது. நீங்கள் 1968 சமயத்தில் தேசிய இனப் பிரச்சினைக்கு அதிக அழுத்தம் கொடுத்தீர்கள். இன்றைக்கு நாங்கள் பேசுகின்ற அதே வடிவத்தில் ஒரு காலத்தில் நீங்கள் பேசினீர்கள் சில சமயம் ஒப்புக் கொண்டீர்கள், சில காலம் ஒப்புக் கொள்ளாமல்

www.tamilarangam.net



இருந்திருக்கிறீர்கள். ஆகவே இந்தப் பிரச்சினையில் நமது இளைஞர்கள் தெளிவு பெற வேண்டியது மிகவும் அவசியம்.

பெருஞ்சித்திரனார் அவர்களோடு உங்களுக்குப் பழக்கம் இருந்தது. பெருஞ்சித்திரனாரைப் பொறுத்தவரை தமிழ்மொழி மிகவும் சிறப்பு வாய்ந்தது, தமிழ் இனம் மிகவும் தொன்மையானது. உலகிற்கெல்லாம் முதல்மொழி தமிழ்தான் என்ற பாவாணர் அவர்களின் குரலையெல்லாம் எதிரொலிக்கிறார். அவர்கள் வட்டத்தில் மொழி இனம் என்பவற்றிற்கு அதிக அழுத்தம் கொடுக்கின்றனர். பொருளியலுக்கு அழுத்தம் கொடுப்பதில்லை. மார்க்சியவாதி என்பவர் மொழி, இனம் இவற்றை மறுக்காவிட்டாலும் பொருளியலுக்கு அழுத்தம் கொடுத்தாக வேண்டும்.

இந்தப் போக்குகளையெல்லாம் அடிப்படையாக வைத்து நாம் மேலும் நகர வேண்டும். இன்று தி.மு.கழகம் ஆட்சியைப் பிடித்துள்ளது. தமிழ்த் தீவிரவாதம் எங்களுக்கு உடன்பாடில்லை, நாங்கள் அதற்கு எதிரிதான் என்று கருணாநிதி அறிவித்திருக்கின்றார். இந்தச் சூழலையெல்லாம் கணக்கில்கொண்டு இன்றைய தமிழகத்தில் தேசிய இன உணர்வை வளர்த்தெடுக்க வேண்டியிருக்கிறது.

தேசிய இனம் குறித்து உங்கள் கருத்தென்ன? இலெனின், ஸ்டாலின் போன்றவர்களின் கருத்துக்களோடு உங்களுக்கு இன்னும் உடன்பாடு உண்டா? சோவியத்யூ னியனில் இந்தப் பிரச்சினையினை எப்படிக் கையாண்டார்கள்? இந்தியாவில் ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சி இதற்கு முதலில் சார்பாக இருந்தது பின்னர் எப்படி அந்தப் பிரச்சினையைக் கைவிட்டது? மார்க்சிய லெனிய இயக்கங்களில் இந்தப் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்பட்டதா? திராவிட இயக்கம் பற்றி மார்க்சியவாதி என்ற முறையில் உங்கள் கருத்தென்ன? இவை பற்றியெல்லாம் உங்கள் கருத்துக்களைத் தொகுத்து நீங்கள் சொல்லலாம்.

**பதில் :** தேசிய இனப் பிரச்சினை என்பது மக்களுடைய உரிமையின் ஒரு அங்கம். ஒரு நாட்டில் ஒரு தேசிய இனம் மட்டும் இருந்தால் பிரச்சினை இருக்காது. பல தேசிய இனங்கள் இருக்கும்போது இந்த மக்கள் அனைவரும் விடுதலை பெற்றாக வேண்டும். குறிப்பாக இந்தப் பிரச்சினையில் யார் விடுதலை இயக்கத்தைக் கட்டுகிறார்கள் என்று நாம் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் குட்டி முதலாளிகள் இந்தப் பிரச்சினையை எடுத்தார்கள் உதாரணமாக திராவிட முன்னேற்றக் கழகம்.

“வடக்கு வாழ்கிறது
தெற்கு தேய்கிறது
நாம் இரண்டாம் தரக்குடிமக்களல்ல”, என்றெல்லாம்

பேசினார்கள். அவர்கள் குறிப்பாக யாரைப் பிரதிபலித்தார்கள்? தமிழகத்தின் தேசிய முதலாளிகளை அதாவது டாட்டா, பிர்லா இங்கு வரக்கூடாது. நம் நாட்டு வளர்ச்சிக்கு உதவக்கூடிய மகாலிங்கம்,

www.tamilarangam.net



டி.வி.டி.விசுந்தரமய்யங்கார், அப்புறம் சினிமாக்காரர்கள் ஆகியவர்களின் நலன்களை இவர்கள் பிரதிபலித்தார்கள. அன்று நம் நாடு தென்றல், முரசொலி இப்படியெல்லாம் பத்திரிக்கைகள் வந்தன. திராவிட நாடு என்று சொன்னதெல்லாம் ஒரு காலத்தோடு போய்விட்டது. 1956-57 ல் முதன்முதலில் சத்தியமங்கலத்தில் திரு. சம்பத் அவர்களச் சந்தித்தேன். அவர் என்னிடம் நீங்கள் ஏன் திராவிடர் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கக்கூடாது? என்று கேட்டார். அதற்கு நான் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி என்றுதான் பார்க்கமுடியும் உதாரணமாக ஆந்திரம், கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு எனத் தனித் தனி தேசிய இனங்கள் வாழக்கூடிய நாடோ அது போலத்தான் திராவிடநாடும் பல தேசிய இனங்களைக் கொண்டது. என்று சொன்னேன்.

அன்றைக்கு நான் அப்படிச் சொன்னதற்கு என்ன காரணம்? இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களும் விடுதலை பெற்ற மக்களாக மாற வேண்டும் அது எப்படி? என்பதுதான் அன்றும் இன்றும் நம்முன் உள்ள சிக்கல், அதைப் போலவே உலகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் விடுதலை பெற்றாக வேண்டும். அப்படியென்றால் உலகெங்கும் உள்ள மக்கள் தங்கள் விடுதலைக்கான போராட்டத்தில் யார்யாரை எதிர்க்க வேண்டும். யார் யாரோடு சேர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவில் மைய அரசை எதிர்த்துத்தான் நாம் போராடவேண்டும். அப்படியென்றால் மைய அரசின் சக்தி எங்கே இருக்கிறது? இராணுவத்தில் இருக்கிறது. ஆக இந்தஇராணுவத்தை எதிர்த்துப் போராட வேண்டும். அதுதான் இலக்கு. சரி இந்த இராணுவத்தை யார் எதிர்ப்பது? எப்படிப்பட்ட இராணுவத்தின் மூலம் அதைச் சாதிப்பது? அனைத்திந்திய அளவில் ஒரு மக்கள் விடுதலைப்படை என்று பேச முடியுமா? படை கட்ட முடியுமா? ஏனென்றால் இந்தப்படை எத்தனை மொழிகளில் பேசிக் கொள்ளும். இந்தியாவில் மொத்தம் 18 மொழிகள் பேசப் படுகின்றன. தமிழ் தெரிந்தவர்களுக்குக் கன்னடம் தெரியாது. பஞ்சாப்காரருக்கு இந்தி தெரியாது. வங்காளிக்கு தெலுங்கு தெரியாது. மக்களுடன் அந்த இராணும் பேசியாக வேண்டும். மக்களுடன் வேச நாடகம், கூத்து, போன்றவையெல்லாம், நடத்திக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் ஒரு மக்கள்படை என்றுதான் இருக்க முடியும்.

கேள்வி : இவர்களுக்குள் ஏதாவது ஐக்கியம் வைத்துக் கொள்ள முடியாதா?

பதில் : வியட்நாம் மீது அமெரிக்கா படையெடுத்தது. "அமெரிக்காவே வியட்நாமை விட்டு வெளியேறு" என்று சொல்லி இங்கு இயக்கம் நடத்தினோம். இன்றைக்கு வியட்நாம் நாளை நாம்

www.tamilarangam.net



தனிமைப் படுத்த வேண்டும். அமெரிக்க நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் இயக்கம்

"வியட்நாம் மீது படையெடுக்காதே

நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என குரல் கொடுத்தது. அதே போல இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் தேசிய இன மக்களை மைய அரசு ஒடுக்கும்போது நாம் இங்கிருந்து குரல் எழுப்ப வேண்டும். அதைப் போல எங்கு இராணுவ நடவடிக்கை என்றாலும் அதை எதிர்த்து அந்த ந்த நதட்டின் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் மக்களைத் திரட்டி எதிர்க்க வேண்டும். வியட்நாமில் அமெரிக்க இராணுவம் இறங்கியபொழுது

"வியட் நாம் செல்லாதே

இந்நாட்டில் உள்ள வெள்ளையர்கள் மட்டுமல்ல

நீக்ரோக்களும் அங்கு

இராணுவத்தினராகச் செல்ல மாட்டோம்", என்று முழங்கி பெரிய அளவுக்குக் கருத்துப் பரப்பலும், போராட்டமும் செய்தார்கள். சும்மா வாயில் மட்டும் ஒற்றுமை, ஐக்கியம் என்று சொன்னால் போதாது. கேள்வி தேசிய ஒருமைப்பாடு? இங்கே இரண்டு தேசியங்கள் இருக்கின்றன.

1. ஆதிக்கம் செலுத்துபவர்களின் கொள்ளையடிக்கிற தேசியம். டாட்டா, பிர்லா, கோயங்கோ, ஜி.டி.நாயுடு, கஸ்தூரி அய்யங்கார், கோபால்சாமி அய்யங்கார், அவன் இவன் என எல்லோரும் ஒரு தேசியமாக ஒற்றுமையாகத்தான உள்ளனர். இவர்கள் எல்லோரும் மக்களை ஒடுக்குவதில் ஒன்றுபட்டுள்ளனர்.

2. இன்னொரு தேசியம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் தேசியம்.

ஒற்றுமை என்பது வாக்கத்திற்கு அப்பாற்பட்டதல்ல. ஒரு தேசியப் பிரச்சினையை எடுக்கும்பொழுது எந்த வர்க்கத்தின் நலனை எடுத்துக் கொள்வது ? என்பது முக்கியம்.

"காஷ்மீர் மக்களை இராணுவத்தால் ஒடுக்காதே" என்ற முழக்கம்தான் தமிழர்களுக்கும் காஷ்மீர் மக்களுக்குமான ஒற்றுமையை வளர்க்கும்.

**கேள்வி :** இந்தியா ஒரு தேசமாக இருக்கிறதே, ஒரு கம்யூனிஸ்ட் கட்சி போதாதா?

பதில் : இந்தியா ஒரு தேசமல்ல. இந்தியா யார் தேசம் என்று சொன்னால், கொள்ளையடிக்கிறவன், என்கிறானே அவனுக்கு இந்தியா வேண்டும். இப்படி வேலை பார்க்கப் போகிறவனுக்கு முதலாளியாக இருக்கிறவனுக்கு இந்தியா என்ற தேசம் வேண்டும். இந்தியா என்பது ஒரு தேசம் என்று பூகோள அடிப்படையில் மட்டும் வைத்துச்

www.tamilarangam.net



சொல்லக் கூடாது. யாருடைய நலனை உள்ளடக்கிய கருத்தாக இந்தியா இருக்கிறது என்றுதான் பார்க்க வேண்டும். இந்தியாவிற்குள் ஒடுக்குபவர்கள் ஒரு தேசம், ஒடுக்கப்படுபவர்கள் இன்னொரு தேசம். அப்படியென்றால் இன்றைய இந்தியா என்ற கருத்து சந்தேகமில்லாமல் ஒடுக்குபவன் கருத்துத்தான்.

**கேள்வி :** இந்தியா முழுவதும் ஒரு தேசிய இனம் என்று யாரும் இல்லையா?

**பதில் :** எந்த இடத்தில் நீ ஒரு மக்கள் விடுதலைப்படையை நிறுவமுடியுமோ? எந்த இடத்தில் பெருவாரியான மக்களின் ஆதிக்கத்தை நிறுவமுடியுமோ அதுதான் தேசிய இனம் எனப்படும். பஞ்சாப் மக்கள் தமிழ்நாட்டு மக்களை விடுதலை செய்யமுடியாது. அதேபோல தமிழ்நாட்டுமக்கள் பஞ்சாப் மக்களை விடுதலைசெய்ய முடியாது. அவரவர், அவரவர் மக்களைத்தான் விடுதலை செய்யமுடியும் அத்தகைய மக்கள் விடுத்லைகளின் தொகுப்புத்தான் இந்திய விடுதலை.

**கேள்வி :** கம்யூனிஸ்ட் கட்சி முதலில் தேசிய இனப் பிரச்சினை வைத்திருந்தார்கள். பின்னால் அதை ஏன் கைவிட்டார்கள்?

**பதில் :** அன்றைக்கு ரஷ்யாவில் வைத்திருந்தார்கள். இவர்கள் அப்படிய நகல் எடுத்தார்கள். உணர்வு பூர்வமாக இவர்களுக்குத் தெரியாது. 1954ல் அதைக் கைவிட்டு விட்டார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் நூற்றுக்கு தொன்னூற்று ஒன்பதே முக்கால் பேர் அரை வேக்காட்டு ஆங்கிலம் படித்தவர்கள். இவர்கள் ஆங்கிலத்திலேயே உரையாடுவார்கள். அவர்கள் பாட்டாளிகளே அல்ல. அவர்கள் குட்டி முதலாளியத் தலைவர்களாக இருந்தனர்.

இந்தியாவிற்கு ஒரு கம்யூனிஸ்ட் கட்சி இருக்கக்கூடாது. இது மையப் படுத்தப்பட்டதாக, ஆணையிடக்கூடியதாகவும் இருக்கக்கூடாது அது ஒரு இணைப்புக் குழுவாகத்தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலக் குழுவும் தானே மையக் குழுவாக இருக்க வேண்டும். அதுதான் உயிருள்ள குழுவாக இருக்கும். அப்பொழுதுதான் அது பாட்டாளிகளை விவசாயிகளைக் கொண்டதாக அவர்களுடன் எளிதில் உரையாடுவதாக, பிரச்சினைகளை எளிதில் விளங்கிக் கொள்வதாக இருக்கும். இந்தக் கருத்து எங்கிருந்து வந்தது.

கோமிண்டெர்ன் கூடாது கோமிண்பார்ம்தான் சரி மையப்படுத்தப்பட்ட ஒரு குழு இருக்கக்கூடாது. அந்தந்த நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகய் ஆங்காங்கு உள்ள நிலைமைகளுக்கேற்ப விடுதலைப் படையினைக் கட்டுவதாகவும், ஆணையிடக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.அது எந்த அடிப்படையில் எனில் தேசிய அடிப்படையில் இந்தத் தீர்மானம் 1946லேயே சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தக் கருத்துஸ்டாலினுக்கும் உடன்பாடு.

www.tamilarangam.net



ஸ்டாலின் கோமிண்டெர்ன் –ஐ கலைத்தவுடன் மாவோ அதனை வரவேற்கிறார். அப்படிக் கலைத்தால்தான் புரட்சியே நடந்தது, என்றும் மாவோ அதனை வரவேற்கிறார். அப்படிக் கலைத்ததால்தான் புரட்சியே நடந்தது, என்றும் மாவோ சொன்னார். அன்றைக்கு சாருமஜீம்தாருக்கு தமிழ்நாட்டின் நிலவரம் தெரியாது. ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒரு சமயம் பெங்களூலரில் இருந்து 3 பேர் வந்து என்னைச் சந்தித்தார்கள். நான் அவர்களை சத்தியமங்கலத்திற்கு அழைத்துச் சென்றேன். எனக்கு அவ்வறவாக ஒன்றும் தெரியாது. சத்தியமங்கலத்தில் செல்லப்பன், இரங்கசாமி என இருவரை எங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். அவர்களுடன் பேசி அனைத்திந்திய கம்யூனிஸ்ட் கட்சியை கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லி, 5 பேரையும், ஒரு அறையில சந்திக்க வைத்துவிட்டு, நான் உணவு வாங்கி வருவதாகச் சொல்லி வெளியில் போய் 1 மணி நேரம் கழித்து வந்தேன். இவர்களுக்கு ஆங்கிலம், தெரியாது, அவர்களுக்குத் தமிழ்த் தெரியாது. “என்ன கட்சியைக் கட்சி முடித்துவிட்டீர்களா?” என்றேன். என்னய்யா கிண்டல் பண்ணுகிறாயா? என்றார்கள்.

“அனைத்து இந்தியக் கமிட்டியும் வேண்டாம் ஒரு மம்பட்டியும் வேண்டாம் போய் வாருங்கள்”. என்றேன். இங்கே விவசாயமே தெரியாத சங்கரய்யாவைப் போய் விவசாயக் கமிட்டிக்குத் தலைவராக்கினார்கள். அவர் போய் எதைப் பேசிவிடுவார். இன்னொரு உதாரணம் சொல்கிறேன் கோவை உப்பிலிபாளையத்தில் எனது நண்பர்கள் கஸ்தூரி, பழனிசாமி என இருவர் இருந்தனர். அப்பொழுது வலது இடது என உடைகிற நேரம்.

“பழனிசாமி நீ பம்பாய் AITUC மாநாட்டுக்குப் போயிருந்தாயா” என்றேன். “ஆமாம்” என்றார். “டாங்கே பேசியது உனக்குப் புரிந்ததா? என்றேன்? ‘இல்லை’ என்றார். அப்புறம் எப்படி கைதூக்கி உனது ஆதரவை தெரிவித்தாய் “அண்ணே என்.கே. கிருஷ்ணன் யாருக்குக் கை தூக்கினாரோ அவருக்குக் கை தூக்கி விட்டேன்” என்றார்.
“கஸ்தூரி நீ என்னய்யா செய்தாய்?” என்றேன்.
“ரமணி யாருக்குக் கை தூக்கினாரோ அவருக்குக் கை தூக்கினேன்” என்றார். “ஏய்யா இதே AITUC மாதிரிதமிழ்நாட்டில் தமிழ் மொழியில் நடந்தால் உங்களைத் தமிழ்நாட்டுக்காரன் சும்மா விடுவானா” என்றேன்.

எனவே ஆணையிடக்கூடிய குழுவாக அந்தந்த மாநிலக்குழுதான் இருக்கவேண்டும் ஒவ்வொரு மாநிலத்தில் நடைபெறும் போராட்டங்களை நாம் எப்படி ஆதரிப்பது என்பதுதான் அனைத்திந்திய இணைப்புக்குழுவின் வேலையாக இருக்க வேண்டும்.

**கேள்வி :** தமிழ்த் தேசிய விடுதலையினை ஒப்புக் கொள்கிறீர்களா?

**பதில் :** இவ்வுலகில் உள்ள எல்லா தேசிய இனங்களின் விடுதலையும் நான் ஒப்புக் கொள்கிறேன். தமிழ்நாடு மட்டும் ஏதோ தெய்வீக நாடு, புனிதமான நாடு என்பதெல்லாம் ஒன்றும் இல்லை. தமிழ் மொழிதான்

www.tamilarangam.net



சிறந்தது கன்னடமொழி மோசம் என்றெல்லாம் கத்த முடியாது. அவரவர் நாட்டில் அவரவர் மொழி சிறந்ததுதான். ஆகையால் இதற்குப் பொருள் கேவலப்படுத்துவதல்ல. இந்த உலகில் உள்ள எல்லா மக்களுக்குமான தேசநலன்பற்றிப் பேச வேண்டுமே தவிர பெருமைக்குப் பேசிப் பயனில்லை.

**கேள்வி :**

தமிழ்மொழி இனம் உயர்ந்தது என்று சொன்னால் மக்களுக்கு உணர்வு வருமே?

**பதில் :**

ஒரு முறை பெருஞ்சித்திரனார் அவர்களிடம் உரையாடினேன். "இவ்வளவு நாளாகப் பேசுகிறீர்களே தமிழனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்"? என்றேன். "தமிழனெல்லாம் ஒருவரையொருவன் முன்னேற விடாமல் தடுக்கிறான் நண்டுபோல" என்றார். "நண்டு ஒன்று மேலே செல்வதைப் பார்த்தால் அடுத்தது அதன் காலைப் பிடித்து இழுத்துவிடும் என்றார். இது எப்படித் தமிழனை உயர்த்துவதாகும் மேலே போக முடியாதாவர்கள் ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களையிம் சேர்த்துக் கேவலப்படுத்திப் பேசுகிறார்கள். பிறது ஒரு கேள்வி கேட்டேன்.

"தமிழின விடுதலை பற்றிப் பேசுகிறீகளே, அந்த விடுதலையில் பன்னனுக்கும், பறையனுக்கும் தொம்பனுக்கும் எங்கே இடம்"? என்றேன். ஏனென்றால் டி.டி. கிருஷ்ணமாச்சாரியும், தமிழன் என்கிறான். சுந்தரமய்யங்காரும், முதலியாரும், கவுண்டரும், வள்ளலாரும் தமிழன் என்றால் மற்ற தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உங்கள் விடுதலையில் எங்கே இடம்? என்றேன். அவர் பதில் சொல்லவில்லை. இதே கேள்வியைத்தான் அம்பேத்கர் காந்தியிடம் கேட்டார். விடுதலை கிடைக்கட்டும், பார்க்கலாம், என்றார் காந்தி. எனவே விடுதலை என்பது யாருக்கு முதலில் தேவை? ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கானதுதான் விடுதலை.

**கேள்வி :**

மார்வாடி, சேட்டுகள் எல்லாம் தமிழகத்தில் ஆதிக்கம செலுத்துகின்றனரே?

**பதில் :**

தனிப்பட்ட முறையில் மார்வாடிகளோ, மற்றவர்களோ எதிரிகளல்ல, பீடா கடை வைத்துள்ள மார்வாடி நமக்கு எதிரியா? செருப்புத் தைக்கும் அருந்ததியர் மக்கள் தெலுங்கு பேசுவதாலேயே எதிரிகளா? ஒரு முறை மதுரையில் ஒரு துண்டறிக்கை வெளியிட்டோம். "எம்மொழி பேசினாலும், நம் கொள்கையை ஏற்பவர் நம்மவர் நல்லவர் நம்மொழி பேசினாலும் நம் கொள்கையை மறுப்பவர் நமது எதிரி" என்று வெளியிட்டோம்.

**கேள்வி :**

www.tamilarangam.net



செய்கின்றனர். எனவே தெலுங்கர்களுக்கு எதிராக நாம் அரசியல் நடத்தினால்தான் தமிழ்த் தேசிய இனப் போராட்டத்தை வளர்க்க முடியும், என்கிறார் குணா. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?.

**பதில் :**

நூற்றுக்கு நூறு தவறான முடிவாகும். தமிழகத்திற்கு வந்தவர்களில் தெலுங்கர்களோ பிற இன மக்களோ ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவில்தான் உள்ளனர். ஆனால் பெரும்பகுதி மக்கள் இங்கு தமிழர்கள்தான். ஆக யார் ஆதிக்கத்தில் இருந்தாலும் அவனை எதிர்த்துப் போராடவேண்டுமேயன்றி குறிப்பிட்ட மொழி பேசுகிறவன் என்று மட்டும் பேசக்கூடாது.

**கேள்வி :**

கெங்குசாமிநாயுடு போன்றவர்கள் தெலுங்கு இன உணர்வை இங்கு பரப்புகிறார்கள் இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

**பதில் :**

கெங்குசாமி நாயுடு இதுபோன்ற தெலுங்கின உணர்வைக் கிளப்பித் தன்னை வளர்த்துக் கொள்கிறவன். அப்படித் தெலுங்கின வெறியினை ஊட்டினால்தான் சில சட்டமன்றத் தொகுதிகளைக் கைப்பற்ற முடியும். தனது பொருளாதார நலன்களை வளர்த்துக் கொள்ளலாம் என்றும் நினைக்கின்றான் எனவே, நமது எதிரி என்று சொல்லுமளவிற்கு அவனை உயர்த்த வேண்டாம் அப்படிப் பார்த்தோம் என்று சொன்னால் மகாராஷ்டிராவில் ஒரு பகுதியில் தமிழர்கள் உள்ளனர். அதைப் போலவே கர்நாடகத்திலும் உள்ளனர். எனவே வர்க்க ரீதியில் திரண்டால்தான் தேசிய இனப் பிரச்சினையைக் கூர்மைப்படுத்த முடியும். வெற்றியும் பெற முடியும். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தன் சமுதாயத்திற்கு தலைவராக இருக்கலாம். அதற்காக அவர், தேவர் சமுகத்தைச் சேர்ந்தவர்கள் அக்கிரமம் செய்தால், அதைக் கண்டித்திருக்க வேண்டும். ஆனால் அவர் தேவர்களை மக்கள் மத்தியில் இருந்து அன்னியப் படுத்தினார்.

அமெரிக்காவில் ஒரு சிறு பகுதியினர்தான் ஆதிக்கத்தில் உள்ளனர். ஆனால் அங்குள்ள பெரும்பகுதி மக்கள் அடிமையாக உள்ளனர். அதற்காக அங்குள்ள அமெரிக்க சமுகத்தையே எதிர்க்கப் போகிறோமா?

**கேள்வி :**

தமிழ்த் தேசிய அணி திரட்டலில் ஏகாதிபத்திய எதிர்ப்பின் பங்கென்ன?

**பதில் :**

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது கண்டிப்பாக இருக்க வேண்டும். இன்றைக்கு பன்னாட்டுக் கம்பெனிகள் என்று சொல்லக்கூடியவை என்ன செய்துள்ளன. தமிழ்நாட்டில் இயற்கையையும், சூழலையும் அழிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. திருப்பூர் மற்றும் சுற்றுப்

www.tamilarangam.net



தெலுங்கர்கள் நமது நிலங்களையெல்லாம் ஆதிக்கம் செய்து கொண்டிருக்கிறான். பொருளாதாரத்திலேயும், அவர்கள் ஆதிக்கம் புறங்களில் நிலங்கள் நாசமாகிவிட்டன. விஸ்கோஸ் ஆலைக் கழிவினால் பவானி ஆறு மாசுப்படுத்தப்படுகிறது. இறால் பண்ணைகள் என்று சொல்லி நம் மக்களின் நிலம் நாசமாக்கப்படுகிறது. பசுமைப்புரட்சி என்று சொல்லி ஏராளமான உரங்கள், பூச்சிக்கொல்லிகளைக் கொட்டி நிலம் நாசமாகிவிட்டது. சத்தியமங்கலத்தில் ஜெயராஜ் என்ற ஒரு நண்பர் விவசாயிகள் கூட்டத்தில் நாங்கள் விவசாயம் செய்வது எங்களுக்காக அல்ல, உரக்கம்பெனிக்காரர்களுக்குத்தான் படிக்கிறவனைப் பார்த்து என்ன செய்கிறாய் என்று கேட்டில் தேசிய மைய நீரோட்டம் (National main stream)என்று பதில் சொல்கிறான். அப்படி என்றால் என்ன பொருள் என்று கேட்டால் அமெரிக்கப் பத்திரிக்கையில் எங்கள் கட்டுரைகளைப் பிரசுரித்தால்தான் எங்களை அங்கு கூப்பிடுவார்கள் என்றான். அமெரிக்கப் பத்திரிக்கையில் என்ன எழுதுவான், நமது நாட்டை எப்படிக் கொள்ளையடிப்பது என்பதுபற்றித்தான் எழுதுவான். இப்படி நம்மைக் கொள்ளையடிப்பதைப் பற்றிப் படிப்பதற்கு நமது நாட்டில் கல்லூரிகளும் உயர் தொழில் நுட்ப நிறுவனங்களும் தேவையா? ஆக இவையெல்லாம் ஏகாதிபத்தியத்தின் முயற்சியால் ஏகாதிபத்திய நலனுக்காக இருக்கின்றன. ஆகவே நாம் ஏகாதிபத்திய எதிர்ப்பை மையப்படுத்த வேண்டியது அவசியம். இப்படிச் செய்யலாம் தமிழ்த் தேசியம் என்று பேசுவது பித்தலாட்டம்.

**கேள்வி :**

ஏகாதிபத்திய எதிர்ப்பில் உழவர்களுக்கு, பெண்களுக்கு, ஆதிவாசிகளுக்கு என்ன பங்கு?

**பதில் :**

உதாரணமாக, தலித் மக்கள் உழவர்களிடம் அடிமைப்பட்டுள்ளார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஒரு அடிமைக்கு எப்போது விடுதலை கிடைக்கும்? "பாட்டாளி வர்க்கம் தன்னை விடுதலை செய்ய வேண்டுமானால் அது சமூகம் முழுமையும் விடுதலை செய்ய வேண்டும். சமூகத்தை விடுதலை செய்யாமல் தன்னை மட்டும் விடுதலை செய்துகொள்ள முடியாது" என்று மார்க்ஸ் சொல்கிறார். ஆக விடுதலை பிரிக்கமுடியாதது. இறால் பண்ணை மூலம் நிலம் நாசமாகும்போது உழவர்களோடு சேர்ந்து தலித் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். நிலம் நாசமாகிறபோது நல்ல குடிநீர் கிடைக்காமல் போகிறது. நீண்ட தூரம் பயணம் செய்து நீரை எடுத்துவர வேண்டிய நிலை ஏற்பமுகிறது. இதில் முதுன்மையாகப் பெண்கள்தான் பாதிப்புக்குள்ளாகின்றனர். காட்டை அழித்து ஒரே வகைப் பயிரான தேக்கு முதலியவற்றைப் பயிரிடுகின்றனர், இதனால் காட்டுவளம் அழிக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் வாழும் ஆதிவாசிகள்

www.tamilarangam.net



பாதிக்கப்படுகின்றனர். சர்தார் சரோவர் அணைத் திட்டம் என்று சொல்லி பெரும் பகுதி நிலத்தை காடுகள் அழிக்கிறார்கள். அப்பொழுது அங்குள்ள ஆதிவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கிறேன் என்று சொல்லி நகரங்களில் குடியமர்த்துகின்றனர். தங்களது வேர்கள் பிடுங்கப்பட்ட நிலையில் ஆதிவாசிப் பெண்கள் பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியில் தங்கள் உடம்பை விற்க நேரிடுகிறது. ஆக ஆதிவாசிகள் முதலிய அனைவருக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது முக்கியம்.

**கேள்வி :**

ஏகாதிபத்திய எதிர்ப்பில் முஸ்லிம்களுக்கு உள்ள பங்கு என்ன?

**பதில் :**

உலக மக்கள் தொகையில் 18% முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இந்திய மக்கள் தொகையில் 12% முஸ்லிம்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் வறியவர்கள், ஏழைகள். ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில்தான் முஸ்லிம் மக்களுக்கு விடுதலை கிட்டும். உழைக்கும் மக்கள் எங்கெல்லாம் போராட்டங்களில் ஈடுபடுகிறார்களோ அவர்களோடு இவர்கள் சேர்ந்து கொள்ள வேண்டும். பெரும்பான்மை இந்துக்களிடமிருந்து முஸ்லிம்களைப் பிரித்து வைக்கிற பாரதிய ஜனதாவின் சூழ்ச்சிக்கு இவர்கள் பலியாகிவிடக்கூடாது.

விஸ்கோஸ் முதலிய தொழிற்சாலைகளால் பவானி ஆறு நாசமாகிறது. விவசாயிகள் போராடுகிறார்கள் இந்தப் போராட்டத்தில் இங்குள்ள முஸ்லிம் மக்கள் கலந்து கொள்ள வேண்டும். போலிஸ் அடக்குமுறையோ வேறு பிரச்சினைகளோ வரும்போது முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாக விவசாயிகள் நிற்க வேண்டுமானால் விவசாயிகள் பிரச்சினைகளிலும் முஸ்லிம் மக்கள் ஈடுபாடு கொள்ள வேண்டும். இதே போலத்தான் மக்கள் விடுதலைக்கான இயக்கங்களில் முஸ்லிம்கள் பங்கு பெற வேண்டும்.

இன்று உலக அளவில் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் முன் வரிசையில் இருப்பவர்கள் இஸ்லாமியர்கள். இந்தியாவிலும் இத்தகைய போராட்டங்களில் இஸ்லாமியர்கள் பங்கு பெற வேண்டும். ஒரு சமூகப் பிரிவு தனக்கான விடுதலையைத் தனியே நின்று சாதிக்க முடியாது. ஒட்டுமொத்தமான சமூகத்தின் விடுதலையில்தான் தனக்கும் விடுதலைகிட்டும். இஸ்லாமியரைப் பொறுத்தவரை இந்தியா இவர்களுக்கு ஒரு உலகம். இந்திய மக்களின் விடுதலையோடுதான் இவர்களுக்கும் விடுதலை கிடைக்கும். உலக அளவிலான விடுதலைக்கும் இதுதான் பழி. ஆகவே தமிழ்த் தேசத்தின் விடுதலை என்பதும் இஸ்லாமியர்களுக்கான விடுதலை என்பதும் என்றுதான்.

**கேள்வி :**

காவிரிச் சிக்கல் தொடர்பாக கர்நாடகம் எடுத்துள்ள தீவிர நிலைகுறித்து உங்கள் கருத்தென்ன?

www.tamilarangam.net



**பதில் :**

உதாரணத்திற்கு பெங்களூரில் திருவள்ளுவர் சிலையை திறந்து வைக்க முடியவில்லை. கர்நாடகத்திலுள்ள தீவிரவாதிகள் மக்கள் மத்தியில் எதிர்ப்புணர்வைத் தூண்டுகிறார்கள். திருவள்ளுவரைப்பற்றிக் கர்நாடக மக்களுக்கு ஏதுவும் தெரியாது. அதேபோல் தமிழ்நாட்டில் பசுவேசரைப் பற்றித் தமிழ் மக்களுக்குத் தெரியாது. காவிரிச் சிக்கலில் பெரிய மோதல் ஏற்படுகிறது. இதன் காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காவிரி தொடங்கும் இடத்தில் தமிழ்நாடு இருப்பதாகவும், இங்கு கர்நாடகம் இருப்பதாகவும் நாம் கற்பனை செய்து கொள்வோமானால் பிரச்சினை ஓரளவுக்கு நாம் புரிந்து கொள்ள முடியும் நெல்லுக்கு அதிகம் நீர் தேவையில்லை. கரும்புக்கும் மஞ்களுக்கும் ஆண்டு முழுவதும் நீர் தேவை. சர்க்கரைத் தொழிலுக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள முக்கியத்துவம், பற்றி நாம் சிந்திக்க வேண்டும். பெரும் முதலாளிகள் கொள்ளையடிப்பதற்குத்தான் அரசும் ஒத்துழைக்கிறது. இதனால்தான் மக்கள் மத்தியல் கொந்தளிப்பு தூண்டப்படுகிறது. கரும்பு சாகுபடியில் விவசாயிகள் பெறுவது கொஞ்சம், முதலாளிகள் பெறுவதுதான் அதிகம். தமிழ் முதலாளிகள் சிலரும் கர்நாடகத்தில் சர்க்கரை ஆலைகள் வைத்துள்ளனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கடைக்கோடி விவசாயிகளுக்குத்தான் பாசனத்தில் முதல் உரிமை என்ற நீதியெல்லாம் இப்பொழுது அடிப்பட்டுப் போய்விட்டது. பவானி ஆற்றின் கரையை அடுத்து ஆழ்துளைக் கிணறு போட்டு குழாய்களின் மூலம் நெந் தொலைவுக்கு காவிரி நீரை எடுத்துச் செல்கிறார்கள். நிலத்தடி நீரை யாரும் விட்டுவைப்பதில்லை. அதிக அளவு நீரை வீணாக்குகிறார்கள். பிரச்சினையை கிளப்பி விடுவதில் அரசியல்வாதிகளுக்குத்தான் அதிக லாபம். பெங்களூரில் கடைத் தெருக்கள், தொழில் நிறுவனங்கள் முதலியவற்றில் தமிழர்கள் ஆதிக்கம் வகிப்பதும் ஒரு காரணம். இப்படியெல்லாம் பல சிக்கல்கள் காவிரிச் சிக்கல் என்பதில் ஒரு முனைபட்டிப்பதை நாம் கவனிக்க வேண்டும். இரண்டு பக்கத்திலுமுள்ள விவசாய சங்கங்கள் முன் கை எடுத்தாலொழிய பிரச்சினை தீராது.

**கேள்வி :**

தேசிய இன விடுதலை என்பது மக்கள் விடுதலைப் படையினைக் கட்டுவதில்தான் தொடங்குகிறதா? அல்லது வேறு வடிவங்களில் தொடங்கலாமா?

**பதில் :**

தேசிய இனப் பிரச்சினை குறித்து ஸ்டாலின் கருத்துக்கள் உலகின் எல்லா நாடுகளுக்கும் ஒத்துவருவதில்லை. ஐரோப்பாவிலேயே சில நாடுகளில் இந்த விதி பொருந்துவதில்லை. அதாவது ஒரு மொழி பேசக்கூடிய, ஒரு பொருளாதார அமைப்பை உடைய, ஒரு பூகோள அமைப்பை உடைய ஒரு பொதுவான ஒத்த மனோநிலை, இவற்றில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரெஞ்சு என மூன்று மொழிகள் உள்ளன. எனவே மொழி என்ற ஒன்றினடிப்படையில் தேசிய இனத்தை தீர்மானிக்க முடியாது. இலக்கணத்தை பிடித்துத் தொங்க வேண்டியதில்லை. நமக்கு மக்களுடைய விடுதலை மிகவும் முக்கியம். ஒரு நாட்டு மக்களை விடுதலை செய்ய வேண்டுமானால் அந்தந்த நாட்டில்தான் முடியும். தமிழகத்திலிருந்து கொண்டு ஆந்திராவிலோ ஆந்திராவிலிந்து கொண்டு கேரளத்திலோ படைகூட்ட முடியாது.

**கேள்வி :**

தமிழ்த் தேச விடுதலை என்று சொல்கிறபோது அதற்கு எதிரிகள் யார்? நாங்கள் மார்வாடிகளை எதிரிகள் என்கிறோம். அதேபோல இந்திய அரசு மற்றும் ஏகாதிபத்தியத்தையும் இணைத்தே சொல்கிறோம்?.

**பதில் :**

ஏகாதிபத்தியத்தின் கையாளாக இருக்கிறவன் யாராக இருந்தாலும் நமக்கு எதிரிதான். அவன் மார்வாடியாக இருக்கலாம்., தெலுங்கனாக இருக்கலாம், ஐயனாக இருக்கலாம், ஐயங்காராக இருக்கலாம், அவன் தமிழனாகக்கூட இருக்கலாம்.

ஆங்கிலம்தான் வேண்டும் என்று சொல்கிறவன் திட்டவட்டமாக நமது எதிரி. இந்தியா ஒன்றாகத்தான் இருக்க வேண்டும், தேசிய இன உரிமை பற்றிப் பேசக்கூடாது என்பவன் நமது எதிரி. இப்போது இருக்கிற தொழிற்கொள்கை நல்லது என்று சொல்கிறவன் சந்தேகமில்லாமல் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலி.

ஒரு ஏழைப் பையன் ஆங்கிலம் படித்தால்தான் நல்லது என்று சொன்னால் அவன் நமக்கு எதிரியல்ல. ஆனால் அந்தக் கருத்து நமக்கு எதிரானது. அவன் ஏகாதிபத்தியத்தின் கருத்து உண்மையென நம்புவதால் அப்படிப் பேசுகிறான். ஆனால் ஒருவன் இதெல்லாம் அறிந்து, புரிந்து அதனால் விரும்பி திட்டவட்டமாகப் பேசுகிறான் என்றால் கண்டிப்பாக அவன் நமக்கு எதிரி. முதலாமவன் அப்பாவி. இரண்டாமவன் திருடன். தூங்குகிறவனைத் தட்டி எழுப்பவேண்டும் தூங்குவதுபோல நடிப்பவனை உதைக்க வேண்டும்.

பொதுவாக மேல் தட்டு வர்க்கத்தினர் பெரும்பகுதி ஆங்கிலத்தை விரும்புகின்றனர். அவர்கள் எதிரிகள்தான். ஆனால் கீழ்நிலையில் உள்ள மக்களின் கருத்து ஏகாதிபத்தியச் சார்பாக இருந்தாலும்கூட, உண்மை தெரிந்தவுடன் நம்முடன் சேர்வார்கள்.

**கேள்வி:**

நீங்கள் சொல்வதைப் பார்த்தால் தமிழ்த் தேசியத்திற்கு முதன்மையான எதிரிகள் பார்ப்பனர்கள்தான் ஏனெனில் இந்தியா ஒரு தேசம் என்று அவன்தான் பேசுகிறான். பரதகண்டம் என்று அவன்தான் பேசுகிறான். அப்புறம் சமஸ்கிருதம் அதன் மேன்மையைப் பற்றிப்

www.tamilarangam.net



எது ஒன்று இல்லையென்றாலும் அது தேசிய இனம் ஆகாது என்றார் ஸ்டாலின். சுவிட்சர்லாந்தில் இத்தாலி, பிரெஞ்சு, ஜெர்மன், என மூன்று மொழிகளும் சமஅளவில் உள்ளன. எனவே மூன்று மொழிகளிலும் ஆட்சி மொழிகளாக உள்ளன. அதேபோல் பெல்ஜியத்தில் ஜெர்மன், டச்சு, பேசுபவனும் அவனே ஆங்கிலமொழியையே தன்னுடைய மொழிபோல ஏற்றுக் கொண்டவனும் பார்ப்பனன்தான். கணிணி முதலியவைகளை ஐ.ஐ.டி. களில் படித்துவிட்டு அமெரிக்கா முதலிய தேசங்களுக்கு போகிறவனும் பார்ப்பனர்தான். தமிழ்மொழிக்கு எதிரானவனும் அவன்தான். ஆக முதன்மையான எதிரிகள் பார்ப்பனர்கள்தான் எனச் சொல்லத் தோன்றுகிறது. உங்கள் கருத்தென்ன?

**பதில் :**

சாதி அடிப்படையில் பார்த்தீர்களானால் பார்ப்பனன் 3% இருக்கிறான். அவன் ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்வதில் முன்னணியில் உள்ளான். பெரும்பகுதி பார்ப்பனர்கள், நீங்கள் சொல்வதுபோல திட்டவட்டமாக ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள்தான். அதேபோல் ஆங்கிலம்தான் முக்கியம் என்று பேசுபவர்கள் வேறு சாதிகளில் இருந்தால் அவர்கள் புதுப்பார்ப்பனர்கள் என்கிறேன். பார்ப்பனர்களில் 3% பேர்களில் 90% பார்ப்பனர்கள் ஆங்கிலம்தான் வேண்டும் என்கின்றனர்..

**கேள்வி :**

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்கிறபோது தமிழலகத்தின் மேன்மை, திருக்குறளின் அறம் இவற்றையெல்லாம் பேசுவது தவறா?

**பதில் :** பேசுவது தவறு இல்லை ஒரு மொழிதான் சிறந்தது மற்ற மொழிகளெல்லாம் தாழ்ந்தவை என்று சொல்வதுதான் தவறு. அப்படித் தமிழ்மொழியின் மேன்மையினைச் சொல்லியும் மக்களைத் திரட்டலாம். ஆனால், அதை மட்டுமே செய்யக்கூடாது.

**கேள்வி :** தமிழ்மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது, உலகின் முதன்மொழி தமிழ் என்பதற்கு வரலாற்று ஆதாரங்களும் உள்ளன. நீங்கள் ஏன் இவைபற்றிப் பேசுவதில்லை?.

**பதில் :** நான் பேசியிருக்கிறேன். தமிழ் நாகரீகம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேல் தொன்மையானது, என்றும் பேசியுள்ளேன். பல்வேறு தத்துவங்கள் விளைந்த மொழி இது. வடமொழியில் இருந்துதான் தத்துவங்கள் வந்தன என்பதை மறுக்கிறேன். சைவம், வைணவம் முதற்கொண்டு மிகச் சிறந்த தத்துவங்களெல்லாம் தமிழில் தோன்றியுள்ளன. தமிழிசைத்தான் மிகச் சிறந்த இசை, அதற்கான இலக்கணங்கள் சிலப்பதிகாரத்தில் கானல்பரிப பாடல்களில் உள்ளன. இவைப்பற்றி கம்யூனிஸ்டுகள் பேசுவதில்லை. ஒரு இனத்தில் இசை இந்த அளவுக்கு வளர்ந்திருக்க வேண்டுமானால் அதற்கு முன் பல்லாயிரம் ஆண்டு வளர்ச்சி இல்லாமல் முடியாது.

www.tamilarangam.net



**கேள்வி:**

சரி உங்களிடமிருந்து பேசியதிலிருந்து, மார்க்சியர் என்று சொல்கிறவர்கள் முதலில் மக்கள் விடுதலைப் படையினைக் கட்டவேண்டும், என்கீறீர்கள். திராவிட இயக்கங்களுக்கெல்லாம் விடுதலைப்படை கட்டுவதே என்ற கருத்தில் உடன்பாடு கிடையாது அரசு அதிகாரத்தில் போய் உட்கார்ந்துவிட்டால் மக்கள் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம்

என்பதுதான் அவர்களின் கொள்கையாக உள்ளது. தேசிய விடுதலை பற்றிப் பேசுகிற மற்ற இயக்கங்களுக்கும் கூட இதே கருத்து உடன்பாடுதான்.

இதுவரை நாம் பேசியதிலிருந்து தேசிய இனப் பிரச்சினை என்பது வெறும் மொழி, இனம் தொடர்புடையது மட்டுமல்ல, பொருளாதாரம் முதுலியவற்றோடு தொடர்புடையது. வெறும் மேடைப் பேச்சில் இதைத் தீர்த்துவிடமுடியாது. என்றைக்கு நாம் விடுதலைப் படையைக் கூட்டப் போகிறோமோ அன்றுதான் முதல் அடி வைக்கிறோம் என்றே பொருள். ஏகாதிபத்தியம் என்பது இந்தியாவில் அரசும் முதலாளியமும் இணைந்துதான், ஒட்டுமொத்தமாக மக்கள் என்று ஒரு பிரிவையும் எதிரிகள் என்று ஒரு பிரிவையும் பிரித்துப் பார்க்க வேண்டும். அதற்குத் தேவையான பொருளியல் முதலியவற்றை விரிவான மளவில் மக்களிடம் பேசி அந்த அடிப்படையில் இயக்கங்களைக் கூட்ட வேண்டும். இறுதியாக நீங்கள் சொல்லக் கூடியது என்ன?

**பதில் :**

நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். இவையெல்லாம் பொதுவான நடைமுறைகள்தான். குறிப்பிட்ட பிரச்சினையில் எப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும், என்னென்ன இயக்கங்களெல்லாம் கட்ட வேண்டும். எது உடனடித் திட்டம்? பிரதான எதிரிகள் யார்? உடனடியாக நம்முடன் வரக்கூடியவர்கள் யார்? இவை பற்றியெல்லாம் நமக்குத் தெளிவான அணுகுமுறை வேண்டும்.

**கேள்வி :**

தலித் இயக்கம், சுற்றுச்சூழல் இவை பற்றியெல்லாம்கூட நாம் கவனம் செலுத்த வேண்டுமா?.

**பதில் :** கண்டிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அதோடு இன்றைய கல்வி முறையை ஒழித்துக் கட்டுவது பற்றியும் பெரிய அளவுக்கு பிரச்சாரம் செய்ய வேண்டும். 25 லட்சம் செலவழிச்சு, எம்.பி.பி.எஸ்., ஐ. ஐ.டி. என்று மாணவர்களை நாம் உருவாக்குகிறோம் அவர்கள் யாருக்கு பயன்படுகிறார்கள்? யாருக்கு பயன்படுகிறார்கள் என்பதைவிட நாம் மக்களுக்கு அவர்கள் பயன்படுவதில்லை. மாறாக நம்மை அடிமைப்படுத்தப் பயன்படுகின்றனர்.

**கேள்வி :** இதுவரையில் தோன்றிய பொதுவுடைமை இயக்கங்களெல்லாம்

www.tamilarangam.net



பாட்டாளி என்று மட்டும் சொல்லிவிட்டு, பெரும்பாலும் உழவர்களை ஒதுக்கியுள்ளனர். உழவர்களுக்கு உதிரான சுரண்டல் என்பது இன்று பெருமளவுக்கு அதிகரித்துள்ள நிலையில், நமது முதன்மையான முழக்கம் என்பது உழவர்களை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும் இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

பதில் : நகரம், கிராமம் இவற்றிற்கு இடையிலான இடைவெளி அதிகமாக மாறியுள்ளது. நகரம் கொழுத்திருக்கிறது. கிராமம் மிகவும் மெலிந்து வருகிறது. பாட்டாளி வர்க்கம் என்று சொன்னவர்கள் பெரும்பாலும் கிராமப்புற மக்களைக் கணக்கில் கொள்ளவில்லை. மேலும் இன்று பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதி முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்துவிட்டது. கிராமப் பிறத்தைக் கொள்ளையடித்தால் பரவாயில்லை, எனக்குப் பங்கு கொடுத்தால் போதும் என்று இன்றைய பாட்டாளி சொல்கிறான்.

இன்று தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்ளையினால் ஜப்பான் போன்ற நாடுகளில் நவீனத்தொழில்நுட்பக் கருவிகள் மூலம் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதால், ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வேலைகளை இழக்கின்றனர். ஜப்பான் நேற்றுவரையில் ஏற்றுமதி செய்துகொண்டு வந்தான். இன்று இறக்குமதி செய்கிறான். ஜப்பானில் ஒரு தொழிலாளிக்கு 100 ரூபாய் சம்பளம் என்றால், இந்தியாவில் அதே வேலையை 30 ரூபாயில் செய்வித்து அவன் நாட்டில் இறக்குமதி செய்து கொள்கிறான். வேலையிழந்த அந்தத் தொழிலாளிகள் திருடர்களாக மாறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே தொழிலாளர்களை ஒன்று திரட்டி ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை நடத்தினால் ஒழிய தொழிலாளர்களுக்கு எதிர்காலம் இல்லை. கிராமங்களில் விவசாயத் தொழிலும் இன்று கட்டுபடியாவதில்லை. கூலி கொடுத்து கட்டுபடியாகாது. ஆகவே விவசாயிக்கு 4,5 ஏக்கர் நிலம் இருந்தால் மட்டும் போதாது. அவர்கள் வீட்டிலேயே வேலை செய்கிற 7,8 பேர் இருக்க வேண்டும். பணக்கார விவசாயியைப் பொறுத்தவரை விவசாயம் அவனுக்குத் தேவையில்லை உள்ளூரில் லேவாதேவி செய்து வட்டி வாங்கி அவன் சேர்த்துக் கொள்வான். கிராமத்தில் வட்டித் தொழில்தான் இப்பொழுது மேலோங்கி இருக்கிறது. இப்பொழுதெல்லாம் கிராமங்களில் பூ சாகுபடி செய்கிறார்கள். மஞ்சளும் பருத்தியும் போடுகிறார்கள். விவசாயம் இப்படி மாறிக் கொண்டிருக்கிறது. இந்தப் பணப்பயிர்களெல்லாம் வாங்கி விற்பவனுக்குத்தான் சேர்கிறது. கிராமத்தில் சொல்லப்படும் ஒரு பழமொழி "ஊரில் பிணம் விழுந்தாலும் கல்யாணம் நடைபெற்றாலும் பூ கட்டி விற்கும் பூசாரிக்குத்தான் லாபம்".

விவசாயிகளை இப்படி நகர்ப்புறத்து வியாபாரிகள்தான் கட்டுப்படுத்திச் சுரண்டுகிறார்கள். நகர்ப்புறங்கள் ஏகாதிபத்தியத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. இறுதியாகப் பார்த்தால் ஏகாதிபத்தியம் எல்லோரையும் தன் கட்டுபாட்டிற்குள் கொண்டு வருகிறது. ஆகவே, ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில்தான் விவசாயிகளும் தங்கள் விடுதலையைப் பெற முடியும். தமிழ்த் தேச விடுதலை என்பது இப்படி ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

ஆங்கிலேயரின் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறுவதற்கான இந்தியதேசியம் அன்றைய சூழலில் முற்போக்கானது. ஆனால் கூட்டாட்சியையும் சோசலிசத்தையும் ஒதுக்கிவிடுகிற இன்றைய இந்திய தேசியம், அனைத்து தேசிய இனங்களையும் அடிமைப்படுத்துகிறது. தரகு முதலாளியம், அன்னிய நிறுவனங்கள் ஆகியவற்றோடு இணைந்து செயல்படும் இன்றைய நிலையில், தேசிய இனங்கள் விடுதலை பெறுவதற்காகப் போராடுவது, வரலாற்றின் கட்டாயம். தன்னுரிமையா, விடுதலையா, கூட்டாட்சியா எது நம் திசைவழி என்று தீர்மானிப்பதற்கு முன்பு, மக்களின் தமிழ் உணர்வைத் தமிழ்த் தேசிய உணர்வாகத் திரட்டும் முறையில் பேருரைகள் பல இந்நூலில் இடம்பெறுகின்றன.

தோழர் பூ.அர.குப்புசாமி
சிந்தனைச் செம்மல் கு.ச.ஆனந்தன்,
தோழர் தியாகு
தோழர் வே.ஆனைமுத்து
தோழர் கி.வே.தமிழ் நாடன்
தோழர் பெ.மணியரசன்
தோழர் எஸ்.என்.நாகராசன்
ஆகியோரின் உரைகளும் கட்டுரைகளும்
அடங்கிய இந்த நூல் தமிழியத்தின் ஆக்கம்.

நிகழ் வெளியீடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்